O-,892MAR
N26
181463

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

சீர்காழி — அருணாசலக்கவிராயர்

இயற்றிய

# இராம நாடகம்.

இஃது

ம-ா-ா-ஸ்ரீ, சிற்றேரி

அருணகிரிமுதலியாரவர்கள்

கேட்டுக்கொண்டபடி

சென்னைக் கல்விச்சங்கத்துத் தமிழ்ப்புலவர்

திரு - வேங்கடாசலமுதலியாராலும்

சங்கீதசாகித்தியவித்துவசிகாமணியாகிய

பொன்விளைந்தகளத்தூர்

இராமசாமிநாயகராலும்

முன்பதிப்பித்த பிரதிக்கிணங்க

இராஜசேகரமுதலியாராலியற்றிய

இராமாயண ஓரடிக்கீர்த்தனையும்

25-படங்களுடன்.

சென்னை சௌக்கார்பேட்டை

**A. V. முத்துசாமி முதலியார்**

அவர்களால்,

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

[பதிப்]பிக்கப்பட்டது.


1926.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை
O-,892MARR
M26
181463

18146

O-7892 MAR,1C
M6

29 JUL 1976



# முகவுரை.

23 JUL 1926

இராமாயணக்கீர்த்தனை என்னும் இந்நூல் வெளிப்படையான வழக்கச்சொற்களாலே செய்யப்பட்டிருந்தும், இடையிடையே அவ்வளவுந்தெரியாத சிலர் வாய்களில் அகப்பட்டு மூடிய எழுத்தும் சொல்லும் பொருளும் அங்கங்கே சரணங்களும் வரிகளும் மிகுந்தும் குறைந்தும், இராகதாளங்களும் பேதித்தும், சில விருத்தங்களும் சில கீர்த்தனைகளும் சில பிரதிகளிலே குறைந்தும், சிலவற்றிலே மிகுந்தும், இப்படிக்குப் பல விதங்களிலும் பிழைபாடங்களாய்விட்டது. இதற்குக்காரணம் இத்தமிழ்ப்பாஷையின் கடையில் அக்ஷரங்களைத் தொடர் எழுத்துகளால் எழுதுகிற சந்திவழக்கமும், அவ் அக்ஷரங்கள் இயல்பாயே மிகுத்தலும் குறைதலும் மாறுதலும் அல்லாமல், வலிய அதனை மிகுத்தலும் குறைதலும் மாற்றலும் செய்கிற விகாரவழக்கமும் தாம் இச்சந்திகளும் விகாரங்களும், இன்ன இடங்களில் வேண்டத்தக்கவைகள் என்று கற்ற இலக்கணப்புலவர்களில் சிலர் இன்னமுந் தெளியாது இருக்கின்றனர்.

ஆகையால் இந்நூலிலே வாசிப்போர்களையும் பொருள்கொள்பவர்களையும், தடித்தும் மருட்டியும் பிழைகளுக்கு உள்ளாகிற அச்சந்திகளையும் விகாரங்களையும் அவசியமாய் வேண்டத்தக்க இடங்களிலே கொண்டும், வேண்டத்தகாத இடங்களிலே விலக்கியும், கற்றவர்களுக்கேயன்றி ஏனையோர்க்கும் பயன்படுமாறு சொல்லும் பொருளும் யாவருக்கும் விளங்கும்படியாகவும், சொற்களைப் பிரித்திருக்கின்றோம் ஏனெனின்; இந்நூலை வாசிக்கின்றவர்களின் சந்தியும் விகாரமும் வேண்டத்தக்கவர்கள் சிலர்; அதை வேண்டாதவர்கள் பலர் ஆதலால் பலருக்குப் பயன்படுவதையே முக்கியமாய்க்கருதி எழுத்துநடை இல்லாதவர்களும் சங்கீதப்பயிற்சி இல்லாதவர்களுங்கூட இதனை வாசிக்கையில் எந்தெந்த விருத்தத்தையும் எந்தெந்த கீர்த்தனைகளுஞ்சற்றேறக்குறைய எழுத்துநடை அறிந்தும் சங்கீதநடை அறிந்தும் நடத்தும்படியாய் அதுகள் தாமே அவர்களை நடத்திக்கொண்டு போகத்தக்கதாக, அவ்வளவு பக்குவமாய்த் தகுந்தபடி பிரிவினை செய்யப்பட்டிருக்கின்றன.

இதில் கீர்த்தனைகளும் விருத்தங்களும் நூறும் ஐம்பதும் ஆகக் காலானுகூலப்படி பாடப்பட்டபடியால், அப்போதைக்கப்போது எழுதிக்கொண்ட பிரதிகளில் சிலவற்றில் கீர்த்தனைகளும் விருத்தங்களுங் குறைந்து சிலவற்றில் அதுகள் மிகுந்தும் போய்விட்டதுகள். அவற்றுள் சில பொருத்தம் இல்லாமலுமாய்விட்டதுகள். ஆகலால் நாங்கள் பல பிரதிகளைக்கொண்டு பரிசோதிக்கையில் பொருந்தாமை கண்ட

இடங்களில் எழுத்துகளையும் சொற்களையும் திருத்தினதுமாத்திரமே யன்றி, தனிச்சொற்களையும் சேர்த்துள்ளோம். விருத்தங்களைப் பிரித்துப் பொருத்தினோம். நூதன விருத்தங்களும் பாடிச்சேர்த்துள்ளோம் கீர்த்தனைகளிலே குறைவை நிறைவு ஆக்கினதுமன்றி, நூதன கீர்த்தனங்களும் பாடிப் பதிப்பித்தோம் இந்நூலாசிரியராகிய சீர்காழி-அருணாசலக்கவிராயரவர்கள் பாடப்பட்டதாகக் காணுமலும் கூறிய தையே கூறியதுபோல் உள்ள சில கீர்த்தனைகளையும் விருத்தங்களையும் நீக்கிவிட்டனம்.

இக்கீர்த்தனையிலே நாங்கள் திருத்தியதுகளையும் கூட்டியதுகளையும் கழித்ததுகளையும் நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவரே அல்லாமல் பின்னும் தக்கவித்துவான்கள், புலவர்கள், கவிராயர்கள், சங்கீத வித்துவான்கள், இராமாயணப் பிரசங்கிகள், கீர்த்தனைப் பிரசங்கின் போதனைக்குவாக் மீதப் பிரசங்கிகள், ஸ்ரீமத்கம்பராமாயணப் பிரசங்கிகள் முதலிய யாவரோடும் ஆலோசித்தே செய்துள்ளோம். இதுகளைப்பார்க்கிறவர்கள் பொறுமையைவிட்டுப் பார்வையிட நாங்கள் பிரார்த்திக்கின்றோம் ஏனெனில், பொறாமை உள்ளவர்க்குப் பொருளுண்மை தோன்றாது” என்னும் அன்றோர் மொழியுள்ளமையான் அப்படிச் செய்வார்களாகில் அவர்கள் எங்களுக்குக் கொடுக்கும் வெகுமானமும் பரிசும் ஒரு சபாசும் ஒரு சிரக்கம்பமும் ஒரு கரக்கம்பமும் தாம். இவையும் செய்யக்கோராதவர்கள் அநேகர் இருப்பார்.

இந்நூலினுள்ள இராகங்களையும் தாளங்களையும் செவ்வனே பரிசோதித்து நவரசங்களில் இன்ன ரசத்துக்கு இன்ன ராகமே சரி இன்ன தாளமே வேண்டும் என்று ஆராய்ந்து அச்சிடுங்கால் இராமாயணக் கீர்த்தனைப் பிரசங்கியாகிய சங்கீத வரதய்யங்கார் அவர்கள் எம்முடனிருந்து உதவிசெய்ததை என்றும் மறக்கற்பாலது.

இதில் ஆங்காங்கு கீர்த்தனைகளுக்கு இராகங்களும் தாளங்களும் நாங்கள் இன்னது இன்னதென்று அச்சிட்டிருந்தாலும் இராகதானங்களுக்கு அதுவே நிபந்தனை அன்று. சுதிக்கியானம் லயைக்கியாளம் தெரிந்த மகா சங்கீத வித்துவான்கள் வல்லமைக்குத் தக்கவாறு ஒரு இராகத்தைப் பல இராகத்திலும், ஒரு தாளத்தைப் பல தாளங்களிலும் பாடிக்கொள்வர்.

இப்படிக்கு

திரு-வேங்கடாசலமுதலியார்.

களத்தூர்-இராமசாமிநாயகர்.

# உதவிச்சிறப்பு.

## சிற்றேரி அருணகிரிமுதலியார்பேரில் சிறப்பு.

தரு-புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அருணகிரிவள்ளளைப்போலே இசை ஆர்பெற்றார் இந்தப்புவிமேதல

அநுபல்லவி.

தெருண்மிகுந்திடு    தீரன்-சிற்றேரிஎன்னும்வீரன்
அருஞ்செங்குவளைத்    தாரன்-அற்புதம்சேர்வசீரன்,
ஆழிசூழ்உலகம்எழும்மதித்திட    உற்ற
வாழ்வினல்உயர்வு    சூழ்வுறநிலைக்கப்பெற்ற (அரு)

சரணங்கள்.

சண்பைஅருணாசலப்    பண்புறுகவிஞன்சொல்
தின்பெருராமநாட    கப்பெருகப்புவிமேல்
தன்இதயத்துள்    மதித்துப்புலவர்களால்
நன்னயம்ஆகச்    சோதித்து-இசைதாளங்கள்
முன்னிலும்பாங்கா    அமைத்து-நற்சரஸ்வதி
என்னும்அச்சினிற்    பதிவித்துவிளங்கச்செய்த[றவன்
இங்கினும்நற்சுவையைத்தரும்அற்புதசொற்புகழ்விற்பனஉற்றிடு கொற்
ஈசன்மீதுபலர்    வீசியசுகந்தமாரன்
மாசிலாகிய்    பூசின்தமிகும்குபோன் (அரு)

தேசமையும்செங்கோல்வி    லாசமாநாடத்தும்
ராசர்களும்புகழ்ந்து    பேசவாழும்புருஷ
சிங்கபூஎன்னும்கெர்பீரன்    குளோதிக்குபோர்டில்
தங்கிய    விவகாரன்-பலபாஷாப்பிர
சங்கசுன    ஓய்யாரன்-பலம்கொள்சது
ரங்கதள    வில்வீரன்-நினைவிசிஷ்ட [துல
வுத்துவி தப்பரிசுத்தன் எவர்க்கும்அனைக்கு நிகர்த்தமானந்தன் அனைத்
காதிபன்கனக    சோதிமுடிபுனையநாதன்
வேதமும்துதிசெப்    மாதவனைநினைநேயன் (அரு)

தலத்தினில்உயர்ந்தநன் ஊலத்தைஉற்றிடும்கங்கா
குலத்தினில்அவதரித்து சுலட்சணம்உற்றமிகு
சத்வகுண விலாசன்-முத்துபூபந்த
வத்தில் உதித்தபாலன்-மாதர்மகிழ்வி
சித்திரஇங் கிதலோலன்-செல்வம்நிறைந்த
நித்தியமங் களசீலன்-மனதில்என்றும் [கடல்
நிர்ப்பயம்உற்றிடு சற்சனர் மிக்கவி யப்பின் உரைத்து மதிக்கும் அருட்
நீடுமேருஎன நாடுபுயசுந்தரன்
ஊடிலாதபுகழ் கூடியசுதந்தரன் (அரு)

இஃது, மண்ணடி

## வேங்கடசுப்பராயப்பிள்ளைபேரில் கியால் மெட்டு.

தரு-பைரவிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

இப்போதே அழைத்துவா போடிசேடி நீபோய்

ஒப்பில்வீராசாமிசெய்த வப்பயன்எல்லாம்உருக்கொண்
டிப்புவியில்வந்ததெனும் சுப்பராயமகிபனை (இப்)
ஆவலுடன்பாடிவரும் பாவலர்க்கருள்கரனை
மாவலமையுடையோனை கோவைசியசிகாமணியை (இப்)

நீடியபுகழ்சேர்ஆயர் பாடிவளர்கண்ணன்அடி
நாடிமலர்சூடிஇசை பாடியகுணகரனை (இப்)

ஓங்குபுகழ்கெவுணர்மெண்டு பாங்கியில்டிப்டிமானேஜர்
வேங்கடாஜலசெட்டியார்பாங்கனை இன்றிங்கென்முன்னே (இப்)

முத்தமிழினல்உயர்வு பெற்றபுலவோர்கள்இடர்
உறறசமயத்தினில் அடுத்துசெய்சகாயனை (இப்)

ஆரம்எறிகடல்சூழும் பார்உள்ளோர்புகழும்எழு
பூரினில்வாழ்ந்திடும்முல்லைத் தாரனைஉதாரனை (இப்)

சென்னைபுரிமன்னிவளர் நன்னயகவுண்டாண்டு
சென்னால்ஆபீஸ்தன்னில்மிகு உன்னதஉத்தியோகனை (இப்)

பாபாவிகளைக்கொன்றேஇப் பூபாலனம்செய்யதேவ
கோபாலன்வளர்த்ததந்த கோபாலகுலமணியை (இப்)



அக்கம்மாள் பேட்டை

## வேங்கடாசலசெட்டியார்பேரில் சிறப்பு

தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

செய்தால்புலவோர்களுக்கேசகாயம் செய்துகவிபெறுதல்ஞாயம்

அநுபல்லவி.

செய்யேஅனம்சேர் அக்கம்மாள்பேட்டைவாழ்
செயமுத்துவேங்கடா சலசெட்டியார்குமாரா
மெய்யேஉருக்கொண்டு வந்ததென்னவந்த
வேங்கடாசலதீரா ஓங்கும்புகழ்கெம்பீரா
வீராஅரிவையர் மனம்மகிழ்மாரா
நாரார்கரம்உள கர்ணவதாரா (செய்)

சரணங்கள்.

சீதமதிவதனன் ஏதமில்சீயகங்கன்
செய்பசகாயம்தன்னை மதித்துபவணந்தி
சிறந்தநன்னூலில்அவன் இறந்தும்இறவாமலே
செய்தானேபாயிரத்துள்ப் பதித்துபின்னும்
தீதில்அருணகிரி நாதருக்குபகாரம்
செய்துமனமகிழத் துதித்து-பிரவுட
தேவமகாராயனும் மேவித்திருப்புகழில்
திகழ்ந்திருக்கப்பெற்றான்பார் கதித்து-நாளும்
கோதில்மொழிகள்ராக வனைப்போல்மொழியும்சீலா
குணசிகாமணிஎன எவரும்புகழுமேலா
குணமில்பரமலோ பியர்பிரதிகூலா
குணம்உடையபுலவர் குலபரிபாலா (செய்)

சங்கைஇல்லாமல்அந்த கொங்கராயர்முன்செய்த
சகாயத்தினால்அல்லவோ நற்றார்-வில்லிபுத்தூரார்
சந்திரசூரியர்உள்ள அளவும்தம்புகழ்நிற்க
சயபாரதத்தில்பாடப்பெற்றார்-காற்போற்சொரியும்

அங்கைஉடையதிரு வெண்ணைநல்லூர்ச்சடை
 யப்பமுதலியாரும் கற்றார்-கம்பருக்குமுன்
 அகம்மகிழ்ந்திடவே சகாயம்செய்தேராமா
 யணத்தில்என்றைக்கும் யுற்றார்-ஆதலினாலே
மங்களம்ஆய்செந்தோன்றி மாலைமருவும்மார்பா
 வைசியகுலம்இலங்க வந்துதித்திடும்தீபா
 மதுரம்ஒழுகமிருது மொழிபகர்பூபா
 வரும்இரவலர்மகிழ அருள்பிரதாபா (செய்)

அழிவில்வேதங்கள்ஓதிக்-கிருஅறுத்திட்டபெரி
 யாழ்வாருக்கோர்சகாயம் புரிந்து-பல்லாண்டில்
 அசன்றஉலகீரேழ்உள்ளவும் செல்வநம்பியும்
 அமர்ந்திருக்கின்றான்புகழ்விரித்து எங்கும்நிறைந்த
வழுவில்மாயவன்பால்வாள் வலியால்மந்திரம்கொண்ட
 மங்கையர்கோனுக்குமுன் பரிந்துசகாயம்
 மகிழச்செய்தேபல்லவ ராயன்திருமொழியில்
 வாழ்ந்திருக்கின்றான்நீபார்தெரிந்து இன்னமும்சொல்வேன்
ஓழிவில்லாமல்புலவோ ருக்களித்துச்சொர்ன்னம்
 ஓங்குகவிபெற்றாரே உலகினில்ப்பிரபுக்கள்முன்னம்
 உடல்பொருள்கள் எவையும் நிலையிலைபின்னம்
 உறதிஇதுவேவேறு துதிஇல்லைஇன்னம் (செய்)

நவமன்மதனைப்போல்உருவம் இருந்தென்சௌபாக்கியம்
 நலம்இருந்தென்என்றுள்ளம் வைத்தாய் பாடும்
 நாவலமைஉடைய பாவலர்க்களித்துப்பா
 நாம்கொள்வோம்என்றானந்தப் உற்றாய்-இந்தப்
புவியில்இப்படிசெய்தேகவிகள்பெற்றார் என்றன்தன்
 புத்தியினாலும்ஆலோ சித்தாய்-நீயும்
 புகழ்பெறஎங்கள் மனம்மகிழ்வுறச்செய்தெங்களால்
 புத்தமும்போல்க்கவி பெற்றாய்இனிஓர்
கவிஇல்லாமானிடர்இப் புவிமேல்இருந்துமின்ன
 தனகனகவஸ்துவா கனஅனுபோகித்தென்ன
 ததியினில்உதவிசெய் பவர்களில்உன்னை
 தானேஇனிஎவர்கள் எனினும்புகழ்தன்ன (செய்)

ஸ்ரீ

# * அருணாசலக்கவிராயர் சரித்திரம்.

தில்லையாடியிலே சிறப்பூசிய வேளாளபூவைசியமரபிலே நல்லதம்பி யார்பிள்ளையும் அவரதுகற்புடையமனையாள் வள்ளி அம்மாளும்புரிந்த சஞ்சித புண்ணியத்தால் சாலிவாகனசகம் ௧௬௩௪-ஆவதில் விஜய வருஷத்தில் இக்கவிராயர் புத்திரராயவதரித்தனர். அவர்கள் தம்மரபின்படி இவரை ஐந்தாம்வயதில் ஒரு தமிழ்ப்பள்ளியில் அமர்த்தினர். இவர் பன்னிரண்டு வயதுக்குள் சாமானிய கல்விகளைக்கற்றார். அவ்வளவில் இவர் தாயார் முன்னும் தந்தையார் பின்னுமாக சிவலோகபிராப்தியானார்கள். இவர் தமையன்மார்கள் மூவரும் வாலிபராகையால் இவர் வாசிப்பின் விசாரணை மட்டிட்டாலும் ஆகூழ் இவருக்குத் துணைக்காரணமானதால், இவர் அவ்விடத்திற்கு அருகேயுள்ள தருமபுரத்துச் சைவாதீனத்தையடுத்து ஆங்குள்ள சில தம்பிரான்களிடம் வடகும் கிரந்தமும் தம்பதினெட்டுக்குள்ளே மிதமாகக்கற்றனர். பின்னும் இவர் தமது பத்தொன்பதாவது வயதுமுதல் விசேஷ கல்விகளைக் கற்கக் கருதி அவ்வாதீனத்திலுள்ள சிலரிடத்தில் சைவாசாரத்திற்குரிய நூல்கள் பலவும், கிரந்தத்திலும் தமிழிலும் கற்றார். தமது இருபத்தைந்துவரைக்கும் அதன்பின் மற்ற பல தமிழ்நூல்களிற்பயின்றார். அம்மடத்தில் இவருக்குப் பலபாஷைகளுக்கும் ஆசான்கள் பலர். ஆயினும் தமிழிலே முக்கிய ஆசான் அம்பலவாணக்கவிராயர் என்றவர். அக்காலத்தில் இவரது கல்வி அவாவையும், புத்திநுட்பத்தையும் விரைவையும் துழைவையும் உன்னிய அப்பண்டாரச்சந்நிதி "நீர் துறவுபூண்டு இவ்வாதீனத்துத் தலைமையும் பூணுவீரா?" என்று இவரை வினவிற்று. அதற்கு இவர் விடைதந்தனர். "சுவாமி! ஸ்ரீராமாயணம் சொல்லுகின்றது; தசரதச்சக்கிரவர்த்தி முதல் இல்லறம் பூண்டு பிறகு துறவறம் பூண இச்சித்தார். அவர் திருக்குமாரர் முதல் இல்லறம்பூண்டு பின்பு மனத்தால் முற்றத் துறவுபூண்டிருந்தார். மற்றை மகாரிஷிகளும் எப்பொழுதும் முன்னதோடு கூடிய பின்னதையே பூண்டிருந்தார்கள்" என்று திருக்குறளிலும், இவற்றையேநோக்கி அறப்பாலின் முதற்கண் இல்லறமும் பின்பு துறவறமும் நிறுத்தப்பட்டன. ஆகலால் அடியேனும் இவ்விதியையே கைக்கொள்ளநோக்குகின்றேன்" என்று அதற்கு

* இச்சரித்திரம் இந்நூலாசிரியர் பேரும் தன் குமாரர்கள் மூவரில் மூத்த குமாரருமாகிய அம்பலவாணக்கவிராயர் புத்திரரும் இக்கீர்த்தனைப் பிரசங்கியுமாகிய சப்புராயக்கவிராயராலும் அநேகராலும் கேள்விப்பட்டவாறு அச்சிட்டது.

அங்குற்றி அவ்வாறே செய்யுமென்று ஆசீர்வதித்தது. அச்சமயம் இவர் விவாககாரியத்தில் பிரவேசிக்கவில்லை. ''விவாகம் வித்யாநாசம்'' என்கிற பழமொழியைகருத்தில்கொண்டவர். தமிழ்க்கல்வியைச் சாதித்தலுக்கே ஒப்பிக்கப்பட்டிருந்ததால் இவர் பின் அதையே விடாது முயன்றார். இவர் முப்பதாவதுவயதில் அபிஷேகக்கட்டளை கருப்பூரிலே தமது இனத்தாரிலே ஒரு குமரிக்கன்னிகையை மணந்து அப்புண்ணியவதியோடு தில்லையாடியிலேயே வாழ்க்கையில் தமது இல்லறத்தைநடாத்துதற்குத் துணைக்காரணமாகிய பொருள்களை ஈட்டுதற்காக ஓர் காசுக்கடைதொழில் செய்திருந்தார்.

அதனால் இவருக்கு மிக்க சாவகாசம் நேரிட்டதால் அதுவரையில் தாம் கற்ற தமிழ் நூல்களில் ஸ்ரீ வைஷ்ணவத்திலும் சைவத்திலும்முன் அவதரித்த தெய்வப்புலவர்களாகிய பன்னிருவராலும் நால்வராலும் தோன்றிய திவ்வியப் பிரபந்தங்களும் திருமுறைகளும் வேதாகமப் பொருள்களாகிய தமிழ்கள் என்றும், இவ்விருமதங்களுக்கும் தமிழில் முதனூல்கள் என்றும், தமக்கு முன்னோர்கள் தாமே அமைத்தலால் அதுகளை ஒழித்து மற்றதுகளில் உலகத்திற்கு உபகாரியும் உபயோகியுமாகி அருமையும் பெருமையுமுள்ள முக்கியமாசாரம் ஆனவைகள் எவைகளென்று அதிநுட்பமாகிய தமது மதிநுட்பத்தால் உரைமாற்று இடை காணப்புகுந்தார். அச்சோதனையில் இவர் கம்பநாட்டாழ்வாருடைய ஸ்ரீராமாயணமும், திருவள்ளுவநாயனாருடைய திருக்குறளும், மற்ற எல்லாத் தமிழ் நூல்களிலும் சீரிய கூரிய தீஞ்சொற்களாலும், செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருள்களாலும் சிறந்த அரிய பெரிய அதிகசாரமுள்ள நூல்களாக நடுவுநிலைமையில் நின்று கண்டுகொண்டார். மேலும் தெய்வப்புலமைகளையுடைய மேற்படி இருவராலும் தோன்றிய இவ்விருநூல்கள் உள்ளும் முன்னது வேதமாதாவாகிய காயத்திரி அர்த்தமுள்ள இதிகாசம் என்றும், பின்னது மனுமுதலிய தருமநூல் அர்த்தமுள்ள நீதிநூல் என்றும், இவற்றின் உண்மையைக் கண்டுகொண்டார்.

அதுமுதல் விசேஷமாய் இவ்விருநூல்களிலும் பயிலுகையில் மதுரைச் சங்கப்புலவர்கள் துதித்த திருவள்ளுவமாலையில்.

வெண்பா.

எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரும்-முப்பாற்குப்
பாரதம்சீராம கதைமனுப் பண்டை மறை
நேர்வன மற்றில்லை நிகர்.



என்று இராமாயணம் குறளுக்குஉவமிக்கப்பட்டதை நோக்கினார். அதனால் இவர் கண்டுகொண்டார். முன்னதில் சொல்லப்பட்ட இராம சரித்திரங்களிலே, பின்னதில் நீதிகள் போலச் சொல்லப்பட்டன என்றும், ஆதலால் நீதிகள் குறளிலும் அவற்றிற்கு இலக்கியங்களாகிய கதைகளோடு, பகவத்குணானுபவமும் தோத்திரங்களும் இராமாயணம் முழுதிலும் இருக்கின்றனவென்றும் இத்திடக்கியானத்தால் இக்குறளிற் பார்க்கிலும் இவ்விராமாயணத்தில் அதிகமாகப்பயின்று பாராயணித்தும், அநேகரை ஓதுவித்தும் சபைகளிற் பிரசங்கித்தும் வந்தார். இவ்வாறு நிகழ்கையில், இவர் தமது தொழில் முறைமைபற்றி பொன் வெள்ளி கொள்ளும்பொருட்டு, அக்காலத்தில் அவைநயமாகவிற்ற புதுவைக்குப் பயணங்கொண்டார். அதற்குச் சீர்காழியால் போகவேண்டுதலின் அவ்விடத்தில்வந்து தருமபுரத்து ஆதீனத்தைச்சார்ந்த ஒருமடத்தில்தங்கினார்.

அதற்கு அக்காலத்தில் கட்டளைத்தம்பிரான் சிதம்பரப்பிள்ளை என்ற ஓர் கார்காத்தவேளாளர் தருமபுர ஆதீனத்தில் இருவருக்குச் சகலபடியான ஒரு பாவலர் இவர் அப்பண்டாரச்சந்நிதி நியமனத்தால் இல்லறம்பூண்ட காலத்திலே அவரும் அங்குற்ற ஏவலால் துறவுபூண்டுஇதற்குக் கட்டளைத்தம்பிரானாகி அங்குவந்திருந்தார்.

ஆதலால் இவ்விருவரும் சந்தித்துத் தங்களில் இங்கிருந்த நெடுங்காலப் பிரிவின்பரிவு அகலத்தழுவி சிலநேரம் குசலப்பிரசினம் பண்ணினபின்பு அவர் அம்மடத்து அனுமதியின்பேரில் அங்குவந்ததின்மேலை அதின் முன்னைபகட்டளை வருவாய்க்கு ஆகிலும் தாம்அதிகம் கண்டதற்காகத் தாமேபாடின ஒருகட்டளை மாலையை இவருக்குக் காண்பித்து அதற்கு இவரது ஒப்பம்கொண்டார். சீர்காழிக்கு ஒரு பள்ளுபாடப் பிடிகைபோட்டேன்; பலசோலிகளால் அதை நிறைவேற்ற எனக்குச் சாவகாசம் கிடைக்கவில்லை நீரே அதைமுடியும்; எப்பொழுதும் இவ்விடம் விட்டு அகலாதேயும்; என்று இவரைப் பிரார்த்தித்தார். அப்பள்ளின் பீடிகையைப்பார்க்க என்று அதை இவர்கையில் ஒப்பித்தார். இவர் அவற்றை இராத்திரி மற்றைப்பொழுதிலேயே அதைமுடித்துப் போட்டனர். அன்று விடியலில் அதையும் தாம் அவசியமாய்ப் புதுவைமட்டும் போகவேண்டிய பயணச்செய்தியையும் அவருக்கு ஒப்பிக்கும்படி, அதுகளை அவர் அடியான் ஒருவன் வசம்பண்ணி அவருக்குப்பயணம் சொல்லிக்கொள்ளாமல் தமது குடிப்பிடம்போய்ச் சிலநாள் அங்கேயே தங்கியிருந்தனர்.

அத்தம்பிரான் அன்று விடிந்தபின்பு அப்பள்ளியின் முடிவைக் கண்டும், இவரது பயணச்சேதியைக்கேட்டும் ஆச்சரியப்பட்டு இவரை எவ்விதத்திலும் இங்குதானே இருத்தவேணும் என்றமதிகொண்டு இவருக்குயென்று பெரியவீடு ஒன்று சித்தம்செய்து இவரது குடும்பத்தை இவர் பெயராலே சீர்காழிக்கு அழைப்பித்து, புதுவைக்குச்சென்ற உங்கள் எஜமானும் இவ்விடம் வருவாரென்று அவர்களுக்குத் திடம்சொல்லி தாம்கட்டுவித்த அவ்வீட்டில் அவர்களைக்கிரகப்பிரவேசம் பண்ணுவித்திருந்தார்.

இக்கவிராயர் தம் ஊருக்காகத் திரும்புகாலில் வழிவாட்டால் சீர்காழிவந்து அம்மடத்தில் முன்போல் இறங்கினர். அங்குஇவரைக்கண்ட சிதம்பரதம்பிரான் இவரோடு சம்பாஷிக்கையில், முன்பு தம்மோடு எச்சரியாமல் இவர் புதுவைக்கு வழிகொண்டதைப்பற்றி இவரோடு சற்று நேரம் சலித்தபின்பு, தாம் இவருக்கென்று ஒருவீடுகட்டினதும் அதில் இவர் குடும்பம் குடியேறினதும், இவரோடு முன்னடி எச்சரியாமல் இருவரும் உலாவப்போகிறவர்கள்போல இவரை இட்டுக்கொண்டு அந்தப் புதுமனையில் நுழைந்தார் இவர் தமது சமுசாரத்தை அங்கு கண்டு ஆச்சரியப்பட்டு அவர்களால் அவர்கள் வரலாறு தெரிந்துகொண்டு அவர்களோடு அம்மனையில் குடிவாழ்க்கை செய்துகொண்டு சீர்காழியில் தானே என்றென்றைக்கும் வீட்டிருக்கும்படி அத்தம்பிரானால் வேண்டப்பட்டு அதுவே இருப்பிடம் கொண்டார். ஆதலால் இவர் அன்றுதொட்டு சீர்காழி - அருணஜலக்கவிராயர் என்று அழைக்கப்பட்டனர்.

அங்கு இவர் வசிக்கையில் அத்தம்பிரானுக்காகப் பல தனிக்கவிகளும், சில சில்லரைப் பிரபந்தங்களும், புனைந்து கொடுத்ததுமன்றி அசோமுகிநாடகமும், சீர்காழி ஸ்தலபுராணமும் சீர்காழிக்கோவையும் பாடி அநுமார்பிள்ளைத்தமிழ் தமக்காகவே பாடினர்

அக்காலத்தில் சீர்காழிக்கு அடுத்த சட்டநாதபுரம் என்கிற அக்கிராரத்திலிருந்து வெங்கடராமய்யர் கோதண்டராமய்யர் என்ற இருவர் பிராமணர்கள் சங்கீதவித்வான்கள் இவரிடத்தில் சில சில்லரைப்பிரபந்தங்கள் பாடங்கேட்டபின் தெய்வப்புலமையுடைய கம்பநாட்டாழ்வாராலே செய்யப்பட்டிருக்கிற ஸ்ரீராமாயணத்திலும் பாடம் கேட்டுக்கொண்டுவந்தார்கள். அவர்கள் அவரைப் பிரார்த்தித்தார்கள். இதுவரையிலும் தாங்கள்செய்த பலபிரபந்தங்களிலும் புராணத்தாலும் நாடகத்தாலும் தங்கள் நாமதேயம் எங்கும் வெளிவராதிருக்கின்றதால்



அதையெங்கும் பரவச் செய்யத்தக்க முக்திப்பிரதானமாகிய ஒரு பிரபந்தத்தைத் தீர்க்க ஆலோசித்துத் தாங்கள் செய்யத்தக்கது ஒன்று.

அப்பால் இவர் யோசித்து இது மெய்யே. இனி நமக்கும் உலகுக்கும் புத்திக்கும் முத்திக்கும் சாதனமாகிய ஒருகதையைப்பற்றிப் பாடுவோம். அது ராமகதையே. ஏன் எனில்; ராமமந்திரம் பரப்பிரம்மத்தைக் குறிக்கிறது, தாரகப்பிரம்மமந்திரம் என்கிறது காயத்திரிக்கு ஒரு சுருக்கம் ஆகியது, ஸ்ரீமந்நாராயணன் பிரம்மாவுக்கும் பிரம்மா சரஸ்வதிக்கும் உபதேசித்து, இறக்கமுத்தி என்கிற காசியில் யாவருக்கும் அந்தியத்தில் உபதேசிக்கிறது. இந்நாலோ பரப்பிரம்மம் தசரதனிலே அவதரிக்கும் என்று அதைக்குறிக்கிற காயத்திரி ௨௪-அட்சரங்களையுடைய ஏழுகாண்டங்கள் ஆகிய எசுர்வேதமே ஏழுகாண்டங்களும், ௨௪ஆ-கிரந்தமாகி ராமனைக்குறிக்கிற புண்ணிய கதாரூபமாய் மகாரிஷியும் ஆதிகவியுமாகிய வால்மீகிபகவானாலே அவதரித்தது. இது காயத்திரி ஆகலால் அன்றோ பிரம்மகத்தி முதலான சகல மகாபாதகங்களையும் போக்குகிறது. அன்றியும் தெரிந்தோ தெரியாதோ திருந்தியோ குளறியோ பக்தியாயோ அபக்தியாயோ நினைவோடே நினைவுதப்பியோ அன்வயத்தோடே அன்வயமின்றியோ பொருள் உணர்வோடே அது இன்றியோ ராமா என்ற இரண்டு அக்ஷரங்கள் மாத்திரம் வரத்தக்க மரா மரா இந்த வரப்பில் இராமல்போச்சுதே, ராமா இடியாதே மோராமா காராமணி ஆமாசீராமா என்ற இப்பேர்ப்பட்ட வசனங்களிலும் வாக்கியங்களிலும் ஒவ்வொன்றையே ஒவ்வொருவர் தங்கள் அந்தியத்தில் உச்சரித்து முத்திபெற்றவர் அனேகர், இதை உச்சரிக்கையில் ரா-பாவங்களைத்திரட்டி வெளிப்படுத்துகிறதும் அதுகள் மறுபடியும் உள்ளே நுழையாமல் வாயைமூடுகிறது; இதினால் அன்றோ முன்னைய பெரியோர்களில்.

நம்மாழ்வார்.

நம்பார் இராமபிரானை அல்லால்மற்றும்கற்பரோ
பிற்பாமுதலாப்புல் எறும்பாதி ஒன்றின்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றதும்
நற்பாலுக்குற்றனநான்முகனார் பெற்றநாட்டுள்ளே.

என்றார். "படிக்கில் ராகவன்சரித்திரம் நொடிக்குள் போகுமே துரித்திரம்" என்ற பழமொழியும் இருக்கிறது. மேலும் சங்கரராமாநுஜமத்துவாசாரியார்களாகிய திரிமதஸ்தாபனர்களும் இந்த ராமகதையை நியமமாய் வீட்டிலும் வெளியிலும் பாராயணித்தும் கேட்டும்

கேட்பித்தும் இகபர சௌக்கியங்களை அடைய என்று தங்கள் சீஷர்களுக்கு நியமித்தார்கள். அவர்களும் அப்படியே செய்கிறார்கள் என்று இந்தப்பிரகாரம் இராமாயணத்தின் பலமகுத்துவங்களையும் தமதுகல்வி நிறைந்த கருத்தில் இவர் தியானித்து இதையே தாமும் பாடத்தொடங்கித் தமதுசாலத்தை நாற்போதா போக்கத் தீர்மானித்தார். ஆகிலும் இவர் இதை என்னரூபமாய் பாடத்தக்கது என்று மேலும் சிந்தித்து, இதனைத் தெய்வப்புலமை ஸ்ரீமத்கம்பநாட்டாழ்வார் திருவிருத்தங்களால் நிறைத்தார்; பாலபாரதியார் திருச்சந்தவிருத்தங்களால் நிறைத்தார்; பின்னும் பலரும் பலவாறாய் நிறைத்தார்கள்; ஆதலால் நாம்பெண்களும் பேதையரும் உணரத்தக்க வெளிப்படையும் வழக்குமாகிய செந்தமிழ்சொற்களாலே ஓர்நாடகமாகிய கீர்த்தனைரூபமாக நிறைக்கக்கடவோம் என்று நிச்சயித்தார். சங்கீதநடைதெரிந்த மேற்படி இருவராகிய தமது பிராமணசீஷர்களையே இராகதாளங்களுக்கு உதவியாகக் கொண்டு இக்கவிராயர் அதைத்தொடங்கி நிறைவேற்றினர். அதன்விவரமாவது: இவருக்கு இந்தநினைவு அங்கதராயபாரத்தில் தோன்றியதால் முற்றமுதல் 'அடடாவெளியே புறப்படடா' என்கிற கீர்த்தனையை அதன் விருத்தத்தோடு முடித்து அச்சீஷர்களுக்குக் கொடுத்தார். அதற்கு இராகமும் தாளமும் அமைத்துக்கொண்ட அவர்களாலும், அதை அவர்களிடத்தில் கற்றுக்கொண்ட மற்றவர்களாலும் சிலநாள்களுக்கு உள்ளே அது அங்கு எல்லாம் பரவினதைக் கண்டு இராமாயணத்தில் கிரமமாகச் சிலவிஷயங்கள் எடுத்துச் சிலகாலத்தில் சுருக்கமாய் நூறு கீர்த்தனைகள் அதன் விருத்தத்தோடு முடித்தார். அதுகளுக் கெல்லாம் இராகதாளங்களமைத்த அந்தப் பிராமணர்கள் சிவ்வென்று சென்னபட்டணத்துக்குவந்து அதுகளை அங்கங்கேபாடிப் பரிசுபெற்று, மறுபடியும் தங்கள் ஊருக்குத் திரும்பிப்போய் அதினால் தங்கள் கலியாணங்களையும் நிறைவேற்றிக்கொண்டு இக்கவிராயரிடத்துக்குப்போய் நடந்த செய்திகளை அவருக்கு அறிவித்தார்கள்.

அதினால் இக்கவிராயர் பின்னும் ஐம்பது கீர்த்தனைகளும் விருத்தங்களும்பாடி முன்னதுகளோடு ஆதிஅந்தம் ஒழுங்குபெறக் கோர்த்து ஒரு பிரகாரமாய் முடித்துக்கொண்டு சீரங்கத்துக்குப் போனார். அதை அரங்கேற்ற பூர்வத்தில் கம்பநாட்டாழ்வார் தமது ஸ்ரீராமாயணத்தை அரங்கேற்றிய ஸ்தலம் அதுவேயாகையால் அப்பொழுது அக்கோவிற்றுறையார்கள் சொன்னது: பூர்வத்தில் கம்பநாட்டாழ்வார் தமது இராமாயணத்தை பூர்வாசாரியராகிய ஸ்ரீமந்நாதமுனிகள் திருமுன்னர் பிராட்டியார் சன்னிதானத்தில் பெருமாளும் எழுந்தருளி



யிருக்க அரங்கேற்றினர். அக்காலத்தில் பலதருணங்களில் பல அற்புதங்களை அவர் உலகத்துக்குக் காண்பித்தார். அதைத்தானே நீர் கீர்த்தனைகளாகப் பாடினபடியால் அதைக்குறித்துப் பெருமாள் எங்களுக்கு நியமித்தால் இந்தநூல் அரங்கேற்ற சம்மதிப்போம் என்றனர். அதின் பேரில் இக்கவிராயர் தனியே ஓரிடத்திலிருந்து ஒரு கீர்த்தனையால் ஸ்ரீரங்கநாயகரைத் தோத்திரம் பண்ணினர் அது இது.

தரு-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்பள்ளிகொண்டீர் அய்யா-ஸ்ரீரங்கநாதரேநீர்
என்பள்ளிகொண்டீர் அய்யா

அநுபல்லவி.

ஆம்பல்பூத்தசையபருவதமடுவிலே அவதரித்த
இரண்டாற்று நடுவிலே (என்)

சரணங்கள். [கோ

க. கோசிகன்சொல்குறித்ததற்கோ-அரக்கி - குலையில்அம்புதெரித்ததற்
ஈசன்வில்லைமுறித்த தற்கோ-பரசு-ராமன்உரம்பறித்ததற்கோ
மாசிலாதமிதிலேசன்பெண்ணுடன் வழிநடந்தஇளைப்போ
தூசிலாதகுகன்ஓடத்திலேகங்கைத் துறைகடந்தஇளைப்போ
மீசரம்ஆம்சித்ரகூடச்சிகரக்கல் மிசைகடந்தஇளைப்போ
காசினிமேல்மாரீசன் ஓடிய கதிதொடர்ந்தஇளைப்போ-ஓடிக்

களைத்தோதேவியைத்தேடி இளைத்தோமரங்கள்ஏழும்
தொளைத்தோ-கடலைக்கட்டிவளைத்தோ இலங்கையென்னும்
காவல்மாநகரை இடித்தவருத்தமோ
ராவணாதிகளை அடித்தவருத்தமோ(என்)

உ. மதுரையிலேவரும்களையோமுதலே வாய்மகளைத்தரும்களையோ
எதிர் எருதைப்பொரும்களையோகன்றைஎடுத்தெறிந்த பெருங்களையோ
புதுவைஆனமுலை உண்டுபேயின்உயிர் போக்கிஅலுத்தீரோ
அதிரஓடிவரும்குருவிவாயைஇரண் டாக்கிஅலுத்தீரோ
துதிசெய்ஆயர்களைக் காக்கவேண்டிமலை தூக்கிஅலுத்தீரோ
சதிசெய்காளிங்கன்மணிமுடி தாக்கிஅலுத்தீரோ-மருதம்

சாய்த்தோ-ஆடுமாடுகள் மேய்த்தோ-சகடுருளைத்
தேய்த்தோ-கஞ்சன்உயிரைமாய்த்தோ அருச்சுனனுக்காச்
சாரதியாய்த்தேர் விடுத்தவருத்தமோ
போரிலேசக்கரம் எடுத்தவருத்தமோ(என்)

௬. படிதனிலேமெத்தவும்நானே உம்மைபரம்என்வேஅடுத்தேனே
அடிமைகொள்வீர்என்னைதானேசெம்பொன் அணிஅரங்கப்பெருமானே
தடம்உறைந்தகரும்பாறைசாபமது தடுத்தாட்சித்தீரே
விடஒண்ணாதகாகாசுரனுக்கொருகண் விடுத்தாட்சித்தீரே
கொடுமைகண்டழுத திரோபதைக்குத் துகில்கொடுததாட்சித்தீரே
மடுவில்ஆனைமுன்ஓடிமுதலையை மடித்தாட்சித்தீரே அதுபோல

வாரும்-கிருபைக்கண்ணாலே பாரும்மனக்கவலை
தீரும்நினைத்தவரம் தாரும்தாரும் எ சாமி
வட்சமேவும்மக லட்சுமியுடன்பெரும்
பட்சம்ஆகஎன்னை ரட்சியும்எழுந்திரும்(ஏன்)

இந்தக்கீர்த்தனைக்காகப் பெருமாள் திருமுள்ளமுகந்து இக்கவிராயருக்குச் சொப்பனத்தில் ஒரு ஸ்ரீவைஷ்ணவரைப்போலவந்து "ஓய்! ராமநாடகப்புலவா! முற்காலத்தில் கம்பநாட்டாழ்வார் இராமாயணம் அரங்கேற்றவருகையில் நம் சடகோபனைப்பாடினையோ என்று பெருமாள்கேட்க, அவர் நம்மாழ்வாருக்கு ஒரு அந்தாதி பாடினபின்புதான் அதை அரங்கேற்றநியமித்தார்." அவ்வாறே நீயும் உன்நாடகத்தில் நம் பெருமாள் பரிசனங்களைப்பாடில் உன்நூல் அரங்கேறும் என்றார். அவ்வண்ணமே பெருமாள்கோவிற் றுறையாருக்கும் சொப்பனம் சாதித்தார். இவராலே அதைப் பாடிவித்துக்கொண்டு இவரது இராமநாடகத்தை அரங்கேற்றும்படியாய் அப்படியே அன்றுவிடிந்தபின் இருநிற வரும் அச்சொப்பனங்களை ஒப்பிட்டுக்கொண்டவர்களாய் இவர் இந்நாடகத்திற்குத் தோடையம் பாடத்தொடங்கி நம்பெருமாள் பரிசனங்களாகிய அனந்தகெருட விசுவக்சேனர் பஞ்சாயுதங்கள் ஆழ்வாராசாரியர்கள் அனைவரையும் அதில்அமைத்தார். ஆகிலும் அத்தோடையத்தில் இருக்கின்றவிநாயகரோ அக்கோவிற்பரிவாரத்தில் இருக்கின்ற ஒருவர். தாம்மேற்காப்புவிநாயகரோ சேனைமுதலியார்பரிவாரத்தில் ஒருவர் இவ்விதமாய் இந்நூல்ஸ்ரீரங்கத்தில் பூர்வத்தில் தெய்வப்புலமைக் கம்பநாட்டாழ்வார் தமது இராமாயணத்தை அரங்கேற்றிய கம்பர் திருமண்டபத்தில் அந்தப்பங்குனி அஸ்தநட்சத்திரத்திலேதானே திருவரங்கத் திருமுற்றத்து அடியார்கள் கோஷ்டியில் முதலில் அரங்கேற்றினார்கள். அக்கோவிலாரால் பலமரியாதைகளோடு பலபரிசுகளும் பெற்றார்.

அப்புறம் இக்கவிராயர் தஞ்சாவூர் சமஸ்தானாதிபதியாகிய துளசி மகாராஜாவின் சபையில் இந்நாடகத்தை அரங்கேற்றவந்தார். அந்நேரம் தஞ்சைக்கோட்டை சென்னப்பட்டணத்து நவாப்பாகிய மாதர்மல்கின் தண்டினால் முற்றிக்கையிடப்பட்டிருந்தது. அச்சமயபேதத்தால்



புதுவைநகரத்து ஆனந்தரங்கப்பிள்ளையின் சபையில் இதை அரங்கேற்றவந்தார். அவர் தமக்குமிகவும் இஷ்டராகிய துளசிமகாராஜாஇதைக் கேட்டதற்குமுன் தாம்கேட்டல் கூடாது என்று இவருக்குநானுமெகுமதியுஞ்செய்து மணலி-முத்துகிருஷ்ணமுதலியாருக்குத் தகவுரைப் பத்திரிகையோடு இவரைச் சென்னைபுரிக்கு அனுப்பினார். இவர் அவ்விடம் சேர்ந்து அவருக்கு ஒருசீட்டுக்கவிதை அத்தகவுரைப் பத்திரிகையோடு வித்தார்.

அதுஇது ஆசிரியவிருத்தம்.

சித்திதருகிறவல்லிபுத்திதருகிமவல்லி தேவர்கள்வணங்கும்வல்லி
தில்லைநாயகவல்லிசிவகாமவல்லி இருதிருவிழிக்கருணையாலே
சத்தியவாசகன்என்றுபூமண்டலாதிபர்கள் தாம்எங்கணும்துதிக்கும்
சகலபாஷாநிபுணமணலிமுத்துகிருஷ்ண சதுரநீவாழிகண்டாய்
கத்துமலர்குவளைநான்மதியம்நீ செஞ்சாலிநான்கருவிமழைமேகம்நீ
நளினம்நான்பருதிநீபிள்ளைநான் அன்னைநீநான்கவிஞன்வழுதிநீகாண்
சுத்தமுள்ளராமாயாணந்தனைக்கொண்டுனது சுகமுமதுபெறவருகிறேன்
சொற்பொருளறிந்தளவுசொல்லுவேன்கேட்கவேதுணைஆகவேணும்நீயே

இதை அங்கீகரித்தமுதலியார் இவரைத்தம் இடத்துக்கு அழைப்பித்து, தக்கமரியாதை செய்து இவர்கேள்விக்கு இசைந்தார். அப்பால் இவர் ஸ்ரீராமகதையை, ஸ்ரீமத் கம்பராமாயணத்தைப்பற்றி நாடகமாய் ஒன்று செய்திருக்கிறேன், அதையுங்கூடவே தாங்கள் கேட்கவேண்டுமென்றார். அப்போது அவர் இவரைக்கேட்டார். "சிலகாலத்திற்குமுன் இரண்டு பிராமணர்கள் இராமநாடகம் ஒன்று கொண்டுவந்து இங்கே கீர்த்தித்தார்கள் அதுதானோ இது என்றார்." இவர் அதுவும் நான் பாடியதுதான். அது ஒருசங்கிரகம்! ஆதலால் அதையே விரிவாய்ப்பிறகும் பாடினேன் என்றார். முதலியார் அப்படியா! ஆகில் இரண்டும் ஏககாலத்திலேதானே நடக்க என்றார். ஆதலால் அப்பால் இவர் தமது நாடகத்தைப் பின்னும் பலதருக்களாலும் விருத்தங்களாலும் புதுக்கிவிரித்தார். முதலியார். சபையில் இராமாயணம்பிரசங்கம் ஆரம்பித்தார். கூடவே அங்கங்கே இக்கீர்த்தனைகளையும் விருத்தங்களோடு அரங்கேற்றினார். ஆதலால் ஸ்ரீராமர் பட்டாபிஷேகத்தில் முதலியாரால் பல மேன்மைகளையும் பரிசுகளையும் பெற்றார். அதுகள் இக்கவியால் அறியவரும்.

ஆசிரியவிருத்தம்

கனம்தந்தான் கனகாபிஷேகம் தந்தான்
களங்கம்இல்லாக்கருப்பொருளை அழைத்துத்தந்தான்

மனம்தந்தான்முடிசூட்டுமாலைதந்தான்
வாணிசிங்காதனத்திருத்திவரிசைதந்தான்
இனம்தந்தான்ராமகதைஎவர்க்கும் தந்தான்
எனைராமாயணக்கவிஞன் எனப்பேர்தந்தான்
அனம்தந்தான்மணலிமுத்துக்கிருஷ்ணபூபன்
அகம்தந்தான்இருமையிலும் சுகம்தந்தானே.

இப்படி முத்துகிருஷ்ணமுதலியார் சன்மானம்செய்யப்பெற்ற இக் கவிராயர், பின்பு லிங்கப்ப செட்டியார்குமாரராகிய தேப்பெருமாள் செட்டியாருக்கு ஒருசீட்டுக்கவிதை அனுப்பினர்.

அது இது-ஆசிரியவிருத்தம்.

கணிகொண்டபஞ்சலட்சணமும் ராமாயணக்கடலையும் உணர்ந்தபுலவன்
கவிராசர்புகழ்கின்றகாழி அருணாசலக் கவிராயன்எழுதும்ஓலை
மணிகொண்டமார்பிலிங்கப்பமகிபாலகன் மகிழ்ந்தசுதன்வணிகாதிபன்
வருசீர்படைத்ததேப்பெருமாள்மகிபன் இதைமனம்உவந்தினிதுகாண்க
அணிகொண்டதியாகேசர்வண்ணம் உரைசெய்ததும்அதற்குவெகுமதிசெய்
[ததும்
அதுநமக்குபகாரமானது இப்புவியிலறியாதபேருமுளரோ
பணிகொண்டராமகீர்த்தனையும் அப்படியேபரிந்துநீகேட்கவேணும்
பாரில்ஓராயிரம்பிறைகண்டுநீ பொருள்படைத்துவாழ்ந்திடுகமாதோ.

அவர் அப்படியே அதைக்கேட்டு இவருக்குக்கனிசமான பரிசோடு மரியாதைசெய்தார். பின்பு மதார்மல்க்நவாப்போடு சமாதானப்பட்டிருந்த துளசிமகாராஜாவையும் அப்பால் ஒரு பஞ்சரத்தின மூலமாய் ஆநந்தரங்கப்புடையாரையும் பின்பு உடையார் பாளையத்துத்துரை ஆகிய உவரங்கப்புடையாரையும், பின்னுஞ் சில பாளையப்பட்டுத் துரைகளையும், இவர்கண்டு இதை அரங்கேற்றி பல நல்வரிசைகளும், மெய்வரிசைகளும் அவர்களால் பெற்றார்.

இவர் தம்குடும்பத்தோடு கலந்தபின், சிலவருஷங்களிருந்து சீர்காழியில் தானே விகாரி௵ ஆனி௴ வைகுண்டப்பிராப்தியானார். இவர் வேஷத்தில் கொத்துத்தாழ்வடம் தலையிலும், வெள்ளைவேட்டி அரையிலும் தரித்து சைவபாண்டரங்கள் போலிருந்தாராம். இவர்பூர்வம் சைனத்திற்பிரிந்து சைவத்திற்புக்கினவர்.

இவர் தமது விவாகத்தின்பின் தில்லையாடியில் கஉ௵ வசித்து சீர்காழியில் உரு௵ வசித்தார், இவருக்கு வயது-கூஎ. இவர் தமது கூ0-ஆம் வயதில் இக்கீர்த்தனைபாடியது. இந்த சுபகிருது வருஷத்திற்கு இதுபாடி ககூ௵ ஆகிறது இவர் வைகுண்ட பிராப்தி ஆகி கஉச ௵ ஆகிறது.

---

ஸ்ரீ
ஸ்ரீராமஜெயம்.



# இராமாயண ஓரடிக்கீர்த்தனை.

விருத்தம்.

ஏர்கொண்டநான்மறையின் பொருளையெல்லாம்
இனியதமிழாற்செய்து தொண்டர்க்கீந்த
பார்கொண்ட குருகூர்வாழ் சடகோபாழ்வார்
பதமலரைப்பணிந்துதிருச் சென்னைமேவுந்
தார்கொண்டபுயாசலன் ஒப்பில்லாவீரன்
சதுரன் அயன்தொழும் ராமச்சந்திரமாலின்
சீர்கொண்டதிருவருளின் பெருமைதன்னைத்
தேறவேன்மனமகிழ்ந்து கூறுவேனே.

தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கோதண்டதீக்ஷாகுருவே பக்தரிர்தய
கோகனகமலர் மருவே

அநுபல்லவி.

தாதண்டுமலர்ச்சோலை-விண்கற்பகத்தின் மேலே
தழைக்குஞ்சென்னைநகர்வாழ்-ஸ்ரீவெங்கடேச மாலே
பூதகிமுலைஉண்ணல்போல்-ஆவிஉண்டொருக் காலே
போற்றும்யாதவர்க்கின்பந்-தேக்கச்செய்தாய்பரி வாலே

புத்தமுதத்தினை நற்சுரருக்குமுன்
உற்றிடமிக்க அளித்திடுசற்குண

பூஜிதம்பெறு ராமசந்திர
னேசவுந்தர ரூபரஞ்சித
புகழலர்மகள் தழு விய அதிபுஜபல
மிகுபரிமளமுறு துளவணிரவிகுல
புண்யமீடும்அண்ட பகிரண்டங்களைஉண்ட
திண்யனை அகண்ட புகழ்கொண்டபிரசண்ட (கோதண்ட)

தசரதன் சுதனுதித்து
தரணிமன்னர் மன்னவன் அதிபுஜபல (தசரதன்)

தகைமைவாய்ப்பஉயர் மனுநெறிமுறைகொடு
தருமயோத்திநகர் அரசுசெய்ரவிகுல (தசரதன்)

சர்ப்பராஜசயனத்தின் மீதுறுதுயிர்
உற்றவீறுபர வஸ்துவானதொரு
தசமுகனால்இடர்படும் உயர்அமரர்கள்
நகையுடனே துதி தரநரவொருஉடு (தசரதன்)

தார்புனைஈசனும்வின் சூரியனும்வேதனும்
மாமகவானும்அவன் பாலனும்தேயுவுஞ்
சீர்அனுமான் சுக்கிரீவனர்சாம்பவன்
வாலிஅங்கனீலன் ஆய்வரவானவர்
வானரங்களாய்மண்ணினில் வந்திடச்செய்துமட்டி
தானவர்குலத்தைவிண்ணிற் சேர்த்திடக்கங்கணங்கட்டி

சங்குசக்கரமு மங்களத்தினில்பி
றந்தஅற்புத அனந்தநற்றவனும்
வந்துதித்திட நினைந்திடத்தரையில்
சம்ப்ரமஞ்சத்தில்இல குஞ்சுமித்திரையின்
தன்னிடம்லட்சுமணன் சத்துருக்கனும்கைகேசி
மின்வயிற்றிற்பரதனுந் தம்பியர்ஆய்சனிக்கத்
தான்கண்ணிக்கோசலை வயிற்றிற்சித்திரைமாதம்
ஆனநவமிபுனர் பூசநக்ஷத்திரநாளில் (தசரதன்)

சந்த்ரவிம்பமுக முங்கிர்பைவளர்தரு
கின்றகண்களு நெடுஞ்சிலைனுநுத
லுஞ்சிறந்தபவளந் தனைநிகரத
ரந்தகுந்தலுளிர் குண்டலம்அணிசெவி
களுநிலவெறிகமு கினைநிகர்களமொடு
விரைகமழ்துளவணி புயமலைகளும்அலர்
கமலமலர்அனைய கரமலர்களும்நெடு
உலகம்அத்தனைஉனும் அழகியவயிறொடு
தாரணிமார்பும்வண் டாமரைத்தாள்களுஞ்
சாமளமேனியும் ராமநன்மானமுந்



தயங்கஅருமறை உணர்புங்கவர்மிகு
ஜெயல்விஜயபவ எனமங்களமோடு (தசரதன்)

தசரதன் சுதனு வுதித்து தனுவிற்கதித்து
தாடகைப்பாவியை வதைத்து
விசுவாமித்திரனுடன் மிதிலைக்குச்செல்லும் போது
வேதீச்சிரத்தில்நடம் ஆடும்சீர்ப்பாதப் போது
இசைவுறப்பட்டளவில் அகலிகைஎன்னு மாது
எழுந்தாள்கல்லுருமாறி மீது
இந்த்ரபோகசன கன்வில்லைரண்டு
துண்டமாகவொடித் தான்அதைக்கண்டு
சுந்தரிசீதையைத் தந்தனனேமகிழ்
கொண்டிடவேமணமானபின்னேவரு
கின்றவழிஅதனிற் பரசுராமன்வில்
முறிந்திடவேசெய்து சனகியோடயோத்தி
வந்துகூனிகலகந்தனால்அரசி
முந்துநீடுபுகழ் தம்பியோடுமலர்
மங்கைசீதைபதம் நொந்துவாடிவர
கங்கைமாநதி கடந்துவாசமலர்க்
காவிரிதருசித்ர கூடபர்வதத்தில்
மேவிபரதனுக்குப் பாதுகைஅளித்தபின்
ஸ்ரீதண்டகவன வருகொண்டதில்அத்
திரிஎன்றிடுதவ முனிவன்கிர்பைபெற்
றிட்டபின்புவிராதன் இருகைஇது
முட்டவிண்டிடவேசெய்துசரபங்க
முனிவன்ஆசிர மந்தனிலேஎழிற்
சனகியொடெய்தி இந்திரன்போனபின்
தண்டகாரண்ய வாசிகள்படுதுயர்
கண்டனோர்இடர் தீர்தரஇனை அறு
கருணைகொண்டே அந்த வனமதிற்பத்து
வருடம்நின்றவரும் வழியிற்சதிட்ட
மாமுனிவரங்கொண்டே அகஸ்தியன்றனைக்கண்டு
சேமவிற்சரங்கொண்டு துதித்தவன்றனைவிண்டு
சென்றுசடாயுஉற வாடப்பஞ்சவடியில்
நின்றுவிடாதமய லோடுகெஞ்சியபெரு
நீலிசூர்ப்பனகை காதுமூக்கரிந்து
காலனுக்குநிகர் ஆகப்போர்க்குவந்த
கரதூஷணத்திரி சிரசன்ஆதியரை
அரைநாழிகைதனில் மறலிநாடதனில்

அனுப்பிமான் உருவாய்வந்தமாரி
சன்கையாற் பிடித்திடவேபோன
தருணங்கண்டிராவணன் தபசிபோல
விரைவில்வந்துசீதையை நிலத்தினோடு
மேல்எடுத்துச்செல்லும்போதுசடாயுவின்
ஆவியினைவதைத்தசோகவனத்தினில்
அரியசிறையில்இடவேசானகிதன்னைப்
பிரியும்அதிகதுயர்ஆலோசினம்நண்ணிப்
பின்மதிக்கவந்தனைச்சொர்க்கம்ஏற்றிச்சவரி
சொன்னவிதங்கொடுசுக்ரீவனைத்தனது
சொந்தம்ஆக்கி அக்ரமமிகுவாலிதனை
முந்தவாட்டிவிக்ரம அனுமானை அளி
மொய்த்தகுழற்சீதைதனைத் தேடவிடுக்கஅவன்
உத்தமசம்பாதிதன்னால் உளவறிந்துகொண்டு
ஒப்பில்லாதவிஸ்வரூபங் கொண்டுமயேந்திரம்ஏறிச்
செப்பமாய்க்கடலைத் தாண்டிலங்கையிற்சேர்ந்து
திடமுறுலங்கணியை முதற்பலியிட்டுச்சீதையைக்
கடிபெறுலங்கைஎங்குந் தேடிக்காணுமற்பின்பு
காவல்மிகும்அசோக வனத்திற்றிரிசடையன்பு
மேவக்காத்திடவட்முகம்பார்த்திருக்கக்கண்டு
விஜையகோதண்டராம தூதன்நான்என்றுசொல்லு
நகைதருங்கணையாழி கொடுத்துத்திடமுங்கூறி
நாயகிசீதைதந்சூடாமணி கைக்கொண்டு
தீயகிங்கரர்எண்ப தாயிரம்பேர்களோடு
செழுத்தஅசோகவனத்தையும் அழித்திடக்கண்டெதிர்த்தக்
கொழுத்தாட்சதசேனை யொடுசம்புமாலிமிகுத்த
கொடுமைசெய்பஞ்சசேனை திபர்களும்அக்ஷதனும்
மடியநாற்பதுவெள்ளம் அரக்கரோடிந்திரசித்தன்
வந்துபோர்செய்ய அநுமந்தன் அந்ததளத்தைச்
சிந்துசிந்தாக்கிஇந்திர சித்தன்தேரை அழித்துச்
சிலையைமுறித்துமுடித் தலையைஉடைக்கஅவன்
வலியபிரம்மபாசத்தாற் கட்டராவணன் அப்போ
வாலில்நெருப்பையிட அந்தநெருப்பைலங்கையின்
மூலைக்குமூலைஇட்டுக் கொளுத்திநீறுக்கிவிட்டு
உளமகிழ்கொண்டுமீண்டு வந்துசாமியைச்சேவித்து
அளிதிகழ்சூடாமணி தரக்கண்டுமகிழ்ந்தபின்பு
அடல்மிகுத்த எழுபதுவெள்ளவானரப்
படையும்ஒப்பில்அதின் அதிபரும்நீடிய



பரிவொடுதென்கடல் அருகில்நிறைந்தபின்
சரணம்அடைந்துநின் துணைஅடிதந்தருள்
சாமிஎன்றவிபீஷணன்றனக்குலங்கா
பூமிதந்துவிகாதஞ் செய்தவருணன்மேற்
பொற்கணைவிடுத்தவனை வரச்செய்துபுஜபல
சித்திரக்கவியினங்கள் அதைக்கொடுவிரைவொடு
சேதுபந்தனஞ்செய்வித்து நீள்கடல்வளைந்திடு
மாதிரம்பயந்திடச் செயராவணன் இலங்கைதன்னை
வந்துமுத்திகைசெய்துகொண்டு தம்பிஅங்கதன்மீதும்
முந்துவிக்கிரமஅனுமந்தன் அம்புயந்தன்னிலும் ஏறி
மூதண்டந்திகில் மேவிஅதிர்ந்திட
கோதண்டந்தனில் நாணொலிகொண்டுற
குரைகடல்வெருவிட நெடுநிலம்அதுதனை
ஒருசுமைஎனஉறும் உரகன்உடல்நெளிய
உயர்மதிகதிர்வழி பிசகிடநெடுவரை
அயர்தரவுடுஇனம் அதுதரையில்உதிர
அணிரதகஜபரி பரிசனவகைமிக
அணிஅணியொடுவர அதிவலிமைகள்சொலி
அனல்கக்கிடும் அததிச்சத்திரமழு
கனகசக்கரம் நெட்டயில்பட்டயமொடு
கதிர்வீசுங்கதிர் முத்தலைசூலங்
கண்தனார்அஞ்சிலை கைக்கொடுதாளங்
காளஞ்சின்னந்தாரைகள் மத்தளபேரிகள்பலவித
மேளம்பின்னும் நாகசுரத்தொடுபூரிகைஒலிதர
வீரராவணன்தேரில் ஏறிபோர்க்களத்தில்வந்து
சேரவேஅவன்சேனைவீரர் யாரும்போரில்முந்த
தீயவச்சிரமுஷ்டி துன்முகன்சுபாரிசன்
மாயபிரகஸ்தன்கெட்ட வன்மனங்கொள்நீசரை
வானரவீரர்கள்கொல்ல ராவணன்இவரைவெல்ல
ஜானகிமணாளன்வில்லிற் சோனைமாரிஎன்றுசொல்லத்
தகுஞ்சரங்களைவிட்டு அவன்தேர்வில்லைமுறித்துத்
திகழ்மணிமுடிபத்துந் தரைமேல்உருளச்செய்து
திடமொடுசண்டைசெய்ய நாளைவாஇன்றுபோவென்று
விடைதரமனம்நொந்து தனியாய்ப்போய்லங்கைசேர்ந்து
வெற்றிசேர்கும்பகர்னனை நித்திரையில்இருந்தெழுப்பி
அத்ததியில்சண்டைக்கு விடுத்திடஅவன்களத்தை
அடுக்காகவன்அம்பு தொடுக்கவேகும்பகர்னன்
நொடிக்குள்காலுங்கையும்போய் படிக்குள்ளேமுண்டமாகி

நொந்துபின்சாமிதனைச் சிந்தனைபேசி
இறந்ததை ராவணனறிந்ததிகாயனை
அனுப்பஅவன் பரிசனத்திரளினொடு
முனைத்தலைவர்களுஞ் சமர்க்கனம்அணுகி
முச்சிரத்தன்வயமஸ்தன் கும்பன்தேவாந்தகனும்
அச்சமற்றரணமஸ்தன் வம்பன்நராந்தகனும்
அனுமான்முதலோர்கையால் மடிந்திடஅதிகாயன்
சினமாகியிளையோனோடமர் செய்துமுடிவாகச்
செய்திதெரிந்திந்திரசித்தன் தேரில்ஏறி
வெய்யசதுரங்கம் மொய்க்கப்போரில்வீறி
விஞ்சுஞ்சுக்கிரீவன் பனசன்சாம்பன்அனுமன்
வஞ்சம்அற்றநீலன் முதலினோர்கள்தமையும்
வாட்டக்கண்டு லட்சுமணன்தன்வில்லினிற்சரம்
பூட்டஇந்திரசித்தன் ரதகஜபரிஜனம்
புரவியாவற்றும்மாண்டு தானும்மிகமெலிந்து
இரவில்நாகபாசத்தை ஏவஅதனால்நொந்து
இலக்குமணன்முதலோர்களத்திற்படுக்கராமன்
அக்கணமவ்விடமேவி திகைத்துவருந்தும்வேளை
அடல்சேர்கருடன்வர நாகபாசந்தெரித்து
விடயாவரும்எழுந்து போரில்வீறிக்கதிக்க
மிதம்அற்றசேனைசூழ உக்கிரங்கொண்டுவந்தெதிர்த்த
மதம்உற்றசூரியகேது வச்சிரதந்தன்பெரும்பக்கன்
மாபிசிங்கன்பேயன் பரிதிக்கண்ணனையும்
ஆலம்அஞ்சுந்திய குருதிக்கண்ணனையும்
ஆர்க்குங்கவித்தலைவர் மாய்க்கராமலட்சுமணர்
தாக்கமகரக்கண்ணன் அக்கினிகேதுமடிய
சுசமுகன்அதைத்தெரிந் திந்திரசித்தனைவிட
வசைகொள்ளும் அவன்களம் வந்துலட்சுமணனுடன்
வாதுசெய்யஇளையோன் அப்போமிசாமாரிவெய்யன்
மீதில்எய்யஅதனால் அப்பாதகன்திரேகம்நைய
விண்ணில்மறைந்துதன் னூரைச்சேர்ந்துசூது
பண்ணிவெல்லஎண்ணி போருக்கம்பனோடு
பரவிமகோதரனை ஏவஅவர்கள்களம்
மேவிபலத்துடனே ராவில்அமர்புரிய
வீறும்அனுமான்தன்னால் அகம்பன்நிகும்பன்சிரங்கழிருண்டபின்
சீறும்மகோதரன்கைச்சரங்கள்அழுந்திடவருந்தி இளையவன்



திகைக்கும்வேளையில் இந்திரசித்தன் அங்குவந்து
மிகுத்தபிரம்மாஸ்திரம்விடுக்கத் தம்பிமுதலோர்சாய்ந்திட
வித்தகஸ்ரீராமன்கண்டு மெத்தவும்ஆகுலங்கொண்டு
சித்தகப்பிரமைஆகஅன்று உத்தமஅனுமான்சென்று
செழித்தசஞ்சீவி பருவதத்தைக்கொண்டுவந்தபின்
பிழைத்தனைவரும்போருக் கெதிர்க்கஇந்திரசித்தெனும்
பித்தன்மாயாசீதையை வெட்டிநிகும்பலையா
கத்தின்சாலைசேர அதைத்தெரிந்திளையவன்
கணைமழைபொழிந்தரக்கன் செய்யும்யாகமழித்து
க்ஷணமதில்அவன்சிரத்தைக் கொய்துதேவர்துதிக்கச்
சாமிபாதகேரில்வைக்க ராவணனறிந்ததன்மேலமர்செயவிட
பூமிபாரமானதுஷ்டமூலபலங்கள் ஓர்ஆயிரம்வெள்ளமும்
போரிலேறுதல்கண்டுவானர வீரரோடவேஒன்றியாகிய
தீரராகவன்சண்டமாருதம் ஆகிநேர்கள்பஞ்சுபோலேகெட
திவ்வியமோகனாஸ்திரம்ஏவி எங்கும்ராமனாகத்தோன்றிட
வெய்யர்யாரும்பார்க்குள்தாவி தங்களிற்றாங்களேமாண்டபின்
வேதனையேசெய்யும் ஜாதகதாக
பாதகனாமகோதரன்போர்செய்து
படையும்போய்ராகவன் கைக்கணைதன்னால்ஆவிவிண்டு
மடியவேராவணன்சதுர்ச் சகுனம்மென்மேலுங்கண்டு
வந்துபெருஞ்சண்டைசெய்யச் சாமிராவணன்பத்துசிரத்தையு [ம்
விந்தைஅம்புகொண்டுகொய்யக கொய்யமீண்டும்மீண்டுமுளை [க்கஅவ்
வேளையிலேஇதமாக பிரதாபகு
ணவிபீஷணன் ஓதும்உபாயத்தி
னால்இணையறுபிரம் மாஸ்திரம்அதனைவிட்டு
ஆலம்அனையவிழி ராவணன்நாபியில்வைத்த
அமிர்தகலசத்துடன் முடிகள்சிதறச்செய்து
இமையவர்முனிவர்கள் படுதுயரம்ஒழித்து
இணையில்எழிற்சனகி தீயினிற்குளித்தபின்பு
துணைவன்கவிப்படைவி பீஷணனுங்கற்பிலங்கு
தூயசீதைதன்னொடுபுஷ்பக மீதிலேறிமுன்வினைமுற்றிலும்
மாயவேசெய்கின்றமகத்துவ மானசேதுஅண்டையில்ஒப்பற
மாதேவற்கன்றுசீராட்டி இறைஞ்சிதிரும்பிமுன்வந்தவழிகளை
சீதேவிக்கன்பொடுகாட்டி மகிழ்ந்துநடந்துபன்னருந்தவநிலை
திகழும்பரத்துவாசன்மடத்தினிற்சேர்ந்தபின் திடத்துடன்அனுமானை
புகழும்பரதராஜன்இடத்திற்கே விடநொடிகுள்ளேஅவன்போன
போதுசாமிவரவைக் காணேனென்றபரதன்
ஓதுந்தீயினில்விழப் போகக்கண்டுஅனுமான்

மோதிரந்தந்துபதருதொருபதிவர முனிமடம் வந்துசேர்ந்தானென்று
ஆதரவுஞ்சுபமுங்கூறிபாரிடம் விரைவில்விடைகொண்டுஆஞ்சநேயன்
அக்கணந்திரும்பிலோகரட்சகன் உண்ணும்வேளைக்க
ரைக்கணம்முந்திவந்தோதப் பட்சங்கொண்டவனைக்கூட
வைத்துவரதன்பொசித்துப் புஷ்பகமதிற்கதித்து
சத்யபரதன் துதிக்க உத்தமகுகன்மதிக்க
தகைமைமேவிய அயோத்திநகரில்வந்து
திகழும்மூலவுலகம் போற்றஒளிசிறந்த
சித்திரமிருந்த சிங்காசனமீதினில்
அற்புதம்உற்றசெந்தேன் மொழியாள்எம
தன்னைசீதையோ டமர்ந்துபேரிகையு
மன்னுதாளமிரு தங்கநாகசுர
வாத்தியம்ஒலிக்கவரு சுரர்மருமலர்கொடு
நாற்றிசைஇறைக்கவெகு முனிவர்கள்மணிமுடி
நரபதிகளும்வா னரபதிகளும்பூ
சுரர்துதிசொலவே கவரிகள்அருகே
தூய்லட்சுமணனுடன் சத்துருக்கனும்வீசிட
நேயம்உற்றபரதன்உட் களித்திதம்பேசியே
நிலவெறிதருசந்திர வட்டங்குடைகவிக்க
பலமிகுஅனுமந்த னற்றனைஅடிபிடிக்க
பக வசிஷ்டனால் மகுடாபிஷேகங்கொண்டு
ஜெகதலத்துளோர் துதிபேசச்சேர்வைதந்த
தீனதயாநிதியே அடியார்உள
மேநிலையாய்நிதம் வாழ்வரதாஉயர்
வேதாஅரிஅனை மேவுவிநோதா
தாதாசுரர்முதலோர் துதிபாதா
சதுரனேசா சரங்களைத்தருமூலா
துதிசெய்ராஜசேக ரன்றமிழ்க்கனுகூலா
சுமுகசுகுணசுந்தராங்க சுகிர்தநய
விமலவிபவந்தை யோங்கிடுமிகுஜய
கோதண்டதீக்ஷாகுருவே பக்தரிர்தய
கோகனகமலர் மருவே.

## இராமாயண ஓரடிக்கீர்த்தனை.

முற்றிற்று.

---

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# இராமநாடகம்.

## ஆக்கியோன் பெருமை.

கொச்சகக்கலிப்பா.

கம்பஇராமாயணப்பாற்கடலைஉண்டு
நம்பவரும்ராமநாடகமாம்மாமழையை
அம்புவியில்க்காழி அருணாசலமேகம்
கும்பும்உயிரப்பயிர்க்குப் பெய்துவினைகொய்ததுவே. (க)

மேல்க்காப்பு.

## வழிபடுகடவுள்வணக்கம்.

விநாயகர் தோத்திரம்.

நேரிசை வெண்பா.

ஆனைமுகனே அரனார்திருமகனே
சேனையர்கோனுகவளஞ் செய்வோனே-ஞானமே
நாடகத்தைகொண்டஉன்றன் நல்லருளாலேராம
நாடகத்தைச்சொல்லுவேன் நான். (உ)

க. தரு-சௌராஷ்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

விநாயகாசரணம்-ஜெயஜெய விநாயகாசரணம்

அநுபல்லவி

அநாதரட்சகனே-கெஜமுகனே-ஐங்கரனே சிவசங்கரன்மகனே (வி)

சரணங்கள்.

க. அன்பிலாத பேயன்-என்னுடைய
அறிவுவிளங்கவேதுணை வருவாயே
என்குலதெய்வம் நீயே-இந்த
ராமநாடகத்துக் கனுக்கிரப்பாயே (விநா)

உ. வானவர்பணி வோனே-நல்ல
வாக்குத்தந்துகாத்தருள் சீமானே
நான்உனதடி யேனே-ராமா
நாடகத்துக்கருள்புரிநீ தானே (விநா)

ந. உண்மைஞானம் தோனும்-உன்றன்
இதவியாலேநல்லபுத்திகன் பூணும்
நன்மைஎய்திடும் காணும்-ராம
நாடகத்தைச்சொலநீ முன்னிற்வேணும் (விநா)

ஸ்ரீ



# இராம நாடகம்.

பாயிரம்.

உள்க்காப்புகள்.

ஏற்புடைக்கடவுள் வணக்கங்கள்.

## அனுமார் தோத்திரம்.

நேரிசைவெண்பா.

கோதண்டதீக்ஷா குருராமநாடகத்தைத்
தீதண்டாதாறடியேன் செப்பவே-கோதண்டா
மாருதியே அஞ்சனையாள் மைந்தனே நற்கருணை
வாருதியே நீதுணையா வா.

௨. தரு-கலியாணிராகம்-ரூபகசாப்புதாளம்.

பல்லவி.

துணைவந்தருள்புரிகுவாய் அனுமந்தாநீ *
துணைவந்தருள்புரிகுவாய்

அநுபல்லவி.

துணைவந்தருள்வாய்நல்ல சொல்லப்பொருளதுபுல்ல
இணைஒன்றிலாதவல்ல ராமநாடகம்சொல்ல (துணை)

சரணங்கள்.

க. துஷ்டவாலிதோழமையை
சுக்கிரீபன்தோழமையைக்
திட்டமாராகவனைப்போய்க்
செப்பியசொல்அமுர்தத்தை
கஷ்டமும்அரசிழந்த
நஷ்டமும்அவன்இருப்பும்
சட்டமாச்சொன்னமாருதி
இஷ்டகருணைவாருதி
விண்டோனே-விண்டு
கொண்டோனே-வெகு
கண்டோனே-அவன்
உண்டோனேசுக்கிரீவன் (துணை)

* இந்தப்பல்லவியை இரட்டித்துப்பாடும்போது 'அனுமந்தாநீ'என்கிறதற்குப்பிரதியாக 'என்றனக்குற்ற'என்றும்'எனக்குப்பக்கம்'என்றும் சொல்லிக்கொள்ளவும்.



௨. அஷ்டதிக்கில்த்தென்திசை
அரியபிலத்தினுள்ப்பு
பொட்டெனப்பூமியினைப்பி
போக்கவேமிகமனம்த
எட்டவே இருந்துமெள்ள
கிட்டவே வரஅவற்குப்
பட்டதைச் சொல்லும்தூயனே
முட்டிலா ஆஞ்சநேயனே
உகந்தோனே-சீதைக்காய்
குந்தோனே-அப்போது
ளந்தோனே-உயிரைப்
ளர்ந்தோனே-சம்பாதி (துணை)

௩. உக்கிரமாவிஸ்வசொரூபம்
துதைந்துகடலைத்தாண்டி
அக்கிரமலங்கணியைக்கீழ்ப்
ஆவியைத்தேவிகையினில்க்
மிக்கவேரத்தங்கள்வாயால்
கக்கவே ராட்சதர் எல்லாம்
மக்கவே செயும்ருத்திரனே
முக்கியமாம் வாயுபுத்திரனே
எடுத்தோனே-மயேந்திரத்
விடுத்தோனே-பொல்லாத
படுத்தோனே-நற்றிரு
கொடுத்தோனே-ஆறுபோல் (துணை)

௪. தேவிசூடாமணிகையில்த்
சேதிகள்எல்லாம்அங்கி
பாவிராவணன் லங்கையை
பக்கல்வந்துற்றசேதிகள்
பூவுகைத்தோரும்தேவர்
கோவும்முனிக்கணமும்ப
ராவியசிரஞ்சீவியே
மேவிய எனதாவியே
தரித்தோனே-சொன்ன
கரித்தோனே-படு
எரித்தோனே-ராமன்
விரித்தோனே-இந்த (துணை)

௫. அருமையாம்சஞ்சீவிமலையை
அஸ்திரவேதைகள்எல்லாம்
உரிமையாயராகவன்பக்கல்
உயிரைவிடுமுன்னமேபோய்க்
பெருமையார்முனி-விருந்தனில்
தருமராமனோ-டருந்தின
ஒருமையார் சஞ்சீவி-ராயனே
பிரமபட்டம்பெறும்-உபாயனே
ஏற்றோனே-பிர்மம
தீர்த்தோனே-சீதையை
சேர்த்தோனே- பரதன்
கார்த்தோனே-தவத்தில் (துணை)

## பெருமாள் தோத்திரம்.

விருத்தம்.

அண்டர்தம்துயரம்தீர அயோத்திமாநகரில்வந்து
தண்டகாரணியம்சென்று சமுத்திரமீதணையைக்கட்டிக்
கொண்டுராவணனைமாட்டக் கோதண்டம்கையில்ஏந்தும்
புண்டரீகக்கண்ணன்ராம பொன்னடிக்கமலம்போற்றி.

(௪)

௩. தரு-சௌராஷ்டிரராகம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

எனக்குன் இருபதம்நினைக்கவரம்அருள்வாய்-ஸ்ரீராமச்சந்திரா
எனக்குன் இருபதம்நினைக்கவரம்-அருள்வாய்

சரணங்கள்,

௧. எனக்குன் இருபுதம்நினைக்கவரம்அருள்
இனித்தசரதன்-தனக்குமகனெனும்
மனத்தினுடன் அவ-தரித்துமுனிவரன்
மகத்தில்அரக்கியை- வதைத்தஅரசே (எனக்கு)

௨. நடக்கையிலேஅகலிகைக்குக்-கிருபைசெய்து
நடத்திச்சனகன்வில்-ஒடித்துச்சனகிகை
பிடித்துப்பரசுரா-மனுக்குமமதையைப்
பிரித்துநகரில்வந்-திருக்கும்அய்யனே (எனக்கு)

௩. தரிக்கும்முடிபர-தனுக்குதவிநதி
தடத்தில்க்குகனுடன் -அடுத்துச்சித்திரகூட
வரைக்குள்ச்சனகியோ-டிருக்கத்துணைவன் நல்
வணக்கம்செயமகிழ்குணக்குஞ்சரமே (எனக்கு)

௪. துடித்தபரதனும்-ஒடுக்கமுடன்வரத்
தொடுத்தமிதியடிகொடுத்தரசுசெய
வடக்கில்அவனையும்-விடுத்துநடுவிலே
வனத்தில்வரும்விரா-தனைக்கொன்றவனே (எனக்கு)

௫. விடுக்கரியசடா-யுவுக்குறவுசொலி
விடுத்துக்கொண்டுபஞ்ச-வடிக்குச்சென்றவுடன்
அடுத்தசூர்ப்பநகி-கொடுத்தகரதூ
ஷணத்திரிசிரர்முடி-துணித்தராகவா (எனக்கு)

௬. தனித்துவருமாரீ-சனைக்கொன்றொருகவந்
தனுக்கருளிஅனுமனைக்-கொண்டொருசுக்கிரீ
வனுக்குதவிவாலி-தனைப்பொருதிவா
னரப்படையை-ஆதரித்ததுரையே (எனக்கு)

௭. இருக்கும்அனுமன்வந்-துரைக்கசிசரர்
இருக்கைஅறிந்தபின்-எரித்தகடலிலே
பெருக்க அணைசெய்து-வருக்கம்வருக்கவருக்கமா
பெலத்தஅரக்கரைத்-தொலைத்ததெய்வமே (எனக்கு)

௮. கொடியஇந்திரசித்தன்-பிரகஸ்தன்முதலாகக்
கொள்ளுமூலபல-வெள்ளஅரக்கர்தம்
முடியும்கும்பகர்னன்-முடியும்ராவணன்
முடியும்பொடியாக-விடுபுங்கவனே (எனக்கு)



௯. நினைத்தபடிவிபீஷணர்க்கரசுபெற
நிறுத்திஒருபுஷ்ப-ரதத்தில்ஏறிவந்து
தனத்தில்உயர்தரும்-அயோத்தியிலேகிமா
தனத்திருக்கும்ரகு-குலக்குமரனே (எனக்கு

அபசாரக்ஷமை.

விருத்தம்.

கனமானவால்மீகர் சுலோகம்செய்தார்
கம்பரும்ராமாயணத்தைக் கவியாச்செய்தார்
உன்தாசையாலே நாடகமாச்செய்தேன்
உளறினால்என்னபலன் உண்டாம்என்றால்
முனிமார்சொல்லிய ராமமந்திரத்தை
மூவரும்ஓதிய ராமமந்திரத்தை
வனவேடன்மராமரா என்றேமுத்தி
வழிகண்டான்அதுகொண்டே மொழிகின்றேனே. (ரு)

௪. தரு-சாவேகராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ஐயனேரகுராமனேஎன்சொல் அபசாரம்உபசாரம்ஆக்கிக்கொள்வாயே

அநுபல்லவி.

கையில்ஆகாதநான் ஏதேதுசொன்னாலும்
காக்கக்கடன்என்பிழையை நீக்கக்கடன்உன்பாரம் (ஐயனே)

சரணங்கள்.

௧. எள்ளத்தனையும் குற்றம்
இல்லாதசுப சத்தம்
தெள்ளித்தெளியேன் மொத்தம்
செய்தேன்இதோ சுத்தம்
வெள்ளைக்கவி என்றும்-இதுசின்னப்
பிள்ளைக்கவி என்றும்-சொல்வதல்லால்
விள்ளத்தகுமோ பழுதுகள்
உள்ளத்தகுமோ சாமீ
தள்ளத்தகுமோ திருவுளம்
கொள்ளத்தகுமோ அறிகிலன் (ஐயனே)

௨. நற்பொருள் நீதமும்
நவரச பேதமும்
வைப்புள்ள கீதமும்
வண்ணவி நோதமும்

ஒப்புத் தெரிவேனே-அதில்உள்ள
தப்புத் தெரிவேனே-இலக்கணச்
சொற்பிக்கறியேன் உன்புகழ்
கற்பிக்கறியேன் சொல்லி
மெப்பிக்கறியேன் சாமி
ஒப்பிக்கறியேன் எங்கள்

௩. உத்தமமுனி முன்னம்
உரைக்கக்கப்பார் சொன்ன
நற்றமிழ்தன்னைச் சின்ன
நாடகம்ச தென்ன
வைத்திப்படி கண்டேன்-பெரியோர்முன்
புத்திப்பிழை கொண்டேன்-என்சாமி
பித்துச்சொல வைப்போலே
சத்திக்கள ருக்காலே
நத்தீச்சொலும் என்பேலே
சித்தத்தில்இ தத்தாலே (ஐயனே)

## நூற்பெருமை.

விருத்தம்.

சதிர்பெறும்ராமகாதை சதகோடிபிரபந்தம்ஆகும்
அதில்ஓர்அக்ஷரம்சொன்னாலும் அருவினைபோகும்என்றே
விதியினால்முனிவால்மீகி விளம்பியஉறுதிகொண்டு
மதியினால்அறிந்தமாத்திரம் வகுத்துநாடகம்சொல்வேனே. (௬)

௫. தரு-சாவேரிராகம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

மகத்துவம்உள்ளகதைராமகதைஇதுவேகேட்கவேணும்-முனி
வருக்குப்பலமணிதருக்கும்இதுபொதுவே

அநுபல்லவி.

மிருத்தமிருத்தபுராணம்சொல்லும் கதை
விரும்புமோமறுநாள்சொன்னால் அதை
அகத்தில்ஆநந்தம்தருமே இதுசொல்ல
அடிக்கடிசொல்லினும் வெறுக்குமோநல்ல (மஉ)



அநுபல்லவி.

க. சேர்க்கும்பொருள்களில்என்னஇணைச்செவிஏர்க்கும்பொருள்இது
மாத்திரம்செபமும்இது பெருந்தபமும்இதுஎன்றுதெளிவதேநல்ல
சூத்திரம்
பார்க்குள்இதைஅறியார்க் கெல்லாம்பிறந்தெடுத்தஉடம்பவ
பாத்திரம்
பக்தியால்இதுகற்றவர்க்குப் பலிப்பதுபரமபதக்ஷேத்திரம்
தீர்க்கமாஇதைகேட்கின்றோர் பெரும்
திருமணையில்வருவாரேதே வரும்
ஏர்க்கும்இதின்குணம்யார்க்குச் சொல்லவரும்
இகபரங்களில்சகலமும் தரும் (மக)

உ. தருமராஜன்கைநேரும்போதினில்ஒருமையாஅதைத் தடுக்குமே
சற்றேபடிக்கினும்புத்திரபாக்கியமும்சகலபாக்கியமும் அடுக்குமே
பெருகுநவக்கிரகம்ஏகாதசப் பலனைப்பிரியமுடன்வந்து கொடுக்குமே
பேயும்பூதமும்நோயும்சூனியமும்பிணிசெய்யாதபடி விடுக்குமே
மரணசெனனவியாதிதமக் கின்னம்
வருந்துவார்வருந்தாதபடி தின்ன
அரியமருந்திதுஆம்என்றே முன்னம்
ஆதிசிவன்உமைகாதிலே சொன்ன (மகத்துவ)

௩. சீமைதனிற்கங்கையமுனைபெருந்திவ்வியதெய்வநதி ஸ்நானமும்
சேனைமாநிலம்யானைமுதல்ஆகச்செய்யும்பலபல தானமும்
ஆமிதாம்என்றுதேறுகின்றவேதாந்தம் முதல்க்கலைக் கியானமும்
அதுவும்அல்லாமல்எதுநினைந்தாலும்உதவும்அந்நி தானமும்
சாமிநாரதமுனிவன்சொல்லி வைத்த
சரித்திரம்வால்மீகர்உரைத்தபடி கொற்ற
ராமன்அவதாரம்ஆம்முன்னே மெத்த
நயம்கொண்டாதிகாவியம்என்றே பெற்ற (மகத்துவ)

## அவையடக்கம்.

விருத்தம்.

பத்துமுதல்விலைஇல்லாமணிகள்பெற்ற
முதியகடல்ஆடுகின்றோர் அதிலேஏழு
சற்றும்உலயவாதமணியாம்பருக்கை
தான்போடக்களிப்பானசமுத்திரம்போலக்

கர்த்தன்அனும்ராமச்சந்திரன்கதைப்பாக்கேட்கும்
காதிலேநாடகமா அதனைச்சொல்லிக்
குற்றமிகச்செய்தாலும் குணமாக்கொண்டு
கூட்டுவீர்என்கவிபாராட்டுவீரே. (௪)

இதுவும் அது.

அரன்முடிமேல்க்கங்கைபகீரதன்கொணர்ந்தே
அந்நாள்செய்தர்ப்பணம்போல்இந்நாள்இந்த
நரரும்அந்தக்கங்கையிலேதர்ப்பணத்தை
நடத்திமுத்திபெறுகின்றார்அதுபோல்ஆதிப்
பிரமன்முகத்தினில்வந்தராமகாதை
பெருமுனிவால்மீகிசொல்லக்கம்பர்சொன்னார்
விரவுதமிழ்ப்பத்தாலேநானும்சொன்னேன்
மேல்க்கொள்வீர்என்பிழைதீர்த்தாட்கொள்வீரே. (௫)

௬. தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பிழைபொறுக்கவேணும் பெரியோரே-பிள்ளைஉமக்குநான்காணும்

சரணங்கள்.

மழைநிறத்தராமசாமிகதை இன்ன
வகைஎன்றறிந்தும்அறியாமலும்நான் சொன்ன (பிழை)

சரணங்கள்.

௧. ஆதியில்பிர்ம்மதேவர் நூறுகோடிவிஸ்தாரம்
ஆதிகாவியம்என்றித்தை மதித்தாரே
பேதமில்இருபத்துநாலாயிரம்ஆகப்
பிறகுவால்மீகர்சொல்லி விதித்தாரே
போதாயனர்முதல்மாதவர்இக்கதையைப்
புனைந்துவடமொழியால்த் துதித்தாரே
ஓதிகம்பர்பன்னீராயிரம்கவிஆக
உரைசெய்துதமிழிலே பதித்தாரே
காதலால்இவர்செய்யநான்அதுக் கிப்பாலே
கருடன்பறக்கவொருகொசுவும்ப றந்தால்ப்போலே
ஈதொருநாடகமாஓதினேன் புவிமேலே
எட்டும்ரண்டுந்தெரியாஏழைநான் ஆகையாலே (பிழை)



௨. வாவியபெருவெள்ளம் பாயும்கடலிலே
வாய்க்காலும்பாயும்அல்லோ நில்லாமல்
யாவதும்கற்றோர்சொல்லைக் கேட்கிறநீங்களும்
என்சொல்லும்கேளும்தடை இல்லாமல்
காவியமுப்பஞ்ச லட்சணமும்தெரியக்
கற்றீஉங்களைப்போலே சொல்லாமல்
கேவலம்நான்இதைப்பாகவதர்படிக்கும்
கீர்த்தனையாச்சொன்னேன்ஈ தல்லாமல்
தேவதேவராமன்பேரேஉற்றது
தேடிஅந்தப்பேர்இந்தநாடகத்தில்
பூவோடேகூடியநாரும்மணம்பெற்றது
போலேவிளங்கும்அதினாலேசொன்னேன் கற்றது (பிழை)

௩. திருத்தும்நாராயணநமசிவாயஎன்று
செபிக்கும்மந்திரம்இரண்டும் மெய்தானே
உரைக்கும்மந்திரம்இரண்டில்இண்டாம்எழுத்திரண்டும்
ஒருராமன்ஆகிவந்த பெருமானே
அருள்ச்செய்தகதைஇதைஇலக்கணம்ஆகச்சொல்ல
அறிவேனோசின்னம் சிறியேனே
பரப்பியபாலையும்சோற்றையும்குழந்தைகள்
பாச்சிசோச்சியென்னும் படிநானே
பொருத்தம்இல்லாச்சொல்லால்உரைசெய்தாலும்தள்ளப்
போமோஉங்களால்ஆமேதிருத்திக் கொள்ள
அரைச்சொலக்கொண்டம்பலம்ஏறினால்மெள்ளமெள்ள
அரைச்சொல்லும்முழுச்சொல்லலாம்ஆகையால் இதில்உள்ள (பி

---

மங்களம்.

விருத்தம்.

மூவருக்கும்தேவியர்க்கும் தேவரோடு
முனிவருக்கும்முன்னிந்தக் கதையைச்சொன்ன
நாவருக்கும்தசரதற்கும் தேவிமார்க்கும்
நற்றம்பிமார்களுக்கும் சீதையோடு
ஆவருக்கும்கோவருக்கும் அனுமான்மற்றோர்
ஆழ்வார்கள்ஆரியர் ஐம்படைஅனந்தன்
மாவருக்கும்இதைப்படிப்போர் கேட்போர்க்கெல்லாம்
வளம்சொல்வான்ராகவன் மங்களம்சொல்வேனே. (௬)

எ. அசாவேரிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

ஸ்ரீராமச்சந்திரனுக்கு செயமங்களம்-நல்ல
திவ்வியமுகச்சந்திரனுக்கு சுபமங்களம்

அநுபல்லவி.

மாராபிராமனுக்கு மன்னுபராக்கிரமனுக்கு
சராசரநாயகனுக்கு ரவிகுலசோமனுக்கு (ஸ்ரீ)

சரணங்கள்.

க. கொண்டல்மணிவண்ணனுக்குகண்ணனுக்கு மங்களம்
கோசலைகுமாரனுக்குவீரனுக்கு மங்களம்

புண்டரீகத் தாளனுக்கு
பூச்சக்கிர ஆளனுக்கு
தண்டுளவத் தோளனுக்கு
சானகி மணாளனுக்கு (ஸ்ரீரா)

உ. கோவைமணிவாயனுக்குமாயனுக்கு மங்களம்
கோதண்டகையனுக்குமெய்யனுக்கு மங்களம்

தாவுகுணை
சத்திய விசாலனுக்கு
தேவர்அநு கூலனுக்கு
ஆதசாதன் பாலனுக்கு (ஸ்ரீராம)


ங. பகிரண்டநாதனுக்கு வேதனுக்கு மங்களம்
பரதனும்அன்பனுக்கு முன்பனுக்கு மங்களம்

சசலஉ லாசனுக்கு
தருமங்க காசனுக்கு
அகலணி வாசனுக்கு
அயோத்தியா வாசனுக்கு (ஸ்ரீரா)

பாயிரம்-முற்றும்.

---

கொச்சகம்-க, வெண்பா-உ, விருத்தம்-ங, ஆக-ச, தருக்கள்-எ.



ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

முதலாவது

# பாலகாண்டம்.

## கடவுளர் வணக்கம்.

விருத்தம்.

ஆதிஆய்நடுவாகி முடிவும்ஆகி
அண்டபகிரண்டமும்ஆய் அனைத்தும்ஆகிப்
போதினைஆயினைவெள்ளிப் பொருப்பைவிட்டுப்
புகழ்பொறைகள்தருமம்எலாம் பொலிந்துநல்ல
நீதிசேர் அயோத்தியில்வாழ் தசரதேந்திரன்
நெடியமாதவத்தினில்வந் துதித்தநங்கள்
சோதிஆகியராமன் நாடகத்தைச்
சுயஞ்சொல்வான் மகிழ்ந்துதோடயஞ்சொல்வேனே. (௧)

௧. தோடயம்-நாட்டைராகம்-சம்பைதாளம்.

சரணங்கள்.

௧. எவரும்வணங்கியரகுராமன்-எதுவும்நினைந்ததுதருராமன்
ரவிகுலசுந்தரஜெயராமன்-நாடகத்தைச்சொலவே-ஆ-ஆ
கவளநெடுங்கரதலசாமி-கமலதிரியம்பகம்உளசாமி
புவனிவரும்கெசமுகசாமி-பாதபற்புத்துணையே-ஜெயஜெய

௨. துணிவுளபுசபெலராவணை-சுரன்முடிபொடிபடமோதுமால்
அணிபெறுதசரதராமநாடகமதுரைசெயவே-ஆ-ஆ
திணிதருபுயம்இருநாலுசேர்-திசைமுகன்இசைபெறுநாவில்வாழ்
மணிமிகுசரஸ்வதிபாததா-மரைஎனதுதுணையே-ஜெயஜெயா

௩. கோனெனுவானவர்தேவொரு-கோசலையாள்விளையாடவரு
ஞானகிருபாகரராமகதை-நாடகமாசொலவே-ஆ-ஆ
வானவன்ஆம்மணவாளமுனி-மாருதிநீள்கருடாதிபதி
சேனையர்கோனுடனேபதின்மர்-சேவடிகள்துணையே-செயசெயா

௪. வாசவன்மாசுரரொடுலோகாந்திர-வாசிகள்பூசுரர்இவர்ஏகாந்த
பூசிதராகவனிடஆராய்ந்த-புகழதுரைசெயவே-ஆ-ஆ.
காசினிமீதினில்மிகுவேதாந்த-காரமதோடவேவருவேதாந்த
தேசிகர்தாமரைமலரோபோன்ற-திருவடிகள்துணையே-செயசெயா



திருமகள்சானகிசேரும்வாமன் செயமொடுகோசலம்வாழும்நேமன்
கருமணியேநிகர்ஆகும்ராமன் கதையதுரைசெயவே ஆ-ஆ
குருகையில்மேவியகாரிமாறர் குணநிதிஆகியபாஷியகாரர்
மறைஉறுதேசிகர்மாசிலாத மலர்அடிகள்துணையேசெயசெயா
மைக்கடல்வாய்விண்டுபொங்கவே வைத்தொருபாணம்துரந்தமால்
விக்கிரமராமன்பிரபந்தம்ஆம் வித்தையதுசொலவே ஆ-ஆ
பக்குவம்ஆம்அன்புகொண்டுவாழ் பத்தரைஆளும்திறங்கள்சேர்
சக்கரகோதண்டம்வாள் சங்கம்இவைதுணையே செயசெயா

## அரசியல்.

கட்டியன் தரு.

அகோராசாதிராசன் மகாதேசப்பிரகாசன்
ராசபரமேசுரன் தேசநரமீசுரன்
ராசமார்த்தாண்டன் ரணரணங்கோத்தண்டன்
ராசகெம்பீரன் நேசசம்பீரன்
பாஸ்கரகுலதீரன் சிலாக்கியமுளவீரன்
புத்தியில்பிரகஸ்பதி வித்தையில்சரஸ்வதி
நயகுணசீலன் பயசனபாலன்
நல்லார்க்குமித்துரு பொல்லார்க்குச்சத்துரு
சுதரிதகுணநேசன் தசரதமகாராசன்
மனுநீதிகோணாமல் சனம்வேதைதோணாமல்
ஆறில்ஒருகடமைகொண்டு மாறுபடுபகையைவென்று
திங்கள்மும்மாரிபெய்ய எங்கும்முப்போகம்செய்ய
செங்கோல்முகம்சாயாமல் வெங்கோல்முகம்பாயாமல்.

அறுபதினாயிரம்வருஷம் பசுவும் புலியும் ஒருதுறையில் நீர்வுண்ண
ராச்சிய பரிபாலனம்பண்ணின கீர்த்தியைச்
சொல்லுகிறமார்க்கமாம்.

விருத்தம்.

மகராசன் அசமகாராசன்ஈன்ற
மகராசன்மிகு சூரியவங்கிசராசன்
சுகராசன்கௌசலை நாயகிகைகேசி
சுமித்திரைஆம்தேவியர் கைதொட்டராஜன்
மிகராசர்பணிந்திட இந்திரனைக்காத்த
விசயதசரதராஜன் அயோத்திவாழும்
செகராசன் ஒருவன்மனுநீதியாலே
தேசம்எல்லாம்ஒருகுடைக்கீழ்ச் செய்தாண்டானே. (௧)

௨. தரு-சாவேரிராகம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

ராசராசர்க்கும்-ராசன்        தசரத-ராசன் இருந்தானே

அநுபல்லவி.

தேசதிலகன்அ        யோத்திநகர்க்கொரு
திலகன்ரவிகுல        திலகன்ஆகவே(ராச)

சரணங்கள்.

௧. மந்திரதந்திரமும் நித்தியநைமித்தமும்
மகங்களுந்தினந்        செழிக்கவே
வன்புலியொடு பசுவும்ஓர்துறைநீர்
உண்டுகொண்டுபயம்        ஒழிக்கவே
இந்திரபதமும் குபேரதனங்களும்
எவருஞ்சிறிதென்று        பழிக்கவே
எங்கெங்குமுப் போகம்விளையவே
திங்கள்தோறுமும்மாரி        கொழிக்கவே(ராச)

௨. நாலுவர்ணசிரமங்களுஞ்சொன்ன
நடைபுரண்டு        பாயாமலே
நரர்க்கும்வேறுள்ள உயிர்க்கும்வயதுகள்
நடுவிலே        தேயாமலே
கோலம்ஆகிய மிருகமும்பறவையும்
குறிகடந்து        மேயாமலே
குடியில்ஆறில்ஒரு கடமைகொண்டுசெங்
கோலின்முகம்        சாயாமலே(ராச)

௩. மாறுமங்கையருக்கும் மறுமன்னவருக்கும்
மார்பும்முதுகும்        கொடாமலே
வளரும்அஷ்ட லட்சுமியும்தன்அர
மனைவிட்டடியை        எடாமலே
அறுபதாயிரம் வருஷமும்ஏ
காதிபத்தியம்        விடாமலே
ஆரும்மனதில் விசாரத்தால்அ
ராச்சியமணியைத்        தொடாமலே(ராச)



## சக்கிரவர்த்திமக்கள் வேண்டிவருந்தல்

விருத்தம்.

இருந்ததசரதராஜன் நெடுநாளாய்ப்புவிஆண்டேன்
இனிமேல்இந்தப்
பெரும்புவியைஆள்வதற்கும் முத்தியிலேசேர்ப்பதற்கும்
பிள்ளைகாணேன்
அருந்தவனேகுலகுருவே வசிஷ்டமுனியேபிள்ளை
அதைநான்காண
வருந்துவதில்லாவகையை மொழிஎன்றான்இதற்கென்ன        (௩)
வழிஎன்றானே.

௩. தரு- தசாவர்திராகம்- ஆதிதாளம்.

பல்லவி.

பிள்ளைஇல்லாதபாக்கியம்-நான்பெற்றிருந்தென்னசிலாக்கியம்

அநுபல்லவி.

வள்ளலேசன்மமலடன்என்        றொருகாலே
வசைகொண்டேன் தசரத        நான்புவிமேலே
கள்ளிஆனதுநெடுகவ        ளர்ந்ததாலே
காய்உண்டோகனிஉண்டோ        அதுபோலே (பிள்)

சரணங்கள்.

௧. மறுவில்லாதுஇந்தசூரியவங்கிசம்இது
வளரும்வங்சம்        ஆச்சே-இது
மழைபெய்ந்தடிமறைந்தால்ப்போலஎன்
மட்டிலேநின்று        போச்சே
அறுபதாயிரம்வருஷமும்        வருந்தும்
அரசுதான்இனிஆரைக்கொண்டு        திருந்தும்
குறைவில்லாதஅந்தசஞ்சீவி        மருந்தும்
கொடுக்குந்தெய்வமும்        நீதானேகிடைத்திருந்தும்(பிள்)

௨. பெருக்கக்காண்பதேகாண்பதல்லாமல்
பெறுவதொன்றும்        காணேன்-மிகு
பிச்சர்போலுநெடுநாளும்உண்டஉண்ட
எச்சிலைஉண்ணல்        ஆனேன்
விருத்தன்நான்இனித்தவசிலே        செல்ல
வேணும்அல்லால்ப்புவி ஆள்வதுசிறப்        பல்ல

இருந்தும்வாழை அடி வாழைஆய்ப்புல்ல
இவன்மகன்இவன்ஆம் என்றபேர்சொல்ல (பின்)

௩. மோந்தால்முத்தியும்வரும்பரத்திலே
முத்தியும்கூட வருமேமேலே
சாய்ந்தால்உடம்பெங்கும்குளிருமே
தழுவஇன்பம்தருமே
வாய்ந்தபொன்னுல களவும்போய்ச்சனி
மண்டலமும்திருத்திக் களவும்போய்ச்சனி
ஏந்தினேன்இல்லையே ஒருபிள்ளைக்கனி
என்னவீடென்ன வாசல்எனக்கினி(பின்)

## பெருமாள் சந்நிதியில் தேவர்கள் முறைபாடு.

விருத்தம்.

மன்னவன்ஆம் தசரதபூபதிஇவ்வாறு
மக்கள்இல்லாத்துன்பத்தை வசிஷ்டனோடே
சொன்னஉடன் அந்தமுனிவனும்தியானித்தான்
சுரர்முதல்ஆனவர்கள் மகமேருமேல்
சின்ன அரக்கரைநடுங்கி வாழ்த்தும்போது
சிறைக்கருடன்மீதினில் அச்சுதனும்வந்தான்
பொன்னின்மலர்அவன்பதத்தில் இறைத்தேகண்ணீர்
பொழிகின்றார் அரக்கர்துன்பம் மொழிகின்றாரே. ௫

௪. தரு-அசாவேரிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

கடைக்கண்ணால்இரங்கிப் பார்அய்யா-பார்த்துக்
காவாவிட்டால்இனிமேல் ஆர்அய்யா

அநுபல்லவி.

அடைக்கலம்எனஓடி வந்தோமே-நாங்கள்
ஆலைக்கரும்புபோல நைந்தோமே-சாமி (கடை)

சரணங்கள்.

௧. சொற்காதிபுவனம்எல் லாம்தாவிக்-கொண்டு
துரத்தக்கும்பகர்னன் தனைஏவி-மற்ற
பக்கம்இந்திரசித்தென்னும் பெருங்கோவி-ஆளப்
பண்ணிவைத்தானேரா வண-பாவி



செக்குள்ளே அகப்பட்டஎள்ளுப் போலே-அரக்கர்
கைக்குள்ளே அகப்பட்டஎங்கள் மேலே-உனது(கடை)

௨. அளகேசன்புஷ்பகம் தனைவிட்டான்-இலங்
கையிலேசூரியன்தேரும் வரவொட்டான்-மெத்தத்
தளராஇந்திரனைக்கூடச் சிறையிட்டான்-அரக்கன்
சருவகொள்ளை அடிக்கத் தலைப்பட்டான்
எளியோர்களை இப்படி ஈனர் ஒடுக்கல்-ஆமோ
கிளியைவளர்த்துப்பூனைக்கிட்டக் கொடுக்கல்-ஆமோ(கடை)

௩. பாவிஅரக்கன்பேச்சே மேலாச்சு-நாங்கள்
படைத்தபலங்கள்எல்லாம் மேல்ப்பூச்சு-நல்ல
பூவைவண்ணா அரக்கன் கைவீச்சு-வெள்ளிப்
பொருப்பேஅறியும்இனி என்பேச்சு
ராவணன்வதைக்கிறான்எங்கள்மேல் என்ன-கண்டோ
தேவரீர்கேளாவிட்டால் திக்குத்திசைஇன்னம்-உண்டோ (க)

## தேவர்களுக்குப் பெருமாள் அருளப்பாடு.

விருத்தம்

இசையும்வானவர்கள்கூடி இப்படிசொல்லாமாயோன்
அசையும்வாள் அரக்கர்தம்மை அகற்றுவோம்அஞ்சவேண்டாம்
தசரதன்மதலைஆகித் தரணியில்வருவோம்நீங்கள்
திசைதோறும்கவிகள்ஆகிச் சேரும்என்றுரைசெய்வானே. (௬)

௫. தரு-மோகனராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அவதாரம்செய் திடுவீரே * நீங்கள்
அரக்கர்பயத்தை விடுவீரே

அநுபல்லவி.

கவனவாலியும்சுக்ரீவனும் ஆகிக்
கண்ணாயிரவனும்கதிரோனும் போகி (அவ)

சரணங்கள்.

௧. அதிகம்ஆனருத்திரன் அங்கசஅநும சீலன்
அக்கினியேசேனைக்கதிபன்ஆன நீலன்

* நீங்களுக்குப்பிரதி ஆக இனிமேல் என்றும் சொல்லிக்கொள்க.

சதுர்முகப்பிரம்மாவேசாம்பவன்எனும்     காலன்
தரும்உபேந்திரன்வாலிதனக்குப்     பாலன்-ஆக
அவதாரம்.

௨. சங்கமும்சக்கிரமும்சேஷனும்     பரிவாகத்
தம்பியர்ஆய்வரத்தானேநாம்     பூலோகத்
துங்கன்ஆன தசரதராஜன்குறை     போகச்
சருக்காவருவோம்எவரும்அதின்முன்     ஆகப்-போய்
அவதாரம்.

௩. வானரவடிவாலும்மானிட     வடிவாலும்
தான்அல்லாதரக்கன்சாகானே     ஒருகாலும்
ஆனபடியினாலேஅனைவரும்     மலைமேலும்
கானிலும்இரும்காட்சிதருவோம்     மென்மேலும்-வந்து
அவதாரம்.

---

## பெருமாள் திரு அவதாரம்.

விருத்தம்.

இவ்வகையாமாயவன்முன் நடந்ததென்றே
எண்ணிமுனிகலைக்கோர்ட்டு முனிவனாலே
அவ்வகைஆம்புத்திரகா மேஷ்டிதன்னை
அயோத்திஅரசனைக்கொடு செய்வித்தபோதில்
பைவளரும்பாம்பணைமேல்ப் பள்ளிகொள்ளும்
பரமனைதசரதன்செய் பாக்கியத்தாலே
மெய்வகைசேர்உலகெல்லாம் மனுவிக்கியான
விதிசெய்வான்அவதாரம் அதுசெய்வானே.     (௭)

௬. தரு-கௌளிபந்துராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பரம்பிரம்மசொருபமே-ஸ்ரீ ராமன் ஆகப்-பாரில்வந்ததுபாரும்.

அநுபல்லவி.

வரத்தினால்அரக்கரைவானத்தில்     ஏற்றவும்
வானத்தில்த்தேவர்கள்மலர்மாரி     தூற்றவும் (பாப்)

சரணங்கள்.

௧. பத்திமுனிவன்கலைக்கோட்டுமாமுனி
பண்ணியயாகபலன்     தேற



சத்தியதசரதற் கருபதினாயிரம்
சம்வச்சரபலன்நிறை     வேற
சித்திரைமாசம் நவமிகடகம்
செழும்புனர்பூசந்தேன்     ஊற
ஒத்தக்கிரகங்கள் நால்வரும்பதின் ன்றில்
உச்சத்தில்ஐவரும்     ஏற-ஆதி (பாப்)

௨. சீர்ஆரும்லட்சுமணன் சத்துருக்கன்சுமித்
திரைவயிற்றில்நின்று     போர
பாரார்புகழ்கைகேசி வயிற்றில்நின்று
பரதன்வந்துபுவி     சேர
ஆராலும்கொள்ளாத ஆநந்தம்மேல்க்கொண்டு
அம்புவியோர்இடர்     தீர
கார்ஆரும்குழல்வல்லி இருவர்க்குமேலான
கௌசலைகண்களி     கூர-ஆதி (பாப்)

௩. தேவர்முனிவர்பகை தீர்ந்தோம்என்று
சென்னியில்ப்பூந்துழாய்     முடிக்க
பூவுலகத்துள வேதியர்எல்லோரும்
புகழும்வேதாகமம்     படிக்க
பாவிஇலங்கையின்மேல்ச்சூரியன்தேரில்உள்ள
பச்சைப்பரிஏழும்     நடிக்க
ராவணன்ஆதி இருக்கின்றராட்சதர்
எவர்க்கும்இடம்கொடுங்கள்     துடிக்க-ஆதி (பாப்)

---

## கௌசிகர் ஸ்ரீராமரைக்குறித்துக் கேட்குதல்.

விருத்தம்.

மைந்தர்இவ் வாறுவந்து வதிஷ்டனாய்ப் பேரும்பெற்றார்
அந்தநாள் விசுவாமித்திரன் அணித்தசரதன் முன்வந்தான்
இந்தநாள் எனதுவேள்வி இராமனால் முடியவேணும்
தந்திட இதுநல்வேளை தாஎன்றானே.     (௮)

௭. தரு-மோகனராகம் அடதளசாப்பு.

பல்லவி.

ராமனைத்தருவாய்-செகாட்சக-ராமனைத்தருவாய்

அநுபல்லவி.

தாமசம்செப்பாதே-தசரதேந்திரா-இப்போதே     (ராமனை)

சரணங்கள்.

க. அரன்பக்கம் செல்வேன்
அரிமுன்னே சொல்வேன்
இரண்டும்தப்பினல்உனேவிட்
டெவரால்ப்பகை வெல்வேன் (ராம)

உ. தாடகைப் பாவி
தவிர்த்தாள்என் வேள்வி
பீடைவராமல்க்காத்தால்ப்
பிழைக்கும்என் ஆவி (ராம)

ந. உம்பர்வி சாரம்
ஒழிக்கஅந் நேரம்
சம்பரனேக்கொன்ருயே
தயவாய்இந் நேரம் (ராம)

ச. கோபத்தில் ருத்திரன்
குருவிசுவா மித்திரன்
ஆபத்துகாக்கவேணும்
அதனல்உன் புத்திரன் (ராம)

---

## சக்கிரவர்த்தி அதை மறுத்தல்.

விருத்தம்.

சொல்லிது முனிவன் சொல்லத் துடித்தனன் தசர தேந்திரன்
சில்லிதுவேள்விக் காக்கச் சிறுபிள்ளை ராமன் ஏந்தான்
சல்லியம் செய்யும் அந்தத் தாடகை தனைநான் கொல்லேன்
பல்பல உரையேன் திராணிபார்என்பான் நேர்என்பானே! (கூ)

அ. தரு-ஸ்ரீராகம் அடதாளசாப்பு.

பல்லவி.

ராமன்ஏதுக்கு இதுக்கோ அவன்வர வேணும்
நான்வருகிறேன் காணும்

அநுபல்லவி.

பூமிஅரசன்என்றுநான் இருந்தென்ன கொள்ளை
சாமிஅவன்ஏந்துங்குழந்தைப் பிள்ளை



சரணங்கள்.

க. ஏன்இந்த தோத்திரம்-தாடகை
எனக்கெம் மாத்திரம்
வானுளோர்கள்வந்துதடுத்தாலும் அடிக்கிறேன்
நானேவந்துன்வேள்வியை முடிக்கிறேன் (ராமன்)

உ. பேயைக்கொல்வ தரிதோ-காரியம்
பெரிதோவீரியம் பெரிதோ
ஆயுதம்பிடிக்கறியான்கோாய்ஒரு சொல்லே
வாயில்முலைப்பால்மணம்மாற இல்லை (ராமன்)

ந. கவலைஏன் கொண்டாய்-என்முன்ஒரு
காணும்வாராள் கண்டாய்
அவளையும்படையையும்அடிக்கிறேன் பாராய்பாராய்
இவனல்லன்னஎழுந்திரு வாராய்வாராய் (ராமன்)

---

## வதிஷ்டர் தகவுரைத்தல்.

விருத்தம்.

இனமதில்அயோத்திவேந்தன் இதுசெல்லவிசுவாமித்திர
முனிவனும்கோபம்செய்தான் முன்நின்றவதிஷ்டன்கண்டான்
உனதுமைந்தனுக்குமன்ன யோகநாள்வந்ததென்று
கனமுடன்விரித்துச்சொல்லிக் காட்டுவான்கூட்டுவானே. (க0)

கூ. தரு-முகாரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மோசம்வாராதையாநான்சொன்னவார்த்தை மோசம்வாராதையா

அநுபல்லவி.

கோசகன்பின்னேராமனைக்-கூட்டிவிடுவாய்சொன்னேன் (மோ)

சரணங்கள்.

க. உப்புநீர்மேகம்சேர்ந்தால்-உலகில்ப்பிர வாகம்
அப்படிஉன்மகனுக்கு-அடுத்ததே யோகம். (மோ)

உ. மறுஉண்டோவதிஷ்டன்சொல்-வார்த்தைக்கும்ரண்டோ
பொறுபொறுமுளைப்பாரைப்புதைப்பாரும் உண்டோ (மோ)

௬. சோதிக்கவேண்டாம்நான்-சொல்வதே சீலம்
ஆதித்தன்குலத்துக்கின்-றனுகூல காலம் (மோச)

---

## கௌசிகர் ஸ்ரீராமருக்கு நீதிசொல்லுத.

விருத்தம்.

முனிவசிஷ்டன்இவ்வாறு சொல்லவேந்தன்
முறையாலேராமனை லட்சுமணனோடே
இனிதழைத்துக்கூட்டிவிட்டான் வழிக்குவேண்டி
இருவருமந்திரம்கொண்டார் வெயில்படாமல்
தனிநடந்தார்வேள்வியில்த்தா டகையும்வந்தாள்
சாமியும்பெண்ணெனநினைந்தான் முனிவன் அந்த
நினைவறிந்தான்பெண்இவளோ அல்லராமா
நில்லென்றான் இப்பொழுதே கொல்லென்றானே. (கக)

கப. தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பெண்இவள் அல்ல ராமா-தாடகை
வண்ணம்கொண்டநமன் இவள் ராமா

அப்பல்லவி.

மண்ணில்மெத்தஉயிரை-வதைத்திந்த நிர்மூடி
கண்ணில்கண்டதுகோடி-காணுதனந்தம் கோடி (பெ)

சரணங்கள்.

க. இஷ்டமாமுனிவர்என்றொரு பேர்தரித்
திருக்கும்கடலுக்கிவள்பெருத்தமந் தரகிரி
அட்டகாசம்செய்தால்அதுஒரு பாடாவிரி
அண்டகூடம்எங்கும்இடியுமே அரிகரி
எட்டுத்திசையிலும்ஓடி முட்டுமேஇவள்ஆதாளி
முட்டினால்மலையும்பிளந் திட்டிடுமேதூளிதூளி
எட்டியும்பார்க்கக்கூடுமோ கிட்டி ஒருகாளிகூளி
விட்டுநான்சொல்லவேணுமோமட்டிலா பாவ சண்டாளி (பெ)

உ. ஆயிரம்குணம்ஒருலோபகுணத்தால் தட்டும்
அதுபோல்இம்மருதத்தை அழித்தாலும்அழிக்கட்டும்
மாயைஇவள்பேர்சொன்னால்முனிவர்க்கும்பல்லு கிட்டும்
வற்றல்என்றெம்மைத்தள்ளிவைத்தாளே இந்தமட்டும்



தூயதிசை ஆனஎட்டும் ஈனறும்பாய்விழக்காட்டி
வாயில்ஒருபல்லிடுக்கி லேஅடக்குவாளேகூட்டி
தீயவடவாக்கினிபோல் பாயுவாள்கைகளைநீட்டி
பேயையும்பிடுங்கித்தின்னும் பேய்எனவந்தவெள்ளாட்டி (பெ)

௩. ஒருகுமதிஎன்னும்பெண்ணைப்பிளந்தான்இந்திரன் அப்போது
ஒருபெண்கியாதியைமாயன்ஒழித்தானே புவிமீது
பெருமானேஇவள்அந்தப்பெண்என வும்கூடாது
பெண்என்றால்ப்பேயும்இரங்குமேஅதி வளுக்கேது
இருடிகள்உடம்பைமெத்த உருசைஎன்றுகண்டுகொண்டோ
பெருமதம்செய்வோரைக்கொல்ல வருகிறாள்இதென்னமுண்டோ
நிருதிஇவளைப்பெண்என்று கருதுகிறாய்என்னகண்டோ
ஒருநொடியில்க்கொல்லாவேணும்குருமொழிதனக்குரம்முண்டோ (பெ)

---

## தாடகை முதல் ஆனவர்கள் வதம்.

விருத்தம்.

செய்திகளை இவ்வாறுரைக்கச் சிரமேல்க்கொண்டேரகுராமன்
வெய்துவணங்கிக்குருவிசுவா மித்திரன்சொல்லேவேதச்சொல்
மையம்எனவேமகம்காக்க வரிவில்வளைத்தான்தாடகையும்
எய்தபாணம்பட்டுருவி எழுந்தாள்மலைபோல்விழுந்தாளே. (கஉ)

கக. தரு-நாதநாமக்கிரியைராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

கொடியதாடகைபாவிவிழுந்தாள்-பொல்லாக்
கொடியதாடகைபாவிவிழுந்தாள்


அநுபல்லவி.

கொடியதாடகைபாவிவிழுந்தாள் செம்பொன்
முடியன்ராவணன்வெற்றிக்கொடி விழுந்தால்போல் (கொ)

சரணங்கள்.

க. உரைக்கதேவர் துன்பமும் மறக்க-காலன்
ஒருக்காலும்காணுதருசிகண்டு பறக்க
அரக்கர்ஆதிக்கங்கள் இறக்க-நல்ல
அனுகூலகாலங்கள்முனிவர்க்குப் பிறக்க (கொ)

உ. மூதண்டகோடிக்கப் பாலே-ஓசை
முழங்கவிசுவாமித்திரன்சாலைக் கிப்பாலே





கோதண்டபாணிஅப் — பாலே-நிலை
குலைந்துபுரண்டலறிக்கொண்டுமேட் — பாலே(கொடி)

௩. நடலைவஞ்சனைமாயம் — தடுக்க-சுவாமி
நாள்க்கொண்டுமுதல்ப்பலிஅரக்கரைக் — கொடுக்க
கடினசுவாகுபட்டுப் — படுக்க-ராமன்
கணையாலேமாரீசன்கடல்ஓட்டம் — எடுக்க(கொடி)

## அகலிகை சாப விமோசனமும் சரித்திரமும்.

விருத்தம்.

தாடகைதான்விழுந்தபின்பு தேவர்சொல்லச்
சகலபடைகளும்கொடுத்தே முனிவர்எல்லாம்
கூடவரக்கௌசிகையே முதல்ஆம்தீர்த்தம்
கொண்டாடிக்கௌதமன் ஆசிரமம்சேர்போதில்
காடதில்ரகுராமன் பதத்தூள்சிந்தக்
கல்லுருப்போய்கல்லுருவாய் விளங்கிநின்ற
பாடகக்கால்அகலிகையை இவள்ஆர்என்னப்
பரிந்துவிசுவாமித்திரமுனி பகர்கின்றானே. (௧௩)

௧௨. தரு-அசாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

தேவிஇவள்ராமா கௌதமன் ஆவிஇவள்ராமா

அநுபல்லவி.

ஆவலினால்ப் — பண்டு
மேவல்மனம் — கொண்டு
அந்தரம் — நாடிய
இந்திரன் — கூடிய (தேவி)

சரணங்கள்.

௧. மாபத்தியால்க்கங்கைஆடத்தடை — பெற்ற
மாமுனிகண்டுவெகுண்டுபயம் — சுற்ற
கோபத்தினால்இடும்சாபமொழி — மெத்த
கூறையிலேகரும்பாறைவடி — வுற்ற (தேவி)

௨. வெம்பியமாமுனிகண்ணில்எதிர்ப் — பட்ட
வேளையில்கண்டுபொருமல்முனி — திட்ட

அம்பொன்முடிதொட்டடிஅளவும் முட்ட
ஆயிரம்கண்அந்தவாசவனுக் கிட்ட (தேவி)

[illegible]. ஞானத்தினல்உன்னைஓதினபேர்க் கெந்த
நன்மைஉண்டாமோஅறியேன்இப்போ திந்த
கானத்திலேஉன்றன்பாதத்தூள்கள் சிந்த
கல்உருமாறிஅகலிகைஆய் வந்த (தேவி

## ஸ்ரீராமர் சீதையைக்கண்டு ஐயுறல்.

திடம்ஆம்விசுவாமித்திரன்இந்தச் சேதிஉரைக்கலட்சுமணன்
உடனேநடந்துமிதிலையுல்ப்போய் ஒருமாமணிமேடையில்ச்சீதை
மடவாள்கானத்தன்னை அந்த மயிலைத்தானும்ரகுராமன்
கடல்வாய்வருசெந்திருஎனவே கண்டான்விரகம்கொண்டானே. (௧௪)

௧௩. தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆரோஇவர்-ஆரோஎன்ன-பேரோ அறியேனே

அநுபல்லவி.

கார்உலாவும்சீர்உலாவும்மிதிலையில்
கன்னிமாடந்தன்னில்முன்னேநின்றவர் (ஆரோ)

சரணங்கள்.

௧. பண்ணிப்பதித்தால்ப்போல் இருஸ்தனமும்-கூட
பாங்கியர்கள்இனமும் துரைத்தனமும்
எண்ணத்தாலும்வண்ணத்தாலும் பங்கயப்
பெண்ணைப்போல்க்கண்ணில்க் காணும்மங்கையர்(ஆரோ)

௨. பாக்கியம்என்பதிவர் தெரிசனபே-அதிங்கே
பலித்ததென்னபுண்ணியமோ மனமே
மூக்கும்விழியும்தீர்க்கமாய் இன்னமும் பெண்கள்
பார்க்கப்பார்க்கநோக்கம்கொள்ளுமே கண்கள் (ஆரோ)

௩. சந்திரவிம்பமுக மலராலே-என்னைத்
தானேபார்க்கிறார் ஒருகாலே
அந்தநாளில்த்தொந்தம்போலே உருகிறார்
இந்தநாளில்வந்துசேவை தருகிறார்(ஆரோ)



## கௌசிகர் ஸ்ரீராமர் வரலாறு சொல்லுதல்.

விருத்தம்.

மனதில்இந்தப்படிநினைந்து மறுநாள்எழுந்துமகம்செய்யும்
கனகமணிமண்டத்தினில்ப்போய்க் காகுத்தனும்தம்பியும்இருந்தார்
அனையகாலுத்திவர்பெருமை அருமைதெரியஉரையும்என்றே
சனகன்உரைக்கக்கௌசிகன் உத்தரிப்பான்விவரம்விரிப்பானே. (௧௫)

௧௪. தரு-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆர்என்றெண்ணுமலேநாளும்இன் அதிசயங்களைச்சொல்லக்கேளும்

அநுபல்லவி.

சூராதிசூரன் ராமன்எனும்பேரன்
சுகுணதீரன் ரவிகுலகுமாரன் இவனை (ஆர்)

சரணங்கள்.

௧. ஆதியில்த்தசரதன்புத்திரகாமேஷ்டி
யாகம்செய்யஎன்று தொடுத்தான்-வந்த
பூதம்தந்தபரமானந்தத்தைநால்ஆகப்
பொன்னிகன்கமலத்திலே எடுத்தான்-அதில்
சோதிகோசலைக்கொன்றும்கைகேசிக்கொன்றும்
சுமித்திரைக்குரண்டுமாக் கொடுத்தான்-மூத்த
பேதைகோசலைஇடத்திந்தராகவன்
பிறந்தான்என்கவலையை விடுத்தான்-இவர்(ஆனை)

௨. தலைஆம்பரதன்லட்சுமணன் சத்துருக்கன்
தம்பியர்இவனுக்கு நேயம்-மிகக்
கொலையாளன்சுவாகுவையும்சேனையையும் இவன் அம்பு
கொண்டுபோனதென்ன மாயம்-நான்
உலையாதென்வேள்வியைமுடித்தானே இவன்அம்பால்
உருண்டதேதாடகை காயம்-மெத்த
மலைபோலேவந்ததும்பனிபோலேபோச்சிந்த
மகராசன்செய்தச காயம்-இவனை(ஆர்)

௩. துரத்தும்சாபம்அகலிகைக்குக்காலினாலே
துடைத்தானே அவள்உடல் மாசை-சொல்லும்
பெருக்கம்என்ன இவன்பிறக்கவேஉலகெங்கும்
பிறந்ததேமங்கள ஓசை-உங்கள்

பருத்தவில்இவன்கைக்குப் போதுமோபோதாதோ
பார்க்கவேணும்இன்னோர் ஆசை-இங்கே
வரச்சொன்னாலும்வரக்கிடைக்குமோவலிவிலே
வந்தானேநீங்கள்செய்த பூசை-இவனை(ஆர்)

---

## ஸ்ரீராமர் வில் வளைத்தல்.

### விருத்தம்.

புங்கவம் ஆம்முனிவன் இந்தவாறு சொல்லப்
போர்வில்லைஅறுபதினாயிரம்பேராலே
அங்குவரும்படிசெய்தான்இதைநாண்ஏற்ற
ஆகும்என்றால்மருமகனே ஆகும்என்றான்
சிங்கம்எனும்சனகனுடன்விண்ணும்மண்ணும்
திடுக்கிடவேஎல்லாரும் ராமன்கையால்
துங்கமுள்ள அந்தவில்லைவளைவுகாணத்
தொடக்கண்டார்இரண்டுதுண்டாய்விடக்கண்டாரே. (௧௬)

### ௧௫. தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வில்லானதுரண்டாய் ஒடிந்துவிழுந்ததேபாரில்

அநுபல்லவி.

கல்லியாணராமன்-அனகன்கையால்-மிதிலையில்வாழ்சனகன் (வில்)

சரணங்கள்.

௧. சுத்திபெறும்முனிவோர்மங்கள சோபனங்கள்பலகூற
பத்துத்திசைவானவர்எல்லோரும் பனிமலர்மாரிகள்தூற
சித்தப்பிரமையாலேகால்இரு திசையானைகள்தலைபீற
கத்திப்பிடி இடையாள்சானகிதால் எண்ணம்ஆனதுநிறைவேற ()

௨. சிங்காரமகாரவிகுலமே சிலாக்கியம்என்னஒளிவீச
உங்காரம்செய்தாசர்எல்லோரும் ஒருத்தர்போலமுகம்கூச
இங்கேபெண்சீதைசெய்தவப்பலன் லபிச்சுதென்றுபலர்பேச
கெங்காதரன்அல்லால்ஒருவருக்கும் கிளப்பஒண்ணாதமகாப்பிரயாச

௩. தருமாகமசாஸ்திரகோடிகளும் சகலவேதங்களும்பாட
வருமாமுனிவிசுவாமித்திரன்சொல்மறுவில்லாதபடிகூட
ஒருகாலனும்இந்தஓசைதன்னை ஏர்க்கொணாமல்செவிமூட
திரமாஇனிஇவனேகோதண்டதீட்சா குருஎன்றுகொண்டாட ()



## மிதிலைக்கு சக்கிரவர்த்தியின் எழுச்சி.

### விருத்தம்

நண்அரியவில்லதுதான் ஒடிந்தபின்பு
நடைத்தூதர்கலியாண ஓலைகாட்ட
அண்ணன்எனும்தசரதனும் பயணபேரி
அதுமுழங்கத்தேவியரும் படையுங்கூடத்
தண்உலவுசந்திரகிரி பிறவும்சென்றான்
சனகேசன்சதுரங்க தளத்தினோடே
எண்அரியகளிப்பாக வழிமேல்கொண்டே
எதிர்வந்தான்உடன்மிதிலைப் பதிவந்தானே. (௧௭)

### ௧௬. தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

ராசன்ஆம்தசரதராசன்-சனகமகா-ராசன்பதிக்குவந்தானே

அநுபல்லவி.

வாசவன்பணிராக வேசன்கல்லியாணஓலை
வாசகம்கண்டுவிசு வாசநேசம்உண்டாகி(ராச)

சரணங்கள்.

௧. கொட்டம்இடும்கெசமும்-அட்டம்இடும்துசமும்
எட்டியகுதிரையும்-கட்டியதேர்நிரையும்
இட்டம்உள்ளராசரும்-அட்டாளதேசரும்ஆய்
பட்டவர்த்தனர் இணங்க-கப்பணம்
இட்டுமற்றவர் வணங்க
வட்டவெண்குடையும்முடிகளும் துலங்க
மகரதோரணங்கள்முறைமுறை இலங்க
சட்டம்ஆனதிசைஎட்டின்மேலும்படை
மட்டில்லாமல்கூட-கட்டியம்போட-பெண்கள்பாட-கொண்டாட (ரா)

௨. உச்சமாணிக்கத்தாலே-தச்சபல்லக்கின்மேலே
அச்சுதன்தாய்முதலா-மெச்சியதேவிமார்கள்
இச்சையாலேமுன்னபோ-கச்செய்துபின்னாகவே
பச்சைப்பைங்கிளி என்னவே-பாங்கியர்
மொய்ச்சுக்கொண்டு துன்னவே
வச்சிரபாணிஎன்னமலர்முக மின்ன
மண்ணும்விண்ணும்என்னஅதிசயம் என்ன

உச்சிமீதுகரம்வச்சமன்னவர்கள்
எச்சரிக்கைபேச-கவரிவீச-வெகுவிலாச-உலாச (ராச)

௩. மெத்தப்பெருஞ்சேனைகள்-சுற்றத்துந்துமிபேரி
சத்தமேகம்போல்ஆர்க்க அத்திசையிலேநின்று
சத்திரபதிசனகன்-செற்றிநோ் ஆகவா
முற்றியகடல் மேலே-புகுந்த
மற்றொருகடல் போலே
பத்திஆகஇருபடைகளும் கலந்து
பார்த்திரண்டுராசரும்முகம் மலர்ந்து
வெற்றிஏறிய-புசத்திலேஅவனை
ஒற்றிஅணைத்துமாற்றி-மிகுத்தகீர்த்தி-படைத்தமூர்த்தி-அயோத்தி ( )

## ஸ்ரீராமர் பவனி வருதல்.

விருத்தம்.

வந்ததசரதராசன் தன்னைமுன்னே
வந்திருந்தராமனும் வம்பியும்போய்க்கண்டார்
அந்தஇருவருந்தந்தை அருளைக்கொண்டார்
அரசர்இருவரும் பின்னேவரமுன்சென்றார்
பந்தம்உள்ளமிதிலை வீதியிலேதேர்மேல்
பவனிவரும்ராமனைக்கண் டாசைகொண்டு
செந்திருவைநிகர்ஆன பெண்கள்பின்னே
செல்லுவார்மதிமங்கிச் சொல்லுவாரே. (௧௮)

௧-திபதை-கௌளிபந்துராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. சோதிநெடுந்தேர்மீதிலே வீதியினில்வரக்கண்டு
சுவாமிமுகம்காணவந்தார் வெகுமாதர்
பூதலந்தனில்இந்தஊர் மாதவம்என்னசெய்ததோ
புண்ணியன் இங்கேவந்தான்என்றார் வெகுமாதர்
௨. ஆடகலோகத்தமுதை ஈக்கள்மொய்த்துக்கொண்டதுபோல்
அய்யனைமொய்த்துக்கொண்டார் வெகுமாதர்
கோடைதனிலேதண்ணீர் ஓடைகண்டமான்கள்போலக்
கூடிக்கொண்டோடிவந்தார் வெகுமாதர்
௩. ஆழியும்வளையும்செம்பொன்னோலையும்மாலையும்விட்டாள்
ஆடைவிடமால்நின்றாள் ஒருமாது




கேள்விமுறையில்லையோ-சுவாமிஉன்முன்னே அம்பாலே
கிழிக்கிறான்மாரன்என்றாள் ஒருமாது
௪. பெருத்தமலைபோல்வில்லை-ஒடித்தாயேசீதைக்காக
பெலத்தவன்நீயேஎன்றாள் ஒருமாது
வருத்தமோமாரன்கையில்கருப்புவில்லைஒடிக்க
மாட்டாயோசுவாமிஎன்றாள் ஒருமாது
௫. கண்ணுக்கோருருவாய்ப்பார்ப்போர்கண்ணில்எல்லாம்தோன்றும்
இவன்கண்ணனே ஆகும்என்றாள் ஒருமாது
மண்ணும்விண்ணும்கடந்தானைக்கண்ணால்வளைத்துக்கொண்டாளே
வைதேகியேபெண்என்றாள் ஒருமாது
௬. சாய்த்தொருவரையும்காணாள்-சாமிதனையேகண்டாள்
தனியனோராமன்என்றாள் ஒருமாது
வார்த்தையும்உடைமைகளும்-பூந்துகிலும்சோர்ந்தாள்உயிர்
மாத்திரம்சோராமல்நின்றாள் ஒருமாது
௭. இங்கேஎன்உளம்புகுந்தான்-கண்கதவினைமூடி
இருக்குவேன் இவனைஎன்றாள் ஒருமாது
மங்கையரேஎன்மனது வள்ளல்பின்னேபோச்சுதங்கே
வரக்கண்டதுண்டோஎன்றாள் ஒருமாது
௮. தன்மருகன் ஆகஇந்த-மன்னனைப்பெற்றசனகன்
தர்மவான்என்றுசொன்னாள் ஒருமாது
கன்மனதுக்காரன்இவன்-தன்மகளுக்காகவில்லை
ஏன்வளைக்கச்சொன்னான்என்றாள் ஒருமாது

## சீதை சபாமண்டபத்துக்கு வருதல்.

விருத்தம்.

பாவையர்இப்படிஉருகப் பவனிவந்தான்
படைஅரசர்தசரதனும் பலரும்வந்தார்
மாவிசுவாமித்திரனுடன் தம்பிமாரும்
மருங்கிருக்கராகவனும் இருந்தான்இப்பால்
தாவுபுகழ்வசிஷ்டமுனி வார்த்தைகொண்ட
சனகன்உரைகொண்டு மணிமண்டபத்தில்
பூவுலகில்தேவர்சிறை மீட்கவந்த
பொருளினால்சீதை எழுந்தருளினாளே. (௧௯)





கஎ.-தரு-சாவேரிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

அன்னசானகிவந்தாளே-ராசாதிராசர்
அனைவர்க்குங்காட்சிதந்தாளே

அநுபல்லவி.

கன்னிமார்என்னும்தாரா கணத்தில்ச்சந்திரனைநேரா
பொன்னின்ஒளியும்பூமணமுங் கொண்டுதொடர்ந்து
மன்னன்சனகன்மணி மண்டபத்தில்நடந்து(அன்)

சரணங்கள்.

க. சுந்தரப்பாதம்வைக்கவே ரத்தினச்சிலம்பின்
சோதிநிலத்தில்மொய்க்கவே பூமிஆகிய
தன்தாய்மகளுக்கென்னவே விரித்ததேமாந்
தளிர்ப்போலஎங்கெங்கும்மின்னவே
அந்தஅமுர்தம்கண்ட இந்திரன்போலேதாகம்
ஆகியராமன்முன்னே தோகையர்நடுவாக
கந்தகலர்க்கைவளைச் சோதியினாலேரண்டு
கடைக்கண்கள்கொண்டுராமன் வடிப்பங்கள்கண்டுகொண்டு(அன்)

உ. வீரராமன்கைதீண்டியே இடும்போதவன்
மென்கைபிடிக்கவேண்டியே அம்மன்கைஅன
வாரிசமலர்விரித்துக் காட்டும்சூரியன்போல்
மாணிக்கக்கங்கணந்தரித்து
சோராநடைகொண்டு நேர்ஆகாமல்மெத்தத்
துவளும்அன்னங்கள்போலக் கவரிமங்கையர்சுற்ற
சீராமனைவிடுத்து ஆர்ஆருக்கும்துய்ய
தெய்வம்இவள்என்றெண்ணிக் கைகள்அஞ்சலிசெய்ய(அன்)

௩. சீவியகூந்தல்மேலே பூர்ணசந்திரன்போல்
தெரிந்திடஒருகாலே மாலிகைசூடி
தாவில்லாமல்முன்னாலே தேவர்கள்செய்த
தவம்வெளிவந்தால்ப்போலே
மூவுலகும்செலுத்தும் ராவணனுக்குப்பண்டு
முத்திகொடுக்கவந்த சித்திரவடிவைக்கண்டு
தேவிஇவள்என்றால் ராகவன்இந்தச்சின்ன
சிலையோஒடிப்பான்ஏழு மலையும்ஒடிப்பான்என்ன (அன்)

௪. தெரிசனம்காணப்போகுமோ    சொல்என்றாலும்
சேஷனாலேயும்ஆகுமோ    இந்திராணிமுதல்
அரிவையர்க்குமெய்நாணுமே    ராமனும்காண
அனந்தம்கோடிகண்வேணுமே
பிரமன்முதல்எதுவும்    பெற்றவளுக்குநல்ல
உருவினில்இனிவேறு    உடைமைகள்என்னசொல்ல
அருமையாஉலகில்க்கல்    யாணதினத்தில்ப்பெண்கள்
திருமங்கிலியத்தில்இடும்    திருஆகியஎங்கள்(அன்)

## ஸ்ரீராமர் மணக்கோலங் கொள்ளுதல்.

விருத்தம்.

சீலம்கொண்டிப்படிவந்த சீதைமாதரொடும்சென்றாள்
மூலம்கொண்டகௌசிகனும் முகூர்த்தம்நாளைஎன்றுசொன்னான்
ஓலம்கொண்டவேதன்முதல் ஓராயிரத்தெட்டண்டமும்தன்
கோலம்கொண்டராமன்மணக்கோலம் கொண்டான்கொண்டானே.

௧௮. தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ராமசாமிகொண்டகோலம்-என்னாலேசொல்லப்போமோ

அநுபல்லவி.

கோமிதிலைராசன்முன் அனேக    கோடிமன்மதனேநிகர்ஆக(ராம)

சரணங்கள்.

௧. பாதகடகம்    சேர்த்திமருங்கினில்
பசும்பொன்ஆடை    போர்த்திமார்பின்
மீதுபொன்நூல்    ஏற்றிதன்நாமமும்
விளங்கவே    சாத்தி
சீதைஆசையிது    எனப்பாராட்டி
தெரிந்தசந்திரசூரியர்    அதைகாட்டி
ஓதுமாறுகாதிலேஒளிகாட்டி    குண்டலங்கள்பூட்டி(ராம)

௨. சுகமுகப்பட்டம்    வரித்துநவரத்தின
தொங்கல்மாலை    பரித்துமுடிமேல்
விமலமகுடம்    தரித்துபீதாம்பரம்
மேனிமேலே    விரித்து



கமலமாமலர்    ஆனதுநாண
தங்கணங்கள்செங்    கையினில்ப்பூண
அமூர்தகிரணசந்திரன்போல்முகம்    காணயோககல்யாண(ராம)
ஆகமீது    வன்னவன்னம்
ஆனபணிகள்    மின்னபச்சை
மேகம்போலே    காந்திவிளங்கும்
மேனியில்க்கலவை    ஏந்தி
வாகுமந்திர    கிறமுறுக்குண்ட
வாசுகீஎன    மணிவகைகொண்ட
நாகரீககேயூரம்எளி    மண்டவீரகோதண்ட(ராம)

## கலியாணச் சடங்கு செய்தல்

விருத்தம்.

சக்கிரபதிஆகிய ராகவன்இவ்வாறு
சமைந்தநல்லமணவாளாக் கோலம்கொண்டான்
அக்கணமேதம்பியரும் கோலம்கொண்டார்
அரசர்களும்தசரதனும் மந்திரிமாரும்
திக்கில்உள்ளமுனிவரும் வேதியரும்கூடித்
திரைகடல்போல்மிகப்பொங்கி மிதிலைதன்னில்
முக்கியம்உள்ளபலசடங்கின் விதிகள்எல்லாம்
முறைசெய்தார்கலியாணத் துறைசெய்தாரே. (௨௧)

௨. திபதை-மோகனராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. கல்லியாணபேரிகை    அடித்தார்-சனகன்
சொல்லியவார்த்தையைப்    படித்தார்
எல்லாரும்ஆனந்தம்    கூடினார்-அவர்
எங்கெங்குநின்றுகூத்    தாடினார்

௨. வாழைகமுகுகள்    நாட்டினார்-நெடு
வானம்மட்டும்பந்தல்    ஓட்டினார்
ஆழிபோலேதிரை    அமைத்தார்-அலங்
காரவேதிகை    சமைத்தார்

௩. தூணுக்குத்தூண்உறை    பூட்டினார்-சந்திர
சூரியர்போலக்கண்ணாடி    மாட்டினார்

சானுக்குச்சாண்மாலை தொடுத்தார்-தங்கத்
தாலமும்கும்பமும் எடுத்தார்

௪. பொன்னரிமாலைகள் வீக்கினர்-முத்தும்
பொன்னும்பவளமும் தூக்கினர்
கின்னரிவீணைகள் பாடினர்-மெத்த
கேளிக்கைமாதர்கள் ஆடினர்

௫. பூரணகும்பங்கள் பதிந்தார்-முக்கிய
பூசரர்வேதத்தால் துதித்தார்
தோரணத்தால்வெளி மறைத்தார்-எங்கும்
சொர்ன்னவருஷமா இறைத்தார்

௬. மாணிக்கத்தீபங்கள் ஏற்றினர்-நல்ல
வாடைகஸ்தூரிகள் தூற்றினர்
ஆணிப்பொன்ஆடைகள் சாத்தினர்-பனிநீர்
ஆலைத்தெருவெங்கும் ஊற்றினர்

௭. சந்தனத்தால்க்கோலம் தீட்டினர்-பஞ்ச
தருவையும்நன்றாக நாட்டினர்
சுந்தரப்பாலிகை கூட்டினர்-நறுங்
தூபமும்தீபமும் காட்டினர்

௮. பொன்ஆலவட்டமும் பட்டமும்-திவ்விய
புஷ்பமும்விந்தமும் குந்தமும்
தன்னாரவண்ணமாக் கட்டினர்-எங்கும்
தங்கப்பொடிகளாக் கொட்டினர்

௯. மத்தளம்மல்லரி தாளங்கள்-பஞ்ச
வாத்தியம்நரகெச மேளங்கள்
தித்திகளால்சக்கிர வாளமும்-திக்கும்
செவிடுபடுமே அண்ட கோளமும்

௧௦. சனகனும்தசரத ராசனும்-வா
சவனுடனே அள கேசன்போல்
கனிவுள சந்தோஷம் மீறினர்-வந்து
கலியாணமண்டபம் ஏறினர்



௧௧. வெள்ளைவிடையினை ஊர்ந்தார்-உமை
வேணிஅரன்வந்து நேர்ந்தார்
வள்ளியும்கந்தனும் சேர்ந்தார்-மூத்த
மைந்தன்வல்லபையும் சார்ந்தார்

௧௨. வேதனும்வாணியும் நாடினர்-தே
வேந்திரன்இந்திராணியுன் கூடினர்
மாதவர்தேவர்மென் மேலே-அந்த
மண்டபம்சேர்த்தார்இப் பாலே

௧௩. மங்களம்ஆம்ராமச் சந்திரன்-சூரிய
வங்கிசமணிஆன தந்திரன்
கங்கைமுதல்த்தீர்த்தம் ஆடினன்-மிகக்
கலவைச்சலவைகள் சூடினன்

௧௪. மாலைமகுடம்மு கந்தனி-பட்டம்
வாகுவலையம் சரப்பணி
காலணிகைவளை பாரித்தார்-பதக்
கங்கள்முதல்அலங் கரித்தார்

௧௫. தனதாம்பரதன்கை நீட்டவே-மற்ற
தம்பியர்சாமரை ஆட்டவே
கனகரதம்கண்டு தாவினன்-ராமன்
கலியாணவேதிகை மேவினன்

௧௬. எப்பொருளும்பெற்ற கோதையை-அஷ்ட
லட்சுமியும்ஆன சீதையை
ஒப்பனைசெய்யவும் தேடுமோ-என்
ஒருத்தனாலேசொல்லக் கூடுமோ

௧௭. பூமிஉள்ளோர்க்கெல்லாம் ஆவியை-நல்ல
பூவைஎனும்சீதா தேவியை
சாமிஅருகினி லேதந்தார்-வ
திஷ்டரும்தருப்பைகொண் டுவந்தார்

௧௮. முத்தானதண்டுலம் விரித்தார்-வேத
முறையேசடங்கெல்லாம் தரித்தார்
உத்தமமந்திரம் விளைத்தார்-முனிவர்
ஓமாக்கினியை வளர்த்தார்

கசூ. தானதருமங்கள் ஓங்கவே-ரா
ட்சதர்போய்ப்பூமிபாரம் வாங்கவே
வானவருக்கின்பம் சுற்றவே-ஓமம்
வலம்கொண்டெழுந்தது மெத்தவே

உ0. சல்லாபன்ஆகிய நேசன்-சீதை
தன்னை அந்தமிதி லேசன்
எல்லாருங்காணமுன் னுலே-சொல்லி
ஈய்ந்தானேராமன்கை மேலே

உக. அய்யனும்தையல்கை பிடித்தான்-கலி
யாணவிதிஎல்லாம் முடித்தான்
செய்யவளும்திரு மாலே-போலச்
சேர்ந்தெழுந்தாரேமென் மேலே

---

## ஸ்ரீராமர் அக்கினிவலம்வருதல் முதலியதுகள்.

விருத்தம்

ராகவன்சீதையைப்பாணிக் கிரணம்செய்து
நற்றீயைவலம்வந்தான் சீலதபாதம்
மோகமுடன்பற்றிஅம்மி மீதில்வைத்தான்
முக்காலும்அருந்ததின் காட்டினன்பின்
ஏகமனதுடன்முனிவர் தந்தைதாய்மார்
எல்லாருக்கும்சேவித்தான் அப்பால்இன்பம்
ஆகஒருநன்மனையில்ச் சீதையோடும்
அமர்ந்திட்டான் அண்டம் எல்லாம்சுமந்திட்டானே. (உஉ)

---

## சோபனம் பாடுதல்.

இதுவுமது.

மணம்உள்ளமலர்மாரி அந்தவேளை
வானவர்கள்பொழிந்திட்டார் முனிவர்எல்லாம்
கணம்உள்ளஆசீர்வா தங்கள்சொன்னர்
காவலர்கள்பொன்மலர்கள் சொரிந்தார்தாய்மார்



பணம்உள்ளநல்வரிசை பலவும்ஈய்ந்தார்
பக்திஉள்ளபந்துக்கள் எல்லாம்மொய்த்தார்
குணம்உள்ளசுமங்கலிகள் அங்கேவந்து
கூடினர்சோபனங்கள் பாடினரே. (உ௩)

கக. தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சோபனம் சோபனம்-ராம-சுவாமிக்கும்சீதைக்கும்
சோபனம் சோபனம்

அநுபல்லவி.

பூபன்தசரதமதிக்கும் சோபனம்
புண்ணியசனகபூபதிக்கும் சோபனம் (சோபனம்)

சரணங்கள்.

க. தாமம்மேவியரதிக்கும்ரதிசுந் தரனுக்கும்-சோபனம்
சீர்மகள்இந்திராணிக்கும்இந் திரனுக்கும்-சோபனம்
மாமதிபெருகும்வாணிக்கும்அவள் வரனுக்கும்-சோபனம்
தாமரைமலர்த்திருவுக்கும்தாமோ தரனுக்கும்-தேவிக்கும்
[அரனுக்கும்-சோபனம்(சோபனம்)


உ. நேர்வருசுமந்திரன்முதல்மந்திரி நேசர்க்கும்-சோபனம்
ஏர்பெறுவதிஷ்டன்கௌசிகன்முதல்ஆம் யோகிரர்க்கும்-சோபனம்
வார்முலைஅரம்பைமாதர்க்கும்எண்டிசை வாசர்க்கும்-சோபனம்
சேவைசெய்துமனம்மகிழும்ஐம்பத்தாறு தேசர்க்கும்ராசாதிராசர்
[க்கும்-சோபனம்(சோபனம்)

௩. வருகௌசலைகைகைசுமித்திரைஎனும் தாய்மாருக்கும்-சோபனம்
பெருகுபரதன்முதல்ஆகியமூன்று பேருக்கும்-சோபனம்
ஒருமையாஇதுசொன்னவால்மீகர்கம்பர், இருவோருக்கும்-சோபனம்
அருணசலகவிநாடகம்இதுபடிப் பாருக்கும்கேட்கும்
[எல்லாருக்கும்-சோபனம்(சோபனம்)

## ஸ்ரீராமருக்கும் பரசுராமருக்கும் சம்வாதம்.

விருத்தம்.

திருமகள்ஆம்சானகி கல்யாணம்செய்து
சேயம்உளதம்பியர்க்கும் விவாகங்கள்செய்து
வரும்வழியில்ச்சகுன விரோதத்தினலே
வலைபோலமுனிபரசு ராமன்வந்தான்






பெருதசரதன்கண்டு நடுங்கும்போது
பிரசண்டகோதண்டகுருராமன்தானும்
ஒருவரும்நேர்இல்லைஎன வில்லைஏந்தி
உரம்சொல்வான்உடனே உத்ரம்சொல்வானே. (௨௪)

௩. திபதை-கவியாணிராகம்-ஆதிதாளம்

கண்ணிகள்.

௧. மண்ணில்அரசர்போல்க்காணுகிறாயேஆசிர்
வாதம்ரகு — ராமா
கண்ணில்வேதியர்போலத் தோணுகிறாயேநமஸ்க்
காரம்பரசு — ராமா

௨. தாடகைஎன்னும்பெண்மேல் சண்டைகொள்ளராசர்க்குத்
தான்விதியோ — ராமா
வேடர்கள்தொடுக்கும்வில்லைப் பிராமணர்தொடத்தலை
விதியோபரசு — ராமா

௩. ஆணல்ப்பெண்கொலைசெய்பல் ஆமோஉனக்கிது
அடைவோரகு — ராமா
தான்ஆகப்பெற்றெடுத்த தாயைக்கொலைசெய்தாயே
தகுமோபரசு — ராமா

௪. தருமமாஎன்னைப்பெற்ற தகப்பன்சொற்படிசெய்தேன்
தாய்க்கொலையோ — ராமா
குருவார்த்தைதடுக்காமல் நானும்செய்தேன்பெண்
கொலையோபரசு — ராமா

௫. சொத்தைவில்ஒடித்ததை பெத்தமெத்தவேஎண்ணித்
துள்ளாதேரகு — ராமா
கற்றவேதியன்என்று பொறுத்தேன்பொறுத்தேன்குதிக்
காதேபரசு — ராமா

௬. அந்தவில்வளைத்தாயே இந்தவில்வளைஇந்தா
அடடாரகு — ராமா
இந்தாவளைத்தேன்இதில் தைத்தஅம்புக்குவழி
எங்கேபரசு — ராமா

எ. அம்புக்குவழியில்லை நான்பிராமணன் இனி
அனுக்கிரகம்செய் ராமா
பின்புத்திக்காரன் இரு பிறப்பன்உன்னோடேஎன்ன
பேச்சுபரசு ராமா

அ சந்திசெபதபங்கள் எல்லாம்உன்சரத்துக்கே
தந்தேன்ரகு ராமா
வந்தவழிபார்த்துக்கொண் டோடிப்போவதேநல்ல
மார்க்கம்பரசு ராமா

---

## ஸ்ரீராமர் திருஅயோத்தியைச் சேர்தல்

விருத்தம்.

இன்னவகைசொன்ன ராகவனைவாழ்த்தி
இனிதவஞ்செயப்பரசு ராமன்போனன்
அன்னவன்கைக்கொண்டவில்லை வருணராசன்
அடைக்கலமாவைத்துவிட்டு ராமச்சந்திரன்
மன்னவரும்தம்பியரும் தேர்மேல்க்கொண்டு
வரஅருகேதானும் மணித்தேர்மேல்ஏறி
மின்அனையசீதையுடனே சந்தோஷம்
மிகவந்தான் அயோதிமாநகர்வந்தானே. (உரு)

**பாலகாண்டம்முற்றும்.**

---

வசனம்-க, விருத்தங்கள்-உச, ஆக-உரு.
தோடையம்-க, திபதை-௩, தருக்கள்-௰அ, ஆக-உஉ.
ஆக பாயிரம் க-க்கும் காண்டம் க-க்கும் கூடிய
கொச்சகம்-க, வெண்பா உ-வசனம்-க; விருத்தம்-௩0, ஆக-௩ச.
தோடையம்-க, திபதைகள்-௩, தருக்கள்-உரு, ஆக-உக.

---

சக்கிரவர்த்தித்திருமகனர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

இரண்டாவது,

# அயோத்தியாகாண்டம்.

---

## சக்கிரவர்த்தி முடிசூட ஸ்ரீராமரை வேண்டுதல்.

விருத்தம்.

வனிதைமணிச்சனகியுடன் அயோத்திமேவி
மணவாளராமன்என இருக்கும்நாளில்
கனிவுபெறப்பரதனைச் சத்துருக்கனோடே
கைகையன்பால்வித்துச்சின்னுள் கழிந்தபின்பு
இனியதசரதன்வதிஷ்டன் மந்திரிமாரும்
இசைந்தபடிதுறந்திட ராகவனைக்கூவித்
தனிமகுடம்புனையெனவே அவனுக்கன்பாய்ச்
சாற்றுவான்தன்கவலை ஆற்றுவானே. (க)

க-தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தமனுத்தரவேணும்மகனே-ராமாஇந்த மனுத்தரவேணும்மகனே

அநுபல்லவி.

இந்தமனுத்தரவேணும் மகனே-ராமச்
சந்திரனேபுவிஆளத்தரும்நீ உத்தமனே (இந்த)

சரணங்கள்.

க. அருபதினுயிரம்வருஷ காலம்-வாழ்ந்தேனே
அதிலேகாணுதெலாம்கண்டறிந்தேன் இந்திரசாலம்
பறுவதமோஎன்காய ஸ்தூலம்-இணிப்
பார்க்கவேணும்என்கண்ணால்நீபாராளும் கோலம் (இந்த)

உ. முடியாதமோகாந்த காரம்-இத்தை
முத்மையிலும்துறவாமல் இருந்தென்ன சாரம்
குடிதாங்கிஎனக்கோர்உப காரம்-இந்தக்
குவலயமகைக்கொண்டுமுத்திகொடுப்பதுன்தன்பாரம் (இந்த)

௩. ஒருவன் அறுபதினாயிரத் தோரை-தங்கை
உதவிமுத்திகொடுத்தானேபகிரதன்முன்னோரை
இருநிலத்தில்அதுபோல்உன் பேரை-உதவ
என்க்குமுத்திதரஆள்வாய் இனிஇந்தப்பாரை (இந்த)

௪. உள்ளத்தைஉன்னோடேசொன் னேனே-முன்னாள்
ஊமைகண்டகனவாக உள்ளடக்கினேனே
பிள்ளைக்கலிதீர்த்தபெரு மானே-இந்தப்
பெரும்புவிநீகொள்ளமுத்திபெறவேணும்நானே (இந்த)

௫. மலர்க்கையால்பிடிப்பாய்செங் கோலே-எந்தன்
வார்த்தைதடுக்காய்எனவே உரைத்தேன்ஒருகாலே
தலைச்சுமைதந்தான்என்றென்தன் மேலே-சற்றும்
தாழ்வாய்எண்ணாதேஇளித்தாங்கா தென்னாலே (இந்த)

௬. வாழைஅடி வாழைஎன மேலே-இந்த
மண்டலத்தைஆண்டதுண்டுமன்னர்ஒருகாலே
சூழ்மதில்அயோத்தியைஅது போலே-நீயும்
சுமந்தாளவேணும்என்தன் சொல்வழியினாலே(இந்த)

௭. குலத்தில்உள்ளகுறைஎல்லாம் வாங்கும்-உன்தன்
குணத்தாலேஉலகெல்லாம்மென்மேலே ஓங்கும்
மலைக்குமலைஅல்லவோ தாங்கும்-இந்த
மண்டலத்தைநீதாங்கினால்என்கவலை நீங்கும்(இந்த)

## ஐம்பத்தாறுதேசத்து ராஜர்கள்வருதல்.

விருத்தம்.

ஈங்கிவைஇப்படி மகனைஇசையக்கூறி
இனியதசரதராஜன் கணிதர்சொல்லப்
பாங்குபெறுதேச ராஜர்க்குமாரன்
பட்டாபிஷேகம்இன்றைக் கறிவீர்என்றும்
நீங்கள்எல்லாம்அயோத்திநகர் வருவீர்என்றும்
நினைப்பினால்தன்ஓலை அனுப்பிவிட்டான்
ஆங்கவரும்மிகமிகச் சந்தோஷம்மீறி
அந்தந்ததேசம்விட்டே அணுகினாரே. (௨)



௨. தரு-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

வந்தனர்எங்கள் கல்யாண-ராமச்சந்திரன்-திருமுடிகாண

சரணங்கள்.

௧. வந்தனர்அந்தந்ததேசத்துள்ளோரர் நாடும்
மன்னன் இராமனைச்சொர்ன்ன முடிசூடும்
சந்திரிகலைஓலையைக்கண்டெதிரே கொண்டு
தம்தலைமேல்வைத்துக்கண்களிலே ஒற்றி(வந்)

௨. வங்களர்சிங்களர்மாளவர் சோளர்
மார்டர்கர்னாடர்மகதர் குருதர்கள்
கொங்கணர்டங்கணர்குச்சரர் மச்சர்
குலிங்கர்கலிங்கர்தெலுங்கர் முதல்ஆக(வந்)

௩. சேரலர்சாளுவர்உற்களர் பப்பரர்
சேதிபர்குந்தளர்சிந்தர் அவந்திகர்
ஆரியர்சீனர்விதர்ப்பர் விதேகர்கள்
ஔட்டர்பாரஷ்டிரர் முதல்ஆக(வந்)

௪. புண்டரீகக்கண்இராமனுக்கு முடி
பூணச்செய்தான்இதுகாணப்பெற்றோம் என்று
மண்டும்ஐம்பத்தாறுதேசத்து ராசரும்
மன்றாடிமன்றாடிக்கொண்டாடிக் கொண்டாடி(வந்)

---

## திருஅயோத்தியை அலங்கரித்தல்.

விருத்தம்.

தேசதேசத்தில்வந்த ராசர்எல்லாம்
தெசரதராசன் முகம்தனிலேகூடி
நேசமுடன்ராமனுக்கு மகுடம்சூட்ட
நினைந்தபடிசெய்எனவே மகிழ்ந்துகூற
ஆசகலும்அயோத்திமா நகரில்வேந்தன்
ஆனைமேல்த்துந்துமிகள் அடிப்பீர்என்னப்
பூசுரரும்ராசர்களும் அறிந்துகொண்டு
பூரிப்பார்நகரம்அலங் காரிப்பாரே.

க. திபதை-புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. விசையதுந்துமி அடித்தார்-நகர்எங்கும்
தசரதன்அருளியமொழி படித்தார்
திசைதிசைசொல்லி விடுத்தார்-வாசலில்
அசையும்விசையகேதனம் எடுத்தார்

உ. பூரணகும்பம் அமைத்தார்-தெருவெங்கும்
தோரணம்அழகுடனே சமைத்தார்
வாரணம் அலங்கரித்தார்-முனிவர்கள்
ஆரணம்முறைமுறை ஆர்ப்பரித்தார்

ங. மாலிகைதொடுத்து வைத்தார்-முத்துமுளைப்
பாலிகைபலபலபடுத்து வைத்தார்
ஆலயம்விளக்குவிளக்கு வித்தார்-பூமலர்ச்
சோலையும்சாலையும்தலைக்கு வித்தார்

ச. அத்திகள் பொருவாரும்-வெள்ளைவட்ட
முத்துக்குடைபிடித்து வருவாரும்
சித்திரம் புனைவாரும்-சந்தன
கஸ்தூரிகளபத்தால் நனைவாரும்

ரு. சிந்தூரம் எழுதிடுவார்-பரிமளச்
சந்தனத்தால்த்தரை மெழுகிடுவார்
கந்தப்பொடிகள் இறைப்பார்-மாவணப்
பந்தல்இட்டந்தரவெளி மறைப்பார்

சு. வானவர்வந்து திரிவார்-அடிக்கடி
மேனகைஊர்வசி நடம்புரிவார்
சானவித்தைகள் படிப்பார்-அதுக்கினம்
ஆனகோகிலம்போல் சுதிபிடிப்பார்

எ. அங்கே எதிர்செல்லுவார்-இடம்காட்டி
இங்கேஇரும்இரும் எனச்சொல்லுவார்
சிங்காசனம் அணிவார்-கௌசலை
கண்காணவேஇணைஅடி பணிவார்



அ. சடங்குகள் செய்வாரும்-சமித்துகள்
இடம்படுதருப்பைகள் கொய்வாரும்
உடந்தையாய்த் திரிவாரும்-பொன்மழை
இடங்கண்டவர்க்கெல்லாம் சொரிவாரும்

கூ. ரம்பையர் நடமாட-வீணையில்
தும்புருநாரதர் இசைபாட
செம்பொன் மவுலிசூட-ராமற்குச்
சம்பிரமும்சொல்லமன்னர் எழுந்தோட

க0. சல்லரி பேரிதாளம்-துந்துமி
மல்லரியொடுநரி கெசமேளம்
சொல்லிய அண்டகோளப்-கிழிபட
எல்லையும்குமுறிடு மேளம்

கக. இப்படி கொண்டாடி-ராமனுக்கு
ஒப்பனைசெய்வதே தெனநாடி
அப்போது தோய்ப்பாடி-கூனியும்
வெப்புடன்வந்தாளே குடிகேடி

---

## கூனி கைகேசியைக் கலைக்கவருதல்,

விருத்தம்.

துதித்திடும்அயோத்திஆளும் சொர்ன்னமாமுடிராமற்கே
பதித்திடவேணும்என்று பலரும்ஆர்ப்பரிக்கக்கண்டாள்
இதைக்கலைத்திடுவேன்என்று ராமன்வில்உண்டையாலே
கொடுத்திடும்மனத்தாள் ஆன கூனியும்தான்வந்தாளே.


ங. தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கூனிவந்தாளே-பொல்லாத-கூனிவந்தாளே

அப்பல்லவி.

போனநாள்ராமன்செய்தபகையாய்க் காய்ந்து
பூனைபோல்இருந்து புலிபோல்ப் பாய்ந்து(கூனி)





சரணங்கள்.

க. அடுக்குமோராமனுக்கு அரசொருக் — காலே
ஆர்கொடுக்கிருர் அத்தைஅறிகிறேன் — மேலே
கெடுக்கிறேன்நான்என்று புரக்கடத் — தாலே
கிணறுவெட்டப்பூதம்புறப்பட்டால்ப் — போல (கூனி)

உ. பூமிபரதனுக்குத்தகும்என — உரைக்க
பூவைகைகேசிதன்மனம●தக் — கரைக்க
ராமன்பகையைநினைந்தடிவாய் — நுரைக்க
நடுங்கிவிழுந்தலைந்துபெருமூச் — சிரைக்க (கூனி)

௩. கொட்டியபஞ்சுபோல்உடம்பெல்லாம் — தளர்ந்து
கூனிகுறுகுறுத்துவில்லைப்போல் — வளைந்து
பட்டம்கட்டஒட்டுவேனோஎன் — றலைந்து
பழையபகையையெண்ணிப்பழமுள்ளு — கலைந்து (கூனி)

௪ சந்தானதுபோய்முடங்கிய — காலி
...போலகரைத்துத்திரங்கிய — தோலி
இந்திராதிதேவருக்கனு — கூலி
இலங்கைராட்சதர்கள் குடிக்கொரு — கேலி (கூனி)

---

## கைகேசி கூனியைக் கோபித்தல்.

விருத்தம்.

வந்ததொருகூனிமன தெரிச்சலாலே
வல்லிஎனும்கைகேசி தனைஎழுப்பி
இநதமன்னன்ராமனுக்கு மகுடம்சூட்ட
எண்ணினன்என்னும்மொழி சொல்லு:முன்னே
விந்தமுகம்மலர்ந்துநவ ரத்தினமாலை
வெகுமானம்செய்திடவும் அவமானித்துச்
சிந்தைவஞ்சத்தொடுகலைத்த கூனிநாக்கைச்
சோதிப்பேன்என்றுகைகை போதிப்பாளே. (௫)

௬-தரு-ஆனந்தபைரவிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ராமனுக்குமன்னன்முடிதரித்தாலே, நன்மைஉண்டொருக்காலே

அநுபல்லவி.

பாமரமேஉனக்கென்னடி பேச்சே
பழம்நழுவிப்பாலில் விழுந்தாற்போல் ஆச்சே(ராம)

சரணங்கள்.

க. இந்தவார்த்தைசொன்னாய் எனக்கெவர்நேரடி
பிரம்மாதிகளும்வரு வாரடி
இதுவேநல்ல சீரடி
வாயாடாதே பாரடி
ஆரடி எனக்குச்சரி(ராம)

உ. பரசுராமன்கெர்வம் தீர்த்தவண்டி
நம்மைஎல்லாம் காத்தவண்டி
பட்டம்கட்ட ஏத்தவண்டி.
நாலுபேரில் மூத்தவண்டி
அவனடி என்கண்மணி(ராம)

ங. பரதன்பட்டம்கட்டாவிட்டால் நட்டியோ
அவன்சர்க்கரைக் கட்டியோ
என்பிள்ளைராமன் எட்டியோ
நான்தான்என்ன மட்டியோ
வெட்டிப் போடுவேன்உன்னை(ராம)

## இதுவும் கைகேசியைக் கூனிகலைத்தல்.

விருத்தம்.

துங்கம்ஆம்அயோத்திஆளச் சொல்லியராமனுக்கே
தங்கமாமுடிகொடாமல் சடைமுடிகொடுப்பேன்என்று
பங்கம்ஆம்கூனிமுன்னாள் பகையினாலேகைகேசி
மங்கையாள்எதிரேபின்னும் வார்த்தையால்கலைக்கின்றாளே. (கூ)

உ. திபதை-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க ராமன்முடிசூடும் என்றபேய்மதி உனக்குவந்தது
ஏதம்மா-என்ன-வாதம்மா-அடி
சீமாட்டிஉன்பிள்ளைபரதன் காமாட்டிஆனானேஎன்ன
செய்கையே-அம்மா-கைகையே



உ. உன்மகன்ஊர்க்கில்லாவேளைத்தன்மகனைமுடிசூட்ட
உன்னினாள்-கோசலை-எண்ணினாள் அந்த
மன்னவனும்அவள்சொன்னவார்த்தைகடவாமல்உன்னை
வாதிச்சான்-ஏதோ-போதிச்சான்

ங. கண்உள்ளபோதல்லவோ-கண்காட்சிஎன்பதறியாயோ
கன்னியே-என்ன-உன்நீயே ஆர்க்கும்
பண்ணியபயிரில்அல்லோ-புண்ணியம்தெரியும்அடி
பாவியே-என்தன்-ஆவியே

ச. ஓடம்விட்ட ஆறும்அடிச்-சுடும்என்றுசொல்லும்வார்த்தை
உள்ளதோ-பெண்ணே-இல்லதோ அதுபோல்
சடுதிந்துன்தாய்தங்கைமார்-உன்னைவந்தடைந்தபோதில்
என்செய்வாய்-எவரை-கெஞ்சுவாய்

ரு. ஊருக்கோபால்வார்த்துண்பதுஉடம்புக்கோபால்வார்த்துண்பது
ஓதடி-செய்வ-தேதடி அடி
ஆருக்கும்பெண்ணேமண்பிள்ளை-ஆணாலும்தன்பிள்ளைஎன்ப
தறியாயோ-ஒன்றாய்-குறியாயோ

சா. கவிசலைபிள்ளைக்குப்பட்டம்-கட்டினால்உன்பிள்ளைக்கென்ன
கட்டுவாய்-எவரைக்-கிட்டுவாய் பரதன்
தவசிஆய்ச்சந்நியாசிஆகிப்-பரதேசம்போவதேநல்ல
சமர்த்தடி-கோபத்தை-அமர்த்தடி

எ. சீர்ஆனகோசலைவிட்டுச் சிறக்கும்சிறக்கிஆகச்
செகுத்தாயோ-என்னை-வருத்தாயோ அடி
யார்யார்கையில்என்னென்னபடவேணுமோ அதெல்லாம்பட
லபித்ததே-தெய்வம்-சபித்ததே

அ. பலநாளும்உன்னோடேநான்தான்-பாடுபட்டதெல்லாம்வீணே
பாதகி-அடி-தோதகி
இலவுகாத்தகிளிபோலே-போகவோநான்உன்னைநம்பி
எண்ணினேன்-வீம்பு-பண்ணினேன்

கூ. நண்ணும்தன்மகன்மேலேபோல்-உன்மகன்மேலேகோசலை
நைவாளோ-பட்சம்-செய்வாளோ அடி
கண்ணில்எண்ணெயைகரிக்கும்பேடீயில் எண்ணெய்தான்என்ன
கரிக்குமோ-அன்பு-தரிக்குமோ

௧௰. நாயகன்கோசலைபிள்ளை-ஆகில்உனக்கென்னவரும்
நன்மையே-சொல்வாய்.உண்மையே ஆர்க்கும்
தாய்கையில்ப்பசும்பொன்னிலும்-தன்கையில்த்தவிடேமேல்ஆம்
தையலே-இதென்ன-மையலே

௧௧. என்னசெய்வேன்என்கிறாய்நீ-முன்னேகொண்டவரம்ரண்டும்
இல்லையோ-தரச்-சொல்லையோ அந்த
மன்னவன்உனக்குச்சொன்னவார்த்தைக்-கிரண்டுசொல்வானோ
வாங்கடி-இதுவே-பாங்கடி

௧௨. ஒருவரம்பரதன்நாடாள-ஒருவரம்ராமன்காடாள
ஓதடி-இதேகூறுதடி இந்த
இருவரமும்கொண்டால்உனக்-கீடுசோடுண்டோடிமக
ராசியே-என்தன்கைகேசியே

---

## கைகேசிக்கும் சக்கிரவர்த்திக்கும் சம்வாதம்.

### விருத்தம்.

அந்தவகைகூனிசொல்ல மனதுவேறாய்
அப்படியேசெய்வேன்என மானம்செய்து
கொந்தளகம்சோரவளை சோரமண்மேல்
குப்புறவேகிடந்திடுகை கேசிதன்னை
வந்ததசரதராசன் கையால்தூக்கி
மலர்மேனிதுடைத்தெனது மானேதேனே
பைந்தொடியேஉனக்குறை ஏதெனப்பட்டோலை
படிக்கின்றாள்தசரதனும் துடிக்கின்றானே. (எ)

### ௩. திபதை-நீலாம்புரிராகம்-ஆதிதாளம்.

### கண்ணிகள்.

௧. இந்தஅலங்கோலமும்இந்தமனோதுக்கமும்
ஏன்வந்ததோகைகை பின்அரசே-உன்ன்
சிந்தையில்நினைந்ததைஉள்ளங்கைநெல்லிக்கனிபோல்
தெரியச்சொல்லாய்கைகை மின்அரசே

௨. மருவும்மலரும்போலப்பாலும்நீரும்போல
மானம்வைத்தாண்டீரே மன்னவரேஉந்தம்
கருவிழிமணிபோலக்கரிசனம் ஆகஎன்னைக்
கண்ணுண்டாய்க்காத்தீரே மன்னவரே

௩. காத்ததற்கென்னகுறை இப்போதும்என்னஉன்னைக்
கைநழுவவிட்டேனோ மின்அரசேநீ
பார்த்தெதுகேட்கினும்எந்தவரம் ஆனாலும்
பரிந்துதருகிறேன்காண் மின்அரசே

௪. மற்றொன்றும் இல்லைவரம்எனக்குமுன் நீர்கொடுத்த
வரம்இரண்டும்கேட்கிறேன் மன்னவரே-என்றும்
உற்றதுசொன்னால்அல்லோ அற்றதுபொருந்தும்நான்
உள்ளதுசொன்னேன்காணும் மன்னவரே

௫. அந்தவரம்இரண்டும்தந்தேன்இனிஉனக்கு
அட்டிசொல்வேனோகைகை மின்அரசே-உன்
மைந்தன்இராமன்ஆணைவார்த்தைபிரட்டறியேன்
வாங்கிக்கொள்வாய்கைகை மின்அரசே

௬. முன்ஒருவரம்பரதன்நாடாளமாணிக்க
முடிபெறவேணும்அய்யா மன்னவரே-அதின்
பின்ஒருவரம்ராமன்காடாளச்சடைமுடி
பெறவேணும்தாரும்அய்யா மன்னவரே

௭. மலைப்போலஒருவர்செய் தவஞ்சனையோஎன்ன
வார்த்தைசொன்னாய்கைகை மின்அரசே-அது
கலைப்பார்கலைத்தாக்கால்கல்லும்கரையும்என்ற
கதைபோல்ஆச்சுதேகைகை மின்அரசே

௮. கலைப்பாள்கவுசலைஉமக்குண்டெனக்குவேறே
கலைப்பார்ஒருவர்இல்லை மன்னவரே-நீர்
சலத்தால்ச்சொல்லுகிறீரோசொன்னதேசொன்னதுநான்
தடுமாறிச்சொல்அறியேன் மன்னவரே

௯. மூத்தவனைத்தள்ளிவிட்டுஇளையவனைப்பட்டங்கட்டல்
முறைமைஅல்லவேகைகை மின்அரசே-யாரும்
ஏத்தும்மனுவிக்கியானசாஸ்திரத்தினில்முன்னம்
இசைத்தபடிஇதுவே மின்அரசே

௧௰. மூத்தவன்இந்திரனோஉபேந்திரனோஅகிலாண்டம்
முழுதும்செலுத்துகிறான் மன்னவரே-வெகு

நேத்திஇதுமுன்சொன்ன வார்த்தையைவிட்டுசாஸ்திர
　நெறிகள்போதிக்கில்ஆமோ　　மன்னவரே

கக. ஆனையிருந்துகொண்டு அரசாளும்மண்டபத்தில்
　அறியாப்பிள்ளைபரதன்　　மின் அரசே-சிறு
பூனைஇருந்துகொண்டுபுலம்புகிறதுபோலப்
　புலம்பல் ஆமோகைகை　　மின் அரசே

கஉ. ஆனையும்பூனையும்நீர்பெற்றபிள்ளை அல்லால்
　அசலார்பெற்றபிள்ளையோ　　மன்னவரே-நீர்
மானம்வைத்தால்போதும்　அணுவும்மலையும்அந்த
　வகையைநான் அறியேனே　　மன்னவரே

கங. ஆயிரம்ஆனாலும்பெண்புத்தியைஅறிய
　ஆராலும்முடியுமோ　　மின் அரசேநல்லது
போயினதுபோகட்டும் ராமனைஊரைவிட்டேன்
　போச்சொல்லன்கிறாய்கைகை　　மின் அரசே

கச. ஏதுக்குராமனைஊர்விட்டுப்போச்சொல்லும்என்கிறாய்
　என்றுகேட்கவந்தீரே　　மன்னவரே-நடுப்
பாதிக்குள்பரதனைஊரில்தங்கவொட்டாமல்
　[illegible]ண்டேன் துரத்திவிட்டீர்　　மன்னவரே

கரு. அவனும்சம்மதிக்கவேபாட்டன்ஊர்க்குப்போஎன்றேன்
　அநியாயம்சொன்னேனோ　　மின் அரசே-உனக்கு
கவனம்இல்லையோஎன்னகாரணமோஇந்த
　கபடம்பேசாதேகைகை　　மின் அரசே

கசு. கவனமும்உண்டுஒருகாரணமும்இல்லை
　கபடமும்பேசஇல்லை　　மன்னவரே-இன்று
இவனும்சம்மதிக்கவேஊர்விட்டுப்போச்சொல்லும்என்றேன்
　என்னதப்பிதம்சொன்னேன்　　மன்னவரே

கஎ. பூமியும்தருகிறேன்பரதற்குப்பொன்முடியும்
　பூட்டுகிறேன்கைகை　　மின் அரசே-என்
சாமியைஎன்உயிரைராமனைப்பிரிந்தால்நான்
　தரிக்கறியேன்கைகை　　மின் அரசே



கஅ. என்உயிர்அவன்போனால்இருக்கறியாதென்றீர்
　என்னசத்தியம்இது　　மன்னவரே-அவனை
இன்னம்சிறுவயதில்முனிபின்போகச்சொன்னீர்உம்
　சேவனுக்குண்டோ துன்பம்　　மன்னவரே

ககூ. கும்பிடுகிறேன்உன் தன்காலைப்பிடிக்கிறேன்
　கோபம்செய்யாதேகைகை　　மின் அரசே-நீ
எம்பெருமானைஎன் கண்மணிராமனை இங்
　கிருக்கச்சொல்லன்பாய்கைகை　　மின் அரசே

உ0. தாரைநீர்ஏற்றபோதேஎன்சரீரம்உமது
　தம்சரீரம் அல்லவோ　　மன்னவரே-நீர்
ஆரைக்கும்பிடுகிறீர் ஆர்காலில்விழுகிறீர்
　அசலார்என்றெண்ணலாமோ　　மன்னவரே

உக. அடியில்விழுவேன்என்றும் அடங்கிஒடுங்கியோநான்
　அனைத்தும்வார்த்தைசொல்லியும்　　மின் அரசே-சற்றும்
கடினம்இல்லாதபோதேவசச்சிலையைப்போட்டு
　கழுத்தைஅறுக்கலாமோ　　மின் அரசே

உஉ. காட்டிப்புறாவுக்காகச்சதைஅரிந்தமன்னனைக்
　கதையிலும்கேட்டிலீரோ　　மன்னவரே-நீ
விட்டுப்பெண்சாதிக்காகஇத்தனைசாகசமும்
　வேணுமோபோதும்போதும்　　மன்னவரே

உங. கண்ணும்கருத்தும்ராமன்கண்ணுளனும்ராமன்
　காப்பவனும்ராமனே　　மின் அரசே-நான்
எண்ணும்தெய்வமும் அவன் அவன் போனால்என்னுயிர்போம்
　இருக்கச்சொல்லன்பாய்கைகை　　மின் அரசே

உச. எனக்குப்பொய்வாராது பொய்சொன்னால்தோஷமென்றீர்
　எக்குமதியால்சொன்னீர்　　மன்னவரே-நான்
வனத்தில்போச்சொல்லும் என்றசொல்த்திருப்பிவிட்டால்அது
　மகத்தானபொய் அல்லவோ　　மன்னவரே

உரு. ஆனால்ராமனைவனத்தில்போகச்சொல்வதால்
　ஆவதுண்டோகைகை　　மின் அரசே-அருங்
கானில்ராமனைப்போகச்சொல்வதிலும்என்
　கண்கேட்கிலும்தருவேன்　　மின் அரசே

௨௬. நாளுகச்சோல்லஇல்லைதெய்வம்சொல்லியத்துக்கு
நான்என்னசெய்வேன்காணும் — மன்னவரே-ராமன்
போனாலும்கானகத்திலேஅவனுக்குவரும்
பொல்லாங்குஉண்டோசொல்வீர் — மன்னவரே

௨௭. போஎன்றுசொன்னவுடன்பொறிகலங்கிஎன்சீவன்
போய்விடுமேகைகை — சண்டாளி-நான்
ஆஎன்றுபோனபின்னே அள்ளிஇடுவார் உனக்
காரடிகைகேசி — சண்டாளி

௨௮. ஒட்டாரம்கட்டுகிறாய்ராமன்போனாலென்சீவன்
உடனேபோமடி கைகை — சண்டாளி
கட்டியதாலிக்கயிற்றைஉன்மகற்குப்பட்டங்கட்ட
காப்புகட்டடிகைகை — சண்டாளி

௨௯. வரதமுனிவன் ஆனவதிஷ்டமுனியேஉன்னை
வரம்கேட்கிறேன் தாராய்என் — தெய்வமே-அந்த
பரதன்வந்தால்அவன்உற்றுறிமைசெய்யாமல்
பத்துதரமாச்சொல்என் — தெய்வமே

௩0. அண்டர்முனிவர்அல்லபகையாளிகள் அல்ல
அசலார்ஒருவர்அல்ல — தெய்வமே-தீமுன்
கொண்டபெண்சாதிதானேதசரதன்ஆவிக்கு
கூற்றுவன் ஆய்வந்தாளே — தெய்வமே

௩௧ ஒளிவாய்அருந்துகொன்றபிள்ளைப்பழிக்குமுனி
உரைத்தசாபம்இதுவோ — தெய்வமே-உலகம்
எளியாரைவலியார்அடித்தால்வலியாரைதெய்வம்கேட்கும்
என்பதுஇதுதானோ — தெய்வமே

௩௨. பண்ணிட்டஎறும்புக்காபுருஷனைக்கொல்லவந்த
பாவிதன்பெண்இவள் அல்லோ — தெய்வமே-இந்த
மண்ணுக்குள்த்தாயைப்பார்த்துப்பெண்ணைக்கொள்என்றுசொல்லும்
வசனம்பிசகுவருமோ — தெய்வமே

௩௩. உதிக்கும்கண்போனால்என்ன — உயிர்போனாலும்என்ன
உத்தமன்ராமன்மாத்திரம் — தெய்வமே-அயோத்தி



பதிக்குப்பதிஆகியேஇருக்கிறான்என்றுகாணப்
பாவிநான் ஆயினேனே — தெய்வமே

## கைகேசி ஸ்ரீராமரை வனத்துக்கு ஏவுதல்.

விருத்தம்.

கொன்றவன்போல்த்தசரதன் இப்படிபுலம்ப
கூற்றுவன்போல்க் கைகேசிராமன்தன்னை
நின்றநிலைக்கழைத்துவர என்னவந்து
நெடுமனைவாசலுக்குள்ளே புகுந்தபோதில்
என்றும்அரசன்சொல்லான் நானேசொல்வேன்
ஏன்றீரேழ்வருஷம் ராமா நீகாட்டில்
சென்றுதவம்செய்பரதன் உலகைஆள்வான்
செல்என்றாள் இதுவேந்தன் சொல்என்றாளே. (அ)

## ஸ்ரீராமர் வனம்ஏகக் கைகேசியின் விடைபெறல்.

இதுவும் அது.

உளம்மகிழ்ந்தொருகைகேசி உரைத்தவாய்மொழியைக்கேட்டு
களங்கம்இல்லாதராமன் கானகம்செல்லநானே
தெளிந்தபார்பரதன் ஆளச் செய்ததேமேன்மைஎன்று
தளர்ந்திடாத்தாயைவாழ்த்தித் தாழ்ந்துபின்விடைகொண்டானே.

௫. தரு-சுருட்டிராகம்-திரிபுடைதாளம்

பல்லவி.

என்பாக்கியமேபாக்கியம்-எவர்க்குண்டிந்தசிலாக்கியம்

அநுபல்லவி.

அன்பாகவனம்போக — அநுக்கிரகம்செய்தாயே (என்)

சரணங்கள்.

௧. குழியில்ப்பயிர்தன்னைஎடுத்துக் கூரைமேலஏறவிட்டு
வழுவானகளைமாற்றி வளர்க்கிறதுபோலே
சுழலும்இந்தராச்சியத்துக்குச் சூடுமணிமுடிமாற்றி
தழுவும்முத்திராச்சியத்துக்குச் சடைமுடிதந்தாயே (என்)

௨. கொக்கரித்தபேர்எல்லாம் கூடத்திப்பாய்வாரோ
பக்கம்உள்ளபேர்என்னைக் காப்பாற்றநினைப்பாரோ
சிக்கும்இந்தவலைநீக்கித் தேடும்பரகதிசேரத்
தக்கதவம்செய்என்றநீ தயவுசெய்தாயே (என்)

௩. ஒருபிள்ளைராமன்பர லோகசாதகம்செய்ய
ஒருபிள்ளைபரதன்இந்த உலகம்தன்னை ஆள
இருபிள்ளையாலும்கைகை இகபரம்பெற்றாள்என்ன
வருசொல்உண்டாச்சுதென்ன மாதவம்செய்தேனோ (என்)

---

## ஸ்ரீராமர் வனம்வகுதற்காகக் கோசலைபுலம்பல்.

### விருத்தம்.

இப்படி சிறுதாயாரை இறைஞ்சியே அனுப்பிக்கொண்டு
மைப்படி வண்ணராமன் வந்துகோசலை அம்மைக்குத்
தப்பிலா தடிவாறெல்லாம் தான்சொல்லக் கன்றைத்தேடி
வெப்புறும் பசுப்போல்அன்னை விழுகின்றாள் அழுகின்றாளே.

### ௪. திபதை-முகாரிராகம்-ஆதிதாளம்.

#### கண்ணிகள்.

௧. அய்யையோரகுராமா-வனம்போக-தெய்வம்சம்மதிஆமா-உனைநான்
எவ்வகைபிறிவேனோ நான்இனி செய்குவதறிவேனோ

௨. என்ஒருதாயகமே-ரவிகுல-மன்னவர்நாயகமே-அரசன்
உன்னையும்வெறுத்தானோ-வெறுத்தும்- தன்உயிர்பொறுத்தானோ

௩. சுடர்மணிமுடிபோச்சே-தலைமேல்-சடைமுடிவரல்ஆச்சேகேட்க
உடல்பதறுதேமகனே-மனம்விட-விடஉதறுதேமகனே

௪. தாய்வரம்அதுகண்டு-பூமியை-காவல்பரதன்கொண்டு-ஆளட்டும்
நீவனம்போவான்ஏன்-இப்படி-தீவினைஆவான்ஏன்

௫. கலியுகம்மேலிட்டதோ-சூரிய-குலமுறைபோய்விட்டதோ-நீஇந்த
நிலைமைவிண்டிடல்ஆமோ-பரதன்-தலைமைகொண்டிடல்ஆமோ

௬. எப்படிநான்சகிப்பேன்-உனைப்பிரிந்து-எப்படிநிறுவகிப்பேன்-ராவி
எப்படிகண்விழிப்பேன்-உயிர்கொண்டு-எப்படிநாள்கழிப்பேன்[னில்



௭. பொன் அடிச்சங்காதோ-மேனியில்வன்னமுமசங்காதோ-வெயில்பட்
என்என்றருகுதிப்பாயோ-கல்லும்முள்ளும்என்என்றமிதிப்பாயோ[டால்
௮. நீசெலும்வனம்தானே-உன்னுடனே-செலுவேன்நானே-என்திட
ஆசைஎலாம்மறந்தேன்-இதுக்கோ-கோசலைபெண்பிறந்தேன்

---

## ஸ்ரீராமர் கோசலையைத்தேற்றி விடைகொளல்.

### விருத்தம்.

தாய்வருந்திட இவ்வாறு தளறுவாள் தன்னைநோக்கிப்
பாய்வரும் பதினால்ஆண்டும் பதினலு நாளே அம்மா
நீவருந் திடுவதேனோ நின்கிருபை யாலேகானில்ப்
போய்வருவேன் கேள்என்று போற்றுவான் தேற்றுவானே.

### ௬. தரு-புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்.

#### பல்லவி.

வனம்போய்வருகிறேன் அம்மா கோசலைஅம்மா
வனம்போய்வருகிறேன் அம்மா

#### சரணங்கள்.

௧. வனம்போய்வருகிறேன்நானேபெற்றமாதாபிதாவசனம்தானே
தனம்தனிமந்திரமும்அது சகலதந்திரமும்அது
சத்தியமும்அதுபர முத்தியும்அதுதானே (வ)

௨. கானகம்நான்போகவேணும் நீர்கணவனைக்காப்பாற்றும்காணும்
நானிலம்பரதனுக் கல்லஎன்னப்போமோ
நான்இருந்தரசனைப் பொய்சொல்லச்சொல்லல்ஆமோ (வ)

௩. ஆதிகதைஅறிவீர்நீரும்-சகரர் அறுபதினாயிரம்பேரும்
தாதைசொல்ப்படிதங்கள் உயிர்கொடுத்தாரேமுனம்
தகப்பன்சொல்ப்படிக்குநான் தவம்செய்வதோகடினம் (வ)

௪. ஈன்றவன்சொல்வேதம்தானே பரசுராமன்தாயைவெட்டினனே
ஆண்டுபதினலும்போய் வருவான் எனக்கண்டோ
அரசன்எனைப்போஎன்றால் திருவாய்க்கெதிர்வாய்உண்டோ

---

## ஸ்ரீராமர் வனம்ஏகலைப்பற்றி லட்சுமணர் கோபம் கொள்ளல்.

விருத்தம்.

சிந்தையைக்கவுசலைக்குத் தேற்றியராமன்மீண்டு
சுந்தரிசுமித்திராதேவி துணையடிவணங்கும்போதில்
இந்தமாமகுடம்சாமிக் கீகிறேன்இப்போதென்ன
அந்தம்ஆம்லட்சுமணன்தான் ஆக்கிரகம்செய்கின்றானே. (கஉ)

எ. தரு-கௌளிபந்துராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

நானேலட்சுமணன்-ஆளைக்கொடுக்கிறன்-ராமனுக்குமகுடம்.

அநுபல்லவி.

சேனைபேர் என்னை டெதிர்க்கட்டும்குதிக்கட்டும்
சித்திரக்கணையால்வென்று அத்தனைபேரையுங்கொன்று (நா)

சரணங்கள்.

க. குருடன்ராசமிழி மிழிக்கிறால்ப்போலே பட்டம்
கொள்ளுமோபரதற்கு முடிசூட
தரணியில்சர்க்கரையும் மாவும்சரியாஎண்ணும்
தசரதனும்கிடந்து மனம்வாட
இரவிமுன்பனிபோலே என்னைடெதிர்த்தமன்னர்
எவரும்பயந்தவிரு துகள்போட
அரசிட்டசாமிக்குத் தவசிட்டநீமிமகன்
ஆட்டுக்குட்டிபோலேஓடகேட்டுக்கைகையும்தள்ளாட (நா)

உ. தொகுத்தகாளிநடிக்க கூளிதாளம்பிடிக்க
துண்டங்கள்எதிர்க்கப் படமட்டி
பகைத்தராசர்தலை பனங்குலைபோல்உதிர
படுகளம்எங்கும்ரத்தக் கடல்மூட்டி
இகத்தில்நானே அடிமைராமனே ஆண்டவன்
என்பதெல்லார்க்கும்தெரி வுறக்காட்டி
வகுத்தபிர்ம்மாதிதேவர் வந்தாலும்அவர் அவர்
மர்மம்எல்லாத்தையும்ஓட்டி தர்மத்தைநிலைக்கநாட்டி (நா)

ங. சுட்டமண்ணும்பச்சைமண்ணும்ஒட்டுமோ சாமி
துணை அல்லால்எனக்குண்டோ உபகாரம்



எட்டிப்பறந்தாலும் ஊர்க்குருவிகருடன் ஆமோ
இந்தப்பரதனுக்கேன் அதிகாரம்
வெட்டித்தலைதலையாய் குவியாவிட்டால் என்கை
வில்லாலேஆவதுண் டோவீரம்
பொட்டென அயோத்திப் பட்டணம்எல்லாம்வந்து
போர்கொடுத்தாலும் விட்டேரம் ஆர்தொடுத்தாலும்இந்நேரம்

## ஸ்ரீ ராமர் லட்சுமணர் கோபத்தைத் தணித்தல்.

விருத்தம்

சினம்கொண்டஇளையோன்இங்கே சீறியேசொல்லும் ஓரை
கனம்கொண்டராமச்சந்திரன் காதிலேவிழக்கண்டோடி
இனம்கொண்டதந்தைவார்த்தைக் கெதிர்உண்டோதம்பீஎன்று
மனம்கொண்டுதேற்றிக்கோபம் மாற்றுவான் ஆற்றுவானே.

அ-தரு-மோகனராகம்-ஆதிதாளம்,

பல்லவி.

இத்தனைகோபமும்நல்லாய்-வந்தது ஏதடாதம்பி இதுசொல்லாய்

அநுபல்லவி.

தத்துவம்ஆகஉன்தன் புத்திஎல்லாம்வெள்ளை
தகப்பன்பேர்விளக்கிற பிள்ளை அல்லோபிள்ளை (இத்த)

சரணங்கள்.

க. இரும்போதாய்மனம்காட்டிலே போய்த்திரி
என்னவும்வாய்வருமோநீஅத்தைப் பரிகரி
கரும்புகசப்பதெல்லாம்வாய்க்குற்ற மேசரி
காலம்செய்ததல்லாமல்ஆர்செய்தார் அரிகரி (இத்)

உ. தகப்பனைச்சத்தியவாக்கியன்அல்லன்என்றுக் கழிக்கவோ
தாய்கொண்டவிரதத்தைமுடியாமல் அழிக்கவோ
அகத்துணை ஆம்பரதன்செல்வத்தை ஒழிக்கவோ
அப்புறம்உனைக்கண்டபேர்எல்லாம் பழிக்கவோ (இத்)

ங. உரம்ஆகும்தவம்செய்தால்உனக்குநல் லதோதீதா
ஒன்றும்பேசாதேகோட்டைக்குள்ளேபடைவெட்டேதோ
அரசுபரதன்கொண்டால்நமக்கினி மேல்வாராதோ
ஆக்கப்பொறுத்தநமக்காறும்மட்டும் பொறாதோ (இத்)

## சுமித்திரை லட்சுமணருக்குப் புத்திசொல்லல்.

விருத்தம்.

அற்புதத்தம்பிகேர்பம் ஆற்றியேராமன்தாயார்
பொற்பதம்வணங்கும்போது பூவகைகேசிஉவ
வற்கதலைமாதர்காட்ட வாங்கிலட்சுமணாநீஎன்
சொற்படிகொடுபோஎன்று சுமித்திரைகூறுவாளே (௧௪)

௮. திபதை-பைரவிராகம்-அடதாளசாப்பு,

கண்ணிகள்.

க. இந்தமரவுரிஅந்த வனத்தில்கொண்
டேகுடன்ஈதென்வார்த்தை லட்சுமணா
அந்தவார்த்தையேமந்திரமா அண்ணன்
அடிபூசைசெய்அடா லட்சுமணா

௨. அண்ணன்இவன்மணிவண்ணனேஎண்ணெண்ணி
அரைநொடிபிரியாதே லட்சுமணா
கண்ணின்இமைபோலே எண்ணம்எல்லாம்செய்து
கட்டிக்காத்திருடா லட்சுமணா

௩. வெம்பியகாட்டினில் அரக்கர்வந்தால்அண்ணன்
முன்போய்நில்லடா லட்சுமணா
தம்பிஉடையவன்படைக்கஞ்சான் என்னும்சொல்
சாதித்துக்கொள்ளடா லட்சுமணா

௪. அலைஆழிபுரண்டாலும் அண்ணன் இருக்கஉன்னை
ஆரால்என்னசெய்யல்ஆம் லட்சுமணா
மலைமீதில்இருப்பாரைப் பன்றிபாய்வதுண்டோடா
மயங்காதேதியங்காதே லட்சுமணா

௫. உளம்கொண்டு அண்ணன் எப்படிசொல்வான்அப்படி
ஊழியம்கேள்அடா லட்சுமணா
இளங்கன்றுபயம் அறியாதென்றால்போலநீ
எதிர்த்தொன்றும்சொல்லாதே லட்சுமணா

௬. தாயேசீதைஉன்தகப்பன்ராமன்இந்த
தலமேவனம்அடா லட்சுமணா
ஆபாசம்பாராதேஎள்என்னும்முன்எண்ணெய்
ஆகச்செய்துவாடா லட்சுமணா



௭. பின்னும்சடையும்மரஉரியும்காணவோராமன்
பிறகேவந்தேன்என்று லட்சுமணா
குன்னமாஎண்ணாதேதெய்வம்பண்ணியதிருக்
கூத்துக்கென்னசெய்யல்ஆம் லட்சுமணா

௮. கர்த்தன்ஆனராமன்சித்தத்திலேஎண்ணும்
கட்டளைப்படிதானே லட்சுமணா
புத்திஆகச்செய்தால்அப்போதல்லோஎன்தன்
புத்திரன்நீபோய்வாடா லட்சுமணா

---

## ஸ்ரீராமர் பிரிதலைக்குறித்துச் சீதை இரங்கல்.

விருத்தம்.

மண்ணும்இரக்கமரம்இரங்க மறுதாயாரை அனுப்பிக்கொண்
டெண்ணும்இரங்கும்லட்சுமணன் இசைந்துவரவேரகுராமன்
நண்ணும்சனகிதனைப்பார்த்து நான்போய்வருவேன்ஈரேழு
பண்ணும்பருவம்வனம்என்றான் பாந்தாள்சீதைகரந்தாளே. (௧௫)

௯. தரு-உசேனிராகம்-ரூபகதாளசாப்பு

பல்லவி.

எப்படிமனம்துணிந்தோ சாமிவனம்போய்வருகிறேன்
என்றால்இதை ஏற்குமோபூமி

அநுபல்லவி.

எப்பிறப்பிலும்பிரியவிடேன் என்றுகைதொட்டீரே
ஏழைஆனசீதையைநட் டாற்றில்விட்டீரே(எம்)

சரணங்கள்.

க. கரும்புமுறித்தால்போலேசொல்லல் ஆச்சுதோ-ஒருக்
காலும்பிரியேன்என்றுசொன்னசொல்லும் போச்சுதோ
வருந்திவருந்தித்தேவரீர் வெல்ல
வார்த்தையால்கொல்லாமல்க் கொல்ல
இரும்புமனதுண்டாச்சு தல்லோ
என்னைவிட்டுப்போகிறேன்என்று சொல்ல(எப்)

௨. அன்னைகொண்டவரம்என்னஎன்னைத் தள்ளவோ-நீர்
அழகுக்கோவில்எடுத்ததுநிலம்ஊன்றிக் கொள்ளவோ
குன்னமோஉமக்கென்னைத் தாரம்
கொத்தவும்மேல்அல்லோ நேரம்

என்னை இட்டுக்கொண்டுபோவதோ பாரம்
இதுவோ ஆண்பிள்ளைக்கு வீரம் (எப்)

௯. நாடிநீர்போய்இருக்கும்வனத்தின்பேர்சொல்லவேணும்அத்தை
நான்நினைந்துகொண்டிருந்தால் அங்கேபிறக்கல் ஆம்காணும்
கூடிநாம்உகந்திருக்கும் காடு
குறைவில்லாஎன்மிதிலை நாடு
காடுநீர்இல்லாத வீடு
கால்வையும்தெரியும்என் பாடு(எப்)

---

## ஸ்ரீராமர் வனம்ஏகலால் புரசனங்கள் புலம்பல்.

விருத்தம்.

ஆவதனால்ச்சீதைமன தறிந்தராமன்
அப்படியேவருகஎன்றான் வெளியேவந்தாள்
தேவர்களும்முனிவர்களும் கலங்கிநின்றார்
செயராமன்லட்சுமணின் சீதைஎன்னும்
மூவர்களும்மரவுரியை உடுத்திக்கொண்டார்
முறையாலேஅயோத்திநகர்த் தெருவின்மேலே
போவதுகண்டவ்வூரில் ஆணும்பெண்ணும்
புலம்பினர்கண்ணீர்விட் டலம்பினரே. (௧௯)

௯. திபதை-காம்போதிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. அரசுமணிமுடியொடும்ஆனைமேல்
வருகிறதிருக்காட்சியைக்காணாமல்
அந்தந்தத்தெருவீதியிலேவந்து நொந்தார்சிலபேர்கள்
மரவுரியுஞ்சடைமுடியுங்காணு
வதற்கோகுதிகுதித்தோம்என தங்கள்
வாயோடுவாய்பேசாமலேமனம் மடிந்தார்சிலபேர்கள்

௨. ஐய்யோஇந்தஅருமைத்திருமகன்
மெய்யேவனம்போனால்நமக்கினி
ஆறுதலேஏதெனக்கண்பிசைந் தழுதார்சிலபேர்கள்
செய்யாவினை செய்திடும்பாதகி
கைகேசிக்குஇன்றைக்குநெஞ்சுக்கல்
திடுக்கென்னவேவிழுந்ததோஎன்மனம் திகைத்தார்சிலபேர்கள்



௩. கண்ணுக்குக்கண் அருகேஎண்ணின
எண்ணம்எல்லாம்பேச்சேநாம்அந்தக்
காடேகதியாய்ப்போவோம்என்று கரைந்தார்சிலபேர்கள்
பண்ணினதவம்இதுக்கோதசரதன்
புண்ணியவான்ஆனால் ஒருதரம்
பழிகாரிசற்றமையாளோ என்று பதைத்தார்சிலபேர்கள்

௪. சொல்லியவரம்தாஎன்றுகணவனைச்
சொல்லிவேவழிபார்த்தாள் அல்லாமல்
தூரதிஷ்டியாய்ப்பார்த்தாளோஎன்று துடித்தார்சிலபேர்கள்
கல்உருகவும்புல்உருகவும்கண்ட
கைகேசிக்குத்தன்மகன்மாத்திரம்
கரும்போ இவன் வேம்போஎன்மனம் கசிந்தார்சிலபேர்கள்

௫. முறையோஎன்னமுடப்பிள்ளை ஆகிலும்
முந்தினபிள்ளைஎன்றுசொல்லும்பழ
மொழிஆகிலும்ராமனுக்கில்லையோவென் றழுதார்சிலபேர்கள்
குறையாமலேஇருக்கின்றசூரிய
குலத்திலேநல்லமரத்திலப்புல்லுருவிபோல்
குடி கேடிஎங்கிருந்தாள்எனக்குலை குலைந்தார்சிலபேர்கள்

௬. மைஆர்கண்ணிஇளையவன்தோதக
வலையிலேசிக்கித்தலைமகன்ராமனை
மன்னவன்செய்ததென்ன சொல்வோம்என்று வைதார்சிலபேர்கள்
கைகேசியும்பிள்ளையும்கூனியும்
கட்டாந்தரை அட்டையைப்போல்மண்ணைக்
கட்டிக்கொண்டினிப்புரளட்டும் எனக் குடிகலைந்தார்சிலபேர்கள்

௭. சானகிஎன்னும்லட்சுமிபோனபின்
மாநகரத்தில் ஆர்இருப்பார்அவள்
தமக்கைஅல்லோ இருப்பாள்எனத் தகவித்தார்சிலபேர்கள்
கானகம்புகுமதுமுன்னேதசரதன்
வானகம்புகுவது நிலைவரம்என்று
கரைகாணக்கப்பலோர்போலவே பரிவார்சிலபேர்கள்

௮. சத்தியமாராமனைவரச்சொல்லி
மற்றொருவற்குமுடிகொடுத்தான் இந்த
தசரதன்மெத்தநல்லவனேயென்று தளர்ந்தார்சிலபேர்கள்

எத்தனைபேர்சந்தைக்குவந்தாலும்
எல்லாருந்துணை ஆவரோராமனுக்கு
இளையவனே துணை இந்தஊரில்என்று    இடிந்தார்சிலபேர்கள்

௯. மணிமுடிவரச்சொல்லியமுகூர்த்தத்தில்
சடைமுடிவரச்சொன்னானே இந்த    [கள்
வசிஷ்டனைப்போலேவசிஷ்டன் உண்டோஎன்று    வைதார்சிலபேர்
துணியுமோமன அடடாஉண்கிற
சோற்றிலேநஞ்சுகலந்தால்போலவே    [கள்
தொடுத்தாள் பழிகொடுத்தாள்கைகைஎன்று சொன்னார்சிலபேர்

௧௦. பாவமும்வரும்பழியும்மிகவரும்
தீபம்இல்லாமனைபோமே இந்த
பட்டணம்பறிபோமேஎன்றுமன்    படிந்தார்சிலபேர்கள்
ஸ்தாவரம்இல்லா இளங்கொடிபோலவும்
பாய்மரம்இல்லாமரக்கலம்போலவும்
தாமரைஇலைத்தண்ணீர்போலவும்    தவிர்த்தார்சிலபேர்கள்

## சுமந்திரன்புலம்பல்.

விருத்தம்.

மாநகர்இப்படிபுலம்பத் தேர்மேல்கொண்டு
வழியில்ஒருசோலையில்போய்ப் பாதிச்சாமம்
ஆனதிதுவந்தவரோ உறங்கிவிட்டார்
அயோத்தியிலேஅவர்போக வேணும்தேரைத்
தான்உருவவடதிசையில் விட்டால்என்னைத்
தான்மீண்டான்எனப்பலரும் அங்கேமீள்வார்
ஏன்இனித்தாமதம்என்று ராமன்சொல்லி
எழுகென்றான்சுமந்திரன்கொந்தழுகிறானே.    (௧௭)

௭. திபதை-நீலாம்புரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. செகம்மகிழும்ராமச்    சந்திரன்-போகாமல்த்தேரை
திருப்புவான் அல்லோ    சுமந்திரன்-எந்தன்
மகன்வருவான்என்    றிருப்பேனே-ராசனுக்கெந்த
வாய்கொண்டுசொல்ல    இருப்பானே

௨. ஊரில்என்னைக்கண்டபேர்    சொல்ல-தசரதனுக்
கோர்உடம்பீர்உடம்பாம்    அல்லோ-உன்பிள்ளைகளை



தேர்இறக்கிவிட்டேன்என்    பேனா-முகம்அறியாத்
தேசத்திலேவிட்டேன்என்    பேனா

௩. மக்களைவிட்டோடிவந்    தானே-என்றஉடனே
மன்னவனும்உயிர்நைந்    தானே-இப்போதுநான்
தெற்கிலேநன்றல்லோ    போகுவேன்-எமன்விடுத்த
சேவகன்போல்அல்லோ    ஆகுவேன்

௪. உன்னம்உன்னைக்கூவிக்    கூவி-தசரதனுக்
கிருக்குமோநல்உயிர்    மேவி-நான்இந்தவார்த்தை
சொன்னவுடன்போமோ    ஆவி-இந்தப்பழியைச்
சுமக்கவோநான்வந்தேன்    பாவி

## ஸ்ரீராமர் சுமந்திரனுக்கு நீதிஓதுதல்,

விருத்தம்.

மந்திர சுமந்திரன் இந்த வண்ணமே கூறராமச்
சந்திரன் அவனைநோக்கிச் சகலமும் தெரிந்தநீரே
என்தன்தாய் சொன்னவார்த்தைக் கிரண்டுதான் செப்பல்ஆமோ
சிந்தைஏன் இனிமேல்என்று தெளிவிப்பான் தெளிவிப்பேனே

௧௦. தரு-பைரவிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

சொல்லும்சொல்லும்-சுமந்திரரே-நில்லும்நில்லும்

நல்லராத்திரிஇதுபோல்இல்லை    காணும்
நகர்உள்ளோர்களும்நீரும்போக    வேணும்
அல்லநீர்வேறேசொன்னால்    விரும்புமோ
அணைகடந்தவெள்ளம்அழைத்தால்த்    திரும்புமோ(சொ)

சரணங்கள்.

௧. வீரம்பேசிக்கொண்டெழுந்தசேவகன்
வெட்டும்களம்கண்டுமுதுகை    இடல்ஆமோ
ஆரும்காணவேதவசுக்கென்றுவந்து
அதுக்கெல்லாம்பயந்தச்சப்    படல்ஆமோ
வாரும்காணும்பெற்றதாய்சொல்விரதத்தை
மறந்துபின்னைஒருவிரதத்தைத்    தொடல்ஆமோ

சூரியகுலத்தில்பிறந்துமுந்திமுந்தி
தொடுத்தகாரியத்தைநடுவே விடல்ஆமோ(சொல்)

௨. மன்னன்பரதர்க்குநான்இருக்கிறேன்
வருகிறேன்இளக்கரிப்ப தேன்என்றும்
பின்னும்அறிந்ததறியாத்துக்கும்மன்னன்
பெரியஉதவியேஉறுதி தான்என்றும்
என்இடத்தில்வைத்தஅன்புபோல்க்கைகை
இடத்தில்வைக்காவிட்டால்மனம்பொறேன் என்றும்
அன்னைமார்க்கும்மன்னனுக்கும்பதினாலு
ஆண்டும்போய்வந்துவணங்குவேன் என்றும்(செல்)

௩. உலகிலேஒருநன்மைசெய்யஇடை
யூறுமெத்தவரும்ஆகை யால்அதை
நினையதென்னல்ஆமோகாலம்போம்வார்த்தை
நிற்குமேபின்னைவேறேஉண் டோவதை
பலரும்தவிக்கிறார்என்றுதாய்மொழி
பழிக்கவோநான்வந்தேன் என்னகதை
மலைவிழுந்தாலும்தலையேதாங்கவேணும்
மலைத்தவர்க்குப்பலன்பலிக்கு மோஇதை(சொல்)

---

## ஸ்ரீராமரை நினைந்து சக்கிரவர்த்தி புலம்பல்.

விருத்தம்.

வீரன்எனும்ராமன்உரை சுமந்திரன்கொண்டான்
மீண்டதேர்வழிபலரும் மீண்டார்சேதி
ஊரதிலேவசிஷ்டமுனி உடன்போய்ச்சீவன்
உண்டிலைஎன்றிடும்வேந்தன் உடனேசொன்னான்
கூர்வரியிலேவிழுந்த வெண்ணெய்போலும்
கொதித்திடும்கொப்பரையில்விழும் புழுவைப்போலும்
சீர்உளதன்மகனைநினைந் தேங்கிச்சிந்தை
சிதறினன்தசரதனும் கதறினனே. (௧௧)

அ. திபதை-கண்டாராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. சின்னம்சிறுதாமரைபோல்பொன் ஆனபாதங்கள்நோவ
தேடிவனம்ஓடிவிட்டாய் ரகுராமா-ராமா



என்னைஇந்தவேளை நடுத்தண்ணீரில்கைவிட்டால்ப்போலே
எப்படிதுணிந்துவிட்டாய் ரகுராமா-ராமா

௨. முடிக்குமகுடம்சூட்டிமுகம்பார்க்கஇருந்தேனே
மோசம்கைகேசிசெய்தாள் ரகுராமா-ராமா
உடுத்தபுடவைதானே பாம்பாய்க்கடிக்கும்என்னும்
உளவறியாமல்ப்போனேன் ரகுராமா-ராமா

௩. மாலைஇட்டகைகேசிதான் காலனைப்போலவேவந்தென்
வாணாளைக்கொண்டாள் அய்யோ ரகுராமா-ராமா
வேலிக்குமுள்இடவேஎன் காலுக்குமுள் ஆகவந்து
விளைந்ததென்விதிவசம் ரகுராமா ராமா

௪. ஆனைமேல்ப்பவனிஆக அபிஷேகமுடிசூடும்
அலங்காரம்என்றுகாண்பேன் ரகுராமா-ராமா
நான்ஒன்றுநினைக்கத்தெய்வம்தான்ஒன்றுநினைத்ததையோ
நான்செய்தபாவம்இதோ ரகுராமா-ராமா

௫. தாயும்நீதந்தையும்நீ சற்புத்திரமாணிக்கமும்நீ
சகலபாக்கியமும்நீயே ரகுராமா-ராமா
நீஇல்லாநாடிதெல்லாம் நிலவில்லாமுற்றம்போல
நெடும்பாழ்அடைந்ததையோ ரகுராமா-ராமா

௬. படித்துப்படித்துச்சொல்லி காலும்பிடித்துக்கொண்டேன்
பாவிகைகேசிஅய்யோ ரகுராமா-ராமா
அடிக்கடிக்கப்பந்து விசைகொண்டெழுந்தால்ப்போலஎன்
ஆயுசுக்குலைவைத்தாளே ரகுராமா-ராமா

௭. குடைமகுடம்தரித்து குவலயந்தன்னை ஆளும்
கோலம்காணும்முன் ஆக ரகுராமா-ராமா
சடைமகுடம்தரித்து காட்டில்போஎன்றேனே
சண்டாளன்என்போல்உண்டோ ரகுராமா-ராமா

௮. தேறுதல்எங்கும்காணேன் திக்குத்திசையும்காணேன்
தெய்வமும்துணைகாணேன் ரகுராமா-ராமா
ஆறுதல்எங்கும்காணேன் அந்தரத்தில்க்கோல் எறிந்த
அந்தகன்போல்ஆனேன் அய்யோ ரகுராமா-ராமா

௯. பார்எல்லாம்பரதன்கொள்ள உன்னையும்என்கண்ணின்முன்னே
பறிகாட்டில்ப்போஎன்றேனே ரகுராமா-ராமா

கிரைக்குட்புல்லுருவி கீழேமுளைத்தால்போலே
  கெடுகாலிஎங்கேவந்தாள் ரகுராமா-ராமா

க0 சேனைகாவலர்கூட நான்கூடமுடிசூட்டி
  சிங்காசனம்வைக்கும்முன்னே ரகுராமா-ராமா
ஆனைநிழலைப்பார்க்கத் தவளைகலங்கினாற்போல்
  ஆனளே கூனிஅய்யோ ரகுராமா-ராமா

கக. சற்றேபொறுத்துச்சென்றால் சகுனதோஷம்என்றோநான்
  சாவேன்என்றறிவாயோ ரகுராமா-ராமா
சற்றும்அழுகைக்குரல்கேட்கிறத்துக்குமுன்னே
  சுறுக்காநடந்துவிட்டாய் ரகுராமா-ராமா

கஉ. குலத்தைவிளக்கவந்த மகனேஉனக்குப்பட்டம்
  கொடுத்துவாங்கிக்கொண்டது ரகுராமா-ராமா
கலத்திலேசோற்றைஇட்டுக் கைப்பிடித்தாற்போல்ஆச்சே
  காலம் இப்படி ஆமோ ரகுராமா-ராமா

கங. பாயும்அமுதமும்பொன் பள்ளயமும்இங்கிருக்க
  பரிகாட்டிலேநடந்து ரகுராமா-ராமா
காயும்கிழங்கும்தின்னல் ஆச்சோதெய்வத்துக்கும்
  கண்இல்லையோமகனே ரகுராமா-ராமா

கச. வீசும்நெருப்பைப்போலே கடுங்கோடையும்கானலும்
  வெய்யிலும்மேல்படுமே ரகுராமா-ராமா
காசாம்பூமேனிஎல்லாம் வேர்வைமுத்துமுத்தாகக்
  காண்பாளோகவுசலை ரகுராமா-ராமா

கரு. பூமேலேவிழுந்தாலும் தழும்புபடுமேஉன்தன்
  பொன்ஆனமேனிஅய்யோ ரகுராமா-ராமா
மாமலையும்கொடியும் செடியும்பொடியும்தாக்க
  வழிநடந்தறிவாயோ ரகுராமா-ராமா

கசு. முடிக்காபிஷேகம்செய்தான் அடிக்கீழேஓடும்தண்ணீர்
  முந்திக்கொண்டாராலும் ரகுராமா-ராமா
பிடித்தொருபடிதந்தால் குடிக்கேனேகுடித்தென்தன்
  பெருந்தாகம்தணியேனே ரகுராமா-ராமா

கஎ. இழைஆயிரம்பொன்பெற்ற பீதாம்பரம்உடுத்த
  இடைமீதிலேமகனே ரகுராமா-ராமா



உ. வீட்டில்இருந்துமுகத்தைக் காட்டுவாய்என்றிருந்தேனே
  வெறுத்தாயோ என்னை ஒறுத்தாயோ
காட்டிலேபோம்முன் ஆகவின் நாட்டிலேநீபோனதென்ன
  காரியமோ இது வீரியமோ

ங. தத்தளிக்கும்பரதற்குப் புத்திமதியோசனைகள்
  சாற்றுவையே பயம் மாற்றுவையே
எத்தனைகாரியத்துக்கும்என் கர்த்தன்இருக்கிறான்என்றே
  எண்ணினேனே அவம் பண்ணினேனே

ச. எண்ணும்உன்உயிர்இருக்கஉன்உயிரைமாத்திரம்
  இறந்தாயோ என்னைத்துறந்தாயோ
கண்ணுக்குற்றம்கண்ணுக்குத் தெரியாதென்றுசொன்ன
  கதைஆச்சே நல்ல வதையாச்சே

ரு. இந்திரன்பழையபோலே வந்தனதுமுன்னேமுறை.
  இட்டானே குறை பட்டானே
அந்தரத்திலேசென்றாலும் எந்தாய்இங்கேஇருக்க
  ஆர்படுவார் தேர் ஆர்விடுவார்

சு. என்இரண்டுகால்மிதித்த உன்னிடமார்பும்வயிறும்
  இருதாளும் உன்னிடமார்பும்வயிறும்
வன்னிதின்னக்கண்டேன் என்னைப்போல்ஒருபிள்ளை
  வாய்ச்சுதல்லோ பேய்ஆச்சுதல்லோ

எ. தன்அரியதாறுதீர்ந்து தாய்வாழையைக்கெடுத்த
  சதிதானே தலை விதிதானே
பிள்ளைஎன்றுநான்பிறந்து பெற்றவனைக்கொன்றான்என்று
  பேர்எடுத்தேன் நல்ல சீர்எடுத்தேன்

அ. கண்ணில்எண்ணெய்குத்திஎன்னைக் காத்துக்கொண்டிருந்துபட்டம்
  கட்டும்முன்னே பலன் கிட்டும்முன்னே
வெண்ணெய்திரண்டுவரச்சே தாழிஉடைந்தாற்போலே
  விடுத்தாயே என்னைக் கெடுத்தாயே

கூ. நாலும்பேர்பிள்ளையிலும் என்மேல்உன்மானம்எல்லாம்
  நாட்டினையே பாராட்டினையே
காலிலேதைத்ததுஉன் கண்ணிலேதைத்ததுபோல
  கார்த்தாயே இன்று தீர்த்தாயே

க0. வெக்தவனம்கடந்தன் ஊரினில்வந்தார்முகத்தின்
விழிப்பேனோ ஆரை அழைப்பேனோ
என்தன்முகம்திருத்தி உச்சிமோந்து தழுவி
எடுப்பார்ஆர் முத்தம் கொடுப்பார்ஆர்

கக. மாமந்திரசாலையும் சிங்காதனமும்ஒளி
வாங்காதோ கண்டால் ஏங்காதோ
பூமண்டலாதிபர்கள் 'தாம்வந்துபணியும்அம்
புஜபலனே அய்யோ தசரதனே

---

## ஸ்ரீ ராமரை வசிஷ்டர் தேற்றுதல்.

விருத்தம்.

அரசனைஎண்ணிஇவ்வா றழும்இராகவனைநோக்கி
வரமுனிவசிஷ்டன் அங்கே மலர்க்கையால்க்கண்ணீர்மாற்றி
விரகிஞல்எவர்ஆனாலும் விதியினை வெல்வார்உண்டோ
புரவலாகேளாய்என்று போற்றுவான்தேற்றுவானே. (உசு)

கஎ. தரு-முகாரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ராமாநீயும்-இப்படிகிலேசிக்கல்-ஆமாஎன்சாமீ

அநுபல்லவி.

பூமான்எனும்தசரதன்போ கையினாலே
புலம்பிப்புலம்பிக்கொண்டுகுழந்தைப்பிள்ளைபோலே (ரா)

சரணங்கள்.

க. கனிந்துகண்ணீர்இறைத்தாவதுண் டோசாரம்
கையால்எள்ளும்நீரும்இறைக்கவே னும்இந்நேரம்
நினைத்துபார்க்கில்இதுமகன்செய்யும் உபகாரம்
நீஅறியாதுண்டோஉனக்கேன்இந்த விசாரம் (ரா)

உ. புண்ணியபாவம்இரண்டும்மெய்யென்று மனஸ்கரி
பூட்டும்வாணாள்அதில்போட்டு வைத்ததிரி
எண்ணும்இவ்விரண்டிலும்உயிர்விளக் கேசரி
இரண்டும்போனால்விளக்கிருக்குமோ அரிகரி (ரா)

ங. பெறுவதன்முன்எவர்க்கும்அடிக்கடி மேதினி
பிராணபயம்உண்டென்றுசொல்லுமேபெருந் தொனி



## லட்சுமணர் பரதர் சேனையைக்கண்டு கோபித்தல்.

விருத்தம்.

திடம்பெருகுகுகன் இவ்வாறெண்ணிஐயம்
தெளிந்துதெரிசிக்கவந்தான் பரதன்அன்பால்
நடந்ததெல்லாம்குகனுக்குச் சொன்னான்கங்கா
நதிகடந்தான்சேனைகளைப் பரத்துவாசன்
மடந்தனிலேஇளைப்பாற்றிச் சித்திரகூட
மருங்குவந்தான்அவனை லட்சுமணன்கண்டிங்கே
தொடர்ந்துகொல்லவரும்இவனைக் கொல்வேன்என்று
துடிக்கின்றான்ராமன்முன்னே படிக்கின்றானே. (உஎ)

கஅ. தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஒருமொழிமாத்திரம்தாரும்சாமி எனக்குத்தாரம்
ஒருமொழிமாத்திரம்தாரும்சாமி

அநுபல்லவி.

பரதன்சேனைஇதுநான்மரம் ஏறிப்
பார்க்கத்தெரிந்ததையாபழி காறி
வரவிடுக்கவந்தான்நம்மைச் சீறி
வரட்டும்ஒருகைபார்க்கிறேன்எனத் தேறி(ஒரு)

சரணங்கள்.

க. வஞ்சகன்பரதன்செய்த கோரம்தீர்த்தால்அல்லாமல்
வாங்குமோஎனதுவங்கை வாரம்தேவரீர்இந்த
வஞ்சியும்நீரும்போய்ச்சற்றே தூரம்இருப்பீர்இந்த
மட்டுமேசெய்திடும் உபகாரம்
கொஞ்சநேரத்திலேஎன்சிலை பூட்டி
குரைக்கும்நரிக்கும்இரைஆகவே காட்டி
பிஞ்சிடாமல்இந்தச்சேனையைக் கூட்டி
பிரளயகாலருத்திரனைப்போல் மாட்டி
நஞ்சுநஞ்சுபஞ்சுபஞ்சா எவர்களும்
நெஞ்சிரங்கவெஞ்சரங்களைத் தொடுக்கிறேன்(ஒரு)

உ. வண்டிலும்தேரும்கப்பல்போல்ஆட அதிலோத்த
வொரிவெள்ளம்கரைபுரண்டோட எதிர்த்தமன்னர்

மண்டைகள்மலைமலையாய்ப்போட பேயும்பூதமும்
மகிழ்ந்துகொண்டுதலைகழ் பந்தாட
அண்டொணாதபெருமபடைகள்மென் மேலே
ஆடிக்காற்றில்விழும்சருகுகள் போலே
சண்டவார்கணைகள்தொடுக்கிற தாலே
சரிந்துசரிந்துநிலைகுலைந்தொரு காலே
விண்டுவிண்டுபிண்டுபிண்டு விழவிழ
கண்டகண்டதுண்டதுண்டம் ஆக்கிறேன் (ஒரு)

க. ஆள் அடிமைலட்சுமணன்தொட்ட அம்புகள்பாய்ந்து
ஆனைமத்தகம்பிளந்துகொட்ட அதில்வந்தபேர்
வால்எல்லாம்மீன்போல்புகுந்துகிட்ட அந்தச்சேனையை
வாரிக்கொண்டுரத்தம் கடல்முட்ட
தோளும்தாளும்அறுந்தது துடி துடிக்கத்
துள்ளித்துள்ளிச்சிலகவந்தங்கள் நடிக்க
மூளைச்சேற்றில்விழுந்திடுப்புகள் வெடிக்க
முகங்கண்டவாக்கெல்லாம்குறளிகள் படிக்க
வாளிஆடகாளிஆட பலபல
கூளிஆடதூளிஆட அடிக்கிறேன் (ஒரு)

## ஸ்ரீராமர் சக்கிரவர்த்தியைக்குறித்துப் புலம்பல்.

விருத்தம்.

இந்தவகை சொல்லதம்பி உனக்குலோகம்
ஈரேழும் நேர்ஆமோ நமக்குப்பூமி
தந்திடவும் வணங்கிடவும் வந்தான்கண்டாய்
தம்பிபரதனும்எனை விரோதிப்பானே
அந்தமதி விடுவிடென்னப் படையைநீக்கி
அண்ணன்முன்னே பரதன்வந்து பணிந்தபோது
தந்தைஉளனோஇலனோ என்றான்கேட்டான்
தயங்கினன் ரகுராமன் மயங்கினனே. (௨௮)

௨௧. திபதை—கண்டாராகம்—ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. மெய்யைநிலைநிறுத்திஉன் மெய்யைவிட்டுப்போனதென்ன
மெய்த்தவனே என்னைப் பெற்றவனே
கையிலேவளர்த்தஎன்னை இப்படிகண்கலக்கங்கள்
கண்டாயோ என்னை விண்டாயோ



அய்யன்எனும்தசரதன்சீர் அறிந்தான்தெம்பி
அழுகின்றான்அழுதழுது விழுகின்றானே. (௨௯)

௨௨. திபதை—மத்தியமாவதிராகம்—ஆதிதாளம்.

அரைசேஎனதையனே எனதப்பனேஎங்கே நடந்தாய்
முறையும்உன்தன்நிறையும்நீ உறவாடவோ தொடந்தாய்
முறையும்உன்தன்நிறையும் எக்கியத்துறையும்எல்லாம் தானே
பிறகேகொண்டுபோன தென்னகுறையோ அறி யேனே
சத்தியமும்சுபகிர்த்தியமும்நித்தியம்நித்தியமும்அல்லோ சிறந்தாய்
மித்திரனைதர்ம புத்திரனைராமபத்தினைஎங்கே மறந்தாய்
அழகாஉன்னைத்தொழ ஆசைகொண்டடுத்தேன் இது பொய்யோ
எழுதாப்பொறிக்கழுதால்இதில் என்னதான்வரும் அய்யோ
சீலராகவன்மேலே மாமுடி கோலிநீவைக்கும் முன்னே
காலம்செய்திடும்கோலந்தன்னை என்னால்என்னசெய்யல் ஆம்மன்னே
அம்பரந்தனில்சம்பராசுரன் துன்பமேசெய்கி றானே
உன்பிராணனைராமன்மேல்வைத்த அன்பெல்லாம்இது தானோ
அய்யன்முனிவசிஷ்டன் விட்டகைஓலைபின் பேச்சே
மெய்என்றிருந்தேனே நான்விழித்தேன்சனை வாச்சே
எண்ணினால்என்னஅண்ணன்ராமன் இங்கிருக்கின்றானே இந்நேரம்
புண்ணியவானைஎன்கண்ணில்ந் காணவேம்பாபோஎன்வி சாரம்

—*—

## பரதர் கைகேசியைக் கோபித்தல்

விருத்தம்.

வருதுயரம்ஒருவிதத்தால்ப் பரதன்தேறி
மன்னன்இறந்தாலும்என்ன அண்ணன்ராமன்
திருமுகம்கண்டால்போதும் எங்கேயென்றான்
தேசம்எல்லாம்ஒருவரத்தால் உனக்கேசொன்னேன்
ஒருவரத்தால்அவனைவனம் போகச்சொன்னேன்
உள்ளபடிஇதுமகனே பிள்ளாய்நீக்கப்
பெரியமன்னன்இறந்தான்என் றுரைத்தாள்கண்ணீர்
பெருகினன்கைகையைநொந் துருகினனே (௩௰)

ங௪. தரு-கமாசுராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

என் அடிபாவிகைகேசி என் அடிசெய்தாய்-நீ
என் அடிபாவிகைகேசி-என் அடிசெய்தாய்

சரணங்கள்.

க. மன்னனைக்கொன்றண்ணன்வனம் போகவிடுத்தாய்இன்னம்
இன்னம்உண்டோபாவியென்னை என்டிகெடுத்தாய்(என்)

உ. என்றுபாவிஉன்வயிற்றி னில்வந்தேனே நான்
அன்றுதாயேஅன்றுபேய்என்று நொந்தேனே(என்)

ங. ஐயன்ராமன்கைகிழங்கு கிண்டல்ஆமோடி நான்
நெய்யும்பாலுஞ்சோறும்வாரி மண்டல்ஆமோடி(என்)

ச. உன்னைக்கொன்றஎன்பழியைப் பின்னைத்தீர்க்கிறேன்எங்கள்
மன்னவன்ராமன்வைவான்என்றெண்ணிப் பார்க்கிறேன்(என்)

ரு. தின்றால்அல்லோநஞ்சுசொல்லும் என்பதுபொய்யோநான்
ஒன்றும்அறியேனே இதுக்கென்செய்வேன் அய்யோ(என்)

சா. மன்னன்வன்பிணோடேநீ போகல்லோவேணும் இனி
என்னையும்கொன்றாகிலும்நீ சாகல்லோவேணும்(என்)

எ. தரமோநான்புவியாளத் தரமோகண்டாய் ரண்டு
வரமோகழுத்தறுக்க அரமோகொண்டாய்(என்)

அ. நாயகன்ராமனுக்கினை சொல்லப்போமோடிஓர்
ஆயிரம்நட்சத்திரம்ஒரு சந்திரன்ஆமோடி(என்)

---

## பரதர் கோசலாதேவிக்குச் சத்தியங்கூறல்.

விருத்தம்.

கோவித்தபரதன்அந்தகைகையைவிட்டப்புறம் கோசலையைக்கண்டான்
சேவித்தான்கைகைசெய்ததறிந்திலையோ என்றந்தத்தேவிகேட்டாள்
ஆவிக்கும்ஆவிஅண்ணன்ராமனைவஞ்சித்தறியேன்அறிந்தேன்ஆகில்
பாவிக்கும்பாவியாய்விடுவேன்என்று சத்தியங்கள்பண்ணுவானே. (உரு)

உச. தரு-சாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

சேரும்கதியில்ச்சேருவேன் அம்மா-இந்தராமத்துரோகம்
தெரிந்தால்அனுபவிக்கிறேன் அம்மா



அநுபல்லவி.

தீராநெஞ்சுக்குத்தெய்வமே சாட்சி
திரும்பத்திரும்பஎன்வகண் சாட்சி
ஓரிபோல்ப்பெரியோரை வைதவன்
உண்டவீட்டுக்குரண்டகம் - செய்தவன் (சேரு)

சரணங்கள்.

க. அய்யம்இட்டுஉண்ணுதவன்குடிகெடுத்தவன் அப வாதகன்
அகத்தில்ஒன்றும்புறத்தில்ஒன்றும்செய்யும்துர்க்குண போதகன்
செய்தநன்றிவிடுத்தவன்தீங்கெடுத்தவன்பிரம்ம காதகன்
செய்யும்அவரைக்குறுக்கேதடைசெய்தவன்கொலை பாதகன்

அய்யம்தீர்த்துநெஞ்சை உறந்தவன்
அசல்உடைமைக்குப்பேயாய்ப் பறந்தவன்
கைஅடித்துக்கொண்டாளை மறந்தவன்
கன்றுக்குப்பாலைவிடாமல்க் கறந்தவன்(சேரு)

உ. தீர்த்தக்கரைப்பாவியும்கடுங்கோவியும்ரௌத் திரியும்
செபதபவிரதசன னும்பரஸ்திரீசெனஅனு போகியும்
பூர்த்திஆம்மதுபானியும்அக்கிபானியும்அவி வேகியும்
பூமிக்குச்சுமைஆகவந்தபுகழ்இல்லாத, தேகியும்

வார்த்தையால்ப்பிரட்டும்படு கோளனும்
வழக்கழிவுசொலும்அசட் டாளனும்
தூர்த்தவிர்த்திவிடாமின் டாளனும்
சோற்றிலேநஞ்சிடும்சண் டாளனும்(சேரு)

ங. ஆறுகுளத்தில்உடைஇல்லாமல்அம்மணத்துடன் நடந்தவன்
அன்னைவார்த்தைதந்தைவார்த்தைகுருவின்வார்த்தை கடந்தவன்
தேறும்நல்லோர்பெரியோரைக்கண்டெழுந்திராமல்க் கிடந்தவன்
திருடனுக்கிடங்கொடுத்தவன்இடங்கொடுத்தவன்பின்னே தொட
ர்ந்தவன்

வேறில்லாரைப்பகைத்து விண்டவன்
வேட்டகந்தன்னிலேஇருந் துண்டவன்
சிறுப்படையைப்பயந்து கண்டவன்
செடியிலேதலைதுறுத்துக் கொண்டவன்(சேரு)

---

## குகன் பரதன் சேனையைக்கண்டு கோபித்தல்.

விருத்தம்.

சத்தியம்செய்துடனே சத்துருக்கனாலே
 தசரதன்செய்கடன் முடித்துநானே ராம
பத்திரனை அழைப்பேன்என் றெழுந்தாரும்
 படைகளும்தாயரும் வசிஷ்டமுனியும்சூழ
சுற்றசடாமுடிமுடித்துப் பரதன்கங்கைத்
 துறைக்குவடகரைக்குவந்தான் வரக்கண்டாங்கே
இத்திசையில்ராமன்மேல் பகைகொண்டன்றோ
 ஏறினான்என்றுகுகன் சீறினனே. (௨௫)

க௯. தரு-காபிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

என்னத்துக்குப் பரதன்படைவந்தது என்திராணி பாருங்கள்வேடரே

அநுபல்லவி.

மன்னவனுக்கடிமை நான்என்றுதெரியாமல்
வனத்தில்வந்தும்துறத்திப்பிடிக்கவந்தாரோ (என்னத்துக்கு)

சரணங்கள்.

க. ஆழநெடுந்திரைக்கங்கை ஆறுகடந்தாலும்என்ன
தோழன்என் றுராமன்என்னைச் சொல்லியருளியதொரு
சொல்லேனோ சொன்னபடிக்கு
நில்லேனோ நான்பிடித்ததை
வில்லேனோ இவரைக்
கொல்லேனோ (என்ன)

உ. அடிஒட்டின்மேல்க்காணம் போடவந்ததுபோல
முடியத்தாத்தின்ன மோசம்செய்யவந்தாலும்
முறியேனோ வளைதடிகொண்
டெறியேனோ தலைதலையாய்
பறியேனோ கொல்ல
அறியேனோ (என்ன)

௩. ஆனைகட்டச்சங்கிலிதான்எடுத்துக் கொடுத்தாற்போல்
என்எதிர்த்துக்கொண்டார்என்னை இவரைப்பொடிபொடியா
இடியேனோ வரஒட்டாமல்
அடியேனோ வந்தமன்னவரைப்
பிடியேனோ என்சொல்
முடியேனோ (என்ன)

---



குறுக்கேபேசாதேமுதல்க்கோணினால்முட்டக்
 கோணும்தடைசொல்லாதே குகனே

௫. ராமன்பரதன்லட்சுமணன் சத்துருக்கன்என்ன
 நால்வர்பிறந்திருந்தோம் குகனே
ஆம்உன்உடனே ஐந்துபேர் ஆனோம்சீர் ஆனோம்
 அதிகபலவான்கள் ஆனோம் குகனே

௬. குருவியின்தலைமேலே பனங்காய்போல்ப்புவிஆளக்
 குழந்தைபரதனடா குகனே
அருகில்இருக்கிறாயே நான் இருக்கிறாற்போலே
 அடிக்கடிபார்த்துக்கொள்வாய் குகனே

௭. உடன்ஆனதம்பிஇவன் உனதுமதனிஇவள்
 உனதுதுணைவன்நானே குகனே
இடர்என்படுகிறாய் நான்என்றும்நீஎன்றும்
 இரண்டாகஎண்ணாதே குகனே

௮. சற்றேகாணும்முன்னே கங்கைக்கரைஏற்றிஎன்
 தனையும்கரைஏற்றின குகனே
சித்திரகூடத்துக்கு வழிஎங்கேநீஇங்கே
 திரும்பலாமென்றும்பேசாதே குகனே

18/463

---

## ஸ்ரீ ராமர் சீதைக்குச் சித்திரக்கூடவளம் காட்டல்.

விருத்தம்.

வரதன்எனும்ரகுராமன்குகனை இந்த வகைதேற்றிப்பரத்துவாசக்
குரவன்அனுமதியாலேதம்பியும் சீதையும்தானும்கூடிப்போனான்
பரம்உளசித்திரகூடமலைசேர்ந்தான் முகம்மலர்ந்துபார்த்தான் அங்கே
காதலத்தைச்சீதைமுன்னேநீட்டுவான்மலைவளங்கள்காட்டுவானே.

௨௧. தரு-முகாரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

பாராய்பெண்ணே பாராய்பெண்ணே-பாக்கியசனகன்கண்ணே

அநுபல்லவி.

சீர்ஆகமக்குநேர்ஆகிறஇந்தசித்திரகூடமலைரத்தினபீடம்போலே (பா)

சரணங்கள்.

க. மாதவர்முனிவர்சொல் வேதங்களைக்கினி
வாடிக்கையால்க்கற்று வனம்எங்கும் படிப்பதும்
கோதும்தினைக்கொல்லையில்ப் பம்பைகள்எடுத்து
குரங்குகள் அடிப்பதும்
ஆதவன்குதிரையைப்போல் பசும்பாறைஒளிபாய்ந்த
ஆடுகள்பசுமையாக் கோடேறி நடிப்பதும்
பேதகம்இல்லாமல் மேல்ஓடும்மேகத்தைப்
பெண்ஆனைஎனக்கையால்ஆண்ஆனை பிடிப்பதும் (பா)

உ. மூலமுனிவர்க்குமலை ஏறப்படிபோலே
முடங்கிஅடங்கிக்கொண்டு மலைநாகம் கிடப்பதும்
காலில்அழுந்தாமல் புல்எல்லாம்கொம்பாலே
கரும்பன்றிகள் இடப்பதும்
கோலஅயோத்தியில் இட்டகொடிபோலே
கோல்மூங்கில்ப் பாம்புத்தோல்பட படப்பதும்
வாலைப்பிடிகொடுத்துக் குறுகும்கண்முனிவர்க்கு
மந்திகள் அங்கங்கேவழிகாட்டி நடப்பதும் (பா)

௩. அருவிநீரைமொண்டு துதிக்கையால்யானைகள்
அருந்தவர்பெருங் கமண்டலந்தனில் விடுப்பதும்
குருவிகள்தினைக்கதிர் மூக்கினால்மடத்தில்க்
கொண்டுபோய்க் கொடுப்பதும்
பரவும்ஓமகுண்டத் தெரிவளர்ந்திடமயில்
பசுமைஆம்சிறகைவிசிறிபோல் எடுப்பதும்
திருமாமுனிவர்முப்புரிநூல் அணிவதற்குச்
சிலந்திநூல்க்கொண்டுபோய்க்குரங்குகள் கொடுப்பதும் (பா)

## சக்கிரவர்த்தியைக்குறித்துப் பரதர்புலம்பல்.

விருத்தம்.

துய்யமலைவளங்களை இவ்வாறுகாட்டித்
தோகையுடன்சாமி லட்சுமணன்தான்செய்த
செய்யபர்ன்னசாலையினில் இருந்தான்இப்பால்
செயம்உளகேகயநாட்டில் வதிவ்நடன்ஓலை
பையஅறிந்துடன்மீண்டான் தாய்கைகேசி
பதத்தினில்சத்துருக்கன்உடன் பரதன்வீழ்ந்தான்



பழிகாறிதான்கொடுத்த மரவுரிதான்உடுக்க
பார்த்தாரோஊர்உள்ளோர்கள் ரகுராமா-ராமா

கஅ. பார்த்தாலும்பசிபோமே பால்வடியுமோஉன்தன்
பவளவாய்முகந்தன்னை ரகுராமா-ராமா
காற்றோட்டம்ஆகவந்து சற்றேநீகாட்டிஎன்னைக்
கரையேற்றிவிடலாண்ணதோ ரகுராமா-ராமா

ககூ. பிள்ளைதன்தொடைமேலே பெற்றவன்சீவன்விட்டால்
பெருக்கதிஉண்டென்பாரே ரகுராமா-ராமா
கள்ளக்கைகேசிகையில் காட்டிக்கொடுத்துவிட்டு
கடக்கப்போய்நிற்கல்ஆமோ ரகுராமா-ராமா

உ0. கண்ணும்இருண்டதையோ கருத்தும்அழிந்ததையோ
கைகாலும்ஓய்ந்ததையோ ரகுராமா-ராமா
எண்ணம்குலந்ததையோ என்றுநான்காண்பேன்உன்தன்
எழுதருமுகந்தன்னை ரகுராமா-ராமா

## ஸ்ரீராமரைக் குகன் தன்ஊரில் இருக்கவேண்டல்.

விருத்தம்.

புலம்பியமன்னவன் இவ்வாறிடிந்துசிவன்
போயினான்வைகுண்ட புரத்தைச்சேர்ந்தான்
பெலம்தருமன்னவர்அவனை யெடுத்தார்எண்ணெய்ப்
பெருந்தோணியில்இட்டார் இப்பால்ராமன்
நலம்தரும்லட்சுமணன் சீதையுடனேகங்கா
நதிஅடைந்தான் முனிவரொடும்கலந்தான்அந்த
சலந்தனையும்குகன்விடுத்ததோணியாலே
தாண்டினான் அவன்இருக்க வேண்டினானே. உ0

கசு. தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இங்கேஇரும்காணும் தரிசனம்தந்தென்னை ரட்சிக்கவேணும்

அநுபல்லவி.

மங்கைஆம்என்தாயும் ராமாநீயும்இந்த
வரிசைத்தம்பியும்அய்ய ஒருபத்தன்குகன்உய்ய (இங்)

க. பூவுண்டுகனிஉண்டுஊண்உண்டுதேன் உண்டு
புதுமரவுரிகளும்போர உண்டு

தாழ்வுண்டுதடம்உண்டு கங்காநதி உண்டு
தான்வேணபட்சணம்உண்டு நானேசெய்ரட்சணம்கண்டு(இங்)

உ. எட்டுத்திக்கிலும்செல்லுவேன் கிழங்குவகைகெல்லு வேன்
எதிர்த்தவரைவெல்லுவேன் வழிசெல்லு வேன்
கட்டிக்காத்துநானே கண்இமைபோலே தானே
காலாலேகாட்டினதெல்லாம் கையாலேசெய்குவேனே(இங்)

௩. நித்தியம்உம்மைப்பிரியேன் மற்றொன்றையும் குறியேன்
நினைறுமறக்கரியேன் நான்சிறி யேன்
முற்றிலும்நிறைதிங்கள் எனவேவிளங்கும் உங்கள்
முகம்கண்டால்ப்பசிபோமே முத்திமோட்சம் உண்டாமே(இங்)

---

## ஸ்ரீராமர் குகனைச் சிநேகம்கொள்ளல்.

தனதுபுகலும்குகனேஎன் வம்பிஉனதுதம்பிகண்டாய்
எனதுதுணைவன்நீகண்டாய் இச்சீதையும்உன்மனதிகண்டாய்
மனதுபொருந்தத் தாய்சொன்ன வரத்தால்காட்டில் இருப்பதல்லால்;
உனதுநாட்டில்இருப்பாமோ உரைப்பாய்இதைஆதரிப்பாயே.

கண்ணிகள்.

க காட்டில்இருக்கவந்து காட்டுக்கருகான
நாட்டில்இருக்கல்ஆமோ குகனே
பூட்டகமேஇது குளிக்கப்போயும்சேறு
பூசிக்கொள்ளல்ஆமோ குகனே

உ. பதினாலுவருஷம்போய் நாம்எல்லாம்ஒருமிக்கப்
பதியில்இருக்கல்ஆமே குகனே
மதிமோசமோஆனை ஏரியும்திட்டி
வாசலில்நுழைவான் ஏன் குகனே

௩. உன்பரிசனம்என்னது உன்ஊரும்என்னதுஉன்
உறவும்என்உறவாச்சே குகனே
என்பிறகேநீவந்தால் இந்தஉறவைக்காக்க
எவர்உண்டுநீசொல்லாய் குகனே

௪. பொறுத்தஎனதுதவம் முடிக்கவேணும்அந்தப்
பொறுப்புஉனக்கில்லையோ குகனே



அறுபதாயிரம்ஆண்டு அரசிருந்தான்
அதுவும்போதாதென்று அழல்ஆமோஅவற் கினி(ரா)

---

## ஸ்ரீராமர்முன்னே பரதர் புலம்பல்.

விருத்தம்.

அலகிலாக்குறைநீக்கி வசிஷ்டன்தேற்ற
அறிந்துகங்காநதிமூழ்கித் தந்தைக்குள்ள
குலவிதிஎல்லாம்செய்தான் சீதைதானும்
குளிர்ந்தகங்காநதிமூழ்கித் தெளிந்தபோது
தலம்அதனை ஆளும்முடி தரிக்காய்தம்பி
சடைமுடிஏன்தரித்தாய் என்றுரைக்கக்கண்ணீர்
பலபலெனஉதிர்ந்திடத்தன் மனதில்உள்ள
படிராமன்முன்பரதன் பகருவானே. (௩௦)

கஉ. திபதை-எதுகுலகாம்போதிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. மன்னவன்தன்னையும்கொன்று உன்னையும்இந்தப்படி
வைத்தாள்வயிற்றுக்குள்ளே அவம்
சென்மித்தநான்அல்லோ மாதவம்செய்யவேணும்
தேவாஉனக்கேன்இந்த மாதவம்

உ. உறவுபோலேஇருந்து குளவிபோலேகொட்டி
உன்னையும்போகச்சொன்னாளே படுபாவி
மறுபடியும்வந்து சந்தோஷம்சொன்னாளே
வைத்திருக்கவேணுமோ என்ஆவி

௩. உடன்ஆம்துணைபிரிக்க தந்தைஉயிர்மரிக்க
ஊறும்சிரிக்கவரம் கொண்டேனே
இடறினகாலிலே இடறும்என்பதெல்லாம்
என்இடத்திலேதானே கண்டேனே

௪. அருந்துணையேஎன ஐயாவேஎன
தரசேநீபோ தேசியோ
பிரிந்தென்னைப்போஎன்றாய் பழிகாரனோநான்
பிள்ளைபிறந்தநேர் வாசியோ

ரு. உலகம்எல்லாத்தையும் நீஆளவேணும்பின்
ஒருவர் ஆண்டுகுறை வாங்குமோ
மலைதாங்கும்பாரத்தை மலையேதாங்கவேணும்
மண்ணாங்கட்டிஎன்ன தாங்குமோ

சு. ஆனைமேல்இட்டபாரம் பூனைமேல்இட்டால்போலே
அரசாளுவதென்ன கோலமோ
கானகம்நீஇருக்க நான்போய்அரசிருக்கல்
கதையோஇதுகலி காலமோ

எ. தன்இனம்தன்னைக்காக்கும் வேலிபயிரைக்காக்கும்
தப்பிதம்இல்லைஇந்தப் படிதானே
உன்இனந்தன்னைநீயே வந்துகாத்தருள்என்றால்
ஒன்றும்ஆகாதுசொன்னேன் அடியேனே

அ. எட்டுதேவேந்திரனுக்கும் மகுடம்தரித்துவைத்த
தெசரதமகராஜன் பூமியே
நீவேறென்னால்ஆமோ நீயேவரவேணும்
நீஆளவேணும்என் சாமியே

## ஸ்ரீராமர் பரதருக்குப் புத்திசொல்லுதல்.

### விருத்தம்.

பரதன்இவ்வாறுகூறப் பரிந்துஸ்ரீராமன்தாயார்
விரதம்ஏன்விட்டாய்இந்த விரதம்ஏன்கொண்டாய்நான்போய்த்
தரமுடன்பதினால்ஆண்டும் தவம்செயவேணும்நீபோய்த்
திரமுடன்புவிஆள்என்று தெரிவிப்பான்விரிவிப்பானே (ருக)

கஅ. தரு-சுருட்டிராகம்-அடதாளசாப்பு.

### பல்லவி.

இன்னம்சிறுபிள்ளைபோலேஎன்னை அழைக்கிறாய்உன்னை
என்னசொல்வேன்பரதாஎன் கண்ணின்மணியே

### அநுபல்லவி.

அன்னைதந்தபணிவிடையே தன்மம்என்றுமதித்தேனே
அப்படிநீமதிக்காமல் இப்படிவந்திதில்த்தானே (இன்)



க. வாய்த்தமழைவிட்டும்தூவானம்விட்டதில்லைராமன்
வனத்தில்வந்தபின்னும்என்னசொல்லையா
நேத்தியாப்பதினாலுவருஷமட்டும்சொன்னபடி
நில்என்றால்நில்லாமல்என்னதொல்லையா
ஏர்த்ததகப்பன்சொன்னவார்த்தைகொண்டுபுவிஆள
இசைந்தேனேஅந்தநாள்அறிந்தாய்அல்லையா
மூத்தவனும்ஒருவிதத்தில்த்தகப்பன் ஆமேசொன்ன
மொழிகொண்டுபுவிஆளொணாதேவல்லமைஇல்லையா (இ)

உ. மத்தர்போல்ப்பொய்உரைத்துத்தகப்பன்வினைகட்டிக்கொள்ள
மகன்இருந்துபட்டம்கட்டிக்கொள்ளல்ஆமோ
சத்தியமாலேதம்எல்லாம்கண்கண்டதெய்வம்என்னும்
தாய்தகப்பன்உரைகடந்துதள்ளல்ஆமோ
பத்தியாத்தவம்எனக்கும்புவிஉனக்கும்பிரித்திருக்கப்
பங்கல்லாப்பங்கைவிழுந்துஅள்ளல்ஆமோ
பித்தன்அல்லடாதம்பிநீசமர்த்தன்என்றிருந்தேனே
பேய்ஆகிலும்பெற்றதாய்வார்த்தைதள்ளல்ஆமோ. (இன்)

ங. முன்ஆகநான்கொண்டுபின்னாகஅரசுனுக்கு
முறையாலேதந்தேன்என்உரைபொய்யாமல்
உன்னாலும்என்னாலும்சொன்னபடிநடக்கும்என்று
உசரப்போனதசரதற்குவசைவையாமல்
சின்னாபின்னங்களாப்பட்டணமும்பரிசனமும்
சேற்றில்நட்டகம்பம்போலேதொய்யாமல்
என்ஆணைதம்பிநீ உன்நாட்டைஆளடா
எப்படிநான்சொன்னாலும்அப்படிநீசெய்யாமல். (இன்)

## பாதுகைக்குப் பரதர் பட்டாபிஷேகம் செய்தல்.

விருத்தம்.

பதிஎனும் ராகவன்இவ்வா றுரைக்கக்கேட்டான்
பரதனும்சம் மதிகொண்டான் பதினால்ஆண்டாம்
அதில்வரா விடில்முடிவேன் என்றுகொண்டான்
அண்ணன்முதியடிகொண்டான் அனுப்பிக்கொண்டான்
துதிஅயோத் தியில்ப்புகுந்தான் நந்திக்கிராமம்
தன்னிலுன் சுமந்திரன் அதிகாரம்செய்ய
மிதிவுடிக்குமுடி தரித்தான் தெற்கேநோக்கி
விழிக்கின்றான் தன்பழியைக் கழிக்கின்றானே.

## அயோத்தியாகாண்டம்முற்றும்.

---

விருத்தம்-௩௨

திபதைகள்-௧௨, தருக்கள்-௧௮, ஆக-௩௦

பாயிரம் ௧-க்கும் காண்டங்கள் ௨-க்கும் கூடிய

கொச்சகம்-௧, வெண்பா-௨, வசனம்-௧, விருத்தம்-௩௨, ஆக-௩௬.

தோடையம்-௧, திபதை-௧௫, தருக்கள்-௪௩, ஆக-௫௯

---

சக்கிரவர்த்தித் திருமகனார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

மூன்றுவது,

# ஆரணியகாண்டம்.

## ஸ்ரீராமர் அத்திரியைக்கண்டு தண்டகம்சேர்தல்.

விருத்தம்.

துதிபெறுதம்பியர்தாயார் மந்திரிமார்கள்
தொல்முனிவர்புரசனங்கள் குகன்போனாலும்
பதிவுறும்நம்இருப்பிடத்தைக் கண்டுகொண்டார்
பரிவினால்வந்து தினம் சூழ்வார்என்று
சதிஎனும்சானகியின்னும் தம்பிமுன்னும்
தான்வரச்சித்திரகூட மலைக்கப்பாலே
உதையரவிமுன்பனிபோல் முனிவர்துன்பம்
ஒழிக்கின்றான்ஸ்ரீராமன் வழிக்கொண்டானே.

௧. திபதை தோடிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. வழிகொண்டுராகவன்விண்டான் அந்த
வழியில்அத்திரிமுனியைக்கண்டான் முனி
மொழியும்ஆசீர்வாதம்கொண்டான் தந்த
பூங்கனிகிழங்கமுதுண்டான்

௨. அழுக்கில்லாதசொர்ன்னச்சாயை ஆன
ஆடைபணிகள்வெகுவாயே அன்பு
செழிக்கும்சீதைக்கொருதாயைப்போலே
செய்தாளேமுன் அனுகூலை

௩. அதுகொண்டம்முனிவன் அவ்அன்னை இடத்
தனுமதிகொண்டவர்முன்னே நல்ல
முதுதண்டகாரணியம்தன்னைக் கண்டு
மூவரும்சென்றாரேபின்னே

## விராதன் வதையும் துதியும்.

விருத்தம்.

பொய்கலந்தவிராதன் அந்தவனத்தேவந்தான்
பூவ்வைசனகியைஎடுத்துக்கொண்டான் ராமன்
மெய்கலந்ததம்பியும்தானும் போர்செய்தான்
விட்டிலன்என்றவர்களையும் எடுத்துக்கொண்டான்

மைகலந்ததோளேயிருவோரும் வெட்டி
மாய்த்திட்டார்பதம்படலால் அரக்கன்அங்கே
கைகலந்ததிவ்யதேகத்தைப்பெற்றான்
கதிசெல்வான்ஞானமுள்ள துதிசொல்வானே. (உ)

க. தரு-பைரவிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

அறிவார்ஆர்உன்னை அறிவார்ஆர்

அநுபல்லவி.

அறிவார்ஆர்மானிடன்போலே குறியாவேஷம்கொண்டதாலே
சிறியேன்செய்தபிழைதன்னைக் குறியாதேராகவாஉன்னை (அறி)

சரணங்கள்.

க. எடுப்பானும்எவர்க்கும் இன்பம்கொடுப்பானும்குட்சியினால்
விடுப்பானும்ஆலிலைமேலே படுப்பானும்நீ ஆகவேயா
ராட்டுவாய் கதியைக் காட்டுவாய் உலகைச்
சாட்டிஇல்லாபம்போல் ஆட்டுவாய்உன்மகிமையை (அறி)

உ தாய்அறியும்பிள்ளைதன்னைத்தாயையும்பிள்ளைஅறியும்
நீஅறியும்உயிர்உன்னை ஆயறியாதென்னைஇந்திர
சாலமோ இதென்ன கோலமோ உனது
காலாலேமுடிந்ததனைக்கையாலே அவிழ்க்கப்போமோ (அறி)

ங. அரவம்ஆகிமேல்உகந்தாய் ஒருகொம்பினாலேசுமந்தாய்
சரணம்அதினால்அளந்தாய் பெருநிலமங்கைமேல்வைத்த
தாகமோஇளையாள்மோகமோ உன்மார்பில்
ஏகமாய்இருக்கின்றவள் வேகம்மசெய்யாளோஉன்னை (அறி)

ச. உள்ளசராசரம்எல்லாம் வள்ளலேஉன்நாபிமலர்ப்
பொள்ளலில்வந்தும்ஒருவர் பிள்ளைஎனநீவந்தது
ஞாயமோ இதென்ன மாயமோ சேற்றிலே
மேயும்பிள்ளைபூச்சிபோலே தோயவும்தோயாதஉன்னை (அறி)

ரு. வேதத்தின்மேலேவேதாந்த நாதத்தின்மேலேஞானிகள்
போதத்தின்மேலேவிளங்கும் பாதத்தை என்மேலேவைத்தாய்
யோக்கியனே அடியேன் சிலாக்கியனே சுருதிசொல்
வாக்கியனேசுவாமிஎனது பாக்கியமேபாக்கியம்உன்தன்னை (அ)



சு. பாகண்டுசொல்லானே இந்தநாய்கண்டதென்றுகொள்ளாதே
தாய்கண்டுபொறுக்கரத்தை ஊரோகண்டுபொறுக்குமலர்த்
தாமனே பன்னிரு நாமனே எவர்க்கும்
வாமனேஎனும் சீதாபிராமனே உன்பெருமையை (அறி)

## தண்டகவனரிஷிகள் ஸ்ரீராமரோடு முறையிடல்.

விருத்தம்.

துதிவிராதன்வணங்கி உயரப்போனான்
சுவாமிசரபங்கன் ஆசிரமத்தில்போனான்
அதில்எதிர்கண்டிந்திரனும் போனான்ராமன்
அருளமுனிதம்பதியோ டனலில்போனான்
கதிதருதண்டகவனத்து முனிவர்தம்மைக்
கண்டுகனிஅமுதையன் உண்டிருந்தான்
சதிசெயும்ராட்சதராலே கொஞ்சச்சீவன்
தரிக்கின்றார் அவர்கள்கையை விரிக்கின்றாரே.

உ. திபதை-புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

| | | |
|---|---|---|
| க. | ராமபத்திரராமச்சந்திரா | ராமாஆசீர்வாதம் |
| | பூமிச்சுமைகழிக்கும்தர்ம | புத்திராஆசீர்வாதம் |
| உ. | அரக்கர்கையால்நருக்கியிட | ஆலைக்கரும்பெனத்தானே |
| | நெருக்கிடைஆய்வருந்தும்எம்மை | நிலைநிறுத்தாய்எங்கோனே |
| ங. | விழல்எனராட்சதநெருப்பால் | வெதும்புகிறோம்ஒருகாலே |
| | மழைமுகம்கண்டிடும்பயிர்போல் | மகிழ்ந்தோம்நீவரலாலே |
| ச. | புரைசேரும்ராட்சதரால் | பூனைகளாய்ப்போனோமே |
| | அரைசேஉன்வரவுகண்டோம் | ஆனைகள்போல்ஆனோமே |
| ரு. | வள்ளல்தசரதன்மகனே | மனக்கவலைதீராயோ |
| | எள்அளவுன்கிருபைக்கண்ணால் | எங்கள்முகம்பாராயோ |
| சு. | பஞ்சுபறந்தாலும்அய்யா | படியும்அல்லோஒருதேசம் |
| | நெஞ்சுபறந்திடுமதற்கு | நிலைகாணோம்லவலேசம் |
| எ. | உத்தமனேஅரக்கரைவே | ரொடும்பிடுங்கிஎறிவாயே |
| | இத்தனைபேர்செயும்தவங்கள் | எல்லாம்நீபெறுவாயே |

அ. பலிக்கூட்டம்திரிகாட்டில்ப் புகுந்திடும்மான்எனநாமே
கலிக்கிராட்சதர்திரியும் காட்டில்இருக்கின்றோமே

கூ இயற்கைகுலைந்தரக்கர்களால் இறந்துவிட்டோம்பேர்நாமம்
வயிற்றினில்வாள்கட்டிக்கொண்டு மறந்துவிட்டோம்செபஓமம்

கo. உங்காரம்செயில்அரக்கர் உலகில்என்ன)டுவாரோ
இங்கேநீஇருக்கில்அவர் எட்டியும்பார்த்திடுவாரோ

## ஸ்ரீராமர் தண்டகவனரிஷிகளுக்கு அபயம்ஈதல்.

விருத்தம்.

தருக்களும்மலையும்சூழ்ந்த தண்டகவனத்தோர்ஈந்த
வருத்தம்ஆம்மொழியைக்கேட்டான் வணங்கியேராமன்நீங்கள்
செருக்கியேதவங்கள்செய்வீர் தேவரீர்க்கேவல்ஆளா
இருக்கிறேன் அரக்கர்துன்பம் இனிவிடும்எனச்சொல்வானே.

உ-தரு-கலியாணிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அஞ்சாதிருங்கள்சந்நாசிகளே தண்டகாரண்ணியவாசிகளே

அநுபல்லவி.

அஞ்சாதிருங்கள்உங்கள் ஆசீர்வாதம்துணை
அப்புறம்ராட்சதர்க்குண்டென்கையில்க்கணை
செஞ்சாமாருதம்போலேநொடிக்கிறேன்
பஞ்சாகப்பறந்தோட அடிக்கிறேன் (அஞ்)

சரணங்கள்.

க. கண்டோரைக்கொல்லுவேன் கொல்லாமல்விட்டான்
காகுத்தன்என்றுநீர்சொல்லாமல்
மண்டிஎதிர்த்துமுன்நில்லாமல் காலில்
வந்துவணங்கினர் அல்லாமல்
எண்டிசைமேல்அவராலேஆனமட்டும்
ராட்சதசேனைகள்வந்து போராடட்டும்
அண்டபகிரண்டம் ஆயிரத்தெட்டும்
அப்புறம்போனாலும்என்கணையேஎட்டும் (அஞ்)



உ. அந்தணராலேபசுவாலே தங்கள்
ஆவிகொடுத்தவர்விண்மேலே
முந்தியதேவர்க்கும்அப்பாலே சொல்லும்
மூர்த்திகள் ஆவார் அதனாலே
இந்திரன் ஆனவேன்வந்துதடுக்கிறேன்
என்றாலும் ராட்சதர்போரில் அடுக்கிறேன்
சுந்தரகோதண்டவாளிவிடுக்கிறேன்
சூரியனைக்கண்டபனிபோல் ஒடுக்கிறேன் (அஞ்)

ங. மங்கியேதாயார்கிலம்கிற மூடி
மன்னன் உயிரும்தடுமாற
எங்கள்பரதனும் வேசாற நான்
ஏன்வந்தேன்என்சென்மம்ஈடேற
உங்கள் பணிவிடை நானேபொருக்கிறேன்
உக்கிர கோதண்டத்தில் நாணிஇறுக்கிறேன்
எங்கெங்கும்என்கணையாலே நொறுக்கிறேன்
ராட்சதப்பூண்டெல்லாம் வேரோடறுக்கிறேன் (அஞ்)

---

## ஸ்ரீ ராமர் பஞ்சவடி தீரத்தைக் காணுதல்.

விருத்தம்.

அருள் முனிவர்க்கிந்தவகைதேற்றித்தண்ட
காரணியந்தனில்ப்பத்துவருஷம் நீக்கி
வரும்வழியில்வசிஷ்டமுனிதவமும்கொண்டு
வந்தகஸ்தியமுனிவரனைவணங்கி அன்றான்
தருசிலையும்புரமெரித்தகணையும்கூடும்
சங்கையிலாதேதரித்ததுங்கராமன்
பரிவுளதம்பியும் ஜனகிதானும்செல்லும்
படிகொண்டான் பிறகுபஞ்சவடிகண்டானே (ரு)

---

## ஸ்ரீ ராமர் சடாயுவைக்கண்டு பஞ்சவடி தங்கல்.

விருத்தம்.

அகஸ்தியமுனியை அனுப்பிக்கொண்டந்தவழியில்ச்சடாயுஎனும்
தகப்பன் உரைகொண்டவன் காட்டத்தருநீர்க்கோதாவிரிதாண்டிச்

சகிக்கும்இளையோன்செய்தபர்ன்னசாலைதனிலே சனகிஉடன்
மிகுத்தோர்பஞ்சவடியில்உள்ளோர்விருந்தாய்ராமன்இருந்தானே.

௩. தரு-அடாணாராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இருந்தானேராமச்சந்திரன் பஞ்சவடியில்
இருந்தானேராமச்சந்திரன்

அநுபல்லவி.

இருந்தானேராமச்சந்திரன் ரிஷிகளைக்காக்கும்தந்திரன்
வருந்தாராட்சதர்கூடி வரும்வழி தன்னைநாடி (இ)

சரணங்கள்.

நிருதர்கள்பசிபார்த்து நிரைநிரையாக்கைகோர்த்து
வரும்விகாதத்தைத்தீர்த்து மாமுனிவோரைக்கார்த்து (இ)

அலைந்தமுனிவர்சோகம் ஆகுலம்எல்லாம்போக
இலங்கையில்அனுபோக ராட்சதர்க்கெமன்ஆக (இ)

பலத்தராட்சதர்ஆட்ட பாட்டங்கள்எல்லாம்மாட்ட
சலித்தபேர்துன்பம்ஓட்டதர்மத்தைநிலைநாட்ட (இ)

---

## சூர்ப்பநகை ஸ்ரீராமரைக்கண்டு மோகித்தல்.

விருத்தம்.

இருந்தராகவன்பூமேனிஎழில் எல்லாம்நோக்கிஆசை
புரிந்தசூர்ப்பநகைலங்காபுரி இராவணற்குத்தங்கை
அருந்தும்மோகத்தால்அய்யன் அடிமுடிஅளவும்கண்டு
தெரிந்துள்ளேஎண்ணிநெஞ்சம் திருகுவாள்உருகுவாளே. (எ)

௪-திபதை-நீலாம்புரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்

௧. தேவனோமனிதன்தானோ யாவனோயௌவனம்உள்ள
சித்தனோ இவன் கர்த்தனோ பிரமன்
பாவனையால்க்கண்டபெண்கள் ஆவியைக்கொள்ளை கொள்ளஎன்று
படைத்தானோ என்னை உடைத்தானோ

௨. எட்டானைக்கையும் இவன்கைமட்டாமோசொர சொரெனன்
இருக்குமோ உள்ள சுருக்குமே முன்னே
பட்டமன்மதன்தவம்செய் திட்டிந்தஉருவாய்ப்புறப்
பட்டானோ தவசு தொட்டானோ



௩. ஈசனுக்குமுக்கண்இந்திர ராசனுக்கோர்ஆயிரம்கண்
எண்ஆச்சே இவற்கிருகண்ஆச்சே இவனைப்
பேசினால்என்சாமிஇவன் கேசவன்தானோநான்ஒன்றும்
பிறியேனே ஆரோ அறியேனே.

௪. புந்திபவளத்தைஇவன் செங்கனிவாய்க்கொப்புசொல்லப்
போகுமோ நிகர்ஆகுமோ அய்யோ
அந்தவார்த்தையைத்துப்பென்றநிந்தையால்ப்பவளம்துப்பென்
றுச்சுதே உவமை போச்சுதே

௫. முடிவைத்தகுழல்ச்சடையாமுடியாவிட்டால்ப்பெண்கள்எல்லாம்
முடியாரோமனம் மடியாரோஇவன்
அடிவைத்தபூமிப்பெண்மேனிபுளகித்தால்ப்போல்அல்லோபுல்லை
அரும்பினாள் மெத்தவிரும்பினாள்

௬. மரவுரிசேர்இடைபீதாம் பரமதைச்சேராததென்ன
மாயமோஇது ஞாயமோசந்
திரன்இவன்முகம்என்றாலும் வரவரஅதுக்கும்கலை
தேயுமேகளங்கம் தோயுமே

௭. நவம்செய்ததாமரைப்பெண்ணும்செவம்செய்கிறாள்இவன்மார்பை
நாடவோ வந்துகூடவோஅய்யோ
தவம்செய்யவந்தானோநான்முன் தவம்செய்ததற்காகக்காட்சி
தந்தானோ தேடி வந்தானோ

௮. ஏலும்இவன்இலக்கணம் எல்லாம்செய்த அயனேமோசம்
இட்டானோமதி கெட்டானோ இவன்
காலில்த்தூளுக்கொவ்வாஇந்திரன் மேல்உளகைஆள்வவென்ன
கர்மமோ இது தர்மமோ

௯. எடுத்தவன்சுந்தரத்துக்காம் அடுக்கானபூஷணம்பூணு
திருப்பான்என் அருவருப்பான் என்சும்மா
விடுத்தவன்அல்லவே பொன்னின்குடத்துக்குப்பொட்டிட்டுப்பா (ர்க்க
வேணுமோ அதிகம் காணுமோ

௧௦. தப்பில்லாஇவனைச்சேர இப்படிபிரம்மாஎனக்குத்
தந்தானோ இவனும்வந்தானோ ஓகோ
எப்படிஆனாலும்இவன் பொற்புயம்தனைச்சேராமல்
இருப்பேனோ ஆவி தரிப்பேனோ

௧௧. இந்தவிதம்எண்ணிமலர்ச் செந்திருப்போல்மாயவேஷம்
இட்டாளேநாணம் விட்டாளே நல்ல
பைந்தொடி ஆப்ச்சூர்ப்பநகி வந்துராமச்சந்திரன்முன்னே
படர்ந்தாளே கிட்டநடந்தாளே

---

## ஸ்ரீராமர்பக்கல் சூர்ப்பநகை வருதல்.

விருத்தம்.

அட்டிசொல்லாதன்னேஉரை கொண்டராமன்
ஆனைவருகிற வழியைப்பார்க்கும்சிங்கக்
குட்டியைப் போல்அரக்கர்வரும் வழியைப்பார்த்துக்
கொண்டிருந்தான்அவன் இருந்தசாலைமுன்னே
கட்டிஇடும்பிணிஉள்ளே அடங்கிநாச
காலம்வரவெளிவந்தால்ப் போலேபொல்லா
மட்டிஇராவணன்குடியை நாசம்செய்யும்
வகைவந்தாள்எனச்சூர்ப்ப நகைவந்தாளே (௮)

௪. தரு-பியாகடைராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தாளே சூர்ப்பநகை வந்தாளே

அநு பல்லவி.

வந்தாளேமன்மதசதகோடி வடிவுள்ள ராமன்மேல்மயல்மிகநாடி
பந்துமுலையைமூடி பஞ்சவடியைத்தேடி
பாவம்செய்யும்நிர்மூடி ராவணன்குடிகேடி (வந்)

சரணங்கள்.

௧. ராவணன்குபேரனுக்குத் தங்கைபகை-இல்லாத
நன்மைத்துனர்கொண்டுவந்த நங்கை
தேவரீருக்கிவள்பெண்டல்ல நீலி
சீதைக்குத்தெரியுமோராட்சத சோலி
ஏவலுக்கெளியவள்நான் அநுகூலி
என்றுசொல்லிஅரக்கரைத் துடைகாலி (வந்தா)

௨. மானிடப்பெண்கொண்டீர்என்ன கண்டோ-என்உடன்
மருவிவாழ்ந்தால்உமக்குப்பயம் உண்டோ
ஆனாலும்என்னபாவிகருப்பு வில்லி
ஐங்கணைபிளக்குதேஎன்உடல் கெல்லி



சேனைலீலைசெய்வேன்நான்காம வல்லி
திரட்டுப்பால்குமட்டுதோ உமக்கென்று சொல்லி(வந்தா)

௩. எதிரிலேவந்ததேஉமது யோகம்-நாம
இருவோரும்இசைந்ததேகாந்தர்வவிவாகம்
சதிசெய்யேன்உமக்கும்எனக்கும்ஏக ராசி
சம்மதிஆனதேநல்லமுகூர்த்த வாசி
கதகதென்றெரியுதேகாமாக்கினி வீசி
கட்டிக்கொள்ளும்என்றுதில்லும்முல்லும் பேசி(வந்தா)

---

## ஸ்ரீ ராமருக்கும் சூர்ப்பநகைக்கும் சம்வாதம்.

விருத்தம்.

வந்தசூர்ப்பநகைதன்னை மதித்தராகவனும்நோக்கி
அந்தமானிடவர்பெண்ணோ அரம்பையோஅறிவோம்என்றும்
தொந்தமாகவத்தோர்க்கான சொல்அறிந்துரைப்பாள்என்றும்
தந்தைவார்த்தைக்குவார்த்தை சரிசரிஎதிர்சொல்வானே. (௯)

௫. திபதை-மோகனராகம் ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. செம்பவளவல்லிபோல எங்கேவந்தாய்வந்த
சேதியென்னசொல்வாய் பெண்பாவாய்
கும்பிடப்போனதெய்வம் எதிர்வந்ததென்றுசை
கொண்டுகாணவந்தேன் என்கோவே

௨. ஆசைவில்லின்மேலோ மரிவுரிமேலோதின்னும்
அருங்கனிமேலோசொல் பெண்பாவாய்
ஆசைவில்லின்மேல்இல்லை மரிவுரிமேல்இல்லைஉன்
அதரக்கனிமேல்உண்டு என்கோவே

௩. அதரக்கனிகொடுக்கத் தவசிகட்கடுக்குமோ
அடுக்காதவார்த்தைசொன்னாய் பெண்பாவாய்
அதரக்கனிவசிஷ்டர் அருந்ததிக்கீயலையோ
அவர்தவசிஅல்லவோ என்கோவே

௪. தவசிஅதுசெய்தாலும் பிரம்மகுலம்உன்குலம்
க்ஷத்திரியகுலம்என்குலம் பெண்பாவாய்

இவைஅவைஎன்பதென்ன காமுகருக்குக்கண்ட
இடத்தில்என்பதுபொய்யோ — என்கோவே

ரு. உன்வீட்டில்அண்ணன் ஆன ராவணன் அறியாமல்
உன்கைபிடிக்கல்ஆமோ — பெண்பாவாய்
என்வீட்டில் அண்ணனும்நான் உன்னவள்ஆனபின்பு
இசைவதற்கையம்இல்லை — என்கோவே

சு. தன்வீட்டுவிளக்கென்று முத்தம்இடுவார்உண்டோ
தகுதிஅல்லவேஅது — பெண்பாவாய்
என்வீட்டுக்காரன் ஆனால் அரக்கர்உறவுமுண்டாம்
இந்தரபட்டமும்ஈவேன் — என்கோவே

எ. அரக்கர்உறவும்பெற்றேன் உன்போகமும்பெற்றேன்
அருந்தவம்பலித்ததே — பெண்பாவாய்
பெருக்கம்என்னசொல்லஎன்சுகம்பெற்றபின்பு
பெறும்பாக்கியம்வேறும்உண்டோ — என்கோவே

அ. தவசிகளுக்கிதெல்லாம் ஏதுக்குக்காட்டினில்
தவசேபெறும்பாக்கியம் — பெண்பாவாய்
தவசிதவசிஎன்று மெள்ளமெள்ளச்சொல்லி
தள்ளிவிட்டிடல்ஆமோ — என்கோவே

கூ. தனிஆகஉன்னைநான் கைபிடித்தால்உன்தன்
சாதியார்என்செய்வாரோ — பெண்பாவாய்
தனிஆய்முருகன்வள்ளி கைபிடித்தானே அந்த
சாதியார்என்னசெய்தார் — என்கோவே

க0. அநியாயகாரியத்தைப் பயம்இல்லாமல்செய்தால்
ஆர்க்கும்சம்மதிஆமோ — பெண்பாவாய்
இனிஇருவரும்ஒத்தால் ஒருவர்க்கும்பயம்இல்லை
எவர்க்கும்சம்மதிஆமே — என்கோவே

கக. ஆனால்மானுஷகணம் ராட்சதகணத்தோடே
ஆடுமோகூடுமோ — பெண்பாவாய்
நான்ஆனால்எப்போதும் தேவருக்கேவல்செய்வேன்
ராட்சதசங்கையில்லை — என்கோவே

கஉ. சங்கைஏன்என்றாய் குபேரனும்உனக்கொரு
தமையன்என்றாய்அல்லோ — பெண்பாவாய்



தங்கைஆனாலும்என்ன தமையன்ஆனாலும்என்ன
சந்தேகம்உனக்கென்ன — என்கோவே

கங. அங்கவன்பகைவந்தால் சங்கரன்பகைவரும்
எங்கும்பகைஆகுமே — பெண்பாவாய்
திங்கள்சூடியும்மாலும் நான்முகனும்நீஎன்றென்
திஷ்டிக்குக்காணுகின்ற — தென்கோவே

கச. திஷ்டிக்குக்கண்டாலும் ஒருத்திஇருக்கவேறே
தேவைஎன்னசொல்லாய் — பெண்பாவாய்
மட்டுச்சொல்லுகுறாயோ பெருமரம்சுற்றிய
வள்ளிவிடுவதுண்டோ — என்கோவே

கரு. விட்டிடுமோஎன்றாய் விளையாட்டுப்பூசல்இது
வினைப்பூசல்ஆகுமே — பெண்பாவாய்
தட்டுதலைசொல்லி என்னைப்பயம்உறுத்தி
தடுத்துவிட்டிடல்ஆமோ — என்கோவே

கசு. ஒட்டாரம்கட்டாதே இளையோன் அறியாமுன்னே
ஓடிப்பிழைத்துபோவாய் — பெண்பாவாய்
அட்டாதுட்டிகள்பேசி அகற்றுகிறாயோநல்ல
தாகட்டும்பார்க்கிறேன் — என்கோவே

---

## சூர்ப்பநகை தன் உறவை நினைந்து புலம்பல்.

### விருத்தம்.

வாதாடும்சூர்ப்பநகி தன்னைநோக்கி
மணிவண்ணன்எனக்கிந்த மனையாள்சீதை
போதாதோஓர்உறையில் இரண்டுவாளோ
புறக்காக்கும்தம்பிக்கு மனையாள்இல்லை
நீதானேபோஎனவே சீதைமேலே
நேர்வாளைலட்சுமணன் கூர்வாள்ஏந்தி
காதோடுமூக்கறிந்த பின்னும்பல்லும்
கருகுவாள்உறவைநினைந் துருகுவாளே. (க0)

### ரு. திபதை-கண்டாராகம்-ஆதிதாளம்.

### கண்ணிகள்.

அருமைப்பிறப்பேஅண்ணேன் — ராவணனே-என்னை
அருமைத்தங்கச்சிஎன்ற — ராவணனே-உன்தன்

கருவிழிபோலேகாத்த ராவணனே-என்தன்
  கண்ராவிஎன்னசொல்வேன் ராவணனே

௨. சிங்கம்இருக்கக்குட்டிவசம் ஆமோ-உன்தன்
  செல்வத்தங்கையைஒருவர் தொடப்போமோ-என்னை
அங்கப்பழுதுமனிதன் செய்வானோ-செய்தும்
  அஞ்சாநெஞ்சுபடைத்தும் உய்வானோ

௩. ஊர்க்குருவிஉயரப் பறந்தாலும்-அது
  உகந்தகருடன்ஆமோ ஒருநாளும்-இந்த
பார்க்குள்ளேமனிதர் மிகுந்தாலும்-உன்தன்
  பாததூளுக்கொப்பாரோ எக்காலும்

௪. எட்டுத்திக்கும்உன்பேரைப் பழித்தானே-மனிதன்
  என்னையும்கொண்டையைப் பிடித்திழுத்தானே-அய்யோ
கிட்டிச்செவிஅரிந்து முனைந்தானே-உன்னைக்
  கிள்ளுக்கீரை ஆகவே நினைந்தானே

௫. துணைகும்பகர்ணஇங்கே மேவாயோ-என்றும்
  தூக்கப்போய்பிடித்தநீ ஆவாயோ-அடா
பிணமேகரதூஷணா வாரீரோ-நான்
  பெண்பிறந்துபட்டதைநீர் பாரீரோ

௬. அத்தைமருகன்என்ப திதுதானோ-பிரம்ம
  அஸ்திரம்விட்டால்மனிதன் அழியானோ-இந்திர
சித்தேஎன்போலஉன்தன் முனைபோச்சோதேவேந்
  திரனைச்செயித்ததெல்லாம் விழல்-ஆச்சோ

௭. குட்டிமனிதன்என்னை வதைத்தானே-என்தன்
  குலகலங்கிடவேபோட் டுதைத்தானே-மெள்ள
எட்டிப்பார்த்திவன்அண்ணன் பிரிந்தானே-இவனை
  ஏவிவிட்டறியான்போல் இருந்தானே

௮. இந்திரசந்திராதியர்கள் பணிகேழ்க்க-உலகில்
  எந்தெந்தவீரர்களும் முடிதாழ்க்க-வந்து
பந்திஇருக்கும்உங்கள் சபைநேரே-மூக்குப்
  பறிபோய்நான்வருவேனோ துரைமாரே



## சூர்ப்பநகை ஸ்ரீராமருக்கு மீளவும் இதவுரைத்தல்.

விருத்தம்.

பேய்வடிவாம்அரக்கிஇந்தப் படிஅழுதாள்ராமன்இடம்
  பின்னும்வந்தாள்
தேவரீஅடியாதோ இளையவன்இப்படிசெய்தான்
  செய்தால்என்ன
கோவம்உள்ள இடத்தில்அல்லோ சந்தோஷம்உண்டுஎனைக்
  கூடிக்கொண்டால்
ஆலனுமெத்தவும்உண்டு கேள்என்பார்மருவிஎன்னை
  ஆள்என்பாளே. (௧௧)

௫. தரு-மோகனராகம்-அடதாளசாப்பு.

என்உருவினில்கொஞ்சம்கொய்தீர் எனக்கென்னதாழ்ச்சிநீர்செய்தீர்

அநுபல்லவி.

அன்னியள்ஆகஎன்னைப்பிரிய விடாமல்-என்
அழகுங்கண்டொருவன்னோறு படாமல் (என்)

சரணங்கள்.

௧. நடுப்படையில்போனாலும் வடுப்படாமல்உம்மை
  நானேசுமந்துகொண் டெட்டவோஆரும்
திடுக்கிடவேஉம்மை எதிர்த்தபோர்தலைகளை
  திருகிமலைமலையாக் கொட்டவோ-நல்ல
குடித்தனத்துக்கிவள் ஆகும்ஆகாதென்று
  குறிப்பதின்னம்முட்ட முட்டவோ-கேட்டால்
இப்புச்சிதைக்குக்கொஞ்சம் மூக்கிவளுக்குக்கொஞ்சம்
  என்றவர்க்கும்சரிக் கட்டவோ-எண்ணி(என்)

௨. குற்றம்போலேசெய்து குணம்செய்தீர்என்னைத்தோட்டிக்
  கொள்ளும்காமப்பேயைக் கொல்லவோ-நல்ல
பத்தினிஆகநின் றிராமல்க்காய்கனிகளைப்
  பறித்துக்கொண்டுவாச் சொல்லவோ-உமது
அஸ்தம்பட்டபோதே சொந்தம்ஆனேன்இனி
  அரக்கரைவேரொடும்

புத்திபண்ணிவைத்தூக் கொண்டீர்பொங்கியும்பால்
புறம்போகல்ஆகாதென் றல்லவோ-சாமி(எ)

௯. பதிக்குப்போகும்போதுசீதைக்கும்மேலான
பருவப்பெண்என்முன்னே நிற்கல்ஆம்-எம்
கதிக்குப்பழுதுகண்டால்அடங்காதவளைநாம்
கண்டித்தோம்என்றலைப் பிக்கல்ஆம்-நல்ல
திதுக்கென்னகாண்முட்ட நனைந்தார்க்கிரம்இல்லை
எனக்கும்அப்படியேமெய்ப் பிக்கல்-ஆம்சாமி
அதுக்கல்லஎன்றாலும் அரக்கர்மாயைகள்அவங்
தவள்எனவேகிட்ட வைக்கலாம்-என்றே (எ)

## சூர்ப்பநகை கரனோடே முறையிடல்.

விருத்தம்

பண்ணியசூர்ப்பநகை இந்தப்படியேசொன்னாள்
பாராமல்ஸ்ரீராமன் துரத்திவிட்டான்
அந்நிலையேமூக்கறைச்சிமூளிஆகி
அரக்கிசென்றே அண்ணனுக்காப்பாடுபட்டேன்
பின்னைஒன்றல்பட்டதில்லை உங்களோடே
பெண்பிறந்துபட்டபிழை இதுதான்என்று
மின்னிலைவேல்க்கரன்காலில் மரம்போல்ச்சாய்ந்து
விழுந்திட்டாள்அவன்கேட்க மொழிந்திட்டாளே. (கஉ)

௬. தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பட்டபாடுகேளாய்-கரனேநான்-பட்டபாடுகேளாய்

சரணங்கள்.

க. பட்டபாடுகேளாய் பணைத்ததோளாய் பிடித்தவாளாய்
குட்டிமனிதன்என்னைக் கட்டிவிழுக்கப்பின்னை
பொட்டிப்பாம்புபோலே ஒட்டிஅண்ணனுமே (பட்ட)

உ. ஏற்கும்பெண்ணைக்கண்டஅண்ணனுக்குண்டேஎன்றுகொண்டே
தூக்கப்போனேன்பெண்டு காக்கும்மனிதன்கண்டு
மூக்கும்காதும்ரெண்டும் போக்கடித்துக்கொண்டு (பட்ட)

௩. திருத்தம்ஆனசூரர் இரண்டுவீரர் நராவதாரர்
அரக்கர்வேர்களைந்து நடுக்கவேநினைந்து
இருக்கிறாரேவந்து ஒருத்திபெண்பிறந்து



பங்கம்இன்னம்வேணுமோகாது தோணுமோமூக்குகாணுமோ
லங்கைஆளும்வில்லி தங்கைஆன செல்வி
மங்கையர்க்குள்நல்லி உன்பேரைச்சொல்லி (பட்ட)

---

## கரதூஷணத்திரிசிரர்களின் வதை.

விருத்தம்.

காதலிசூர்ப்பநகி இந்தப்படிக்கோடாலிக்
காம்புகுலத்துக்கேகென்றால்போலப்
பாதகன்ஆம்கரன்முதல் ஆனவர்க்குச்சொல்லிப்
படைக்கடலைமூட்டிவிட் டப்பாலேநின்றாள்
சாதகன்ஆம்ராமச்சந்திரன் சாலைநீங்கிச்
சண்டகோதண்டத்தை வளைத்தைம்பாலே
ஓதம்எனும்அரக்கர்உயிர் முகூர்த்தம்தன்னில்
ஓட்டினான்தருமம்நிலை நாட்டினானே. (கந)

எ. தரு-பந்துவராளிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அடித்தானேரகுராமன் கோதண்டம்கை பிடித்தானேசெயராமன்

அநுபல்லவி.

அடித்தானேரகுராமன் முடுக்கானகாநாமன்
அனுப்பினபதினான்கு முனைத்தலைவரைஆங்கு
அரக்கிகண்காட்டியே பொருக்கெனமூட்டியே
அப்புறத்திலேஒண்டக் கைப்பிடித்தகோதண்ட
அம்பன்கைகளில்வாரி எய்கின்றசரமாரி
அதினால்உரைக்கரும் பதினால்அரக்கரும்
அலைகடல்போல்எழுந் தலைதலைஆய்விழ
ஆனைப்படைமுடியச் சேனைக்கடல்வடிய (அடி)

சரணங்கள்.

க. கரிகள்பலவும்சுற்ற பரிகள்அதிலும்அத்த
கட்டியதேர்களும்ஒத்த நட்டணைவீரரும்மெத்த
கருந்துகளாஅளைந்து பெருங்கடல்போல்வளைந்து
காகுத்தன்சாலையைப்பற்றி மேகத்தைப்போலவேகத்தி
கங்குகங்காய்முனைதரப் பொங்கிஅங்கேவரவரக்
கதிகாணவரப் பதினாலாயிரக்

கனகத்தேரோடும்கூடி கதிரவனைப்
பனிமொய்த்ததெனமூடி ராமனைமொய்த்துக்

கரனும்தூஷணன்திரி சிரனும்வர அரக்கி
களிப்பாகக்காட்டினளே நமனும்பசி
இளைப்பாறமூட்டினளே அத்தைராகவன்

கண்டானே தம்பியைக் கொண்டானே ஒருமனு
கார்த்திருசனகிதன்னை இந்தச்சண்டையைப்
பார்த்திருமுனையும்என்னை என்றநாணியைக்

காதண்ட இழுத்துமுனைக் கோதண்டம்வளைத்துமழைக்
கற்கடச்சக்கிரன்போலே சரமாரிகள்
உக்கிரம்கொண்டுவிடலாலே வல்அரக்கர்கள்

கரம்அறுந்தவர்களும் சிரம்அறுந்தவர்களும்
கண்டம்கண்டம்ஆனபேரும் கட்டைகள்போலே
துண்டம்துண்டம்ஆனபேரும் இறக்கிக்கட்டும்

கவசங்கள்கிழிந்தோரும் துவசங்கள்கிழிந்தோரும்
கடைவாய்கிழிந்தோரும் பிடித்துவந்த
குடைபோய்அழிந்தோரும் கணைதொடுக்கும்

கைச்சிலைஆனதும்அற்று வச்சஆயுதமும்அற்றுக்
கையைக்கையைப்பிசைவாரும் குற்றுயிர்ஆகிப்
பையப்பையஅசைவாரும் நெற்றிப்பிளந்து

கத்தும்பரிகளும்தலை சுற்றும்பரிகளும்ரத்தம்
கக்கும்பரிகள்அனேகம் குடல்அறுந்து
முக்கும்பரிகள் அநேகம்மதயானைகள்

கைத்தலம்பிளந்துபெரு மத்தகம்பிளந்துவைத்த
காத்திரங்களும்பிளந்து நெருப்புப்போலும்
நேத்திரங்களும்பிளந்து மலைமலையாக்

கதறுண்டுசிதறுண்டு மதகுஞ்சரம்உருண்டு
காடுகளாய்விழுந்ததுகள் கண்ணுக்கெட்டாத
மேடுகளாஎழுந்ததுகள் இவைஅறிந்து

கடித்தானே இருபல்லைப் பிடித்தானே ஒருவில்லைக்
காய்ந்தானே திரிசிரசன் ராகவன்மேலே
பாய்ந்தானேகுணமுரசன் பாய்ந்தவன்தர

கதத்தையும்ஏறிவந்த ரதத்தையும்அய்யன்அவன்
கைச்சிலையும்முறித்துவிட்டான் அவனுடைய
முச்சிரமும்தறித்துவிட்டான் அவன்பிறகே



காத்திருந்தெதிராலே ஏற்றவர்களைமேலைக்
காற்றில்பஞ்சுகள்போலேதூற்றிவிட்டொருகாலே (அடி)

உ. வெற்றிராமன்தொடத்தொட அஸ்திரங்கள்படப்பட
வீட்டில்ஓடுவாரையும்காட்டில்ஓடுவாரையும்
வில்லைவிட்டெறிவாரையும்கொல்லையில்பரிவாரையும்
விலக்கம்கொண்டவரையும்கலக்கம்கொண்டவரையும்
விருத்தம்செய்தீர்என்றும்நாற்கஞ்சினீர்என்றும்
விசைகொண்டதூஷணன்வசைகொண்டபாஷணன்
விசையத்தேர்பூட்டினனேசக்கரம்போலே
திசைஎட்டும்ஓட்டினனேஓட்டிஎதிர்த்து

விட்டவிட்டகணைகளும்தொட்டதொட்டகணைகளும்
வெடிபடநீக்கினனேராமன்அம்பாலே
பொடிபடஆக்கினனேபிறகேவந்த

மேல்படைகளும்புரண்டுகால்படைகளும்திரண்டு
வெகுவாகக்குதித்தாரேஎல்லாரும்ஒரு
முகம்ஆகமிதித்தாரேமிதித்தவர்கள்

வெட்டும்வெட்டும்என்பார்சிலர்கட்டும்கட்டும்என்பார்சிலர்
மெல்லும்என்பார்சிலபேர்நரன்இவனைக்
கொல்லும்என்பார்சிலபேர்அரக்கர்விட்ட


வேல்ஒடிந்துகால்ஒடிந்து கோல்ஒடிந்துதிரப்பெரு
வெள்ளத்தில்மிதப்பாரும்ஆனைவிழுந்த
பள்ளத்தில்பதைப்பாரும்கதிகலங்கி

மெத்தவுள்ளம்கெடநொந்துரத்தவெள்ளம்தனில்வந்து
விழுந்தார்அனேகம்அரக்கர்ரத்தவெறியால்
அழிந்தார்அநேகம்அரக்கர்தூஷணன்கண்டு

விளைத்தானேசெருவில்லைவளைத்தானேகணைசெல்ல
விடுத்தானேமழைபோலேராகவன்அதைத்
தடுத்தானேகணையாலேஅதின்பிறகு

விடுகணைபொடிபடஒருகணைசடிதியில்
மெய்த்தமுனையோடுதொட்டானேசாமிக்குநெற்றி
மத்தியிலேபடவிட்டானேரகுநாயகன்

மீறிஅவன்ஏறிவருந்தேரதிலேசாரதியை
வெட்டினனேகணையைஎய்துகுதிரைகளைக்
கொட்டினனேதலைகள்கொய்துகொய்ததல்லாமல்





வில்லும் துணிந்திட அவன் சொல்லும் துணிந்திடத்தேரை
வேறுவேறுநொறுக்கினானே அவன் கைகாலைக்
கூறுகூறுகநறுக்கினானே நறுக்கினபின்

மின்னும்அவன் எதிர்ஆகப் பின்னும்ஒருகணைபோக
விரல்ஒத்தத்தொடுத்தானே தூஷணனும்
சிரம்அற்றப்படுத்தானே அதனைக்கண்டு

விண்ணுலகில் அனைவரும் மண்ணுலகில்முனிவரும்
வெருள் துன்பம்தீர்ந்தாரே வாழ்த்தொடுபுஷ்ப
வருஷங்கள்சொரிந்தாரே அரக்கர்பட்ட

வெற்றிநல்லோர்தொடுக்க ரத்தவெள்ளாறெடுக்க
விசையமங்களம்பாடத் திசைஎங்கும்கொண்டாட (அடி)

ரு. தத்திவரும்பரிகளும்-சுற்றிவரும்கரிகளும்
தாவிவரும்பெருந்தேரும்-சேவகம்பேசியபேரும்
தளகர்த்தர்வீரரும்-வளம்மிக்கசூரரும்
தண்டுடனேஎதிர்வரும்-மண்டியசேனைதிபரும்
சாரிசாரிஆகவந்தார்-போரிலேமிகமுனைந்தார்
தம்பிதூஷணன்பட்ட-புண்பாடதுமுட்ட
தணல்போலநிவந்தானே சாதிலிங்கம்போல்
இலைக்கண்கள்செவந்தானே செவந்தபின்பு

தாக்கியபுலிபைஒத்து மூக்கிலேவிரலைவைத்துத்
தாழ்ச்சிஇதுஎனநொந்தானே நொந்துபொல்லாத
ராட்சதகானும்வந்தானே வந்துசுற்றிலும்

சதுரங்கதளத்தோடேபணரங்கம்அதைத்தேடி
சாமிராகவனைக்கண்டான் மனிதன்இவன்
ஆம்எனமனதில்க்கொண்டான்-சேனைகள்விட்ட

சக்கரம்இருப்புலக்கை கப்பணம்முசலண்டைபிண்டி
சஸ்திரம்வேலாயுதங்கள் குறித்துவிடும்
அஸ்திரம்சூலாயுதங்கள் பொடிப்பொடியாத்

தறிபட்டும்முறிபட்டும் விலகச்சிலைவளைத்துச்
சாய்த்தானேசரதாரை ரகுநாயகன்
தேய்த்தானேவெகுபேரை வரும்அரக்கர்

தலையைச்சிலையைரத்தின முடியைக்கொடியையெவெட்டிச்
சரித்தானேசிலகணையால் அடிவயிற்றை
எரித்தானேசிலகணையால் இரைக்குவந்த

சாகினியும்டாகினியும் காளிகளும்கூளிகளும்
சதர்கூடிப்பார்த்தாடுமே கவந்தம்அதுக்
கெதிர்ஆகக்கூத்தாடுமே படைகள்எல்லாம்

சரியானதுகண்டுகரன் ஆனவன்மூண்டு
சாஹசங்கள்செய்தானே ஒருகோடியில்
ஆயிரம்அம்பெய்தானே எய்ததுகண்டு

சற்றுநேரத்தில்அய்யன் அத்தனைக்கத்தனைவிட்டு
தவிடாகஊதினனே பின்னையும்சில
அவன்மேலேமோதினனே அரக்கன்அங்கே

சாதித்தகணையாலே ஆதித்தகுலநாதன்
தனுவையும்ஒடித்தானே தவமுனிவர்
மனதையும்மடித்தானே ராமனுக்கு

தடத்தில்பரசுராமன் இடத்தில்பறித்தவில்லைத்
ததியினில்எடுத்தானே வருணன்அங்கே
உதவியாக்கொடுத்தானே கொடுக்கஒரு

சரத்தாலேரகுவீரன் வரத்தாரைபயர்எல்லாம்
தனித்தானேஉளந்தனிலே கரன்சிரத்தைத்
துணித்தானேகளந்தணிலே இப்படிஅந்த

சனஸ்தானவருக்கத்தில் முனைத்தாரைமுகூர்த்தத்தில்
தான்ஒருவனும்ஆக வானவர்துயர்போக (அடித்தானே)

---

## சூர்ப்பநகை ராவணனோடே முறையிடல்.

விருத்தம்.

முடிவரியகரன்படையை முடித்தராமன்
முன்போலச்சாலையில்போய் இருந்தான்இப்பால்
இடிகுரல்சூர்ப்பநகிசென்றாள் இலங்கைதனில்
ஈளறம்பும்அழுதிடாராவணன் முன்வீழ்ந்தாள்
அடிவரலாறுகள்என்ன உன்னைஇந்த
அவமானம்செய்ததென்ன அவர் ஆர்ஏன்ன
கெடிஅரக்கன்குலமுழுதும் வேரைவாங்கிக்
கெடுக்கின்றாள்அரக்கிசொல்லைத் தொடுக்கின்றாளே. (கச)

க. திபதை-தோடிராகம்-ஆதிதாளம.

கண்ணிகள்.

க. கண்டேன்கண்டேன் அடாஅண்ணேன்
காட்டுகிறேன்பஞ்ச வடியிலே-யார்க்கும்



அண்டாநரர்இருக்கிறார்அவர்க்
கவரேகிகர்இந்தப் படியிலே

உ. தருமசீலர்ஆம்அயோத்தி
தசரதமகராஜன் பாலர்ஆம்-அவர்
விருதுகட்டிஅரக்கர்தங்களை
வேர்அறுக்கவந்த காலர்ஆம்

ங. நீதம்தெரிந்தவர்ஆம்அவர்கைக்கு
நேத்தியாஇருவில் அமைந்ததாம்-அதில்
கோதண்டம்அரக்கர்சீவனைக்
குடிக்கவேணும்என்று சமைந்ததாம்

ச. ராமலட்சுமணர்வடிவெலாம்என்
னாலேசொல்லிமுடி போகுமோ-அந்த
காமராசன்வடிவம்அவர்
காலில்தூளுக்கிணை ஆகுமோ

ரு. கிட்டிப்போய்ராமனைஎன்சுகக்
கேளியிலேமையல் கொண்டேனே-அங்கே
திஷ்டிப்பிரியம்ஆனபெண்கள்
சிகாமணிஒருத்தியைக் கண்டேனே

சு. சுந்தரமும்அவள்செவப்பும்
தொட்டிட்டுக்கொள்ளல்ஆம் அண்ணாவேநான்
இந்தவயதினில்என்கண்ணால்
எங்கும்கண்டதில்லை அண்ணாவே

எ. மன்னாஉன்னால்நான்அவளை
வாய்க்கடங்காப்பிடியாய் பிடித்தேனே-ஒரு
சின்னமனிதன்கையால்என்தன்
செவியும்மூக்கும்போக்கடித் தேனே

அ. அந்தோஎன்னாலேபதினால்
ஆயிரம்தேர்க்காரரும் மூண்டாரே-எதிர்
வந்தார்கரன்முதல்ஆனோர்அந்த
மனிதனாலேகால் மாண்டாரே

கூ. செப்புச்சிலையும்அல்ல அந்தப்பெண்
செம்பொற்சிலைவார்த்தாற்போல் இருக்குதே-நான்
ஒப்பெங்குங்காணேன் அவளை
உனக்காம்என்மனம் உருக்காதே

க௦. தாவிப்பிடித்தேனே எனக்குமெள்ளத்
தப்பிவிட்டால்வந் தெடுப்பாயே-அந்த
தேவிஇங்கேவந்தால்உன்னிட
சீவனை ஆகிலும் கொடுப்பாயே

## சூர்ப்பநகி ராவணன்முன் சீதையை வர்ணித்தல்.

விருத்தம்.

கன்னம்அறுந்ததுனக்கென்றும் காணும்போனான்என்றும்இங்கே
பன்னல்ஆமோவிடுவிடுநீ பார்த்தேன்என்றபெண்ணவளைச்
சொன்னஉடனேஉயிர்கிடந்து துடிக்குதடியேசூர்ப்பநகி
இன்னம்ஒருகால்சொல்என்றான் எடுத்தாள்சொல்லத்தொடுத்தாளே.

அ. தரு-சுருட்டிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

காணவேணும் லட்சம்கண்கள்
காணுக்குநிகரோபெண்கள்

அநுபல்லவி.

சேனுலகெங்கும்வாட்டித் திசைஎங்கும்கீர்த்திநாட்டித்
திரியும்ராவணாஉன்தன் இருபதுகண்போதுமோ (காண)

சரணங்கள்.

க. குவளைவிழிகளோபாணம் அவள்தன்வார்த்தை
கொண்டால்அதுவேகல்யாணம்
நவரத்தினதங்கத்தோடுநடையிலே அன்னப்பேடு
அவனிமேல்இல்லைஈடு அவளுக்கவளேசோடு (கா)

உ. தங்கக்கொடிபோல்இடையும் சீவிகவர்ந்து
சாய்ந்தபின்னலின்சடையும்
இங்கிதமிருதுவாக்கியம் இவளேதேவதாயோக்கியம்
மங்கையர்க்குள்ளேசிலாக்கியம் வாய்ச்சால்உன்னதேபாக்கியம்(கா)

ங. தவமுனிஒருத்தன்பெண்டு அவனுக்கேற்ற
தம்பிஒருத்தன் அங்குண்டு
அவளேநல்ஐஸ்வரியம் அவளோநல்லகாம்பீரியம்
அவள்வந்தால்அல்லோவீரியம் அப்போமுடியும்உன்காரியம் (கா)

## மாரீசன் ராவணனை இடித்தல்.

விருத்தம்.

கடுத்ததங்கைஇதுசொல்லச் சீதைமேலே
கருத்தாடக்காமப்பேய் தலைசுற்றாட
உடுப்பதுவும் மறந்தான்சிந்தை
உலைமெழுகானான்அரக்கன்அம்மானேநீ



அடுத்தெனக்குராமன் மனைவியைத்தாஎன்றான்
அதுகேட்டஉடனே நாராசம்காய்ச்சி
நடுச்செவியில்வைத்தாப் போலேமாரீசன்
நடுக்கின்றான்ராவணனைத்தடுக்கின்றானே. (கசு)

கூ. தரு-துசாவந்திராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்னபுத்திநினைத்தாய்அடாஅடாராவணா என்னபுத்திநினைத்தாய்அடா

அநுபல்லவி.

பின்ஒருத்திஅல்லராமன் மன்னவன் தேவியைச்சொல்ல
அன்னவன் அம்பிங்கேசெல்ல உன்இனத்தைஎல்லாம்கொல்ல (எ)

சரணங்கள்

க. புள்ளிப்பொறி வரலாலே-மூங்கில்எறிந்து
வெள்ளிச்சாம்பல் ஆனாற்போலே
கொள்ளிஆய்வந்தாள் உன்தங்கை அள்ளிராமன்கணை இங்கே
தள்ளிவிடும்முன்னேதலை துள்ளிவிடுமேநமக்கு (எ)

உ. இந்தமதிபண்ணல் ஆமோபரதாரத்தைச்
சிந்தையிலும்எண்ணல் ஆமோ
முன்னொருத்திஆசையிட்டான் சந்திரனும்பழிபட்டான்
வந்தகலிகையைத்தொட்டான் இந்திரனும் மகிமைகெட்டான் (எ)

ங. உத்தமிசீதையை உன்னாதே-உன்னினால்அவன்
சற்றிலேவிடுவான் என்னாதே
புத்திரர்தலையும்சேர்ந்த மித்திரர்தலையும்ராம
பத்திரன் அம்புகொய்யும்கொய்யும் சித்திரவதைசெய்யும்செய்யும்

ச. துப்புள்விராதன் இறந்தான்-ராமன்அம்பாலே
அப்படிகரனும் பறந்தான்
இப்படிவாராதேநாடித் தப்புவதல்லவோமோடி
செப்பினேன்உள்ளதுதேடிக் கைப்பொருட்கும்ஏன்கண்ணாடி

ரு. வேலைஇல்லாவேலை யெண்ணினாய் சின்னம்சிறிய
பாலர்கள்யோசனை பண்ணினாய்
கோலம்ஆனசீதைஎன்று காலம்ஆம்அடங்கிஇன்று
காலன்வந்ததைத்தேராமல் மூலகாரணம்பாராமல்(எ)

சு. வேதனையும்சூதும்வாதும் சொன்னேனே-இந்தப்
பேதைமதிபோதும் போதும்

சீதைஎண்ணம்என்னத்தானேவாதை உண்டடாசீமானே
மாதுலன் உனக்குநானே ஏதுஅறிந்துசொன்னேனே (எ)

௭. பைங்கொடிசீதைபோ் சொல்லாதே சொல்லாதே அது
எந்தவிதத்தாலும் பொல்லாதே
லக்திடுமேராமபாணம் என் தன்உரையேபிரமாணம்
என்தலைக்கும்பாயும்பொய்யோ உன்தலைக்குப்பாயும்அய்யோ (எ)

௮. முன்னம்விஸ்வாமித்திர ணுலே-யாகசாலை
தன்னில்வந்துநமன் போலே
அன்னையும்கொன்முன்சுவாகு தன்னையும்கொன்றான்அவனை
உன்னஅதிர்எடுக்குதே இன்னம்நடுநடுக்குதே(எ)

## லட்சுமணர் பொன்மானைப் பொய்யான் என்றல்.

விருத்தம்.

இசையமாரீசன் இந்த வார்த்தைசொன்ஞன்
ராவணனும்சீறிஞன் பொன்மானுப்போய்
அசையவேசீதைவிழிக் கெதிரேநின்முன்
அவளும்ராமனைப்பிடித்துத் தருவாஎன்றாள்
பசையிஞல்லட்சுமணன் பொய்மான்என்முன்
பாராமல்நான் இதனைப் பிடிப்பேன்என்று
விசையராகவன்நடந்தான் வாயைவாயை
மெல்லுவான் தம்பியின்னும் சொல்லுவானே. (௧௭)

௯. திபதை-தன்னியாசிராகம்-அடதாளசாம்பு.

கண்ணிகள்.

௧. வர்ன்னமானும்அல்ல சொர்ன்னமானும்அல்ல
மாயமான்என் சாமி
பின்னைத்தெரியும்இது சும்மைமருட்டவந்த
பெரியகால நேமி

௨. பார்த்தமான்சதல்ல இந்தமான்மடிப்பு
பண்ணவந்த மானே
கூத்துப்பார்க்கப்போன இடத்திற்பேய்ப்பிடித்தால்போல்
குலையுதென்மனம் தானே

௩. ஊழியஞ்செய்கிறநான் இந்தமான்சந்தேகமான்என்
றுள்ளதுசொன்னேன் அய்யனே



ஏழைசொல்அம்பலம் ஏறுமோகட்டளை
இப்படியே செய்வேனே

௪. மானேமாயம்இதுதானே அம்மைகைக்கு
வந்தால்சொர்ன்ன மழையோ
ஏனேபிடித்துத்தா என்றுசொல்லுகிறீா
என்னகாலப் பிழையோ

௫. அந்தஅன்னைசொல்லால் அய்யன்தசரதனும்
அலங்கோலம் ஆனானே
இந்தஅன்னைசொல்லால் என்னமோஅண்ணனுக்கு
ஈதென்று தெரியேனே

௬. அப்போதுவேள்வியில் வந்தமாரீசன்என்றே
அயிர்க்கிறேன் நீஆராய்
தப்பிதம்சொல்லறியேன் அப்புறம்சித்தத்தாந்துச்
சரிப்போனாடி பாராய்

## லட்சுமணர் சீதாதேவியைத் தேற்றல்.

விருத்தம்.

உறும்கருமம்தம்பிஇந்தவண்ணம்சொன்ஞன்
உத்தமன்ராமனும் அந்தமான்பின்ஏகிக்
குறுங்கணையால்எய்தான் மாரீசன்வீழ்போதில்
கூக்குரல்இட்டான் அதனைச்சீதைகேட்டாள்
இரும்கணவன்குரல்இதைப்போய் அறிநீஎன்றாள்
என்னஅன்னே அண்ணனை என்சொன்னீர்இந்த
வெறுங்கவலைஏன்என லட்சுமணன்துன்பம்
விடச்சொல்வான்சீதையைத் தேறிடச்சொல்வானே. (௧௮)


௧௦. தரு-பைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆர்என்றுராகவனைஎண்ணினீர் சும்மா—இத்தை
அறிந்துசொன்னீரோஅறியீரோநீர் அம்மா

அநுபல்லவி.

ஏராதவார்த்தைஇது வசையோடொக்குமே போரில்
எண்டிசைஅதிபரும் அண்டினபடையுடன்
மண்டினுலும்என்அண்ணன் கண்டுவிரல்போதாதோ (ஆர்)





சரணங்கள்.

க. விந்தைஆகவெண்ணெய்க்குப் பல்லுமுளைத்தால்போல
மிஞ்சிராட்சதர்அண்ணன் தன்னைவளைத்தால்
வந்தராமன்அதுகண் டேங்கிஇளைத்தால்வேறே
மந்திரம்என்னஒரு தந்திரம்என்னவானில்
இந்திரன்கதிப்பானோ சந்திரன்உதிப்பானோ (ஆர்)

உ. ஆதிருத்திரன்வில்ஒருவர் ஒடிக்கப்போமோ-அத்தை
அறிந்தும்பெண்புத்தியால் உம்சித்தம்நோமோ
வேதையாஎன்னையும் சோதிக்கல்ஆமோ-நல்ல
வேதண்டம்எனப்பெருங்கோதண்டம் தன்னை-அண்ணன்
காதண்டவளைக்குமுன் மூதண்டம்பிளக்குமே (ஆர்)

௩. பண்ணினமாயையாலே அந்தமாரீசன்-மாளும்
பருவத்தில்அங்கேஒலம் இட்டானேநீசன்
என்னுத்துன்பம் எதுக்கிருக்கிறேன்தாசன்-அவனே
எண்ணினல்ஒருமேகவண்ணன் உடனேநெற்றிக்
கண்ணன்உடனேகூட்டி அண்ணனையும்எண்ணுமல் (ஆர்)

---

## சீதைக்கும் ராவணசந்நியாசிக்கும் சம்வாதம்.

விருத்தம்.

மெள்ளவேஇளையோன்இந்த விதம்சொல்லிநடந்தான் பின்னே
கள்ளம்ஆம்தவசிஆகிக் கடுகிராவணன்தான்வந்தான்
வள்ளலேவாரும்என்றாள் வஞ்சனை அறியாள்ச்சீதை
உள்ளமாமுனிவர்என்றே உரைக்குரைசொல்லுவாளே. (கசு)

அ. திபதை-ஆரபிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. வாரும்என்றவுடனே ராவணசந்நியாசி
வந்துகண்டானே அந்த நாளே
ஆரோநீஎன்று வஞ்சகன்கேட்கவே
அன்னைஎதிரேசொல்லு வாளே

உ. தசரதன்பாலன் தம்பியுடனேபெற்ற
தாய்சொல்லவர்தான்இந்தப் பூமி
இசையும்சானகிஎன்பேர் காகுத்தன்மனைவிநான்
இங்கேஇருக்கிறன்என் சாமி

௩. இந்தவனத்தில்மெத்த பழுத்தபழம்போலவே
எங்கேவந்தீர்தேவர் ஆயே
வந்ததுசொல்லுகிறேன் சந்தோஷம்ஆகச்சற்றே
மனதுவைத்துக்கேளாய் நீயே

௪ பேரால்ப்பெரியவன் ஆயிரம்வேதம்வந்தோன்
பிரம்மதேவனுக்குக்கொட் பேரன்
ஆராலும்அசையாத கயிலாசமலைதன்னை
அசைத்துப்பிடுங்கினகெம் பீரன்

௫. அமைந்ததேவரையும் அஷ்டதிக்குப்பாலரையும்
ஆக்கினையால்அந்தமக ராசன்
சுமந்தநிலையும்சும்மாடுமோத்திரிய
துரைத்தனம்செய்யும்இலங் கேசன்

௬. நலங்களினாலேஅந்த இலங்கைக்குச்சொற்கம்ஒரு
நரகம்போலக்காணும் மாதே
இலங்கையைவிடல்ஆமோ என்னகாலமோநான்
இங்கேவந்தேனேஇப் போதே

௭. சினமிக்கமுனிவாளும் மிகுந்தநாளும்அந்தச்
சிவன்கையில்வாங்கினவன் தானே
மனதுக்கினியபெண்கள் மாணிக்கம்ஒன்றுதேடி
வருந்துகிறான்திவ்விய மானே

௮. வீராதிவீரன் அஷ்டதிக்கெசகந்தங்களை
வெடுக்கென்றொடித்தவச்சிர ஆகன்
ஓரான்காணியா மூன்றுலோகமும்காக்கும்
ஒருத்தன்அரக்கன்கன யோகன்

௯. மூன்றுலோகமும்காக்கும் அரக்கன்என்றீர்அவன்
மூளமுகுலங்களும் நாளை
கீண்டெறியவந்தானே ரகுவீரன்என்றுசொல்லக்
கேளீரோஎங்கள்பெரு மாளை

௧0 பெருமாள்பெருமாள்என்ற மனிதன்வந்தரக்கரைப்
பிடுங்கிஎறிவான்என்றாய் பெண்ணே
ஒருமுசல்க்குட்டிவந்து சிங்கம்தன்னைஅடித்த
உவமைபோல்ஆச்சுகாணும் கண்ணே

௧௧. உவமைஎன்றீர்காணும் பதினாயிரவரும்
உருண்டாரேமனிதனால் அய்ய



இவர்ராவணன்போல் இருபதுதோளர்அல்லாமையால்
இறந்தார்மனிதன்கொலை செய்ய

௧௨. ஆயிரம்தோள்இருந்தும் கார்த்தவீரியன்தன்னை
அடித்தான்மனிதன்அல்லோ முன்னே
தாய்இதுசொன்னவுடன் சந்நாசிவேஷம்விட்டுச்
சண்டாளன்எழுந்தானே பின்னே

௧௩. தீமுகன்ஆய்அரக்கன் ஆகாதவார்த்தைசொல்லச்
செவியில்க்கைவைத்தேஅந்த
ஓமபிண்டத்தமுதை நாய்இச்சைபட்டதுபோல்
உரைத்தாய்என்னடாஅட பாவி

௧௪. நின்றநிலைக்கேதப்பிஓடி அப்புறம்போடா
ரெகுவீரன்பிழைக்கலொட் டானே
என்றவுடன்சீதையை நிலத்தோடேதூக்கிவஞ்சன்
எடுத்துத்தேரினில்இட் டானே

---

## சடாயு ராவணனுக்குப் புத்திசொல்லுதல்.

விருத்தம்.

தேரினில்இப்படிசீதைதனைக் கொண்டுபோம்அளவில்ச்சீறிவந்து
போரினில்இராவணுபத்துமுடியும் தெரிக்கப்புடைப்பேன்கண்டாய்
பேரியல்சீதையைவிட்டால்ப் பிழைப்பாய் இல்லாவிட்டால்ப்பிழையாய்
வீரியமாய்ச்சடாயுவந்துகிளம்பினன் புத்திசிலவிளம்பினனே. [என்று

௧௧. தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

விடுவிடடாசீதையை விடுவிடடா-ராவணா
விடுவிடடாசும்மா விடுவிடடா

அநுபல்லவி.

சுடுநெருப்பிவளாலே அடியோடேவேகாதே
சுருபத்தைத்தெரியாமல் நரகத்தில்மூழ்காதே
அடடாசொன்னேன்சொன்னேன் நடுவிலேசாகாதே
ஆசையினாலேகுல நாசம்ஆய்ப்போகாதே(விடு)

சரணங்கள்.

௧. என்செய்தாய்இவளைநஞ்சம் என்றெண்ணாமல்
ஏழைஎளிமையாக் குறியாதே
என்தாய்இவள்மனம்நொந்தால் இருப்பாயோ
என்தன்வார்த்தைகேள் முறியாதே

கொஞ்சஅரக்கர்மான்குட்டிஎன்றும்ராமன்
குட்டிசிங்கம்என்றும் அறியாதே
குதிக்கிறாய்உங்களைவதைக்கவந்தானே அவன்
கொல்லவரும்யானைமுன்னேகல்லுகள்விட்டெறியாதே (விடு)

உ. கர்த்தர்மூவருக்கும்கர்த்தன் ஆகும்இந்தக்
காகுத்தன்என்றுகொண் டாடுவேன்
கையாலேநீஎய்வதெல்லாம்சிறைக்
காற்றில்ப்பஞ்சுபஞ்சாச் சாடுவேன்
பத்தினிதனை இங்கே வைத்துப்போடாஅவன்
பக்கத்தில்நானேகொண் டோடுவேன்
பார்அடா இல்லாவிட்டால்க்கூர் ஆனநகத்தால்உன்
பத்துத்தலைகளும்கிள்ளிப்பத்துத்திக்கிலும்போடுவேன் (விடு)

ஙு. கைக்குள்ளேமடக்கி இக்கணமேநான்ஒரு
மிக்கஉறிஞ்சுவேன்உன் தலைமூளை
கருங்காக்கைகளுக்கும் நமனுக்கும்உன்னைநல்ல
விருந்தாக்குவேன்பாரடா இவ்வேளை
முக்கண்ணன்வரம்பெற்றும் அக்கிரமம்செய்தால்அது
தக்குமோகேடல்ல வோநானே
முனைகெட்டுப்போவாய்சீதை தனைவிட்டுப்போடாதேவர்
முன்கொடுத்தவரம்எல்லாம்ஏன்கெடுக்கிறாய் முட்டாளே. ()

---

## சடாயுவுக்கும் ராவணனுக்கும் உயுத்தம்.

### விருத்தம்.

பொறுத்தான் இந்தப்புத்திசொல்லப் பொல்லாஅரக்கன்கொள்ளமல்
வெறுத்தான்அதற்கப்புறம்தேரை விடும்போதினிலேநெடுந்தூரம்
குறித்தேபோனகுமாரர்வந்து கூடும்அளவும்இவனைஇங்கே
மறிப்பேன்என்றுசடாயுவும்வாய் மடித்தான்சண்டைபிடித்தானே (உ०)

கஉ. தரு-மத்தியமாவதிராகம்-அடதாளசப்பு.

பல்லவி.

கொத்திக்கொத்திஅடித்தானே இடித்தானேசடாயுராசன்
கொத்திக்கொத்திஅடித்தானே.

அநுபல்லவி.

பத்துச்சிரத்திலும் தாளிலும்தோளிலும்
வெற்றிக்கரத்திலும் மாரிலும்தேரிலும்



தத்தித்தத்திப்பறந் தெத்திஎத்திக்கையால்
குத்திக்குத்திஎங்கும் சுற்றிச்சுற்றிமூக்கால்(கொ)

சரணங்கள்.

க. ஆலகாலம்போலேசீறிஎதிர்த்தே உடம்பெங்கும்கீறி
கோலாகலத்தேரைமறித்து அச்சைமுறித்துப்பத்து முடியும்பறித்து
காலாலும்கையாலும் மேலேகிள்ளிக்கிள்ளி
கண்டகன்காலைந்து குண்டலமும்தள்ளி
மேல்வரும்அம்பெல்லாம் வாலால்விழத்தட்டி
வீணைக்கொடியையும் தூணியையும்வெட்டி (கொ)

உ. ஈர் ஏழுகணை அவன்தொடுத்துவிடத்தடுத்துக்கவசத்தையும்கெடுத்து
நேராப்பின்நூறம்பைப்பூட்டி விடமாட்டிச்சிறகால்விழக்காட்டி
போராடக்கண்டொரு சூலம்அவன்போட
புதையாமலேஅது சிதறிஅப்பால்ஓட
கூர்ஆனமூக்காலே பாகனைமடித்து
கொல்லுவேன்என்றவன் வில்லையும்ஒடித்து(கொ)

ங. மோதுமவன்தெண்டால்ச்சாய்ந்துகளை நீந்துகுதிரைகளைப்பாய்ந்து
பாதகனைவிழத்தாக்கிக்களை ஆக்கிமணிரதத்தைப்போக்கி
சூதிவன் செய்கிறான் என்றறியப்பட்டும்
தோழன்மருமகன் என்கிறதைத்தொட்டும்
காதகராவணன் மோதிஅறவெட்டும்
கத்தியினால்ச்சிற சற்றுவிழும்மட்டும்(கொ)

---

## சடாயு விழவே சீதை புலம்பல்.

### விருத்தம்.

அடித்தநம் சடாயுராசன் அவனிமேல் வீழ்ந்தாள்சீதை
கொடிக்கொரு கொழுக்கொம்பில்லாக் கொள்கைபோல் ஆனாள் இந்த
முடித்தலை பத்துள்ளானை முடிப்பதார் எனவேஅச்சம்
பிடித்தனள் வடித்தகண்ணீர் பெருகினாள் உருகினாளே. (உஉ)

கங. தரு-ஆனந்தபைரவிராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

என்செய்வேன்சீதை நான்இனிமேல்
ஏன்செய்வேன்தெய்வமே

அநுபல்லவி

என்செய்வேன்மான்பின்போன இருவீரும்வாரீரோ
வஞ்சகராவணன்செய் வகைமோசம்பாரீரோ(என்)

சரணங்கள்.

க. எய்தும்வீட்டினில் இருஎன்றுசாமிசொல்ல
இருந்தேன் இல்லைநானே
மையலாஎன்னைப் பிரித்திடச்சனிபோலே
வந்ததே பாழ்மானே
கையினுல்ப்பிடியும் என்றதல்லாமல்நான்
கண்டேனே பலன்தானே
அய்யய்யோ உண்ணுமல்த்தின்னுமல்ஊர்
அம்பலம் ஆனேனே(என்)

உ. ஈனராவணன் கெலிக்கச்சடாயுமன்னன்
இறந்ததுஎன்ன தொல்லையே
ஆனபோதிவன் குடிக்கென்னகாலமோ
அறிவேனே சாமியில்லையே
வானமேவனமே அவருக்குச்சொல்ல
மாட்டீரோ என்சொல்லையே
ஏன்என்றுகேட்பார் இல்லையேஎன்னை
எடுத்துமி ழிப்பார்இல்லையே(என்)

ங. பூட்டும்வில்இளை யோனை இடும்புசொல்லிப்
போபோ என்றேனே
தாஷ்டிகராவண சந்நியாசிசெய்த
சதிக்குள்ளாய் நின்றேனே
வீட்டிலேபுகுந்தேன் அந்தமாமனை
விதிபோலே தின்றேனே
காட்டிலேபுகுந்தேன் இந்தமாமனைக்
கண்முன்னே கொன்றேனே(என்)

## ஸ்ரீராமர் சீதைக்காகத் தம்பியோடு இரங்கல்.

விருத்தம்.

இஷ்டம்உள்ளசடாயுவுக்கிவ் வாறுசீதை
இரக்கஅவளுடன் அரக்கன் இலங்கைசேர்ந்தான்
மொட்டவிரும்அசோகவனச் சிறையில்வைத்தான்
முன்போனதம்பிதன்னை அண்ணன்கண்டான்
பட்டபருவங்கள்எல்லாம் அறிந்தான்வந்து
பன்னகசாலையையும் சீதையையும்காணுன்
வட்டமலர்முகம்வாடித் தேடித்தேடி
மலங்கினுன்ஸ்ரீராமன் கலங்கினுனே. (உகூ)

க. திபதை-ஆகிரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. உற்றசீதையைப்பிரிந்தேன் உனதுபுத்தியைஅறிந்தேன்
தத்துகள்எல்லாம் அறிந்தேன் தம்பீ லட்சுமணு

உ. கட்டிவைத்தபுதையலைக் கல்லிஎடுத்தவன்போலத்
தட்டிக்கொண்டுபோனுன் அய்யோ தம்பீ லட்சுமணு

ங. நன்மைசெய்யவந்தோம் இதுகன்மம்ஆய்விளைந்தபோது
தன்மம்என்னதானம் என்ன தம்பீ லட்சுமணு

ச. தேரோடேபாரோடேதூக்கித் தீண்டாமல்த்தெற்குவழியே
ஆரோகொண்டுபோறுன்இத்தை அறிவாய்லட்சுமணு

ரு. நலம்உள்ளோர்கவலைதீர்க்க நாம்இந்தகவலைஏற்கத்
தலைஎழுத்துவந்ததல்லோ தம்பீ லட்சுமணு

சு. உண்டானுல்இப்போதேநேரே ஓட்டமாஓடினுல்த்தேரைக்
கண்டாலும்காணல்ஆம்வாஎன் கண்ணே லட்சுமணு

## ஸ்ரீராமர் ; சடாயுவின்மேலே விழுந்து இரங்கல்.

விருத்தம்.

இவர்இப்படியோசனைபண்ணி இருயோசனைதூரம்போனுர்
எதிரேவில்லொன்றதுகண்டார் இற்றுக்கிடந்ததூணிகண்டார்
கவசம்கிடந்தொன்றுகண்டார் கண்டார்சூலம்கொடிகண்டார்
கடுந்தேரொடுசாரதிமுடியைக் கண்டார்இந்தப்படிதோற்றே
அவசம்பிறக்கராவணனை அடித்துத்துரத்தும்இடம்கண்டார்
அவன்ஆயுதங்கள்ஒடிந்தஎல்லாம் அங்கேகண்டார்பிறகிவற்றின்
விவரம்கண்டார்ராமன்வந்து வீழ்ந்தசடாயுகிடைகண்டான்
வெள்ளிமலைமேல்க்கருமலைபோல்விழைந்தான் விழுந்துகரைந்தானே

கச. தரு-புன்னுகவராளிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவிதிகாணவோ வந்தேன்சடாயு-அய்யா
இதுக்கோநான்பிள்ளைபிறந்தேன்

அநுபல்லவி.

தந்தகப்பனைக்கொல்லச் சமைந்தேன் அதென்ன சொல்ல
இந்நாள் உன்னையும்நல்ல எவன்போலேகொன்றேன் அல்லோ (இ)

சரணங்கள்.

க. வண்மைஆம் சீதையைநீக்கினேன்-நானும்ஒருசே
வகன்போல வில்லும்தூக்கினேன்-அய்யா இப்போதென்
கண்முன்னே உன்னையும் போக்கினேன்-மரமீதேரிக்
கைவிட்டோன்போல் என்னை ஆக்கினேன்-நான் என்னசெய்வேன்

எண்ணினஎண்ணம்எல்லாம்போய் இளக்காரம்ஆய்த்தளர்ந்தேன்
பெண்ணும் அல்லஆணும்அல்ல பெருமரம்போல்வளர்ந்தேன் (இ)

உ. வையகம்தன்னையும் விடுத்தேன்வனத்தில்வந்து
மலைபோலேஉன்னை அடுத்தேன்-தம்பிசொன்னத்தை
அய்யய்யோகேளாமல்த் தடுத்தேன்-என்புத்திதன்னை
அனியாயத்திலே மடுத்தேன்-கபடம்செய்த

பொய்அரக்கனைக்கொல்லாமல்ப்புறம்போய் அல்லோகெடுத்தேன்
கையில்ஆகாதவன்போல்க்கண்டோர் பழிக்கஉடம்பெடுத்தேன் (இ)

ந. என்உயிரைப் போக்கடிப்பேன்-முனிவர்க்குநான்
இசைத்தெப்படி முடிப்பேன்-அண்டங்கள் எல்லாம்
சின்னபின்னம் ஆகஇடிப்பேன்-இதுபார்த்திருந்த
தேவரையும் ஆவிகுடிப்பேன்-என்தனுடனே

முன்னாள் நீசொன்னவீரம்முடித்தாய் அல்லோ இந்நேரம்
என்னால்உண்டோஉபகாரம் ஏதுக்கெடுத்தேன்சரீரம் (இ)

## ஸ்ரீராமர் கோபத்தைச் சடாயு ஆற்றுதல்.

விருத்தம்.

மதிமுகராகவன் இரங்கத்தம்பிவந்த
வரலாறெல்லாஞ்சொல்ல மண்ணும்விண்ணும்
கொதிஎடுக்கச்சீதைதனை எடுத்தான்உன்னைக்
கொலைசெய்தான்அரக்கன் அவன்குலத்துவாசி
அதுகிடக்கஉன்கொலைபார்த் திருந்ததேவர்
அனைவரையும்மடிப்பேன் என்றராமன்சீற
இதுஉனக்குமுறைமைஅல்ல மகனேஎன்ன
ஏற்றவான்சடாயுமன்னன் ஆற்றவானே. (உ௫)



கரு. தரு-துசாவந்திராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ராமாநீஇந்தக்கோபம்செய்யல் ஆமா
இருந்தல்லோபடுக்கவேணும் ராமா

அநுபல்லவி.

பூமிஉடன்சீதையை ராவணன் கொண்டுமீண்டாய்
போகையில்சண்டைபோடப் போச்சுதென் சிறைரண்டாய்
ஆம் அவனைக்கொல்லாமல் நாம்விடுவோமோகண்டாய்
அதுக்குமுன்கிலேசத்தாலே பதட்டம்ஆகஒருக்காலே (ரா)

சரணங்கள்.

க. இன்பம்வருவதும் துன்பம்வருவதும்
எடுத்தஉடற்குநிலை வரம்தானே
சம்புவானசிவன் தானும்தலைஓட்டைத்
தன்கையிலேந்திக்கொண் டிரந்தானே
அம்புவிபடைத்தபிரம்மதேவனும்
அறப்புண்டானேஒரு சிரம்தானே
நம்பும்சந்திரனும் சூரியனும்பாம்பாலே
நடுங்கிறார்இன்னம்நிரந் தரம்தானே
உன்பிழையும்இந்தவகை ஒத்ததல்லோ ஆகையாலே
அம்பினால்ராவணன் தலைஅறப்பாய்பனங் குலைபோலே
தம்பிள்ளைபெண்டுகளோடே தாழ்ந்துநின்றொருகாலே
வெம்பதராய் அரக்கர்க்குவேலைசெய்யும் தேவாமேலே (ரா)

உ. சேனைஇந்திரனுக்கும் தேவர்க்கும்உயிர்நிலை
செய்ததுனது தந்தை உபகாரம்
ஆனைகெட்டவன் குடத்தில்தேடினல்ப்போல்
ஆவலைவெறுத்தால்உண் டோசாரம்
ஈனராவணன் சீதையைக்கொண்டுபோய்
எவ்விடத்தில்வைத்தானோ இந்நேரம்

போனதிசைதேடி அவனைவேரறுத்துப்
புண்ணியத்தைநாட்டுவ துன்பாரம்
மானினைத்தொடர்ந்துபின்னேபோனதென் ன அலங்கோலம்
போனதனால்வந்ததிந்த சானகிபிரிந்தசீலம்
சானகிபிரிவரக்கர் ஆனவர்க்குநாசகாலம்
ஆனதனால்தேவருக்குநீநினைப்பாய் அனுகூலம் (ரா)

௩. வெள்ளிவெண்மதி வளர்வதும்தேய்வதும்
விதியின்பயன்அல்லவோ ஆமோ
உள்ளதொருவர்க்கு நிறைவதும்குறைவதும்
ஊழின்படிஎன்ப தறியாமோ
தெள்ளித்தெளிந்தஎன் கண்ணேஉனக்கினி
தெரியச்சொல்லுவார் எவர்தாமோ
கிள்ளிஎறிகுவாய் ராட்சதச்செடிகளை
கேதம்கொண்டிப்படிஉன் மனம்நோமோ
துள்ளுசமுத்திரம்பொங்கினால் கொள்ளுமோகிணரநேகம்
வள்ளலேஉன்முன்னேலங்கைக்கள்ளர்கட்கெங்கேநிர்வாகம்
என்அளவுநீமுனைந்தால் அள்ளுப்பொடிஆமேலோகம்
மெள்ளஇருந்துபகையைத் தள்ளுவதல்லோவிவேகம் (ரா)

---

## சீதையின் பிரிவாற்றுமல் ஸ்ரீராமர் இரங்கல்.

விருத்தம்.

பொறைஅடையத்தந்தைஇந்த புத்திசொல்லிப்பரமபதம்போகக்கண்டா
விறகுதம்பிஇடக்கண்டான்சாமி சடாயுவுக்குள்ளவிதியும்கண்டான் [ன்
கறைஇருளும்வரக்கண்டான்சீதைமுகக்கமலம்ஒன்றும்காணுன் ஆகி
மறைவுசெய்தார்ஆர்எனவே தியங்கினுன் ஸ்ரீராமனமயங்கினுனே.

௧௦. திபதை-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. நல்லோர்பெரியோர்என்னை வசையும்சொல்லல்ஆச்சே
நடுக்காட்டில்என்னைத்தெய்வம் அகலக்கொண்டுபோச்சே



பொல்லாராவணனைக்கண்டு கலங்கினுளோபேதை
பூனைகண்டகிளிபோலே புலம்பினுளோசீதை

௨. ஆரும்இல்லாதகாட்டில் அதட்டினுளேபாவி
அய்யோநினைக்கநினைக்கப் பதைக்குதேஎன் ஆவி
வாரும்வாரும்என்றென்னைக் கூவிஇரைத்தாளோ
வழிமேலேகண்ணைவைத்துப் பார்த்துக்கரைந்தாளோ

௩. வீடேபர்ன்னசாலைஎன் றெண்ணிஇருந்தேனே
விதிமோசத்தாலேதம்பி விட்டுப்பிரிந்தேனே
காடேமலையேஎன்தன் கவலைதடுக்கீரோ
கண்ணுட்டிப்போனவழி காட்டிக்கொடுக்கீரோ

௪. துளிர்த்தமான்குட்டிவந்தேன் முன்னேநின்றபோதே
சொன்னுனேதம்பிஅதை உண்மையென்யெண்ணுதே
வெளுத்ததெல்லாம்பால்என்றே எண்ணிஅடுத்தேனே
வீட்டுவிளக்கைவெட்ட வெளியில்விடுத்தேனே

௫. அங்கலாய்ப்பாளேசீதை கண்ணைநனைப்பாளே
அரக்கர்க்குப்பயந்தாள் என்றென்னைநினைப்பாளோ
சிங்காரவேட்டைஆட வீணேபோகினேனே
சிறகுபறிகொடுத்த பறவைஆகினேனே

௬. தணிக்காநெருப்பதைப்போலே மூளுதேவிசாரம்
தாரத்தைரட்சியாதான் வீரம்என்னவீரம்
அணைப்பானேசிறக்கால்என் றெண்ணம்எண்ணினேனே
அய்யோசடாயுவுக்கும் பாவம்பண்ணினேனே

---

## கவந்தன் வதையும் துதியும்.

விருத்தம்.

சானகியைஇந்தவண்ணம் நினைந்துராமன்
தநும்பையிலேதம்பியும் தண்ணீர்க்குப்போனுன்
போனவிடத்ததோமுகிமூக் கரிந்துமீண்டான்
புனிதன்இருவரும்கவந்தன் கைக்குள்ஆனுர்

ஆனபிறகவன்உயிரை முடித்தார்அந்த
அரக்கனும்அந்தரத்திலே தேவன்ஆகி
தீனம்இல்லாப்பரமபதம் தனிலேஏறச்
செல்லுவான்சுவாமிதுதி சொல்லுவானே.

௧௧-திபதை-முகாரிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. ஆதியும்ஆகி அநாதியும்ஆய்இந்த
அகிலம்எங்கும்நிறைந் தாயே
பேதகம்இல்லாமல் ஆலந்தளிர்உள்ளே
பிள்ளை ஆகிஉறைந் தாயே

௨. உன்தன்பதத்தைவேண்டித் தவம்செய்வார்கள்இந்த
உலகத்திலேஉள்ள ஞாயம்
எந்தப்பதத்தைவேண்டி நீதவஞ்செய்யவந்தாய்
ஈதென்னகண்கட்டு மாயம்

௩. மூலஆனதும்இல்லை கெர்ப்பக்குறியும்இல்லை
முளைத்தாயேஒரு தூணில்
மலைவாய்உலகத்தோர் பிறந்தான்பிறந்தான்என்பார்
வாய்க்குண்டோஎன்வார்த்தை வீணில்

௪. என்னையேஅறியாத அரக்கன்என்றாயேநீ
இரண்டுசெய்தபிறி வேனோ
உன்னைநீதானும் அறியாயோசாமிநான்
உன்னைஎப்படிஅறி வேனோ

௫. காட்டுவானும்நீயே காணுவானும்நீயே
கற்றாயேஇந்திர சாலம்
போட்டுவிட்டுத்தேடி தவிப்பார்போல்த்தவிக்கிறாய்
போதும்போதும்இந்தக் கோலம்

௬. சூரியகாந்தம்தரு தீபத்தைக்கொண்டந்த
சூரியனைப்பணிவது போலே
ஆரியனேஉன்தன் அனுக்கிரகம்கொண்டுநான்
அறிந்ததைச்சொல்வேன் என்னாலே



௭. எனதுசாபம்தீர்த்தாய் அதுபோல்ச்சவரிஇங்
கிருக்கிறவளைக்காண வேணும்
தனதவள்சொல்லுவாள் சும்மாஇருந்தால்ஒன்றும்
சாதிக்கல்ஆமோசொல்லாய் காணும்

௮. திடமாஅவள்சொன்ன படியேசுக்கிரீவனைச்
சேரும்அவன்உடனே செல்லு
கடல்போல்வானரங்கள் வருமேசனகியைக்
கணத்தில்க்கண்டுவரச் சொல்லு

௯. தடுக்காமல்க்கேளாய்ஓர் சிற்றாள்எட்டாளுக்குச்
சரியல்லோஅறியாயோ நீயே
திடுக்கென்றுசெய்யல்ஆமோ பதறுதகாரியம்
சிதறுதென்வார்த்தை ஆராயே

---

## ஸ்ரீராமர் சவுரிக்கு முத்திஅருளி அப்பால்ஏகல்.

விருத்தம்.

பத்தியாக்கவந்தன்இந்தப் படிசொல்லிக்கதியில்ப்போனான்
சத்தியராமன்பின்னே சவரிஆசிரமத்தில்ப்போனான்
அத்திசைஅமுதுகொண்டான்அவள்உபசாரம்கொண்டான்
முத்தியும்கொடுத்தான்சொன்னமொழிகொண்டான்வழிகொண்டானே

## ஆரணியகாண்டம் முற்றும்.

---

விருத்தம்-௨௮, திபதைகள்-௧௧, தருக்கள்-௧௫, ஆக-௨௬.
பாயிரம் ௧-க்கும் காண்டங்கள் ௩-க்கும் கூடிய
கொச்சகம்-௧, வெண்பா-௨, வசனம்-௧, விருத்தம்-௯௧, ஆக-௯௫.
தோடையம்-௧, திபதை-௨௬, தருக்கள்-௫௮, ஆக-௮௫.

---

சக்கிரவர்த்தித் திருமகனார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

நான்காவது,

# கிஷ்கிந்தா காண்டம்.

## அனுமார் மறைந்துநின்று யோசித்தல்.

விருத்தம்.

சவரிசொன்னவழிபிடித்து ராமனும்தம்பியும்நடக்கத்
தான்கண்டேங்கிக்
கவலைகொண்டுசுக்கிரீவன்விட அனுமான்மறைந்துநின்று
கருதிப்பார்த்தான்
தவவடிவர்வரிசிலையர் புரிசடையர்இளங்குமரர்
தர்மசீலர்
இவர்எவரோஎன்றுசொல்லி நண்ணுவான்யோசனையால்
எண்ணுவானே. (௧)

௧. திபதை-சாரங்கராம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

| | | |
|---|---|---|
| ௧. | இன்னார்இனையார்என்று<br>என்னசெய்தேன்இவர்கள் | தெரியேனே-புண்ணியம்<br>வரத்தானே |
| ௨. | இங்கேஎன்கண்ணின்முன்னே<br>கங்கைகுதித்தால்ப்போலே | உதித்தானே-வந்து<br>குதித்தாரே |
| ௩. | காளைப்பருவத்திந்தக்<br>வேளைக்குத்தக்கவேஷம் | காட்சிதந்தாரே-இவர்<br>கொண்டுவந்தாரே |
| ௪. | தேவர்க்கும்தேவர்இவர்<br>மூவர் இவர்இரண்டு | என்றுசொல்லவோ-அவர்<br>பேர்கள் அல்லவோ |
| ௫. | அசங்காதபலம்உள்ள<br>பசும்புல்த்தேயநடவா | சிலாக்கியவான்கள்-இவர்<br>பாக்கியவான்கள் |
| ௬. | எல்லாவல்லமையும்<br>கல்லாக்கலைகள்எல்லாம் | செய்யஉரியோர்-இவர்<br>கற்றபெரியோர் |



| | | |
|---|---|---|
| ௭. | பிராணசஞ்சீவிபோலே<br>திராணியால்அதைத்தேடி | ஒன்றைவிடுத்தார்-தங்கள்<br>இங்கேஅடுத்தார் |
| ௮. | அடைவானமூப்பிளமை<br>உடலும்நிழலும்போலக் | பூணுகிறாரே-இவர்<br>காணுகிறாரே |
| ௯. | வளைத்தவில்லும்அம்பும்<br>இளைத்தபேரைக்கைதூக்கும் | கைக்கொண்டபடையோர்-இவர்<br>எண்ணம்உடையோர் |
| ௰. | கல்லும்முள்ளும்மல்லிகை<br>செல்லக்குளிருதையோ | மலர்போலே-இவர்<br>வழிமேலே |
| ௧௧. | குடுவம்காடும்செடிக<br>இவரைக்கண்டுபேயுங்கண் | ளும்பரியுதே-அய்யோ<br>ணீர்சொரியுதே |
| ௧௨. | பறவைகளும்கரைந்தும்<br>சிறகைவிரித்துமேலேபந்தல் | முகம்வாடுதே-இவர்க்கு<br>போடுதே |

---

## அனுமார் ஸ்ரீராமருக்கு வரலாறுகூறுதல்.

விருத்தம்.

மாசகலஇந்தவண்ணம் எண்ணிச்சின்ன
வன்னிவடிவுடன்நின்றான் நீஆர்பிள்ளாய்
பேசெனவேவாயுமகன் அனுமான்என்பேர்
பெருமலையில்வாலியினால்ச் சுக்கிரீவன்
ஆசகலஒளித்திருப்பான் தேவரீரை
அறிந்துவரஎன்னைவிட்டான் வந்தேன்என்னத்
தாசரதிசுக்கிரீவன் எங்கேஎன்று
தான்சொல்லவணங்கி அனுமான்சொல்வானே. (௨)

௧. தரு-சுருட்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சுக்ரீவன்பேர்நீர் சொன்னபோதே அவன்
சுகுர்தம்அல்லவோ சுகுர்தம்

அநுபல்லவி

தற்காலத்திலே பாலால்முலைவிம்மத்
தாய்ஆனவள்பிள்ளைபேர்சொல்லி அழைத்தால்ப்போல் (சுக்)

சரணங்கள்.

| | | |
|---|---|---|
| ௧. | பட்டமரம்துளிர்க்கும்உங்கள்<br>பரிந்தீரேஅவனுக்குப்பயம் | வசனத்தாலே<br>உண்டோஇனிமேலே |

வெட்டுணிவாலிஎனும்கோடைகொண் டொருக்காலே
வெதும்பியபயிர்க்கொருமேகம் இரைந்தால்ப்போலே (சுக்)

௨. படைத்தபுவியும்சொந்த மனைவிதன்னையும்விண்டு
பதைக்கிறன்செடிஇல்லாக் கொடிபோலவேதுவண்டு
அடைக்கலம்தந்தால்உமக் கனந்தம்பலன்கள்உண்டு
ஆர்க்குக்கிடைக்கும்உங்கள் அருமைக்கனிவாய்கொண்டு (சுக்)

௩. பலம்மிக்கவாலிஎனும் தறிதும்புக்காளையிலே
பருத்திப்படாப்பாடெல்லாம் பட்டோமேஙீளையிலே
மலைஇற்றுமயிரிலே தொங்குகிறவேளையிலே
வந்தீரேஎன்னதவம் செய்தோம்முன்நாளையிலே (சுக்)

௪. கோரவாலிவிடுக்க வந்தீர்இன்றென்னசங்கை
கொண்டஎங்களைஆண்டு கொள்வதுமநுபங்கே
ஆர்என்றுகேட்கில்உம்மை என்னசொல்வேனேஅங்கே
அடியேனும்அவனிலே அனுப்பவந்தேனேஇங்கே (சுக்)

## அனுமார்தேற்றச் சுக்கிரீவன் சரணம் அடைதல்.

விருத்தம்.

அனுமான்இப்படிசொல்ல அயோத்திதன்னில்
அய்யன்உதித்தது முதலாச்சீதைபோன
மனவேதைகடைசியா நடந்தவாறே
வருந்திஇளையோன்சொல்ல அறிந்துகொண்டான்
கனமானவிசுவரூபம்காண்பித்தான்
கவிக்குலவேந்தனையும் காண்பிப்பேன்என்று
தனதாம்தன்அரசன் உடனேபோய்எல்லாம்
சாற்றினன்அவன்கவலைமாற்றினனே.

௨. திபதை-புன்னகவராளிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. குணசம்பிரமதீரர் ராமலட்சு
மணர்என்றிருவீரர் அவர்தம்மை
மணமாஅடுத்தவர்க்கு மறுசுகம்தேடுமோ
க்ஷணம்ஆகிலும்விட்டுப் பிரியவும்கூடுமோ

௨. கண்டேன்கண்டேனே ஆனந்தம்
கொண்டேன்கொண்டேனே நல்ல



புண்டரீகக்கண்ண னேஅந்தமூத்தவன்
மண்டலீகஅரவே தம்பிவாய்த்தவன்

௩. சத்துருவென்பதுதுடைத்தோர் விசுவா
மித்திரன்கைஅம்புபடைத்தோர் வெகு
வெற்றிமருவுகீர்த்தி பேவியகுணசீலர்
சித்திபெறும்அயோத்தி தெசரதராசன்பாலர்

௪. குடிலத்தாடகைமேலே அம்புபோட
ஒடிபட்டமரம்போலே விழுந்தாளே
அடிவைத்தஉடன்அந்த அகலிகைஎழுந்தாளே
சடிதிக்குள்கௌதமர் சாபமும்ஒழிந்தாளே

௫. ஒடுக்கிஒடுக்கிச்சொன்னாலும் ராமன்கீர்த்தியை
அடக்கப்போகுமோஎன்னாலும் மிதிலையில்
மிடுக்குடன்உருத்திரன் தடக்கையில்அறிந்தானே
எடுத்தால்ப்போல்எடுத்தானே ஒடித்துவிட்டெறிந்தானே

௬. மாமணம்நிறைவேற்றி பரசு
ராமன்கெருவம்மாற்றி அயோத்தி
கோமுடிதன்னைராமன் கொடுத்தானேதம்பிக்கங்கே
நாம்எல்லாம்ஈடேற நடந்துவந்தானேஇங்கே

௭. முன்னேவிராதன்மடிந்தான் ராமன்அம்பாலே
பின்னேகரமுடிந்தான் இது அல்லாமல்
வன்மாரீசனுக்கும் வாளிதொடுக்கல்ஆச்சே
பொன்மான்செத்தஇடம் புல்லுமுளைத்துப்போச்சே

௮. எடுப்புள்ளபெரியோரே கவந்தவனை
அடித்தாரேஎதிர்நேரே இவரே
அடுக்களைக்கிணற்றிலே அமுதம்எழுந்தால்ப்போலே
கிடைத்தாரேஒருவர்க்குக் கிடைக்குமோஇப்பாலே

௯. அலைவாய்த்துரும்பென்னவே நித்தம்நித்தம்
மலைபோல்விசாரம்தின்னவே மெத்தமெத்த
பலநாளிலும்பட்ட பாடெல்லாம்விண்டோமே
நலம்ஆகவாலிக்கொரு நமனையும்கண்டோமே

௧௦. ராசன்மகனேஎண்டா பலபல
யோசனைபண்ணுவேண்டா வரந்தரும்
ஈசுரன்உன்பங்கில் இருந்தானேஇருந்தானே
பூசைசெய்தாய்என்றிப் போதல்லோதெரிந்தேனே

௧௧. சுகம்கண்டுமேவல்ஆமே    அவர்மலர்
முகம்கண்டால்பாவம்போமோ    சுக்கிரீவா
புகுந்தவர்சேவைகாணப்    புத்திமுத்தியும்தரும்
இகபரம்இரண்டிலும்    எதுநினைந்தாலும்வரும்

௧௨. இக்கதைஅன்றுவீறி    அனுமான்சொல்ல
சுக்கிரீவன்மனம்தேறி    யுறப்பட்ட
அக்கணம்ஒருமன    தாகவேதுணிந்தானே
மைக்கடல்வண்ணரா    மனைவந்துபணிந்தானே

௧௩. பணிந்தவன்தன்னைப்பார்த்து    ரகுநாயகன்
அணிந்தகண்கிருபைபூத்து    சுக்கிரீவா
பிணங்கும்வாலிக்குவில்லுபிடித்தேன்    என்றெடுத்தேனே
இணங்கும்உன்னைரட்சிப்பேன்    என்றுகைகொடுத்தேனே

## ஸ்ரீராமர் சுக்கிரீவனுக்கு ஆதரனை சொல்லுதல்.

### விருத்தம்.

சரணம்எனஇப்படியே சுக்கிரீவன்சொல்லச்
சாமிஅபயங்கொடுத்தான் அனுமான்தானும்
முரண்உளவாலிக்கும் ஓர்அரக்கனுக்கும்
முன்புசண்டைவரலாலே தம்பிதன்னை
உரன்அழித்துமண்ணையும் பெண்ணையும்கைகொண்டே
ஓட்டிவிட்டான் இவன்இங்கேஒதுங்கினான்உன்
பரம்எனவேதாரம்எடுத் ததையேஎண்ணிப்
பாவிப்பான்ரகுராமன் கோவிப்பானே. (௪)

௩. திபதை-தோடிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. சுக்கிரீவாஉன்மனக்கிலேசங்கள்
எனக்கேஆம்அது    தீரடா
இக்காலத்தில்முடுக்காம்வாலியை
வைக்கனீஅது    பாரடா

௨ பெருவாலிக்குளதலைசாயக்கணை
பிசகாதப்படி    தொடுக்கிறேன்
அரைநாழிக்குள்ளேமுடிசூடிப்புவி
அரசாளக்குடை    கொடுக்கிறேன்



௩. துடுக்காமனைவியை எடுத்தான்எனஉரை
கெடுத்தாய்அவனைஇங்    நேரமே
கெடுத்தேஅவன்முடி பொடிக்காவிடில்வில்லை
எடுத்தாவதில்என்ன    சாரமே

௪. உடைந்தேசரண்என அடைந்தோர்களைமுற்றும்
தொடர்ந்தாதரித்திட    வேணுமே
கடும்போரினிலேகை விடும்போதினில்இந்த
உடம்பால்என்பலன்    காணுமே

## சீதை ஆபரணங்களைக்கண்டு ஸ்ரீராமர் இரங்கல்.

### விருத்தம்.

அண்ணல்இராகவன் சுக்கிரீவனுக்கிவ்வாறே
அனுக்கிரகித்துவாலி சோதனைக்குவேண்டி
வண்ணமராமரம்ஏழும் அம்பால்எய்து
வழியிலேதுந்துமிதன் எலும்பைக்கண்டு
திண்ணன்எனும்தம்பியினால் கிளம்பிவிட்டுத்
தேரிலேபோம்சீதை முடிந்துபோட்ட
துன்னெனும்ஆபரணங்கள் காட்டக்கண்டு
துடிக்கின்றான்சாமிகுறை படிக்கின்றானே.

௪. திபதை-கண்டாராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. நிணறுதெரிந்த தலைடந்தையர்
தங்களைக்    கொண்டீரோ-இல்லையோ
கணவன்இருந்தும்உடைமைஎறிந்த
பெண்களைக்    கண்டீரோ

௨. அரசிலேமணிமுடிசுமந்துல
கம்கொள    நாடினேனே-ஐயையோ
சிரசிலேசடைமுடிசுமந்தொரு
பெண்பழி    சூடினேனே

௩. தசரதன்தபசுகள்புரிந்துவ
ரும்பாலன்    ஆனேனே-ஐயையோ
மிசைபடும்சுவைஉளகரும்பில்
வெறும்பூ    ஆனேனே

௪. வாரிதிதந்தவர்கங்கைஅழைத்தவர்
மரபில்    வந்தேனே-ஐயையோ

பாரியைஆளுமரட்சணைசெய்யப்
படாமல் மெலிந்தேனே

௫. மங்கைளைப்பார்க்க நான்முகச்சோடைக்கு
மற்றிட்டு தீர்ப்பேனோ
அங்கிங்கும்பார்த்தேன் வனம்பார்த்தேன்இனி
ஆர்முகம் பார்ப்பேனோ

௬. வீண்பணிஇவதுக்கார் என்னைமீட்பவர்
மேல்என் றறிந்தாளோ-ஐயையோ
ஆண்பிள்ளை அல்லநான்பெண்பிள்ளைஎன்றெண்ணி
அணிய எறிந்தாளோ

௭. அவளுக்குநானும்எனக்கவளும்பீட்டும்
ஆரங்கள் பூண்பேனோ-அய்யோ அவள்
பவளக்கனிவாயும் முத்துநகையும்நான்
பரிந்தென்று காண்பேனோ

௮. பணிதிஇலங்கிதுசனகிஅங்கம்நி
றைந்திடச் சேர்வேனோ-ஐயையோ அவள்
குணசௌந்தரியமலர்முகம்கண்டு
கண்களி கூர்வேனோ

௯. குலம்தரும்கொடி உடன் தவம்செய்து
போந்தேன் என்பேனோ-ஐயையோ
இலங்கையில்விட்டு வெறுங்கையாய்வந்து
சேர்ந்தேன் என்பேனோ

௰. இல்லாளைவிட்டுதல்லாண்மைபேசி
இன்னம் இருந்தேனே-ஐயையோ
புல்லாளைச்செய்து கொல்லையிலேவைத்தாற்
போலே இருந்தேனே

---

## ஸ்ரீராமருக்குச் சுக்கிரீவன் துனிவுகூறல்.

விருத்தம்.

இந்தவிதம்ஆகராமச்
சந்திரன்மனம்நோகும்வேளை
தொந்தம்உளசுக்கிரீவ
னுந்துணிவுசெப்புவானே (௬)



௨. தரு-நாட்டை-குறிஞ்சிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஏதுக்குஇந்தவிசாரம் ஏதுக்கித்தனைதூரம் *

அநுபல்லவி.

போதும்பிரம்மாண்டம்அப் புறமும்போய்வருகிறேன்
சீதையைக்கொண்டுவந்து க்ஷணத்திலேதருகிறேன் (ஏது)

சரணங்கள்.

௧. தருமராமரம்எய்தாய் துந்துமிஎலும்பைத்
தம்பியாலே எறிந்தாய்-சாமி
கருதினதுதருவேன் என்பலன் உன்பலம்
களும்நீயே அறிந்தாய்-ராவணன்
ஒருபதுதலைகளும் உன்பெருங்கணைபோலே
திருகிறேன்தருகிறேன் தேவியைக்கையிலே (ஏது)

௨. மின்பணிகாட்டிஉனக்குநான் இந்த
வேதனை காட்டினேன்-சாமி
நின்பெருங்கவலையை நீக்கலேனும்சம்மா
நேரம்பா ராட்டினேன்சாமி
என்குறைமுடிக்கிற தென்னஇதுக்குமுன்னே
உன்குறைமுடிக்கிறேன் ஒருநிமிஷத்தில்சொன்னேன் (ஏது)

௩. சுத்தர்ஆகியமூவர்க்கும் தேவர்க்கும்
சூழுமோ படைக்கூட்டம்-என்படை
மெத்தஉண்டுவரும் வெற்றியும்தரும்இனி
மேல்என்ன முகவாட்டம்
உற்றசீதையைஉதவுகிறேன் இதுநிதானம்
கற்றுக்கற்றுச்சொல்லிஎன்ன காரியம்அல்லோபிரதானம் (ஏது)

## ஸ்ரீராமரை வாலி நிந்தித்தல்.

விருத்தம்.

ராமனை இந்தப்படி சுக்கிரீவன்தேற்ற
நல்அநுமான் வாலியைக்கொன்றிப்போதிந்தக்

---

* இவ்விடத்தில் 'சாமி உனக்கு' என்று வருவித்து 'ஏதுக்கித்தனை தூரம்' என்று ஒட்டி இரட்டித்துப் பாடிக்கொள்க.

கோமகன்சுக்கிரீவன்முடி சூட்டில்எல்லாம்
கூடும்என்றான்சாமியும் அங்கிசைத்தான்அல்பால்
பூமகன்வாலியும்தம்பி தானும்சண்டை
போடையிலேஅய்யன்அம்பு போடச்சாய்ந்து
பேய்முகனுய்வாயில்வந்த தெல்லாம்வாலி
பேசுவான்ராகவனை ஏசுவானே.

௩. தரு-சாரங்கராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ஏன்இந்தமதிகுறித்தாய் மறைந்துவாளி
எடுத்தென்மேல் ஏன்தெறிந்தாய்

அநுபல்லவி.

மானபூஷணன்ஆன தசரதன்உன்னைப்பெற்று
வரங்கள்தந்தது நல்லாய்
குரங்கைவெல்லவோ சொல்லாய் (ஏ)

சரணங்கள்.

௧. நரர்க்கும்வானரர்க்கும்உண் டோதொந்தம்-முன்பின்
ஞாதிவழக்குண்டோசொல் அனுபந்தம்
அரக்கன்அழிவுசெய்தால் பலவந்தம்-ஆகி
ஆயுதம்உல்லாரை அடிப்பதோஉன்சந்தம்
அதுவும்அல்லாமல் ஆண்மைசொல்லாமல்
எதிரில்நில்லாமல் என்னைவெல்லாமல் (ஏ)

௨. வலியமரங்கள்ஏழும் தொளைத்தாயே-அந்த
வலிமைஇருந்தும்எனக் கிளைத்தாயே
கலிராசன்போல்வந்து முளைத்தாயே-நடுக்
காட்டில்மறைந்துவில்லைக் காணாமல்வளைத்தாயே
காரியம்இதுசுத்த கபடம்உனைப்பெற்ற
சூரியகுலம்மெத்தத் துலங்கும்அடபித்த (ஏ)

௩. தன்மம்வளர்க்கவந்த ரகுராமா-பரதன்
தனக்குமூத்தபிள்ளை நீஆமா
உன்மனதுதான்என்ன மிகநோமோ-வாலி
உயிரைக்கொண்டால்ச் சீதைஒழிந்ததுயரம்போமோ
உனக்குஞாயமோ உளஉபாயமோ
எனக்கபாயமோ என்னமாயமோ (ஏ)



## வாலி குற்றங்களை அவனுக்கு ஸ்ரீராமர் விரித்தல்.

விருத்தம்.

இன்னனவாலிசொல்ல இராகவன்அவனைநோக்கி
மின்னையும்கொண்டாய்தம்பி மெதினிதன்னையும்கொண்டாய்
பின்னையும்கொல்லவர்மம் பிடித்திட்டாய்அதனைக்கொண்டே
உன்னைநான்கொல்லனேதா உரைஎன்றான்உரைஎன்றானே.

௪. தரு-அடாணாராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வடிப்பம்வடிப்பமாப்பேசிக்கொள்ளாதேஅடவாலிஉன்
வாயைமூடடா ஏன்டாதுள்ளாதே

அநுபல்லவி.


கடத்தடாசெதெல்லாம் ஆயிரம்நால்அரைக்கால்ப்
பணம்அடாகடை கட்டடா(வடி)

சரணங்கள்.

௧. பிலம்தனிலேநீ புகுந்தபோதில்உன்
பின்பலனுய்இவன் தொடர்ந்ததும்
பேய்அரைகிறல்ப்போலே நீஅறையஇவன்
பின்வாங்கிக்கொண் டடைந்ததும்
தலம்தனிலேஅபவாதம்ஆகத்தம்பி
தாரத்துக்கும்உனக்கும் நடந்ததும்
சாபத்தாலேநீ ஏறுமலைமேலே
தப்பித்தவறிஇவன் அடைந்ததும் சொல்லாமல்(வடி)

௨. வார்த்தைக்குமாத்திரம்குரங்குரூபம்நீதி
வகையும்தொகையும்சொல்லி நிறைக்கிறாய்
மனதாரச்செய்த வினைபோமோவீண்
வார்த்தைகள்ஏன்சொல்லி இறைக்கிறாய்
மூத்தவன்தம்பி தாரம்என்றறிந்தும்
முறைபிசகிநிறை குறைக்கிறாய்
மூடன்போலேவாயாடுகிறாயடா
முழுப்பூசினிக்காயும்சோற்றிலே மறைக்கிறாய்(வடி)

௩. அம்பும்கையுமா எதிர்நின்றால்உன்தன்
அபயம்என்றுவருவாய்என் அடிக்கு





ஆராகிலும்நொந்த பேராகிலும்அடுத்
　　தாரைக்கெடுக்கல்ஆமோஎன் குடிக்கு
தம்பித்துரோகிஉன்னைச் சித்திரவதைசெய்யத்
　　தகுமோநான்பிடித்த பிடிக்கு
தர்மத்துக்குள்ளும் பாதத்துக்குப்புறம்பும்ஆய்
　　சரத்தாலேகொல்லத்தொடுத்தேன்இந்தப்படிக்கு (வடி)

---

## ஸ்ரீராமரை வாலி வரம்கேட்டுக்கொள்ளல்.

விருத்தம்.

மழைநிறத்துராமன் இந்த வாறுசொல்லவாலியும்சம்
　　மதித்தான் இப்பால்
பழையதொருநினைவுகொண்டான் அறிந்தும்அறியாமலும்நான்
　　பதரிச்சொன்னேன்
தழையும்மகன்சுக்கிரீவன் அனுமன்உனதடைக்கலம்என்
　　சாமிஎன்தன்
பிழைபொறுப்பாய்எனச்சொல்லிக் கூசுவான்மனுலொன்று
　　பேசுவானே (சு)

ரு. தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சாமிரகுராமா இவர்கள்உன் தஞ்சம்ரகுராமா

அநுபல்லவி.

ஆம்இவரால்என்னகாணும் ஆகிலும்ராசாங்கம்வேணும்
நீமாத்திரம்வெல்லநினைந்தால்க்காரியம்அல்ல (சாமி)

சரணங்கள்.

க. எனதுமகன்அங்கதன்தான் உனதுபகையைவாட்டுவான்
　　ராட்சதகுலங்களை உபேட்சைஇல்லாமல்மாட்டுவான்
அனுமந்தன்உன்தன்கோதண்டம்என விசயங்கள்காட்டுவான்
　　அந்தராவணனைஎன்போலத் தொங்தொம்தொங்தொம்என்
(ருட்டுவான் சாமி)

உ. அந்தத்தில்உன்தனைக்காணத் தந்தானேஇதுஅல்லாதே
　　அநித்தியம்தனக்கும்நித்தியம் எனக்குதந்தானேஇப்போதே
என்தம்பிசுக்கிரீவன் பிழைதந்தாலும்கிருபைவிடாதே
　　என்மேலேகொடுத்தஅம்பை எடுத்தவன்மேலேகொடாதே (

ங. நெடுந்தவம்ஏதோஎன்சீவன்விடும் போதுகண்டேன்உன்காட்சி
நினைக்கொணுப்பரமபதம் எனக்கல்லவோகாணியாட்சி
அடங்கலும்ரட்சிக்கவந்து தொடங்கினநீசர்வசாட்சி
ஆள்இல்லாப்படைவெட்டுமோஅய்யா உனக்குண்டோதாழ்ச்சி(சாமி)

---

## வாலி சுக்கிரீவனுக்கு மதிசொல்லுதல்.

விருத்தம்.

இன்னவாறுசாமிதன்னை இரங்கிவரம்கொண்டிடும்வாலி
பின்னைஇளையசுக்கிரீவன் பெருமாமுகத்தைமிகநோக்கிச்
சொன்னேன்இதுநீகேள்என்றான் சுவாமிராமன்இவன்பணியை
என்னேரமும்செய்என அவனை இரந்தான்தனக்கோர்வரம்தானே. (கா)

க. தரு-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ஆதிதேவனே ஸ்ரீராமன்என் றறிசுக்கிரீவனே

அநு பல்லவி.

வேதசாஸ்திர புராணம்எல்லாம்கூடி
விரிப்பதும் இவனைச்சொல்லத்தரிப்பதும் இவனைநல்ல(ஆதி)

சரணங்கள்

க. அடைஉடன்இவன்கையில்விழுமுக்தி
ஆருமோ நித்தியம்-பணி
விடைசெய்தால்க்குறை உண்டோஉனக்கிது
வேஅல்லோ பத்தியம்-வேறே
தொடரும்தெய்வங்கள் என்பதெல்லாம்சும்மா
சொல்வதேதநி நிமித்தியம்-ஒன்றும்
தடையில்லாபிரம் மாதிகிர்த்தியம்எல்லாம்
தப்பாதிவன்கிர்த்தியம் அையாசொன்னேன்சத்தியம் (ஆ)

உ. மதிஅரசுகொண்டதில்மதம்கொண்டு
மயக்கம் பண்ணாதே-எங்கும்
எதிர்இல்லாஎன்னைக் கொன்றான்இவன்போலே
ஈடு நண்ணாதே-ஐயன்
உதவியைஅடிக்கடிஎண்ணவேணும்
ஒழிக்க ஒண்ணாதே-நன்றி



சிதறிஇவன்ஓர் மனிதன்ஆம்என்று
திருக்கானபுத்தியை ஒருக்காலும் எண்ணாதே(ஆதி)

ச. அகலாமல்அணுகாமல்ச்சாமியை
அநுதினமும் சுற்றி-இவன்
மகிழ்வாகஇட்ட வேலைகள்செய்து
வருவதே பத்தி-இத்தை
இகழாதுகொண்டால் இதுவேசித்தி
இதுஅல்லோ வெற்றி-சொல்லி
உருகுவதேன்இனி சகலபாக்கியமும்
உறுவாய்பரமபதமும் பெறுவாய்இதுவேபுத்தி(ஆதி)

---

## வாலி இறந்தபின் தாரை புலம்பல்.

விருத்தம்

வாலிஇந்தவரங்கொண்டு வளர்வைகுந்தபதம்சேர்ந்தான்
வேலின்நெடுங்கண்உள தாரை மின்னல்க்கொடிபோலேகணவன்
பாலில்விழுந்தாள்வானரபூபதியேகெதியார்எனக்கென்று
மேலில்விழுந்தாள்நெடுமூச்சு விடுத்தாள்புலம்பத்தொடுத்தாளே. (கக)

ரு. திபதை-கெண்டாராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. மன்னவனேஎங்கள்வாலியேநல்லவானர பூபதியே
இன்னவேளைஇந்தமரணம்உனக்கென்று இருந்ததோதலைவிதியே

உ. இறவாமருந்தையும்தருவாயேநீஎப்படி இறந்தாயோ
மறவாதேசிவபூசைசெய்கின்றவழிபாடு மறந்தாயோ

ங. ஆனைக்கும்அடிசறுக்கும்தள்ளிவிழல்ஆகா தென்றேனே
சேனைத்துரையேநான்உன்னைகொடுத்திங்கே தெருவிலேநின்றேனே

ச. என்உயிர்நீஆனால்உன்மேலேபாய்ந்தகணை என்மேலேபாயாதோ
உன்உயிர்நான்ஆனால்உன்உயிரோடே என்உயிர்கூடமாயாதோ

ரு. விந்தைமனிதன்கைக்குநீயும்விழுவாயோ வேறொருவாலிஉண்டோ
என்தன்உயிர்இன்னம்இருக்குதேஐயோ என்னைப்போல்நீலிஉண்டோ

சு. மறைந்துராமன்கணைதொடுக்காமல் உன்மேல்வழக்குதொடுத்தாலே
குறைந்திடாக்கடல்கடைந்தமுதமும் நீகொடுப்பாயேகைமேலே

எ. செய்நன்றிஅறியாரோகாலர்தூதர் என்னதேவரோமறுபேரோ
ஐயையோஅவர்க்கமுதம்உன்னைப்போல் ஆர்இனித்தருவாரோ.

௮. நான்அடிஉந்தன்பிராணாதன்என்ற நம்பிக்கைபொய்போமோ
வானரம்பையர்மேல்ஆசைகொண்டென்னை மறந்துவிட்டோடல்ஆமோ

௯. வன்னமேருமுதல்மலையில்உன்கால்வைத்தவடுவுகள்இனிப்போச்சே
நின்னைமறைந்தம்புபோட்டராகவன்நீதிக்கு வடுவாச்சே

௧௦. மறந்தமுதுதந்தசாமிவந்தான்என்றுமகிழ்ந்து தேவர்கண்டாரோ
விருந்தமுதுசெய்யவாஎன்றேஉன்னைவேண்டிஎதிர் கொண்டாரோ

## ஸ்ரீராமர் சுக்கிரீவனுக்கு ராசநீதி கூறுதல்.

விருத்தம்.

கொம்பனையாள்தாரைஇவ்வாறகன்றாங்கதன்ஐயன்கூர்வாள்கொண்டான்
தம்பிஇளையவன்கையால்முடிசூட்டச் சுக்கிரீவன்தரித்துக்கொண்டான்
பின்புரகுராமன்இருபதத்தினில்வந் தவன்பணிந்தான்பிறகுசாமி
அம்புவியைஆளும்வகைதெருளுவான் புத்திசொல்லிஅருளுவானே.

௭. தரு-சௌராஷ்டிரராகம் அடதாளசாப்பு.

பல்லவி.

அரசுசெய்வதென்ன எறிந்துபோட்ட தல்லடாசுக்கிரீவா

அநுபல்லவி.

நிருபன்என்றபோதேகெறுவம் மெத்தகாணும்
நெருப்பாரும்மயிர்ப்பாலமுமா நடக்கவேணும் (அரசு)

சரணங்கள்.

௧. கோலமன்னவருக்குச் சதுரங்கம்-செங்
கோலைப்போலேத்தருமோ உத்துங்கம்
நாலுதிசைக்கும்உள்ள ஆதங்கம்-தீர்த்து
நடத்தவல்லவன்அல்லோ துரைச்சிங்கம்
ஆலகாலதுஷ்டர் உறவென்றுதள்ளாதே
அனுபானைப்போல்ஒத்த அமைச்சனைவிள்ளாதே
காலம்தெரிந்தபெரி யோர்களைத்தள்ளாதே
கால்போகாஇடத்திலே தலைவிட்டுக்கொள்ளாதே (அரசு)

௨. மங்கையர்களுடனே சூழ்ச்சி-கொண்ட
மன்னவர்க்கவமானம் காணியாட்சி
எங்கள்இடத்தில்அந்த அத்தாட்சி-போதும்
இதைவிடஇனிமேவ றேன்சாட்சி



உங்கள்வாலியும்மங் கையாரால்முனைசிந்த
உருண்டானேஅறிந் தாயேமுந்தமுந்த
செங்கோல்கோணினால் எங்கும்கோணும்அந்த
தேசத்துநன்மைதுன்மை ராசருக்கல்லோஇந்த (அ)

௩. பண்ணினதீமையினால் ஒருகூனி-என்னைப்
பரதேசிஆக்கினளே அவதானி
எண்ணிஎளியவரை அதுபோல்நீ-சரியா
எதிரிட்டுக்கொண்டால்அது வேஆனி
உண்மைஆகஇன்னம் உறுதிசொல்வேன்இப்போது
ஒருத்தர்செய்உதவியை மறக்கில்அதுவேதுதீது
மண்ணில்இருந்து வழக்கோரம்சொல்லொணாது
மயிரைப்பிளந்துவிவ காரங்களைஓது (அ)

## ஸ்ரீராமர் கார்காலம் சீதையை நினைந்து இரங்கல்.

விருத்தம்.

மாமகுடம்புனைந்த சுக்கிரீவனுக்கிவ்வாறே
மதிசொல்லிமதங்கமுனி மாலையின்மேலே
ஏமமழைகாலம்எல்லாம் இருந்துசீதை
எண்ணத்தால்ரகுராமன் வண்ணம்மாறிக்
காமலர்ச்சோலையை மயிலைக்குயிலைமானைக்
கானகத்தைப்பார்த்து விரகாக்கினியாலே
வேமுருகுவெண்ணெயைப்போல்க் கரைந்துசிந்தை
விலங்குவான்தனியேதான் கலங்குவானே. (௧௩)

௮. திபதை-நாதநாமக்கிரியைராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. மான்காள் பழிகொண்டீர் பொன்
மான்உருவாய்என்னை வந்துகெடுத்தீர்
நான்அறியாவிதனங்கள்கொடுத்தீர்
கான்காள்வழிசொல்லீர்-இரு
கண்ணைவிட்டுத்திரி வாருண்டுயிர்போலப்
பெண்ணைவிட்டுப்பிரி வார்களும்உண்டோ

௨. மயில்காள்என்றசொல்லீர் சொல்ல
வாய்இலையோஉங்கள் சாயலைநேர்தரு
சேயிழைஆனவள் போயதெவ்வாறோ

குயில்காள்ஒன்றுகூறீர்    சொன்னால்க்
குற்றம்உண்டோஎன தத்தமிஆகிய
பத்தினிசானகி எத்திசைபோனாள்

௯. கிளிகாள்உரையீரோ    ஒரு
கேள்விகேளீர்படி பாவிகளோஎன
தாவியைநேர்தரு தேவிவராளோ    உவர்
அளிகாள்கிருபைஇல்லையோ
தாடுகீறீர்உயிரோடுயிர்ஆனவள்
ஓடுகையால்உயிர் வாடுகிறேனே

௰. காலமேஅவகாலமே    என்தன்
காதலிஆகிய சீதைபிரிந்திட
நீதுணைஆகிய தோதகம்ஏதோ
கோலமேஎன்னகோலமே    வெகு
கொச்சையும்ஆயிற்று லச்சையும்ஆயுயிர்
வைக்கிடவோஇனி லட்சமாறுசொல்

# ஸ்ரீராமரை லட்சுமணர் தேற்றுதல்.

விருத்தம்.

வெம்பியேராமன்இந்த விதம்சொல்லிஇரங்கும்போதில்
எம்பிரானேகதிஎன்ன சிந்தனைகோலம்சாமி
உன்பெருமையைநீகூறாய் உருகுறாய்என்றுசொல்லித்
தம்பிதான்துன்பமெல்லாம் தணிவிப்பான்தணிவிப்பானே. (௪௪)

அ. தரு-யமுனாகல்யாணிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

சாமிஏதையா இந்தவேதை சாமிஏதையா

சரணங்கள்.

௧. பூமிஉள்ளோர்க்கெல்லாம்    ஆதாரராமா
மேனிதில்இப்படி    நினைந்திடல்ஆமோ (சாமி)

௨. சங்கைஎன்உனக்குச்    சமானம்வேறேதோ
உன்கையில்கோதண்டம்    ஒன்றும்போதாதோ (சாமி)

௩. அடிப்பாரோராட்சதர்    அதிகமோஆழி
கடிக்குமென்றறி    கலங்குமோகாடு (சாமி)

௪. உன்மகிமைஅறியாய்    உருகுறாய்இங்கே
பிரம்மாதிதேவர்க்கும்    பிழைப்பினிஎங்கே (சாமி)



௫. உதவிசெய்வோர்க்கிடை    யூறுண்டோகாணும்
பதறாதிருந்தல்லோ    படுத்திடவேணும் (சாமி)

௬. அனுமாதிகள்பலம்    அறியாயோசாமி
நினைவுநீகலங்கினால்    நிற்குமோபூமி (சாமி)

௭. சொன்னேன்குறைஇல்லை    சுகம்இனிமேதே
அன்னைசீதையும்வரல்    ஆச்சுதிப்போதே (சாமி)

# சுக்கிரீவன் தாமசம்கண்டு ஸ்ரீராமர் கோபித்தல்.

விருத்தம்.

மதிமான்ஆனதம்பிஇந்த வகையேசொல்லராமச்சந்திரன்
இதிலேதெளிந்தசானகிபோய் இருக்கும்இடம்எவ்விடம்காணேன்
சதியால்நமதுசுக்கிரீவன் சரற்காலமும்போய்வரக்காணேன்
விதியால்அவனைஅழைஎன்றே விடுத்தான்கோபம்எடுத்தானே. (௪௫)

௯. தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வருகிறானோவாரானோ சுக்கிரீவன்மனதை அறிந்துவாராய்தம்பீ

அநுபல்லவி.

திருகுசொன்னால்அவன்    குலம்ஒன்றும்வெட்டுவேனே
சித்திரத்தினும்குரங்கை    வைத்தெழுதவொட்டுவேனோ (வரு)

சரணங்கள்.

௧. தருணத்தில்உதவியைமறந்தானே    மதங்கொண்டு
தண்ணீரும்முக்கால்பிழைபொறுக்கும்    அல்லவோகண்டு
மரபுக்குச்சற்றேஇன்னம்பார்க்கவே    னுமேபண்டு
வாலியைக்கொன்றஅம்புபோல்    ஆயிரம்அம்புகள்உண்டு (வ)

௨. கரத்தாலேஅபயம்கொடுத்தவன்    தன்னைவன்னக்
கனகசிங்காசனத்தில்வைத்தோ    மேமின்ன
சரற்காலம்போனவுடன்வருகிறேன்    என்றுசொன்ன
சத்தியம்மறந்தவனைச்சித்திரவதை    செய்தால்என்ன (வரு)

௩. அறியமராமரங்கள்தொளைத்தரா    மன்வில்லை
அறிவாயோஅறியாயோஎன்றுகேள்    ஒருசொல்லை
ஒருமசகம்இவனைஅடிப்பதற்    கென்னசல்லே
உண்மையாஎனக்கவன்சம்மதிதெ    ரியஇல்லை (வரு)

## சுக்ரீவன் மதுபானத்தை நிந்தித்தல்.

கொச்சகம்.

சாமிஇந்தப்படிஉரைக்கத் தம்பியும்கிஷ்கிந்தையில்ப்போய்
ஆம்அனுமான்தாரையைக்கண் டதுசொன்னான்அவராலே
கோமகன்சுக்கிரீவன் இளங்குமரன்வரவறிந்துகெட்டேன
மாமதுவுண்டேனென்றுஉரைவான் சொல்லிக்கரைவானே. (க௯)

க௦. தரு-புன்னாகவராளிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

மதுவே உன்னால்க்கெட்ட திதுவே

அநுபல்லவி.

புதுமைநான்பாவி சுக்கிரீவன்எய்த
பூமிதந்தானுக்குச் சாமித்துரோகம்செய்த (மது)

சரணங்கள்.

க. சாமிஎன்றங்கதன் கூவிஎனைத்தட்டத்
தொட்டதும்விட்டதும் நான்அறியேன்முட்டப்
பரமன்ஆய்உன்னைக் குடித்தேனேபொட்ட
பஞ்சமாபாதகன் ஆனேன்கடைகெட்ட (மது)

உ. பித்தாம்உடம்புக்கு மத்தும்புறப்படும்
பெண்என்றும்தாய்என்றும் தெரியாமலேவிடும்
குத்திரம்ஆம்நர கத்தினிலேஇடும்
குடித்தவன்அடுத்தவன் எடுத்தவனும்கெடும் (மது)

௩. குன்றுதவாலியை வென்றுபிறந்தேனே
கோதண்டதீசுரா குருவால்ச்சிறந்தேனே
ஒன்றுஅவன்செய்த நன்றிதுறந்தேனே
உன்னைக்குடித்தேனே என்னைமறந்தேனே (மது)

௪. வையகம்தந்து மதிகெந்தெனைஆள
வைத்தானைஎண்ணாமல் வைத்தாய்பழிமூள
ஐயையோநான்சொன்ன காலம்சற்றேநீள
ஆகாமல்ப்போனேனே ஓகோசண்டாள (மது)

---

## லட்சுமணர் சுக்கிரீவனை இடித்தல்.

விருத்தம்.

மன்னன்ஆய்சுக்கிரீவன் மதுவினால்மயங்கிவிட்டேன்
என்னவேசுறக்காவந்தான் எதிர்கண்ட தம்பிசொல்வான்
சொன்னநாள்தவறிஇந்தத் துடுக்குநீர்செய்தீர்சிந்தை
இன்னம்ஏதென்றுகோபம் எழுகின்றான்மொழிகின்றானே. (கஎ)



கக. தரு-சௌராஷ்டிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

வந்தகாரியம்இதுகாண் சுக்கிரீவரேநான் வந்தகாரியம்இதுகாண்

அநுபல்லவி.

வந்தகாரியமுது வாலியைக்கொன்றஅப்போது
வணங்கிராகவனுக்கன்றுமழைநாள்ப்போய்வருவேனென்று
தந்துரைஆடி அகந்தைகள்மூடி இருந்ததைநாடி அறிந்திடஓடி

சரணங்கள்.

க. அங்கென்சாமிகொந்திருக்க அதுகண்டென்நெஞ்சைஉருக்க
அலைந்துலைந்தென்கால்பெருக்க அசந்துங்கள்ஊரைநெருக்க
வந்துவாசலைப்பிடித்தேன் அடைத்ததல்லை
துங்கிசம்ஆகஇடித்தேன் வானரங்களை
அங்கங்கேஓடஅடித்தேன் தாரையைக்கண்டு
உங்காரவார்த்தைபடித்தேன் அவள்சொன்னது
சங்கையில்ஆயிரம்கோடி பேர்வெகுதூரம் போனார்சேனையோ
டிங்கிதோவருவார்என் இனிஇந்தவிசாரம் என்றாள்பிறகே
தங்கியவாள் அனுமான்வந்தான் அந்தநேரம் யாம்உடம்அடிமை
உங்கள்உதவிமறவோம்என்றான் உபசாரம் நீரும்மெய்போலே
எங்கேமூன்மலர்க்கைதொட்டீர் இருமாசம்தவணை இட்டீர்
ஏன்காணும்வராமல்விட்டீர் எப்படிநினைவுகெட்டீர்
இங்கிதம்ஆகியவங்கணமுறியவிங்களம் நீர்செய்தசங்கையைஅறிய
(வந்த)

உ. அஷ்டலட்சுமிக்கும்அன்னை ஆகியசனகிபின்னை
அகலவிட்டசாமிதன்னை அறிந்தும்அவனாலேபின்னை
விட்டோம்சூழவைத்தீரே சொன்னநாளில்வந்
தொட்டாமல்த்தாழவைத்தீரே ராட்சதர்இன்னும்
நெட்டாகவாழவைத்தீரே தேவரைஎல்லாம்
பொட்டாகவீழவைத்தீரே இந்தச்சாமிக்கும்
எட்டியபலசாலிகள்இருந்தால் அங்கேசேரும்பிரம்மாதிதேவர்
மட்டினும்ஓர்திசைஎட்டினில்வீரர்எல்லாரும் வாட்டும்சிங்கக்
குட்டிமுன்னேநரிக்குட்டிகள் ஆக்குவேன்பாரும்பிறகாகிலும்
சட்டமதானதளத்துடனே நீர்வாரும்அனுகெட்டாமல்
அட்டிசெய்வாலியைமுட்ட அடித்துவெகுராச்சியம்கட்ட
அரசும்மணிமுடிஇட்ட ஆண்டவன்உரைக்கப்பட்ட
கட்டளைஎன்கிறமட்டுகள்தாண்டிதட்டிய உங்களைவெட்டிடவே
ண்டி (வந்த)

௩. கர்த்தன்உண்டபின் உச்சிஷ்டம்கண்டுண்பதேஎன் அதிருஷ்டம்
காய்கனிநீர்தந்தால்இஷ்டம் காணுமோஇதென்னகஷ்டம்
புத்திதான்எங்கேபோச்சோ அய்யனைப்பசியில்
வைத்தும்நான்உண்பதாச்சோ அய்யய்யோஉங்கள்
பத்திஎல்லாம்மேல்ப்பூச்சோ சகாயத்துரோகம்
கற்றவர்க்கித்தனைபேச்சோ என்அண்ணன்ஆன
உத்தமனுக்குத்துணைமற்றுண்டோ ஒருவரைக்கொண்டுகோதண்டம்தன்னை
சந்தேவளக்கும்முன்செத்தானே வாலியும்பண்டு அவனைக்கொன்ற
அஸ்திரம்போல்இன்னம்அஸ்திரம்அனேகங்கள்உண்டு தெரிந்திருந்தும்
இத்தனைநீர்செய்ததென்ன இளக்காரங்கண்டு காரியம்கொள்ளச்
சுற்றினீரேபிறியாமல் துரோகபுத்திஎறியாமல்
சொன்னநாளைக்குறியாமல் தோஷம்என்றும்அறியாமல்
சத்தியமோசொல்அசத்தியமோதான் முற்றிலும்காடி-இடத்
தனியேநான் (வந்த)

---

## வானரப்படைத்தலைவர்களும் படைத்தொகையும்.

விருத்தம்.

அடல்சேர்தம்பிஇதுசொல்ல அறிந்தேன்அடியேன்புத்தியென்று
உடனேசுக்கிரீவன்சாமி உபயபாதம்வந்துகண்டான்
விடவேபோனதூதர்களில் வீரர்சேரஅணிஅணியாய்க்
கடல்போல்வந்துராகவனைக் கண்டார்சேவைகொண்டாரே. (௧௫)

௭. திபதை-மங்களகௌசிகைராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. சதவலிபடைகள்ஒரு பத்துகோடி-சுசே
ஷணன்படைகள்பத்துநூறு யிரம்கோடி
பதுமமுகன்பதினெட்டுநூ றாயிரம்கோடி-தீர்க்க
பாதகன்இடபன்ஓரா யிரம்கோடி

௨. பனசன்படைகள்பன்னீ ராயிரம்கோடி-நீலன்
படைகளும்பதினாயா யிரம்கோடி
அனுமன்இருபத்தையா யிரம்கோடி-போரில்
அக்ஷயன்படைமுப்பத்தையா யிரம்கோடி

௩. ததிமுகன்படைமுப்பதா யிரம்கோடி-நல்ல
சாம்புவான்ஆயிரத்தறு நூறுகோடி
மதிதுமிந்தன்நூறுநூறா யிரம்கோடி-அந்த
மயிந்தன்இருபதா யிரம்கோடி

௪. கேசரிபடைஐம்பதா யிரம்கோடி-மிக்க
கேவையாக்ஷன்படை ஆயிரம்கோடி



வீசுதுன்முகன்இருநூ றுயுரம்கோடி வந்த
விருபாக்ஷனஐம்ப தாயிரம்கோடி

௫. குமுதன்படைநாற்பத்தெண்ணா யிரம்கோடி-நளன்
கூட்டும்படைகள்நூறு யிரம்கோடி
சமுகப்படைஇந்தப்படி கூடிக்கூடி-வரச்
சாமிகண்டுமகிழ்ந்தானே கொண்டாடி

## சாம்புவந்தன் அனுமாரைத் துதித்தல்.

விருத்தம்.

மிக்கானகவிஏழு பத்துவெள்ளம்
வீரரொடுசாமிகண்டான் சுக்ரீவன்தான்
தெற்கானவழிசொல்ல ராமன்தானும்
சீதைஉருச்சொலித்தரும்மோ திரமும்பெற்றான்
மிக்கானமலைகளும் நாடுகளும்தேடிப்
பிலம்புகுந்துகடந்துசம்பா தியின்சொல்லாலே
கைக்கானமயேந்திரம்சேர் அனுமான்தன்னைக்
கதிசெய்வான்சாம்புவனும் துதிசெய்வானே. (௧௬)

௮. திபதை-கேதாரகௌளராகம்-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

௧. ஏதுகாணும்சும்மா அறிந்தும்அறியார்போல்
இருக்கிறீர் ஆஞ்ச நேயரே
ஓதுமேன்வெண்ணெய் இருக்கநெய்க்கேடு
வோமோவாதபாசன் சேயரே

௨. காதலாநல்ல காலம்பிறந்ததுகா
ணுதுகண்டவர் போலவே
சீதைசேதிசம்பாதிவாயினால்
தெரிந்துகொண்டோமே சாலவே

௩. துணியுமேன்உமக் கிலங்கைதான்என்ன
தூரமோகடல் தூரமோ
அணுவும்மகம்மேரு ஆகும்மேருவும்
அணுவாம்உமக்கென்ன பாரமோ

௪. வருத்தம்என்இலங்கையும் உம்மிடவாலால்
மாட்டிஇழுத்தாலும் செல்லுமே
திருத்தம்என்னபேச்சு விளக்கிருக்கத்தீ
தேடுவோம்மோநாங்கள் சொல்லுமே

௫. ஒருத்தர்ஆப்பிரம்ம தேவன்பட்டமும்
உமக்கென்றேபுகழ் மேவினீர்

குருத்துக்குழந்தையில் சூரியன்தேர்நிலே
 சூலையெதிர்கொண்டு — தாவினீர்

சு. வாசவன்கைவச் சிராயுதத்தால்ஓர்பால்
 மயிரும்உதிராத — வீரரே
தேசம்மேல்எந்த ஆயுதங்களாலும்
 சிந்தைகலங்காதே — சூரரே

எ. இயற்கையால்எந்த வேஷம்எடுக்கினும்
 எடுக்கவேவல்ல — தேவரே
செயித்திடாதபஞ் சேந்திரியங்களையும்
 செயித்திடும்மானு — பாவரே

அ. ஓதும்சுக்கிரீவன் ஆக்கினைதெரியுமே
 உயிரைவைப்பானோ — நாளையே
காதுக்கிடுவது முகத்துக்கழகெங்
 களைரட்சிப்பீர்இந்த — வேளையே

கூ. எட்டுத்திக்கின்அப் புறத்தினிலேலங்கை
 இருக்கினும்பாய்ந்து — கூடுவீர்
கொட்டைப்பாக்குபோல் எட்டுமலையையும்
 தொட்டெடுத்துவிளை — யாடுவீர்

க0. அமைத்தசாமிமோ திரத்தைப்பிடித்திரே.
 ஆர்க்குண்டிந்தஅதி — காரமே
உமக்கில்லாப்பொறி எமக்குவந்ததோ
 உரைப்பதேன்உப — சாரமே

## அனுமார் கடல்தாண்ட இசைதல்.

விருத்தம்.

பாட்டில்உரைக்கும்அங்கதன்முன் படித்துச்சாம்பன் துதிசெய்யக்
கேட்டஅனுமான்மிகநாணிக் கேளீர்அடியேன் தனைப்பொருட்டாக்
கூட்டிநீர்ஏவுதலால்நம் கோமான் அருளும்உமதருளும்
ஈட்டும்சிறையாக்கடல்கடப்பேன் என்றான்புலனைவென்றானே. (உ0)

## கிஷ்கிந்தாகாண்டம்முற்றும்.

விருத்தம்-ககூ, கொச்சகம்-க, ஆக-உ0.
திபதைகள்-அ, தருக்கள்-கக, ஆக-கக.
பாயிரம் க-க்கும் காண்டங்கள் ச-க்கும் கூடிய
கொச்சகம்-உ, வெண்பா உ-, வசனம்-க விருத்தம்-கக0. ஆக-ககரு.
தோடயம்-க, திபதைகள்-உச, தருக்கள்-சுக, ஆக-க0ச.

சக்கிரவர்த்தித் திருமகனார் திருவடிகளேசரணம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஐந்தாவது

# சுந்தரகாண்டம்.

## அனுமார் கடல்தாண்டப் பாய்தல்.

விருத்தம்.

வாய்ந்திடுசிறுபிள்ளை ஆம்பொழுதொருதினம்மாங்கனி ஆமெனவே
காய்ந்திடுகதிர்எதிர்பாய்ந்தவன்நெடுகிய கடல்களும்நிலைபிசகித்
தோய்ந்திடவடவரைசாய்ந்திடவிசுவ சொரூபம்எடுத்தனுமான்
நாந்துதிம்பசும்மகேந்திரம்ஏறி அண்ணாந்தெதிர்பாய்ந்தனனே. (க)

க. தரு-நாதநாமக்கிரியைராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பாய்ந்தானே அனுமான் மகேந்திரம்ஏறிப் பாய்ந்தானே அனுமான்

அநுபல்லவி

பாய்ந்தொருமூவுல — கேந்திராவணன்
பாய்ந்திடமேவுகு — லாந்தகன்எனவே(பாய்)

சரணங்கள்.

க. கேசவராகவ — பூசிதனேஎனும்
 வாசகம்ஆனது — நேசம்விடாமல்
மோசநிசாசரர் — நாசமதாய்விட
 வீசியவால்எம — பாசமதாகப்(பாய்)

உ. வட்டநெடுங்கடல் — முட்டம்உரம்கிழி
 பட்டுமறைந்திடு — திட்டிகள்தெரிய
நெட்டைநெடுங்கிரி — எட்டும்அரும்பொடி
 பட்டுதிரும்படி — நட்டணை ஆகப்(பாய்)

ந. எடுத்தொருராகவன் — கொடுத்தகைமோதிரம்
 இடுக்கியகாதிலே — மடல்க்குள்ளே அடக்கி
மிடுக்குளராட்டசதர் — நடுக்கமேல்விழும்
 இடுக்கிலாவீரமேவ — திடுக்கெனஓடிப்(பாய்)

௪. அண்டர்கள்முனிவர்கள் கண்டதிசயமொடு
மண்டியமருமலர் கொண்டனர்பொழிய
விண்டலரவிசசி மண்டலம்இருசிறு
குண்டலம்என்முக மண்டலம்அசைய(பாய்)

௫. சுமந்திடும்தாய்உரை சுமந்தவன்ஈர்அடி
சுமந்துவிசுவரூபம் சமைந்ததினலே
அமுழ்ந்தியகடல்படு திமிங்கிலகிலம்திமி
திமிங்கிலம்விசையினில் மிதந்திடமேலே பாய்)

௬. அந்தமலையில்உள் தந்திகரடிபுலி
நொந்துதிசைதிசைபி ரிந்தவைவெருள
முந்துகொடிமுடிபி ளந்துபளபளென
உந்தினஅடிகள் உதைந்துகிளம்பி(பாய்)

---

## இலங்கணி வதை.

### விருத்தம்.

வாரவிஸ்வரூபம்உடன் பாய்ந்தான்வார்த்தை
மைநாகற்குரைந்தான் மத்தியில்அகங்கார
வாரைஎனும்அரக்கிக்குடல் பிடுங்கிக்கொண்டான்
தலம்குலுங்கஇலங்கைமுன்னே குதித்தான்அங்கே
காரம்உள்ளஅரக்கிஇலங் கணிதான்ஆல
காலம்எனவடைவாசல்க் காவல்காரி
ஆரடாஎன்றதட்டிவந்தாள் அனுமான்கையால்
அறைகொண்டாள்கொண்டளவே தறைகண்டாளே. (௨)

௨. தரு-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இலங்கணிமடிந்தாளே அனுமான்கையால் பலம்கெடமுடிந்தாளே

அநுபல்லவி.

சலம்கொள்ஈர்இரண்டு தலையும்விரித்துக்கொண்டு
அலம்கோலம்ஆய்ப்புரண்டு அலறிஉளறிப்பண்டு(இல)

சரணங்கள்.

௧. பாதையினலேஎட்டிக் கையும்பறக்கவிட்டுப்
பாரமலைபோல்விழுந் தாரவாரம்இட்டு



அதட்டிஅதட்டிஆயுதமும் எல்லாம்தொட்டுத்தொட்டு
அத்தனையும்பொடியா அனுமான்கைஅடிபட்டு(இல)

௨. பிடிபடாமல்இந்த ஊர்காத்திருந்தேன்ஆகிப்
பிரம்மாஉரைத்தபடி ஆச்சுதேஎன்சேதி
அடிபட்டுக்கொண்டேன்போ கிறேன்உனக்கினிமீதில்
ஆட்டுக்குட்டிகள்இந்த அரக்கர்படைஎன்றேதி(இல)

௩. ஆரும்எதிர்த்திடாத என்னைநொடிக்குள்ச்சீறி
அடித்தாயேஉன்னைஎதிர்ப் பாரில்லைமனம்தேறி
மாருதியேநமஸ் காரம்என்றுகூறி
வணங்கிவடக்குக்கோட்டை வாசல்க்காவல்காறி(இல)

---

## அனுமார் இலங்கையில் சீதையைத் தேடுதல்

### விருத்தம்.

மோதும்இலங்கையை ராவணன்படைக்கு
முதல்ப்பலிஆகக்கொடுத்து முகூர்த்தம்கொண்டு
மாதவன்ஆகியராமன் பாதம்தன்னை
மனம்கொண்டுராட்சதர்மேல்ச் சினம்கொண்டப்பால்
தூதன்அனுமான் மாடகூடம்சோலை
குளிகைமாளிகை எல்லாம்சுற்றிச்சுற்றி
நாதம்உளம்மகிழ்ந்தருளும் சீதைதன்னை
நாடினன்இலங்கைஎங்கும் தேடினனே (௩)

௩. தரு-தோடிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.


தேடித்தேடித்திரிந்தானே சீதாதேவிதன்னை அனுமானே

அநுபல்லவி.

ஆடிப்பறக்கின்ற காற்றும்நுழைபாத
அலங்கக்கொத்தளந்தங்கும் இலங்கைப்பட்டணம்எங்கும் (தே)

சரணங்கள்.

௧. வாரணச்சாலையும்
மலர்ச்சோலையும்சா வடிகளும்
தோரணமேடையும் பூமலர்ஓடையும்
துலைகளும்தலைவாசல்ப் படிகளும்





தேர் அடிகளும் சொர்ணம் போர் அடிகளும் செம்நெல்ச்
சேர் அடிகளும் மதில் அடிகளும்
கிரைவிரைபுது கா வனகளும் மிதாவோகளும்
கெடிகளும் செடிகளும் தெசடிகளும்
நாரியர் காவல் இருக்கும் சிறைகளும்
நாடகசாலையும் நவரத்தின அறைகளும்
ஏராளமாக் கோலம் எழுதியே தறைகளும்
ஏகாந்தஸ்தலமும் தண்ணீர்ப்படித் துறைகளும்
இடுக்குகளும் இருட் டொடுக்குகளும்-உதி
இடுக்குகளும் மூலை முடுக்குகளும் பாய்ந்து (தே)

மலைநிகர் ஆகிய உப்பரிகைகளும்
மாடமும் கூடமும் திரைகளும்
பலபலபுரவியின் வெள்ளமும் பள்ளமும்
பாதாளம் செல்லும் புரைகளும்
கொலைசெய்யும் அரக்கர்கள் கிடைகளும் நடைகளும்
குங்குமநீர் ஆற்றங் கரைகளும்
நலம் உள்ள சத்தியும் பத்தியும் காற்பத்து
நாலுலட்சம் வீதி விரைகளும்
அலைகடல் ஆகிய அகழியும் கேணியும்
ஆயிரவெள்ள அரக்கர் தம் காணியும்
தலைஎடுப்பாக உயர்ந்த அட்டாணியும்
சத்திரச்சாலையும் ஒத்த திட்டாணியும்
தடத்திலும் முனிவர்கள் மடத்திலும் பெண்கள் செய்
நடத்திலும் புகைபோகா அடத்திலும் போய்ப்பாய்ந்து (தே)

௯. மைந்நாகமலைபோதல் தூங்கும் கும்பகர்ணன்
மனையிலும் சூழ்ந்த கொட் டகையிலும்
பொன் ஆரமணிமார்பன் இந்திரசித்திருக்கின்ற
புதுமனையிலும் சூ ளிகையிலும்
மெய்ந்நாளும் பேசும் விபீஷணன் வீட்டிலும்
வீட்டில் ஓம குண்ட வகையிலும்
பின் அதிகாயன் அட்சயன் தேவாந்தகன்
பேர் ஆனபாடமா ளிகையிலும்
வன்னக்கிளிகள் வளர்பஞ்சரத்திலும்

அன்னமண்டோதரி வாழும்தரத்திலும்
அவளும்அரக்கனும்சேர் அந்தப்புரத்திலும்
அணில்எனவேதொத்தி அணிஅணியாஒற்றி
அணைகள்எல்லாம்தத்தி அணுஅணுவாச்சுற்றி(தே)

## அனுமார் ராவணனைக்கண்டு கோபித்தல்.

விருத்தம்.

இலகும்அரக்கனையும் மண்டோதரியும்கண்டே
இவளேசானகிஆவாள் எனஉள்ஏங்கி
நிலைகலங்கிமுகத்தொழுகு கோட்டுவாயும்
நெடுமூச்சும்கண்டிவள்ஓர் அரக்கிஎன்றே
மலர்விழியில்அறைந்துகா தினிலேகையை
வைத்துடனே அரிகரீ என்றுசொல்லிப்
பலபலயோசனை அனுமான் எண்ணிஎண்ணிப்
பாவிப்பான்ராவணன்மேல்க் கோபிப்பானே. (௪)

௪. தரு-அடாணாராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தராவணனைக்கண்டும் சும்மாப்போனால் என்ன அனுமான்நானே

அநுபல்லவி.

அந்தராமத்துரோகி இவன்பலம்குறியேனோ
ஆத்திநார்கிழித்தால்ப்போல்க் கிழிக்கநான் அறியேனோ(இந்)

சரணங்கள்.

௧. புவிஅடங்கலும் கிட்டவே-மண்டோதரி
புலம்பும்ஓசை முட்டவே-கண்டவர்கள்
எவரும்கெக்கலி கொட்டவே-வாலினாலே
இழுத்துப்பிடித்துப் பொட்டவே-கட்டி
இறுக்கிறேன்தோள்ஒடிய முறுக்கிறேன் தலைபத்தும்
அறுக்கிறேன்தேங்காய்போலே நொறுக்கிறேன் அல்லாமல்(இந்த)

௨. பன்னகசாலை விட்டுத்-திருட்டுவேஷம்
பண்ணிஇலங்கை மட்டும்-கொண்டுவந்தென்
அன்னையைச்சிறையில் இட்டுவைத்தஇப்பாபி
அரக்கன்என்எதிர் பட்டும்-கன்னத்தில்
அடிக்காமலும்கைகளை ஒடுக்காமலும்நெஞ்சிலே
இடிக்காமலும்என்கோபம் முடிக்காமலும்போவேனோ(இந்த)



௩. காலனுக்குப காரம்-ஆகுமேதேவர்
களுக்கும்உண்டதி காரம்-விறுதாவாய்
மேல்இனிஏன்வி சாரம்-சாமிசொந்த
வேலைக்கிதுவே நேரம்-இப்போது
வெல்லவேணும்இவனைக் கொல்லவேணும்என்பேசைச்
சொல்லவேணும்பிறகு சொல்லவேணும்அல்லாமல்(இந்த)

## அனுமார் சீதையைக் காணாததால் இரங்குதல்.

விருத்தம்.

மாதரசைத்தேடஎன்று தூதன்ஆக
வந்தஇடத்திந்த ராவணனைக்கொன்றால்
பேதம்ஆம்இவன்உயிரை வாங்கவீரன்
பிரசண்டகோதண்டமே தக்கதென்று
போதுளதாமரைஇலைமேல்த் தண்ணீர்போலப்
புதையல்இழந்தவர்போல் அனுமான்ஏங்கிச்
சீதைதனைக்காணாமல் ராமமந்திரம்
செவிக்கின்றான்வெளியில்வந்து தவிக்கின்றானே. (௫)

௧. திபதை-காம்போதிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. இந்தஇலங்கைநகர் எழுநூறுயோசனை
எங்கெங்கும்போய்த்தேடி னேனே
கந்தமலர்க்குழலாள் என்தாய்சீதையைக்
கண்ணில்க்காணாமல்வாடி னேனே

௨. பாராஇடமில்லைதாய்ஆம்சீதையைப்
பாதகன்செய்ததென்ன சூதோ
தீராநெஞ்சுக்குத் தெய்வமேதுணைநான்
செய்யும்வகைதான்இனி ஏதோ

௩. அற்பர்ஆகும்இந்த வஞ்சனை அரக்கர்செய்
அதர்மம்தானேமெய் தானோ
எப்படிஆகிலும் தர்மமேதலைகாக்கும்
என்பதெல்லாம்பொய் தானோ

௪. நாடிச்சேதிகொண்டு வருவான்என்றுசாமி
ராமன்சொல்லுவான்என்தன் பேச்சே
தேடிவருவேன்என்று விருதுகூறிவந்து
செடியிலேநுழைந்தால்ப்போல் ஆச்சே

ரு. மேட்டுக்குப்பையைப்போலே இலங்கைப்பட்டணம்எங்கும்
வேருடனேகொல்லு வேனோ
காட்டிஎன்தாயைஎன்று ராக்ஷதப்பயல்களை
கைபால்ப்பிசைந்துகொல்லு வேனோ
விலங்காமல்த்தவளை சொல்லிவந்தநாள்எல்லாம்
வீணேதிரிந்துகுறைத் தேனே
சலம்தனிலோஇந்த நிலம்தனிலோநாக
தலம்தனிலோமறைத் தானே

எ. உலகில்எந்தக்காரியமும் ஒருதரம்ராமாஎன்றால்
உடன்கூடும்என்னும்அல்லோ வேதமே
பலதரம்ராமாஎன்றும் எனக்கிந்தக்காரியம்
பலியாததென்னவி நோதமே

அ. ஆனைதன்பலம்தன்னை அறியாதுபோலேதேவி
ஆர்ஆரைக்கைகுவிக்கி றாளோ
பூனைமுன்கிளிபோலே எவர்கள்முன்னேஎன்தாய்
புலம்பிப்பரிதவிக்கி றாளோ

கூ. வதைப்பட்டரக்கர் மூட்டையைப்போலேநசுங்க
மலைமலையாப்பிடுங்கிச் சாடதோ
சீதையைக்காட்டும்மட்டும் கிடாஎன்றுராவணனைச்
சிறையிலேவாலிபோலே போடவோ

க0. ஏதோஎன்றிருக்கும் ராகவன்முகத்திலே
எப்படிப்போய்விழிப் பேனோ
மாதாவைக்காட்டென் றிங்கேஇந்தராவணனை
வாலாலேமாட்டி இழுப் பேனோ

---

## அனுமார் சீதையைக்காணுதல்.

விருத்தம்.

கொண்டல்எனும்அனுமான் இப்படிகலங்கிக்
கோல்இழந்தகுருடன்என நின்றான்முன்னே
மண்டியதோர்அசோகவனம் கண்டான்தாவி
வந்ததில்ஓர்மரத்திருந்தான் அந்தவேளை
அண்டரியஒருமுலையர் பத்துக்கையர்
அரிமுகத்தர்பரிமுகத்தர் அனேகம்பேர்கள்
கண்டகவல்அரக்கியர்கள் நடுவிலேஓர்
கருக்கண்டான்சீதைதிரு உருக்கண்டானே. (கூ)



ரு. தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சீதையைக்கண்டானே அனுமான் செடிமேல்நின்று
சேவையைக்கொண்டானே அனுமான்

அநுபல்லவி.

ஆதவன்காணாத இலங்கைத்தொடுவிலே
அரக்கியர்என்கிற புலிக்கூட்டம்நடுவிலே(சீதை)

சரணங்கள்.

தாய்இவள்தாய்இவள் நிலைவரமே-சாமி
தனக்கும்இவள்மெத்தம னோகரமே
தீயையும்சுடும்இவள் சரித்திரமே-தெய்வ
தெய்வங்களுக்கும்இவள் மீசரமே
சாயும்சந்திரசூரிய வம்சமும்பெருக்கமும்
தனிஆம்தருமமும் இனிமேல்அல்லோசெருக்கும்
ஏய்அடையாளம்கண்டேன் அஞ்சேன்ஒருவருக்கும்
என்றுசெல்லரித்தாலும் இருந்திடத்தேஇருக்கும்(சீதை)

உ. தேவிக்கும்தாய்என்பார் அல்லோபூமி-அவள்
திடத்தையும்வென்றாள் இந்தஅபிராமி
பாவிஅரக்கர்க்கிவள் காலநேமி-இதைப்
பார்க்கப்பெற்றான்இலைபே என்சாமி-என்று
பூவிளந்துகில்மேல் அழுதழுதுமொய்த்த
புனல்தானேமுலைத் தடஅனலாலேவற்ற
சேவலைத்தேடும்இளம் பேடைபோலேமெத்த
திகைத்துத்திகைத்துவட முகத்திலேமுகம்வைத்த(சீதை)

ங. இருஷிகட்குமகிமை என்னகண்டு-இவள்
ராமமூர்த்தி வனத்தைக்கொண்டு
சருகுபோலேவற்றிப் பொசிப்பைவிண்டு-அம்மை
தான்செய்யும்தவமே மகிமைஉண்டு
ஒருசூரியன்முன்னே மதிபோல்இந்தவல்லி
உவமைகொண்டாள்அரக்கர் ஒழிபவர்க்கும்நல்லி
திருவேஇவள்அந்த அரியகோதண்டம்வில்லி
செயம்இனிசாமிகாரியம் பயம்இல்லைஎன்றுசொல்லி(சீதை)

---

## சீதாதேவி திரிசடையோடு முறையிடல்.

விருத்தம்.

அனுமன்இந்தப்படிசீதைதனை மரத்தில்இருந்துகண்டான்
அப்பால்அந்த
வனிதையும்தாமரை இலைமேல்த்தண்ணீர்ஆய்த்திரிசடைதன்
வதனம்பார்த்தாள்
தனம்உளஎன்சிறைநீங்கிச் சாமிமுகம்தனைக்காணக்
கடவேனோநான்
உனதுமதிஏதென்றே உருகுவாள்அம்மைசொல்லி
உருகுவாளே.

௨. திபதை-நீலாம்புரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. அய்யோநான்ஒரு பெண்பிறந்தகதையை
ஆர்உடனேசொல்லுவேன் திரிசடையே
தெய்வமும்நீபெற்ற தாயும்நீஅல்லால்வேறு
திக்குண்டோகேளாய்அம்மா திரிசடையே

௨. மங்கைமார்கொண்ட கணவனைப்பிரிந்தசல்
மனையிலும்இருப்பாரோ திரிசடையே
எங்கெங்கும்வசை ஆச்சேகேட்பவர்
என்னென்றுபழிப்பாரோ திரிசடையே

௩. கடலிலேஇந்த இலங்கைஇருக்குதென்று
காகுத்தர் அறியாரோ திரிசடையே
தொடரும்என்சேதி அவர்க்குச்சடாயுராசர்
சொல்லாமல்இறந்தாரோ திரிசடையே

௪. துணைஆகவேவைத்த கொழுந்தனை அவர்பின்னே
தூரப்போகச்சொன்னேனே திரிசடையே
கணவனார்மெத்த நீலிஇவள்என்றென்னைக்
கைநழுவவிட்டாரோ திரிசடையே

௫. குத்திரம்செய்து ராட்சதன்இவன்என்னைக்
கொண்டுவந்தான் அல்லவோ திரிசடையே
இத்தனைநாள் அவன்தின்றுவிடுவான்என்றே
எண்ணித்திரும்பினாரோ திரிசடையே

௬. அரசில்லா அந்த நாடுகாடாச்சுதென்று
ஆலோசனைசெய்து திரிசடையே



பரதனும்தாய்மாரும் வந்து அழைக்கஅவர்
பதியிலேபோய்விட்டாரோ திரிசடையே

௭. சனகராசன்வில் ஒடித்தவன்முன்எறிந்த
தடந்தோளைஎன்றுகாண்பேன் ? திரிசடையே
கனமுடனேபரசுராமன்வில்லைப்பறித்த
கைகளைஎன்றுகாண்பேன் திரிசடையே

௮. வைத்தபோதிலும்கைகை பின்னேஅந்தஅரசை
வாங்கியபோதிலும் திரிசடையே
சித்திரச்செந்தாமரை மலரைப்போலேமலர்ந்த
திருமுகம்என்றுகாண்பேன் திரிசடையே

௯. கொழுதிநான்என்றும் குகனுக்குத்தான்தோழர்என்றும்
கூறினதும்பொய்போமே திரிசடையே
எழுந்துசெல்லும்விராதன் துதியைமனமகிழ்ந்த
இரக்கமும்போய்விட்டதோ திரிசடையே

௧௦. கரதூஷணர் பதினாலாயிரம்தேரும்
கணத்தில்ப்பொடிசெய்தாரே திரிசடையே
சரவேகமும்கையும் மெய்யும்என்இருவிழி
தம்மில்நிற்கின்றஅய்யோ திரிசடையே

௧௧. வல்லபேருக்குப் புல்லும்ஆயுதமுன்என்ற
வழக்கச்சொல்லைப்போலத் திரிசடையே
புல்லினால்க்காக்கைகண்கொண் டோர்கண்கொடுத்த
புண்ணியரைக்காண்பதென்றோ திரிசடையே

௧௨. சற்றுவைத்துப்பாராமல் பாவிராவணன்வார்த்தை
தணல்ப்போல்இறைக்கிறானே திரிசடையே
பத்துத்தலையும் பனங்காய்போல்விழுந்துருளப்
பார்ப்பதெந்நாளோநான் திரிசடையே

௧௩. பாயும்கைகளும்என்னைப் பார்க்கும்கண்களும்இந்தப்
பழிவார்த்தைசொல்லும்வாயும் திரிசடையே
பேயும்பெருங்கழுகும் நாயும்நரியும்பிச்சுப்
பிடுங்கித்தின்னக்காண்பேனோ திரிசடையே

௧௪. குடிமகன்இந்திரசித்தன் கொழுந்தனால்பட்டான்என்ற
கூக்குரல்என்றுகேட்பேன் திரிசடையே
அடியற்றமரம்போல் மண்டோதரிராவணன்முன்
அலறிவிழக்காண்பேனோ திரிசடையே

௧௫. பேய்க்கும்அரக்கனையும் சேனைகளையும்என்தன்
பிராணநாதர்கொல்வாரோ திரிசடையே
தாயேஉன் அப்பன்வீடு பாற்கடல்போலேபொங்கித்
தழைக்கநான் கண்டேனே திரிசடையே

௧௬. இடதுகண் துடிப்பதும் இடதுதோள் துடிப்பதும்
ஏதோ அறிகிலேனே திரிசடையே
இடதுசெவியில்ஒரு வண்டுவந்தூதக்கண்டேன்
என்னசொல்லடி அம்மா திரிசடையே

௧௭. வந்தசாமிமுன் மிதிலையில்என்கைதொட
வரக்கண்டகுறி இதுவே திரிசடையே
அந்தகாலத்திற்குறி இந்தகாலமும்கண்டேன்
அதிசயம் ஏதோ அம்மா திரிசடையே

---

## சீதாதேவிக்குத் திரிசடை கனநிலை உரைத்தல்.

விருத்தம்.

கோதைமனந்தளர்ந்திந்தக் குறிகுணங்கள்சொன்னவுடன்
தூதுவன்இப்போதுனக்கோர் சுபவார்த்தைசொல்லுவன்காண்
காதலியேநானுங்கல்ல கனவுகண்டேன்கேள்எனவே
சீதைமனந்தேறிடத் திரிசடையுஞ்சொல்வாளே. (௮)

௬-தரு-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்கவலைக்கேளாய்அம்மா சானகிஅம்மா என் உனக்குக்கவலைசும்மா

அநுபல்லவி.

மங்களம்உனக்குண்டாமே வல்அரக்கன்வாழ்வுபோமே (என்)

சரணங்கள்

௧. சுந்தரிமண்டோதரி வெறுக்கலைச்சீவினாள்
அந்திடத்திலே அவள் விழுந்தழுதாகவினாள்
இந்தமன்னன்வீடுவிட் டெழுந்தொருபெண்தாவினாள்
என்தகப்பன்வீட்டில் அவள் வந்தாகத்தமேவினாள் (என்)

௨. பூவுகள்எல்லாம்கரிக ளாக்கருகவும்கண்டேன்
கோவில்கள்எல்லாம்மெழுகு போல்உருகவும்கண்டேன்



பேய்வகையும்ஓரிகளு மேபெருகவும்கண்டேன
ராவணன்என்னைத் தலையோட்டவருகவும்கண்டேன் (என்)

௩. பத்துமுடிராவணனைக் கொத்தடமைகொல்லவோ
வைத்தசிறைவிட்டமரர் சொந்தமொழிசெல்லவோ
உத்தமிஉன்பத்தினி மகத்துவம்என்னசொல்லவோ
இத்தனையும்இலங்கைக் கனர்த்தம்என்பதல்லவோ (என்)

---

## சீதாதேவிபக்கல் ராவணன் குறையிரத்தல்.

விருத்தம்.

திரிசடைஇப்படிசொல்லச் சனகிகொஞ்சம்
தெளிந்தளவில்இதுநல்ல வேளைஎன்ற
மரம்உறையும்அநுமானும் குறுகும்போதில்
மகுடம்ஒருபத்தும்மின்ன மாதர்சூழ
அருகினிற்கட்டியம்போட அந்தநாளில்
அரக்கன்வந்தான் அருந்ததிக்கும் தெய்வம்ஆகும்
கருணைவல்லிசீதைமுன்னே தான்ஏதேதோ
கரைக்கின்றான்பலகெஞ்சி உரைக்கின்றானே. (௯)

௭. திபதை-பந்துவராளிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. என்னசெய்வேன்நான் என்னசெய்வேன்நான்
என்னசெய்வேன்மிதிலை அன்னமே
மன்மதன்கணையாலே பட்டுவிழுவேன்என்று
மலர்அயன்வகுத்தானே முன்னமே

௨. அங்கம்கையவும்விட்டுப் பெண்கள்வையவும்காமன்
அம்பால்எய்யவும்சிந்தை நோகவோ
திங்கள்சுடவும்பனி அன்றில்சுடவும்வீசும்
தென்றல்சுடவும்வெந்து போகவோ

௩. ஆலைக்கரும்புபோல வேலைத்துரும்புபோல
ஆசைவலையில்சிக்கி மாயவோ
மாலைக்கும்காலைக்கும் ஊண்உறக்கம்இல்லாமல்
வரவரநாளுக்குநாள் தேயவோ

௪ அந்தநாளும்நெல்லானேனே நொந்துநொந்துபோனேனே
அநுக்கிரகம்நீசெய்ய வேணுமே
சந்தோஷம்ஆகப்பாராய் என்தன்கவலைதீராய்
சாஷ்டாங்கம்தெண்டன்இட்டேன் காணுமே

௫. மறக்குமோஉனதாசை வார்த்தைஒன்றருளாயோ
வானோர்பழிக்கநின்று கூசவோ
பிறக்கும்பிறக்கும்தலை முறைக்கெல்லாம்ராவணன்ஓர்
பெண்ணால்இறந்தான்என்று பேசவோ

௬. பதியும்உனதெனது நிதியும்உனதுசொன்ன
படிகேட்பேன்அடிமை ஆகுவேன்
இதிலேவதைபடாமல்தயைபாராய் கதிதாராய்
எங்கேநான்இனிப் போகுவேன்

௭. வான்ஆளும்தேவரும் மூவரும்தினம்வந்து
வணங்கும்என்கவலையைத் தீர்த்திடாய்
நானேஉன்னைப்பணிந்தால் பதினாலுலகுக்கும்நீ
நாயகிஆம்அல்லவோ பார்த்திடாய்

௮. கண்ணும்கருத்தும்நீயே மன்மதன்செய்யும்போரைக்
காட்டிலும்நல்லதேம வாதையே
எண்ணம்தம்பிப்போனேனேநாயினும்பேய்ஆனேனே
எனக்கொருபுத்திசொல்லாய் சீதையே

---

## சீதாதேவி ராவணனை இடித்தல்.

### விருத்தம்.

மிண்டாளன் அரக்கன்இந்த வீண்வார்த்தைசொல்லச்சொல்லக்
கண்டாள்சானகியும்என்றன் காகுத்தர்சரத்தினாலே
உண்டானதெல்லாம்தோற்க ஊழிவந்தடுத்ததையோ
சண்டாளனெனக்கோபித்துத் தள்ளுவாள்விள்ளுவாளே. (க௦)

### ௭. தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

### பல்லவி.

ராட்சதப்பதரே துன்மார்க்கவார்த்தைகள்
ஏர்க்கும்மோபோடா அடாராவணா ராட்சதப்பதரே

### அநுபல்லவி.

காட்சியாஎன்னைப் பார்க்காதே-இந்த
தாழ்ச்சிஆம்வழி ஏர்க்காதே-உன்
வாழ்ச்சிவீணிலே போக்காதே-அர
சாட்சிஆனதைத் தோர்க்காதே-அட(ராட்)

### சரணங்கள்.

௧. கிளைக்குமூன்றுலோகமும்செலுத்தும் உன்கோலும்உன்தன்
கீர்த்தியும்ஏன் தொலைக்கிறாய்-கெறுவத்தாலே



தெளிக்கபகீர்த்திஆகப் பாவபுண்ணியம்பாராமல்
விறுதாவிலேஏன் குலைக்கிறாய்-ஆகாசமட்டும்
அளக்கும்இருப்புத்தூணைச் செல்அரிக்குமோஇத்தை
அறியாமல்ஏன் மலைக்கிறாய்-அக்கினிதன்னில்க்
குளித்துத்தவங்கள்செய்து பெற்றவரத்தையெல்லாம்
கொஞ்சத்தில்ஏன் கலைக்கிறாய்-அடசண்டாளா
வளர்ததியவார்த்தைகள் படியாதே-தணல்
ஒளிக்கமுன்தானையில் முடியாதே-என்னை
இளக்காரமாக்கிட்டத் துடியாதே-எரி
விளக்கினில்ப்பூச்சிப்போல் மடியாதே-அட(ராட்)

௨. காயத்துடன்பிறந்த தங்கைமூக்குமுலையும்
காதும்அறுக்க விடுத்தாய்வெளியில்லாதென்
நாயகர்க்கஞ்சிஅந்த மாயமான்பின்னே திருட்டு
நாய்போல்ப்பதுங்கி அடுத்தாய்-நமன்போலும்உன்
தீயரூபத்தைக்கண்டு மூர்ச்சையாய்ப்போனஎன்னைத்
தீண்டாமல்மண்ணோ டெடுத்தாய்-கொல்வேன்என்றுன்மேல்ப்
பாயும்சடாயுவாலே பூனைவாய்எலிபோல்உன்
பவிஷெல்லாம்பறி கொடுத்தாய்அடசண்டாளா
தாய்இவள்மனம் அறியாதோ—போடா
பேயேஇம்மாத்திரம் தெரியாதோ-என்னைத்
தீயுரைசொன்னநாக் கெரியாதோ-பத்து
வாயிலும்புழுவாச் சொரியாதோஅட(ராட்)

௩. குதிக்கிறாய்சும்மாப்போமோ இப்பாவம்பின்னுக்கொன்று
கோடிஆய்வந்து வாய்க்குமே-உன்செல்வம்எல்லாம்
செதுக்கிறஅறம்போலான பொறுமைஆகிறதர்மம்
தேவதைதானே தேய்க்குமே-உன்குலம்தன்னை
மதிக்காஎட்டியைக்கூடி இலவுந்தீப்பட்டால்ப்போல்என்
வயிற்றெரிச்சலே தீய்க்குமே-என்பிராணநாதர்
விதிக்கும்பாணம்உன்தன் தலையைப்பனங்குலைபோ
வெட்டிவெளியில்ச் சாய்க்குமோ- அடசண்டாளா
அதுக்குள்ளேதுள்ளிச் சாகாதே-இந்த
பதைப்பினால்ஒன்றும் ஆகாதே-வாய்
மதத்தினால்க்கெட்டுப் போகாதே—நாளைக்
கொதிக்கும்நரகத்தில் மூழ்காதே-அட(ராட்)

## சீதாதேவி தனியே புலம்பல்.

விருத்தம்.

சானகிஇப்படிவைய அரக்கன்சீறித்
தான்நடந்தான்அரக்கியரைக் கலக்கச்சொன்னான்
ஆனதுகண்டனுமானும் இவனைஇங்கே
அடிப்பேன்என்றுகையொடுகை பிசைந்தான்அப்பால்த்
தான்ஒருமந்திரம்செபித்தான் மாதர்எல்லாம்
சவம்போலஉறங்கிவிட்டார் அந்தவேளைக்
கானகத்தில்இளங்குழந்தை போலேசீதை
காங்குவாள்தனியேதான் ஏங்குவாளே.

௪. திபதை-ஆனந்தபைரவிராகம்-ஆதிதாளம்

கண்ணிகள்.

௧. தேற்றுவார்இல்லைஆற்றுவார்இல்லை தெய்வமேஎன்னசெய்குவேன்
ஏற்றும்அரக்கியர்வார்த்தைஇடி ..பைவிட்டெந்தநாள்இனிஉய்குவேன்

௨. சொந்தவீட்டில்இருஎன்றசாமி ..த் துடுக்குசொல்லிஎழுந்தேனே
அந்தவினைக்கிந்தஇலங்கையிலேபொல்லா அருஞ்சிறையில்விழுந்தேனே

௩. தம்பிமார்அன்னைமார்எல்லாரையும் தவிக்கவிட்டுவந்தபோதே
என்பொருட்டில்அவர்க்கிங்கேவரமனம் ஏன்வருமேவாராதே

௪. நிறைதவசுக்குறைஇவள்என்று நினைந்துகைவிடுவாரோ
பறையர்ஊரிலேசிறைஇருந்தஎன்னைப் பரிந்துகைதொடுவாரோ

௫. தாழ்வுசெய்தனோதெய்வமே என்தன்சாமிநெஞ்சைஉருக்காயோ
பாவிஉயிரேஎன்சாமிதிருமுகம் பார்க்குமட்டும்இருக்காயோ
௬. ஏதுகான்இவர்அரக்கிமார்களோ இந்தப்பேரிடுவான்ஏனே
நாதன்பிரியவும்இன்னம் இருந்தேனேநான் அல்லோஅரக்கிதானே

௭. தந்தசனகனும்இந்தவினைகண்டு தன்உயிரும்பிழைப்பானோ
அந்தஇளையகொழுந்தனும்என்னை அருமைசொல்லிஅழைப்பானோ

௮. புல்லும்பூமியும்உள்ளமட்டும்இந்தப் பொல்லாப்பழிசிறந்தேனே
சொல்லுவார்சொல்லும்வசைக்கெல்லாம் ஒருதோதகிபெண்பிறந்தே
[னே

## அனுமார் ஸ்ரீராமரை வர்ணித்தல்.

விருத்தம்.

அன்னைஎனும்சனகிஇவ்வா றழுதுவாடி
ஆவிஇனிவைத்திரேன் என்றபிராணன்
தன்னைவிடநினைந்தொருபூஞ் செடிக்கீழ்வந்தாள்
சாமிஅனுமானுமமுன்னே வணங்கிக்கண்டு



என்னைதசரதராமன் தூதன்நானே
எங்கெங்கும்தேடினேன் அனுமான்என்பேர்
சொன்னபடிசொல்லவந்தேன் சாமிரூபம்
சொல்லுவேன்என்றெடுத்துச் சொல்லுவானே. (௧௨).

௮ தரு-கேதாரகௌளராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அந்தராமசவுந்தரியம்என்னால் அறிந்துசொல்லப்போமோஅம்மா

அநுபல்லவி.

கந்தம்மேவும்அர விந்தமலரும்அவர்
காலுக்குநிகர்ஆமோ கைக்குத்தான்சொல்லப்போமோ(அந்)

சரணங்கள்.

௧. உருண்டமணிமுழங் காலுக்குவமைஅவர்
உடையஅரசுபத்தூணி ஏர்க்குமோ
திரண்டபெருந்தொடை இரண்டுக்கும்எட்டுத்
திசைஆனைத்துதிக்கையும் தோர்க்குமோ
வரிந்தமரவுரி இடையும்நடையும்கண்டோர்
மனதைஎல்லாம்உருக்கி வார்க்குமே
தரம்தரமாஉல கிருந்தவயிற்றுக்குச்
சரிசொல்லக்கூடுமோ ஆர்க்குமே
விரிந்தமார்புக்கிணை பூமிஅகலம்காணும்
விளங்கும்கழுத்துக்குநேர் இளங்கமுகேபூணும்
பரந்தபுசங்களுக்கு மேருமலையும்நாணும்
பார்க்கப்பார்க்கப்பதி னாயிரம்கண்கள்வேணும்(அந்)

௨. அதிசயம்உடன் பளபளென்றிலகுகண்
ணாடிநிகர்த்தக போலமும்
மதிகள்ஒருசதகோடிக்குமேல்ஆன
மங்களமலர்முகக் கோலமும்
கதிஎன்றடுத்தவர்க்குப் பதியும்நிதியும்தரும்
கருணாநயனவி சாலமும்
குதிகொள்ளும்பவள வாயும்சிறுநகையும்
குருமந்தகாசவி லோலமும்
புதுமலையினில்விழும்பொன் அருவியைப்போலும்
பூமணிமார்பினில்ப் புரளும்முப்புரிநூலும்
எதிரில்லாதகோ தண்டமும்ஒருகாலும்
எழுதவேணும்என்றால் ஆமோமன்மதனாலும்(அந்த)

௩. பெருத்ததாமரை இலைபோலேஒளி
 பெருகியமேனிச்சிங் காரமும்
வரித்தசிந்தூர ரேகையும்புருவமும்
 வளர்ந்தநெற்றிவிஸ் தாரமும்
பருத்ததிருமுடி வேணியும்வேணியிற்
 பசுந்துளவமலர் ஆரமும்
தரித்ததிருவாழி கொடுத்துன்சேதியைத்
 தனியேஎன்உடன்சொன்ன சாரமும்
திருத்திச்சொல்லவெகு வாய்இல்லைஒருவாயே
 தெரிந்தும்தெரியாமலும்சொன்னேன் நீபொறுப்பாயே
 ஒருக்காலேஉண்டவர் மகிமைநீஅறிவாயே
 உனக்குத்தெரியும்வேதம் தனக்குத்தெரியும்தாயே(அங்)

---

## சீதாதேவி லட்சணியைத் தெரிசித்தல்.

விருத்தம்.

நாட்டியேஇந்தவண்ணம் ராமற்குள்ள
 நற்குறிஎல்லாம்சொன்னான் நாடுவிட்டுக்
காட்டிலேநடந்ததுவும் சுருக்கச்சொன்னான்
 கரதலாகமலம்போல் அனுமான்பின்னே
ஆண்டியிடும்பசியாலே விழுந்தோர்கையில்
 அண்டஉலகத்தமும் ஈந்தால்போல
நீட்டினான்திருவாழி அதனைக்கண்டாள்
 நிசம்கண்டாள்சீதைபர வசங்கொண்டாளே. (கரு)

௯. தரு-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

கொண்டாளே சாமிமோதிரம் கண்டாளேசீதை

அநுபல்லவி.

எண்டிசைபோற்றிய இலங்காபுரத்திலே
என்அனுமானிட பொன்இருகரத்திலே(கொண்)

சரணங்கள்.

க. கந்தமலர்க்குழல் மேலேசூடிக்
 கண்ணுக்குக் கலத்தண் ணீர்விட்டு
 காணக்கிடைத்ததே கார்த்திகைப்பிறைபோலே
 கண்டேனேஎன்று முறைபட்டு
 அந்தராம மந்திரம்எழுதிய
 அடையாளமோ திரம்தொட்டு



அணைத்துமுலைமேல் இணைத்துடம்பிலே
 அடங்காமகிழ்ச்சிகொண் டடிக்கடிமுத்தம்இட்டு(கொ)

உ. எரிந்தபசியால் வருந்தும்நாகம்முன்
 இழந்தமணிதன்னை அடுத்தால்போல்
 ஏதினிமேல்வாராதென்றெழிந்தவர்
 இரிந்தஉடமையைக்கண் டெடுத்தால்போல்
 பெருந்தறையில்ஒரு கால்மேலேநின்று
 பிள்ளைபெற்றமலடி படுத்தால்போல்
 பின்னும்முன்னும் தோன்றாமல்த்தவிக்கிற
 பிறவிக்குருடனுக்குத்தெய்வம்கண்கொடுத்தால்போல் (கொ)

௩. சிந்தாகுலம் விண்டேனேஉன்
 திருவாக்கால்என் குறைஆற்றி
 தீயராவணப் பாவிஊர்இதைத்
 தேடிவந்தாயேஎன் மனம்தேற்றி
 தந்தாயேஎன்சீவனை உனக்கினித்
 தருவதென்னஇதற் கெதிர் மாற்றி
 தாயும்தந்தையும் குருவும்தெய்வமும்
 சகலமும்நீயேஎன் றனுமானைவாழ்த்தி(கொ)

## அனுமார் சீதைபிரிந்தபின் நடந்தசெய்திகள்

அவளுக்கு விவரித்தல்.

விருத்தம்.

கண்டுதிருவாழியினால் மகிழ்ந்தசீதை
 கடல்பாய்ந்தவிஸ்வ ரூபத்தைக்காட்டக்
கொண்டுமகிழ்ந்தாள்பின்னும் அனுமானேநான்
 கோணமல்மானுக்கா நெடுந்தூரத்தில்
மண்டுரகுவீரன்போய் மீண்டவாறும்
 வந்திளையோன்உடன்கலந்தவாறும்நீதான்
பண்டுபழகியவாறும்சொல்வாய்என்ன
 படிக்கின்றான்அவள்குறையைமுடிக்கின்றானே. (க௯)


க0. தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கேள்அம்மாசொல்வேன்முன்உள்ளதெல்லாம் கேள் அம்மாசொல்வேன்

அநுபல்லவி.

நீளமான்ஆனமாரீசன்மறைந்துநின்றுடனே உயிர்கொன்றுடனேவழி
மீளவேரகுவீரன்வந்துசேர்ந்தபின் (கேள்)





சரணங்கள்.

க. இனம்பிரிந்தமான்போலே    என்தாயே உன்னைநாடி
உணும்கனிகாய்களும்போய்    உலேவாய்மெழுகாவாடி
அனந்தம்காடுமலேயும்    ஆறெங்கும்தேடித்தேடி.
தனம்தனியேபிலம்பித்    தம்பியால்உயிர்கூடி

வனந்தனில்வந்துச    டாயுவினுல்மதிதேறவே-ராவணன்
முனேந்ததெல்லாம்சொல்லிஅவன்    உயிர்வானகம்ஏறவே-அந்நேரம்
சினந்துகவந்தனேவென்    சவரிமொழிகூறவே-உன்தன்னே
நினேந்துநினேந்தறிவானதுபோய்த்    தடுமாறவே-நாயேனும்

பணிந்திடவேதன    தடியருள்ஆக்கிப்
பணிகளும்மணிகளும்    வகைவகைநோக்கித்
துணிந்திடும்வாலியைமாட்டினன்    முன்னே
சுக்கிரீவனேமுடிசூட்டினன்    பின்னே (கேள்)

உ. அறிகிறதூதர்தம்மை    அந்தந்தத்திசையில்ஏவி
நெறியேதெற்குத்திசைக்கு    நீபோஎன்றென்னேக்கூவி
பொறிபேஆரும்மோதிரம்கைப்    போட்டதுதந்ததேவி
குறிகுணம்எல்லாம்சொல்லக்    கொண்டுதென்திசைதாவி

முறைமுறையேவெகுதேசம்எல்லாம்    அலேத்தெட்டினேன்என்றேடே
பிறகுசெல்வாரைவாராதிரும்என்று    தட்டினேன்-அந்நேரம்
தறையில்இருந்தாகாசம்அளவும்போய்    முட்டினேன்-மயேந்திர
பருவதம்மேல்நின்றுபாய்ந்திலங்காபுரி    கிட்டினேன்-கோட்டைக்குள்

குறுகுறெனநடக்    கிறவேளேயில்எதிர்
கொண்டிடும்லங்கணி    வொண்டையும்மண்டையும்
நெறநெறனநெரிக்    கிடவேஊர்விட்டு
நீங்கினள்ஆவியை    வாங்கினேன்நானே (கேள்)

ஈ. அகலும்இலங்கைஎல்லாம்    அணுஅணுஆகச்சுற்றித்
தகைசேருமத்திட்ட    தயிர்போலவேஎன்புத்தி
நிகழும்வேளேயில்ராம    நேசம்வந்ததுபற்றி
மகிழவேநான்அசோக    வனத்தில்வந்தேனேஒற்றி

வகையுடனேராவணன்    வந்துன்எதிர்படித்ததும்-சண்டாளா
அகலநில்லடாஎன்றநீ    வாய்மேல்அடித்ததும்-அம்மாஉன்

முகமலர்மேல்இருகண்ணல்முத்துகள் வடித்ததும்-அறியேன்
சகலமும்அறிவேன்உனதிடதுபுறம் துடித்ததும்-இதெல்லாம்
பகலவன்முன்பனி ஆய்விடுமெய்யே
பாவிஅரக்கர்கள் வாழ்வதும்பொய்யே
செகம்முழுதிலும்ஒரு திருவுளமேபொது
தேன்மொழியேஅடி யென்வரலாறிது(கே)

## அனுமார் சீதாதேவியை வரங்கேட்குதல்.

விருத்தம்.

சொல்லிஇந்தவகைஅனுமான் பின்னும்எந்தன்
தோள்மேலேஎழுந்தருள்வாய் அங்கேபாய்வேன்
அல்லதிலங்கையோடெடுப்பாய் எனிலும்செய்வேன்
அரக்கரைவேர்பிடுங்கெனிலும் கணத்தில்ச்செய்வேன்
பல்அரக்கர்சிறையிலே கண்டான்மீட்கப்
பயப்பட்டான்உயிரைக் காப்பாற்றினன்என்
றெல்லவரும்சொலப்போகேன் தாயேசீதை
ஏதென்றான்இதற்குவகை ஓதென்றானே. (௧௫)

## அனுமாரைச் சீதாதேவி மனுக்கேகுதல்.

விருத்தம்.

எண்ணிஅனுமான்இந்த வார்த்தைசொல்ல
எனைஒருவரும்தொடப் போகாதுகண்டாய்
மண்ணதைத்தொட்டரக்கன் எனைஎடுத்தான்கண்டாய்
வலியகோதண்டபதி அவர்பேர்கண்டாய்
நண்ணிஎன்தன்சிறைஅவரே மீட்டிடாமல்
நடைத்தூதன்மீட்டால் எப்படிஆம்கண்டாய்
கண்மணியேமகனேஎன் றவனைநெஞ்சம்
கரைக்கின்றாள்சீதைகனிந் துரைக்கின்றாளே. (௧௬)

௧௧. தரு-சௌராஷ்டிரராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இம்மாத்திரம்செய்வாய் அனுமானே-என்னைவேண்டிநீ
இம்மாத்திரம்செய்வாய் அனுமானே.

அநுபல்லவி.

சும்மாவிட்டுவிட்டாலே தோஷம்உண்டுன்தன்மேலே(இம்)



௧. வேடிக்கைக்கோபிடித்தார் வில்லு-அவர்க்கிந்தஊர்
சீட்டோஇதெல்லாம்ஒரு சில்லு-நான்சபித்தாலும்
சாடாகாதோஇலங்கைக் கல்லு-துணிந்தவர்க்குப்
பாடோபிராணன்என்னஓர் புல்லு-அந்நூதிப்போட்டுக்
கூடுமாத்திரம்இருந்த நெல்லு-போலேஆனேனே
ஓடிப்போய்ச்சாமிமுன்னே நில்லு-அவர்உடனே
கூடவேஅயோதிக்குச் சொல்லு-என்னைஎங்கென்று
தேடும்மாமிமார்க்குநான்
தெண்டன்இட்டேன்என்று சொல்லு (இம்மா)

௨. குருவார்த்தைஆகஉன்மேல்ப் பாரம்-போட்டுச்சொல்லுகிறேன்
ஒருமாதம்நிற்கும்என் சரீரம்-கல்யாணம்செய்த
பெருநாளில்என்மன விசாரம்-அறிந்துகைமேல்
பரவசம்சொன்னாரே விஸ்தாரம்-அத்தைநம்பிநான்
வருவார்அல்லோஇத்தனை தூரம் என்றிருந்ததைத்
தெரியாமல்ஊருக்குப்போம் அந்நேரம்-நீயும்கூடப்போய்
அருகேநான்சொன்ன உபசாரம்-சொன்னபின்கங்கைக்
கரைகண்டால்ச்சீதைகடனும்
கழிக்கச்சொல்வாய் உபகாரம் (இம்மா)

௩. ஆதியில்பொன்மானுக்கா வாது-சொன்னதுண்டந்த
வேதைபொறுக்கச்சொல் என்மீது-பெண்களுக்கெல்லாம்
பேதமையென்பது விடாது-அதுகொண்டென்ன
வேதன்சொன்னசாபம் பொல்லாது-என்னைராவணப்
பாதகன்அணுகக் கூடாது-என்றுதிரிசடை
மாதாஉரைத்தாள்பயம் ஏது-என்றிருந்தாலும்
மேதினிவாய்மூடப் போகாது-ஆகையினாலே
சீதாராமன்தன்பேரைச்
செலுத்தச்சொல்வாய் இப்போது (இம்மா)

## அனுமார் சீதாதேவிக்குத்திடம்கூறுதல்.

விருத்தம்.

வடித்துவடித்தன்னைஇந்த வார்த்தைசொல்ல
மாருதியும்நகைசெய்தான் விழல்கூளத்தை

இடிப்பதுபோல்அரக்கர்தம்மைஇடிக்கச்சேனை
எழுபதுவெள்ளமும்சேரும் எனதுதோள்மேல்
அடித்தலங்கொண்டென்சாமி சேர்வார்தம்பி
அங்கதன்தோள்மேல்ச்சேர்வார் அவர்அம்பாலே
பொடிப்பொடியாய்ராவணனும் தரையில்ச்சேரும்
போரும்வரும்பாரும்எனப்புகலுவானே. (௧௭)

௧௨. தரு-சாரங்காராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

எட்டுநாளையிலேபாரும் அம்மா ராவணன்பேரும்இவன்ஊரும்

அநுபல்லவி.

இஷ்டகாலம்வந்த திரங்கவேண்டாம்நீரே
எப்போதும்போலேராமர் இடத்தினில்ச்சேருவீரே
முட்டாதவானரர்கை தொட்டேகல்லால்எறிந்து
முட்டர்கள் துஷ்டர்கள் கொட்டபலிஷ்டர்கள்
இட்டிடுகட்டிடுகள் ஓட்டுகள்கெட்டபின்
நெட்டுளபட்டண மட்டிஅரக்கியர்
கட்டியபொட்டுகள் தொட்டறுபட்டிடும்(எட்டு)

சரணங்கள்.

௧. மலாதலைஉலகெல்லாம் வாழ-மண்மேல்
மண்டோதரிஅலறி வீழ-எங்கும்
அலகையும்நாயும்வந்து சூழ-காவல்
அரக்கியர்உனதுவெள்
ளாட்டிகள்போலே தாழ
அந்தாதுந்துமி இந்திரன்அறைந்திட
என்தன்முகுந்தனெ டுந்தளம்வந்தபின்
உன்தன்வருந்திய சிந்தைமகிழ்ந்திட
இந்தஇலங்கை அழிந்திடும்விந்தையை(எட்டு)

௨. ஆகாராட்சதப்பிரேதம் மேலே-மிதக்க
ஆகுமோரத்தம்கடல் போலே-அதிலே
காகங்கள்மூழ்கி ஒருக்காலே-மாதர்
கண்ணீரால்அந்தரத்தம்
கழுவிப்போமே அப்பாலே





கங்கிலும்வங்கிலும் நுங்குதலங்களும்
மங்கையர்தங்கிந டங்கொள்அரங்கிலும்
அங்கிலும்இங்கிலும் உங்கிலம்எங்கள்கு
ரங்குநெருங்கி இடுங்கலகங்களை(எட்டு)

௩. ஆனைசேனைகளைநான் சாட-குரங்கால்
அரக்கர்தலைஎல்லாம்பந் தாட-ஒருவர்
போனவழிபோகாமல் ஓட-இந்தப்
பொல்லாராவணன்வாழ்க்கை
எல்லாம்தம்பியைக் கூட
புத்திரமித்திரக ளத்திரஇனத்தவர்
சுற்றிவயிற்றில்அ டித்துவிழத்தலை
பத்தும்நரித்திரள் தத்திஇழுத்திட
வித்தகன்அஸ்திரம்அ றுத்திடும்வெற்றியை(எட்டு)

---

## சீதாதேவி அனுமாருக்கு அடையாளம் ஈதல்.

நொச்சகம்.

உன்னித்தான் அனுமன் இந்த உறுதிசொல்லமனம்துணிந்தாள்
வன்னம்உள்ள அணிசூடா மணிகொடுத்தாள்சாமிஅவள்
என்னசொன்னாள்எனக்கேட்கில் ஏதுரைப்பாய்எனச்சீதை
சொன்னபடிஅடையாளம் சொல்என்றுசொல்வாளே. (௧அ)

௧௩. தரு-ஆனந்தபைரவிராகம்-ஜம்பைதாளம்.

பல்லவி.

அனுமானேசாமிக்கிந்த அடையாளம்சொல்அய்யா

அநுபல்லவி.

சனகிஇலங்கையில்ச்சிறையில்த் தன்உயிரைத்தானேதின்று
மனதில்ராமமூர்த்திவனம் செய்திருக்கிறாள்என்று (அனு)

சரணங்கள்.

௧. உலகரியநகரைவிட்டுக் கோட்டைவாசல்கடக்குமுன்னே
ஒக்கும்வனம்எங்கேஎன்று நான்கேட்கநேரே
தொலைதூரம்வழிநடந்தாய் சமர்த்துநீஎன்றுசொல்லித்
துளிர்ஆனவாய்மலர்ந்து குளிர்நகைசெய்தாரே(அனு)

௨. தாழ்வில்லாநகர்நீங்கி வருகிறபேர்எல்லார்க்கும்
தனித்தனியேதுணிவுசொல்லி அனுப்பினார்பொய்யோ
சூழும்அந்தவழிநடுவே வேள்விசெய்யவேணும்என்று
தொடங்கும்வேதியன்ஆசை அடங்கப்பசுகொடுத்தார்ஐயோ(அ)

௩. கனம்ஆனகங்கைக்கரை வனவேடன்முன்எங்களைக்
காட்டிஇவர்ஆர்என்றநீ கேட்டாயேகுகனே
உனதுதம்பிஎனதுதம்பி உன்கொழுந்திஇவள்நானும்
உன்ஆசைத்தோழன்என்று சொன்னாரேமகனே(அ)

௪. உளத்தில்மறுமாதர்போர் குறிக்கேன்என்றந்தரங்கம்
உரைத்தார்என்சாமிக்கது கருத்தில்உண்டுதானே
வளர்த்தகிளியும்மானும் தளர்ச்சிஇல்லாதபடி
வைத்திருக்கச்சுமந்திரர்உடன் பத்திரமாச்சொன்னேனே(அ)

௫. ஒருநாள்என்மேல்பாய்ந்த காக்கைதனைநோக்கிப்புல்லால்
ஒருகணைவிட்டார்இதென்ன தெரியாதபோச்சோ
சரணம்என்றதுவீழ இருவிழிக்கும்ஒருமணியாத்
தாமேகொடுத்தாரேஅந்த மானமும்தான்எங்கேபோச்சோ(அ)

## அனுமார் அசோகவனம் அழிக்குதல்.

விருத்தம்.

முந்தித்தாய்சீதைசொன்ன அடையாளங்கள்
முறைகொண்டான்அனுமந்தன் நிறைகொண்டங்கே
சிந்தித்தான்ராமலட்சு மணரைஎங்கள்
சேனைஉடனேகொண்டு வருவேன்வந்தால்
பந்தித்தராவணனும் படையும்காலன்
படைக்காவார்தாயேநீ பார்என்றோதி
வந்தித்தான்அச்சூடா மணிகைக்கொண்டான்
வழிக்கொண்டான்அசோகவனம் அழிக்கின்றானே. (௧௧)

௧௪. தரு-பியாகடைராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அடித்தானேஅசோகவனம்-தன்னை-முடித்தானேஅனுமான்

அநுபல்லவி.

அடித்தானே அருங்காய்கனிகிளைகளை
ஒடித்தானே அரைநொடிக்குள் விசுவரூபம்




பிடித்தானேஅந்த ராவணன்கீர்த்தியை
குடித்தானேகையைக் கொட்டித்தொடைதட்டிக்கொண்டு(அடி)

சரணங்கள்.

ஆடச்செயும் அசையச்செயும்
அறுந்தன சிலமரங்கள்-கைகளை
மூடச்சசெயும் முறுக்கச்செயும்
முறிந்தன சிலமரங்கள்-வேர்பிடுங்கிச்
சாடச்செயும் தாவச்செயும்
தறிந்தன சிலமரங்கள்-கொண்டாட்டம்
பாடச்செயும் பாயச்செயும்
பறிந்தன சிலமரங்கள்-வெகுவெகு
கோடானுகோடிகளாக் கொம்புங்கொடியும்ஆகக்
குறைத்தான் சிலமரத்தை-பெருகிய
நீடாழிமுகட்டிலே அணைபோலேகிடக்க
நிறைத்தான் சிலமரத்தை-தேவர்கள்
வாடாமல்ராட்சதர்கள் பாராமல்வெளிஎங்கும்
மறைத்தான் சிலமரத்தை-வாரிவாரி
ஏடாகூடமாய்லங்கைத் தெருக்கள்தெருக்கள்எல்லாம்
இறைத்தான் சிலமரத்தை-இப்படி
மேடென்றும்காடென்றும் தெரியாமல்முடிய
விசைகொண்டெறிந்தமரம் திசைதிசைபோய்ப்படிய
மாடங்களும்அரக்கர் கூடங்களும்இடிய
மதில்இலங்கைவீடெல்லாம் சிதறிப்பொடிபொடிய(அடி)

அடிக்கடிமரம் ஒடிக்குமஓசையில்
அண்டமும் வயிறளைக்க-அதுகண்டு
எடுத்தராட்சதப் பெரும்படைக்கடல்
எங்கெங்கும் ஒடிவளைக்கச்-சினம்உடன்
கடுத்ததகெச துரகபதாதிகளைக்
காலனும் கண்டுகளைக்கத்-திசைதிசை
திடுக்கெனக்கருந்தூளி செந்தூளிஆகச்
சேடனும் முடிஇளைக்க-வந்தளவில்
தடுக்காமல்மரத்தின்மேல் மரங்களாவிட்டெறிந்து
சதைத்தான் சிலபடையை-மரம்பிடுங்கிப்





பொடுக்கெனப்பள்ளத்திலே பிணம்பிணமா அடித்துப்
யுதைத்தான் சிலபடையைத்-தேர்களை
ஒடுக்கிமளமளென நொறுக்கிநொறுக்கிவிழ
உதைத்தான் சிலபடையை-மீன்குலம்
வெடுக்கெனவேபிடுங்க நடுக்கடலிலேதூற்றி
விதைத்தான் சிலபடையைக்-கையினாலே
அடித்தவர் ஆயுதத்தைப் பறித்துப்பற்றிப்பற்றி
அழுகல்வெற்றிலைப்போலே குழையஎற்றிஎற்றி
வடுப்படாவாலாலே சுருக்கிச்சுற்றிச்சுற்றி
வயிற்றுக்குடல்கள்எல்லாம் வாயில்வரக்குத்திக்குத்தி (அடி)

அதுசமயத்துக்கு மரங்கள் வாய்த்ததே
அய்யனுக்குக் கொண்டாட்டம்-என்னசொல்லப்
பதியில்மிகுந்ததே பருந்துநாசம்முதல்
பறவைகள் ஆட்டப்பாட்டம்-மண்டைகளைச்
சிதறத்தேங்காய்போல உடைத்தும்சாமிக்குண்டோ
சிறிதாகிலும் வாட்டம்-ராவணன்
தந்தியில் அனுமானுக் குதவியாவளர்த்தானே
தன்னுடையபெருந் தோட்டம்-அங்கங்கே
குதிரைமேல்ஆனைவிழத் தேர்மலைபோல்விழக்
குழிந்ததே பெரும்பள்ளம்-பள்ளத்திலே
எதிரிடும்ஆறுபோலே பெருகிக்கரைபுரள
எடுத்ததே ரத்தவெள்ளம்-பசிபோக
கதிஇல்லாநரிகளும் நாயும்பேயும்உண்டு
களித்ததே தங்கள்உள்ளம்-குரங்கென்று
விதிமோசம்ஆகவந்தோம் நமக்கிவன்எமன்என்ன
விட்ட தரக்கர்கள்ளம்-கிடைக்காத
புதுவிருந்திதுஎன்று மெத்தமெத்தவேதாள
பூதங்கள்நடம்இடப் பிணநாற்றமூள
எதிர்எதிர்அரக்கியர் அழுகைக்குரல்கள்நீள
எண்பதினாயிரம் கிங்கரர்களும்மாள (அடி)

— —

## சம்புமாலி வதை.

### விருத்தம்.

கொடிகொண்டவனமும்அந்தக் கிங்கரர்களும்போய்மாள
முடிகொண்ட அரக்கன்கோபம் மூண்டிடஎழுந்துசேனை

வடிகொண்டகடல்போல்ப்பட்ட மண்கிடந்திடும்இருப்புத்
தடிகொண்டஅனுமான்கையால் சம்புமாலியும்பட்டானே (உ0)

கடு. தரு—அடாணாராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மடிந்தானேசம்புமாலி அனுமான்கையால் முடிந்தானேசம்புமாலி

அநுபல்லவி.

அடங்காதாகுநாதன் விடுங்குணம்உள்ளதூதன்
நெடுங்கிரிஎனமண்டு தடங்கையால்அறைகொண்டு
மடங்கியவாயிலே முடங்கியகுடல்எழ
தொடங்கியஉதிரமும் குடங்குடமாவிழ (மடிந்)

சரணங்கள்.

க. நறுக்குவேன்இசுஒரு குரங்கெனஎதிர்ப்பட்டு
செருக்களத்தினில்ஏறி பெருக்கவேகனைதொட்டு
அரக்கர்படைக்கடலை நெருக்கிநெருக்கிவிட்டு
இருப்புலக்கையினாலே அரைக்கக்கொடுத்துவிட்டு (மடிந்)

உ. நீலப்பெரியகடல் போலத்திரண்டுமொய்த்து
மேல்இட்டநிருதரைக் கோலிப்பொருதவைத்து
சோலைக்கரும்புகளை ஆலைக்கிடுவதொத்து
வாலுக்கும்அனுமந்தன் காலுக்குலைப்புவித்து (மடிந்)

ந. மோதிவரும்படையை ஏதுவிடாமல்கொல்ல
மாதர்அழுதழுது வீதிஎங்கெங்கும்செல்ல
பாதகராவணன் காதினில்இடவல்ல
தூதாகுரங்கிதுபொல் லாதென்றலறிச்சொல்ல (மடிந்)

---

## பஞ்சசேனாபதிகள் அட்சதன் இவர்கள் வதை.

விருத்தம்.

பாய்ந்தசம்புமாலிஇந்த விதத்தில்ப்பட்டான்
பஞ்சசேனாதிபரும் படையும்மூண்டார்
தோய்ந்தஅவர்தங்களையும் கணத்தின்உள்ளே
தோரணகம்பத்தில்இருந் தனுமான்கொன்றான்
காய்ந்தசினத்துடன்பன்னீ ராயிரம்பேர்
காதலரும்நாலுலட்சம் காளைமாரும்



ஏய்ந்தபடைகளும்கொண்ட சுஷதனும்தேர்மேல்
ஏறினான்மாருதிமேல் சீறினானே. (உக)

கசு. வண்ணத்தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

வந்தானேராவணகாதகன் அனுப்பஅசுஷதன்முகுத்திடப்படை
தந்தானேதோரணகாலின்முன் மிகச்சமுத்திரம்வளைத்ததொப்பென

மதகரிகள்பரிகள் ரதநிறைகள்வரவும்
வருகவருகஎன ராகவதூதன்

கண்டானேஅண்டகடாகமும் வெடித்திடக்கடுகடுத்தகெர்ச்சனைக்கு
கொண்டானேகொண்டிடிபோலவே குதித்தரக்கரைஇருப்புலக்கையில்

அடிகள்முடிகள்பல கொடிகள்தடிகள்பொடி
பொடிகள்படவிசிறி வாலதைவீசி

வளைத்தோடியும்வாரிஅடித்தும் தெறித்தும்விக்கிடமுறித்தும்வீரர்கள்
தலைக்கேதலைமோதிநெரித்தும்சரிந்தும் அப்படைதொடுக்கும்வாளிகள்

தவிடுபொடிகள்பட உதறிஉதறிஎறி
சருகும்உமியும்என ஊதியபோது

காலால்உதைபட்டபேர்சிலர் கடிக்குள்ளேசிலர்பிடிக்குள்ளேசிலர்
தோளால்அரைபட்டபேர்சிலர் தொடைக்குளேசிலர்இடைக்குளேசிலர்

கரம்அற்றபேர்களும் சிரம்அற்றபேர்களும்
கதியற்றபேர்களும் ஆகியேவிழ

அறைவான்ஓர்அறைக்குளேபல கோடிவீரர்கள்வீரர்மேல்விழ
எறிவான்ஓர்எறிக்குளேபல கோடிதேருகள்தேரின்மேல்விழ

அதிரதர்மகாரதர் சமரதர்சிதறிட
அதலகுதலமொடு சேனைகள்மாளத்

தெரிந்தானேஅட்சதன்ஊதிய செம்புபோலவேரண்டுகளும்
எரிந்தானேஅக்கனமேசெல அம்புமாரிபிரசண்டமாகவே

தெரிந்தனுமன்உடல் இருக்கும்மயிர்முனை
மறைக்கில்மறையவும் அந்தமாருதி

தலைமேலும்தோளிலும்மார்பிலும் முகத்திலும்கொலுவிருந்ததோரண
நிலைமேலும்தாளிலும்வாளிகள் தொடுக்கவும்குலைகுலைந்தாராகவ

சரணம்அதைமனதில் ஒருமையொடுகருதி
விறலிறெனவிசையில் ஓடிவந்தெதிர்

அடுத்தானேஅட்சகன்ஏறிய ஆயிரம்பரிரதத்தைஓர்கையில்
எடுத்தானேவிட்டெறிபோதினி லேஇறங்கிமுன்எதிர்க்கவேபிற

கவனே இவன் அறைய இவனே அவன் அறைய
அவன் இடிகவசமும் வில்லும்வாளியும்

ஒடித்தானேபல்லொடுகுண்டலம் உதிர்ந்திடச்செவிகலங்கஓடி
அடித்தானேகையினில்அங்கவன் நெடுங்கழுத்தினை மடங்கமாருதி

உதறவருபடைகள் கதறிகிருதன்முது
குரைபடஉரைபட ராசவீதியில்

நிலத்தோடேதேய அரைத்துக் கரைக்கஅட்சதன்மாயவேசிலர்
தலத்தோடேரூபமறைந்துப்பசுக்கள் ஆம்எனமெய்குவார்சிலர்

நிணத்திலேசிலர் பிணத்திலேசிலர்
நெளித்தபேர்சிலர் ஒளித்தபேர்சிலர்

வண்டாகிமறைந்தபேர்சிலர் மான்கள்எனவெளிபாய்ந்தபேர்சிலர்
மண்டோதரிமுன்பினிலேஅடி சாய்ந்தமரம்எனவீழ்ந்தபேர்சிலர்

மலேந்தபோரினில் ஒழிந்ததூதுவர்
இலங்கைநாதன்முன் விழுந்தபேர்சிலர்

---

## அனுமாரை இந்திரசித்து எதிர்த்தல்.

விருத்தம்.

வீரர்ஆம்அரக்கரும் அட்சதனும்இந்த
விதம்அனுமான்கையாலே அதம்ஆய்ப்போனர்
ஓரமர்த்தூதரும் ராவணன்முன்ஓடி
உன்மகனும்நமன்உலகம் ஒற்றுன்என்றார்
நார்அடாஎனக்குரங்கைக் கிழிப்பேன்என்று
நார்ப்பதுவெள்ளம்சேனை உடனேவந்தான்
ஆர்அடாகுரங்கே ஆர்அடாஎன்
றதிர்கண்டான்இந்திரசித்தெதிர்கொண்டானே. (உஉ)

---

## அனுமார் இந்திரசித்தோடு பொருதல்.

விருத்தம்.

எதிர்கொண்டஇந்திரசித்தோ டெழும்பின அரக்கர்சேனைக்
கதிகொண்டஉகாந்தநாளில்க் கடல்எனவளைப்பக்கண்டான்
மதிகொண்டஅனுமான்கையில் வல்இருப்புலக்கைகொண்டு
குதிகொண்டான்எமனைப்போலே கூடினன்சாடினனே. (உக)



கஎ. தரு-மத்தியமாவதிராகம்-அட தாளசாப்பு.

பல்லவி.

அனுமந்தன் அடித்தானே-இந்திரசித்தன்
மனம்நொந்துதுடித்தானே.

அநுபல்லவி.

அனுமந்தன்அடித்தானே முனேகொண்டுபிடித்தானே
அரக்கர்படையைக்கண்டு இருப்புலக்கையைக்கொண்டு (அனு)

சரணங்கள்.

க. கட்டும்என்றபேரையும்-கிட்டும்என்ற பேரையும்
கறுவிவந்தோரையும்-மொறுவிவந் தோரையும்

கைப்புடைபோய்மாள உதைத்தான் சிலபேர்களைக்
குப்பல்குப்பல்ஆக வதைத்தான் நிரைநிரையாக

கரிகள்மேல்ப் பரிகளும் பரிகள்மேல்க் கரிகளும்
காலாள்மேல்த் தேராளும் தேராள்மேல்க் காலாளும்

கண்பொறிகலங்க இறைத்தான் சிலபேர்களை
மண்களில்அழுந்த மறைத்தான் கடல்கடந்த

காலால் அனேகம்பேரை வாலால் அனேகம்பேரைக்
கையால்ச் சிலபேர்களை பெய்யாள்ச் சிலபேர்களைக்

கசக்கிமூளைகள் பொழிந்தான் கரும்புபோலே
நசுக்கிச்சாறுகள் பிழிந்தான் அரக்கியர்க்குக்

கணவனைக் குமரனைத் துணைவனைத் தெரியாயல்க்
கதையில் அடித்துடலைச்சிதையப்பொடித்துப்பெருங்

காற்றில்ப்பஞ்செனை ஊதினன் சிலரைத்தேங்காய்க்
கீற்றுக்கீற்றுக மோதினன் என்இறந்தோர்கள்

கரம்அற்றும் சிரம்அற்றும் உரம்அற்று வரும்ரத்தம்
கண்டிடம் எல்லாம்புரள மண்டைமண்டைஆய் உருள (அனு)

உ. முட்டிவரும் தேரையும் கிட்டிவரும்தேரையும்
முடுகிவரும் தேரையும் கடுகிவரும்தேரையும்

முன்கையால்வாரித் தூக்கினன் தரையில்மோதிச்
செங்கல்ப்பொடிபோல் ஆக்கினன் ஆனைப்படையை

மொத்தியும்குத்தியும்வாலால்ச் சுற்றியும்எற்றியும்வாரி
மூட்டுப்பூச்சிபோல்மடித்துக் கூட்டம்கூட்டமாஅடித்து

முட்டுமுட்டாஅடுக்கினன் கோட்டையும்லங்கைப்
பட்டணமுநடுக்கினன் அந்நகர்வீதி

முகம்கோபுரங்களும் வகுப்பும்தாவரங்களும்
முத்துமாடங்களும்தேய்த்து சித்திரகூடங்களும்சாய்ந்து

முடியவீசிநொறுக்கினன் கோடைகாலத்தில்
இடிபோலவேஉறுக்கினன் அடித்தடித்து

மூலையும்குதிரைமலர்ச் சோலையும்குதிரைநடைச்
சாலையும்குதிரைஅலை வேலையும்குதிரைஆக

முறைமுறையாய்ச்சாய்த்து விட்டான்காலால்எற்றித்
தரையிலேதேய்த்து விட்டான்அரக்கர்தலை

மூளையும்சதையும்வண்ணக் காளியும்கூளியும்உன்ன
முழுதும்பேய்க்குலம்ஆடக் கழுகும்காக்கையும்பாட (அனு)

௩. அங்குசமும்தோட்டியும் சங்கிலியும்சட்டியும்
அஸ்திரமும்சூலாயுதமும் சாஸ்திரமும்வேலாயுதமும்

அரக்கர்விடுத்துமொய்க்கவே அதெல்லாம்அய்யன்
பெருத்தபுயத்தில்த்தைக்கவே தைத்தவையெல்லாம்

அழுந்தத்தோரணமேலே குழந்தைச்சூரியன்போலே
அட்டகாசமதபண்ணி இஷ்டராகவனைஎண்ணி

அமரவேமதித்தானே பட்டவையெல்லாம்
உமிபோலஉதித்தானே ராவணன்மகன்

அடுத்தபடைகளிலும் விடுத்தபடைகளிலும்
தொடுத்தபடைகளிலும் பிடித்தவன்மேல்ப்பட்ட

அள்ளியேதெளித்தானே சிலபடையைச்
சுள்ளிபோல்முறித்தானே அரக்கியர்கள்

அழுவாருந் தெய்வத்தைத் தொழுவாரும்வீடுவிட்
டெழுவாரும் அரக்கர்முன் விழுவாரும்தலைவிரித்

தலங்கோலம்ஆனரே எல்லாரும்பேய்க்
குலம்போலேபோனரே இந்தப்படியா

அடிப்போம்குரங்கைக்கட்டி பிடிப்போம்என்னவேகிட்டி
ஆர்ப்பாரவத்துடன்வந்த நாற்பதுவெள்ளமுஞ்சிந்த (அனு)

---



## அனுமார் பிரமாஸ்திரத்தால் கட்டுண்டல்

விருத்தம்

அனுமான்பின்னையும் இந்திரசித்தம்பெல்லாம்
அடித்துவில்லைஒடித்துச் சாரதியைமாட்டி
வனம்ஆம்தேரையும் வீசிமரத்தால்மோதி
மண்டைகலங்கிட அடித்தான்அரக்கன்அப்பால்
கனம்ஆனபிரம்மபா சத்தைவீசிக்
கட்டினன்ஐம்பதினு யிரம்பிசாசர்
இனம்ஆன்இழுக்க இலங்கையில்உள்ளோர்கண்
டேசுவார்மாருதியைப் பேசுவாரே. (உஉ)

௫. திபதை-பைரவிராகம்-ஆதிதாளம்

கண்ணிகள்.

க. வந்ததுகுரங்கு வந்ததிந்திரசித்தன்
வலையில்மாட்டியென்பார் சிலபேர்
இந்தவூருக்கெமன் ஆகக்கோலம்கொண்
டிருந்தகுரங்கிதுஎன்பார் சிலபேர்

உ. வினைக்குரங்குவந்த தெனச்சொல்இராவணன்கை
வெகுமானம்கொள்வார் சிலபேர்
தனக்கென்றிருக்கையாலே சமையத்துக்காய்ச்சுதிர்த
சதுமுகாஸ்திரம்என்பார் சிலபேர்

௩. அந்தச்சிவனேசீதைக்காக இலங்கைதன்னை
அழிக்கவந்தான்என்பார் சிலபேர்
தந்தையைஅண்ணனை மகனைக்கொன்றபழி
தந்துபோடாஎன்பார் சிலபேர்

௪. மணவாளனைக்கொன்ற இவனைக்கொன்றல்லொழிய
வாங்கோம்மங்கிலியம் என்பார் சிலபேர்
கணையாம்பாசத்தால் முகத்தில்வாட்டம்இல்லை
கபட்டுக்குரங்கிது என்பார் சிலபேர்

௫. அகப்பட்டக்குரங்கிதைவிட்டால் இலங்கைநகர்
கனர்த்தகாலம்என்பார் சிலபேர்
நகத்தால்க்கிள்ளுவதைக் கோடாலியால்வெட்ட
நமக்குமுடியுமோ என்பார் சிலபேர்

௬. இங்கேஇந்திரசித்தைப் பிடியாவிட்டால்இன்னம்
என்னென்னசெய்யுமோ என்பார் சிலபேர்
தங்கைமூக்கும்போன தகப்பனுக்குமூக்குத்
தந்தானே மகன்என்பார் சிலபேர்

---

## இராவணன் கொலுவில் வீற்றிருத்தல்.

விருத்தம்.

முனைசேர் அரக்கர்இவ்வாறு முறையிட்டலறச்சேனைசுற்றில்
இனம்ஆய்வளைக்கமலைபோலே இலங்கைஅழித்தகுரங்கிதென்றே
அனுமான்தனைக்கொண்டிந்திரசித்தன் அங்கேவிடஎங்கேஎன்று
புனைமாமுடிராவணன்கண்டு பொரிந்தான்கொலுவில்இருந்தானே.

௧௮. தரு-ஆசாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

வீரசூரராவணன்கொலுவீற்றிருந்தானே

அநுபல்லவி.

பேராதரத்தினசிங்கா சனம்மேலேசொர்ன்ன
பீடத்திலமைநாக மலைபோலேதுன்ன
சாருதயம்சேர்பத்து சூரியர்கள்என்ன
தலைப்பத்திலும்பத்து மகுடங்கள்மின்ன(வீர)

சரணங்கள்.

௧. நடம்ஆடும்ரம்பையும்ஊர்வசியும்அபி
நயம்காட்டிமயில்போல்உ லாவ
கடல்போலேமேள தாளங்கள்அண்டக
டாகம்மட்டும்சென்று தாவ
அடடாஇந்திராவாடா சந்திராவாடாஎன்
றவசரக்காரர்கள் கூவ
வடவாக்கினிஆன விரகாக்கினிதீர
வந்துமேகப்பனிநீர் தூவ
சுடர்மணிமண்டபம்அண்ட கூடம்அதைத்தொட்டவே
தொடைநடுங்கிஅசுரர்எல்லாம் நெடுமூச்சுவிடவே
முடிகளொடுமுடிமோதி அடியிணைபுண்படவே
மூஉலகத்துள்ளோரும் சேவடிகும்பிடவே(வீர)



௨. எப்போதென்றுமுகம்திரும்பியவர்க்கெல்லாம்
ரிஷிகள்வந்துதலை நீட்ட
தப்பாஎட்டானைகொம்பொடிந்ததுபதினாறு
சந்திரன்போல்மார்பிலே காட்ட
வைப்பாகியநாக ராசாக்கள்மாணிக்க
மாலைகொண்டடிமேலே சூட்ட
வெப்பானதுர்முகன் முதல்ஆனமந்திரிகள்
விநயயோசனைகள்பா ராட்ட
முப்பதுமுக்கோடி தேவரும்கொண்டாட
முதல்ஆனதும்புரு காரதர்கீதம்பாட
கற்பகம்மென்மலர்மாரி குப்பைகள்போலேபாட
கட்டியம்சொல்ஓசைதிசை எட்டிலும்மேலேஓட(வீர)

௩. இனம்ஆம்மேகங்கள் புதைபோல்ஒதுங்கிக்கொண்
டிரைச்சல்இடாமலே கூச
புனைமாமுகலட்சுமி கரம்துடைப்பார்போலப்
பூவையர்கவரிகள் வீச
எனைநாடினன் எனைப்பார்த்தான்வார்த்தைசொன்னான்
என்றியக்கர்சந்தோஷம் பேச
தினம்ஊழியத்துக்குவரும்தெய்வப்பெண்களை
சிறுக்கியர்போல்அரக்கியர் ஏச
முனைபெரும்அட்சதன்வீழ்ந்த மனவேதைகூடி
மூத்தமகன்செயித்துவந்த கீர்த்தியைக்கொண்டாடி
அனுமான்வருகிற வார்த்தைதனையேநாடி
அடிக்கடிசிதையைஎண்ணித் துடித்துடன்மனம்வாடி(வீர)

---

விருத்தம்.

இருந்தாவணன்முன்பாக இருந்தமாருதியைநோக்கி
பெருங்குரக்குருவாய்வந்தாய் பிரமன்மால்சிவன்விட்டாரோ
வருந்திவானவர்விட்டாரோ மனத்துளகபட்டைஎல்லாம்
தெரிந்திடவிடடாஎன்று சீறுவான்கூறுவானே.

௧௯. தரு-செஞ்சுருட்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆரடாகுரங்கே இங்கேவந்தநீ ஆரடாகுரங்கே

அநுபல்லவி

ஆரடாகுரங்கே அறிவாயோலங்கை
வாரசிங்காசனம்போல்வால் இட்டென்னிலும் மேல்இட்டிருக்கிறாய்

சரணங்கள்.

௧. அச்சம்இல்லாமல் அடங்கிச்சொல்லாமல்
நிச்சயவனகிங்கரர் நிறுத்தநில்லாமல்
நிசாசரர்களும் அசோகவனமும்
திசாதிசையில்விழ வீசிஎறிந்தநீ(ஆர)

௨. கம்பத்தின்மேலே காலனைப்போலே
செம்புமாலியையும்சேனாபதியையும் கொன்றொருக்காலே
சிட்சைசெய்வேனென்று கட்சிஉடனேவந்த
அட்சதனைக்கூட பட்சணம்செய்தநீ(ஆர)

௩. நிந்தனைசீச்சி நீஒருபூச்சி
இந்திரசித்தன்உன்னோடே எதிர்த்தென்னகண்காட்சி
இடிக்கவோகட்டி அடிக்கவோபல்லால்க்
கடிக்கவோரத்தம் குடிக்கவோநீ(ஆர)

௪. மறைந்தொருகர்மம் வகுத்தஉன்மர்மம்
அறிந்தல்லோகொல்லவேணும் அதற்குமுன்கொல்லதர்மம்
அல்லடாநெஞ்சு கல்லடாநிசம்
சொல்லடாபொட்டச் சொல்லடாநீ(ஆர)

---

## அனுமார் இராவணனுக்கு விடையும் மதியும் கூறல்.

விருத்தம்.

அடல்இராவணன்இந்த வார்த்தைசொல்ல
அரன்அயன்மால்விடுக்கவந்தேன் அல்லகண்டாய்
மடமயில்ச்சீதையைத்தேடி வந்தேன்கண்டாய்
வந்திடத்தில்உனைக்காண வேண்டிஉன்ஊர்
இடம்உடையஅசோகவனம் அழித்தேன்கண்டாய்
ராகவன்தூதுவன்நானே நீபிழைக்கக்
கெடல்அரியபுத்திகேள் கண்டாஎன்றே
கிளம்புவான் அனுமன்எதிர்கிளம்புவானே. (௨௭)



௨0. தரு-மோகனராகம்-அடதாளசாப்பு.

பல்லவி,

ராமசாமிதூதன்நான் அடா- அடடாராவணா
நான் அடாஎன்பேர்அனுமான்அடா

அநுபல்லவி.

மாமலத்தலைவாசனும்கயிலாசனும்ரிஷிகேசனும்

மறைந்துநின்றுதந்தான் அல்லடா
புறம்பேநின்றுவந்தான் அல்லடா (ராம)

சரணங்கள்.

௧. கொடுத்தவரமும்தனம்கனமும் வீணிலேஎன்போக்கிறாய்
குடிக்கும்பாலைஅய்யைய்யோகமர் வெடிக்குளேஎன்வாக்கிறாய்
துடுக்குடன்பரஸ்திரிசெனங்களைத் தொடர்ந்தேன்பழிஎர்க்கிறாய்
தூக்கிஏறவிட்டேணியைவாங்கும் தூர்த்தர்வார்த்தையைக்கேட்கிறாய்
தடைபடாமல்என் அய்யன்கால்மீதே
சரண்என்றால்பிழைப் பாயேஇப்போதே
அடக்கம்உன்தரம் அல்லடாசீதை
அவன்இவன்விட வந்தான்என்றோதே(ராம)

௨. காலமும்பலமும்தெரியாமல் குதிக்கிறாய்என்மாயமோ
காமத்தாலேதர்மபுத்தியைக் கடக்கிறாய்இதுபாயமோ
சாலமோகேடுகாலமோஅடா உனக்குதெய்வசகாயமோ
தங்கைமூக்கறுப்புண்ட தல்லவோசண்டாளாஇதுஞாயமோ
வாலியும்போனான் உன்னைச்சிறைவைத்த
வாலும்போய்விட்ட தஞ்சாதேமெத்த
சீலராகவன் அப்பால்அவன்செத்த
சேதியைநீஅறி யாயோடாபித்தா(ராம)

௩. கீதம்திரிந்தும்வேதம்தெரிந்தும் பாதங்களைச்சூழ்கிறாய்
கெடுமதிகணுக்குத்தோன்றாமல் படுநகரத்தில்மூழ்கிறாய்
மாதர்மோகத்தாலேதுவண்டு தாழாதவரைத்தாழ்கிறாய்
மயக்கமோகைக்குள்விளக்கைப்பிடித்துகிணற்றில்ஏன்விழுகிறாய்
ஆதிமூர்த்திதனே உத்தண்டம்
ஆகவந்தான் அரக்கரைமண்ட
சீதையைவிட்டுப் பிழைஅடாகண்ட
சேதியைச்சொன்னேன் வீரகோதண்ட(ராம)

இதுவுமது.

உக. தரு-பைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பிழைக்கவென்றால்வாடா நான்சொன்ன பேச்சைகேள்அடாமூடா

அநுபல்லவி.

பழிக்கெல்லாம்நீதானே ஆளா
படைத்துக்கொண்டாயே சண்டாளா தப்பிப் (பிழை)

சரணங்கள்.

க. வேதன்முதல்விண்ணோர்கள் குறைநீங்கஆதி
விஷ்ணுவேபுவனம்எல் லாம்தாங்க ஒரு
கோதண்டராமன் எனும் பேர்ஓங்கவந்து
குதித்தானேசரத்தால்உன் உயிர்வாங்க
ஆதவன்முன்இருள் கிட்டுமோ மூட
வனுக்குக்கொம்புத்தேன் எட்டுமோ அந்தச்
சீதைஆம்தெய்வம்உனக் கொட்டுமோஇந்தத்
திருட்டுப்புத்தித்தலைக் கட்டுமோ தப்பிப் (பி)

உ. வினைசெய்வதற்குச்செய்யும் வகைஏதோராமன்
விடுங்கணைஒன்றுனக்குப் போதாதோ-மிக
இனிதாநான்சொல்லுவதெல் லாம்தீதோ சற்றும்
இணக்கம்இல்லாமல்உன் னுடன்வாதோ
உனது தங்கைகொங்கை போய்அடாபாவி
உனக்கிதன்மேல்என்ன வாய்அடா அந்த
சனகிஉலகுக்கெல்லாம் தாய்அடா அவள்
தானேஉன்குலம் சுடும் தீய்அடா தப்பிப் (பி)

ங. புவிமேல்உன்னைவென்ற கார்த்தவீரன்விழப்
புடைத்தானேபரசுராமன் எனும்சூரன்எதிர்த்
தவனையும்வென்றாகு குலவீரன் தேவி
அவளைவிட்டால்நீலங்கைக் கதிகாரன்
தவறில்லாவரத்தோ டகஸ்தியமுனி முன்னம்
தந்தவில்லுக்குன்சேனை வெய்யில்பனிஅங்கே
எவர்களுக்கும் ஏழைஆனதனி நான்
எனக்குமிஞ்சும்வானரர் அநேகர்இனிதப்பிப் (பி)



217

## அனுமாரைக் கொல்லாமல் ராவணனை விபீஷணர் விலக்குதல்.

விருத்தம்.

போதரவா அனுமன் இந்தப்புத்திசொல்லப்
பொங்கியவாள் அரக்கன்விழிப்பொறிகள்சிந்தி
நீதிவசனம்குரங்கே நீயோசொல்வாய்
நேத்திஇதுநேத்திஇது என்றுசீறிப்
பாதகரால்இவனைவெட்டும் என்றான் அங்கே
பணிந்துவிபீஷணன் அண்ணேன்பாவம்கண்டாய்
தூதரைக்கொல்லுவதென்று ஞாயம்சொல்லித்
துலக்குவான்ராவணனை விலக்குவானே. (உ௮)

உஉ. தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இவனைக்கொல்லுவென்என்று நீஎழுந்ததுமெத்த
இகழ்ச்சிஅடா அண்ணேன்

அநுபல்லவி.

தவம்தானேமிகுந்த இலங்கேசனே அந்த
சாதிமனிதன்சொந்த தூதுவன்என்றுவந்த (இவ)

கண்ணிகள்.

க. தசம்கட்டும்கீர்த்திக்கு அழிவுவந்ததிப்போதோ
தூதனைக்கொல்வேன்என்று துடிக்கிறாய்என்னசூதோ
கொசுகைப்பொருட்டாஎண்ணிக் கருடன்எதிர்ப்பதேதோ
குரங்கைநீஎதிரிட்டால்ப் புறம்பெங்கும்நகையாதோ (இவ)

உ. அந்நாள்நம்தங்கையைக் கொல்லாமல்நரர்தாமே
அவர்பலம்வெளிஆக அனுப்பினதறிந்தோமே
இந்நாள்நமதுபலம் வெளிஆம்என்றெண்ணிநாமே
இந்தக்குரங்கைக்கொன்றால் எங்கெங்கும்வசைஆமே (இவ)

ங. பொறுக்காக்கோபம்வந்தாலும் குரங்கைக்கொல்வதோசத்தி
புலிபசித்தாலும்என்ன புல்லைத்தின்னுமோநற்றி
அறிக்கைசெய்தேன்இனி நீயேஅறிவாய்புத்தி
ஆக்கினைசெய்தப்பால்இதை அகற்றுவதுவேவெற்றி (இவ)

## அனுமார்வாலில் தீச்சுடாமல் அக்கினியைச் சீதைவேண்டல்.

விருத்தம்.

தம்பிவிபீஷணன்சொல ராவணனும்கேட்டான்
தையலார்தாலியிலே கயிறல்லாமல்
வம்புபடுகயிறெல்லாம் முறுக்கிச்சுற்றி
வாலிலேதிறிசுற்றித் தீயைஇட்டான்
முன்பிருநூறுயிரம்பேர் இழுத்தோர்வீழ
முனைந்தெழுந்தஅனுமந்தன் தனைத்தொடாதே
பொன்பொறிபோலேஇருப்பாய் நெருப்பேஎன்று
போற்றுவாள்சீதைசொல்லி ஆற்றுவாளே. (உக)

உ௩. தரு-ஆநந்தபைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அக்கினிபகவானே-வருத்தாதே-அனுமானைநீதானே

அநுபல்லவி.

திக்குவேறில்லைநீயே திக்குப்புடவைசோர்ந்தால்
கைக்குண்டோஉபசாரம் காக்கஉனதுபாரம்(அக்)

சரணங்கள்.

க. இத்திசைவந்தானே-என்பிராணேசன்கைமுத்திரைதந்தானே
சத்தியம்ஆகச்சர்வ சாட்சிநீதானே ஆனல்
பத்தினியார்க்குள்மேலாம் பத்தினிநானே ஆனல்(அக்)

உ. விரித்துள்ளதுசொல்லவோ உனதுமித்திரன்தவபுத்திரன்
[இவன் அல்லவோ
கவலைஅரக்கர்இரு கண்ணுக்கெல்லாம்நெருப்பாய்
இவனுடைவாலுக்குமாத்திரம் மலர்போல்இருப்பாய்(அக்)

௩. தன்மத்தைக்குறியாயோராம தூதன்என்றின்னமும்அறியாயோ
முன்னாள்என்சாமிகையை உன்னால்அல்லவோதொட்டேன்
இந்நாளும்நான்அவரை இணங்கவைப்பாய்கும்பிட்டேன்(அக்)

---

## அனுமார் இலங்கையைக் கொளுத்தல்.

விருத்தம்.

கோடையிலேகசங்குகின்ற மலர்போல்ச்சீதை
குழைந்துகுழைந்திவ்வாறு புலம்பிஏங்கி



வாடையிலேஅக்கினியும் பயந்துசெம்பொன்
மலர்போலவேஇருந்தான் நாலுதிக்கும்
ஆடரங்கும்சாலையும் மூலைகளும்தோப்பும்
அரசிருப்பும்திண்ணைகளும் படுக்கைவீடும்
மாடமும்கூடமும்இலங்கை எங்கும்வாலை
வளர்த்தினன்அனுமந்தன் கொளுத்தினனே. (௩௦)

உ௪.-தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பற்றிக்கொண்டது அனுமான் இட்டஅனல்
சுற்றிக்கொண்டது லங்கையை

அநுபல்லவி.

வெற்றிப்பெண்சானகி உரைமரம்ஒன்றும்
விட்டுநீங்கித்திசை எட்டும்ஓங்கிமுட்டி(பற்றி)

சரணங்கள்.

க. எடுத்தபொற்கோ புரங்களும்மலர்
படுத்தபூஞ்சப் பரங்களும்எரி
அடுக்களையும்தா வரங்களும்சுவர்
கொடுத்தமணிஉத் தரங்களும்
உன்னத உப்பரிகையும்தங்கத்தாலே
மின்னியகொடி- வகையும்ஆனைசேனை
மன்னும்விமானத் தொகையும்நவரத்தினப்
பொன்அறைகளும் குகையும்திகுதிகெனக்
கொண்டல்கொண்டலாப்புகை ஏறவேஅத்தைக்
கண்டவர்சீவன்விட்டு மாறவேஅவர்
பெண்டுபிள்ளைகள்பழி கூறவேபெண்கள்
கொண்டைகள்எல்லாம்சுறு நாறவே

உருவங்கள்தாறுமாறுப் பருவங்கள்வேறுவேறு
அருகெங்கும்கீறுகீறுத் தெருவெங்கும்நீறுநீறு(பற்றி)

உ. மூதெயில்வளைந்து சொலிக்கவேபடும்
வாதைகண்டமரர் சலிக்கவேசொல்லும்
வேதசாஸ்திரங்கள் கெலிக்கவேஎங்கள்
சீதைசொன்னபடி பலிக்கவே

சாகரங்களும் குறையபுகைப்படலம்
ஆகாசமட்டும் நிறையபாதாளத்தில்
நாகரும்கூட இறையராவணனும்
மேகதலத்தில் மறையஇலங்கையிலே
கிணற்றுநீறும்சுண்டி வற்றவேசெத்த
பிணத்தின்வெடிநாற்றங்கள் சுற்றவேவாலை
வணங்கிஎழுந்தெழுந்து மெத்தவேசெங்
தணல்ப்பொறிஆகஅய்யன் எற்றவே

புரவிஎல்லாம்உவிய நிருதர்எல்லாம்அவிய
எரிஎரியாக்கவிய கரிகரியாக்குவிய(பற்றி)

௩. கைக்குழந்தைகளைப் போடுவார்பெற்ற
மக்களைவிட்டுவிட் டோடுவார்புகைச்
சிக்கினிலேதள்ள மாடுவார்ஒரு
மிக்கஅரக்கியர்கள் வாடுவார்
மலர்ச்சோலைபொரிந்த தென்பார்ராவணன்
கொலுக்கூட்டம்எரிந்த தென்பார்வீட்டின்மேல்வீடா
நிலத்தோடேசரிந்த தென்பார்வெட்டவெளியாத்
தலைக்கடைதெரிந்த தென்பார்தவிதவித்து
வேலைக்குள்ஓடிவிழச் செல்லுவார்பெண்கள்
மூலைக்குமூலைவாயை மெல்லுவார்அனல்
மேலிட்டிடாமல்க்குழி கெல்லுவார்அனுமான்
வாலுக்குத்தெண்டன்என்று சொல்லுவா

மாடகூடம்அனேக கோடிகோடிநீக
மேடுமோடாகிப்போகக் காடுகாடாகிவேறாக(பற்றி)

---

## வானரவீரர்கள் திரும்புகாலையில் மதுவனம் அழித்தல்.

விருத்தம்.

அக்கினியைஇலங்கையில்இவ்வா றிட்டுச்சீதைதிசை
 அறிந்துபோற்றி
மைக்கடல்வாய்மைநாகம் தனைக்கண்டான்சேனைகளை
 வணங்கிக்கண்டான்
புக்கதுசொல்அனுமானும் அங்கதனும்சேனைகளும்
 போய்ச்சுக்ரீவன்



தக்கமதுவனம்கண்டு நிலைப்பட்டார்மதுவைவுண்ணத்
 தலைப்பட்டாரே. (௩௧)

௨௫-தரு-அசாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

வானரவீரர்எல்லாம் பாய்ந்தாரே-மது
வனம்எல்லாம்கொள்ளையிட்டு மேய்ந்தாரே

அநுபல்லவி.

வானம்சூரியபக வானும்தெரியாஅந்த
கானகத்தினில்மிகுந்த தேனும்கனியும்சிந்த(வான)

சரணங்கள்.

௧. திரளதானமாங் கனியும்-ஆ
 சினிபழுத்த தேங்கனியும்-தேன்
உருகுகதலிப்பூங் கனியும்-சுவை
 ஒளிபடாவிளாங் கனியும்-கையால்த்
திருகித்திருகிப் பறிக்கத்-திசைதிசை
 பெருகிப் பெருகித்தெறிக்க-வழிமேல்
வரும்இளைப்பினால் வந்தடைக்கவே
 இருவிலாப்புற மும்புடைக்கவே(வான)

௨. வாயிலேஅளிப்பார் சிலபேர்-தேன்
 வாயிலேஒளிப்பார் சிலபேர்
வாயிலேவிளிப்பார் சிலபேர்-கடை
 வாயிலேதுளிப்பார் சிலபேர்
ஈய்கள்மொய்த்தால்ப் போலே-மொய்த்து
 இரைச்சலிட் டொருக்காலே-பெரு
வாயிலேமதுவைவழிக் குதட்டிக்கொண்டு
 ஓயநின்றவரைஉறுமி அதட்டிக்கொண்டு(வான)

௩. இந்திரன்வாலிக்கிட்ட தோட்டம்-இப்ப
 இதிலேசுக்கிரீவர்க்கு நாட்டம்-என்று
வந்துபுகுந்துகடல் ஓட்டம்-போலும்
 மதுவைஎல்லாம்குடித் தாட்டம்-செய்ய
அந்தவேளைததிமுகன் எதிர்க்க-அவனை
 அடித்தானேஅங்கதன் பதைக்க-சொல்லும்

எந்தஆணை ஆக்கினைக்கும் நில்லாமலே
தந்தம்இச்சையில்த்தடை இல்லாமலே(வான)

---

## சீதையைத்தேடப்போனவர்களைக்குறித்து ஸ்ரீராமர் இரங்கல்.

விருத்தம்.

இப்புறம்ராமசாமி தெற்கினில்ப்போனபேரை
எப்படிகாணுவேன் எனக்குறைகூறுவானே. (௬உ)

திபதை-ஆகிரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. திக்குத்திக்காகச்சீதையைத் தேடிநொந்தாரே-எந்த
திக்கிலும்காணமல்எங்கே வாடிவந்தாரோ

உ. தெற்குத்திசையில்ப்போனோரைக் காணேன்கண்ணாலே-அடா
சுக்கிரீவாநான்ஏதுக்கின்னம் இருந்தேன்மண்மேலே

௩. கன்னிச்சீதைஇருந்தாளோ என்னபட்டாரோ-இத்தை
என்னசொல்வோம்என்று சீவன்தன்னைவிட்டாரோ

௪. நாள்க்கணக்கைஎண்ணிஎண்ணி ஏக்கம்ஆனாரோ-உன்தன்
ஆக்கினைக்குப்பயந்துதவசு நோக்கப்போனாரோ

௫. மற்றொருலோகத்தைச்சுற்றித் தேடுகின்றாரோ-சிறையில்
வைத்தஅரக்கரோடேபோர் ஆடுகின்றாரோ

௬. தென்முகமேமுகம்ஆக இன்னம்செல்வாரோ-இங்கே
என்முகத்தில்ச்சீதைசேதி என்னசொல்வாரோ

எ. தன்வரவுபார்க்கும்என்னைத் தளரப்பார்ப்பானோ-அனுமான்
என்வயிற்றில்என்றுவந்து பாலைவார்ப்பானோ

அ. கவலைஏன்அனுமான்இருக்கக் காரியம்போகுமோ-அய்யோ
அவனால்ஆகாதகாரியம்பின் ஆரால்ஆகுமோ

---

## ஸ்ரீராமருக்கு அனுமார் சீதையின் இருப்புகூறல்.

விருத்தம்.

வண்டேபோல்மனம்சுழல இந்தவண்ணம்
மடலேபோல்ச்சுக்கிரீவ னுடனேசொல்லிக்
கொண்டேதென்முகத்திலே முகத்தைவைத்துக்
குறித்துராகவன்இருந்த சபைக்குமுன்னே



பண்டேஅங்கதன்முதல்ச்சேனைகள்பின்செல்லப்
பறந்துவந்துகரக்குவித்துப்பணிந்துக்கண்டேன்
கண்டேன்சீதையைஎன்றுகூவிக்கூவிக்
கதிகொண்டான்அனுமான்வந்துகுதிகொண்டானே. (௬௩)

உ௬-தரு-முகாரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

கண்டேன்கண்டேன்கண்டேன் சீதையைக்கண்டேன்ராகவா

அநுபல்லவி.

அண்டரும்காணாத இலங்காபுரத்திலே
அரவிந்தவேதாவைத் தரவந்தமாதாவைக்(கண்)

சரணங்கள்.

க. காவிவிழிகழல் உன்உருவெளிமின்னக்
கனிவாய்தனிலேஉன் திருநாமமேபன்ன
ஆவித்துணையைப் பிரிந்தமடஅன்ன
ஆனாள்நான் சொல்வதென்ன
பூவைத்திரிசடை நித்தம்நித்தம்சொன்ன
பத்திவழியேதன் புத்திநிலைமன்னப்
பாவிஅரக்கியர் காவல்சிறைதன்னைப்
பஞ்சுபடிந்த பழம்சித்திரம்என்ன(கண்)

உ. பனிக்கால்வாரிசம் போலநிறம்கூசிப்
பால்ஒருயுகம்ஆகக் கழித்தாளேபிரயாசி
நினைத்தங்கேராவணன் அந்நாள்வரச்சீசீ
நில்லடா என்றேசி
தனித்துத்தன்உயிர்தன்னைத் தான்விடமகராசி
சாரும்பொழுதுகாணும் சமையமிதுவேவாசி
இனித்தாமதம்செய்பல் ஆகாதென்றிடர்வீசி
ராமராமராம ராமஎன்றெதிர்பேசி (கண்)

௩. அடல்சேரும்வாலியை வானுலகிலேகூட்டி
அவனியைச்சுக்கிரீவன் ஆளமுடிசூட்டி
உடனேநீதூதுபோ என்றுசொல்அமுதூட்டி
உன்எழில் பாராட்டி

விடவந்தஅனுமந்தன் நான்என்றுசீராட்டி
விவரம்சொல்லஉயிர்கொண் டிருக்கிறாள்சீமாட்டி
திடமாலட்சுமணன்செய்த பர்ன்னசாலைவீட்டில்த்
தேவாதிதேவாஉன் திருவாழிதனைக்காட்டிக்(கண்)

---

## ஸ்ரீராமர் சீதாதேவி சூடாமணிகண்டுமகிழ்தல்.

கொச்சகம்.

பணிஅனுமான்இதுசொல்லிப்பாவைஉதவியசூடா
மணிஅடையாளம்கொடுத்தான்வள்ளலிராகவன்கண்டான்
அணிஉடல்புளகித்தான்அகம்குளிர்ந்தான்முகம்மளர்ந்தான்
துணியும்அந்தமணிவாங்கித்துதித்தான்சம்மதித்தானே.

௨௭. சாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

சூடாமணி கண்டபோதே-சாமிக்குவந்த-சுகமேஅனந்தசுகம்

அநுபல்லவி.

வாடி அனுமான்சொல்ல ஆடிமுட்டமுட்ட
நாடிச்சீதைஅம்மை சூடிவரவிட்ட (சூடா)

சரணங்கள்.

க. அமலமாமணிதன்னை வாங்கினான்-உயிர்செய்
அமுர்தசஞ்சீவிபோல்த் தாங்கினான்-சீதை
கமலக்கைபோல்பிடித் தோங்கினான்-கவலை
கதிர்கண்டபனிபோலே நீங்கினான்-கண்டு
கண்இரண்டும் குளிர்ந்தான்மேல்வரும்
எண்ணங்களும் தெளிந்தான்-அந்த (சூ)

௨. மடிந்துவாயிதழ் கடித்தான்-மேனி
மயிர்ப்புளகம் பொடித்தான்-வேர்வை
பொடிக்கத்துடி துடித்தான்-அனுமான்
புத்திசொல்லிப் படித்தான்-சேனையைப்
போர்க்குச்செல்லும் என்றான்-அடிக்கடி
சேர்க்கச்சொல்லும் என்றான்-இப்படி (சூ)

௩. அரக்கர்ஆம்இருள்எல்லாம் ஓடவே-தர்மம்
ஆனபயிர்வளர்ந்து கூடவே-கீர்த்தி



விரித்துரம்பையர்கீதம் பாடவே-தேவர்
வீசும்பூமலர்எங்கும் மூடவே-வரவா
மேனி பாரிக்கவே-துர்க்கப
வானி பூரிக்கவே-அந்த (சூ)

## ஸ்ரீராமர் தென்சமுத்திரக்கரையைக் காணுதல்.

விருத்தம்.

இந்தவண்ணம்சாமிமனமகிழ்ந்துதேறி
இலங்கையைப்போய் வளைந்திடவேசேனைசூழ
அந்தஅனுமான்மேலே தானும்தம்பி
அங்கதன்தோள்மேலும் எழுந்தருளிச்சென்று
தொந்தம்உள்ளபடைத்தலைவர் முன்னும்பின்னும்
சூழ்ந்துவரச்சுக்கிரீவன் அருகேநின்று
முந்திவழிகாட்டிஇட ராமச்சந்திரன்
முறைகொண்டான்தென்கடலின் துறைகொண்டானே. (௩௨)

## சுந்தரகாண்டம் முற்றும்

---

விருத்தம்-௩௨, கொச்சகம்-௩, ஆக-௩௫.

திபதைகள்-௬, தருக்கள்-௨௭, ஆக-௩௩.

பாயிரம் ௧-க்கும் காண்டங்கள் ௫-க்கும் கூடிய

கொச்சகம்-௫, வெண்பா-௨, வசனம்-௧, விருத்தம்-௧௪௨, ஆக-௧௫௦.

தோடையம்-௧, திபதைகள்-௪௦, தருக்கள்-௬௬, ஆக-௧௩௭.

---

சக்ரவர்த்தித்திருமகனார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஆருவது

# உயுத்தகாண்டம்.

## அநுமார் மீண்டபின் ராவணன் கேட்க மந்திரிகள் ஆலோசனைகூறல்.

விருத்தம்.

ஆலிலைமேல்ப்பள்ளிவிடுத் தயோத்திவந்தோன்
அருங்கடல்வாய்பெருங்கவிகள் உடன் இருந்தான்
மூலஇலங்கையைமுன்போல் விசுவகர்ம்மா
முடிக்கஅந்தப்படிக்குரா வணனும்கண்டான்
வாலினும்காலினும்அநுமான் இடிதீயாலும்
மாண்டராட்சதர்போக அந்தஊரில்
மேல்உளராக்ஷதருக்கும் அரக்கன்பொல்லா
வினைசெய்வான்மந்திரா லோசனைசெய்வானே. (க)

க. திபதை-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

| | | |
|---|---|---|
| க. | வாரும்வாரும்பாரம்பரிய | மதிமந்திரிமாரே |
| | பாரும்பாரும்ராவணன்எனைப் | பார்த்தென்னசொல்லுவீரே |
| உ. | அரிஅயன்கூடப்பயப்படும்இலங் | காபுரித்தெருமேலே |
| | கரிகரியாக்குவியகுவியக் | கண்டோமேகுரங்காலே |
| ௩. | இங்கேசுட்டசூடாஇல்லையே | இலங்கையில்நாலுசாரும் |
| | நங்கைமார்கொண்டைவெந்திடச்சுறு | நாருகின்றதுபாரும் |
| ௪. | மனிதர்அனுப்பக்குரங்கிங்கேவர | மாண்டதரக்கர்கூட்டம் |
| | இனிஎன்னவெற்றிஇனிஎன்னசத்தி | இனிஎன்னகொண்டாட்டம் |
| ரு. | என்னராவணன்சொல்லச்சீறி | எழுந்தானேஉன்மத்தன் |
| | நன்னிக்குரங்கும்கொசுகும்பகையோ | நமக்கென்றானேபிரகஸ்தன் |
| சு. | ஒருவர்ஏதுக்குநானேலட்சுமணன் | உடனேஅவனண்ணன் |
| | இருவர்தலையும்கொண்டுவருவேன் | என்றானேபுகைக்கண்ணன் |
| எ. | நரரையும்வானரரையும்கொல்ல | நான்அல்லோஅநுமந்தன் |
| | துரிதமாஎன்னைப்போகச்சொல் | என்றுசொன்னானேவச்சிரதந்தன் |



| | | |
|---|---|---|
| அ. | இவன்மனிதருக்கிவன்குரங்குக்கென் | றேவினான் |
| | அவன்அவன்பலம்தெரியல்ஆகும் | என்றான்மகோதரன்தானே |
| கூ. | நாமேதின்கிறநரரும்குரங்கும் | நம்மைஎதிர்க்கல்ஆச்சே |
| | மாமோசம்இதுஎன்றுதன்முகன் | வகுத்தானேதன்பேச்சே |
| க0. | முட்டனுக்குத்தன்புத்திநாலினும் | முற்றினும்செம்மைபோலே |
| | துட்டமந்திரிகள்வாயில்வந்தது | சொன்னாரேஒருக்காலே |
| கக. | சூரியகேதுபிசாசன்முதலோர் | சொல்லிடும்அந்தவேளை |
| | காரியம்அல்லஎன்றுறுக்கினான்கும்பகர்னன் | என்னும்அக்காளை |

---

## கும்பகர்ன்னன் ராவணனுக்கு ஆலோசனைகூறல்.

விருத்தம்.

படபடெனமந்திரிகள் இந்தவிதம்சொன்னதெல்லாம்
பரிந்துகேட்டே
உடல்மறந்தேராவணனும்சிறியார்கைச்செம்பொன்போல்
உச்சாகத்தால்
கடல்கடந்துபோராட நினைந்தளவில்அமைச்சர்களைக்
காய்ந்துபின்பு
திடம்உடையகும்பகர்ன்னன் கூறுவான்அண்ணன்முன்னே
சீறுவானே. (உ)

க. தரு-கலியாணராகம்-ஆதிதாளம்.

பல்லவி.


நேத்திஇதுவெகுநேத்திஅடாஅண்ணேன்-மந்திராலோசனை
நேத்திஇதுவெகுநேத்திஅடா

அநுபல்லவி.

| | |
|---|---|
| ஏற்றகும்பகர்ன்னன் | என்சொல்லைவீழ்க்கிறாய் |
| எடுப்பானகீர்த்தியைத் | துடுக்காலேதாழ்க்கிறாய் |
| சூத்தில்அடிக்கவே | பல்லும்போச்சுதென்ற |
| சொல்லைப்போலேஇந்த | தூர்த்தர்சொல்கேழ்க்கிறாய் (நேத்) |

சரணங்கள்.

தேட்டம்ஆம்அசோக வனம்அழிபட்டபோதே
தேவருக்கும்உனது பயம்போச்சு
நாட்டம்ஆம்அரக்கர் தலைகள்உன்னுடைய நா
நாலுபுறமும்உருண் டிடல்ஆச்சு





வீட்டுப்பெண்கள்நகைக்க ஒருத்திகாலடியினில்
　　வீழ்கிருய்இதிலும்உண் டோஏச்சு
கோட்டைமுழுதும்கரிக் கோட்டைசெய்தகருங்
　　குரங்குக்கும்மனிதர்க்கும்பயந்தோமே எனும்பேச்சு (நே)

௨. விதம்விதமாய்ப்பெற்ற விசயம்எல்லாம்அய்யய்யோ
　　விரகாக்கினியிலே கருக்கிருய்
மதிமோசமோஉந்தன் விதிமோசமோசொன்னல்
　　மனதுகொள்ளாமல்அரு வருக்கிருய்
அதிகவேதங்கள்ஓர் ஆயிரமும்தெரிந்தும்
　　அறியாமலேசெல்வம் செருக்கிருய்
மிதிலைப்பெண்கற்பால்இந்தப்பதிவெந்ததல்லாமல்
　　வேறென்றால்வெந்ததென்றே நீஎண்ணிஇருக்கிருய் (நே)

௩. கருமலைபோல்இந்த நிருதரைக்கண்டால்அந்த
　　காலருத்திரனுக்கும்உண் டோவீரம்
இருஇருநான்இதோ புறப்படுகிறேன்என்முன்
　　எவ்வளவவரிட ஆரவாரம்
மருஉடன்சீதையை விடுவதுவேநல்ல
　　மார்க்கம் இல்லாவிட்டால் இந்நேரம்
ஒருமிக்கவேபோய் உனக்காச்சேனக்காச்சென்று
　　ஒருகைபாராமல்இங்கே குறுகுறுக்கும்விசாரம் (நே)

## விபீஷணர் இந்திரசித்தைவிலக்கி ராவணனுக்குப் புத்தி கூறல்.

விருத்தம்

குப்பகர்ன்னன் இந்தமொழி சொன்னபின்பு
　　குதித்திந்திரசித்தெழுந்தான் எனதுகையில்
வெப்புபிரமாஸ்திரமும் நாகபாசம்தானும்
　　வீண்போமோபின் அதைநீ காண்பாய்என்றான்
வப்புசொன்னய்பயலேநீ போடாநாளை
　　வருங்காரியம்அறியாய்என் றவனைத்தள்ளித்
தம்பிவிபீஷணன் அண்ணேன் உனக்கிதெல்லாம்
　　சதிஎன்றான்கேட்பாய்என் மதிஎன்றானே. (க)

௨. தரு சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ராகவன்பகை ராவணஒருகாலும் நமக்காமோ
அண்ணேன் பழிசுமக்காதே

அநுபல்லவி.

ஏகன் ஆய் அந்தமூவரும்தசரத ராமன் என்றும்வந்தாரே
நாம்எங்கேபோவோம் அந்த (ரா)

சரணங்கள்.

௧. அலைகடல்சூழ்இலங் காபுரிநகர்மேலே-வந்தொருக்காலே
அளவறுராட்சதர் மலைமலைகள்போலே-மண்டினதாலே
அலைந்தோம்மெத்த உலைந்தோம்மேனி
குலைந்தோம்நிலை கலைந்தோம்-என்றுதேவர்
காலமே ஓலமே-செய்ஆதி
மூலமே கோலமே-ஆகிவந்து
கிளையும்விளையும் முளையும்களையவே
வலக்கைதந்து நிலத்தில்வந்தவதரித்த(ராக)

௨. பாதகிதங்கையால் சீதைவினைமூளா-அடசண்டாளா
பன்னகசாலையோடென் இருபதுகோளால்-பாவத்துக்காளா
எடுத்தாய்ஆசை தொடுத்தாய்-நன்மை
விடுத்தாய்குடி கெடுத்தாய்-அவள்ஒரு
தாய்அடாதாய்அடா நமக்கொரு
தீய்அடாதீய்அடா சிறைமேல்
எத்தாய்வைத்தாய பித்தாய்செய்தாய்
சனகிஅல்ல உனையேகொல்லவந்தவள்(ராக)

௩. மேதகுகார்த்தவீரியன்முன் எதிர்இட்டாய்-விருதுவிட்டாய்
வேதவதிசொன்னசாபத்தில் அகப்பட்டாய்-பிழைக்கஒட்டாய்
மதமோஉனக் கதமோ-எந்த
விதமோ லங்கை சதமோஇத்தனை
சூரரும்வீரரும் உனது
குமாரரும்பேரரும் உன்னுடைய
முடியும்கெடியும் கொடியும்மடியும்முன்
சீதைபோர வாதைதீரும்உள்ளது(ராக)

## விபீஷணரை ராவணன் சீறிக்கூறல்.

விருத்தம்.

உதிக்கின்றகதிரோன்முன்னே ஒளிக்குமின்மினிபோல்அல்லால்
கொதிக்கின்றஎன்முன் அந்தக் குரங்கொருநரர்என்செய்வார்
எதிர்கின்றசொல்என்சொன்னாய் எனவிபீஷணனைப்பார்த்துக்
கதிக்கின்றஅரக்கன்பல்லைக் கடிக்கின்றான்படிக்கின்றானே. (௭)



௩. தரு-கௌளிபந்துராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

போதும்போதும்இந்த புத்திவிபீஷணா
போதும்போதும்சொன்னது போதும்அடா

அநுபல்லவி.

ஏதடாநான்பயப் பட்டுநடக்குமோ
எலியைக்கண்டுபூனை ஏங்கிக்கிடக்குமோ
நாதன் ஆனநானே உன்சொல்லைக்கேட்பது
நரிவாலைக்கொண்டோ கடல்ஆழம்பார்ப்பது(போ)

சரணங்கள்.

௧. உலகும்அரசும்போய் வெள்ளாட்டியால்காட்டில்
ஓதுக்குண்டராமன்என்னோ டெதிர்ப்பானோஅவன்கூட
விலகிட்மாயம்செய்து குலமங்கையைஎடுத்து
மேடும்காடும்திரிய விட்டேனேஎங்கும்தேட
பலருக்கும்தெய்வம்என்றாய் இந்திரன்சிறைபட்டநாள்
பாலனோஇவன்என்னோ டேலாதோசண்டைபோடக்
கொலைசெய்யும்அரக்கரை மனிதன்கொலைசெய்வானோ
கொல்லத்தெருவில்ஊசி விற்றால்விலைபோமோ(போ)

௨. துப்பானவாலிமுன்னே எதிர்த்தவர்பலம்போமோ
தோர்வையோஆர்க்கும்அது சாபம்என்றறியாயோ
இப்போதும்மானிடர்முன் எனக்குப்பலம்இல்லையோ
ஈசனையும்மலையோ டெடுத்ததென்னபொய்போமோ
அப்பாநான்இருக்கவும் என்னோடேபிறந்தும்
அந்தநரர்க்கஞ்சிஉன் சிந்தைஇப்படிலேமோ
குப்பைக்கீரைகிளைத்துக் கப்பும்கவடும்ஆகிக்
கொழுத்தாலும்கப்பலுக்குப் பெருத்தபாய்மரம்ஆமோ(போ)

௩. அரன்அயன் தந்தவரம் என்றாய்அவரைக்கூட
அடிக்கஎனக்குவரம்கொடுத்தார் பொய்சொல்லாதே
பரிவோபடைமிகுத்தால் அரண்நிற்குமோஇந்தப்
பஞ்சைவார்த்தைவிடடா எந்தன்கோபம்பொல்லாதே
அருகேகள்ளனும்ஆகி விளக்கும்பிடித்தாயேஊர்
அழித்தகுரங்கைவிடென்றுரைத்தாய் அதுஅல்லாதே
இரணியன்மகன் அந்த இரணியனைக்கொன்றால்போல்
என்னைக்கொல்லநினைத்தாய் இனிஎன்முன்நில்லாதே(போ)

## சரணம் அடைந்த விபீஷணரைக்குறித்து
## ஸ்ரீராமருக்கு அனுமார்கூறல்.

விருத்தம்.

என்றாராவணன் இந்த வார்த்தைசொல்ல
இரங்கிவிபீஷணன் அண்ணன் எனதுவார்த்தை
ஒன்றுமேபிசகாதென் றெழுந்தவ்வுரை
ஒழிந்துவானரச்சேனைக் கொழிந்தின்முன்னே
சென்றாராகவசரணம் என்றவார்த்தை
சீராமன்கேட்கமயிந் தனும்போய்ச்சொன்னான்
அன்றாராகவன்பலர்யோ சனையும்கண்டான்
அதுபோதில்அனுமந்தன் இதுசொல்வானே. (௫)

௪. தரு-உசேனிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவிபீஷணன்மீது-நமக்கித்தனையோசனை ஏது

அநுபல்லவி.

அந்தஇலங்கையிலே அறிந்தேன்இவனைமுன்னே
சந்தேகம்இல்லைசாமி தாசன் அனுமான்சொன்னேன் (இந்)

சரணங்கள்.

க. சொல்லும்புராணவேத சாத்திரம்-இவன்
செய்வதுதேவதா தோத்திரம்-பல
கல்விகேள்விக்கெல்லாம் பாத்திரம்-கள்ளம்
கபடறியான்அனு மாத்திரம்-இது
அல்லாமல்இவன்வீட்டில் அடுத்தபோதில் அநேகம்
நல்லநல்லசகுனம் நான்கண்டேன் அனுபோகம்(இந்)

உ. ஊத்தைஆனசுள்ளும் கள்ளும்-இவன்
உண்கிறான்என்பதைத் தள்ளும்-கண்டாள்
ஏற்றவன்என்றுநீர் கொள்ளும்-நல்ல
இங்கிதவான்எவர்க் குள்ளும்-இவன்
நேற்றுராவணன்என்மேல் நீட்டியகத்திவெட்டைத்
தீர்த்துவிட்டேஎனக்குச்செய்தான் பிராணபிரதிஷ்டை(இந்)

௩. மூவர்க்குங்கூடாத வெற்றி-கூட
முடிப்பதல்லோஉம்தம் சத்தி-சிறு



கூவத்தைக்கண்டுகடல் ஒற்றிப்-போன
கொள்கைபோல்ஆச்சே இந்தப்பெற்றிசாமி
தேவிக்கும்பெண்ணைக்கொண்டு தேற்றச்சொல்லிஅகன்றான்
ஆவத்தையினாலேவந் தபயம்அபயம்என்றான்(இந்)

## விபீஷணர் சரணாகதத்தைக் குறித்து
## ஸ்ரீராமர்கூறல்.

விருத்தம்.

தொடரா அனுமான் இந்தவண்ணம்
சொன்னமொழியும் கவித்தலைவர்
இடராஉரைத்த வாய்மொழியும்
இரண்டுமொழியும் மனம்கொண்டான்
உடனேஅபயம் என்றவருக்
குயிர்ஆனாலும் கொடுப்பதுவே
சடன்ஆம்என எல்லார்க்கும்மனம்
கரைப்பான்ராமன் உரைப்பானே. (௬)

௫. தரு-சௌராஷ்டிரராகம்-அடதாளசாம்பு.

பல்லவி.

சரணம்சரணம்என்றானே காவாதேவிட்டால்த்
திரணம்அல்லவோநான்தானே

அநுபல்லவி.

அரியவிபீஷணன்அங்கே அரக்கன்ஆனாலும்இங்கே
இருசெவிகேட்கவாய்விட்டு ராகவாஎன்றுகூப்பிட்டு(சர)

சரணங்கள்.

க. ரவிகுலத்தினில்வந்தேனே தண்டகாரணிய
தவசிகட்குரைதந்தேனே
சிவிராசன்புறவாலே தேகம்ஈந்தானேமண்மேலே
கவலையாய்இவன்ஏதோநொந்து கதறிக்கொண்டிங்கேவந்து(சர)

உ. பெற்றசடாயுவும்பாய்ந்தானே மருமகட்கா
உற்றபோரில்ஓடிமாய்ந்தானே
கத்தும்யானைஓசைகண்டு காத்தானேமாயன்பண்டு
சத்துருராவணன்தம்பி தான்ஆனாலும்என்னைநம்பி(சர)

௩. சங்கராஅபயம்என்றுனே மார்க்கண்டன்அவன்
பொங்கியகாலனைவென்றுனே
வங்கையோசுதென்னவீரியம் மாருதிசொன்னதேகாரியம்
அங்கவன்வந்தென்னைமேவ அழைத்துவாபோநீசுக்கிரீவ(சர)

## சுக்கிரீவன் அழைத்தபோது விபீஷணர் சொல்லிக்கொண்டு வருதல்.

விருத்தம்.

என்னரகுராமன்உரைப்படிவாரும் சாமிஇடம்எனச்சுக்கிரீவன்
சொன்னதைவிபீஷணன்கேட்டுப் புளகித்தான்கண்களில்நீர்சொரியநின்
பின்னைஎனும்சீதைதனைப்பிரிவித்த பாவிஉடன்பிறந்தபாவி [றுன்
என்னையும்வாஎன்றுரோசாமிஎன்றேதொழுகின்றுன்எழுகின்றுனே. ()

௬ தரு-ஆநந்தபைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்னையும்வரச்சொன்னுரோ-ரகுநாயகா
என்னையும்ராக்ஷதன் என்றன்னுரோ

அநுபல்லவி.

அன்னை ஆம்சீதாதேவியைக் கொண்டுபோனபாவி
தன்உடனேபிறந்த சண்டாளன் ஆகிவந்த(என்)

சரணங்கள்.

நெஞ்சில்க்கிருபை! இதுதானே-சாமிஎண்ணின
நினைறநான் அறிவேனே-பாவங்களுக்கு
அஞ்சினன்என்றசொல் உண்டோ-அடிமைகொள்ளல்
ஆம்எனமனது கொண்டோ-பாதங்களுக்குத்
தஞ்சம்என எண்ணினரோ-ராவணன்செய்த
வஞ்சம்என எண்ணினரோ-சிவனர்உண்ட
நஞ்சம்என எண்ணினரோ-இவன்எம்மாத்திரம்
கொஞ்சம்என எண்ணினரோ(என்னை)

மந்தர கிரியாலே-குழம்புங்கடல்
வானோர்க்கமுதம் முன்னலே-சந்தோஷம்ஆகத்
தந்ததே ஒருகாலே-என்னசெய்தாலும்
சகிப்பார்நல்லோர் அதுபோலே-ஆகையினலே
என்தன்பிறவியும் தீரும்-இலங்கையிலே
வந்திடுமோசூரியன் தேரும்-அரக்கருக்கு



அந்தரமுத்தியும் சேரும்-நிலவரமா
சந்தேகம்இல்லை இதுபாரும்(என்)

௪. கண்ணீர்ஆறுப் பெருகுதே-சாமிசொல்கொண்ட
காதில்இன்பம் வருகுதே-நெஞ்சும்உடம்பும்
வெண்ணெய்போலே உருகுதே-மயிர்க்கூர்ச்சிட்டு
மேனிபுளகம் தருகுதே-தாயைவிடென்று
எண்ணிநான்சொன்ன விசாரம்-எண்ணமல்அவன்
பண்ணினனே ஒட்டாரர்-அதனல்இந்தப்
புண்ணியனைக்கண்டேன் இந்நேரம்-அதுஎனக்கு
அண்ணன்செய்த உபகாரம்(என்)

## விபீஷணர் ஸ்ரீராமருடைய தெரிசனம் செய்தல்.

விருத்தம்.

பத்திவிபீஷணன்இவ்வாறுருகிஅடிக்கடிமண்மேல்பணிந்துவந்தான்
அத்திமுன்னேகூவவந்தஆதிமூலப்பரனேஅமரர்கூவ
சத்தியகோதண்டபதிஎனவந்தான்என்குறையும்நீக்கவந்தான்
நித்தியம்ஆம்எனத்தேறிமனம்கொண்டான்ராமதரிசனம்கண்டானே.

௭. தரு-மோகனராகம் ஆதிதாளம்.

பல்லவி.


ராமனைக்கண்ணுரக் கண்டானே-விபீஷணன்கை
மாமுடிமேல்வைத்துக்கொண்டானே

அநுபல்லவி

காமனும்செங்கமலப் பூமனும்பணிபரந்
தாமனை ஆயிர நாமனைக்கோதண்ட(ராம)

சரணங்கள்.

௧. வெள்ளம்ஆனவானர வர்க்க-நடுவேதம்பி
மேருமலைபோல்அருகே நிற்கப்-பூணில்லாமார்பம்
புள்ளிவில்போடாதமேகம் ஒக்கத்தோள்வளைநீக்கிப்
பூட்டில்லாமந்தரம்போல்ச் சோபிக்கமூன்றுலோகமும்
கள்ள அரக்கர்தினம் கிள்ளிக்கிள்ளிஅருந்தக்
கொள்ளைகொடுத்தமரர் துள்ளித்துள்ளிவருந்த
வள்ளல்ஆகிமுறை உள்ளபடிஇருந்தப்
பள்ளிஅரவணையைத் தள்ளிஎழுந்திருந்த(ராம)



உ. தருமம்ஆகரூபி — கரித்தானைப்-பிரசண்டகோ
தண்டமும்அண்டமும் — பறித்தானைத்-தாமரைபூத்த
கருமுகில்போல்அவ — தரித்தானை-மரவுரியைக்
கச்சைபோல்வச்சு — வரித்தானைச்-சனகன்கன்னி
இழைவிழியிலும்உள்ள — கருமணியெனவந்த
திருஉருவினில்ஒளி — பெறுகிடந்தாய்முந்த
விரதம்கொடுத்தமுடி — சிரசினில்க்கொண்டுசொந்த
அரசன்கொடுத்தமுடி — பரதனுக்கன்றுதந்த(ராம)

௩. பூமிதனில்அடிக்கடி — வீழ்ந்து-சூரியனைக்கண்ட
பூமலர்போல்முகப்பிரபை — சூழ்ந்து-ராட்சதகுல
ஆண்மைஎல்லாம்வரவரத் — தாழ்ந்து-சாமிகடக்கண்
ஆநந்தசமுத்திரம் தன்னில் — ஆழ்ந்து-சுந்தரம்உள்ள
காமனைஉதவிய — மாமனைத்துளசியந்
தாமனைத்திருமுகச் — சோமனைப்புசபல
வீமனைச்சானகி — வாமனைத்தேவர்கள்
ஆம்அனைவரும்பணி — பூமனைத்தசரத(ராம)

## விபீஷணர் ஸ்ரீராமரைச் சரண் அடைதல்.

### விருத்தம்.

வசம்உடன்இப்படிகண்டு நால்வர்ஆன
மந்திரிகள்வரவிபீ ஷணனும்வந்தான்
நிசம்உடனேராமச்சந்திரன் சன்னிதிக்கு
நேர்ஆகவரவரக்கண் ணீர்ஆருகி
அசையும்உடல்ஒடுக்கிஅய்யன் பதத்தில்வீழ்ந்தான்
அயோத்திராமாசரணம் என்னைக்காப்பாய்!
தெசரதராமாசரணம் சரண்என்றேதோத்
திரம்சொல்வான்அதிலே உத்தரம்சொல்வானே. (௯)

அ. தரு-புன்னாகவராளிராகம்-ரூபகசாப்புதாளம்.

### பல்லவி.

ராகவனேசரணம்ரகு — ராமாஉன்சரணம்
நம்பினேன்விபீஷணன் — உன்செப்பொன்ஆனசரணம்

### அநுபல்லவி.

ஆகாதான்உடன்பிறந்த — பாவந்தீர்த்திந்நோம்
அபயம்உனக்கபயம்என்னை — ஆள்வதுநின்பாரம்(ராக)

சரணங்கள்.

௧. பனைத்தாக்கொருஅம்புகொண்டு பாழில்எய்தால்போல
இணக்கம்சொன்னேன்ான்புத்தியை எறிந்துவிட்டான்சாமி
குணக்கெடுக்கநாய்வாலைக் கூடுமோகூடாததனுல்
துணித்துவிட்டுன்தனை அடைந்தேன்சுவாமி சித்தம்என்பாக்கியம் (ரா)

௨. பாம்புக்குப்பால்வார்க்கவார்க்கப் படுவிஷத்தைக்கொடுப்பதுபோல்
ஆம்புத்திநான்சொல்லச்சொல்ல அகற்றிவிட்டான்சாமி
வீம்புக்காரன் அவனுக்கினி மேல்அல்லவோதெரியும்உன்னைக்
காண்பித்துக்கொண்டேனைமுற்றிலும் காப்பாற்றஉன்தனக்கேகடன் ( )

௩. நாடறியச்சீதைதன்னை நம்குடிக்கோர்நெருப்பாகத்
தேடிக்கொண்டாய்என்றடிக்கடி தெரியச்சொன்னேன்சாமி
கேடுவரும்முன்னேமதி கெட்டுவரும்என்பதனுல்
மூடன்ஆனான் அவன்தனைநான்முழுதுந் துறந்துனையடைந்தேன் (ரா)

௪. வானவர்ஆகியபயிர்க்கு வளர்ந்திடும்ராட்சதக்களையை
ஈனம்அறப்பிடுங்கவந்தான் ராமன்என்றேன்சாமி
சானகியால்ஒருபத்தூத் தலையும்பனங்குலைபோல
மாநிலத்தில்விழுவானை மறந்துவிட்டுன்தனை அடைந்தேன் (ரா)

---

## ஸ்ரீராமர்விபீஷணருக்கு அபயமும் அரசும் கொடுத்தல்.

விருத்தம்.

கலங்கிப்பணிந்தவிபீஷணன்மேல் கருணைபொழிந்துதம்பியினுல்
துலங்கும்துணைப்பாதுகைமகுடம் சூட்டிஎன்பேர்உள்ளளவும்
தலங்கள்பதினுல்உள்ளளவும் சந்திராதித்தர்உள்ளளவும்
இலங்கைஉனக்கேஎனச்சொல்லி எடுத்தான்வலக்கைகொடுத்தானே.

௯. தரு-பரசுராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

இந்தாவிபீஷணா லங்காபுரிராச்சியம்

அநுபல்லவி.

இந்திராதிதேவர்கள் உள்ளநாள்வரைக்கும் (இந்)

சரணங்கள்.

௧. வேதம்உள்ளளவும்-வேத கீதம்உள்ளளவும்-பாரி
சாதம்உள்ளளவும்-பஞ்ச பூதம்உள்ளளவும்
இந்தா-இந்தா இந்தா-இந்தா (இந்)



௨. கார்உள்ளளவும்-கடல் நீர்உள்ளளவும்-ஈர்வழ்
பார்உள்ளளவும்-என்தன் பேர்உள்ளளவும்
தந்தேன்-தந்தேன் தந்தேன்-தந்தேன் (இந்)

௩. கேள்வியும்நீயே-பிர தாவியும்நீயே-என்
ஆவியும்நீயே-சிரஞ் சீவியும்நீயே
சொன்னேன்சொன்னேன் சொன்னேன்சொன்னேன் (இந்)

---

## விபீஷணர் ஸ்ரீராமருக்கு இராவணன் பெருமைகூறல்.

விருத்தம்.

வந்தவிபீஷணற்கிவ்வாறரசுதந்து
வரிசையுள்ளதுணைவனைப்போல்பரிவினுலே
சந்தமும்வாழியென்றராமச்சந்திரன்
தழைத்தருளால்அவனைவரவழைத்துவ்வாசகால்
அந்தராவணன்புரமும்உரமும்கோட்டை
அரணமுமக்களும்அமைச்சர்ஆனபேரும்
தொந்தம்உள்ளசேனைகளும்தெரியநீதான்
சொல்எனவிபீஷணனுஞ் சொல்லுவானே. (௧௧)

௧௦. தரு-பைரவிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

அந்தராவணன்பெருமையை-ஒருவகை
அறிந்ததைச்சொல்லக்கேளாய்-சாமி

அநுபல்லவி.

இந்தக்கடல்உலகில் அந்தக்கடலைநீங்கி
எழுந்தவதாரம்செய்த செழுங்கருணைக்கடலே
பிந்தியோமுந்தியோ என்றளவிடாதபுச
பெலவீமாரவி குலசோமாநான் (அ)

சரணங்கள்.

௧. சேட்டைக்காற்றடிக்கஆதியில் மேருமலைச்
சிகரம்மூன்றுபறி போச்சுது
ஒட்டமாஅந்தவிசை கடலில்எழுநூறு
யோசனைஅகலமாச் சாய்ச்சுது
காட்டம்ஆம்மதில் ஏழுசுற்றுடைலங்கை
நகர்என்றதற்கொருபேர் வாய்ச்சுது

கோட்டைவாசல்ஒவ்ஒன்றுக்குப்பதினறு
  கோடிசேனைகாவல் — ஆச்சுது
ஆட்டம்இல்மதில்க்காவல் — அரக்கர்ஆயிரம்கோடி
  அரமனைகாக்கின்றபேர் — அறுபத்துநாலுகோடி
மேட்டுப்பட்டணம்காவல் — அரக்கர்முப்பதுகோடி
  விழித்துவிண்ணில்நிற்பவர் — கொழுத்தநாள்எட்டுக்கோடி (அ)

உ. சிந்தியபுகைக்கண்ணன்கும்பன்நிகும்பன்வச்சிர
  தெந்தன்மஹாபாரிசன் — அதிகாயன்
பந்திபந்தியாஇவர்கோடானகோடிசேனைப்
  படைத்தோர்இன்னமும்ஒரு — வன்பேயன்
தந்திவெள்ளானையைச் சுழற்றிஅடித்தான்அவன்
  தம்பிகும்பகர்னன் — பெருவாயன்
மந்திரிகள்வெகுபேரில் அவனைக்கெடுக்கவந்த
  மந்திரிமகோதரன்உண் — டொருதீயன்
சந்திரலோகத்தைக் — கொள்ளைகொண்டானேரணமஸ்தன்
  சதிர்ஆனசேனைக்கெல்லாம் — அதிபதிஆம்பிரகஸ்தன்
இந்திரனையும்சிறையில் — இட்டானேஇந்திரசித்தன்
  இவர்க்கும்ஆயிரவெள்ளத் — தவர்க்கும்அவனேகர்த்தன் (அ)

௩. போதவேவருணன் பாசத்தையும்குபேரன்
  புஷ்பகத்தையும்கூடப் — பறித்தானே
ஏதோபோல்வெள்ளி மலையைப்பிடுங்கிமார்பால்
  எட்டானைக்கொம்புகளும் — முறித்தானே
வேதனைசெய்தந்தெய்வப்பெண்களைவீட்டில்
  வெள்ளாட்டிவேலைசெய்ய — மறித்தானே
ஆதிசிவன்கொடுத்தவாள்கொண்டபலத்தினல்
  ஆரையும்மசகமாக் — குறித்தானே
வாதைசெய்யும்மூல — பலம்உண்டின்னம்உபரி
  யண்டலத்தில்அவனுக் — குண்டோவேறெதிரி
சீதரனேஉன்கைக் — கோதண்டம்ஆனவரி
  சிலைக்கும்கணைக்கும்அவன் — தலைக்கும்கணக்குசரி (அங்)

---

## ஸ்ரீராமர்முன் விபீஷணர் அனுமாரைத் துதித்தல்.

விருத்தம்.

மானவிபீஷணன்இந்த வாறுசொல்லி
  மரம்ஏழும்கரனையும் வாலியையும்கொன்றாய்



ஆனதுகண்டிங்குவந்தேன் அல்லகண்டாய்
  அய்யாஉன்தூதுவன் அன்றரக்கன்விட்ட
சேனைகளைமடித்திலங்கை கொளுத்திஉன்பால்
  சேர்ந்ததுகண்டினிநீயே திக்கென்றெண்ணி
நானும்இங்கேசேர்ந்தேன் என்றனுமான்தன்னை
  நாடிஇன்சாமிமுன்கொண்டாடினனே. (கஉ)

கக- தரு-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

இந்தஅனுமான் இலங்கையிற்போர்செய்த
விந்தையை என்னசொல்வேன்

அநுபல்லவி.

வந்தனைசெய்தந்த — சீதையைக்கண்டு
மதத்தாலேஎங்கும் — குதித்துக்குதித்துக்கொண்டு (இந்)

சரணங்கள்.

க. சாமிநீதந்த அடையாளம்தந்தம்மை
  தந்தைஅடையாளம் — அந்தமாக்கைப்பற்றி
மேன்மைஅசோக வனத்துமரங்களை
  வேரோடும்தூரோடும் — வீசிவிழச்சுற்றி
சேமிக்கும்அந்த வனகிங்கரர்களைத்
  திசைக்கும்அப்பாலே — தெறிக்கும்படிஎற்றி
ஆம்எனும்பஞ்ச சேனதிபரைக்கையால்
  ஆறிடவேரத்தம் — பீறிடவேகுற்றி
அங்கவர்சேனை — நடுங்கிடவாரி
  அடங்கலும்வீசு — பிணங்கள்அவர்அவர்
மங்கையர்முன்விழத் — தங்கள்பிணம்என்று
  மயங்கியேகண்டு — பிணங்களில்மேல்விழ
மடித்தவாய்த்தலை — ஓரிசிதரிட
  வாய்களைக்கவ்வி — நாங்கள்உதறிடப்
பிடித்திடும்கால — தூதர்பதறிடப்
  பெண்கள்கூடிக்கொண் — டெங்கும்கதறிட (இந்)

உ. தோரணகம்பத்தின் மேற்கொண்டபின்னும்
  தொடர்ந்துவரும்அக்ஷ — யன்படையைப்பார்த்து
பாரினிற்பாய்ந்துகைக் குத்திலும்எற்றிலும்
  பல்லாலும்கல்லாலும் — செல்லுகள்போல்மாய்த்து
வீரியம்பேசிய அட்சயனைத்தூக்கி
  மேலும்கீழும்போட்டுக் — காலினலேதேய்த்து

திரும்சரீரத்து ரத்தத்தைநெற்றிக்குச்
சிங்காரம்ஆகிய — சிந்தூரமாச்சேர்த்து
சித்திரவில்இந்திர — சித்தன்விடும்படை
முற்றிலும்காலால் — உதைத்துவிழக்கொன்று
மற்றவன்பின்சென்று — கொற்றஅரக்கன்முன்
சுற்றியவால்க்கோட்டை — வைத்ததின்மேல்நின்று
மாயத்தினாலே — அழியாதடாசீசீ
மார்க்கம்அல்லஅடா — என்றேஎசிஎசி
வாயில்வராயிடும் — பாலேபேசிபேசி
வாலில்அவன்இட்ட — தீயைவீசிவீசி(இர்)

௩. சுந்தரமாடங்கள் கூடங்கள்பீடங்கள்
துர்க்கம்எல்லாம்தணல் — பக்கம்எல்லாம்தணல்
சந்திகள்பந்திகள் மேடைகள்ஓடைகள்
சாலைஎல்லாம்தணல் — சோலைஎல்லாம்தணல்
முந்தியகோட்டைகள் கொம்மைகள்பொம்மைகள்
முற்றம்எல்லாம்தணல் — சுற்றம்எல்லாம்தணல்
விந்தையதாகிய துங்கஅரங்கமும்
வீதிஎல்லாம்தணல் — வேதிஎல்லாம்தணல்
விலகிவெந்தோர்சிலர் — அலறிவெந்தோர்சிலர்
மெலியவெந்தோர்சிலர் — நலியவெந்தோர்சிலர்
தலைகள்வெந்தோர்சிலர் — முலைகள்வெந்தோர்சிலர்
கலைகள்வெந்தோர்சிலா — நிலைகள்வெந்தோர்சிலர்
தாழும்பிணத்தால் — அவனிநெளிக்கவே
சானகிவாழ்மரம் — ஒன்றும்தளிர்க்கவே
ஏழுதினம்பட்ட — ணம்தத்தளிக்கவே
ராவணனும்பயர் — தோடிஒளிக்கவே(இர்)

## ஸ்ரீராமர் வருணன்பேரில் அம்புதொடுத்தல்.

விருத்தம்.

அறியும்விபீஷணன்சொல்ல அனுமான்வெற்றி
அறிந்தவனுக்குகந்து சிரஞ்சீவியாக
மறுவில்வரமதுகொடுத்தான் கடலைத்தாண்ட
வருணமந்திரம்செபித்து விரிதருப்பைமேலே
பெறுதினம்ஓர்ஏழும்போய் ராமச்சந்திரன்
பின்னும்வருணனைக்காணன் தம்பிக்கோதி
எறிகடல்மேல்சினந்து கோதண்டம்நாணி
ஏற்றினன்சரமாரி தூற்றினனே. (௧௩)



உ௧ தரு-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

தொடுத்தானே-சரதாரை-தாரைக்குமாரன்-கொடுத்தானேகடல்நீரை

அநுபல்லவி.

தொடுத்தானேஏழுநாள் — படுத்தானேஅதைக்கூடத்
தொடுத்தானேவருணன்மேல் — எடுத்தானேகோதண்டம்(தொ)

சரணங்கள்.

௧. கனல்கனலாஎங்கும் — பாய்ந்ததே-பிரம்ம
கமண்டலசலங்களும் — தீய்ந்ததேமலையிற்ச்
சுனையும்தாரையாவற்றிக் — காய்ந்ததே-புகையால்
சூரியன்பரியும்நடை — ஓய்ந்ததே
புனலிலேசெங்கமலமலர்என — விரிகொடுஞ்சுடர்தழைய
வனதிமிங்கிலதிமிங்கில — மகரமீனுகள்குழைய
அனல்எழும்பொறிசிதறவெகுவெகு — கணைகளொடுகணைஇழைய
இனிஎங்கேஇடம்என்றுவடவாக்கினியும்போய் — மறுகடலில்நுழையத்
(தொடுத்)

௨. சிட்டமுனிவர்தவம் — சிறக்கவே-நீரில்
செழிக்கும்ராக்ஷதரும்போய் — இறக்கவே-அவர்
பட்டஉதிரம்எங்கு — பறக்கவேகடல்
பாய்ந்துசெவசெவென்று — நிறக்கவே
அட்டகெசங்களும்தேவரும்பயப் — பட்டுக்கண்விழிபிதுங்க
மட்டில்லாஅனல்வெட்டையால்சுருண் — டெட்டுநாகமும் அதுங்க
இட்டம்ஆம்கவிப்படைஎலாம் — திகில்இட்டுச்செடிஒதுங்கச்
சுட்டதூதன்வந்தானென்றிலங்கைப்பட்டணமும்திடுக்கிட்டுப்பதுங்கத்
(தொடுத்)

௩. தெரிந்துபாதாளமும் — கண்டதே-ஆதி
சேஷன்முடியும்சாய்ந்து — கொண்டதே-வானிலப்
பிரிந்துநவக்கிரகமும் — விண்டதே-அந்த
பிரம்மலோகமும்புகை — உண்டதே
பொருந்தவிடும்ஒருதொடைக்குநூறு — பிரம்சரங்கலாய்பெருக
விரிந்தகடலினில்இருந்தமலைகளும் — எரிந்துகரியாக்கருக
பரிந்துநதிமடவார்கள்கண்ணீர் — சொரிந்துசாமிமுன்உருக
வருந்தவருந்வாதவருணனும் — பொரிந்துபொரிந்துடல்கரிந்துவருக
(தொடுத்)

## ஸ்ரீராமரை வருணன் சரண் அடைத்தல்.

விருத்தம்.

பெருமான்பிறகக்கினிவாளி பிடிக்கவருணன் துடித்துவந்து
பருமாமணிஆயிரமாலே பாதகாணிக்கை ஆகவைத்து
கிருபாசரணம்பிழைபொறுப்பாய் நீயேசரணம்எனதாவி
தருவாய்சரணம்என்முன்னே தாழ்ந்தான் அடிக்கீழ்வீழ்ந்தானே. (௧௪)

௧௩. தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சரணம்சரணம்ரகுராமா நீஎன்னைத் தற்காத்தருள்பரந்தாமா

அநுபல்லவி.

விரிகடல்வேந்தன்உன் திருவடிசேர்ந்தனென்
மேல்என்னஉபசாரம் ஆயிரம்நமஸ்காரம் (சர)

சரணங்கள்.

௧. மட்டிமீன்ஒன்றேடொன்று மல்லாடிஅமர்பூணும்
வழக்குதீர்க்கப்போனேன் இதுக்கோஉன்மனம்கோணும்
எட்டும்ரண்டும்தெரியா எனக்கித்தனையோகாணும் (சர)

௨. ஏதுபலம்இல்லாத நீஒருமானிடன்
என்றன்னைநினைத்தால்நான் வீழ்வேன்நகரத்துடன்
நீதிநல்லதிதென் றறியா தகான்அசடன்
சிறியோர்செய்தபிழையை பெரியோர்பொறுக்கக்கடன் (சர)

௩. திக்குவேறில்லைஉன்தன் பாதத்திலேபுகுந்தேன்
சேதுபந்தனம்செய்ய என்முதுகிடம்தந்தேன்
அக்கினிகணைவிட வேண்டாம்நான்மிகநொந்தேன்
அலைகடல்துயின்றோனே நான்உன்னைநம்பிவந்தேன் (சர)

---

## வானரவீரர்கள் சேதுபந்தனம் பண்ணுதல்.

விருத்தம்.

இரக்கமாவருணன்இந்த வாறுபோற்ற
ராகவனும்கருணைசெய்து மருகாந்தார
அரக்கர்பேல்அக்கணையை விடுத்தான்அப்பால்
அபயதானங்கொடுத்தே வழிகாட்டென்றான்
பாத்திறல்அவனும்என்மேல் அணைசெய்துன்தன்
படைஎல்லாம்நடத்தென்றான் கூடிக்கூடிக்



குரங்குவீரர்கள்மலைமேல் மலையாவீசிக்
கொட்டினார்கடலில்அணை கட்டினாரே. (௧௫)

௧௪. தரு-மோகனராகம்-அடதாளசாப்பு.

பல்லவி,

சேதுபந்தனம்செய்தாரே தேவர் சீதமலர்மழைபெய்தாரே

அநுபல்லவி.

நாதனும்கவிக்கெல்லாம் நாதனும்இலங்கைக்கு
நாதனும்அல்லாமல் ஓதும்வானரர் எல்லாம்(சே)

சரணங்கள்.

௧. மூர்த்தனான்முகன்மகன் இந்திரன்மகன்மகன்
சுந்தரததிமுகன் கந்தமாதனன் அனு
மந்தன்குமுதன் மயிந்தன் துமிந்தன்
வசந்தன்முதலோர்கூடி
வசந்தமலைஉனக்கு இந்தமலைஎனக்கென்
றெந்தமலையும்ஓங்கித் தம்தம்கைகளால்வாங்கித்
தொந்தராகவன்முன்னே தந்தமொழிபடிக்கு
வந்தர்தத்துறையிறக்கி டந்தவருணன்மேல்(சே)

௨. கடுத்துமுகங்கள்சிடு சிடுத்தராட்சதர்தம்மைக்
கெடுத்துவேரோடே கீண் டெடுத்தெறிவதுபோலே
அடுத்தமலைகளைக்கீண் டெடுத்தொருவர்க்கொருவர்
சடுத்தம்பேசிப்பேசி
மடுத்துவாயினில்ச்சில தொடுத்ததோளினில்ச்சில
படுத்துசிலமலையை எடுத்துத்தலையில்வைத்து
விடுத்துநளன்கையிலே கொடுத்துப்பெருங்கடலின்
நடுத்திடல்ஆம்படி தடுத்துவகைவகையாச் (சே)

௩. மேட்டின்மலைகளோடு நாட்டின்மலைபிடுங்கி
ஓட்டிஎரியஅலை ஆட்டியதுளிதெய்வ
நாட்டின்மங்கையர்இடை பூட்டியதுகில்குளிப்
பாடிவெட்கம்ஊட்டி
தாட்டிகம்உடன்வெகு போட்டிபோட்டிகள்ஆக
பாட்டில்அடுக்கிசைந்து மூட்டிமூன்றுநாளையில்
நாட்டியோசனைப்பத்து கூட்டி அகலம்செய்து
நீட்டி நூறுயோசனை காட்டி இலங்கைமட்டும்(சே

## ஸ்ரீராமர் சுகசாரணரோடு கூறுதல்.

விருத்தம்.

வளம்ஆன அணைகண்டுமகிழ்ந்தராமன்
மலைஎனும்சுவேலையில்ஏறிச் சகலபேர்க்கும்
நளனலேவீடமைத்தங் கிருந்தபோது
நல்லசுகசாரணர் ராவணனல்வந்து
தளம்மீது திரிதல்கண்டு பிடித்துக்கட்டித்
தந்துவிபீஷணன்காட்டச் சாமிகண்டான்
களவாளன்அரக்கன்அய்யோ இனிஈடேறக்
கரைசொல்வீர்என்றவரோ டுரைசொல்வானே. (கசு)

கரு. தரு-பியாகடைராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சொன்னான்ஸ்ரீராமன்என்று ராவணன்முன்னேசென்று
சொல்வீர்சுகசாரணரே

அநுபல்லவி.

செங்கெல்வளர்அயோத்தி தெசரதமகராசன்
தீக்ஷணம்உள்ளபாலன் ராட்சதகுலகாலன்(சொ)

சரணங்கள்.

க. மாயமான்பின்னேவந்து நாய்எனவேனுழைந்து
சேயஅருந்ததிக்கும் தாயைஅருங்கொடிய
தீயைச்சிறையில்இட்ட பேயனேநரகத்தில்
ஏயஇடுவேன்என்றும்
தூயமுனிவர்கண்டு ஏஏஎன்றுசிரிக்கச்
சாயும்பனங்குலையின் காய்எனவிழப்பத்து
வாயும்தலையும்சுற்றிப் பேயும்கழுகும்கொத்தப்
பாயும்என்கணைஎன்றும் ஆயிரம்தாம்ஆகச்(சொன்)

உ. மண்டலஅரசரும் எண்டிசைஅதிபரும்
அண்டரும்முனிவரும் புண்டரீகனும்அந்தக்
கொண்டல்வண்ணனும்நீல கண்டனும்அவனுடை
அண்டையில்இருந்தாலும்
மண்டுகளரிஇடு சண்டையிலேஎனது
சண்டவிசையகோ தண்டம்விடும்கணையால்
அண்டினபடையும்தன் மண்டைகளும்உருளக்
கண்டம்கண்டங்கள்ஆகத்துண்டம் இடுவேன்என்று (சொன்)



ங. மூத்தமகனும்பின்பு வாய்த்தமகனும்கும்ப
சுரோத்திரனும்படையும் கோத்திரமும்குலமும்
கூற்றவன்கைக்கொள்ளவே காற்றில்இலவம்பஞ்சாத்
தூற்றிவிடுவேன்என்றும்
வேற்றொருமங்கையரைப் பார்த்தவிழிகள்எல்லாம்
காற்றம்எழும்பநரி கோத்துவளைத்திழுக்க
நாற்றிசையிலும்அப கீர்த்திஉண்டானபடி
தூர்த்தனைஎமன்உல கேற்றிவிடுவேன்என்றும்(சொ)

---

## ராவணனுக்கு மாலியவான் புத்திகூறல்.

விருத்தம்.

வள்ளல்எனும்ராமன்உரை தலைமேல்கொண்டு
வந்தசுகசாரணர்கள் போனார்சேர்ந்த
பிள்ளைவிபீஷணன்செயலும் இலங்கைப்பட்டம்
பெற்றதுவும்திருவணையும் சுவேலைமேலே
கொள்ளநெடுஞ்சேனை இறங்கினதும்எல்லாம்
கூறினார்புண்ணில்க்கோல் இட்டால்ப்போலத்
துள்ளிஇராவணன்வெகுண்டான் அதுக்குநீதி
சொல்லுவான்மாலியவான் சொல்லுவானே. (கஎ)

கஅ. தரு-ஆரபிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கேள்அடாராவணனே-நான்சொன்னபுத்தி-கேள்அடாகண்மணியே

அநுபல்லவி.

நாளைத்தெரியும்அடா மாலியவான்பேச்சு
ராமன்பேர்சொல்லச்சொல்ல எடுக்குதேபெருமூச்சு(கேள்)

சரணங்கள்.

க. முற்றிலும்தானேஅந்த ராமவதாரம்தன்னை
மூவரும்ஓர்உருவா எடுத்தார்என்றாரே-அப்பால்
சற்றும்அறிந்திலையோ தேவர்எல்லாரும்குரங்காச்
சமைந்தார்என்றாரே இப்பால்
ஒற்றிவெள்ளம்வரும்முன் அணைகோலிக்கொள்ளவேணும்
ஊரில்க்கிட்டிவந்தாரே செய்வதுண்டோஇனிமேல்
பித்துப்பிடித்தால்ப்போலப் பிடித்ததைப்பிடியாதே
பேதைசீதையைவிடு பிழைக்கிறதுமெய்ஆனால்(கேள்)

௨. பண்டிவன்கையாலேநான் பட்டபாடுகொஞ்சமோ
பழம்புண்ணானிபரி யாரியென்பதுபொய்யோ
மீண்டுபண்ணுகேகூத் தாடிச்சிலம்பம்படை
வெட்டுக்காவது மெய்யோ
உண்டானவார்த்தைசொன்னேன் சுடுகெண்டைக்காகளரி
உடையாதேராமன்சேனைக் குன்சேனைமாவோநொய்யோ
துண்டரீகபுத்தி வேண்டாம்அடாஉனக்குச்
சுயபுத்திபோனாலும்என் சொல்புத்திவேணும்அய்யோ(கேள்)

௩. வரவரவிபரீதம் கண்டல்லோசொல்லவந்தேன்
வலியத்தேடிச்சொல்லவந்தேனேஉன்தன் அண்டைக்
கிரியைஅறிந்துவந்து தூதர்சொன்னால்ஏண்டா
கிழித்துக்கொள்ளுகிறாய் தொண்டை
ஒருகுரங்கின்கையாலே படுபாதிசேனையும்போய்
ஊரில்மூலைக்குமூலை உருளுதேதலைமண்டை
இருமனதாளன்றுநீதே எல்லாக்குரங்கும்வந்தால்
இலங்கைமட்டிலேபோமோ எப்படிஆமோசண்டை (கேள்)

## மாலியவானை ராவணன் நிந்தித்தல்.

விருத்தம்.

மீட்டாங்குரைக்கும் செயல்உண்டோ
விடியுந்தனையும் மழைபெயினும்
ஓட்டாங்கிச்சில் கரைவதுண்டோ
ஒருமாலியவான் உரைத்ததெல்லாம்
கேட்டான்எனதுசெவிக்காகாக்
கேள்விநீசொன் னதுபோதும்
பாட்டாகேளாய் எனஅரக்கன்
பழிப்பான்சொல்லி ஒழிப்பானே.

௧௭-தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

எங்கேவைத்திருந்தாய்இந்த ஏழைமதிஎன்மாலியவானே

அநுபல்லவி.

அங்கேபோன விபீஷணன்போலே
ஆளைச்சுற்றிபாராமல் அளக்கிறாய்ஒருகாலே(எங்)



சரணங்கள்.

௧. ஆயிரம்வெள்ளம் சேனைஉண்டிதை எவர்தாமோ
அறியாதவர்இங்கே
அல்லதொருசிறு முள்ளுகுத்தினால் மலைநோமோ
அதுகொண்டென்னபெரு
மாயமோஇந்தக்காட்டுப்பூச்சிகள் கெதிர்ஆமோ
வல்அரக்கர்படைக்
வாயைமூடடாபேயாஉனக்கென்ன
வயதுசெல்லச்செல்ல மதிதான்கெட்டுப்போமோ (உங்)

௨. வழக்கமோ மாயனுக்கும்என்கணை சவ்வாதோ
மனியோமார்பில்இடும்
மதித்தகைலாசம் எடுத்தநான்இந்த சலம்ஏதோ
மனிதரைப்பொருதச்சங்
உழக்கிலேகிழக்கும் மேற்கும்காட்டி சூதோ
உறக்கிறாய்இதென்ன
உடற்குள்ளேநா வளைக்கிராய்விரல் எப்படி ஆகாதோ(எங்)
உரல்ஆனால்உரல்

௩. அதம்செய்யேனேசீதை யால்இளைத்தால்நீ பேர்மாற்றி
அழைஅப்பாஎனனைப்
ஆலகாலவிஷ மோசிவனுக்கும்என் களை ஆற்றி
அம்பைவிழுங்கப்போமோ
பதுககிராக்ஷதர்முன் பயப்படும்நாருக்குப் காம்ஏற்றிப்
பயப்படச்சொன்னாய்பயங்
பயப்படும்நார்கீழே பயப்படும்குரங்குக்கும் வெகுநேத்தி(எங்)
பயப்பட்டச்சொன்னாய்இது

## சாரணன்ராவணனுக்கு ஸ்ரீராமர்முதலோரைக்காட்டல்

விருத்தம்.

அன்றுசொன்னபாட்டனை இவ்வாறுதள்ளி
அந்நேரம்கன்னியர்கள் ஆடப்பாடத்
துன்றுமணிஉத்தரகோ புரத்தில்ஏறிச்
சூரியனைக்கண்டதொரு ராகுபோலக்
கன்றிஇராமனையும் சேனையையுங்கண்டு
காய்ந்தராவணனுக்குச் சுவேலைமேலே
நின்றவர்இன்னார்இன்னார் என்றேகையை
நீட்டினான்சாரணன்எதிர் காட்டினானே. (௧௧)

க௮. தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பாரும்பாரும்சாமீ-ராவணேஸ்வரரே-பாரும்பாரும்சாமீ (பாரு)

அநுபல்லவி.

நேரும்கவிகள்எல் லாரும்கும்பிட
நீலமலைபோலே சுவேலமலைமேலே
ஏர்வையாஎதிர் சேர்வைதரும்ராமன்
இவனே ஆகிலும்கிராணி இவனேகோதண்டபாணி(பாரு)

சரணங்கள்.

க. துடுக்கன்அந்தலட்சுமணன் செவிகளும்மூக்கும்
சூர்ப்பநகியைக்கொய்து விட்டவன்
அடுத்தராமனுக்குக் கைகொடுக்கிறான்இதோ
ஆதித்தனுக்குப்பிறந் திட்டவன்
இங்கேநிற்கிறவன் நம்மைநாசஞ்செய்ய
இலங்கையைவிட்டுப்புறப் பட்டவன்
ஒடுக்கிக்குரங்குக்குள்ளே குரங்காநிற்கிறான்இந்த
ஊரைக்கரிகரியாச் சுட்டவன்-உற்றுப்(பாரு

உ. முந்தக்கடல்கடைந்த வாலிமகன்அவன்
மூர்க்கன்அங்கதன்வெகு தாக்கன்
இந்தப்பெருவணையைக்கட்டியநளன்அவன்
இவர்கள்குமுதன்குமு தாக்கன்
கெந்தமாதனன்அவன் சதவலிஇவன்அவன்
கேசரிஇவன்கவ யாக்கன்
விந்தைக்கரடிக்கு நாதன்சாம்புவான்அவன்
வெகுநாள்ஆயுள்ள தீர்க்கன்-உற்றுப்(பாரு)

௩. வாய்ச்சநீலன்முதல்த் தலைவரும்மனிதரும்
வானரைச்சேனைகூட ஈதே
பூச்சிக்கூட்டம்இது தேவரீர்உடன்
போரடுமோகளம் மீதே
நீச்சுக்கடலிலே குரங்கிட்டமலைஎல்லாம்
நெட்டிப்போலேமிதந்த போதே
ஆச்சுதென்னஇனிக் காலானுகூலம்
அவர்க்கோஉமக்கோ தெரியாதே கண்ணாலே-உற்றுப்(பாரு)



## சுக்கிரீவனுக்கும் ராவணனுக்கும் மல்லுத்தம்.

விருத்தம்.

சாரன்இதுசொல்லியபோது தள்ளிஅரக்கன்எள்ளிவிட்டான்
வீரம்உடனேசுவேலமலை மேலேநின்றராகவன்முன்
ஈரம்அகன்றராவணன்இங் கிவனேஎனவீடணன்காட்ட
வாரம்உள்ளசுக்கிரீவன்அதை மதித்தான்அவன்மேல்க்குதித்தானே.

௧௧. தரு-கலியாணிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

சுக்கிரீவனுக்கும்-தசக்கிரீவனுக்கும்-தொடர்ந்ததேமல்லுயுத்தம்

அநுபல்லவி.

கைக்குள்விபீஷணன்காட்டும் முன்சாய்ந்த
கருமலைமேல்ஒரு பெருமலைபோல்ப்பாய்ந்த (சுக்)

சரணங்கள்.

க. கருகியமேனி அரக்கன்முன்பாய்ந்திவன்
கையால்க்கன்னத்தில் அடித்தான்
இருபதுகைகளும் ஓங்கியே அவன்
இவன்மேல்இடிப்போலே இடித்தான்
ஒருநிமிஷத்தில் இவன்அவன்மார்பில்
உதைத்தான்அவன்கட்டிப் பிடித்தான்
குருமணிமேடையில்த் தேய்த்தான்இவன்அவனைக்
குத்திஇரத்தத்தைக் குடித்தான்
ஒருவர்கைகளைஒருவர் பின்னவனே
ஒருவரைக்கடித் தொருவர்தின்னவே
இருவர்கண்ணிலும் பொறிகள்மின்னவே
இலங்கைநகர்எங்கும் கிடுகிடென்னவே (சுக்கி)

உ. விறலிறெனச்சுற்றி வானரவீரனை
மேல்அரக்கன்எறிந் தாடினான்
பிறகிவன்அந்தஅரக்கனைப்பாய்ந்து
பிடித்துநிலத்தோட சாடினான்
பொறிஅரவம்கதிரோனை மூடினாற்ப்போல்
அரக்கன்பின்னும் மூடினான்
கறுவிக்கிளம்பிக் கவிமன்னவன் அந்தக்
கண்டகனோடேகை கூடினான்
உறுமிவிழுந்தந்த அகழி அடையவும்
ஒருவர்க்கொருவர்தம் தலைகள்உடையவும்

மறுபடியும்தொடர்ந் தாக்கன்இடையவும்
வாலிபோல்இவன் அவனைக்கடையவும்(சுக்)
தானம்பிசகாஎட்டானைகளும்இந்தச்
சண்டையினல்க்கண்கள் பிதிர
கானக்குரங்கும் அரக்கரும்என்னமாக்
காணுவோம்என்றுநெஞ் சதிர
ஆன அரக்கன்மணியும்பணியும்
அலங்கோலமாஅறுந் துதிர
வான்அளவும்துகள்பாயஇருவர்க்கும்
வரவரக்கோபமும் முதிர
ஈனநிருதனும் இவனும்அடிக்கடி
எதிர்த்துப்போர்செய்யும் வேளையினில்க்கெடி
வானரேசுரன் அரக்கன்பத்துமுடி
பணியும்பறித்தெழுந் திடவேஇப்படி (சுக்)

---

## ஸ்ரீராமர் சுக்கிரீவன் பிரிவைப்பற்றி அவனோடு முறையிடல்.

விருத்தம்.

பறித்தமாமணியைச்சாமி பாதத்தில்வைத்துவீழ்ந்தான்
எறிக்குமாகீர்த்திசீதை எனவிபீஷணனும்சொன்னன்
அறிக்கைஆகியசிராமன் அவனைமுன்பிறிகையாலே
குறித்தசுக்கிரீவனோடே குறைசொல்வான்முறைசொல்வானே.

உ. திபதை-சஹானராகம்-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

க. அம்புபோல்ப்பறந்தாயே எங்கேபறந்தாய்-அடாசுக்கிரீவா
நம்பினஎன்னை எப்படிமறந்தாய்
உ. சீதையைத்தம்பியை வேண்டிவருந்தேன்-அடாசுக்கிரீவா
நீதுணைஎன்றல்லோ நம்பிஇருந்தேன்
௩. எழுபதுவெள்ளம் சேனைக்கும்எனக்கும்-நீஅல்லோசீவன்
முழுமதிமோசம் போச்சுதோஉனக்கும்
௪. கைப்பிடித்தஎன்னை ஏண்டாசதித்தாய்-தன்னந்தனியே
எப்படிராவணன் மேலேகுதித்தாய்
௫. அந்தராவணனால்உன்உயிர் போமே-ஆனால்என்அம்பால்
எந்தலோகமும் நீறுநீறுமே
௬. உன்னைக்கொன்றானைக்கொன்றாலும் தோற்றேன்
பின்னைக்கொன்றாலும்நான்அல்லோ தோற்றேன்
௭. என்உடன்சொல்லாத தென்னமுண்டோ-கோபம்வந்தாலும்
தன்னைஅறியாச் சன்னதமும்உண்டோ



அ. சிந்தஅரக்கன் முடியைக்கொள்ளை-நான்கொள்ளும்முன்னே
முந்திகொண்டாயே நீயேஆண்பிள்ளை

## ஸ்ரீராமர் வானரவீரரோடு இலங்கையை வளைத்தல்.

விருத்தம்.

எடுத்திந்தப்படிஇரங்கச் சுக்ரீவன்தன்னை
இசையவிபீஷணன்புகழ அறிந்துமறுநாள்வாய்
வடக்கினில்ச்சுக்ரீவன் மேற்கினில்அனுமான்தெற்கு
வாசலில்அங்கதன்கிழக்குவாசலிலேநீலன்
படைத்தொகைஒவ்வொருவருக்குப்பதினேழுவெள்ளம்
பழும்கனிகாய்களுக்கிரண்டுவெள்ளம்எனப்பகுத்தே
விடுத்தபின்புவடக்கினில்த் தம்பியினுடன்கோதண்ட
விற்கொண்டான்ஸ்ரீராமன்நிற்கின்றான்தானே. (உஉ)

## இராவணன் இலங்கைக்குக் காவல்வகுத்தல்.

இதுவுமது.

கோலமுடிமணி இழந்துவெட்கி இராவணன் போனன்கோட்டைவாசல்
நாலிலும்வானரப்படைகள்வளைந்ததனைச் சார்த்தூலனாலேகேட்டான்
மூலவடவாசல்தனைநான்காப்பேன் நீர்வாசல்மூன்றும்காப்பீர்
சாலும்என அவரவரைத்தேற்றுவான் நகர்காக்கச்சாற்றுவானே. (உ௩)

உ0. தரு-உசேனிராகம்-அடதாளசாப்பு

பல்லவி.

பட்டணம்பதனம்-இலங்கைப்-பட்டணம்பதனம்

அநுபல்லவி.

அஷ்டதிக்கெல்லாம் செயித்தோம்என்றெண்ணி
அசட்டுக்குரங்கென் றகந்தையேபண்ணி
கெட்டதுசெய்யல் ஆகாதுகாணும்
நெருஞ்சிமுள்தைத்தாலும் குனிஞ்சிபிடுங்கவேணும்(பட்)

சரணங்கள்.

க. ஆச்சரியப்பதினேழுவெள்ளத்துடன் அனுமந்தன்மேலைக்கோட்டை [வாசலில்
பூச்சிக்குள்பெரும்பூச்சிபோல்வந்துபுறம்வளைத்தானும்
பேச்சுக்குள்இந்திரசித்தேஅவனைப்பிடியடா இருநூறுவெள்ளம்கொ [ண்டு
தேய்ச்சுவிடடாஉன்கையாலேதின்னடாதடைஎன்னடாஇந்த
(பட்டணம்)

உ. அப்பனைக்கொன்றமனிதர்க்காக அங்கதன்பதினேழுவெள்ளத்து [டன்
துப்புள்ளதெற்குவாசலில்வந்து சூழ்ந்துகொண்டானும்
ஒப்பிலாதமாபெரும்பாக்காஉடன்மகோதராஇருவீரும்சென்று
கைப்படைக்குள்ளே அவன்படைஎல்லாம்கரையுங்கள்மண்மேல் அரை
யுங்கள் இந்த (பட்டணம்)

௩. கர்த்தன்நீலன்கிழக்குவாசலைக் கட்டிக்கொண்டானும்
சுற்றியவெள்ளம் பதினேழுடன்தொத்தும்குரங்குகளுக்கெல்லாம்
பெற்றிஉள்ளபிரகஸ்தனேஉன்தன் பேர்சொன்னால்அந்தக்காலனும்தலை
வைத்துப்பட்டான்இருநூறு-வெள்ளம்கொண்டுமசகம்போல்கை
யால்ப்பிசையடாஇந்த (பட்டணம்)

௪. திடத்துடன்வானரரும்நரரும் சிங்கத்தின்காட்டைநரிவளைத்தாற்
வடக்குவாசலைச்சுக்கிரீவன்உடன் வளைத்துக்கொண்டாராம் [போல
நடக்கிறேன்இருநூறுவெள்ளம்கொண்டோர்நாழிகைக்குள்ளேஅவரை
எல்லாரையும், கெடுக்கிறேன்வீடுபற்றும்முன்னமே கிணறுவெட்டவே
ணும்நின்றுசொன்னேன்இந்த (பட்டணம்)

---

## அங்கதன்தூது போகஅவனோடு ராவணன்சொல்லுதல்

விருத்தம்.

அரக்கன்இவ்வாறிலங்கையுள்ளே காத்துக்கொண்டான்
அடல்குரங்குவீரர்வெளி வளைத்துககொண்டார்
உரைக்கும்அனுமனைநிகர் அங்கதன்சீராமன்
உத்தரம்கொண்டிலங்கைநக ரத்தில்ப்போனான்
இரைச்சல்அவ்வூர்எடுத்திட ராவணனைக்கண்டான்
ராகவதூதுவன்நான் அங்கதன்ஆம்என்பேர்
திருத்தம்உள்ளவாலிமைந்தன் என்றான்கேட்டுச்
சீறுவான்அரக்கன்இது கூறுவானே. (௨௪)

௨௪. தரு-காம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி,

கேள்அடாஅங்கதா-எனதுவார்த்தை-கேள்அடாநீஅங்கதா

அநுபல்லவி

கேள்அடாநரர்கொஞ்சம்    நாள்அடாநீபழி
மீள்அடாஅவர்க்கென்கை    வாள்அடாஇருக்குது(கே)

சரணங்கள்.

௧. தகப்பனைக்கொன்றவன்    தூதாகப்பாராட்டி
தள்ளிவந்தாய்சிறு    பிள்ளைஎன்பதுகாட்டி
செகத்தந்தவசைகூடப்    போகநான்உனைநாட்டி
சிங்காதனத்தில்வைப்பேன்    சிங்காரமுடிசூட்டி (கே)

௨. நீடச்சானகிஎன்னும்    பெண்ஒன்றுகிட்டுது
நின்னைப்பிள்ளைஆகஎன்    புண்ணியமேஇட்டுது



தேடப்போன    காலில்அகப்பட்டுது
தெய்வமேஉன்னைஎன்தன்    கையில்கூட்டிவிட்டுது(கே)

௩. நெருங்கியதுணைஆம்உன்    தகப்பன்மனிதன்அம்பில்
நெருக்குண்டான்என்னும்வார்த்தைஉருக்குதேஎன்னைவெம்பி
திரும்பப்பழிமீட்காமல்    இருந்தென்னடாநம்பி
செய்தார்க்குச்செய்வது    செத்தபிறகோதம்பி(கே)

---

## அங்கதன் ராவணனுக்கு மறுமொழி உரைத்தல்.

தூவியஎள்ளும்கரும்பும்நசுக்கில்உண்பாம் பலன்என்னும்சொல்லேஅல்லால்
பாவிஇவன்இணங்கிவரான்எனத்துரை அங்கதன்நீதான்படித்ததெல்லாம்
ஏவியஎன்காதுகொள்ளாஅரக்கா நான்வந்தகாரியங்கள்கேள்சீதா
தேவிதனைவிடுதடுத்தால் ஆவிதனைவிடுஎன்றேசெப்புவானே.

௨௨.தரு-மோகனராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அடடாவெளியேபுறப்படடா-இல்லைஆகில்சீதையைவிட்டுவிடடா

அநுபல்லவி.

தொடரும்வீன்பழிதேடிக்    கொண்டாயே-முன்ஒரு
தூதன்வந்துசெய்ததைக்    கண்டாயே-நானும்
செயம்வீரர்ஆம்அந்த    ரகுவீரர்விடவந்த
தூதன்-தூதன்-தூதன்    வெட்கம்உண்டானால்(அட)

௧. நினைவுவேறாய்வர்மம்    மூற்றியே-என்னை
நீர்ஆர்என்றாய்உன்னைப்    பற்றியே-ஒட்டத்
தனதுவாலில்க்கட்டிச்    சுற்றியேஇந்தத்
தரணிஎல்லாம்தாவி    வெற்றியே-கொண்ட
சினவாலிவரபுத்திரன்    நான்அடா-உனக்கோர்
சேதிசொல்வதற்காவந்    தேன்அடாஎங்கள்
சீராமர்தேவியைச்    சூதாகக்கொண்டுவந்தாயே
திருடா-திருடா-திருடா    ரோஷம்உண்டானால்(அடடா)

௨. துடிக்கத்தாடகைஉயிர்    போக்கவும்-தங்கை
சூர்ப்பநகியைமூளி    ஆக்கவும்-படை
எடுத்தபரனைவிழத்    தாக்கவும்-வந்தாய்
இலையேநீஅவர்உயிர்    காக்கவும்-நல்லது

தடிக்கவே அதுதப்பிப் போனாலும்-நாங்கள்
சமுத்திரம் அடைத்தபோ தானாலும்-உந்தன்
தளத்தோடும் வாராமல் ஒளித்தேதடா அடா
சண்டி-சண்டி-சண்டி மானம் உண்டானால் (அட)

௩. அரசும் உன்கொலுத்திருச் சட்டமும்-நாளை
அழியப்போகுதே உன்தன் கொட்டமும்-இதிலே
தருவேன் என்றாய் எனக் கிஷ்டமும்-நாய்
தரக்கொள்ளுமோ சிங்கம் பட்டமும்-எங்கள்
துரைசுக்கிரீவனோடும் கிட்டியே-ராமர்
சூழ்ந்து வடக்குவாசல் கட்டியே-தலை
துணிப்பேன் என்றவில்லை வணங்கிநின்றவரைச்
சொன்னார்-சொன்னார்-சொன்னார் சேவகன் ஆனால் (அட)

## அங்கதன் மீண்டு போர்கலக்க என்ன இருபடைகளும் கைகலத்தல்.

விருத்தம்.

அங்கதன் இப்படிசொல்ல அரக்கன் இவனைப்பிடியும் அடியும் என்றான், கிங்கரர் தொட்டவரை எல்லாம் தலைசிதற உதறிவிட்டுக்கிளம்பிவந்தான், செங்கண் இராகவ சரணம்போய்வந்தேன் வல் அரக்கன் சிந்தை கண்டேன், வெங்கண் இராவணனைப்போரிடுகென்றான் தயவை இனிவிடுகென்றானே. (௨௬)

௩. திபதை-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. என்றான் அங்கதன் அங்கே நின்றவானரர் எல்லாம்
ராமசாமிமனது தான்மொய்க்கவே
சென்றாரே எதிர்த்தாரே கொன்றாரே ராட்சதர்கள்
திரும்பித்திரும்பிவந்து தான்மொய்க்கவே

௨. கல்லும் கருமலையும் கெல்லும் பெருமரமும்
கைக்கொண்டு வானரர்கள் விட்டுநிறைத்தார்
வில்லும் வாளும் கொண்டு வெட்டிவெட்டி அரக்க
மேலும் கீழும் அம்புக ளாலே மறைத்தார்

௩. வாலும் காலும் அறிந்து மேலும் தோலும் பறிந்து
மாய்ந்த அனேகம் கோடி வானரங்கள்
மேலும் திசைகள் ஒருநாலும் ரத்தவெள்ளமாய்
வீழ்ந்த அரக்கர் முடி யொடுசிரங்கள்



௪. அடுத்தராக்ஷதச்சண்டை வானரச்சண்டையினில்
அலங்கோலம் ஆச்சு லங்கை ஊரினிலே
எடுத்தபிணக்குவித்துகடலும் திடல் ஆகவே
எழுந்ததூரத்தம் அந்தப் போரினிலே

௫. தட்டிமலைபிடுங்கி விட்டெறிந்து சுக்கிரீவன்
தலைதலையா அரக்கர் தம்மைப்படுத்தான்
எட்டிஎதிர்த்து வச்சிர முஷ்டிதனையும் அவன்
எமதூதர்கையில் இரை ஆகக்கொடுத்தான்

௬. தேய்க்கும் அனுமான்கையால் தெற்குவாசலில்வந்த
சேனையொடு துன்முகனும் தான் உயிர்விட்டான்
தாக்கும் அங்கதன்கையால் தெற்குவாசலில்வந்த
தளத்தோடே மண்டுசுபா ரிசனும்பட்டான்

௭. நீலன்கையாலே கீழ்வாசலிலே பிரகஸ்தன்
நீண்டசேனையும் தானும் மாண்டுபறந்தான்
கோலும் இடும்பன்குத்த கும்பானுஎன்பவனும்
குடலும் உடலும் தள்ளி ஆவி இறந்தான்

௮. அந்தச்சேதிபரிந்து சிந்தித்து ராவணனும்
ஆயிரம்பரித்தேரை வைக்கூறினான்
பந்தித்தேர்கள் இரண்டாயிரம் சுற்றிவரத்தானும்
பத்துத்தலைமலைபோல்க் களம் ஏறினான்

௯. ஏறிஅம்புமழையாத்தூறிச் சுக்கிரீவன்படை
எல்லாம்படுத்தவனை மூர்ச்சை ஆக்கினான்
சீறிவரும் மாருதி விட்டமலைகள் எல்லாம்
சித்த அரக்கன் கனை கொண்டு தாக்கினான்

௧௦. மாருதிவல் அரக்கன் தேரில் இருந்தபெருஞ்
சாரதிதலைமலையா லேமுறித்தான்
வீரராவணன் ஒரு நூறம்பினால் அனுமான்
மெய்யும் கையும் தளர வேதெறித்தான்

௧௧. இளையான் இதை அறிந்து வளைவாம் அரக்கர்படை
எல்லாம் இமைப்பொழுதில் சொல்றஒருத்தான்
உளையா இராவணன்மேல் செருவாகச்சண்டைசெய்து
ஓரம்பால் அவன்சரக் கூடம் அறுத்தான்

௩. தளராமல்லட்சுமணன் விளையாடக்கண்டரக்கன்
சமர்த்தன்நீஎன்றுதுதி தான்விளம்பினான்
வளம்ஆனமாருதிகளை ஆறியேஅவ்வேளை
பகமேருகிரிஎன வேகிளம்பினான்

## அநுமாரும் இராவணனும் கைகுத்துக்கு நிற்குதல்.

விருத்தம்.

கிளம்பியமாருதி இராவணனைநேரே
கிட்டிமணித்தோள்இரண்டும் தட்டிக்கேளாய்
விளம்புகிறேன்மெறுங்கையிரண் டுடையேன்நானே
வீரத்தாய்இருபதுகை உடையைநீயோ
அளந்தவில்லும் அம்பும்எடுத் ததட்டவந்தாய்
அதிலேஆள்பலம்தெரியல் ஆமோஇந்தத்
தளம்தனில்உன்பலமும்எந்தன் பலமும்காண்போம்
சற்றென்றான்கொட்டாகைக் குத்தென்றானே (உஎ)

உரு. தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளசாப்பு.

பல்லவி.

குத்துக்குவாடா-ராவணனைக்-குத்துக்குவாடா

அநுபல்லவி.

பத்துத்தலையும்இரு பதுகையும்ராக்ஷத
பலமும்குரங்கினிட பலமும்தெரியவேணும் (குத்)

சரணங்கள்.

க. எட்டானைக்கொம்பும் மொட்டைக்கிடாப்போலே
ஒட்ட ஒடித்தேன்என்றாய்-அந்த
ஈசன்கையிலே ஊசிலேரோடேநான்
எடுத்துப் பிடித்தேன்-என்றும்
சட்டம்சட்டமாய்ப் பேசிக்கொள்ளுவதும்
சமர்த்தன்சமர்த்தன்நான் என்றுதுள்ளுவதும்
விட்டுக்கட்டடா ஏதுக்குவீணும்சாணும்
வீரம்எல்லாம்இன்றைக்கு வெளிச்சம்ஆகவேணும் (குத்)

உ. நான்உன்னைக்குத்துவேன் அந்தகுத்துனக்குத்
தானே பெருங்கத்தடா-பிழைத்தால்
நாளைந்துகைகளும் ஓங்கியேஎன்தன்
மேலே நீகுத்தடா



ஏன்என்னைக்குத்தினாய் என்றுகோபிக்கயில்லை
இதுவேநம்பிக்கை தேறிக்கொள்ளஎன்சொல்லை
ஆனமட்டுக்கும்பார் வஞ்சனைபண்ணாதே
ஆள்ப்பகட்டால்மிரட் டல்ஆம்என்றெண்ணாதே (குத்)

௩. ஓதிபெருத்தால்என்ன தூண்ஆகுமோசற்றும்
ஒதுங்காதே நில்லடா-கையை
ஓங்கினேன்குத்துவருகுதுவருகுதி
தாங்கஉன்சவம் அல்லடா
சதியினாலேஎங்கள் சீதாங்கனிதன்னைத்
தம்பிபிரிந்துபோன பின்புதிருடும்உன்னை
எதிரிலேகண்டு சினம்மிகப்பொங்குதடா
எனதுவலகைக்குத் தினவுதின்குதடா (குத்)

---

## ஸ்ரீ ராமருக்கும் ராவணனுக்கும் முதல்நாள் உயுத்தம்.

விருத்தம்.

அநுமான்இப்படிக்குத்த அரக்கன்சாய்ந்தான்
அரக்கன்மறுபடிகுத்த அநுமான்சாய்ந்தான்
தனிவேல்லனரக்கன்விட்டான் இளையோன்சாய்ந்தான்
சாய்ந்தவனைஎடுத்தரக்கன் ஓய்ந்துநின்றான்
முனையால்மாருதிஇளையோனைக் கைக்கொண்டான்
முடித்தேர்கொண்டிராவணன்போர் தொடுக்கவந்தான்
மனுநாதர்எதிரே அநுமான்மேல்க்கொண்டு
வளைத்திட்டார் இருவரும்போர்விளைத்திட்டாரே. (உஅ)

உசு. தரு-அசாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ராகவனுக்கும்-ராவணனுக்கும்-நடந்ததேசண்டை

அநுபல்லவி

ஏகதோதண்டத்தில் இவன்கணைஎய்யவும்
ஈரைந்துகையாலும் அவன்அம்புபெய்யவும் (ரா)

சரணங்கள்.

க. அரக்கன்தேர்மேல்த் தாவினான்-சாமிஅநுமான்
பெருத்ததோள்களில் மேவினான்-சாமிமேல்ஏழு
சரத்தைராவணன் தாக்கினான்-ஏழையும்ஏழு
சரத்தால்அய்யனும் போக்கினான்-பின்

கருத்தன்ஓர்ஐந்தம்பு    தூவினான்-மாற்றிக்
கண்டகன்பத்தப்பை    ஏவினன்-அதைத்
தூரத்திராகவன்வெற்றி    கொண்டான்-வந்து
சுற்றியசேனையைக்    கண்டான்
ஒருத்தற்கொவ்வொருகணை    தவறாமலேஉந்தி
ஊழிமழையைப்போலே    தலைதலைபாச்சிந்தி
கரிக்கூட்டம்பரிக்கூட்டம்    தேர்க்கூட்டங்களைச்சேர்த்து
காலமாடுதலைமாடாக்களத்தை    எல்லாம்தூர்த்து
கரைக்குள்அடங்கா    ரத்தவெள்ளக்
கடலிலேகவந்தங்கள்    துள்ள
இரைக்குவருகிற    பேய்கள்கவிய
எங்கும்ராட்சதப்    பிணங்கள்குவிய (ரா)

உ. நெருங்கும்ராட்சதரைக்    கொன்று-தனதுசேனைக்
குரங்கைத்தற்காத்து    நின்று-பொருதும்வேளை
தெரிந்துராவணன்    அடுத்தான்-சாமிதோளினில்
இரண்டம்பழுத்த    விடுத்தான்-பின்
பரிந்தொருகணைராமன்    தெறித்தான்-அவன்
பத்துக்கைவில்லையும்    முறித்தான்-கொடியில்
திரும்பச்சாரதிதலை    கொய்தான்-பரியும்
தேரும்கொடியும்பொடி    செய்தான்
வரம்கொள்ஆயுதம்எல்லாம்    அவன்தொடத்தொடவெட்டி
மறுதேரும்சேனையும்    வாராமல்வழிகட்டி
உரம்கொண்டுராகவன்    முனைந்துநின்றதுகண்டு
ஒண்டியாய்த்தேர்விட்டுக்    குதித்துயோசனைகொண்டு
உலையின்மெழுகாய்நின்று    தேய
ஒருகணைவந்துதலையில்ப்    பாய
இலைகள்உதிர்ந்தாற்போல்    மணிமுடி
ஈரைந்துகிடந்துருள    விப்படி (ரா)

௩. தொடுத்தகவசம்    நீங்கி-கீரிதொட்டு
விடுத்தபாம்புபோல    ஏங்கி-நாரதர்க்கெதிர்
படித்தநாக்குகள்    தாய்த்து-ஓம்சொன்னவன்
குடித்தனம்போல்த்    தேய்ந்து-ஆவின்
இடைக்கிடைவிழுதுபோல்க்    காட்டும்-கைகள்
இருபதையும்தொங்கப்    போட்டும்-தன்
மிடுக்கெல்லாம்போய்    மெலிவாக-தோளில்
வீரலட்சுமிஅப்பால்ப்    போக



அடிக்கடிகுரங்குகள்    பலைபோடக்களைபட்டு
அனுமந்தன்கைக்குத்தால்    முதுகெல்லாம்தொளைபட்டு
படைக்கலம்விடவிடப்    பொடிப்பொடியாவிண்டு
பாலலட்சுமணன்அலங்கோலம்    செய்திடக்கண்டு
பார்த்தமுகம்எல்லாம்    வேற்றுமுகமாய்
பத்துமுகத்துள்ள    பவிஷெல்லாம்போய்
தோற்றுராவணன்மனது    கொதிக்கவும்
சுவாமிகீர்த்தியைத்தேவர்    துதிக்கவும் (ரா)

## ஸ்ரீராமர் ராவணனைச் சம்மதி கேட்குதல்.

விருத்தம்.

வண்ணம்வாடிஇளைத்திந்த வகைவல் அரக்கன்நின்றளவில்
அண்ணல்எனும்ராகவன்கண்டான் அய்யோகைஆயுதம்அற்றாய்
எண்ணல்அருஞ்சேனையும்அற்றாய் இளைத்தாய்இனிஉன்நினைப்பேது
திண்ணம்ஆகநான்அறியத்தெரிப்பாய் எனச்சொல்விரிப்பானே (உசு)

உகு. தரு-துசாவந்திராகம்-ஆதிதாளம்.

பல்லவி,

ஏதடாராவணா-உன்சம்மதி-என் அடாஉன்சம்மதி

அநுபல்லவி.

ஆதிமுதல் சண்டைக்குவந்தாயேநீ
அமங்கோலமாஒண்டி ஆகிநிலம்கீறிநின்றாயேதுரோகி (ஏத)
[போலே

சரணங்கள்.

க. பெருமகுடமும்வில்லும்படைகளும் போய்ப்பேதைப்பெண்களைப்
இருபதுகையும்வெறுங்கையாய்நின்றாயேஎய்யும்என்அம்பினாலே
இறுநூறுவெள்ளமும்    பெருங்காற்றிலேபீளை
ஈட்டம்போல்மாளக்கண்டு    போட்டாய்பைவாளை
சரணம்புகுதஎன்றால்    இதுவேநல்லவேளை
சண்டைக்குன்னால்ஆகாதினிஇன்றைக்கும்போய்வாடாநாளை(ஏ)

உ. பருத்திப்பொதிக்கொருநெருப்புப் பொறிபோலப்பற்றும்முன்னே
[அடடா
தரைக்குள்அறியாமல்சிறைக்குள்ளேவைத்தசனகியைவிட்டுவிட
நெருக்கம்செய்யாதே    தேவரைமுன்போலும்[டா
நிலைக்குள்ளேவைத்து    மகுடமும்செங்கோலும்

துரைத்தனமும்உன்தன்      தம்பிக்குத்தந்ததுமேலும்
சொல்லும்அவன்ஏவல்கேட்டால்கொல்லேன்உன்னைஒருநாளும்(ஏ)

௩. மயக்கம்ஆய்மறுதாரைத்தொடர்ந்தவன்      வாழ்வுநில்லாதடடா
பயித்தியம்கொண்டலைகிருய்தர்மத்தைப்      பாவம்வெல்லாதடடா
செயிக்கமாட்டாய்      கடிஅடா,இளம்புல்லு
தீயருக்கென்றல்லவோ      பிடித்தேன்இந்தவில்லு
பயப்படாதேநீ      சும்மாநில்லுநில்லு
பத்துவாயும்போச்சுதோஉர்      உத்தரவாகிலும்சொல்லு(ஏ)

---

## இராவணன் மாலியவானேடு அமர்க்களம் கூறல்.

### விருத்தம்.

சம்மதிஏதென்றராகவனேடேஉத்
தரம்ஒன்றும்சொல்லாதேமகுடம்பத்தும்
செம்மியமார்பினில் அணிஎட்டானைக்கொம்பும்
சிவன்கொடுத்தவாளும்போட்டமரர்எல்லாம்
மெய்ம்மகிழமக்கள்அழப்பெண்கள்கூவ
வெறுங்கையாய்நிலம்பார்த்தவ்விலங்கைசேர்ந்தான்
அம்மதிசொல்லியபாட்டனுடனேசொல்லி
அழிகுவான் அமர்க்களத்தைமொழிகுவானே      (௩௦).

௨௬. தரு-சௌராஷ்டிரராகம்-அடதாளசாப்பு.

### பல்லவி.

அந்தமானிடன சண்டையில்நான்பட்டநிந்தையைஎன்னசொல்வேன்

### அநுபல்லவி.

கந்தமூலம்தின்னும்      அவன்கையில்அம்புக்கும்
காலனுக்கும்என்ன      கூட்டா-சண்டைக்
கோலம்சொல்லவிலை      யாட்டா-அடா
மாலியவானேஎன்      பாட்டா(அந்த)

### சரணங்கள்.

௧. வக்கணைப்பேச்சல்லகோதண்டம்எந்த
மலர்கையிலேபிடித்      தானே-மேற்கு
தெற்குவடக்குகிழக்கினில்நான்எந்த
திக்கினிலேஇருந்      தேனே-அதி
உக்கிரம்ஆம்அனலோஅவன்வாகனம்
ஊழிக்காற்றோஅனு      மானே-ஒன்றும்



திக்குத்திசைதெரியாமல்நின்றேன்கண்டு
கெக்கலி கொட்டினர்      வானோர்-அந்த
வெட்கத்துக்காள்இனி      நானோ-அவன்
விக்கிரமும்என்சொல்      வேனோ(அந்த)

௨. விடும்அவன்வாளிஎன்கைக்கணையையும்திக்கு
வேழத்தையும்கூடச்      சாடும்-எழுந்
திடறிஅனேகம் அரக்கர்சிரங்களை
லங்கைத்தெருவெங்கும்      போடும்-இன்னம்
உடலோடுயிர்தப்பிஇருக்கின்றராட்சதர்
உண்டோஉன்றண்டத்தைத்      தேடும்-பல
அடலிஎல்லாம்சுட்டுவின்னுமண்ணும்பறந்
திடமலையும்கிழித்      தோடும்-கடல்
வடவையுடனேபோ      ராடும்-அவன்
விடும்அம்புகூட்டில்ப்பின்      கூடும்(அந்த)

௩. எறிதருபாசம்கொண்டிந்திரனைச்சந்திரனை
எல்லாரையும்கட்டிச்      சேர்த்தேன்-சீறி
முறைமுறையேசென்றுசண்டைகொடுத்தந்த
மூவர்சமர்த்தையும்      பார்த்தேன்-ஆரும்
அறியவடகயிலாசத்தைவேரோடும்
அங்கையினெல்க்கட்டிப்      பேர்த்தேன்-காலம்
குறுகினதோராமன்வாளிக்கென்சேனையைப்
பிறிதின்றேதாரை      வார்த்தேன்-சும்மா
விறுதாபெரும்பழி      ஏர்த்தேன்-என்தன்
கெறுவம்எல்லாம்அங்கே      தோர்த்தேன்(அந்த)

௪. தக்கதன்தம்பிஇலக்குவன்சண்டைக்கென்
சண்டைவெய்யில்மஞ்சள்      பூச்சே-மெத்த
எக்களிப்பாய்அவன்பக்கல்க்குரங்குக்கும்
என்னோடெதிர்க்கவும்      ஆச்சே-நேற்று
மிக்கவன்நான்என்றுசீதைக்குச்சொல்லிய
வீம்பெலாம்வெறும்      பேச்சே-எட்டுத்
திக்கானைக்கொம்பும்என்மார்பில்க்குரங்கொரு
கைக்குத்திலேசிந்திப்      போச்சே-சொன்னல்
ஒக்கவரும்பெரு      மூச்சே-எவ
ருக்கும்இதுமெத்த      ஏச்சே(அந்த)

## மாலியவான் புத்தியை ராவணன் கேட்காமல் மகோதரன் கலைத்தல்.

விருத்தம்.

அடல் அரக்கன் இவ்வாறமுதனுட் போரினிற்பட்ட அவஸ்த்தைஎல்லாம்
திடம்உளமாலியவான் முன்சொன்னன் அங்கவனும் அப்பாசீதைதன்னை
விடஇதுவேசமயமென்றான் பாவிமகோதரன் அதனைவிலக்கிவெள்ளக்
கடல்எனும்ராக்ஷதகுலத்தைத்தொலைக்கின்றான்ராவணனைக்கலைக்கின்றானே

உஎ. தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தயோசனை என் அப்பா-மாலியவான்சொல்
எல்லாம்அவலம்தான் அப்பா

அநுபல்லவி.

விந்தைமின்மினிப்பூச்சி வெளிச்சத்துக்கிருள்போமோ
அந்தமானிடர்க்கும்வானரர்க்கும் பயந்தநாமோ (இந்)

சரணங்கள்.

க. மெத்த பயந்தகுடிபோ-அப்பயோஎலி
வேட்டைக்கும் தவில்அடியோ
பற்றிக்கையிலேபைசீ பறித்தெடுத்ததம்போய்போ
காத்தர்மூவரும்இன்னம் கலங்கிறாய்உனக்கையோ(இந்)

உ. தளர்ச்சிசொல் வேதாவீரம்-ஒன்றைப்பிடித்தால்
சாதிப்ப தல்லோபாரம்
இளக்காரம்கண்டால்உன்னைஎங் கெங்கும்பழிக்காதோ
நுளைக்குரங்கிலங்கையை நொடிக்குள்ளேஅழிக்காதோ(இந்)

ந. கெம்பீரம் தன்னில்மீசரா-மூன்றுலோகமும்
கெடிபெற்ற ராவணேஸ்வரா
கும்பல்மனிதர்என்றும் குரங்கென்றும்பேர்எடாமல்
தம்பிகும்பகர்ணனீ சதைஎன்றுசொல்லிடாமல்(இந்)

---

## இங்கரர் கும்பகர்னனை எழுப்பவும் அவன் தூங்குதல்.

விருத்தம்.

விளைவதறியாதமகோதரன்உரையால் அரக்கன்மனம்வேறாய்இங்கே
வளைதருவானரங்களையும்மனிதரையும் உயிர்குடிக்கவல்லோன்ஆன
இளையவனைஎழுப்புமென்றான் அப்போது கும்பகர்ணன்இரண்டுமூக்கின்
தொளைதிறந்துதன்அறிவுநீங்கினன் பிணம்போல்தூங்கினனே. (ஙo)

கூo. தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

தூங்கினன் தூங்கினனே-கும்பகருணன்-தூங்கினன் தூங்கினனே.

அநுபல்லவி.

தூங்கினன்ராவணன்ஏவல் தாங்கியநாலுகிங்கரர்
வாங்கிஇருப்புலக்கைகொண் டோங்கிஅடுக்கடிக்கத் (தூ)

சரணங்கள்.

க. தேவரும்திசையில்உள்ளயாவரும் இவன்மூச்சிலே
திடுக்கென்றமெய்கலைக்கவும் கோட்டைவாசல்போலே
வாய்வழிஓடியசுவாச வாயும்உகாந்தகால
வாயுவைப்போல்வளைக்கவும் சூலத்தைக்கொண்டு
ராவணன் தூதுவர்காலன் ஏவியதூதரைப்போல
இருகாதிலும்தொளைக்கவும் எழுப்பவேண்டி
பாவிஅரக்கர்கையால் ஆவதெல்லாம்செய்துசெய்து
பார்த்தவர்கள்கையிளைக்கவும் எழுந்திராமல் (தூ)

உ. எட்டுமலையும்பிடுங்க முட்டிடுகாற்றிவன்மேலே
இளந்தென்றல்போலேபடிய இருபக்கமும்
கட்டிகட்டிஆகவடி யிட்டிடுசுண்ணம்புபோலே
கண்களினில்பீளைஇடிய பெருங்காற்றென்ன
விட்டபெருமூச்சில் அகப்பட்டவர்பம்பரம்போலே
விசைகொண்டுருண்டுமடிய மழுக்களாலே
கொட்டுவதெல்லாம்குரங்கு தட்டிலதுபோல்சுகமாக்
கோட்டுவாய்ஓடியவடிய குறட்டைவிட்டுத் (தூ)

ந. தாங்கியபூரிபேரிகை கூக்குரல்எல்லாம்செவியில்
சற்றும்ஏறாமல்விடுக்க தளம்தளமா
மேற்கொளும்யானைசேனைகள் மார்க்கஜும்தாளிலும்ஏறி
மிதித்துகுதித்துமுடுக்க தனுவில்க்காய்ச்சிப்
போக்கியஉலக்கைகளால் மூக்குமயிர்வெந்திலங்கா
புரிஎங்கும்நாற்றம்எடுக்கப் பலவிதமா
ஆக்கியவேதனைகள்சி லாக்கியம்ஆகமென்மேலும்
அதிகநித்திரைகொடுக்க சுகனைகெட்டுத் (தூ)

## கும்பகர்னன் ராவணனுக்குப் புத்திகூறுதல்.

விருத்தம்.

தூங்கியதோர்கும்பகர்னன் வருத்தத்தாலே
துயில்எழுந்தான் அறுநூறுசகடச்சோறும்
ஒங்குபதினாயிரம் சாடியிலேகள்ளும்
உண்டானபின்அண்ணன்முகம் கண்டான்தந்த
பூங்கவசம்முதல்எல்லாம் பெற்றான்அவ்வூர்ப்
புறத்தினில்வானரர்ஆர வாரம்கேட்டான்
ஈங்கிதென்னபுதுமைஎன்றான் அவனும்சொன்னான்
இடிக்கின்றான்புத்திசொல்லித் துடிக்கின்றானே. (௬௧)

௬௧. தரு-புன்னாகவராளிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

வந்ததோதீமை இலங்கைக்கு வந்ததோதீமை

அநுபல்லவி.

வந்ததோசீதைப்பெண் நொந்ததோகர்ளங்கும்
வெந்ததோகலகம்மி குந்ததோஉன்னாலே(வந்த)

சரணங்கள்.

௧. புலத்தியன்குலம் கெட்டதோ-நமக்கிந்த
தலத்தில்இருப்பு விட்டதோ
விலக்காதபழி மூண்டதோ-மூலவுலகமும்
செலுத்தும்செங்கோல் மாண்டதோ
கலைப்பவர்சொல்க்கொண்டு கலங்கிறாய்நீகுட்டி
குலைத்துத்தாய்மேல்வைத்த கொள்கைபோலேகிட்டி(வந்த)

௨. தாய்வரம்பிடித்தானே அம்பால்-வாலி
சீவனைக் குடித்தானே
தேவர்க்கும்தேவன் அவன்-ராமன்முன்பாகப்
போய்வென்றுபிழைப்பதெவன்
நீவெல்வேன்என்பதும் நினைத்தசனகிப்பெண்ணை
வேவுவேன்என்பதும் விறுதாயோசனை அண்ணை(வந்த)

௩. அம்புராகவன் தொடுக்க-வருணன்வந்து
கும்பிட்டுவழி கொடுக்க
கெம்பீரஅணை படுத்து-வந்தமதனின்
முன்புபோய்ப்படை யெடுத்து
கும்பலாஒருமிக்கக் கூட்டிச்சண்டைகொடாமல்
தம்பிசொல்படிசீதை தனையும்விட்டுவிடாமல்(வந்த)



௪. முழுதும்லட்சுமணன் அம்பாலே-இந்திரஜித்து
விழுவான்பார்இனி மண்மேலே
எழுதும்எழுத்தின் படியே-ராமன் அம்பாலே
விழும்என்தன் மணிமுடியே
பிழைபொறுசீதையைப் பிறகாகிலும்விடு
ஒழிவாய்ஆனால்உன்தன் உயிரும்போம்படிபடு(வந்த)

---

## விபீஷணன் ஸ்ரீராமருக்குக் கும்பகர்னன் வரலாறு கூறுதல்.

விருத்தம்.

கும்பகர்னன்இதுசொன்னான் அரக்கன்சீறிக்
குரங்கையும்மானிடரையும் கும்பிடுபோஎன்றான்
தம்பிஅதுபொறாமல் ஆயிரம்பேய்பூண்ட
தடம்தேர்மேர்ஏறிநெடுஞ் சூலம்கொண்டான்
வெம்பாக்கர்புடைசூழ இலங்கைவிட்டு
வெளிவந்தான் அதுகண்டான்வீரராமன்
நம்பிஇதேதென்ன விபீஷணனும்அங்கே
நாடினான்வணங்கிஉரை பாடினானே. (௬௨)

௬௨. தரு-சௌராஷ்டிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.


கும்பகர்னன் இவன்அய்யா நான்தம்பி எனக்குமூத்தவன் அய்யா

அநுபல்லவி.

எம்பெருமானேஉட இணையடிக்காளாய்
நம்பும்விபீஷணன் நான்சொல்லக்கேளாய்(கும்ப)

சரணங்கள்.

௧. ஞாலத்திலேவெகு நாளாகத்தவஞ்செய்து
சூலத்தைச்சிவன்கையில் பற்றினான்-வந்து
மேவிட்டேஇந்திரனைக் குத்தினான்-ஒரு
காலிட்டலைகடலை எத்தினான்-இவன்
ஆலத்தைப்போலேதே வர்களைப்போய்ப்பிடிப்பான்
நாலுக்கும்சாட்டுக்கும் ஆகாமல்அடிப்பான்(கும்ப)





௭. பகாமாஒருகையால் பந்துபோல்எடுத்தந்த
மகாமேருவையும்தோளில்த் தாங்குவான்எங்கும்
புகைபுறப்படமூச்சை வாங்குவான்-பல
யுகம்ஒருநாள்ஆகத் தூங்குவான்-இவன்
சுகம்ஆகச்சிலதுநாள் தூங்கையால்ப்பூமி
சகலரும்உயிர்தப்பிப்பிழைத்தார் என்சாமி(கும்)

௮. தெரிந்துராவணனுக்குச் சீதையைவிடச்சொல்லி
வருந்திவருந்திமெத்த முறைப்பட்டான்-அவன்
இரங்காமையால்இவன் குறைப்பட்டான்-காலம்
பிரிந்தவி தன்றேஎண்ணிப் புறப்பட்டான்-உன்
சரண்புகுந்திடுவானே தமையன்தன்சொல்லால்
சிரம்துணிபடுவானே தேவாஉன்வில்லால் (கும்)

## கும்பகர்னன் தன்னையழைத்த விபீஷணனுக்குப் புத்தி கூறல்.

விருத்தம்.

சத்தியவிபீஷணன்இவ்வா றுரைக்கச்சாமி
சண்டைஇடவரும் இவனைஉன்முன்ஆகச்
சித்திரவதைசெய்திடில் உன்மனம்ஏதாமோ
தெரிந்துவாஅவன்மனதை என்னச்சென்றான்
அத்திசையில்அரக்கர்படைக் கடலுக்குள்ளே
அண்ணன்அடிமேல்ப்பணிந்தான் பணிந்தபோது
புத்திஉள்ளகும்பகர்னன் தம்பிதன்னைப்
புல்லினன்புத்திசில சொல்லினனே. (௩௫)

௩௩. தரு-சாரங்காராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ஏன்வந்தாய்தம்பி விபீஷணா-நல்லோர்
எவர்க்கும்அதிககுணபூஷணா

அநுபல்லவி.

ஆனந்தராமனை அடுத்தாய்வினைவிடுத்தாய்
அமிர்தம்உண்கிறவாயால் விஷம்உண்பார்களோபையா (ஏ)

சரணங்கள்.

௧. அங்கேநீபோனதும் அபயம்பெற்றதும்லங்கை
அரசுபெற்றதும்கண்டு வருந்தேனே

வங்கிசமும்புலஸ்தியன் பேரும்விளங்கும்உன்னால்
வந்துகெடுத்தாஎன்று பொருந்தேனே

தங்கும்என்குலத்திலே ராமன்அம்புக்கொருவர்
தப்புவார்என்றெண்ணம் திருந்தேனே
இங்கேஇறந்தவர்கள் எல்லோரும் கரைஏற
எள்ளும்தண்ணீரும்நீ இறைப்பாய்என்றிருந்தேனே (ஏ)

௨. நாலுபாதமும்கொண்டாய் சிரஞ்சீவியும்நீகொண்டாய்
நாங்கள்நரகம்கொண்டோம் ஒருகாலே
மேலேகூற்றுவன்நின்றான் ராமனும்எதிர்நின்றான்
விதியும்நின்றதுகால முடிவாலே
சீலம்உள்ளவர்அவர் தங்கள்உயிர்விட்டாலும்
தெரிக்கவிடார்உன்னைப் புவிமேலே
காலன்ஊர்எமக்குண்டு இலங்கையூர்உனக்குண்டு
கனியைத்தின்பதைவிட்டுக் காயைத்தின்பதுபோலே (ஏ)

௩. அம்புபோல்ச்சுறுக்காநீ அவரைச்சேர்வதேகாரியம்
அழைக்கிறாய்ச்சம்மதி படுவேனோ
தம்பியும்ராமனும் நிற்கக்குரங்கைஎல்லாம்
சதையாமல்வதையாமல் விடுவேனோ
வன்புக்கிடமாஎன்னை வளர்த்தானைக்கைவிட்டிங்கே
வந்தபகீர்த்தியைத் தொடுவேனோ
நம்பும்தமையனோடே நானும்இறப்பதல்லால்
நாலும்பேரும்நகைக்க நரரைக்கும்பிடுவேனோ (ஏ)

## கும்பகர்னனுக்கு விபீஷணன் நீதிகூறல்.

விருத்தம்.

மொழிஇதனைக்கும்பகர்னன்சொல்ல விபீஷணன் அண்ணேன் முறைதப்பான், வழிஇதுநீங்கிடவேணும்வந்துநீ சாமிபதம்வணங்கவேணும், பழிபடும்ராவணனுடனே இறப்பதுநீ தருமம் அல்லபரிந்தென் பின்னே, எழுவதுவேகருமம்என்ன அசைக்கின்றான்உறுதிமொழிஇசைக்கின்றானே.

௩௪. தரு-காம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்வார்த்தைதன்னைக்கேள் அண்ணேன்-கும்பகர்னநீ
ராமரைச்சேர்ந்துவாழ் அண்ணேன்



அநுபல்லவி.

உன்வார்த்தைகேட்கஉன்னை உகந்தனுப்பினார்என்னை
உண்மைபார்ஆனமட்டும் தர்மமேதலைக்கட்டும் (எ)

சரணங்கள்.

௧. மனத்துக்காகாத ராவணனைஒழிக்கவேணும்
வளருதேஅப வாதகம்
அனர்த்தம்ஆம்பரதாரத் துரோகியுடனேசேர்ந்தால்
அதைவிடஉண்டோ பாதகம்
செனித்தநமதுவேத குலமும்பலமும்போகச்
சிந்திப்பதென்ன தோதகம்
கனத்தராமர்படைமுன் நமதுபடைவெல்லுமோ
கடலிலேபெருங்காயம் கரைத்தால்உண்டோசாதகம் (எ)

௨. அடைவானதாய்தலையைப் பிழைபால்ப்பரசுராமன்
அறிந்தானே பரிகாரம்
திடம்ஆம்பிதாவைக்கூடப் பிழைகண்டுசிவன்பண்டு
சிரம்கொய்த தல்லோவீரம்
நடவாநடைநடந்தால் அண்ணன்தம்பியைக்கூட
நறுக்கவேணும் அந்நேரம்
உடலில்ப்புரைகழலை அறுத்தெரிவாரைப்போல
ஒழிக்கவேணும்அல்லாமல் உயிர்கொடுத்தென்னசாரம் (எ)

௩. உனக்குள்ளகாலம்எல்லாம் உறங்கிக்கிடந்தால்இந்த
உலகம்இனிமேல்க் கட்டாதே
தனித்துகோதண்டமுன்னே அண்ணனும்நீயும்எங்கே
தலைவிதிதப்ப ஒட்டாதே
வினைப்பிறவியும்தீரும் வந்தால்முத்தியும்சேரும்
வேளைஇதுபோலக் கிட்டாதே
உனக்குத்தந்தலங்கையை உனக்குத்தந்துநீசொன்ன
ஏவலும்கேட்கிறேன்நான் இனிஆகிலும்தட்டாதே (எ)

## விபீஷணன்மீண்டபின் இருபடைகளும்போர்கலத்தல்

விருத்தம்.

மந்திரிஎனும்தம்பிஇந்த வாறுசொல்ல
மறுத்துவிட்டான்கும்பகர்னன் சுவாமிஅன்னான்

சிந்தைஇதுஎன்றுவிபீஷணனும்சொன்னான்
    செயராமன்சண்டையே செய்யும்என்றான்
பந்தம்உள்ளசுக்ரீவன் முதலாஉள்ள
    பலபலவானரப்படைஞர் தொகைஇல்லாத
நிந்தைஇராக்கதப்படைஞர் கடல்போல்பொங்கி
    நேரிட்டார்அதிகம்வுள்ள போரிட்டாரே. (௧௭)

**௪. திபதை-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு.**

கண்ணிகள்.

௧. கோலாகலமாக் கடல்போல்வளைந்தாரே
    கும்பகர்னன்படை வீரர்
  * மேலேபெருங்கடல் போலேவளைந்து
    மிதித்தாரேவானர சூரர்

௨. எங்கும்பரிக்குலம் எங்கும்கரிக்கும்
    எங்கும்அரக்கர்கொண் டாட்டம்
  எங்கும்மந்திகள் எங்கெங்கும்பல்லூகம்
    எங்கெங்கும்வானரக் கூட்டம்

௩. சங்குகள்கொம்புகள் தாளங்கள்மேளங்கள்
    சாகரம்போலவே இடிக்க
  அங்கேகுரங்கு நெருங்கிச்செய்கெர்ச்சனை
    அண்டகடாகமும் வெடிக்க

௪. எத்திப்பிடிப்பார் அடிப்பார்ஒடிப்பார்
    இராக்கதர்வானர் உடலை
  குத்தும்குதிக்கும் மதிக்கும்வதைக்கும்
    குரங்குகள் ராட்சதக் கடலை

௫. அள்ளும்குருதியில் துள்ளும்மகரம்போல்
    ஆடுமாராட்சதப் பிணங்கள்
  விள்ளும்கவசங்கள் விள்ளும்துவசங்கள்
    விள்ளும்தலைமண்டை நிணங்கள்

௬. மெத்தமலையுங் சிலையும்கவிக்குல
    வீரர்எதிர்எதிர் விடுத்தார்
  அத்திரசத்திர தோமரத்தால்எறிந்
    தரக்கர்அவைஎல்லாம் தடுத்தார்

---

* இதை இரட்டித்துப் பாடும்போது 'அதின்' என்று இவ்விடத்தில் முதலிலே சேர்த்துப் பாடிக்கொள்க.



௭. வேலாயுதத்தாலும் சூலாயுதத்தாலும்
    மெத்தஇராக்கதர் தாக்கினார்
  காலாலும்கையாலும் வானரவீரர்கள்
    காணாதவைபொடி ஆக்கினார்

௮. தோளும்சிரங்களும் தாளும்சரங்களும்
    துண்டாஅரக்கர்கள் கடிந்தார்
  மாளும்தலைவிதி நாள்வந்தனேக
    வானரவீரர்கள் மடிந்தார்

௯. தேய்த்ததெரிந்த திவ்வாறுகும்பகர்னன்
    சேனைஎன்னும்பெரு வெள்ளம்
  சாய்த்ததுதிரம் படிந்துசெவந்து
    தணிந்ததல்லோகடல்ப் பள்ளம்

௧௦. வேளைஅதில்ஒருநாலுவெள்ளம்படை
    வீரன்வசந்தன்ஓர் மன்னன்
  தோளில்ஒருமலை போடப்பொடியாகத்
    தொலைத்தானேகும்ப கர்னன்

௧௧. குத்திஉடனேஅவனைப்பிடித்தந்தக்
    கும்பகர்னன்எனும் காலன்
  நெற்றித்திலதமா இட்டான்அதைக்கண்டு
    நேரிட்டானேவந்து நீலன்

௧௨. நீலன்எறிந்த மலையைக்கும்பகர்னன்
    நீறுநீறுச்செய்து நகைத்தான்
  மேல்அவன்பாய்ந்து கடித்தான்இவன்குத்த
    வேசாறிநீலனும் திகைத்தான்

௧௩. அங்கதனைக்கண்டஅங்கதன்ஓர்மலை
    அங்கையால்போட்டுரம் பேசினான்
  செங்கல்பொடிபோல் நுருக்கிக்கும்பகர்னன்
    தெண்டொன்றவன்மேலே வீசினான்

௧௪. விட்டகெதைதன்னை அங்கதன்கையால்
    வெடுக்கென்றொடித்துமுன் போட்டான்
  குட்டிகுரங்கேநீஆரவன்சொல்சொல்என்று
    கும்பகர்னன்பின்பு கேட்டான்

௧௫. கேட்டாய்உன்அண்ணனைவாலாலேகட்டிக்
    கிளம்பினவன்மகன் தானடா

மாட்டி அவனைப்போல்உன்னையும்வாலால்
வளைக்கிறஅங்கதன் நானடா

கசு. என்றுசொல்அங்கதன் தன்னைகும்பகர்ணன்
ஏற்றஅவன்எங்கே சாய்ந்தான்
கன்றுகண்டோடிவரும்பசுபோலக்
கணத்தில்அனுமந்தன் பாய்ந்தான்

கஎ. பாய்ந்தவன்மேலேஒருமலைதன்னைப்
பறித்தேஅனுமந்தன் எறிந்தான்
சாந்திடக்கண்டான்இவன்தன்னைராமா
சரம்கொல்லும்என்றப்பால் பறிந்தான்

கஅ. பறியக்கண்டேகும்ப கர்னன் அந்தப்படை
படுபாதிஆம்படி தேய்த்தான்
அறியும்இளையான் அனுமான்மேல்எறிநின்
றஸ்திரம்மழைபோலே சாய்த்தான்

ககூ. தேரைப்பரியைக் கரியைத்தொலைத்தவன்
செங்கைச்சிலையையும் ஒடித்தான்
போரைக்கண்டோர்சூலம் கும்பகர்னன்தம்பிமேல்ப்
போடஎன்றேஎண்ணம் பிடித்தான்

உ0. பிடிக்குமுன்னேவெறுங் கையன்என்றேதம்பி
பேர்த்தொருதிக்கினில் மேவினன்
துடித்தெதிரேவந்த சுக்கிரீவன்மேல்ஒரு
சூலம்கும்பகர்னன் ஏவினன்

உக. ஏவியசூலத்தைப் பயந்தனுமான்கை
இரண்டாலும்தாளா நொறுக்கினன்
தாவியசுக்கிரீவனைக்கும்பகர்னன்
தடங்கையால்க்கட்டி இறுக்கினன்

உஉ. சாமிஅதைஅறிந் தம்புகள்போட
தயங்கிக்கும்பகர்னன் ஓய்ந்தான்
ஆம்அவன்காதையும் மூக்கையும்பிச்சுக்கொண்
டப்புறம்சுக்ரீவன் பாய்ந்தான்

உங. பாய்ந்தபின்தங்கச்சி மூக்குப்போல்த்தன்மூக்கும்
பழுதாகவேவெட்கம் பூண்டான்
காய்ந்தசினத்தோடும் ராகவன்மேல்க்கும்ப
கர்னனும்சண்டைக்கு மீண்டான்



## ஸ்ரீராமருக்கும் கும்பகர்னனுக்கும் உயுத்தம்.

மீண்டவன்நான்மூக்கிழந்தேன் தங்கைமூக்கும்
வீணிலேஉங்களால் இழந்தாள்இங்கே
ஈண்டஇருவோரும் மூக்கிழந்தபோதே
இனிஇலங்கைவேந்தனும் மூக்கிழந்தான்கண்டாய்
ஆண்டகைமைபோகுமுன் உங்களைவாளாலே
அறுத்தறுத்துத்தெறிப்பேன் என்றொருவாள்ஏந்தி
பூண்டஜெயராகவன்முன் கும்பகர்னன்
போர்செய்தான்இப்படிப்போர் ஆர்செய்தானே. (ஙஅ

ஙங. தரு-தோடிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ஸ்ரீராகவனும் கும்பகர்னனும் செய்தாரேசண்டை

அநுபல்லவி.

வீரன்பதின்மூன்று கணைதொடுத்தான்
வெற்றிப்பரிசையால் அவன்தடுத்தான்
நரசிங்கமும்இணிரணிய னும்போலே
நரவரும்தேவரும் காணமென்மேலே (ஸ்ரீரா)

சரணங்கள்.

க. விக்கிரமன்ஆம்கும்பகர்னன்இராகவன்
மேல்ஒருபத்தம்பால்த் தாக்கினன்
கைக்கணையால்சாமி அவன்கையில்வில்லையும்
கவசத்தையும்துண்டம் ஆக்கினன்
அக்கணத்தேதடி கொண்டவன் மீள
அடித்தானேவெகுகுரங்குகள் மாள
தைக்கும்அம்பால்அந்தத்தடியையும் யோகத்
தறித்தானேஅய்யன்இப்படி ஆக (ஸ்ரீரா)

உ. மடித்தவாயோடும்கும்பகர்னன்வேறே
வாளும்பரிசையும் எடுத்தான்
* தொடுத்துராகவன் அவன்வலக்கையைத்
துணித்துமண்ணில்விழ விடுத்தான்

* இதை இரட்டித்துப் பாடும்போது கணைஎன்று இவ்விடத்தில் முதலி
சேர்த்துப்போடிக்கொள்க.

பிடித்தவாளோடும்கைவிழ மெய்யைப்
பேர்த்திடாமல்நின்றேஅந்தக் கையை
எடுத்துக்கொண்டடித்தே சண்டைதந்த
இடைக்கையும்கொய்தான் இப்படிஅந்த (ஸ்ரீரா)

௯. வழுவாமலேஒரு கணையால்க்கும்பகர்னன்
வலக்காலைவிழ எய்தான்
* அழியஇடக்காலால் குந்திக்குந்திவர
அந்தக்காலும் துணி செய்தான்
எழும்வகைஇல்லாமல்அண்ணனை நாடி
ஏங்கினன் அழுதான்மனம் வாடி
முழுதும்தொளைபட் டரக்கன்சரீரம்
முண்டமாக்கிடந் தருளஅந்நேரம் (ஸ்ரீரா)

## கும்பகர்னன் ஸ்ரீராமரைத் துதித்து வரம்கொள்ளுதல்.

விருத்தம்.

முன்புமாரீசனொடு கரனும்பட்டான்
மொய்க்குழல்ச்சீதையும்சிறையில் பட்டான் அண்ணன்
உன்குலமும்நீயும்போய்ப் படுவாய்என்றே
உரைத்தவிபீஷணன் அவனால் ஒதுக்கப்பட்டான்
என்பலம்போய்நான்பட்டேன்உன்அம்பாலே
ராவணனும்இனிப்படுவான் என்றுசொல்லி
அன்பினொடுகும்பகர்னன் ராமன்பாதம்
அகங்கொள்வான்பின்ஒரு வாசகம்விள்வானே. (௩௧)

௫. திபதை-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

க. சாமிநமஸ்காரம்சாமிநமஸ்காரம் சத்தியராகவனே-இந்த
பூமியில்உத்தமவானேநமஸ்காரம் புண்ணியராகவனே

உ. நீயேசாமிஉன்கைக்கும்வில்லுக்கும் இந்நேரம்-ராகவனே-ஓர்
ஆயிரம்ராவணர்வந்தெதிர்த்தாலும்பற் றுதுராகவனே

௩. தோளும்துணிந்தேனேதாளும் துணிந்தேனேசாமிராகவனே-இவ்
வேளையில்நான்உன்னைக்கேட்கும்வரந்தர வேணும்ராகவனே

௪. வந்தபுறாவுக்குஉடலைக்கொடுத்தவன் வங்கிசராகவனே-நீ
இந்தவிபீஷணனைக்னகவிடாமலே ரட்சிப்பாய்ராகவனே

* இதை இரட்டித்துப்பாடும்போது அது என்று இவ்விடத்தில் முதலிலே சேர்த்துப் பாடிக்கொள்க.



௫. அந்தராவணன்உடன்பிறவிஎன்று குறியானேராகவனே-இவனை
எந்தவேளையில்வந்தென்செய்வானோ எச்சரிக்கைராகவனே

௬. விளையாட்டல்லஇவன்உன் அருகேநிற்கவேணும்ராகவனே-தப்பில்
இளையவன்அனுமானைப்பிரியாமல் இருந்தராகவனே[வனே-என்

எ. என்னைக்கொன்றபோதென் அண்ணனையும் கொல்வாய்இனிராக
தன்னைக்கண்டபேர்கள்நகையாதபடிசெய்வாய் சரணம்ராகவனே

அ. தங்கைமூக்குப்போலேஎன்மூக்குப்போச்சுதே சாமிராகவனேதேவர்
பங்கம்சொல்லாமுன்னே என்தலைமறைப்பதுன் பாரம்ராகவனே

## ஸ்ரீராமபாணம் கும்பகர்னன்தலையைக் கடலில்வீழ்த்தல்

விருத்தம்.

அன்பினுடன்இந்தவகையும் தொகையும்விண்டளவில்
அம்புயமனையாள் கண்உடையான்
செம்பதுமம்என்றமுக மண்டலும்மலர்ந்தொரு
செழுஞ்சிலையில் அம்புதொடவே
அம்பதுபறக்கவன் நெடுந்தலைவிழும்படி
அரிந்தெறிய அந்தவிசையால்
கும்பகருனன்சிரசு பொங்கியதடங்கடல்
குழிந்திடவிழுந்ததவமே. (௩௦)

## சீதாதேவியின் பக்கல்வந்து ராவணன் கெஞ்சுதல்.

இதுவுமது.

இன்னவகைகும்பகர்னன் இறந்தான்இப்பால்
ராவணனும்மருத்தனைஓர் சனகின்ஆக்கிப்
பொன்அனையான்முன்புமகோ தரனைக்கொண்டு
போதெனவேஏவிவிட்டுத் தானும்முன்னே
மின்அனையார்நடமாடக் கீதம்பாட
வில்மதனன்கணைசாட மெலிந்துவாடி
அன்னைஎனும்சீதைமுன்னே வந்தான்கிட்ட
அஞ்சுவான்ஏதேதோ கெஞ்சுவானே.

௬. திபதை-கண்டாராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

க. இன்னம்தான்என்னவர்மமோ-என்னை-இடியச்செய்வது தர்மமோ
இன்னம்மன்மதவாதையே-பட-என்னால்-ஆகுமோசீதையே

௨. குறித்துமூவரையும்வீசினேன்-காமக்-கோட்டியால்மனம்கூசினேன்
இறக்கவேமனம்பொங்கினேன் உன்னைஎண்ணிஅல்லோஇங்கேதங்கினேன்

௩. மெத்தமெத்ததுவண்டேனேஉன்னைவிஷமதாத்தேடிக்கொண்டேனே
பத்தென்பார்காம அவஸ்தையேநான்படுவதாயிரம் அவஸ்தையே

௪. தென்றல்வந் தென்னைப்பாயுதே-இந்த-திங்களும் த்ணலாக்காயுதே
என்றன்மேல்க்கிருபைஆகியே-மனம்-இரங்குவாய்வைதேகியே

## சீதாதேவி ராவணனை இடித்தல்.

விருத்தம்.

விரும்பியஅரக்கன்இந்த விதம்சொல்லிப்பதங்கள்முன்னே
பருந்தலைபத்தும்மண்மேல் படியவேவந்துவீழ்ந்தான்
திரும்பினாள்முகம்பாராமல் சீதையும்அவனைத்தான்ஓர்
துரும்பெண்றோர் துரும்பைப்பார்த்துத் தூறுவாள்கூறுவாளே.

௩௪. தரு-சஹானாராகம்-ரூபகசாப்புதாளம்.

பல்லவி.

கெட்டுப்போகவேணுமோகேளடா அடாராவணத்துரும்பேநீ
கெட்டுப்போகவேணுமோகேளடா

அநுபல்லவி.

துஷ்டத்தனம்எல்லாம் விட்டுவிடடாஎன்
சுவாமி கோதண்டவல்லி- அம்பால்
போமேஉன்குலம் கெல்லி
துடுக்கு சொல்லி (கெட்டு)

சரணங்கள்.

௧. தூண்டாவிளக்கைத் தீண்டவரும்பூச்சி
மாண்டால்போல்மாளுவாய் நீயே-துள்ள
வேண்டாம்அடா கெடுவாயே
ஏண்டா பேயே (கெட்டு)

௨. ஆக்கிரமசிங்கத்தைப் பார்க்கிறபெண்சிங்கம்
சாக்கடைக்குள் நரிக்குட்டி-தன்னைப்
பார்க்குமோகண்ணாலே எட்டி
ஏண்டா மட்டி (கெட்டு)

௩. பாருக்குள்ளோருவீரர்க்கல்லால்மற்ற
பேருக்குநான்பச்ச நாவி-நீ
ஆருக்குப்போக்கிறாய் ஆவி
அய்யோ பாவி (கெட்டு)



௪. பத்துளவாயாலும் 'கத்துகிறாயேஉன்
சுற்றமும்வாழ்வும் நில்லாது-என்
பத்தினிவாக்கு பொல்லாது
ஏண்டா வாது (கெட்டு)

௫. வாய்த்தகொழுந்தனால் முத்தமகன்பட்ட
வார்த்தைநீகேட்டமும் ஓசை-காதில்
ஏர்த்திடவேணும்என் ஆசை
ஏண்டா! பிசாசை (கெட்டு)

## மாயாசனகனைச் சீதைகண்டு தகப்பன் என்று புலம்பல்.

விருத்தம்.

நெறியாள்இந்தப்படிஉரைக்க நீசன்அரக்கன்ஏவலினால்
பொறியார்மருத்தன் தன்னைச் சனகன்போலேசெய்துமகோதரன்தான்
மறியாஇழுத்திவரஅவனும் மகளேமகளேஎன்றிரைந்தான்
அறியாள்சீதைதகப்பன்என்றே அழுவாள்அழுதுவிழுவாளே.

௩௫. தரு-முகாரிராகம்-அடதாளசாப்பு

பல்லவி.

அய்யாசனகா அய்யாஎன்னைப்பெற் றனுபவித்ததிதுவோ

அநுபல்லவி.

கையும்கயிறுமாக்கண் முன்னேஎன்முன்னே
கட்டுப்பட்டாய்என்னைத் தொட்டுப்பட்டாய்அல்லோ (அய்)

சரணங்கள்.

௧. பஞ்சாசத்கோடி பூமண்டலத்திலே
பலவேள்வியும்செய்து நிறைப்பட்டாய்
அஞ்சாஎவரையும்கட்டுகிறநீஇந்த
அரக்கரால்கட்டுண்டு குறைப்பட்டாய்
செஞ்சொல்அயோத்தியில்க் ,காணாமல்நீஎன்னைச்
சிறையிலேகாணவோ புறப்பட்டாய்
என்சிறைநீங்காமல்த்தவிக்கிறேனேஅப்பா
இதுவும்போதாதென்றோநீயும் சிறைப்பட்டாய் (அய்)

௨. சுற்றத்தாரேதாய்மாரே தங்கைமாரே
சொல்வார்ஆர்இந்தப் பெருஞ்சோலி

அத்தலத்திலேபாய்ந் தங்களுக்கறிவிக்க
  அனுமானும்இலேயேபுண் ணியசாலி
வெற்றிஅயோத்தி ராஜர்கீர்த்திகளை
  வெட்டிஅழிக்கநானே கோடாலி
பெற்றவீட்டையும்வந்து புகுந்தவீட்டையும்நல்ல
  பேர்அழிக்கஎன்றபிறந்தேனே பெண்பேலி (அய்)

௩. கர்த்தன்ஆகிக்கொண்ட கணவனைக்கொல்லென்று
  கடும்பழிதேடிக்கொண் டேன்முன்னம்
பற்றும்பற்றுத்துக்கும் தந்தைக்கும்வினைசெய்தேன்
  பண்ணினேனேகள வுகள்கன்னம்
உற்றார்நகைசெய்யப்பத்துமாதம்இங்கே
  ஒருத்திநான்இருந்ததே பெருங்குன்னம்
இத்தனைபாடும்என்னாலேவரக்கண்டும்
  இங்கேசீவன்கொண்டிருக்கிறே னேஇன்னம் (அய்)

## கும்பகர்னன் மரணத்தைக்கேட்டு ராவணன் புலம்பல்.

விருத்தம்.

உத்தமிசானகி இந்தவாறழுதாள் சனகனென உருவம்கொண்ட, பித்தனும்ஆகாவார்த்தைசொன்னான் அன்னையும் ஏச்சும்பேச்சும்சொன்னாள், மத்தனிராவணன்கொதித்தான் அப்போதுகும்பகர்னன் மரணம் கேட்டான், சொத்தைமரம்போல்விழுந்தான் முடங்கினான்அரக்கன் அழத்தொடங்கினனே.

௩௬. தரு-ஆனந்தபைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அப்பா கும்பகர்ணா உனைப்-பிரிந்தெப்படிநான்பிழைப்பேன்

அநுபல்லவி

என்பிறப்பிலே உன்முகம்பார்ப்பேன்-நான்
  எந்தவிதத்தினால் என்உயிர்காப்பேன்
செப்பும்முன்னமேபோய்ப் பட்டாயே-என்னைத்
  தெரிவில்ப்பரதேசியா விட்டாயே-என் (அப்)

சரணங்கள்.

௧. இனிமேல்என்சிறை தள்ளிவானவரோ
  டிந்திரனும்கிலேயிலே போவானே



தனியேஎன்குடிக் கொருமூக்கறப்பாத்
  தவளையும்மூக்கறுத்தாள் தான்தானே
அநியாயத்தினால் கரன்மாரீசன்என்
  றங்கையும்போக்கடித் தேன்நானே
சனிஆகும்இந்தமோகத்தினால்அல்லோ
  சருகுதிர்ந்தமரம் ஆனேனே-என் (அப்)

௨. வாயும்முனையும்நான்படைக்கவே
  வளர்ந்தாயேகுலக் கொழுந்தாயே
ஓயுமென்குறைகண்டுசுறுக்கிலே
  உறக்கம்விட்டுமலைபோல் எழுந்தாயே
மாயன்முதலோர்ஆயுதத்தினால்
  மயிர்முனையும்உடம்பில் அழுந்தாயே
ஈயும்எறும்புபோல்இருக்கிற
  இந்தமனிதன்அம்பால் விழுந்தாயே-என் (அப்)

௩. மயில்ப்போல்பெண்கள்கால்பிடிக்கமெத்தையில்
  வளர்ந்தஉன்நித்திரைகண்டு பயந்தேனே
கைபிலேபோய்கால்பிடிக்கக்களத்தில்
  கவிழ்ந்தாய்என்றசொல்ல நொந்தேனே
நயமேசொல்லும்நமனுக்கும்உனைக்கிட்ட
  நானேஇளக்காரம் தந்தேனே
உயிர்போல்உன்னைக்கொடுத்தும்துணிவேனோ
  உன்பிறகேஇதோ வந்தேனே-என் (அப்)

## அதிகாயன்வரலாறு விபீஷணன்கூற ஸ்ரீராமர் தம்பியைப் புகழ்தல்.

விருத்தம்.

அரக்கன்இராவணன் இவ்வாறழுதான்பின்னே
  அதிகாயன்படைஎழுந்தான் ராமன்கண்டான்
விரித்துவிபீஷணன்சொல்வான் சாமிமுன்னாள்
  விழுந்தமதுகயிடவர்ஆம் இரண்டுபேர்க்குள்
ஒருத்தன்மதுகும்பகர்னன் உன்னால்போனான்
  ஒழிந்தகைபிடவன்இவன்போம் வகைஏதென்றான்
திருத்தியாகவன்இதுக்குத் தம்பிபோதும்
  சேர்என்றான்சண்டைஇனிப் பார்என்றானே. (௪௧)

36

## இருபடைகளும் கைகலக்க யானைப்படையை அனுமார் அடித்தல்.

இதுவுமது.

பார்எனவானரச்சேனை அரக்கர்சேனை
 பலசண்டைஇடஇளையோன் விடும்அம்பாலே
கார்எனவேகண்டகண்ட துண்டம்ஆகிக்
 கால்மாடுதலமாடாய் அரக்கர்வீழ்ந்தார்
கோரன்அதிகாயன்விடும் யானைக்கூட்டம்
 குமுறிவெகுவெகுவாக வரக்கண்டேங்கி
மாருதியோர்மரம்பிடுங்கி நடுவேபாய்ந்து
 மாட்டினான்பிணமலையாக் காட்டினனே. (சக)

௯எ. தரு-தோடிராகம்-அடதாளசாப்பு

பல்லவி.

அதிகாயன்படைமதவேழங்களை அடித்தானே அனுமான்

அநுபல்லவி.

விதியாகப்பலபோர்களும் நடுங்கி
 விடவிடென் றதிரவேவேரொடும் பிடுங்கி
சதிராகப்பிடித்தொரு மாமரத்தாலே
 சடைகொண்டஇலுப்பையைத்தடிகொண்டடித்தாப்போலே (அதி)

சரணங்கள்.

க. கடியால்ச் சிலயானை உதையால்ச்சிலயானை
 கதையால்ச் சிலயானை மாய்ந்தவே
அடியால்ச் சிலயானை விதியால்ச்சிலயானை
 அதிரால்ச் சிலயானை சாய்ந்தவே
இடியால்ச் சிலயானை அறையால்ச்சிலயானை
 எறியால்ச் சிலயானை ஓய்ந்தவே
பிடியால்ச் சிலயானை விசையால்ச்சிலயானை
 பிசைவால்ச் சிலயானை தேய்ந்தவே

அடியற்றமரம்போல படும்சிலயானைகள்
 அலறிக்கைகள்ஒடிந்து விழும்சிலயானைகள்
நெடுகக்கலங்கிஉயிர் விடும்சிலயானைகள்
 நெளிவுற்றலைக்குநிலை கெடும்சிலயானைகள்
நெளிபட்ட யானைசில முறிபட்ட யானைசில
 நெக்கிட்டு விக்கிட்டுச்சுழ-திக்குத்திக்குப்போய்விழ(அ)



௨. எடுத்தான் சிலசில குறைத்தான்சிலசில
 இறைத்தான் சிலசில யானையை
கெடுத்தான் சிலசில குழைத்தான்சிலசில
 கிழித்தான் சிலசில யானையை
தடுத்தான் சிலசில தெரித்தான்சிலசில
 தரித்தான் சிலசில யானையை
கடுத்தான் சிலசில அழித்தான்சிலசில
 கழித்தான் சிலசில யானையை
படிப்படியாகக்கடல் ஓரம்எங்கும்யானைகள்
 பருத்தமலைகள்அடி வாரம்எங்கும்யானைகள்
துடிப்புடனேவிசிறும் தூரம்எங்கும்யானைகள்
 சுழற்றியவால்டடுவிஸ் தாரம்எங்கும்யானைகள்
சுற்றிஎங்கும்யானைவிழ-ரத்தவெள்ளம் ஆகஎழுத்
 தோமைமரமேகைத்தடி-ஆகவேகொண் டிந்தப்படி (அ)


௩. கைக்கே பலகெசம் வாலால்ப்பலகெசம்
 காலால்ப் பலகெசம் சாடவும்
மிக்காம் பசிவிண்டு பூதாதிகள்உடன்
 வேதாளங்கள் நடம் ஆடவும்
திக்கேய் முனிவர்கள் கைக்கேஅலர்கொண்டு
 செயசோபனம் இசை பாடவும்
அக்காலை பினில்மிகப் போர்க்களம்எங்கும்
 ஆனையின் வெடிநாற்றம் மூடவும்
சுக்கிற்றுல்ப்போல்த்தலைகள் கீழேவிழநாட்டியும்
 தும்பிக்கையைப்பிடித்துப் பம்பரம்போல்ஆட்டியும்
திக்குக்கெசங்களுக்கு வெட்கம்வரஓட்டியும்
 சேரச்சேரப்பிடித்து வாரிவாரிமாட்டியும்
சிதறச்சிதறத் தூக்கிப்-பதறப்பதறத் தாக்கிச்
 சேனைத்தளங்கள் சாக-ஆனைப்பிணங்கள் ஆக(அ)

---

## அதிகாயனுக்கும் லட்சுமணருக்கும் உயுத்தம்.

விருத்தம்.

ஒழித்தேஇந்தப்படி அரக்கர் குலமும்கோடியானைகளும்
கதப்பாவிழக்கண்டதிகாயன் கனகமணித்தேர்மேல்க்கொண்டான்
துதித்தேவரும்அங்கதகுமரன்தோளில் இளையோன்மேல்க்கொண்டான்
எதிர்த்தார்இரண்டுபேரும்டுவில்லை எடுத்தார்சண்டைதொடுத்தாரே.





௧அ. தரு-பைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

லட்சுமணனுக்கும் அதிகாயனுக்கும் நேர்ந்தசண்டை

அநுபல்லவி.

அட்சயத்தம்பி அங்கதன்தோளில் வீறினான்
ஆயிரம்பரித்தேர்மேல் அதிகாயன் ஏறினான்
சட்சிஆகஇருபடைவரும் மென்மேலே
கலந்துசண்டைசெய்யக் சடஆம்பலைபுலிபோலே (லட்)

சரணங்கள்.

க. முந்திஅரக்கன்ஒரு கணைதொட்டான்-தம்பி
முறித்தந்தக்கணைதன்னை கூறிட்டான்-அவன்
பந்தியாப்பதினாறு கணைஎய்தான்-தம்பி
பதினாறுகணையையும் பொடிசெய்தான்-பின்னும்
வந்தவன்கவசத்தை தூறப்பார்க்கிறான்
வரும்அரக்கர்படையைச் சருகெனத்தூறினான்
பிந்தித்தேர்க்குதிரை ஆயிரத்தையும் அவன்செங்கை
பிடித்தவில்லையும்ஒடித் தானேஇப்படி அங்கே (லட்)

உ. அனலாஸ்திரம்அரக்கன் ஏற்றினான்-தம்பி
அதுக்கதையேவிட்டு மாற்றினான்-தம்பி
கனம்ஆம்பிரம்மாஸ்திரத்தை ஏவினான்-அதி
காயன்எமபுரத்தை மேவினான்-பின்
நினையும் அங்கதனைநராந்தகன் இடியவும்
நீலனைமேராமஸ்தகன் முடியவும்
இனம்ஆம்சுக்ரீவற்குக்கும்பன்போய்ப் படியவும்
இடபனைஅந்தயமத்தன் மடியவும் (லட்)

௩. வல்அரக்கர் புவா யிரங்கோடி-லட்சு
மணன் அம்பால்மடிந்தாரே போராடி-அங்கே
கொல்லும்திரிசிரன்தேவாந் தகன்கூடி-அனுமான்
குத்தப்போய்விழுந்தாரே உயிர்ஓடி-பின்பு
சில்லரைச்சில்லரை ஆகிமெள்ளமெள்ளத்
தெறித்தார்அரக்கர்கள் இடறித்தள்ளத்தள்ள
எல்லாமுனிவர்களும் எழுந்துதுள்ளத்துள்ள
ராட்சதர்அடங்கி ராமர்செயம்கொள்ள (லட்)

## அதிகாயனுக்குப்புலம்பின ராவணன்முன்னே தானியமாலை புலம்பல்.

விருத்தம்.

முனைபோய்இந்தப்படிதோற்றே மூர்க்கன் அதிகாயன்பட்டான்
அனலாவந்துதூதர்சொல்ல அதைராவணனும்அறிந்தழுதான்
தனைநேர்பெறும்தானியமாலை தானும்கேட்டுத்தலைவிரித்த
பனைபோல்அரக்கன்முன்விழுந்து படித்தாள்புலம்பத்தொடுத்தாளே.

௭. திபதை-காம்போதிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. என்னசெய்வேன் இலங்கேசா-நான் என்னசெய்வேன்வெறிபிடித்தா
யன்மதன்போல்அதிகாயன் தன்னைமானிடனாலேபோக்கடித்தாயே [யே

௨. மாமகள்ஆம்சீதைதன்னைவிட பாட்டேன்மாட்டேன்என்றாயே
காமம்உன்னைக்கொல்லுகையால் அதிகாயனைநீஅல்லோகொன்றாயே

௩. கரன்முதலாக்கும்பகர்னன் அதி காயன் இவருடன்நிவாரணமோ
இருமனிதர்கையாலே இன்னம் எவர்தலைஉருளக்காரணமோ

௪, சின்னமனிதர்கள் என்றவெகு சேனைகளைஎல்லாம்தொலைத்தாயே
தன்னையழித்தினதுமெத்தநீசமுத்திரம்என்றெண்ணிவாழ்வைகலைத்தாயே

௫. மலைபோலேஒத்ததம்பிசொல்லும் இந்தமாலியவான்சொல்லும்தடுத்தாயே
தலைமேலேஇடித்தபின்னும்அய்யோ சற்றும்குனியாமலேகெடுத்தாயே

௬. கொலைகாரிசூர்ப்பநகிசொன்ன சோளகல்இந்தப்பலன்கண்டாயே
நிலைவரமாத்தலைசொரியக்கொள்ளி நீதானேதேடிக்கொண்டாயே

௭. பக்கக்கிளைஓடிமரம்போலஎன்பாலன் அதிகாயனைக்கொடுத்தாயே
திக்குசெயம்செய்ததுபோய்உன்னைத் தேவர்நகைக்கஉடம்பெடுத்தாயோ

௮. பருங்கிரிபோலேசாய்ந்துமகனே படுகளத்திலேமாண்டுகிடந்தாயோ
அருங்களிறேஅதிகாயாஎன்னை அகலவிட்டெப்படிநடந்தாயோ

## இந்திரசித்துசண்டைக்குவந்து அனுமாரை இகழ அவர் அவனை இகழ்தல்.

விருத்தம்.

வாரேறுபூண்முலை தானியமாலைஇந்த
வகைஅழராவணன்சொல்லால் இந்திரசித்துக்கேட்டான்
தேர்ஏறிநாகபாசமும் பிரம்மாஸ்திரமும்
சேமத்தேர் ஆயிரமும் சேனையும்கொண்டெழுந்தான்
போர்ஏறிஒருவெள்ளம் குரங்குகளைக்கொன்றான்
போர்எதிரேமாருதியைக் கல்எடுக்கஅறிவாய்



நேரேவில்எடுக்கறியாய்போ போடாஎன்று
நீக்கினான் அனுமன்வந்து தாக்கினானே. (௪௧)

௩௧. தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்திரசித்தே-சேவகம்-ஏதடாசற்றே

அநுபல்லவி.

உன் துணை அதிகாயனைக்கொன்ற விலட்சணன்
உன்னையும்கொல்லவந்திருக்கிறான் லட்சுமணன் (இந்)

சரணங்கள்.

என்னோடேஎதிர்க்கல்ஆகுமோ
இளையவன் அம்பெனஉன்னை நாணுமோ
உன்னிராமனுடனேஎதிர்க்கஎன்றால்
உனக்கவ்வளவுபலன் காணுமோ
என் அடாஉன்தன் அத்தைமூக்கறுந்தும்
இன்னம்இடக்குச்சொல்ல வேணுமோ
குன்னமாச்சந்திரனைப்பார்த்துநாய்
குலைத்தால்என்ன் அதின்மகிமை தோணுமோ (இந்)

அந்தநாள் உங்கள்ஊரைக்கொளுத்தின
தரியாயோசற்றே நில்லடா
முந்திஅம்பாலேகும்பகர்னனும்முண்ட
கண்டம்ஆனான் அல்லடா
இந்திராதிகளைமெருட்டுவாம்நீ
எங்கள்சாமிக்கொரு யல்லடா
மந்திரத்திலேமாங்காய்விழுமோடா
மழைக்கோகுடைஇடிக்கோகுடை சொல்லடா (இந்)

வில்எடுக்கஅறிவேன்என்றாய்
வில்லாளிஅல்லநீ தானடா
கல்எடுக்கஅறிவாய்என்றென்னைநீ
கடக்கப்போகச்சொன்ன தேனடா
வில்எடுக்கஉங்கள் அப்பனைக்கொல்லும்ரகு
வீரனேஎச மானடா
எல்லார்க்கும் கல்லெடுக்கவிபீஷணன்
எப்போதென்றுகாத்திருக்கி றானடா (இந்)

## வானரவீரர்களைமாட்டின இந்திரசிதனுக்கும் இளையவருக்கும் உயுத்தம்.

விருத்தம்.

அந்தஅனுமான்சொல்ல அரக்கன்சீறி
ஆயிரம்அம்பால்அவனைக் களைக்கவைத்தான்
பந்தம்உள்ளசுக்கிரீவன் நீலன்சாம்பன்
பனசன்முதல்த்தலைவர்களும் படையும்சாய்ந்தார்
சிந்தைதெளிந்தெழுந்தஅனு மான்மேல்க்கொண்டும்
சிங்கம்ஆயிரம்பூண்ட தேர்மேல்க்கொண்டும்
வந்தலட்சுமணனும்இந்திர சித்தும்வில்லை
வாங்கினர்சண்டையிலே ஓங்கினரே. (௬௦)

௬௦. தரு-சௌராஷ்டிரராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

லெட்சுமணனுக்கும்இந்திரசித்துக்கும் நேர்ந்ததேசண்டை

அநுபல்லவி.

கட்சிஆகத்தம்பி அனுமான்மேல்க்கொண்டு
கார்முகங்கொண்டுசரமாரி நிறைக்கவும்
பட்சணைச்சிங்கம் ஆயிரம்கொண்டதேரிலே
பாவிஅரக்கனவன்தாவிஅம் பிறைக்கவும் (லெட்)

சரணங்கள்.

க. அரக்கன்ஆயிரம்கோடிஅம்புமுன் எய்தான்
அத்தைலட்சுமணன்
துரத்திஆயிரம்கோடி அம்பால்ப்பொடி செய்தான்
தம்பிபின்னோடே
நெருக்கிஅர்த்தசந்திரம்ஒருகோடி பெய்தான்
அதுகண்டவனும்
திருப்பிஅர்த்தசந்திரம்கோடிவிட்டுக் கொய்தான்
கங்கபத்திரம்
கோடிஅரக்கன்விடக்கோடிஇளையவனும் விடுத்தான்
வச்சிரமுகாஸ்திரம்
கோடிநிருதன்எய்யக்கோடிலட்சமணன்விட்டுத்தடுத்தான்
அஞ்சலியாஸ்திரம்
கோடிபாதகன்எய்யக்கோடிதம்பியும்எதிர்தொடுத்தான்
கெசகர்ணாஸ்திரம்
கோடிஇவன்பொழியக்கோடி அவன்பொழிந்துகெடுத்தான்
திவ்வியநாகாஸ்திரம்



நிருதன்கோடிஎய்யநிமலனும்கோடியால் மறித்தான்
திருமுகாஸ்திரம்
வரதன்கோடிஎய்யவஞ்சனும்கோடியால் முறித்தான்
பஞ்சமுகாஸ்திரம்
திருடன்கோடிஎய்யத்திலகனுங்கோடியால்த் தறித்தான்
பத்மமுகாஸ்திரம்
குரூரன்கோடிஎய்யக்குருசிலும்கோடியால்த் தெறித்தான்
இந்தவகையாற்
கடலும்காடும்மலைகளும் பற்றிவேகக்
காணும்தேவர்முனிவர் சிந்தைநோக
இடம்இல்லாமல்இந்த உலகந்தலோகம்
எங்கும்இவர்கள்விடு சரம்மழைஆக(லெட்)

உ. சீறிஅரக்கன்பின்வானரப்படைகளை நீக்கி
இளையோன்மார்பில்
ஏறுகவசத்தில்ஈரேழுநூறம்பால்த் தாக்கி
அனுமானுடல்
கீறிநுழையஓர்ஆயிரம்வடிக்கணை தேக்கிப்
பெருங்குருதி
ஆறுசெய்தத்தைத்தம்பியும்விழிகொண்டு நோக்கித்
தேவர்மகிழ
ஒருபதினாயிரம்கணைஒருநொடியினில்ப் பூட்டி
அரக்கன்தேரும்
விருதக்கொடியும்சிங்கத்திரளும்புரண்டுவிழ மாட்டி
அவன்பொன்மார்பை
உருவிநுழையும்வகைஎழுவிருநூறம்பை ஓட்டிச்
சுற்றிலும்நின்று
பொருதும்வீரர்களைஒருகணையால்விழக் காட்டி
நிற்கக்கண்டவன்
சகஸ்திரகோடிகணைஒருமிக்கமழையென துளித்தான்
அதைஎல்லாம்நீக்கி
சகஸ்திரவாளிதம்பிவிடஅவன்மெலிந்துதத் தளித்தான்
தம்பிநெற்றிமேல்
பகுத்தநூறம்புகள்பாதகன்சடுதியில்த் தெளித்தான்
அவன்மேல்த்தம்பி
தொகுத்தநூறம்புபெய்யமார்பிளந் துதிரம்கொப்புளித்தான்
சிலையையுமன்றி
ஊரும்தேரின்மே லவனிளைப்பாற
உதைத்தனுமான்அந்த தேரையும்பீற

| | |
|---|---|
| தேர்ஒன்றூர்ந்தவன்<br>தேரும்அழுந்துமறு | ஐம்பதுகணைதூற<br>தேரவன்ஏற(லெட்) |

| | |
|---|---|
| ௬. ஏறஏறஇப்படி அவன் ஆயிரம்<br>இளையோன்சீறி | தேரை |
| ஆறகோடி அம்பால் அழித்தான்எதிர்த்<br>அனுமான்கையால்த் | தேரை |
| தாறுமாறுமாக்கிழித்தெறிந்தான்சில<br>உடல்வெவ்வேறாக | பேரை |
| கூறுகூறுசெய்தான்குவித்தான்பிணப்<br>ஆயிரம்தேரை | போரை |
| ஒருகையினால்அப்பிஉயிர்கடலினில்விழச்<br>லட்சம்யானையை | சாய்த்தான் |
| இருகையினால்பற்றி ஈயும்எறும்புஎனத்<br>கோடிசேனையை | தேய்த்தான் |
| வரிதருவால்கொண்டு வாரிஅடித்தடித்து<br>அந்தவேளையில் | மாய்த்தான் |
| கருநமன்போலஅங்கதன் அந்தநிருதன்முன்<br>பேய்கள்ஆயிரம் | வாய்த்தான் |
| பூண்டதேரைகெடு மலைஒன்றினால்எறிந்<br>அடாஉன்சேனை | தழித்தான் |
| மாண்டுகிடந்ததனைப்பார்க்கலையோவென்று<br>அவனும்போரில் | பழித்தான் |
| மூண்டுதேரில்நின்றுமுறைமுறைவெகுகணை<br>அவனைத்தப்பி | கொழித்தான் |
| மீண்டும்தேர்அழித்து மார்பினில்க்கவசமும்<br>மனம்கலங்கி | கிழித்தான் |
| நைந்துவாடி அவன் | ஏறவும்வேறு |
| ரதம்இல்லாமல்வெறுங் | குருதிவெள்ளாறு |
| சிந்திஓடக்கையில்ப் | பிடித்திடுவீறு |
| சிலையும்அவனுமே | தனிக்கஇவ்வாறு(லெட்) |

| | |
|---|---|
| அரக்கனுடன்வரும்நாற்பதுவெள்ளமும்<br>அத்தோடேகூடிக் | இறக்க |
| குரங்குவெள்ளங்கள் நாற்பதும்அப்படி.<br>வானரங்களுள் | பறக்க |
| பெருத்தபேர்சிலர் பேர்களும்உயிர்வந்து<br>சமுத்திரம்போலே | பிறக்க |



| | |
|---|---|
| இரத்தவெள்ளங்களேசெவேல்என்று<br>வெள்ளத்தின்மேலே | திறக்க |
| வாலும்ராட்சதர்காலும்குவியும்ஓ<br>கொடிமுடிகள் | ரண்டை |
| போலும்படுங்களம் கோலும்ராட்சதர்<br>மண்டைபிளந்து | மண்டை |
| சாலும்தயிருமா மூளைபெருகிய<br>கோடானுகோடி | உண்டை |
| மேலும்தொகைஇலை நாலுதிசையிலும்<br>விடும் அம்பாலே | சண்டை |
| கவிகைசிவிகையொடு கொடிகள்தடிகள்பல<br>கண்டகண்டமாத் | முரிய |
| துவசகவசம்அற கரிகள்பரிகள்குடல்<br>தொந்தயுத்தத்தால் | சரிய |
| அவரைஇவர்அறைய இவர்அவர்தலைகளை<br>ஆனந்தங்கொண்டு | அரிய |
| தவசிகள்இருடிகள் முனிவர்கள்மலர்மழை<br>தம்பிதொடுக்கும் | சொரிய |
| தெய்வபாணம்பட | ராட்சதன்ஏறு |
| தேரும்நூறுபொடி | ஆகவெவ்வேறு |
| எவ்விடங்களிலும் | ரத்தவெள்ளாறு |
| எடுக்கஎடுக்கஇளை | யாமல்இவ்வாறு(லெட்) |

| | |
|---|---|
| ௭. பத்தியாகஇருவருங் கணைமுறைமுறை<br>சூரியபகவான் | தொட்டும் |
| அஸ்தமானத்தை அடைந்திருள்வளைக்கிற<br>போராடஇந்திர | மட்டும் |
| சித்தன் ஆயிரம்தேர்களும்முறிமுறி<br>மாயையினாலே | பட்டும் |
| சத்தியாகலட்சுமணன் முதலோர்களைக்<br>உபாயம்தேடி | கட்டும் |
| நாகபாசத்தை வேகமதாகவே,<br>தொடுக்கையாலே | தொடுத்தான் |
| ஆகம்ஆனதுகட்டுண்டுதம்பியும்<br>அனுமான்அப்பால் | படுத்தான் |
| வேகம்ஆகவேஇறுக்குண்டுசுறுக்கெல்லாம்<br>சுக்கிரீவன்முதல் | விடுத்தான் |

ஆகவீரர்கள் அனைவரையும்அரக்கன் தடுத்தான்
தாறுமாறாகக்
கதறிவிழுவர்சிலர்கருவிவிழுவர்சில பேர்கள்
வாலைஅடித்து
உதறிவிழுவர்சிலர் உறுமிவிழுவர்சில பேர்கள்
சாமிகண்டாக்கால்
இதிலேவிதனம்வரும் எனமருகுவர்சில பேர்கள்
அனுமான்உண்டு
சிதறமோகமதுயிர் எனமகிழுவர்சில பேர்கள்
சேனைசேனையா
கவலைஆகிஇப் படிவெகுவெள்ளம்
கவிகள்பயந்துமனம் தவிடெனத்தள்ள
எவரும்இறந்தனர் என்றரக்கனும்மெள்ள
எழும்விபீஷண னும்பயம்கொள்ள(லெட்)

---

## நாகபாசத்தால் லட்சுமணர் கட்டுண்டதற்காக விபீஷணர் புலம்பல்.

விருத்தம்.

மைஇருளில்இந்தவகை மறைந்திந்திரசித்துவிடவந்தநாகக்
கைவளர்பாசம்தன்னால்லட்சுமணன்முதல்ஆனோர்களத்தில்ச்சாய்ந்தார்
அவ்வழியேவீடணனும்ஓடிவந்தான் லட்சுமணன்அவிதிகண்டான்
எவ்வகையும்செயமாட்டான்எண்ணுதெல்லாம்எண்ணிஇரங்குவானே.

சக. தரு-உசேனிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவினைக்கென்னசெய்வேன் லட்சுமணாநான்
இந்தவினைக்கென்னசெய்வேன்

அநுபல்லவி.

வந்தானேஎசமானன் மகன்பாசத்துக்குநேரே
தந்தானேவிபீஷணன் சதிகாரன்என்பாரே (இ)

சரணங்கள்.

க. போரில்ஓடி இளைத்தானே ராட்சதன்ராவில்
சோரன்போல வளைத்தானே
யார்என்னகொல்வாரோ எவர்க்கென்மேலேமுண்டோ
ஊரைவாய்மூடவும் உலைமூடிதான்உண்டோ(இ)

உ. பதர்போல்ஆனான்என்பாரோ வஞ்சனைக்கெல்லாம்
முதல்ப்பாதம் நான்என்பாரோ



பகைப்பா அழைத்துவந்தான் பழிஏர்த்தான்என்பாரோ
கொதிப்பாத்தீட்டினமரத்தில்ப்பழிகூர்பார்த்தான்என்பாரோ (இ)

ங. சங்கைபோய் அடித்தேனே காத்தசாமியை
வங்கைபோல்க் கெடுத்தேனே
அங்கவர்க் கானேனோஅபயம்என்றரவாகி
இங்கிவர்க் கானேனோஎன்போல்உண்டோதுரோகி (இ)

---

## இளையவர் நாகபாசத்தால் கட்டுண்டதற்காக ஸ்ரீராமர் இரங்கல்.

விருத்தம்.

விநயவிபீஷணன்இவ்வாறழுதுவாடும்
வேளையிலேராமச்சந்திரன் இடத்தில்மேவி
அனலன்எனும் மந்திரிசொல்லச் சுடர்அம்பேந்தி
அவ்விருளைத்துரத்திஅய்யன் களத்தில்வந்தான்
முனைபெறுசுக்கிரீவனை அங்கதனைக்கண்டான்
முசித்தபடைகளைக்கண்டான் மூர்ச்சைஆன
தனிஅனுமானையும்கண்டான் சாமிகோபம்
தாங்கினான் தம்பியைப்பார்த் தேங்கினானே. (ருஉ)

சஉ. தரு-ஆகிரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

என்னதான்செய்வேன்அடா லட்சுமணாநான்
என்னதான்செய்வேன்அடா

அநுபல்லவி.

உன்னைப்பாசம்கட்ட உன்பாசம்என்னைக்கட்ட
ஒருத்தன்நான் தவிப்பேனோடா-லட்சுமணா(என்)

சரணங்கள்.

க. சனகிபிரிந்தகுறை மறக்கவோநீவந்து
தந்தால்இந்தத் தொல்லையே-லட்சுமணா
நினைவின்படிநான்கீறும் கோட்டைக்கடந்தொருவர்
நில்என்றாலும் நில்லையே-லட்சுமணா
எனதுகண்ணேநானும் உனதுபின்வருகிறேன்
ஏதுக்கெடுத்தேன் வில்லையே-லட்சுமணா
உனதுயிர்போனால் என்உயிரும்போம்அப்புறம்
ஒருகவலையும் இல்லையே-லட்சுமணா(என்)

உ. எடுத்தென்பசிஅறிந்து அருங்கனிதரும்கையை
எப்படிவிடப் பித்தாயோ-லட்சுமணா

படுத்தறியாதநான் களத்தில்த்தூங்கிறேன்நீ
பார்என்றுவரு வித்தாயோ-லட்சுமணா
அடுத்ததகப்பன்போல நீயும்போய்என்னை இங்கே
அவத்திலேசோ தித்தாயோ-லட்சுமணா
பிடித்தகொம்பையும்விட்டு மிதித்தகொம்பையும்விட்டுப்
பேய்போல்அலைய வைத்தாயோ-லட்சுமணா(என்)

ரு. பெண்ணுக்காய்மான்பின்னே நடக்கச்சேதடுத்தஉன்
பேச்சையும் கடந்தேனே-லட்சுமணா
மண்ணும்வரும்முன்னாலே மனைவியும்வரும்என்று
மனமகிழ்ச்சி அடைந்தேனே-லட்சுமணா
எண்ணினஎண்ணம்போய் எதிரிக்கிளக்காரமா
ஏழையாக் கிடந்தேனே-லட்சுமணா(என்)

## கெருடபகவான் வருதலும் நாகபாசமறுதலும்.

விருத்தம்.

அதிபதிரகுபதிதுணைவனெடுருகிற அறைஇருளின்போதில்
உதரிடஅறியதொர்தசமுகன்மதன்விடும் உரகநெடும்பாசம்
சிதரிடஇளையவன்எழுதர அமரர்கள்திசைதிசைநின்றாடக்
கதிரவன்அவன்அவன்இவன்என விசையொருகருடனும்வந்தானே.

சரு. தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கெருடபகவானும் வந்தானே-தெய்வ-கெருடபகவானும்வந்தானே

அநுபல்லவி.

கெருடபகவான்வந்தான்-கிளம்பிப்பெருங்காற்றினை
இருசிறைகளும்சாடவே-அஷ்டமாநாக
அரசரும்பயந்தோடவே-ராமனைக்கண்டு
உருகிமனதுவாடவே-வனமாலைபோல்
உரகபூஷணம்ஆடவே-அந்நேரமே (கெருட)

சரணங்கள்.

க. முந்திஆனையினால்என்-முதுகேறி முதலைமேல்-அந்தசக்கரம்விட்
அந்தசக்கரத்தைவிட்டம்பும்வில்லுங்கொண்ட [டாயே
செந்தாமரைப்பூங்கையனே-எவர்களுக்கும்
சந்தோஷம்தரும் மெய்யனே-அறியார்போல
நொந்தால்எப்படி துய்யனே-அடியேன்இதோ
வந்தேன் அய்யனே-என்றுசொல்லி (கெருட)



உ. விரிசிறகால்மண்ணும் - விண்ணும் மூடிக்கொண்டு-ஒருமலைஎனத்
ஒருமலைமேல்ச்சூரியன் உதித்தால்ப்போல்த்தலைமேலே [தாவியே
பருமுடிஒளிர்விரிய-காதங்கள்கோடி
இருக்கண்பார்வையும்தெரிய-சாமியைவிட்ட
பிரிவாலேமனம்பரிய-பரவசம்ஆய்
உருகிக்கண்ணீர்சொரிய-வேகமதாக (கெருட)

ங. திடத்துடனேதெற்குத்திசையில் இருந்துபாய்ந்துவடக்குத்திசை
வடக்குத்திசையில்அய்யன்மலர்ப்பாதம்கண்டுகை [யைநாடியே
எடுத்துவணக்கம்குறிக்க-கழுத்தில்வெள்ளை
துடிப்பாவெண்ணல்வெறிக்க-ராகுகேதுவும்
திடுக்கென்றுடலைமுறிக்க-நாகபாசமும்
பொடிப்பொடியாய்த்தெறிக்க-அன்பினுடன் (கெருட)

ச. கிழிந்துபாதாளத்தில்கிடக்கும்பாம்புகளும்-கண்சுழன்றுதத்தளித்
சுழன்றுநாகபாசம்தொடுக்கும்இந்திரசித்தாலே (திடவே)
விழுந்தோர்மெள்ளமெள்ளவே-நித்திரைநீங்கி
எழுந்தவர்போல்த்துள்ளவே-தம்பியைராமன்
அழுந்தத்தழுவிக்கொள்ளவே-தேவர்கள்பயம்
ஒழிந்துகவலைதள்ளவே-அவர்கள்வேண்ட (கெருட)

## கெருடபகவான் ஸ்ரீராமரைத் துதித்தல்.

விருத்தம்.

மதஞ்சேர்நாகபாசம்இந்தவகையால்த் தெரிக்கராமச்சந்திரன்
இதம்சேர்லட்சுமணன்முதலோர் எழுதல்கண்டான்அதிசயிக்கும்
விதம்சேர்நீயார்எனக்கேட்டான் விவரித்துறைப்பேன்பிறகென்று
பதம்சேவித்தான்மனதில்அன்புபதித்தான் கருடன்துதித்தானே. (ருச)

சச. தரு-அசாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அய்யனேஉன்மகிமையை-அறிந்துசொல்லவேணும்என்றால்
ஆதிசேஷனுக்கும்வருமோ

அநுபல்லவி.

துய்யனேகாத்தருள்செய் மெய்யனேஎனத்தேவர்
தோத்திரம்செய்திடஒரு அயோத்திநகரினில்வந்த(அ)

சரணங்கள்.

க. பிரமாதிதேவர்களைப் பெறுவானும்நீஅவர்க்குப்
பெருமானும்நீஉனக்கு ஒருவர்நேரா
தருமாதிபதவிகளைத் தருதானும்நீஉனக்குத்
தாவேணதென்னகோ சலைகுமாரா-எங்கள்(அ)

௨. உலகெல்லாம்உன்வயிற்றில் ஒடுக்குவாய்விடுப்பாய்பின்
ஒருவருக்கும்உண்டோ இந்தபெரியதிராணி
தலைவனேஉனக்கொருவர் பலம்வேணும்என்பதென்னே
சத்தியமோநித்தியகோ தண்டபாணி—எங்கள் (அ)

௩. ஆதிநடுமுடிவாகி எள்ளும்எண்ணெயும்போலே
அங்கங்கும்நிறைந்தாயே நீஇப்போது
மேதினியிலேஉனக்கு எதிர்ஒருவர்உண்டென்று
வில்லெடுத்துவிளையாட வந்ததேது-எங்கள் (அ)

௪. ஆரணங்கள்கூடஉன்தன் காரணங்கள்அறியாமல்
அரளிக்கையால்அகில லோகமித்திரனே
நாரணனேஅகண்டபரி பூரணனேஉன்கீர்த்தி
நான்உரைக்கமுடியுமோ ராமபத்திரனே-எங்கள் (அ)

௫. முத்தொழிலும்முக்குணமும் முச்சுடரும்முப்பொழுதும்
முப்பொருளும்ஆகிநின்ற மூர்த்திராமா
பத்தர்ஆசாபாசம் தொலைக்கும்உனக்கொருநாக
பாசம்தொலைத்திடுவதுபிர யாசம்ஆமோ-எங்கள் (அ)

---

## இராத்திரியில் மகாராட்சத வீரர்கள் வதை.

### விருத்தம்.

கெடிக்கருடன்விடைகொண்டான் அப்புறம்வானரரும்
கெர்ச்சித்தார்கருடன்வந்தவகையை இராவணன்முன்
துடித்திடத்தூதுவர்சொன்னார் அவனும்மகனிடம்போய்ச்
சொன்னான்இந்திரசித்தும் ஒருபிரம்மாஸ்திரத்தால்
அடித்திடுவேன்நாளைப்போய் நரர்பொல்லார்இன்றைக்
காகாதுமிகநொந்தேன் அப்பப்பாஎன்றான்
முடித்தலைபத்துள்ளவனும் படைத்தலைவரோடே
முறைப்பட்டான்அங்கவரும் புறப்பட்டார்தாமே (௫)

அ. திபதை-பைரவிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்

௧. விக்கிரமராவணன்அனுப்பவேஒரு
வேகமாப்படை எடுத்தாரே
அக்கினிகேதுமுதல்ப்படைவீரர்கள்
அநேகரும்களம்அடுத்தாரே

௨. நீலன்முதல்ப்படைத்தலைவர்கள்இதுகண்டு
நேருக்குநேரேபோய்க் குதித்தாரே
ஆலகாலமும்வடவாக்கினியும்போல்
அவரும்இவரும்போர் எதித்தாரே

௩. சரத்தாலேராட்சதர்வானரத்தளங்களைத்
தறையிலேவிழவிழ முடித்தாரே
மரத்தாலேவானரர் அரக்கர்படைகளை
மண்டைகள்பிளந்திட அடித்தாரே

௪. வில்லும்சரமும்கொண்டுராட்சதர்வானர
வீரர்கள்அணிகளை உடைத்தாரே
கல்லும்மரமும்கொண்டுராட்சதசேனையைக்
கவிப்படைத்தலைவர்கள் புடைத்தாரே

௫. சுக்கிரீவன்வந்த சூரியகேதுவைத்
துண்டம்துண்டம்ஆக முறித்தாரே
வைக்காமல்அப்போ தங்கதன்பாய்ந்தொரு
மாபெரும்பக்கஉயிர் பறித்தானே

௬. தூமக்கண்ண ராமதூதன்எம
தூதனைப்போலவே வென்றானே
மாமுஷ்டிகரம்உள்ள நீலன்மலைகொண்டு
மலைபோன்றமாலியைக் கொன்றானே

௭. இடபன்போய்ப்பொல்லா வச்சிரதந்தனை
எற்றிஅவன்கழுத்தை ஒடித்தானே
உடனேபனசன்பிசாசனைக்கண்டோடி
உதைத்துமிதித்துக்கையால் அடித்தானே

௮. இளையோன்மேலே அக்கினிகேதும்
ஈர்இருவெள்ளம்கொண்டு நடந்தானே
கிளைபோய்ச்சேனையும் போய்அக்கினி
கேதுவும்பட்டுக் கிடந்தானே

௯. விரிவாகவேஸ்ரீராமனைஓர்ஆறு
வெள்ளம்அரக்கர்போய்க் கவிந்தாரே
ஒருவாளியினாலே ஈசல்போக்குப்போலே
உடனேஅவர்மண்ணில் அவிந்தாரே

௧௦. நாயும்நரியும் கழுகுகளும்வந்து
நாலுதிக்கிலும்குதி குதித்தவே
பேயும்ரணபத்திர காளியும்கூளியும்
பிணங்களைத்தின்றசதை உதித்தவே

௧௧. இரணசுக்கிரன் புறப்பட்டகண்ணிலே
இண்டமுள்ளுதைத்த தைப்போலே

மரணம்கொடுத்திடும் ராவணன் இந்த
வார்த்தையைக்கேட்டான் அப்பாலே

கஉ. குனித்தேமகரக் கண்ணன்படைகள்அஞ்சி
கோடிகொண்டரக்கன்முன் நின்றானே
வனத்தேனை அப்பனைக்கொன்றபழிக்குப்பழி
மனிதரைவாங்குவேன் என்றானே

கங. வெறுவாயைத்தின்னுகின்றஅவனுக்கு
வெள்அவல்கிடைத்தது தின்னவே
குறியாஅரக்கனும் இருபதுவெள்ளம்
கூட்டினானே துணை என்னவே

கச. சிங்கமுகனும்ரத்தாட்சனும் என்னும்
சேனைத்தலைவர் இரு வோர்கூட
இங்கேஅந்தமக ராட்சதன்வந்தானே
ராமசந்திரனுடனே போராட

கரு. ஓர்ஆயிரம்அம்பு மகரக்கண்ணன்
ஒருதொடைஆகவே எய்தானே
ஓர்ஆயிரம்அம்பாலே அய்யன் அதை
ஒருகொடியில்பொடி செய்தானே

கசு. பின்னும்ராகவன் அம்பாலேஅவன்
பெருந்தேரும்பரியும் அழிந்ததே
மன்னும் ஒருகணையாலேஅந்த
மகராட்சதன்தலை விழுந்ததே

கஎ. ஈளனுலேரத் தாட்சனும்அந்த
நமனார்உலகத்தைக் கண்டானே
இளையாதபனசனாலேஅந்த
இகல்சிங்கமுகன்உயிர் விண்டானே

கஅ. வில்லாலும்கல்லாலும்இருபது
வெள்ளம்படைகளும்போய் இறந்ததே
சொல்லானதுராவணன்செவியிலே
சுட்டால்போலேபோய் பிறந்ததே

## லட்சுமணருக்கும் இந்திரசித்துக்கும் இரண்டாமுறை உயுத்தம்.

### விருத்தம்.

அதைஅறிந்தான்ராவணன் என்மகன்தன்இங்கே
அழையுங்கள்எனத்தூதர் அவன்பக்கல்சென்றார்
வதைபடையின்கதைகேட்டான் தந்தையிடம்வந்தான்
வணங்கிமக்கள்இறந்ததற்கு வருந்தாதேநான்போய்



சிதையஅந்தஇருமனிதர்சவம்சீதைகண்டும்
சிறுகுரங்கின்பிணக்குவை அந்தேவதைகள்கண்டும்
பதைபதைத்தல்நீகாண்பாய் என்றிந்திரசித்தன்
பகிவிட்டான் தம்பிஅவன் எதிரிட்டான்தானே. (ருக)

சச. தரு-நாதநாமக்கிரியைராகம்-அடதாளசாப்பு.

### பல்லவி.

பெருஞ்சண்டைகேளீர்-லட்சுமணன்செய்த-பெருஞ்சண்டைகேளீர்

### அநுபல்லவி.

பெருஞ்சண்டைகேளீர்கள் அருஞ்சண்டையாளிகள்
தருந்திண்டேர்யானைகள் கருந்துண்டசேனைகள்
பருஞ்சண்டைமாருதம்போல் நெருக்குண்டவாகிகள்
மருக்கண்டவேதந்திரத்தோடு வெரும்கண்டகஇந்திரசித்தோடு
பெருஞ்சண்டை

### சரணங்கள்.

க. சிரத்தில்மணிமகுடம் தரித்துமார்பில்கவசம்
பரித்துப்பணிகள்அலங் கரித்துவெயிப்பெருங்
கரத்தில்கணுவைக்கொண்டு சிரித்தமுப்புரங்களை
எரித்தஇரணைப்போல்ஆர்ப் பரித்துவிக்கிரமத்துடன்

துக்கத்தைக்கோறி-ஓர் ஆயிரம்
சிங்கத்தேர்ஏறி-அலைஎறியும்

சீர்கொள்எழுகடலின் நீர்கொள்கரையுரளப்
பார்கள்இடுகிடெனச் சூர்கள்விட விடெனா
ஊர்கொள்பருதிநிகர் ஏர்கொள்குடைகள்மலர்த்
தார்கள்அசையும்மணித் தேர்கள்ஆயிரக்கோடி

புடைசுற்றித்தரவே-அறுபதுவெள்ளம்
படைதத்திவரவே-உயர்ந்தஅண்ட

கோளம்கணத்தசக்கர வாளம்பருத்தபுவி
நீளந்தன்னெடுபாள பாளங்காவெடிக்க
மேளங்கள்அடிக்கக்கைத் தாளங்கள் துடிக்கக்
காளங்கள்தொனிக்கதிக் காளங்கள்யானைகள்

வீரிட்டுக்கதறக்-திக்குப்பாலர்கள்
கிரிட்டுப்பதறக்-களத்தில்வந்து

துன்றுசமர்விளைக்க அன்றில்அணிவகுத்து
இன்றுமனிதர்களை வென்றுபகைமுடிப்பன்
என்றுசங்கம்பூரித்து ஒன்றநகைத்துக்
குன்றுவில்தெனைத்துடலே நின்றந்திரசித்துடனே
பெருஞ்சண்டை

௨. வீரன்இந்திரசித்தன் போரில்நின்றதனே
கார்எனமேவா ஆர வாரம்செய்ய அதி
தீரன்சுக்ரீவனைச் சேரும்வானரர்எல்
லாரும்சிங்கத்தைக்கண்டு பெரும்யானைக்குலம்போல்

நடுக்கங்கொண்டோட-அரக்கர் அவர்
இடுக்கம்கண்டாட-அநுமசுக்ரீ

வனும் அங்கதனும்ஸ்ரீரா மனுஞ்சாம்பவனும்லக்ஷ்ம
ணனும்உக்கிரம்உளவீரர் எனும்சிலவரும்அஞ்சா
தினும்முந்திவரும்ராட்ச தனும் இந்தப்போரினில்
தனுவிந்தையாவளைத்து மனுமந்திரவாளிகள்

தொடுப்பதும் ஏற்போம்-நம்மையக்கெலித்து
விடுப்பதும்பார்ப்போம்-எனவேநிற்க

தீதும் அதனில்மிக்க சூதும்உள்ள அரக்கர்
வாதுசெயநினைத்தப் போதுபடைகளைக்கொண்
டிதுசமயம்இனி எதும் விளையுமோஎன்
றோதிஅமர்வெட்க மோதிஅமர்விளைக்க

அதைஅய்யன்கண்டு-லட்சுமணனை
வதைசெய்வில்க்கொண்டு-என்றசொல்லி

அநுமார் அங்கதன்தோளில் தனுவார்ராமலட்சுமணர்
எனும்ஓர்இருவர்கேச வனும்ருத்திரனும்பிரு
கனம்ஆர்புள்ஏற்றின்மீ தினில்ஏறினைப்போல
மனம்மகிழ்ந்திடஏறிஅன்றவன்சின மிகுந்திடவீறிநின்றபின்

பெருஞ்சண்டை.

திடத்தலைன்முகற் படைத்தலைவர்கள்எல்லாம்
கிடைத்தமலைகளைக்கின் டெடுத்துமரங்களும்கொண்
டடித்துப்போர்புரியத் துடித்துப்போம்அளவில்
அடுத்தராமச்சந்திரன் தடித்தென்தம்பிசெய்யும்

சண்டையைஇன்று-நீங்கள்பார்த்துக்
கொண்டிரும்என்று-சொல்லியேகம்

பெருமானும் தம்பியும் ஸ்திரம்ஆகவேநின்று
உரம்ஆம் வில்லைவளைத்துச் சரமாரிகள்பொழிய
அரனுல்அன்றுதிரி புரம்நீறெழுந்தால்போல்
வரம்ஆரும்வெள்ளம்ஓர் இருமூப்பதுமடிந்து

விழுந்ததைக்கண்டு- இந்திரசித்தன்
அழுந்துள்ளம்விண்டு-அமர்க்களத்தில்

பெருநதிபோல உதிரவெள்ளம்ஓடவே
வரும்ஆனைசேனை குதிரையானையும்மடியவே



நருங்கிமிகுத்திலே இருவோருமாகிட்ட
சரவேகமும் இவர்கள் கரவேகமும்சொல்ல

என்தனுல் ஆமோ-ஆதிசேஷ
னும்சொல்லப் போமோ-மடிந்தசேனை

ஞாலத்தில்இந்தவக் கோலத்தர்விடும்ஆல
காலத்தைநிகர்பாண சாலத்திலேசபானு
கூலத்திலோஇந்திர சாலத்திலோஎந்த
காலத்திலும்கண்டிலேனென்ற மூலத்தைநான்விண்டிலேனென்ற

பெருஞ்சண்டை

இன்றுபோரில்நமக் கென்றராமலட்சுமணர்
துன்றும்அரக்கர்தமைக் கொன்றுவிருந்துசெய்தார்
நன்றுநன்றெனவே சென்றுசென்றபல்லாய்
மென்றுமென்றுசுவைத்துத் தின்றுதின்றுகொழுத்துக்

கூளிகள்பாட-ரணபத்திர
காளியும்ஆட-அதனைக்கண்டு

துங்கம்ஆகமுன்னம் பொங்கும் இந்திரசித்தன்
மங்கியேபிரமித்து இங்குவந்தமர்செய்
சிங்கம்ஏறனைய அங்கதன் அநுமனை
இங்குரைக்கில்அநேகர் எங்குமனிதர்என

ஆச்சரியம்கொண்டு-முன்னிருந்த
மாச்சரியம்விண்டு-இருந்தபோது

காசம் அருக்தேவர் வாசமலர்கள்கொண்டு
நேசமா இருவர்மேல் வீச அதையும்கண்டு
பூசலிலேஅரக்கர் நாசம் ஆகவேஇவர்க்
கேசல் ஆச்சுதேநம்பிற காசம்போசுதேஎன்று

மனம்திடுக்கிட்டான்-பெருமூச்சுகள்
அனந்தமாவிட்டான்-அந்தவேளையில்

முக்கியம்ஆனஎட்டு திக்குகளும்அதிர
மக்கிரட்சததிரங்கள் மிக்கிடவேஉதிர
சக்கரம்எங்கும்திரி விக்கிரமன்நேர் அநுமன்
உக்கிரமுடன்இருதோளும்கொட்டிய நெக்கிடும்ஒலிஆகாசம் முட்[டிய

பெருஞ்சண்டை

மாருதிதோள்கொட்டி ஆரவாரம்செயவே
வரும் ஆயிரங்கோடித் தேர்களிலேஇருந்த
வீரர்எல்லாம்நடுங்கிப் பாரில்விழுந்தார்லங்கை
ஊரில்இருந்தபெருங் கார் அரக்கரும்ரத்தம்

தனைக்கக்கினார்கள்-சில அரக்கர்
தினைத்துட்கினார்கள்-மேகநாதன்கண்

டோர்குரங்கார்ப்புக்கு நீர்நடுங்கினபோதே
பார்மீதிலேசெத்த பேர்நீங்களேஎன்று
கார்வண்ணராமன்பொன் நேர்வண்ணலட்சுமணன்
போர்மன்னியமுகத்தில் நேர்வந்தெதிர்த்தபோதா
யிரம்கோடிஉரவே-கத்தேரவர்
மருங்கோடி வரவே-லட்சுமணன்கண்டு
துஷ்டஇந்திரசித்துன்முன் விட்டநாகபாசக்
கட்டினாலேதோற்று விட்டான்என்றுலகத்தோர்
சட்டமாஎனைச்சொல்வார் வெட்டிஅவன்தலைஉன்
கிட்டவைக்காவிட்டால் இஷ்டஅடிமைஅல்லேன்
எனக்கண்ணன்முன்னே-சிலசபதம்
தனைப்பண்ணபின்னே-சாமியும்மெய்க்க
ஆலம்உண்டபிரளய காலருத்திரனைப்போல
சீலலட்சுமணன்பாரா சாலத்தாயிரங்கோடி
கோலத்தேரைஅழித்து மேலிட்டஅரக்கரைக்
காலன்வெருவிடஅன்றகன்றிடும்ஞாலம்மருவிடநின்றுகொன்றிடும்
பெருஞ்சண்டை

௬. தனித்திந்திரசித்தன்வில் குனித்துலட்சமணநான்
உனைக்கொன்றுன்அண்ணன்உன்தனக் குற்றவினைசெய்ய
நினைத்தேன்முடிக்காவிட்டால் அனைத்துலங்கையும்ஆளும்
கனத்தராவணன்மகன் எனப்பேர்படைத்துமொரு
நலன்இல்லைஇன்று-வில்லெடுத்ததால்
பலன்இல்லையென்று-சொல்லலட்சுமணன்
நல்லவார்த்தைசொன்னாய் செல்வம்சொல்லுக்கஞ்சுமா
மல்லார்போரினில்வந்தால் எல்லாஅப்போதெரியும்
பொல்லாஉன்தனையேநான் கொல்வேன்உனக்குன்அப்பன்
கல்லார்கடன்கழிப்ப தெல்லாரும்காண்பார்வா
வாஎன்றுசொல்ல-இந்திரசித்தாஆ
ஆஎன்றுவெல்ல-பிரளயகாலத்
திடிபோலஆர்ப்பரித் துடனேகடோரம்ஆம்
வடவாக்கினியைப்போலும் திடவாளிகள்அனேகம்
படபடெனஅங்கதன் உடலில்ஆயிரம்பாணம்
கடல்தாவும்அனுமான்மேல் அடல்சேர்பாணம்இரண்டா
யிரம்விட்டுக் கடுக்க-தேவர்கள்கண்டு
உரம்கெட்டுநடுக்க-ராமாநுஜன்
இடிஉற்றெழுந்துகார்கற் கடகச்சந்திரயோகத்தில்
படியில்பொழிந்தாற்போல் வடியிட்டசரமாரி
நொடியில்பொழியநீசன் கொடியப்பகழியெல்லாம்
பொடிபட்டிடஅன்றுகெட்டவன் கெடிவிட்டிடநின்றுவிட்டபின்
பெருஞ்சண்டை



௭. லோகநாதன்தம்பியும் மேகநாதனும்எய்யும்
வேகம்ஆகியபாணத் தீகள்எழுந்ததினால்
சாகரங்களின்நீரும் மேகநீரும்வற்றிப்
போகக்காடுகள்பற்றி வேகஅதனைராமா
நுஜன்கண்டுகடுகி-சரங்கள்பல
புஜம்கொண்டுமுடுகி-விடவேஇந்திர
சித்தன்தேரில்கட்டும் பத்துநூறென்னும்சிங்
கத்திரள்யாவையும் செத்துப்போகஅந்த
எத்தன்இந்திரசித்தனைச் சுற்றிவந்திடும்சே
மத்தோர்இல்லாமையால் மத்தியானசூரியன்
பரிவேஷம்நீங்கி-நின்றாற்போல்நின்
றுருகோஷம்ஓங்கி-செய்துகுரங்கின்
சேனைமேலேபெருஞ் சேனைமழைபோல்கூர்மை
ஆனசரங்கள்கையில் ஆனமட்டும்எய்து
மானஅங்கதன்மேலும் சேனைசரங்கள்விட்டு
வானின்மீதிடிக்குச்ச மானம்ஆகச்சங்க
நாதத்தைப்பண்ணி-மகிழ்ஓர்வி
காதத்தைஎண்ணி-லட்சுமணன்பத்து
தோட்டம்ஆனபாணம் போட்டுமேகநாதன்
மாட்டிவந்தகவச மூட்டுகளைக்கழற்றிக்
கோட்டும்வில்குணத்தொனி காட்டிநின்றிடச்சுவாமி
கேட்டுமாநலம்என்றுமகிழ்ந்திடும்கூடவானரர்நின்றுபுகழ்ந்திடும்
பெருஞ்சண்டை

௮. மண்டுபோர்இளையான்பிர சண்டவில்குணத்தொனி
கண்டுமனமகிழ்ந்து கொண்டல்வண்ணராமன்
அண்டம்உண்டவாயால் விண்டுசொல்லவானரர்
எண்டிசைகளும்அதிர் கொண்டிடவேஅட்ட
காசத்தைப்பண்ணி-கர்ச்சித்தார்துஷ்ட
நாசத்தைஎண்ணி-அந்தவேளையில்
ஈசர்க்குஎண்டிசை வாசர்க்குஉலகர்க்கும்
பேசற்கரியபிரம பாசத்தைவிடுவதில்
மாசத்துவம்உடைய நீசன்இந்திரசித்தன்
மோசத்தைஎண்ணிஆ காசத்திலேபோய்த்தன்
உடலத்தைமறைத்தான்-வானரர்என்னும்
கடல்வற்றக்குறைத்தான்-அதனைக்கண்டு
காமாரிபோபரந் தாமாஸ்ரீராமாநாம்
ஏமாறிஇருந்தால்என் ஆமோஇந்திரசித்தன்
சாமாறுபிரம்மாஸ்திரம் நாமேவிட்டிடவேணும்
நேமம்அருள்வாய்என்று ராமாநுஜன்சொல்ல

அதைராமன் தடுக்க-செயிக்கும்வேளை
இது அன்றென்றிடுக்கம்-உறவேஇந்திர
சித்தன்மனதில்வெகு சத்திஉள்ளபிரம
அஸ்திரத்தைவிட்டு வெற்றிபெறவேஒரு
உத்திசெய்துலங்கை அத்தினைஇதுகண்டு
சுற்றும்வானரர்ஆரவாரித்த சத்தியானவர்கேரேபூரித்த (பெ)

---

## அனுமாருக்கும் அகம்பனுக்கும் உயுத்தம்.

விருத்தம்.

நலிஇந்திரசித்திலங்கைநகர் புகுதக்கீழே
லட்சுமணனேடிநங்கிக் கவசமும்முதல்நீக்கி
மெலிசேனைஉணவுக்காக வினைனைப்போக்கி
வீரன் ஆயுதபூசை செய்யப்போனான்
கிலிகொள்மகன்உத்தியினால் அவரைஏமாற்றக்
கிளர்இராவணன்விட மகோதரனேடகம்பன்
வலியவந்தான்அவனையும் சேனைகளையும்பாய்ந்தனுமான்
வாட்டினான்தெண்டுகொண்டு மாட்டினான்தானே (௫௭)

௪௩. தரு-பியாகடைராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

சாடினானே அனுமான் சாடினானே

அநுபல்லவி.

சாடிக்கும்பகற்னன்முன்னேபோடும் அந்தத்தெண்டினாலே
நாடிஅகம்பன்படையில் ஆடுகளில்வேங்கைபோலே (சா)

சரணங்கள்.

௧. வாரும்வாரும்ராட்சதரே வாரும்என்றுகூவினான்
வாரிவாரிஅந்தலங்கை ஊரில்விழத்தாவினான்
சாரிசாரிஆகஒரு கேசரிபோல்த்தாவினான்
தான்ஒருத்தனும்பெருத்திர சாமிபோய்உலாவினான்
ஆரநெருங்கியகுதிரைகள்சருகென ஓட்டிபிணம்பிணமா
ஆனைகள்பூனைகள்ஆகவிழும்படிவாட்டி தேங்காய்போல்த்தள்ளி
தேர்தனையேவிடுசாரதி தலைகளைசூட்டி-மென்மேலும்வந்த
சேனையைவீசிஅதோகதி ஆகவேமாட்டி-திசாதிசையில்
வீரிட் டரக்கியர்கிழ-ஒரிக்குரல்போலே அழ
நேரிட்ட ராட்சதர்விழ-பீரிட்ட இரத்தம்எழ (சாடி)

௨. கோடிபேர்க்கொருகுத்தாகப் போடுவான்ஒருபுரம்
கொக்கரித்துராபனைக்கொண் டாடுவான்ஒருபுரம்
ஆடுவான்வாலாலேசுற்றி மூடுவான்ஒருபுரம்
ஆடாசேவகன்என்று தேடுவான்ஒருபுரம்



மூடன்நிகும்பன் அவ்வேளையிலே அனுமானேஉன்னைநான்கொன்று
போடுவேன்என்றொருசூலம் எடுத்தெறிவானைப்பொறிந்திஅவன்
தாடையிலேஓர்அடிபோட முழங்கியசோனைபோலவேரத்தம்
ஓடிமடிந்தனன்மேலும் மகாபலசேனை-சுற்றியபோது
சாடிசட்டிஒருகாலே மூடியிட்டகுளேபேலே
கோடைஇடிவிழுந்தால்ப்போலேஓடிஓடித்தெண்டினாலே (சாடி)

௩. அகந்தையால்ஒருதெண்டு கொண்டாயிரம்கழுதைத்தேரிலே
அகம்பன்வந்தடித்தான்முன்னேபுகுந்தனுமான்மாரிலே
திகழ்ந்தஅனுமானும்தெண்டால் தட்டினான்அந்நேரிலே
தெண்டெண்கொண்டகையும்பின்டுருண்ட அந்தப்பாரிலே
புகுந்தவன் தனதிடக் கையால் அனுமானை அடித்தான்-அடிக்கஅய்யன்
பொட்டெனவே அந்ததட்டனை கையிலே பிடித்தான் பிடித்து மார்பில்
பகுந்துகுபீரென ரத்தம் இறங்கிட இடித்தான்-இடித்தெதனும்
பார்த்தவன் ஆவியைகூற்றுவன் ஆம்-எனக்குடித்தான் முந்திஐயையோ
புகைந்துஇராவணன்தள்ள-உகந்துவரும்நூறுவெள்ள
மிகும்படையைக்காலன்கொள்ள அகம்பன்உயிர்துள்ளத்துள்ள (சாடி)

---

## இளையவர் பிரமாஸ்திரத்தால் கட்டுண்டதற்காக ஸ்ரீராமர் இரங்கல்.

விருத்தம்.

அகம்பன் அங்கேபட அனுமான்முதலோர்கள் இருளில்
அகன்றுதனித்தனிப்போர் செய்திளையவன்பால்அடைந்தார்
புகைந்தஇராவினில்மகோதரன் தேவேந்திரன்போல்
போர்செய்தான்இளையவனும் திகைத்தான் அப்போது
முகிந்தபிரம்மாஸ்திரம் இந்திரசித்துவிட்டான்தம்பி
முதல்ஆனோர்படுத்துவிட்டார் அதைஅறிந்துராமன்
மிகுந்தீயால்வந்துலைவாய் மெழுகுபோல்உருகி
விழுகின்றான் துணைவனைப்பார்த் தழுகின்றான்தானே. (௫௮)

௪௪. திபதை-எருக்கலகாம்போதிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. அப்பனே அய்யனே அரும்பிறவியேகான்தன்
அரசேகண்மணியே லட்சுமணா
எப்படிகான்உனைமறப்பேன் எப்போதுன்னுடன்பிறப்பேன்
இனியென்மனம்துணியேன் லட்சுமணா

௨. வன்னாரும்பிரம்மாஸ்திரம் கொடுத்தபிரம்மாவைப்பழி
வாங்கநீதொடர்ந்தாயோ லட்சுமணா
என்னுடன்பிறந்தகுறை உசரப்போய்த்தசரதற்கு
இயம்பநீகடந்தாயோ லட்சுமணா

௩. தந்தையையுஞ்சடாயுவையும் கொடுத்ததும்போதாமல்உன்
　　தனையும்பறிகொடுத்தேன் லட்சமணு
இந்தவயதினில்இந்தக் கண்காட்சிகாணநான்
　　என்னஉடம்பெடுத்தேன் லட்சமணு

௪. அந்தோநான்கனி ஆகித் தண்ணீர்விடாய்எடுத்தால்
　　ஆர்முகத்தைப்பார்ப்பேன் லட்சமணு
இந்தாருஞ்சாய்கனிகள் அண்ணாஎன்றழைக்கும்உன்
　　இன்சொல்நான்என்றுகேட்பேன் லட்சமணு

௫. நேர்அறிந்தென்வயிற்றில் காய்கனியைஇட்டநீ
　　நெருப்பைஇட்டாயோஅய்யோ லட்சமணு
ஆரையும்விட்டென்னைவிடேன் என்றாயோஎன்னைக்கூட
　　அகலவிட்டாயோநீ லட்சமணு

௬. சோற்றிலேகல்எடுக்கறியேன் முகவனைக்கல்லெடுப்பேன்என்ற
　　சொல்லையோநான்எடுத்தேன் லட்சமணு
ஆற்றிநான்முடிபெறுமுன் வந்தவிபீஷணர்க்குலங்கை
　　ஆளமுடிகொடுத்தேன் லட்சமணு

௭. படிக்கும்உன்புத்திதள்ளி உனக்கும்வானரங்களுக்கும்
　　பழிகாரன்ஆனேனே லட்சமணு
பிடித்ததேபிடி ஆகப் பெண்வார்த்தைகொண்டுநான்
　　பிழையோசய்போனேனே லட்சமணு

௮. நீமாளஎன்உயிர்போம் பரதற்குஇதுகேட்கில்
　　நிமிஷத்தில்உயிர்போமே லட்சமணு
தாய்மார்க்கும்உயிர்போமே நான்பிறக்கச்சூரியகுலம்
　　தான்துலக்கர் ஆச்சே லட்சமணு

---

## ஸ்ரீராமரை ஆகாசத்தில் சகல தேவதைகளும் தோத்தரித்தல்.

விருத்தம்.

இந்தாவந்தேன்வந்தேன் என்றினையபெருமான்முகம்நோக்கி
நொந்தாயாசம்பெறமெலிந்து நோக்கும்பெரியபெருமான்முன்
அந்தோஉனக்குங்கவலையுண்டோ அய்யாஎன்றேஅந்தரத்தில்
வந்தார்தேவர்சாமிமுகம் மகிழ்ந்தார்இரங்கித்துதித்தாரே

௪௭. தரு-பர்தவராளிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி

உன்னதுமகிமையை - இன்னதென்றெவராலும் உரைக்கலா



அநுபல்லவி.

நின்ஒருநாபியில்பிரமா ஒருத்தனாலே
　　நிகரில்சராசரங்கள் சகலமும்தராலாலே
நன்னிஅரக்கருக்கு நீமாய்ப்படுவது
　　நாயமோசாமிஉன்தன் மாயமோபுவிமேலே(உன்ன)

சரணங்கள்.

௧. முப்பாம்பொருளும்ஆய் முப்பாம்பெருளுக்குள்
　　மூலமுதற்பொருளும் ஆவாயே
அப்பனும்அன்னையும்தம்பியும் உனக்குண்டோ
　　அவர்கள்வருத்தம்கண்டு நோவாயோ
இப்படிஉன்சரித்திரம்இது வேதிலேவரம்
　　என்றால்அத்தையுங்கூடக் கடந்தாயே
செப்பினும்இல்லையந்தினும்இல்லைஉன்செயல்
　　சீமையிலேதகப்பன் சாமிஎன்பதும்நீயே(உன்)

௨. அத்திமரத்தினிலேதொத்தியகனிபோலே
　　அண்டம்என்னும்கனிகள் உன்மேலே
தொத்திஇருபவற்றுள் ஒருகனியிற்செனித்த
　　துஷ்டஅரக்கர்என்னும் புழுவாலே
கஸ்திஅடையல்ஆமோ சிற்றாரில்செல்வக்கூத்து
　　கட்டுகிறாய்என்ன ஒருகாலே
உத்தமனேஉன்கீர்த்தி எத்தனைபேர்சொன்னாலும்
　　ஊசிக்கண்ணாலேஆ காசம்பார்க்கிறாற்போலே(உன்)


௩. அம்பரீஷன்பிரகலாதனன்முதலோருக்
　　கருளிச்செய்தானே அனுக் கிரகநாட்டம்
நம்பினஎங்களைஇந்தஅரக்கருக்கு
　　நடுங்கச்செய்ததென்ன மாறாட்டம்
தம்பியும்பிழைக்கிறான் உன்தனுக்கிவர்என்ன
　　சண்டமாருதத்தின்முன் சருக்கோட்டம்
எம்பிரானேநீநொந்தால் எங்களுக்கெருகதி
　　இருக்குமோதேவர்என்றும்தரிக்குமோ எங்கள்கூட்டம்(உன்)

---

## ஸ்ரீராமலட்சுமணருக்குச் சீதாதேவிஇரங்கல்.

விருத்தம்.

வானவர்இப்படிதுதிக்கத் தூதர்சென்றா
　　மன்னவனேஉன்மகனால் மனிதச்சாதி
ஆனவரும்குரங்குகளும் முடிந்தார்என்றார்
　　அவனும்அங்கேபுஷ்பக விமானத்தேற்றிச்





சானகிக்குக்காட்டும்என்றான் கண்டாள்சீதை
தணல்அடுத்தவெண்ணெய்போல் உருகிவாடி
நான்ஒருபெண்பிறக்கஇவ்வா றாச்சோஎன்று
நலிக்கின்றாள்நொந்துநொந்து மெலிகின்றாளே. (௯0)

௪0-திபதை-நீலாம்புரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. என்னசெய்வேன்சாமிநான் என்னசெய்வேன்சாமிநான்
இந்தக்கோலங்காட்டவோ வந்தீர்
துன்னிக்கைக்கெட்டினது வாய்க்கெட்டாமலேபோக
தோதகம்ஏன்ஒருமிக்கத் தந்தீர்

௨. கண்ணே அமுதே கருணைகரனே எவமனக்
காவலோடே இத்தனை நாளா
மண்ணில்இருந்த துயிர் மறைந்ததிருமேனியை
மார்பில்அணைப்பதற்கோ வாளா

௩. நகரில்இரென்றஉம்மை அகலேன்என்றோர்பிடியா
நான்தொடர்ந்ததிதற்குத் தானோ
பகைவர்இலங்கையிலே நீர்மடிந்தபிறகும்
பாவிநான்உயிர்தரிப் பேனோ

௪. ஏகபோகம்ஆகவே இருந்தஎன்பிராணேசனை
இழந்தஎன்உயிர்எமன் கொண்டு
போகமாட்டாமல்இந்த பொல்லாத்துயர்க்கடலில்ப்
போட்டுவிட்டானேஎன்ன கண்டு

௫. ஊர்மனிதர்க்கன்றுநீர் பதினாலுவருஷம்போய்
உடன்வருவேன்என்றதும் தப்போ
ஏர்பிடித்தோன்என்செய்வான் பாணிபிடித்தவள்பாக்கியம்
என்பார்அதுவேதான் ஒப்போ

௬. ஆசைமான்பின்போஎன்றாள் காரணகாட்சிக்கெல்லாம்
அடிவேர்இவள்என்றறி வீரே
மோசம்செய்தாள்இவளை முகம்பார்க்கலாகாதென்று
மூடிக்கொண்டீரோகண்ணை நீரே

௭. வீட்டில்என்சாமிஅன்னை வார்த்தைதட்டாமல்வந்து
விரதம்கொண்டார்என்பதெல்லாம் ஏனோ
காட்டில்எரித்தநிலா கானலில்மழையாச்சே
கைகண்டபலன்இது தானோ

௮. அருமைஆகியஓர்பெண் பாவத்தைக்கட்டிக்கொள்ளும்
அரக்கர்செயம்பொருந்தப் போமோ

தருமமேசெயம்பெருமாளே துணைஎன்னும்என்
சாமிக்கபசெயம்வரல் ஆமோ

௯. காதகஇந்திரசித்தன் சூதோஅன்றிஇதென்ன
காரணமோகான்முன்செய் சதியோ
ஆதிமறைபொய்த்தாலும் பொய்யாப்பிராணநாதனை
அலையக்காண்பதும்பாழ்த்த விதியோ

௧௦. அய்யோலட்சுமணாநீ என்சிறைமீட்கும்முன்னே
ஆவிஉனக்கும்சும்மாய் போச்சோ
கையாலேநான்பாவிஉன் அண்ணன்கைபிடித்த
காலபலம்இப்படி ஆச்சோ

௧௧. ஓதும்பேச்சும்காணேன் மூச்சும்காணேனேசாமிக்
குயிர்உண்டோஇல்லையோசொல் மகனே
ஏதும்அசைவுங்காணேன் இருவர்க்கும்ஓர்எழுத்தா
எழுதிவைத்தானோசதுர் முகனே

௧௨. மையானகாட்டில்அண்ணன் மெய்வருந்தாமல்தூங்க
மலர்கொய்துமெத்தைஇட்ட நீயே
வெய்யராட்சதர்கீசர் எய்யும்அம்புகள்என்னும்
மெத்தைமேலேகிடக்கி றாயே

௧௩. மெய்காணும்சாமிக்கும் உனக்கும்பழிகாறிநான்
விழுந்தாலும்என்பார்அல்லோ நீலி
கைகேசிமகராசி கறுவிக்கறுவிஎல்லாம்
கட்டிக்கொண்டாளேபாக்கிய சாலி

௧௪. காப்பகைவந்தபோது நீஇருந்தண்ணனைக்
காட்டிக்கொடாதேஎன்று தனியே
தாய்சுமித்திரைசொன்னாளே அதுக்கோநீஅண்ணன்முன்னே
சாய்ந்துகிடக்கிறாய்பிள்ளைக் கனியே

௧௫. புத்திரனேகண்மணியே கைத்துணை ஆனஉன்னைப்
போக்கடித்தேன்நான்பாவி பொய்யோ
வற்றிவடகம்ஆயும் இத்தனைபாடுக்கானை
வைத்ததேபாவித்தெய்வம் அய்யோ

௧௬. எப்போதும்போலேசாமி செயிப்பார்என்றிருந்தேனே
இங்கேகண்டேனே அலங்கோலம்
குப்பைஉயர்ந்ததென்ன கோபுரம்தாழ்ந்ததென்ன
கூடிச்சேரநீசருடன் காலம்

௧௭. தாய்மார்கள்இருவரும் பரதனும்இதுகேட்கத்
தரிக்குமோஅவரவர் தேகம்
கேவலப்பழிகொண்டேன் எனக்கினிஒருக்காலும்
கிடைக்குமோநல்லபர லோகம்



## திரிசடைஅம்மாள் சீதாதேவியைத் தேற்றுதல்.

விருத்தம்.

பரிந்திந்தவகைஅழுது சாமிமேலே
பதைத்துவிழஎழுந்தவளைக் கட்டிக்கொண்டு
விரிந்திடும்கண்ணீர்துடைத்துப் பிறர்கேளாமல்
மீதப்பசித்தோர்களைத்தேற்றும் அமுதுபோல
சரிந்தபயிர்களைத்தேற்றும் மழையைப்போல
சவலைதனைத்தேற்றுகின்ற தாயைப்போல
தெரிந்ததிரிசடைஎன்பாள் சீதைதன்னைத்
தேற்றுவாள்மனக்குறையை ஆற்றுவாளே. (௯௧)

௪௮. தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஏதுக்குவருந்துகிறாய்அம்மா-நீ-ஏதுக்குவருந்துகிறாய்சும்மா

அநுபல்லவி.

கேதப்படாதேதெய்வம் பொதுஎன்பதறிந்ததோ
கிணறுதப்பிஎன்ன தூரவிலேவிழுந்ததோ (ஏது)

சரணங்கள்.

௧. மாயமாமான்என்றும் சனகராசன்என்றும்
மயக்கம்காட்டினான் உன்னண்டை
மற்றைநாள்வெளி ஆச்சுததுபோல்இந்திர
சித்தும்செய்கிறான் சிலசண்டை
ஓயவேபெரும் பேயும்நாயும்தின்ன
உருளுதுபார்இவன் தலைமண்டை
உரத்தராமனை அரக்கர்கெலிக்கும்போது
உள்ளங்கையிலேமுடிக்கிறேன்பார் ஒன்பதுகொண்டை (ஏ)

௨. அநுமான்என்பவன் தனதாகவேவந்து
அடிமைக்கடிமைஆகி உழைக்கிறான்
அவனாலேயேஉன் கணவன்தப்பியுடனே
தவறாதபடி பிழைக்கிறான்
கினைவேதோலட்சுமணன் இளஞ்சூரியன்
எனவேமுகத்தொளி தழைக்கிறான்
கிஷ்கிந்திலே ராவணனையும்படையையும்
சமனும்வந்துதன்உலகத்துக் கழைக்கிறான் (ஏ)

௩. சொப்பனமும்உன்தன் கற்புசகுனமும
சுபபலன்கொடுக்காமல் நீங்குமோ
சொல்லாய்மங்கலம் இல்லார்களைஇந்த
தூயவிமானமது தாங்குமோ

ஒப்பில்ராகவன் இந்தராட்சத
அற்பருக்குப்பின் வாங்குமோ
ஒருக்காலேபயந்திருக்கிறாயேஎன்ன
ஒருகுளப்படிகண்டுதிரைகடல் ஏங்குமோ (ஏ)

---

## அனுமார் சஞ்சீவிபர்வதத்தைக் கொண்டுவருதல்.

விருத்தம்.

திரிசடைசொல்லாச்சீதை தேறிப்போனாள்
சிலைவீரர்பாடும் சேனைகளின்பாடும்
கருதிவிபீஷணன்சொல்ல அனுமான்சாம்பன்
கட்டுரையால்ச்சஞ்சீவி மலையைநாடி
இருபுயமும்தூக்கிஅண்ட கோளமட்டும்
எட்டும்விஸ்வரூபம்கொண் டினிமேல்நீங்கள்
வெருவிடவேண்டாம்நான் போய்வருவேனென்று
விளம்பினான் அனுமந்தன் கிளம்பினானே. (௩௨)

சக. தரு-சுருட்டிராகம்-ரூபகசாப்புதாளம்

பல்லவி.

பாய்ந்தானே அனுமந்தன் பாய்ந்தானே-சஞ்சீவி
பர்வதத்தைக்கொண்டு வாய்ந்தானே

அநுபல்லவி.

சேர்ந்தசாம்புவன்உரைக்கையாலே திரிவிக்கிரமசாமிபோலே
தேவர்மகிழ மூவர்புகழ
திசைஉளநீளம்கண்டு விஸ்வரூபம்கொண்டு(பாய்)

சரணங்கள்.

க. தெற்கிலேநின்றுவடக்கைநோக்கி விஸ்வரூபத்தைப்பெருக்கிநக்ஷத்
திரமண்டலமும்கிழித்தேஅண்ட கோளத்தைமுட்டிநெருக்கி-ஒண்டி
நிற்கப்போதத்திசைஎட்டினிலும்இடம்இல்லாமலே அருக்கி-பெரு
நிலத்தைஉதைத்துவிசைத்துக் கிளம்பிநெடியகழுத்தைச்சுருக்கி-ஒரு
கைக்குக்கைஓராயிரயோ சனைமட்டும்நீட்டி-நிமிர்ந்து
கணகணெனவேவீரவாலின் மணிதனைஆட்டி-தனது
விக்கிரமபுசபலபராக்கிரமம் அடங்கலும்காட்டி-தகப்பன்
விசையிலும்அதிவேகம்ஆகிய விசையைமுன்ஓட்டி-எங்கும்
மக்கிமலைகள்வேர்அறுந்தாட-மரங்கள் செடிகள்பிடுங்குண்டோட

சொர்க்கத்தவரும்பதற பக்கக்கடலும்கொதற
திக்குக்கரியும்கதற சக்கிரக்கிரியும்சிதற (பா)

உ. இலங்கைவிட்டொன்பதாயிரம்யோசனை இமயகிரியில்த்தாண்டி-அந்த
இமயம்விட்டொன்பதாயிரம்யோசனை ஏமகூடத்தில்த்தாண்டி-அப்பால்



சலம்கொண்டான் பதினாயிரம் யோசனை நிஷதகிரியித் தாண்டிநிஷதமும்
விட்டொன்பதினாயிரம்யோசனை தங்கப்பெருமன்தாண்டி-அங்கே
துலங்கும்வெள்ளியங்கயிலைசசன் உமைக்கருக்கையாலே-வாயுவின்
சுதன்இவன்என்றுகாட்ட அவனைத் துதிசெய்தப்பரலேவிளங்கும்
அலங்கலின்மாயவனைப்பணிந்து தாவிவிண்மேலே-போகையில்
அருக்கனைக்கண்டுவிடிந்துபோச்சென்று திகைத்தொருகாலேபின்னும்
நிலம்தனில்அங்கேபகல்என்றறிந்து நீலமலைக்கண்டப்பால்ப்பறிந்து
விலங்கிப்புயல்விண்டொழிய தொலைந்தெட்டரவும்சுழிய
குலுங்கித்தரையும்குழிய கலங்கித்திசையும்கிழிய (பா)

ந. அரியமருந்தைக்காக்கும்தெய்வங்கள் அடங்கலும்வந்துதடுக்கிநீ
ஆராளென்றுகேட்கராமதூதன்நான் என்றுகடுகி-ஒரு
பெரியசக்கரம்சுழன்றுவந்ததுபோமட்டும் நெஞ்சைஒடிக்கி-கிட்டி
பெலத்தங்கிருந்தகாவற்பேரையும் பின்னிட்டிடவேமுழக்கி-அங்கே
தரையிலேஆயிரம்யோசனை தாழ்ந்துவேரோடி-மேலே
தலைஎடுத்தோர் ஆயிம்யோ சனைமட்டும்கூடி-ஆர்க்கும்
தெரியவேஓர் ஆயிரம்யோ சனையோடுமூடி-நின்ற
தீர்க்கமலையைஒருகையாலே தூக்கிப்பந்தாடி-திரும்பி
வருகையில்அந்தவாடைசுழன்றுவஞ்சகன்பிரம்மாஸ்திரம்-சுழன்று
ஒருலட்சுமணன்தேற-பெருகிப்புவனம் தேற
தருமப்பயிரும் தேற-திருலட்சிமியும் தேற (பா)

---

## ஸ்ரீராமர் லட்சுமணருக்காகப் பின்னும் இரங்கல்.

விருத்தம்.

மறம்மிகும்அனுமான்பாய்ந்து வருமுன்னேசாம்புவானும்
திறல்விபீஷணனும்தேறத் தேற்றுவார்தம்மைநோக்கி
கறவைதன்கன்றைத்தேடிக்கரைகிறார்போலராமன்
பிறவியைஎண்ணிவேதை பெருகுவான்உருகுவானே. (௩௩)

ருo. தரு-ஏதுகுலகாம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆனாலும்என்னைப்போல்இனி-ஆர்க்குண்டிந்த-அநியாயம்

அநுபல்லவி.

மனுகான்தசரதன் பிள்ளைதவம்
வருந்தையிலேஇப்படி இருந்ததோகாரணம் (ஆன)

சரணங்கள்.

க. ஆர்ஆர்க்கென்னசெய்யினும்தம்பிபோலே
அதுவந்தெனஅவிதி துடைக்குமோ
நேரோராவணனைக்கண்டுவிட்டு
நெஞ்சுகிடந்துபுடை புடைக்குமோ

தீராஎன்காலப்பிழைவெண்ணெய்
திரண்டுவரச்சேதாழி — உடைக்குமோ
தாரம்தேடக்கிடையாதோஎன்
தம்பியைப்போல்எங்கும்தேடக் — கிடைக்குமோ (ஆ)

௨. சற்றும்தம்பிவார்த்தையைஎண்ணமல்
தயங்கிமானின்பின்னேபோ — னேனே
கத்திக்கொண்டுங்களைத்தேற்றிவந்து
கழுத்தறுத்தேனேநான் — தானே
உற்றதகப்பனும்சடாயுவும் — தேனே
ஒருபிறவியும்இழந் — தேனே
பெற்றாரையும்பிறந்தாரையும்கொன்றேன்
பெண்ணைகொண்டபித்தன்என்பது — நானே (ஆ)

௩. சதிகாறராட்சதப்பையல்கைக்கு
தாழுவதென்தம்பிக் — கையோ
மதிமோசமா அய்யனைக்கொண்டுவந்து
மடிப்பாகக்கொடுத்தேன்அய்யோ — பொய்யோ
இதவாகதருமமேசெயிக்கும்என்
திருந்தஎனக்கது — மெய்யோ
கதையோகரும்புக்குழுதபுழுதி
காய்ச்சினபாலுக்குசர்க்கரைஆமோ — அய்யோ (ஆ)

## தம்பிக்காகஇரங்கினஸ்ரீராமரை சாம்புவான்தேற்றுதல்.

விருத்தம்.

இளையவனைநினைந்திந்தப்படிக்கு ராகவன்புலம்ப எழுந்தான்சாம்பன்வளையும், வகைவணங்கிநின்றான்சாமிநீ நொடிப்போதுவருந்தவேண்டாம், விளையும்உயிர் தரும்மருந்துகொண்டுவருவான் அனுமான்விழுந்தோர்க்கெல்லாம், கலைஅகலும் அதுசெய்யும்குணமின்பான் காண்பாய் இக்கணம் என்பானே.

௫௧. தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவேதைநீகொண்டாய்சாமி இனிஎந்தவிதம்பிழைக்கும்பூமி

அநுபல்லவி.

சந்ததம்உனதுதர்மத்தாலே — தழைப்போம்
தம்பியும்நீயும்எல்லாரும் — பிழைப்போம்ராமா (இ)

சரணங்கள்.

௧. அளந்துன்னைநான்அறிவேன உனக்கொன்றும்குறையில்லை
அலைகடல்கடையச்சே — காணுமருந்தன்று





வளர்ந்துவடகுருவில் இருந்ததைக்கொண்டுவர
மாருதிகிளம்பினான் — பாய்ந்துசென்று
பிளந்துகூட்டும்ஒன்று படைகரைப்பதொன்று
பிராணன்கொடுப்பதொன்று பெலன்கொடுக்கிறதென்று
களங்கம்இல்லாமல்வரும் அதுமுன்னைகமலை
கலங்கினாலும்மனங்கலங்காதவனே — இன்று (இந்)

௨. தன்னைப்படைத்தபிரம் மாவையும்பிரம்மாஸ்திரம்
சாடும்உயிர்குடித்துப்போடும் — அதன்கடோரம்
மின்னும்பிரம்மாஸ்திரமும் அந்தமருந்தைக்கண்டால்
மெய்யைவிட்டுக்கழன்று — செய்யுமேநமஸ்காரம்
பின்னைத்தம்பிகையாலே அரக்கர்படுவதெல்லாம்
பெருக்கத்தெரியும்சற்றே — பொறும்பொறென்னவிசாரம்
பன்னிச்சொல்வதென்ன முன்னாள்சண்டைஒரு
பாக்கும்இனிமேல்ச்சண்டை — தோப்பும்ஆகும்இந்நேரம்(இந்)

௩. ஆரும்அறியார்அந்த மருந்திருக்கும்இடத்தை
அடையாளம்சொன்னேன் — விஷ்ணுசக்கரம்காவல்உண்டு
பேரும்ஊரும்அறியார் அத்தைஇந்தமட்டுக்கும்
பிடுங்கிக்கொண்டுபோன — பேர்களும்இல்லைபண்டு
சாரும்வாயுவேகம் மனவேகமா அனுமான்
தருவானகொடிக்குள் இங்கேவருவான் அதனைக்கொண்டு
நேரும்உன்காரியம் உனக்கேஜெயம்அய்யா
நெருப்புமெழுகுபோல் — அடிக்கடிமனம்பிண்டு(இந்)

---

## தம்பிமுதலானோர் எழுந்ததற்காக ஸ்ரீராமர் அனுமாரைப்புகழுதல்.

விருத்தம்.

வெம்பிஇந்தவிதம்சாம்பன் தோற்றும்போது
விக்கிரமமாருதிமலை சஞ்சீவிதன்னைப்
பின்புகளத்தினில்வைத்தான் ஒருபிரமாஸ்திரமும்
பிரிந்திடவேபரிபூர்ண சந்திரன்போலே
இம்பர்இளையவனும் வெள்ளம்எழுபத்தும்
எழுந்திடப்பூமலர்தேவர் பொழிந்துவாழ்த்தத்
தம்பியைப்போல்எழுந்த இராகவன்விசாரம்
சாடினான்அனுமனைக்கொண் டாடினானே. (௧௫)

௫௨. தரு-சாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அனுமானே-நீயே-கனவானே

அநுபல்லவி.

தனதாளங்கட்குப்பிராண தாரைவார்த்தாயே(அநு)

சரணங்கள்.

௧. நமதுதுணைவரும்வா னரர்களும்தாமே
நிமிஷத்தன்னில்உயிர் நிலைபிடித்தோமே
சுமதலைஉனக்கென்றே துணிந்தோர்நாமே
எமலோகபரியந்தம் இனிச்சாதிக்கலாமே(அநு)

௨. ஒன்றும்அசைவில்லாமல் உடம்பையும்மறந்தோம்
கொன்றஉயிர்களை நீ கொடுக்கவேசிறந்தோம்
அன்றுதசரதன்பெற் றுருயிர்இறந்தோம்
இன்றுனதுவயற்றில் இருவரும்பிறந்தோம்(அநு)

௩. விழிபோலும்என்தம்பி மெய்உயிர்போயே
முழுகாதபடிகாத்தாய் முழுதும்காப்பாயே
பழிகாரன்முன்இந்த பயம்தீர்த்தாயே
அழியாதசிரஞ்சீவி ஆயிருப்பாயே(அநு)

## இலங்கையில்வானரர் நெரிப்பிட்டுக் கொச்சனையிடுதல்.

விருத்தம்.

கட்டிஉவந்தனுமத்துதிராகவ கர்த்தன்உரைத்தளவில்
தட்டறஅண்டர்இறைத்தனர்பூமலர் தத்தையர்கீர்தமிட
மட்டறவெந்துபொடிப்பொடிஆக விளைந்துநெருப்பதனைக்
கிட்டிஇலங்கையில்இட்டனர்வானரர் கொச்சனை இட்டனரே. (௬௬)

## இந்திரசித்து மாயாசீதையை அனுமார்முன் கொண்டுவருதல்.

விருத்தம்.

இத்தலையில்இவர்ஆர வாரப்கேட்டான்
இலங்கேசன்உள்ளுடைந்தான் உடனே இந்திர
சித்தெழுந்தன்சஞ்சீவி மலையைமுன்போல்
செலுத்தியமாருதியும்வந்தான் எதிர்த்துக்கொண்டான்
வித்தையினல்ஒருத்தனை அந்நேரம்தன்னில்
மெய்ச்சீதைவடிவாக்கி வெட்டுவேன்என்
றத்தலையில்கைத்தலத்தில் வாள்ஒன்றேந்தி
ஆட்டினன்மாயையினல் காட்டினனே. (௬௭)

௫௩. தரு-சௌராஷ்டிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

மாயச்சீதைகொண்டிந்திரசித்தனு மான்முன்வந்தானே



அநுபல்லவி.

தீயலங்கைமேலைவாசலின்மேல்மக் திரத்தாலேதந்திரத்தாலேசெய்த (மா)

சரணங்கள்.

௧. அளப்பில்லாவெகுதளத்தோ டேபேரிசை
அதிரவே அடித்துக்கொண்டு-நீ
விளைத்தசண்டைகள்வீண்ஆச்சேஎன்று
விகடங்கள் படித்துக்கொண்டு-உடல்
நெளிக்கமயிர்தொட்டிழுத்துப்பல்லைநெற
நெறென்று கடித்துக்கொண்டு-மண்டை
பிளக்கவெட்டுகிறேன்பார்எனவேகத்தி
பிடித்துக்கொண்டுதடி தடித்துக்கொண்டு-ஒரு(மா)

௨. வீரம்ஆம்புலி வாய்மான்போல்அவள்
மெலிந்து குறைந்துகொள்ள-மழைத்
தாரையாவிட்டழுதகண்ணீர்முலைத்
தடங்களில் நிறைந்துகொள்ள-கலை
சோரவேபுரண் டறந்தஉடமைகள்
சுற்றிலும் இறைந்துகொள்ள-அய்யா
மாருதியோமுறையோ என்றவள்வெட்கம்
மறைந்துகொள்ளக்கண்ணில் அறைந்துகொள்ள-ஒரு(மா)

௩. நேசம்உள்ள அனு மானேஇங்கேசற்றே
நில்லடா சொல்லுகிறேன்-வாள்
வீசிநான்இந்தச் சீதைதனைஉன்தன்
விழிமுன்னே கொல்லுகிறேன்-மறு
யோசனை இல்லை இப்பொழுதந்த
அயோதிக்கும் சொல்லுகிறேன்-கை
கேசியாதன்எல்லாரையும்வேருடன்
கொல்லுகிறேன்உன்னை வெல்லுகிறேன்-என்று(மா).

## இந்திரசித்துவெட்டின சீதைக்காக அனுமார்புலம்பல்.

விருத்தம்.

வந்தபாதகன்இந்திரசித்தென்பான் மாயாசீதையைவாளாலே
விந்தைமாருதிநல்லவார்த்தைசொலவும் துணியாவீசிப்போட்டான்
பந்தமாம்அயோத்திமேலேபோக்குகாட்டிநிகும்பலையிற்சேர்ந்தான்
சிந்தைமாருதிகண்டுசோம்பினன் அழுதழுதுதேம்பினனே. (௬௮)

௫௪. தரு-எதுகுலகாம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இதுக்கோநான்பட்டது சும்மா-பாவிஅனுமான்
இனிமேல்நான்என்செய்வேன் அம்மா.

அநுபல்லவி.

விதிக்கும்என்எண்ணம்போச்சே விழலுக்கிறைத்தநீர் ஆச்சே (இது)

சரணங்கள்.

௧. ஓம்என்றுமுன் தூதுவந்தேன் உன்னுயிர்க்குகேடுதந்தேன்
ஆம்என்றுஎப்படிசெல்வேன் அய்யனுக்கெப்படிசொல்வேன்
சாமிதான்என்என்றுகேட்பான் தாய்நீயிருந்தால்அல்லோமீட்பான்
தீமைதானேபேலிட்டதோதெய்வமும்தான் கண்கெட்டதோ
இதுக்கோநான்

௨. அன்னமேதாயேஎன்தன்னை அறிந்துஇந்திரசித்துன்னை
பின்னமேசெய்திடநானே பிரேதம்போலஇருந்தேனே
சொன்னசஞ்சீவிக்காத்தாண்டி சுறுக்காகநான்உன்னைவேண்டி
என்னென்னசெய்தாலும்அங்கே இப்படிஆச்சுதேஇங்கே
இதுக்கோநான்

௩. அருந்ததிதொழும்பெண்ணே அனைவர்க்கும்இருகண்ணே
விரும்பும்உயிர்க்குயிர்ஆயே விளங்குகின்றதாயே
கரைந்துநான்உன்னைத்தேடி கண்டேன்என்றுமுன்ஓடி
இருந்தாள்என்றவாயாலே இறந்தாள்என்னவோமேலே
இதுக்கோநான்

## சீதைக்காகஇரங்குகிற ஸ்ரீராமரை லட்சுமணர்முடுக்குதல்

விருத்தம்.

அஞ்சனைபாலகன் இந்தப்படிக்குநொந்தான்
அய்யன்இராமனுக்குப்போய் அறிக்கையிட்டான்
செஞ்சிலைவீரனும்அறிந்தான் எறிந்தான்வில்லைத்
தேடினன்வாடினன் தியக்கம்கொண்டான்
தன்செயல்ஆதும்மறந்தான் அவ்வேளை
தம்பியும்அப்படிதளர்ந்தான் இனிமேல்ச்சாமி
என்செயல்ஆவதுநமக்கும் இருப்பதென்றே
இனம்சொல்வான்லட்சுமணன் சினம்சொல்வானே. (௬௯)

௫௯. தரு-அடாணாராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இனிமேல்யோசனை-ஏதையா-தேவிபோனபின்
இரங்கினல்ஆகாதையா

அநுபல்லவி.

உனதுகவலைசொன்னல் ஊரார்க்கென்னநஷ்டியோ
சினம்எங்கேபோச்சுதையோ சிவன்கருப்பட்டியோ (இ)



சரணங்கள்.

௧. இலங்கைஉள்ளாரும்தேவரும் எவரையும்இப்போதுநேரே
குளங்களோடும்கொல்லாவிட்டால் கொஞ்சம்சொல்லிநகைப்பாரே
புலம்பல்ஆமோஇன்னம்சற்றே பொறுத்தால்எதிர்த்தபேரை
விலங்கிலும்போடுவார்அடிமை வேலையும்செய்யச்சொல்வாரே
இனிமேல்

௨. விலக்கவும்சீதையைப்பாவி விசினன்என்றனுமான்சொன்ன
கலக்கம்கொண்டாய்தர்மத்துக்கிது காலமோஅல்லவேகின்ன
கொலைத்தொழில்செய்தம்பால் எங்கும்கொளுத்துவாய்நெருப்பாமின்ன
தலைக்குமேல்ஓடியவெள்ளம் சாணோடிஎன்னமுழம்ஓடிஎன்ன
இனிமேல்

௩. நாட்டில்அரசுப்போச்சுதுன்னுடைய நன்மையாலேவந்ததெண்டம்
காட்டிலும்வந்திந்தக்கொள்ளைகட்டிக் கொண்டோமேதினகெண்டம்
பூட்டிநீவில்லைவளைத்தால் பொடிபொடிஆமேமூதண்டம்[ம்
ஆட்டம்காட்டல்ஆமோஅடியேன்சாமி சொன்னபடிஎடுகோதண்ட
இனிமேல்

## ஸ்ரீராமரை அனுமார் முடுக்குதல்.

விருத்தம்.

சினமாஇப்படிஇளையோன் உரைக்கஇந்திர
சித்தயோத்தியின்மேலே போனபோக்கை
அனுமானும்சாமியுடன் சொன்னன்சாமி
ஆவிதடுமாறினன் அந்தவேளை
புனைவீரப்படைகளையும் உமையும்கொண்டு
போய்அரக்கன்முன்குதிப்பேன் அல்லவென்றால்
முனையாநானேபொருதிக் கொல்வேன்என்று
முடுகுவான்மாருதியும்கடுகுவானே. (௭௰)

௬௰. தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இதுக்கோ இந்தயோசனைசாமி-அனுமான்நான்இருக்க
இதுக்கோ இந்தயோசனைசாமி

அநுபல்லவி.

பதைக்கிறேன்இந்திரசித்தை உதைக்கிறேன்அவனைநான்
வதைக்கிறேன்அயோத்தியில் புதைக்கிறேன்அதுக்கென்ன (இது)

சரணங்கள்.

க. சுற்றியமதில்ஏழும்
எற்றிஊரிலேகையை நீட்டி-ராவணன்தன்னைக்
கொத்துப்பனங்காய்போலே
பத்துத்தலையும்பிடித் தாட்டி-மகனேஇந்திர
சித்தேஎன்றஅவன்அங்கே
கத்திஅலறும்படி மாட்டி-ஆட்டுக்குட்டிபோலே
மெய்த்தஅரக்கர்களைக்
குத்திக்கழுகுக்கிரை ஊட்டி-பாராய்என்சாமி
சுற்றிலேலங்கைநகரத்தைபிடுங்கிஒரு
பந்தைப்போல்தூக்கிஅங் கெத்துகிறேன்அடியேன் (இங்)

உ. துடுக்காஎன்தாய்முன்கத்தி
எடுத்தான்அவனுக்கிந்த மிண்டேன்-கொல்லாதேஎன்று
படித்துப்படித்துச்சொல்லி
அடிக்கடிவேண்டிவேண்டிக்கொண்டேன் கேளாமல்பாவி
முடிக்கிவிசக்கண்டு
துடித்துத்துடித்துமணம் விண்டேன்-பரதன்மேலே
வடக்குத்திசையைநோக்கி
நடக்கஎன்கண்ணார கண்டேன்-உத்தாரம்தந்தால்
பிடிப்பேன்ஒருகடியாக்கடிப்பேன்அவன்உயிரை
குடிப்பேன்பழிக்குப்பழி முடிப்பேன்-என்றால்ஆகாதோ (இ)

௩. பூத்தபுவனமெல்லாம்
கார்த்திடவந்தபரந் தாமா-வில்லுக்குமும்
மூர்த்திகள்ஆகிலும்
பாத்திரரோரகு ராமா—தர்மஞ்செயம்என்ற
சாஸ்திரமும்உனது
தோத்திரமும்தப்பிப் போமோ-நம்பினதேவர்
பேய்த்தனம்கொள்ளஎன்ன
கூத்திதுநீவருந்தல் ஆமா-சேனையும்தோளில்
ஏற்றிஉம்மையும்நொடிமாத்திரத்துக்குள்ளாக
நேத்தியாக்கொண்டுபோய் அயோத்தியில்க்குதிக்கிறேன் (இ)

---

## சீதையின் இருப்பைக் கண்டுவந்த விபீஷணர் ஸ்ரீராமருக்கு அறிவித்தல்.

விருத்தம்.

அளப்பெரியஅனுமான்இது சொல்லவிபீஷணன்அதனை
அறிந்தான்காண்போய்
வளப்பம்எல்லாம்கண்டுவந்து சொல்வேன்என்றிலங்கை
யில்ஓர்வண்டாய்ப்போனான்



களக்கம்இல்லாச்சீதையையும் நிகும்பலையைஅரக்கன்செய்
கவடும்கண்டான்
உளக்கவலைக்கடல்கடக்கக் கரைசெய்வான்சாமிமுன்னே
உரைசெய்வானே. (௭௧)

௫௭. தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இருக்கிறாள்தாய்அசோகவனத்தில்-இருக்கிறாள்சாமி

அநுபல்லவி.

இருக்கிறாள்நமக்கொரு பாக்கியம்உற்றால்போல
ராவணன்குடிக்கொரு சூனியம்வைத்தால்போல (இ)

சரணங்கள்.

க. மோதுவேன்என்றும் இடிக்கிறேன்என்றும்
முறைமுறை பேயின்றுசொல்லும்
வாதரக்கியர்முன் புலிக்கூட்டத்தில்ஒரு
மான்போல் மனம்பின்று-என்றும்
நீதில்ஒரு ராமாமிர்தமே
சீவனம் ஆகஉண்டு-ரகு
நாதனேஉன்கையில் ஓசையும்வா
னரஓசையும்கண்டு பரிபூரணம்கொண்டு (இ)

உ. சொன்னமுறைபிசகிச் சிஷ்டர்எண்ணம்அழிந்து
துஷ்டர்எண் ணமேமுற்றமோ-தர்மமேசெயம்
என்னநாலுவேதங்களும் ஆறுசாஸ்
திரங்களும் வீணகத்துமோ-நல்லது
இன்னதேமெய்ஆனால்சந்திரசூரியகதி
இரண்டும்இங்கே சுற்றுமோ-என்தன்
அன்னையைத்தொட்டால்அவன்இன்னமும்இருப்பானோ
அருக்களிப்பேதுக்கையோநெருப்பைப்புழுப்பற்றுமோ (இ)

௩. அந்தநிகும்பலையாகம் செய்யப்போனான்
அறிந்தேன் அவன்-சூதைசாமி
உன்தன்அயோதிக்கவன் ஓர் அடிவைத்ததில்லை
உனக்கேன் மனவேதை-சீதை
சிந்தைதோற்றுவாள் அடியேன்விபீஷணன்பெண்
திரிசடை எனும்பேதை-மதி

மந்திரிஅனுமான்முன்னே இந்திரசித்துகொன்றது
மாயாசீதைஅது தாயாரெனும்சீதை (இ)

## ஸ்ரீராமர் லட்சுமணருக்கு யுத்ததந்திரம் கற்பித்தல்.

விருத்தம்.

கலக்கம்அறஇப்படிசொல்லிக்காட்டி அந்தவிபீஷணன்பின்
விலக்கவேணும்நிகும்பலையின் வேள்முடியாமுன்என்றான்
பெலத்தபடையும்தம்பியும்என்பின்கூட்டென்றான்சாமியுட்கொண்
டிலக்குமணனை அழைத்துறுதி எடுத்தான்சொல்லத்தொடுத்தானே.

௫௮. தரு-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

தம்பிலட்சுமணா இந்திரசித்தன்தலைகொண்டுவாபோடா

அநுபல்லவி.

நம்பிஉன்னோடேயாவர் எதிர்ப்பார்கள்
நான்அறிவேனேஉன் வீரம்சத்தியம்
ஆனதுவே உபகாரம்-உனக்
கேள்இனிச்சொல்லவிஸ்தாரம்இதுவோபாரம்-இந்நேரம்அடா (த)

சரணங்கள்.

௧. முதல்ச்சண்டைப்போல் மறுசண்டைபோல்ச்சேனையை
மோசம்படுத்தாமல்த் தேக்கிநின்று
பதைத்தவன் அம்புக்கெதிர் அம்புபோட்டுப்
பழுதுகள் ஆகவே நீக்கி-நானு
விதத்திலும்போர்செய்து கைமெய்சலித்தவன்
மெலிவானவேளையை நோக்கிமார்பில்ப்
பதித்தகவசமும்வில்லையும்போக்குவாய்
பார்த்திடுவார்தேவர் சாக்கி-ஆக
கூற்றுவேன்போல்அம்பு தாக்கிஎல்லாம்
தேற்றிடவேஒண்டி ஆக்கிஉயிரைப்போக்கிவெட்டித்தூக்கிஅடா (தம்)

௨. ஆசைநிகும்பலைவேள்விமுடிந்தால்ப்பின்
ஆராலும்வெல்லக்கூ டாதே-ஒரு
கேசரிப்போல்படையோடும்போய்அத்தைக்
கெடுத்திடுவாய்வேளை நீதே-அந்த
நீசன்ஆனவன்பிரம்மாஸ்திரம்தொட்டால்
நீயும்பிரம்மாஸ்திரம்தொ டாதே-கயிலை



ஈசன்சூலமும்சக்கரமும்இவை
ரண்டையும்போதிடன் மீதே-அது
துண்டுதுண்டாகும்தப் பாதே-அவன்
சண்டைஎல்லாம்வெறுஞ்சூதே மலைக்காதேஇப்போதே-அடா (தம்)

௩. மந்திரவாள்இதுஇந்திரன்கையினில்
வச்சிரத்தைச்செய்யும் தீங்கு-பார்
இந்தவில்அந்தமாயவன்வில்இத்தை
எதுவும்செய்யாது பொல்லாங்கு-என்று
அந்தநாளினில்க்கும்பமுனிசொல்ல
அறிந்தாய்நீஅல்லவோ ஆங்கு-இனி
வந்துநமக்குத்தருமம்தானேபிர
மாணம்என்றுகையில் வாங்குநான்
பூணும்கவசத்தைத் தாங்கு-அப்பறுத்
தூணிஇந்தாபிடித்தோங்குவென்று நீங்குஇதேபாங்குஅடா (தம்)

## இந்திரசித்தை அனுமார் பழித்தல்.

விருத்தம்.

படித்தார்ராமன்சொன்னபடி பாய்ந்தார்லட்சுமணன்முதலோர்
அடித்தார்பிடித்தார்கரிபரிதேர் அழித்தார்கழித்தார்அரக்கர்உயிர்
குடித்தார்கடித்தார்யாகத்தைக்குலைத்தார் கலைத்தார்கொக்கரித்தார்த்
இடித்தார்வரிவில்இந்திரசித்தை இழுப்பான்அனுமான்பழிப்பானே.

௫௯. தரு-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

பல்லவி.


இந்திரசித்தே உன்தன்தந்திரவித்தைகள் எல்லாம் எண்டாபுறப்பட்டா

அநுபல்லவி.

உன்தன்நிகும்பலையில் ஒளித்துச்செய்கிறாய்பூசை
ஒளிக்கும்கேசவனுக்கு முகத்தில்எண்டாமீசை (இந்தி)

சரணங்கள்.

௧. முந்தஉன்தாயைப்போல் ஒருத்தியைக்கொன்றாயே
முடுக்காஅயோத்திமேல் நடக்கிறேன்என்றாயே
பந்தல்அலைந்தவனே நீயும்சென்றாயோ
பரதனை வென்றாயோ
அந்தராவணனுக்கு வந்தலச்சைஈதோ
அங்கத்தைக்கொண்டுபோய் ஆற்றில்அலசோணுதோ





வந்துநாணிக்கொள்ள — பஞ்சமோகயிறு
வாணல்மைக்கவேணுமோசாண் — அல்லவோவயிறு (இங்)

க. விடுக்கும்வச்சிராயுதம் — முனைவேலாயுதம்
விஷ்ணுசக்ராயுதம் — சிவன்சூலாயுதம்
எடுக்கும்நாகபாசம் — பிரம்மாஸ்திரத்தோடு
எதைவேணும் — அதைப்போடு
திடுக்கிடவினைசெய்யும் — உங்களுக்கேநாசம்
செத்தவனேஎங்க — ளுக்குண்டோடாமோசம்
அடுக்களைபூனைபோல் — இடுக்கிலேசுழிக்கிறாய்
ஆடெடுத்தகள்ளன் — போலேமிழிக்கிறாய் (இங்)

உ. நிறைகடல்போலஉன் — சேனைகள்களமேலே
நேர்ஆகவிழுந்ததைப் — பார்அடாகண்ணாலே
பறபறப்பிலேநிற்கும் — பலையாகமும்போச்சே
பாழும்சுடலை — ஆச்சே
கறவிநமனும்வந்து — குறுகிக்கொண்டான்உன்னை
காலம்முடிந்ததினி — மேலேஎன்னடாமுன்னை
சிறைப்பட்டஇந்திரனும் — குறைவிட்டுத்தழைக்கிறான்
செல்வலட்சுமணன்இதோ — கொல்லவந்தழைக்கிறான் (இங்)

---

## இந்திரசித்துக்கும் லட்சுமணருக்கும் மூன்றாமுறையுத்தம்.

### விருத்தம்.

மாருதிஇவ்வாறேதவளைந்தராட்சதரும்சேனை
வீரவானரரும்சண்டைவிளைத்திட்டார்இந்திரசித்தன்
தேரினில்ஏறிக்கொண்டான்சிலைகொண்டான்தம்பிதானும்
மாருதிமேல்கொண்டம்புவருஷித்தான்கருஷித்தானே. (எ௪)

௯௦. தரு-கலியாணிராகம்-ரூபகதாளம்.

### பல்லவி.

அஸ்திரவருஷம்தம்பிபொழிந்தானே-நிகும்பலையிலேஇந்திர
சித்தன்படைகள்போயொழித்தானே.

### அநுபல்லவி.

வைத்தசமித்தும்பிணமும்எரிபட-மந்திரபூஜாகும்பநெரிபட
எத்திஅதில்எழும்தேரும்சிதைபட-எருமையின்கூட்டங்கள்எல்லாம் [வதைபட
ரத்தம்எழுந்திடசுற்றம்விழுந்திட
யாகம்கலைந்திடபூசம்குலைந்திட (அஸ்திர)

சரணங்கள்.

௧. தேரில்அரக்கன் ஏறிஅனுமானைச்
சிலகணையால்களை செய்தான்
நேரில்எழுந்தஅனுமன்புயம்தம்பி
நின்றுகணைசில பெய்தான்
சூரியவாளிகளால் அரக்கன்அந்த
குரங்குப்படைசிந்த அடித்தான்
வாரிஅம்பால்தம்பி அரக்கன்சேனையை
மண்ணோடுமண் ஆக மடித்தான்-தேர்
வலம்கொண்டுசுற்றஅனுமான்இடம்கொண்டுதத்த-அவன்தேர்
வானில்உலாவ அனுமான்விடேன்என்றுதாவ-இருவர்கை
வாழிநெடுங்கணை எங்கும்நிறைந்திட
மலைகள்எல்லாம்வெந்து நீறாய்இறைந்திட
ஏழுகடல்நீரும் வற்றிக்குறைபட
எட்டுத்திக்கும்தெரி யாமல்மறைபட
எங்கும்புகைமுட்ட எங்கும்தணல்கொட்ட
இரவுபகல்ஆக நிருதன்மனம்நோக (அஸ்)

௨. இளையான்மேல்ப்பின்னும்அரக்கன்சீறி
இருபத்தைந்துகணை விடுத்தான்
தொளையா அவன்மார்பும் கவசமும்தம்பி
தொளைத்தோடஓர்கணை தொடுத்தான்
களை ஆய் அவன்அனுமான்மேலேரத்தம்
காணசிலகணை விதைத்தான்
வளையாவரும்அனுமான் அவன்தேரினை
மளுக்கென்றொடியவே உதைத்தான்-அவன்
மற்றொன்றில்ஏறிஅய்யன்மேலே பத்தம்பைத்தூறிவிடத்தம்பி
வடிக்கணைசிந்திஅவன் அவைத்தடுக்காமல்முந்தி பொட்டஅவன்
மந்தரத்தோளைஓர் அம்பால்தொளைசெய்ய
மற்றோர்அம்பால்அவன் தேரைவிழக்கொய்ய
தொந்தரக்கன்ரத்தம் கக்கிஅவசத்தில்
நூறுபங்தம்பெய்யத் தம்பிகவசத்தில்
நுழையாமலேவிண்டு பழுதாய்விடக்கண்டு
நூங்கிஅவன்பிந்த எங்கும்தன்கைமுந்த(அவுஸ்)

௩. சிந்தச்சிலகணை அரக்கன்பின்னும்அந்தச்
சேவகன்மார்பினில் தூற்றினன்



புந்திமகிழ்தம்பி அரக்கன்மணிநெற்றி
புதையச்சிலகணை ஏற்றினன்
இந்தவில்அந்தமாயவன்வில்இவன்
ஈசன் ஆம்என்றவன் கூசினன்
அந்தவேளைவிபீஷணன் தம்பியை
அரக்கன்மேல்முடுகென்று பேசினன்-அவன்
அக்கினிஅஸ்திரம்விடத்தம்பிஅக்கினி அஸ்திரம்விட்டே-அவன்
ஆதித்தன்அஸ்திரம்விடத்தம்பு ஆதித்தன் அஸ்திரவிட்டே
ஆகப்பின்னும்சில அம்பைப்பொழிந்திட [விசை
அணிஅணியாநின்ற தேர்கள்அழிந்திட
ஏகத்தில்வந்த கெசங்கள்படிந்திட
ராட்சதவீரர்கள் ஆரும்மடிந்திட
இற்றதுண்டங்களும் அற்றமுண்டங்களும்
லங்கையில்ப்போய்விழ மங்கையர்கண்டழ (அ)
ஆரணன்அஸ்திரம் அவன்விடச்சிவன்
ஆயுதத்தால்தம்பி கொய்தான்
காரணன்சூலத்தைஅவன்விடத்தம்பி
கைச்சூலத்தால்ப்பொடி செய்தான்
நாரணன் அஸ்திரம்தொட்டரக்கன்எங்கும்
நடுங்கிடவேசாய் தோங்கினன்
போரினில்த்தம்பியைஅதுவலஞ்செய்து
போகக்கண்டேபயந் தேங்கினன்-தன்
புத்தியும்கெட்டான்தனக்குள்ள சத்தியும்விட்டான்-தம்பிசெய்த
பேரையும்பார்த்தான்ஓடி ஒளிக்க ஊரையும்பார்த்தான்அதுக்கும்
போக்கிடம்இல்லாது பார்த்துமெலிபட்ட
போதினிலேஅந்தப் பாதகன்மேல்ப்போட்ட
வாக்கிஅய்யன்அம்பு போடக்களைட்டு
மார்பும்கரங்களும் தோளும்தொளைபட்டு
வல்அரக்கன்லட்சம் எல்லாம்ஒருலட்சம்
சல்லடைக்கண்கள்ஆகச் சில்லிகள்ஆய்ப்போக(அஸ்)

---

## இந்திரசித்து விபீஷணரைவயிற்றெரிச்சலாலேஏசுதல்

விருத்தம்.

சில்லிகளாய்ப்போன இந்திரசித்தனவன் இருந்ததொரு தேர் மேல்நின்றே, கல்லின்மழைஎன அம்புபொழிந்தங்கே வீடணனைக்

கண்டானெம்மைக், கொல்லநிகும்பலை கெடுத்தாய் அரக்கர்குலத்தை யும்கெடுத்தாய் கோளினாலே, எல்லவரையும் கெடுத்தாயென்று வசை பேசுவான் ஏசுவானே. (௭௫)

௬௧. தரு-பைரவிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

சிற்றப்பாநீதான்-இத்தனை அபகீர்த்தி-பெற்றதேபோதும் அடா

அநுபல்லவி.

சத்தியவிபீஷணன்என் றெடுத்தாயே-பேர்நான்
சமைத்தநிகும்பலையும் கெடுத்தாயே
வற்றல்மனிதர்களாய்ப் போனாயே-அய்யோ
வளர்த்தகிடாகையில் பாய்ந்தாற்போல் ஆனாயே (சிற்றப்பா)

சரணங்கள்.

௧. விநயம்சொல்லிமாயப் பூனைவேஷங்கொண்டாய்
வேருடனேஎங்களைக் கொல்லவோ-நாங்கள்
அனைவரும்இறந்தபின் ஒரான்காணியா
அரசாளலங்கையில்ச் செல்லவோ
தினமும்ஒருகலத்தில் உண்டும்இப்படிசதி
செய்தபாவம்தீரச் சொல்லவோ-அற்ப
மனிதர்க்கும்பஞ்சை ஆய்ப்பணியும்செய்கிறாய்உயிர்
வைத்திருக்கிறத்திலும்செத்தால்குணஅல்லவோ (சிற்றப்)

௨. மாடுமேய்க்கிறப்போலே தடிகொண்டுதிரிகிறாய்
மானமும்லச்சையும் துறந்தாயோ-இனி
சூடும்முடிபெற்றாலும் சின்னமனிதர்க்குநீ
தொண்டன்அல்லால்என்ன சிறந்தாயோ
தேடிநம்மைவணங்கும் பேரைநாம்வணங்கினால்
சின்னத்தனம் என்பதை மறந்தாயோ-உன்னுடன்
கூடப்பிறந்தவனைக்கொல்என்றகோட்சொல்லி
குடிகெடுக்கவென்றிந்த குலத்தினில்ப் பிறந்தாயோ (சிற்றப்பா)

௩. பார்ஆளல்ஆம்என்று மனப்பால்குடிக்கிறாய்
பஞ்சைஉன்னால்அது தள்ளுமோ-இந்த
ஊரில்வாரத்துக்கு வழியிட்டாயேஉனக்
கொருக்காலும்வசைஇது விள்ளுமோ
நீர்உள்ளமட்டுக்கும் மீனும்துள்ளும்அந்த
நீர்போனால்மீன்என்ன துள்ளுமோ-வெகு



தூரப்பழிகொண்டோம் ஆரைவிட்டதுசனி
தெய்வபலம்இல்லை செய்வதுண்டோஇனி (அ)

௩. ரீதிஆகநாம் என்செல்வம்செருக்கிறோம்
நீயும்நானும்அல்லோ தப்பியிருக்கிறோம்
ஏதோபலம் வரவாஅடங்கிதே
எடுத்தஅடி மடங்கிதே
ஆதலால்அவர்முன்என்றதெல்லாம் விட்டுப்போட்டேன்
அங்கேஇன்னம்போனால் இங்கேநான்வரமாட்டேன்
சீதையைவிடுவது காரியம்அப்பால்உன்தன்
சித்தத்துக்குச்சரிப் போனபடிஎன்தன் (அ)

---

## இந்திரசித்தை ராவணன் உதாசனித்தல்.

விருத்தம்.

இனம்கொண்டிப்படி தன்பிள்ளை இசைத்ததை இலங்கேவேந்தன், கனம்கொண்ட தனல்வாய்நெய்யைக் கவிழ்ந்தது போலேகொண்டான், மனம்கொண்ட பயத்தால்ச்சொன்னாப் மனிதரோர்பொருட்டோ என்னைச், சினங்கொண்டே இந்திரசித்தைச் சீறுவான் கூறுவானே.

௬௨. தரு-நாதநாமக்கிரியைராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்னபுத்திசொன்னாய்அடா இந்திரசித்தேநீ
என்னபுத்திசொன்னாய்அடா

அநுபல்லவி.

என்னபுத்திசொன்னாய்நீ சின்னமனிதர்க்கஞ்சி
என்னுடனே முறையிட்டாயே-பயப்
பட்டாயே நீகெட்டாயே(என்)

சரணங்கள்.

௧. ஆனாலும்உதையவள்கோன் ஆனைம்கையிலேயை
மேனாளில்எடுத்ததைத் தலம்போச்சோ
நானாசெய்வதற்குநீதானேபயலேநீ
போனாலும்என்னஎன் குலம்போச்சோ-படைக்
கலம்போச்சோ-மூல பலம்போச்சோ(என்)

௨. சோருவேனோமனிதர்சர் உயிரையும்அடி
வேருடனேகல்லிப் பறியாமல்

* திரும்போதும்ராமன் பேரும்என்பேரும்ஒன்
லாரும்சொல்லிக்கொள்வாரே பிரியாமல்-இத்தை
அறியாமல்-முன்பின் குறியாமல் (என்)

௩. செயம்ஆனகீர்த்தியை முயலாமல்மனிதர்க்குப்
பயம்ஆய்அபகீர்த்தியைத் தொடுவேனோ
கையில்ஆகாதவன்போலே மயில்போலும்சீதையை
உயிரோடேநான்இனி விடுவேனோ-முழு
கிடுவேனோ-சும்மாப் படுவேனோ (என்)

## நாலாமுறை யுத்தத்தில் இந்திரசித்தன் வதை.

விருத்தம்.

தவறுபடாதிடிக்கும் ஒருத்தலைவலிக்குத்
தலையணையைமாற்றிப் போட்டால்ப்போமோஎன்
உவமைஇதுஎன்மகன் வார்த்தையைக்கேளாமல்
உறுமும்இராவணனைவிட்டான் ஊரைவிட்டான்
கவனமொடாயிரம்குதிரை கொண்டதேர்மேல்க்
கடல்ப்படையும்தானும் போர்க்களத்தில்வந்தான்
பவன்எனும்லட்சுமணன் அம்புபாயப்பாயப்
பாய்ந்திட்டான்இந்திரசித்து பாய்ந்திட்டானே. (௭௧)

௪௫. தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

விழுந்தானே-இந்திரசித்தன்-ஒழிந்தானேமண்மேல்

அநுபல்லவி.

இழந்திட்டோம்இலங்கையை என்மனம்பிண்டுபிண்டு
அழுந்தத்தழுவிஅப்பன் ஆசையைவிண்டுவிண்டு
எழும்பிப்பரிகளாயிரம் கொண்டதேர்மேல்க்கொண்டு
குழந்தைத்தம்பிகைஅம்பால்க் கிழிந்திட்டுவதையுண்டு (வி)

சரணங்கள்.

௧. நிறையக்கணைதொடுத்தார் இரண்டுபேர்களும்
நெறநெறென்றுசொரி மழைபோலே

* இதை இரட்டித்துப் பாடும்போது நான் என்று முதலிலே கூட்டிப் பாடிக்கொள்ளவும்.





பேர்ஆம்ராட்சதர்எல்லாம்போய்நீஒருத்தனும்
பிணந்தின்னும்பூச்சிபோல்இருந்தார்கனம்கொள்ளுமோ.

## விபீஷணர் இந்திரசித்துக்கு எதிர்மொழிதல்:

விருத்தம்.

எல்லாம்மூடன்இந்திரசித்தன் இவ்வாறுரைக்கஉரைத்ததெல்லாம்
செல்லாதடாதருமமும்சத்தியமும் நானேகைக்கொண்டேன்
பொல்லாப்பாவம்கைக்கொண்டாய் போவாய்உருண்டுபோவாய்என
றல்ஆர்மேனிவிபீஷணன்ஏச் சரைப்பான்மறுசொல்உரைப்பானே. ( )

௪௬. தரு-புன்னாகவராளிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

துஷ்டப்பயலே-இந்திரசித்தேஎன்ன-சொன்னாய்அடாபயலே

அநுபல்லவி.

இஷ்டம்ஆம்எனக்கு ராமன்பதமேசொந்தம்
எனக்குஉங்களுக்கும் இனிமேல்என்னடாதொந்தம் (து)

சரணங்கள்.

௧. மன்னர்ஆகிமுன்பின் தர்மம்துணைஅல்லாமல்
வாழ்ந்தவர் எவர்தாமோ
தன்னிலேகுதிக்கிறாய் பாவம்சாம்அல்லாமல்
தர்மம்என் பதுசாமோ
கன்னிச்சீதைஅன்னை சிறையிருந்தழுகிற
கண்ணீர்சும்மா போமோ
அன்னியஸ்திரீபுண்ணியஸ்திரீ என்றெண்ணிப்பாராமல்
அகிர்த்தியம்செய்யும்உங்கள்முகத்தில் விழிக்கல்ஆமோ (து)

௨. சிந்தைவஞ்சனைசெய்யேன் புலைசெய்யேன்கொலைசெய்யேன்
தெய்வம்என்னை ஒறுக்குமோ
அந்தப்புத்திஉங்களுக் கிருந்தால்வரவர
ஆதிக்கமும் சிறக்குமோ
என்தாய்சீதைமேல் ஆசைஉன்அப்பனுக்கு
இன்னம்தான் வெறுக்குமோ
இந்தப்புத்தியினாலே இலங்கைச்செல்வம்எல்லாம்
இழக்கல்ஆச்சேநாய்க்குமுழுதேங்காய் பொறுக்குமோ (து)

௩. கொடும்பாவம்என்ன செய்தேனோநான் உங்கள்
குலத்தில்வந்துடம் பெடுத்தேன்
கடந்துபோகவேண்டி உங்களைக்கடலிலே
கையைக்கழுவி விடுத்தேன்

மடங்காராவணனுக்கு எத்தனைபுத்திகள்
வகைமணியாத் தொடுத்தேன்
அடங்காப்பாம்புக்கு ராசாமூங்கில்த்தடி
ஆமென்றவனைவிட்டு ராமன்தனை அடுத்தேன் (து)

## இந்திரசித்து தகப்பனுடன் முறைபடுதல்.

விருத்தம்.

எதிர்கொண்டிவ்வார்த்தைசொன்ன வீடணன்மேல்அம்பொன்றை எய்தான்அத்தைக், கதிகொண்டதப்பிகொய்தான் வேலெய்தான்அதையும்அக்கணத்தில்க்கொய்தான், முதிர்கொண்டகோபமுடன் கொர்ச்சனை இட்டொளித்திலங்கை மூதூர்சேர்ந்தான், குதிகொண்டான் அப்பன் முன்னே முறைபட்டான் இந்திரசித்தன் குறைபட்டானே. (௭௭)

௬௩. தரு-கேதாரகௌளராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அய்யாராவணா என்னால்ச்சண்டை ஆகாதாகாதையா

அநுபல்லவி.

நொய்ஆம்மனிதன் கைஅம்புகளாலே
நொந்தேனேஒளித்தோடி வந்தேனேஇனிமேலே (அ)

சரணங்கள்.

க. வட்டவார்உலகில்த் தம்பிபிறக்கத்தறை
மட்டும்ஆச்சுதென்பார் உனக்கேஅந்தத்துறை
கிட்டிஉன்தம்பிஎன் வேள்வியைத்தடுத்தானே
கெடுத்தான் கெடுத்தானே
திட்டப்ஆனதொரு பிரம்மாஸ்திரம்போட்டும்
சிவன்படையுடனேகே சவன்படைதன்னைவெட்டும்
குட்டிக்கரணம்போட் டென்னாலேஆனமட்டும்
குதித்தும்குடத்தில்இட்ட விளக்காச்சேஎன்னபட்டும் (அ)

உ. ஆரும்அறிவா ரேஎன்கைவில்லை
ஆண்டவன்காரியத்தில் சற்றும்வஞ்சனைஇல்லை
தாராளமா அடிக்கடிபோய்நின்றேன்
சகலபேரை யும்கொன்றேன்
வாராஉயிர்வந்து விளைந்துகிளைக்கிறார்
வறுத்தபயறெழுந்து முளைத்தால்ப்போல்முளைக்கிறார்



9றகவன்தேரையும் சாரதிதலையையும்
பிளந்தானேதம்பி அதன்மேலே
உறுதியாஅரக்கன் கல்லின்மழைபொழிய
உருண்டவேகுரங்குகள் ஒருகாலே
கறுவிஇளையவன் ஒருகணைவிடஅந்தக்
கணைவந்தரக்கன்மேல்ப் படலாலே
மறையும்கவசம்பிளந் துடம்படங்கருந்தைத்து
வடிக்கணைஒன்றால்அவன் விடும்சிவன்சூலம்இற்று
பிறையைப்பாம்புதொட்டுத் தறையில்விழுவதொத்து
பிடித்ததுவில்லுடன்அவன் இடக்கையும்கூடஅற்று (வி)

உ. வளர்த்ததாயாரும் பெண்களும்இலங்கையில்
வாய்விட்டழுதுகண் ணீர்வடிக்க
இளைப்பிலாஇரை வந்ததென்றுபேய்
எழும்பிஎழும்பிக்கொண் டான்அடிக்க
ஒளித்ததிட்டரக்கன் வருகிறான்என்றுதேர்
ஓசைகொண்டுதேவர் கிலிபிடிக்க
கிளைத்தமலைபோலே ஆகாசத்தில்வந்து
கெர்ச்சித்தானேஅண்ட முழ்வெடிக்க
செளைப்பில்லாமல்வரும் சேனைகளைஎட்டு
திக்கிலும்லட்சுமணன் கைக்கிரைஆகவிட்டு
குளத்தைக்குழப்பி அங்கே பருந்துக்கிரையிட்டு
கொடுத்தால்ப்போல்அரக்கரைக் குரங்குக்கேஇட்டுப்பட்டு (வி)

௩. நித்தியம்ஆனது வேதவிதிவச
னத்திலேசொல்லும் பொருள்ஒன்று
சித்திஆவதுவேதியரைத்தெரி
சித்துவருகிறது தேநன்று
கர்த்தன்ஆம்ரகுராமனேபர
தத்துவம்ஆம்அவன் வேறன்று

* சத்தியம்எனில் இந்திரசித்தன்தலைநிமி
ஷத்திலேகொண்டு வாவென்று
அர்த்தசந்திரபாணம் அய்யன்தொடுத்தால்ப்போலே
அற்றதே அவன்தலை எற்றிவிடுத்தால்ப்போலே

* இதை இரட்டித்துப பாடும்போது இவை என்று முதலிலே கூட்டிப் பாடிக்கொள்ளவும்.

தத்துவமுனிவர்க்கெல்லாம் வெற்றிக்கொடுத்தால்ப்போலே
தளரும்இந்திராதியர்க்குக் கிளைஎடுத்தால்ப்போலே (வி)

---

## இந்திரசித்துவதை ராவணன்கேட்ட இடத்திலே புலம்பல்.

விருத்தம்.

இந்திரசித்தன்இந்த விதம்விழுந்தான்தேவர்
இரக்கத்தால்குரங்கினத்தார் எழுந்தார்தம்பி
வந்தனுமானுடன்போனான் சாமிகாலில்
வல்அரக்கன்தலைதனை அங்கதனும்வைத்தான்
தொந்தவிபீஷணனை அய்யன் மகிழ்ந்தான்அப்பால்த்
தூதர்இராவணற்குப்போய்ச் சொன்னார்சொல்லப்
பந்தம்எரிந்தால்ப்போல மகனைஎண்ணிப்
பத்துவாயாலும்அவன் கத்துவானே. (௮௦)

௧௧. திபதை-ஆனந்தபைரவிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. மந்திரியேஎன்துரையேமகனே மகனேஎன்பான்ஒருவாயால்
இந்திரசித்தேஇந்திரசித்தேஎன்று இரைந்தழுவான்ஒருவாயால்
௨. இகத்தில்எனைதவிக்கவிட்டுநீயும் இறந்தாயேஎன்பான்ஒருவாயால்
முகத்தைஇனிகாண்பதெப்போதேஎன்று முறையிடுவான்ஒருவாயால்
௩. பனிவாழைக்கனிதனிலே-முள்ளு பாய்ந்ததுபோலே-மகனே
மனிதன்அம்புகள்பாய்ந்ததோஉந்தன் மார்பில்என்பான்ஒருவாயால்
௪. பரம்சேர்இந்திரன்முடிமேல்-மகனே பறித்தணிந்தமணிமாலை
நரன்காலில்விழல்ஆச்சோ-இந்த நாளில்என்பான்ஒருவாயால்
௫. துள்ளும்முசலாலேசிங்கப்பெருந் தூரவில்விழுந்ததுபோலே
பிள்ளைமனிதன்தன்கைஅம்பால்பட்டுபிரண்டாயேஎன்பான்ஒருவாயால்
௬. ஈசன்முதலோர்படைகளும்உம் எனப்போமே-உனைக்கால
பாசமதுதீண்டிடுமோ-இப்போ பதறிஎன்பான்ஒருவாயால்
௭. அரனையும்மாயனையும்வென்றுதிக்கில் அஷ்டதிசங்களையும்வென்று
நரனுக்குத்தோற்றிடல்ஆச்சோ இந்தநாளில்என்பான்ஒருவாயால்
௮. மலைகலங்கினாலும்சற்றே-உந்தன் மனதுகலங்காயேமகனே
நிலைகலங்கிவிழுந்தாயே-இந்த நிலத்தில்என்பான்ஒருவாயால்

---

## இந்திரசித்துக்காகராவணன்ரணக்களத்திலேபுலம்பல்.

விருத்தம்.

என்றழுதுகளம்பார்க்க நடந்தான்பிள்ளை
இடதுகையும்வில்லும்அற்றுக் கிடக்கக்கண்டான்



சென்றெடுத்தான்முண்டமும் உடம்பைக்கண்டான்
சிரம்காணான்இரங்கினான் உதகம்மூன்றும்
வென்றநான்இந்த அலங்கோலம்பார்க்க
விதித்தாயோஎன்மகனே மகனேஎன்று
கன்றிழந்தபசுபோல வாயைவிட்டுக்
கத்தினான்ராவணனும் பதறினானே. (௮௧)

௯௯. தரு-காம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மகனேஇந்திரசித்தேநான்-இனி-மனதெப்படிதணிவேன்

அநுபல்லவி.

இகம்மேல்நான்ஒரு பெண்ணாசையைத்தொட்டு
என்உயிர்க்குயிரான உன்னைஇழைந்துவிட்டு (மக)

சரணங்கள்.

௧. வனமான்ஒருபுலியை அடித்தால்ப்போலே
மனிதன்உன்னை அடிக்க விடுத்தேனே
கனமும்துரைத்தனமும் தரும்உன்னைஎன்இரு
கண்பறிகொடுத்தால்ப்போல்க் கொடுத்தேனே
மனிதன்நாளைச்சண்டையினில்என்னை மாட்டுவானே
மயங்கியநமனும்கைச்சங்கிலி ஆட்டுவானே
இனிமேல்இந்திரனும்எனைநாப்பு காட்டுவானே
இலங்கையில்சூரியன்தேரைக்கலங்காமல் ஓட்டுவானே (மக)

௨. நாற்றிசையிலும்உன்தன் கூத்திமார் அழக்கண்டு
காணும்அழுதுதத் தளிப்பேனோ
சீர்த்திஆம்சிவனுக்கும் மாயனுக்கும்பயந்து
திருடன்போலேஇனி ஒளிப்பேனோ
பார்த்தால்இனிஇந்த லங்கைத்தெருவாரே
பரியாசம்செய்தென்னைத் துரையென்றமருவாரே
பெர்த்தெவரும்வசை வார்த்தைகள்தருவாரே
பெண்டுகள்கூட இனிச்சண்டைக்குவருவாரே (மக)

௩. பயம்ஆம்குரங்கினில் ஒன்றும்செத்ததில்லையே
படுகளத்தில்நீயே செத்தாயே
நயமாஎனக்குநீசெய்யும் உற்றுரிமையை
நானேஉனக்குச்செய்ய வைத்தாயே
உயிரோடேமனிதன் கையில்விழுந்தபேச்சே
உலகம்உள்ளமட்டுக்கும் தொலையுமோஇதுவச்சே

வயிறும்குடலும்பற்றி மண்டிஎரியல்ஆச்சே
வல்லமையும்செல்வமும்எல்லா உன்னோடேபோச்சே (மக)

---

## இந்திரசித்துக்காக மண்டோதரி புலம்பல்.

விருத்தம்.

எடுத்திந்தவண்ணம்போர்க் களத்தினுள்ளே
ராவணனும்அழுதமகன் உடலைக்கொண்டு
தடுக்கரியஅரமனையில் வந்துசேர்ந்தான்
தாய்மண்டோதரிஅறிந்தாள் அவன்கால்வீழ்ந்து
கெடுத்தாயோமகனைஎன் றொப்பாரிசொன்னாள்
கெடகெடென் றுபிரண்டாள்பின் மகன்மேல்வீழ்ந்தாள்
அடுத்தமகன்உடலைத்தன் கண்ணீராலே
அலம்பினாள்பதைபதைத்துப் புலம்பினாளே. (௮௨)

௬௭. தரு-ஆகிரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ஐயோமகனே இனி என்செய்வேன் ஐயையோமகனே

சரணங்கள்.

௧. கைஇருபதுள்ளஉன்தன் ஐயனைப்போல்மூஉலகும்
மெய்மைஆகநீஅரசு செய்குவாய்என்றிருந்தேனே (ஐ)

௨ குழந்தைஆய்பிறந்தஅன்றன் அழும்குரல்கேட்டிடும்மேகம்
மழுங்கியேநடுங்கிமண்மேல் விழுந்தகீர்த்தியும்பாழாச்சே (ஐ)

௩. தன்நிகர்ஒன்றும் இல்லாத உன்னை இவ்வுலகத்திலோர்
சின்னமனிதன்கொல்லவே என்னபாவம்பண்ணினேனோ (ஐ)

௪. அம்புலிவாஎன்னவந்து கும்பிட்டவன்மேல்மறவை
வம்பிதென்றுவாங்கும்உந்தன் தென்பைநான்என்றுகாண்பேனோ (ஐ)

௫ கண்ணேஎன்கருகுலமே மண்ணோடேமன் ஆனாயோ
பெண்ணாலேகெட்டகுடியாப் பண்ணிவிட்டானே உன் அப்பன் (ஐ)

௬. காட்டுசிங்கக்குட்டிகளை கூட்டிநீபிடித்துச்சண்டை
மூட்டும்உன்னுடையவிளையாட்டை என்றைக்குக்காண்பேனோ (ஐ)

௭. சின்னஞ்சிறுவபதினில் இன்னபடிஆவாய்என்று
என்னமாப்பாவிபிரமன் தன்கைஎழுத்தைஇட்டானோ (ஐ)

௮. அந்தரம்கிட்டியேஅந்த இந்திரனைக்கட்டியே
தந்தைமுன்விட்டையேஇன்று எந்தனைத்தெருவில்விட்டையே (ஐ)



௯. கோளும்குண்டுணிப்பேச்சு நாளும்சொல்லிஉன்அத்தை
ஆறும்பிள்ளையைக்கொல்ல மூளுவித்தாளேபோர்பாவி (ஐ)

௰. இரக்கமாய்உன்தேவியர்ஆம் அரக்கியர்கூடிவந்திங்கே
உரக்கஅழுதுஉன்முகம் பரக்கவேநீகாட்டாதேனோ (ஐ)

௧௧. ஒக்கலையும்மக்களையு தக்காமலேசெய்தென்னாநே
மக்கிமணங்குலைந்துநான் வெட்கவைத்தானேஉன்அப்பன் (ஐ)

௧௨. இரக்கம்பேசுவோர்வார்த்தைமெச்சியே உன்அப்பன்என்தன்
மச்சுனர்சொன்னவார்த்தையைத் துச்சம்ஆகமதித்தானே (ஐ)

௧௩. வீரியம்இல்லாமனிதன்செய் போரில்நீவிழுந்ததுமக
மேருவும்வாயுவினாலே வேரற்றுவீழ்ந்தாற்போலாச்சே (ஐ)

௧௪. துதிசெய்துசீதையைவிடத் தகிஇதென்றுநீசொல்லியும்
விதிவழியிலேஉன்அப்பன் மதிபோச்சுதேஎன்செய்வேன் (ஐ)

௧௫. ஒப்பில்லாச்சீதையாலேநீ இப்படிமடிந்தபோதுன்
அப்பன்ஆர்உயிரும்நாளை எப்படிஆமோஅறியேன் (ஐ)

௧௬. பெருகும்உன்துயரும்நானே வருதுயர்தனையும்எண்ணி
இருக்கைக்கொள்ளியில்எறும் புருதல்போல்ஆனேனே (ஐ)

---

## சீதையைவெட்டநடந்தராவணனை மகோதரன்தடுத்தல்

விருத்தம்.

தொடுத்துமண்டோதரி புலம்பும்வாக்கியம்எல்லா
சுறுக்கென்றுசுட்டிடலும் திடுக்கென்றங்கே
அடுத்திருந்தஅரக்கன்மனம் கலங்கிமக்கள்
அனைவர்களும் அரக்கர்களும்மாண்டார்ஆசை
விடுத்தனென்சீதையை இனிமேல்க்கொல்வேன்என்று
வெகுண்டுநடந்தான் அந்தவேளை இந்த
துடுக்காமோராவணா இதுபெண்பாவம்
சொல்என்றான்மகோதரனும் நில்என்றானே. (௮௩)

௬௮. தரு-ஆனந்தபைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தச்சனகிதன்னைக் கண்டிக்கநடக்கிறாய் ஏதையாராவணேஸ்வரா

அநுபல்லவி.

சொந்தமகன்தலையைப் பந்துபோல்க்கொண்டுபோன
துஷ்டமனிதர்தம்மை விட்டுவிட்டேழையான (இந்த)

சரணங்கள்.

௧. பொட்டானதேவர்களும் நெட்டங்கம்படிப்பாரே
புலஸ்தியன்குலத்துக்கோர் பழிகாட்டிஇடிப்பாரே

அஷ்டகெசமும்புத்தி கெட்டான்என்றெண்ணுதோ
அரனார்கயிலாசமும் பரியாசம்பண்ணுதோ
கட்டான்காலகேயர் மேலேஎறிந்தவானோ
கன்னிமேலேஎறிந்தால் குன்னம்சொல்லாரோநானே
முட்டாளும்கூடவுன்னைச் சட்டைதான்செய்வேனோ
மூன்றுலோகமும்கட்டி ஆண்டதிப்படிதானோ (இக்)

௨. மூடுக்கில்இருந்துகொண்டு துடிக்கிறாய்என்னசாரம்
முன்கொன்றமனிதரைமுனை கொண்டல்அல்லோவீரம்
அடுத்தாரைக்கெடுக்கிறாய் உன்னைப்போல்உண்டோஏழை
ஆயிரம்வேதம்கற்றும் நீயேகற்றறிமோழை
பிடித்தகத்திஉறையில் அடக்கவேணும்என்சாமி
பெண்பழிகொண்டால் முனைபங்கம்சொல்லாதோபூமி
எடுப்பானபேருக்கெல்லாம் எடுப்பான்நீஉன்மேலே
எய்தவனைநோகாமல் அம்பைநொந்ததுபோலே (இக்)

௩. அரிஅயபிரம்மாதிகள் யாவர்க்கும்முதல்மூர்த்தி
ஆகிபஉனக்கிது ஆகுமோஅபகீர்த்தி
பெருமையோசிறுமையோ பாராய்எனதுசொல்லை
பெண்மேல்கத்தியெடுத்த மன்னவர்எங்கும்இல்லை
தரும்ஒருகோபம்வந்து கிணற்றில்வீழ்ந்தால்ஆயிரம்
சந்தோஷம்வந்தாலும் எழும்பப்போமோசரீரம்
நரரைக்கெலிப்பாய்நானே விருதுகளும்பூணுவாய்
நகரில்வருவாய்பிற கிவளைஎங்கேகாணுவாய் (இக்)

---

## தூதர் ராவணனுக்கு மூலபலத்தை விவரித்தல்.

விருத்தம்.

அருந்துணைமந்திரி இந்தவாறுசொல்ல
அரக்கனும்வாள்விட்டெறிந்தான் மகன்உடம்பைப்
பெருந்தயிலத்தோணியிட்டான் அழைக்கப்போன
பெருமூலபலசேனை வரவுகேட்டான்
விரிந்தஅது அணிஅணியாய்ப் போகட்டென்றான்
மெண்மேலும்அதுபோக வந்ததூதர்
தெரிந்ததுசொல்வோம் சாமிகாதுக்குள்ளே
சேர்என்றான்வகைவகையாய்ப் பார்என்றானே. (அச)



### ௧௨. திபதை-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. தீராராவணவீர விசயம்சேர்-இருபதுதோளாய்
ஆராலும்சொல்லாமூலபலம் இதைஅறிந்துசொல்லக்கேளாய்

௨. சாகத்தீவினில்உறைவார் இவர்-வேகத்தைஎவர்மொழிவார்
மோகத்தைக்கூட்டத்தாகத்தினாலே சோகக்கைகொண்டுபிழிவார்

௩. குசைஎனும்பெருந்தீவோர் இவர்-விசயங்கள்ஒருபேச்சு
வசனம்சொல்லவேஇசையும்தேவர்க்கும் அசையுமோஒருமூச்சு

௪. இறலித்தீவினில்உறைவோர்உன்தன் முறைதப்பாமலேகிரிவோர்
திறம்மிக்கோர்இந்தரைமுற்றும் சுற்றிமறலிக்கும்கொலைபுரிவோர்

௫. பவளத்தீவினைவிட்டோர் இவர்கவனத்தால்புறப்பட்டோர்
அவனிக்கேபெருந்திவலைப்பார்க் கடல்சுவறக்கால்அடிஇட்டோர்

௬. மலையமாமலைத்தீவோர் இவர்தொலையிலேநின்றும்வந்தோர்
சிலையினால்இந்திரன்நிலையையுங்குலை குலையவேவசைதந்தோர்

௭. இவர்கள்கிரவுஞ்சத்தீவோர் இவர்-எவரினும்பிரதாபர்
அவர்இவர்என்றும்பாரார்தாயே ஆகிலும்கொல்லும்கோபர்

௮. கந்தமாதனக்கோளர் இவர்சொந்தம்ஆம்படையாளர்
அந்தகனுக்கும் அந்தகன்என்னவந்தபாவசண்டாளர்

௯. புட்கரப்பெருந்தீவோர் இவர்விக்கிரமம்என்னசெய்யா
திக்கெசங்களை மற்கொடுங்கையில்-வைக்கிறஇவர் அய்யா

௰. இலவமாமரத்தீவோர் இவர்-கலகமேகற்றுப்படித்தோர்
மலையையும்கடல்அலையையும் சேடன்தலையையும்தூக்கிபிடித்தோர்

## சமர்த்துபேசின வன்னியை மாலியவான் இடித்தல்.

விருத்தம்.

மதியுடன்இப்படிமூல பலத்தின்சேதி
வந்ததூதுவர்சொன்னார் அரக்கன்கேட்டான்
அதில்ஒருவன்வன்னிஎன்பான் சீதையாலே
அடைந்ததெல்லாம்அறிந்தவர் ஆர்வலிஎன்என்ன
பதறிஅழும்நோயாளி முகத்தின்முன்னே
பரிகாரிதலைமாட்டில் அழுகின்றாற்போல்
எதிர்இருந்தமாலியவான் வன்னிதன்னை
இடிக்கின்றான்பழமைசொல்லிப் படிக்கின்றானே. (அ௫)

### ௬௯. தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வன்னியோசனைசெய்வதேதடா அந்த
மானிடரைவெல்லப்போகாதடா

அநுபல்லவி.

உன்னுடைகெறுவத்தாலே   ஓதுகிறாய்சூதுவாதும்
தென்னிலங்கைபட்டபாடு   சென்மசென்மத்துக்கும்போதும்(வன்)

சரணங்கள்.

க. கோலமாரீசனும்மானைப்போலவே   சென்றுகெட்டான்
சாலவேகரனும்நொடிவேலை   யினிலேபட்டான்
வாலியும்அவர்கைஅம்பினாலே   உயிரைவிட்டான்
நீலவருணனும்ரத்தினமாலை   தந்துகும்பிட்டான்
மேல்எனனசானகிஎன்னும்   விஷத்தில்நாம்தப்பல்ஆமோ
காலிலேசுற்றியபாம்பு   கடித்தால்ஒழியப்போமோ(வன்)

உ. பண்டுகும்பகர்னனையும்   கண்டதுண்டம்ஆக்கினார்
அண்டும்அதிகாயன்முடி   மண்டுவிழத்தாக்கினார்
கண்டகன்இந்திரசித்தன்   மண்டைவிழத்தூக்கினார்
ஒண்டிஎழிந்தோரைநமன்   அண்டையிலேபோக்கினார்
மண்டுகடல்வெந்ததங்கே   வந்ததில்லையோநெருப்பு
மிண்டர்ஆம்அரக்கர்க்கினி   மேலேஎன்னஇருப்பு(வன்)

௩. முத்தன்வில்லொடித்ததேபிர   சித்தம்ஆனபேரடா
தத்திஒருகுரங்குகொ   ளுத்தியதில்லூரடா
மற்றதுசஞ்சீவிதந்த   வித்தைஎன்னபாரடா
செத்தவர்பிழைத்தால்இனி   வெற்றிக்கொள்வதாரடா
இத்தலைஆயிரம்வெள்ளம்   ராட்சதரும்அவராலே
புத்தில்ஈசல்போல்மடிந்து   போனபிறகினிமேலே(வன்)

---

## மூலபலம்கண்டு ஓடின சாம்புவான் முதலோரை மறித்த அங்கதனுக்கு அவன்கூறுதல்.

விருத்தம்.

அரக்கன்இந்தப்படிபாட்டன் வன்னிக்கோத
அதைமறந்தான் மூலபலம்தன்னைவிட்டான்
தரைக்கடங்காததுவரக்கண் டஞ்சிஏங்கிச்
சாம்பன்முதல்அனைவரும் சாமியைவிட்டப்பால்



கரக்கனைந்தலைகடலைத் தாண்டிப்போனார்
காகுத்தன்அருளாலே அப்போதந்த
குரங்கினத்தைஅங்கதன்போய் மறிப்பேன்என்று
கூடினான்சாம்பன்உரை யாடினானே. (௮௧)

### ௭௦. தரு-புன்னாகவராளிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

எங்களால்ஆகாதையா மூலபலத்தின் எதிர்நிற்கப் போகாதையா

அநுபல்லவி.

அங்கதாஉன்தற்மம்   எங்கள்மேலேயோவற்மம்
அரக்கர்க்கெங்களைக்   கொடுக்கத்துடிக்கிறாய்
அருதியைப்பிடித்துத்   பகுதிக்கடிக்கிறாய் (எங்)

சரணங்கள்.

க. வினைக்குள்இந்திரசித்தம்பால்   பட்டபுண்கள்ஆறி
வேறோத்தம்இன்னம்   ஊறவும்இல்லையே
அனர்த்தகாலம்போல்க்கங்கு   கரைகாணாச்சேனைமேல்
அஞ்சாதேஅழைக்கிறாய்   என்செய்வோம்கொலையே
தனுக்கையர்இருவரும்   அனுமானும்இவர்முன்னே
தரிக்கொள்வதேமெத்த   பெரிதவர்கிலையே
பனித்தபஞ்சினில்பாயும்   கனல்போல்எங்களைஅவர்
பாய்ந்துகொல்வாரென்று   ராய்ந்துபார்க்கலையே
கனத்தகும்பகர்னனைத் தின்பான்ஒரு
அரக்கன்பொரிக்கரி   போலும்
கணிதம்இவர்களுக் குண்டேபெருங்கடல்
மணலையோஎண்ணி   னாலும்
உனக்கென்னசிறு பிள்ளை ஆலோ
சனைக்குத்தெரியுமோ   நாளும்
ஒட்டும்பாஷையும் இட்டுத்தலைதொட்டெடம்
உயிர்க்குப்பிணைநீசொன்   னாலும் (எங்)

உ. ஆனராவணன்தலை பத்திவர்க்காயிரம்
ஐந்நூறுதலைகண்டோம்   என்னென்னபோரோ
போனவாலியும்கால நேமியும்மாலியும்
பூச்சிப்போல்இவர்க்கொரு   மூச்சுக்காவாரோ
சனர்ஆகும்இவரை மூவரும்தூரநின்
றெட்டிப்பார்அல்லாமல் கிட்டிப்பார்ப்பாரோ
தீனர்ஆகியகொஞ்ச வானரர்நாம்அந்த
தேவர்களிலும்பலம்   ஆகியபேரோ

ஊனமாஇந்தச்சேனைமுன்விடுத்
தேன்குழைக்கறிபோல் குழைக்கிறாய்
உற்றபேர்களைக்கெடுக்கவோஉன்தன்
சிற்றப்பனோடுநீ பிழைக்கிறாய்
ஆனமட்டும்பார்த்தோமே துரையே
ஏனோவீணிலே உழைக்கிறாய்
அறமுறக்குகொண்டபுரிபோல்அற்றுவிட
அறியாப்புத்தியினாலே அழைக்கிறாய் (என்)

௩. இனித்தான்அவர்எங்களைத் தொடாமல் அணையைப்போய்
இடிக்கிறோம்இதற்குநீ தடுத்துச்சொல்லாதே
சினத்தஎருதும்எருதும்போராடிநடுப்புல்லைத்
தேய்த்தாற்போல்எங்களை ஏய்த்துக்கொல்லாதே
இனத்தோடே நாங்கள்எல் லாரும்போய்அவர்கையில்
இறக்கும் மட்டும்உனது பறப்புகில்லாதே
தனித்துதாய்வயிற்றினில் செனிக்கையிலேஇவர்
சதியும்மாயமும்கற்றோர் அதுவும்அல்லாதே
பனிப்பெருக்கிலேகப்பல்ஓட்டிட
நினைக்கிறாய்நீ சொன்ன
படிக்குநடக்குமோ குரங்குப்பிடியே
பிடிக்கிறாய்பன்னப் பன்ன
அனுப்பினால்எழுபதுவெள்ளமும்ஒரு
வனுக்குப்போதுமோ தின்ன
அருந்தத்தழைஉண்டு உறங்கமுழைஉண்டு
அரக்கர்ஆண்டென்ன மனிதர்ஆண்டென்ன (என்)

## அங்கதன் சாம்புவந்தனை இடித்தல்.

### விருத்தம்.

இரங்கிச்சாம்பன்முதல்ஆனோர் இவ்வாறுரைக்கநீங்கள்என்ன
உரம்கேட்டீரோபடைக்கஞ்சி ஓடல்ஆமோசூரனுக்குத்
தரும்பத்தனையேசிவன்என்னச் சொல்வார்இலையோவாரும்என்று
பரிந்தப்போதகன்நீதி படிப்பான்சொல்லிஇடிப்பானே.

எக. தரு-ஆசாவேரிராகம்-அடதாளசாப்பு.

### பல்லவி.

என்னகாரியம்எண்ணினீர்-சாம்பவரேநீர்-என்னகாரியம்பண்ணினீர்



### அநுபல்லவி.

தன்னவர்என் றும்மைச் சாமிசொன்னதும்போச்சே
சாமித்துரோகிஎன்று பூமிக்கும்பேர்ஆச்சே
பன்னும்அங்கதன்என்சொல் எண்ணாமல்ஒதுங்கிறீர்
படைக்குப்பயந்திப்போது செடிக்குள்ளேபதுங்கிறீர் (எ)

### சரணங்கள்.

௧. பேய்த்தனம்ஆகவே இகத்துக்கும்பரத்துக்கும்
பிரட்டன்என்றுசொல்லக் கேட்டீரே
பிராணன்போனால்என் மானம்போகல்ஆமோநம்
பின்பேரைப்போரில்க்கை விட்டீரே
ஏற்றராமன்ஆதிமூர்த்தி என்றநீரே
இங்கேஒலிக்கத்தலைப் பட்டீரே
இளந்தைஅல்லவேநீர்எல்லாம்தெரிந்திருந்தும்கா
டிப்பானையினில்க்கையை இட்டீரே
ஆத்திரமோஅவர்க்கென்ன உங்களைத்தொட்டு
அழிந்துவாலிஓர்அம்பால் விழுந்தானேதலைகட்டு
சாத்திரமோஉடல் ஆமோமுதகிட்டு
சாகிறதுபருக்குச் சமுத்திரம்முழங்கால்மட்டு (எ)

௨. திடுக்கென்றுபோம்இந்தப் பாழும்சரீரத்தைத்
திரம்என்றெங்கேஎண்ணப் பெற்றீரே
சீவன்போனால்என்னகீர்த்தியும்உடன்போமோ
தெரியாமல்நினைவெல்லாம் செத்தீரே
அடுத்தபேரைகொல்லும் விஷம்ஆனநீங்களும்
அமுதம்போல்ச்சாமியை உற்றீரே
அன்பெல்லாம்வெளிஆச்சே மண்குதிரையைநம்பி
ஆற்றில்இறங்கச்சொல்லி வைத்தீரே.
முடுக்கிவாரும்உயிர் கொடுத்துப்பழிஒழிப்பீர்
முன்ஒன் றும்பின்ஒன் றும் செய்தவசைகழிப்பீர்
நடுக்கிஓடிநால்பேர் எடுத்தெப்படிசெழிப்பீர்
நாயகன்முகத்தினிமேல் எப்படிமிழிப்பீர் (எ)

௩. நால்வரும்போய்ச்சண்டை பார்ப்பதல்லால்உண்டோ
நம்மாலேசாமிக்கு லவலேசம்
நமக்குத்தான்அபகீர்த்தி சுமக்கநாயமோஇனி
காலைக்கெப்படிசெல்லும் விசுவாசம்

மேல்கீழ்ஆனாலும் அய்யன்வில்இருக்க
  மிஞ்சிநமக்குவருமோ ... மோசம்
வீரர்என்றசும்மாபோர்கொண்டீரே அய்யோ
  வேண்டாமோ அனுவாகிலும் ... ரோஷம்
சாலம்செய்தோடினால் ... நம்மைத்தடுப்பதாரோ
  சதிசெய்யும்பேருக்குச் ... சமர்த்தர்என்றும்பேரோ
நீலஅரக்கர்கெடும் ... என்றறியீரோ
  நில்லாதுவாருங்கள் ... நிலைகடந்துபாய்வாரோ (எ)

---

## மூலபலசண்டை.

### விருத்தம.

ஓதிஇவ்வாறங்கதன்சொல் உரைக்குச்சாம்பன்
  உடன்பட்டான்அங்குதம்பி முதல்ஆனோர்கள்
நாதன்உரையால்அவரைக் கூடப்போனார்
  நாலுசமுத்திரமுமலன்றாய் வளைந்தால்போல்
தீதிசெய்யும்மூலபலம் எதிர்க்கக்கண்டான்
  சீராமன்கோதண்டத் தினைநாண்ஏற்றிக்
காதளவும்வாங்கிஇதெம் மாத்திரம்என்று
  கருஷித்தான்சரமாரி வருஷித்தானே. (அஎ)

எ௨. தரு-பந்துவராளிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மூலபலசண்டையைக்கேளும் ஸ்ரீராமன்செய்த
மூலபலசண்டையைக்கேளும்

அநுபல்லவி.

மூலபலசண்டைகேளும் ... வேலைசூழ்இலங்கைஆளும்
மூடன்இராவணன்குடி ... கேடனஇராவணன்கெடி
மூவ்உலகக்கிளைஞர்க்கும் ... எவ்வுலகத்தவுணர்க்கும்
முந்தஉபசாரம்பண்ணிப் ... பிந்திடவிசாரம்எண்ணி
முன்அரக்கர்நம்பினோர் ... தன்னோடொத்ததம்பிமார்
முக்கியதேவாந்தகன் ... உக்கிரமகராந்தகன்
முடிபெறும்சூரியகேது ... கெடிபெறும்யாகசேது
முனைபெற்றசம்புமன்னன் ... ரணமஸ்தன்கும்பகர்னன்
முதுபோர்இடும்பன்அகம்பன் ... அதிகாயன்கும்பன்நிகும்பன்
முச்சிரத்தரக்கன்சங்கன் ... வச்சிரத்தெயிற்றன்சிங்கன்



மூகைக்கும்பருதிக்கண்ணன் ... புகைக்கும்குருதிக்கண்ணன்
முதல்வீரர்மடித்தனர் ... சதிமாறும்முடிந்தனர்
முழுதுநெஞ்சும்காய்ந்து ... பழுதுவந்துநேர்ந்தது
முற்றுயிர்கொடுக்கும்பேர்கள் ... கத்திஎன்றெடுக்கும்பேர்கள்
முடவர்முதல்ஆகஇன்று ... கடுகிவரவேணும்என்று
மூபவிட்டதூதர்சொல்லப் ... போய்எவர்க்கும்சேதிசொல்ல
முந்திஇலங்கையைநாடி ... வந்துதுக்கம்கொண்டாடி
முண்டாக்கன்தன்னைத்தேற்றி ... சண்டையைஉட்கொண்டுதோற்றி
மூளும்கனல்போலேபற்றி ... ஆளுங்களமேலேசுற்றி
மூடவும்பூமிஅசைத் ... தாடவும்தேவர்அஞ்சி
வாடவும்வானரர்கள் ... ஓடவும்தேடிவந்த (மூல)

சரணங்கள்.

5.. அஞ்சுமுகங்கள்சர் ... அஞ்சிநகைவெற்பகங்கள்
ஐம்பதுதலைகள்சர் ... ஐம்பதுபுசமலைகள்
ஐந்நூறுமுடிகள்சர் ... ஐந்நூறுதோள்அடிகள்
ஆயிரம்சிரங்கள்இரண் ... டாயிரம்கரங்கள்உடன்
அங்கம்மிகுகாத்திரங்கள் ... பொங்குபொறிநேத்திரங்கள்
அலைபோலும்நாக்குகள் ... மலைபோலும்மூக்குகள்
ஆவெனத்திறந்தவாய்கள் ... தாவெனப்புகுந்தசய்கள்
ஆகாசம்தொட்டகைகள் ... ஏகாசம்இட்டமெய்கள்
அடாக்கறுகறுத்துப் ... புடையைக்குறிகுறித்து
அண்டத்தில்உள்ளோர் ... நவகண்டத்தில்உள்ளோர்எல்லாம்

அடியோடெழும்பிஅந்தக் ... கடல்எழும்பொங்கிஇந்த
  அரும்பார்க்குள்நிறைபட்டால்போல்-புற்றினில்சசல்
  பெரும்போககுபுறப்பட்டால்போல்-மலைமலைகள்

ஆனைபெருராட்சதர்கள்-மானம்அளவாநிறைந்து
  ஆயிரம்வெள்ளம்சேனை-ரதங்களுடன்
  பாய்பரிகொல்லும்யானை-இவைஉரைக்கில்

அஸ்தகிரிஎமகிரி-சித்திரகூடநாமகிரி
  அனையபெருமத்தகெசங்கள்-தேவரைவென்று
  தனிவிருதுபெற்றதுசங்கள-கணக்கில்லாத

அண்டபகிரண்டம்முட்டும்எண்டிசைஅகன்றமட்டும்
  அளவும்காத்திராதங்கள்-கண்களில்பொறி
  வளரும்போர்த்தூ கதங்கள்-முறைமுறையா

ஆற்றுமணல் அளவிட்டேநட்-சேத்திரம் அளவிட்டாலும்
அதிகக்குதிரைக்கூட்டம்-திக்குகள் எல்லாம்
பதறிக்கொள் ஆட்டபாட்டம்-கைக்கடகங்கள்

ஆகம் அணிபதக்கங்கள்-தோள்வளைகள் கால்வளைகள்
அக்குமணிக்குண்டலங்கள்-மணிஇழைத்த
பொற்கொலுசுவெண்டையங்கள்-வெற்றிக்கொடிகள்

ஆலவட்டம்தாலவட்டம்-சாமரங்கள் சுருட்டிகள்
அவுதாக்கள் குத்துக்குடைகள்-பீலிக்குடைகள்
கவிகைகள் சித்திரக்குடைகள்-வெயில்மறைக்க

அதிவிதநாகசுரம்-தவிலொடுதாரைசின்னம்
அறைந்தசங்குகள் எக்காளங்கள்-கர்ணுவொடு
சிறந்தகொம்புகள் கைத்தாளங்கள்-துத்தாரிகள்

ஆகுளிகள்மேளங்கள் காகளம்டமாரங்கள்
ஐந்துவிதபேரிகைகள்-வீராணங்கள்
பம்பையொடுபூரிகைகள்-முழங்கிவர

அங்குசங்கள்பரிசைகள்-சங்கிலியின்வரிகைகள்
அஸ்திரம்வேலாயுதங்கள்-வல்உலக்கைகள்
சஸ்திரம்சூலாயுதங்கள்-இப்படிக்கொத்த

ஆயுதத்தின்பேதங்கள்-கோடிகோடிபூதங்கள்
அங்கைகொண்டுசூழ்ந்துவர-பேய்களும்கொண்டு
கங்குகங்காப்பாய்ந்துவர-புலிஇறைச்சி

ஆட்டிறைச்சிமான்இறைச்சி-மாட்டிறைச்சிநாய்இறைச்சி
அலகைகள்கொடுத்துவர-மதுக்குடங்கள்
பலபேய்கள்எடுத்துவர-கெக்கலிகொட்டி

அண்டமும்அகன்றநவ-கண்டமும்கிடுகிடென்ன
ஆர்ப்பரித்துத்தொடைகள்தட்டி-விழிகள்எல்லாம்
தீப்பறக்கப்பொறிகள்கொட்டி-ராவணன்சொன்ன

தாரடாமனிதன் அவன்-ஆரடாவெனறேகத்திகள்
அடங்கலும்வீசிக்கொண்டு-ராமன்எங்கேஎன்
றிடும்புகள்பேசிக்கொண்டு-விதம்விதமா

ஆளிபுலிகரடிகள்-ஞாளிகழுதைகள்மேலே
அரக்கர்மெத்தப்பாய்குவாரும்-சிங்கத்தில்ஏறி
இரைச்சலிட்டுச் சாய்குவாரும்-சில அரக்கர்



ஆகத்தினில் அடங்காத-தாகத்தாலேமேகங்களை
அங்கையால்ப்பிடிப்பாரும்-சலம்பிழிந்து
செங்கையால்க்குடிப்பாரும்-அதுக்கிஷ்டப் ஆம்

ஆரும்வேசநதி அந்த-நீரும் அகப்படாமல்
அலைகடலை அள்ளுவாரும்-பெருவாயாலே
சலசலெனக்கொள்ளுவாரும்-கைகளைநீட்டி

அஷ்டதிசகங்களைக்கூடச்-சுட்டெடுத்துத்தின்னவந்த
அனல்போலச்சொறிவாரும்-மரங்களாலே
தினவுகளைச்சொறிவாரும்-பிறைகள்போலே

அக்கிரமம்மிகுந்தபல-உக்கிரதந்தங்களைக்காட்டி
ஆவென்றுதிறப்பாரும்-பசிக்குதையோ
கூவென்றுபறப்பாரும்-கழுதைமுகம்

ஆனைமுகம்புலிமுகம்-பூனைமுகம்பரிமுகம்
ஆகும் அரக்கர் அனந்தம்கண்கள்நெருப்பா
வேகும் அரக்கர் அனந்தம்-சற்றுகிலும்

அஸ்தத்தில்விரல்இல்லாமல்-ஒற்றைக்கையும்ஒற்றைக்காலும்
ஆன அரக்கர்கோடி-சொரூபம்கெட்டுப்
போன அரக்கர்கோடி-இவரைக்கண்கி


அண்டர்கள்எல்லாரும்நீல-கண்டன் இடம்போய்எப்படி
அய்யாஎன்றேஒடுங்கியே-உயிர்மேல்ஆசை
வையாமலேநடுங்கியே-சிவனே இந்த

அம்புவியில்க்கடல்களும்-பம்புசராசரங்களும்
அரக்கர் ஆய்வந்தனஎன்று-ஓடிஒளித்துக்
குரக்கினம்கொந்தன இன்று-நாங்களும் இனி

அம்பரத்திருக்கும் இந்த-உப்பருலகத்தைவிட்டு
அப்பாலேசெய்வோம்என்றார்-இருந்தால்இவர்
தப்பாமல்க்கொல்வார்என்றார்-என்னவே அரன்

அந்தராமன்சரத்தாலே-இந்த அரக்கர்கள்எல்லாம்
அதம் ஆகிப்போவார்இன்னம் நீங்கள்எல்லாரும்
சதம் ஆகிவாழ்வீர்என்ன-கேட்டமரர்கள்

அகத்தினிலேமுன்னம்-மிகுந்ததுயர்கள்எல்லாம்
அகற்றிப்பயங்கரம்விண்டார்-ராட்சதர்கோரம்
சகித்துத்தயிரியம்கொண்டார்-முனிவர்எல்லாம்





## உயுத்தகாண்டம்.

அண்டநிழல்இல்லையென்று-தண்டுகமண்டலங்கள்விட்
டலங்கோலம்ஆய்வெதும்பினர்-தாமரைஇலைச்
சலம்போலவேததும்பினர்-சித்தர்கள்எல்லாம்

அனந்தம்அரக்கர்க்கொரு-குரங்கைஉறையிட்டாலும்
அளவிடத்தள்ளாதென்பார்-இந்தச்சேனைக்கு
களம்இடம்கொள்ளாதென்பார்-சாத்தியர்எல்லாம்

அத்தனைஇத்தனைஅல்ல-இத்தனைபேர்தலைகளை
அய்யுன்என்னசெய்யுமோஎன்பார்-நமதுபக்கில்
தெய்வம்என்னசெய்யுமோஎன்பார்-வித்தியாதரர்கள்

ஆயிரம்கோடிஅந்தகர்-ஆயினும்இவரைக்கொல்ல
அனந்தம்நாள்வேணும்என்பார்-உலகழிக்க
நினைந்ததோகாணும்என்பார்-கந்தருவர்கள்

ஆமையும்சேஷனும்இந்தப்-பூமியும்எப்படிஇவர்
அங்கத்தைச்சுமந்ததோஎன்பார்-இத்தனைபேர்
எங்கிட்டுச்சமைந்ததோஎன்பார்இவர்கள்இந்த

ஆச்சரியம்கொள்ளவெகு-மாச்சரியம்கொண்டரக்கர்
அஷ்டதிசைமேலும்மேவினர்-ஆகாசம்என்னும்
வெட்டவெளிமேலும்தாவினர்-இவரைக்கண்டு

ஆர்வம்உள்ளபதினெட்டு வீரரொடுசாம்புவனும்
அரண்டங்கோட்டம்கொள்ளவே-நடுநடுங்கிக்
குரங்கோடும்ஓட்டம்கொள்ளவே-இவ்வகைசேர்

அடர்ந்துபலையும்குன்று-இடர்ந்துநாலுதிக்கிலும்
படர்ந்துராகவன்முன்னே-தொடர்ந்துதொடர்ந்துவந்த (மூல)

உ. எட்டிவருவார்சிலர் கிட்டிவருவார்சிலர்
சண்டிவருவார்சிலர் தாண்டிவருவார்சிலர்
ஏறிவருவார்சிலர் சீறிவருவார்சிலர்
இரைந்துவருவார்சிலர் விரைந்துவருவார்சிலர்
இடத்தில்வருவார்சிலர் வலத்தில்வருவார்சிலர்
அடுக்கவருவார்சிலர் முடுக்கவருவார்சிலர்
இடிஇடிஎன்பார்சிலர் பிடிபிடிஎன்பார்சிலர்
எற்றும்எற்றும்என்பார்சிலர் குத்தும்குத்தும்என்பார்சிலர்
எட்டும்எட்டும்என்பார்சிலர் வெட்டும்வெட்டும்என்பார்சிலர்
[illegible] ...திஎன்பார்சிலர்

இந்தவகைராமனை-வந்துவந்துமென்மேலும்
ஈய்கள்மொய்த்துகொண்டவகைபோல்-பெரும்புலியை
நாய்கள்சுற்றிக்கொண்டவகைபோல்-சுற்றியில்அய்யன்

என்சமர்த்தும்ராவணன்-தன்சமர்த்தும்வந்தபடை
யின்சமர்த்தும்பார்ப்போம்என்றே-நினைத்துமெள்ள
புன்சிரிப்புகொண்டுகொண்டே-நிற்கராட்சதர்

எல்லாரும்இவன்வெகு-வல்லாளர்கண்டன்தனித்
திருக்கும்செருக்கேபோதும்-இதிலும்செயம்
பெருக்கவேணுமோஓதும்-எனமுதுகில்

எத்தேசகாலமும்-வற்றுப்பெரும்சமுத்திரம்
என்றஅம்புறாத்தூணிசாத்தி-பிரசண்டகோ
தண்டவில்லைநாணிஏற்றி-குணத்தொனிசெய்

திட்டம்பாதமும்மதமும்-பொட்டடெனவேவறண்டுகண்
இருண்டசிலயானைகளுக்குத்-தொண்டையும்கூட
வறண்டசிலயானைகளுக்குச்-சிலயானைமேல்

இருந்தபாகரைத்தள்ளி-வருந்தவதைத்துகையை
எடுத்துப்பிடித்தவோட்டம்-பயத்தைஎல்லாம்
விடுத்ததுதேவர்கூட்டம்-வல்அரக்கர்கள்

ஏறிவந்தபுரவிகள்-வீறிவந்தகதிமாறி
இளைத்துத்தள்ளாடினவே-ராக்ஷசருக்கு
உளைத்துள்ளம்வாடினவே-பின்சாமிமுனைந்

திணைஇல்லாவெகுசுடு-கணைஏவிநின்றவர்கள்
எவரும்இறக்கஅடித்தான்-அப்பாலேநின்ற
அவரும்பறக்கமுடித்தான்-முடிக்கவேநாம்

இருநூறுவெள்ளம்இவன்-ஒருநாளிடன்போகாதீர்
எனத்திரும்பிக்கூட்டிக்கொண்டார்-சூரியன்முன்னே
பனிகுலம்போல்மூடிக்கொண்டார்-இவரோகமக்

கிடெனச்சினந்துகாற்-காற்றுடிபோல்ச்சுழலும்கணை
இலக்கம்அற்றகணைதாக்கினான்-தாக்கிஅவரைத்
தொலைத்துவெட்டவெளிஆக்கினான்-பின்னும்அரக்கர்

இருநூறுவெள்ளமுடன்-ஒருநூறுவெள்ளம்கொண்டு
ஏகோபித்துமுளைத்துக்கொண்டார்-நெருங்கிவந்து
மாகோபத்தில்வளைத்துக்கொண்டார்-அவர்அவர்கள்





ஏறும்வழுமாறவெகு-நூறுகணைதூறிமுது
கிட்டோடத்தரித்துநின்றான்-சிலரைத்தரி
கெட்டோடமுறித்துநின்றான்-விடவிடவே

இப்படிஅந்நூறுவெள்ளம்-தப்பறமுடிந்ததுகண்
டிசமானன்வன்னிஎன்பவன்-மிகவும்பர
வசம்ஆகியே புலம்புவன்-அரக்கர்இன்று

இறந்தனர்எல்லாரும் பறந்தனர்அய்யோஎன்
றேக்கம்ஆய்க்கவலைபெற்று-குறுகுறுத்து
மூக்கிலேவிரலைவைத்து-இனிஎப்படி

ராகவன்முகன்நிற்கப்-போகுவோம்இதென்னமெத்த
லச்சைக்கேடென்றுவிளம்பி-விளம்பியபின்
அச்சத்தோடென்றுகிளம்பிப்-பலதிசையின்

இறைச்சலைமாற்றிநின்ற-அரக்கரைப்பார்த்துநீங்கள்
ஈடழிந்துநொந்ததேதென்றும்-மனிதற்கஞ்சி
ஓடிஇங்கேவந்ததேதென்றும்-தேவர்கள்கண்டால்

ஏச்சாகும்இதுகொஞ்சப்பேச்சாகும்என்றவரை
ஏசிடா ஏச்சைஏசி-சீசீஎனவே
ரோஷமாவார்த்தைபேசி-அரக்கர்எல்லாம்

இரைந்தோங்கியேஒரு-பெரும்பாரைத்தேரைகள்
இளப்பம்என்றுசுற்றிக் கொண்டாற்போல்-விட்டில்ப்பூச்சிகள்
விளக்கைவந்துமொய்த்துக்கொண்டாற்போல்-மொய்க்கமனிதன்

எம்மாத்திரம்என்றுதானே-ஐந்நூறுவெள்ளம்சேனை
ஏகமாக்கடுவிட்டான்-அம்பிலும்அதி
வேகமாமுடுகவிட்டான்-விடுத்தபின்னை

இளைத்தவன்போல் அவர்தன்னை-வளைத்திடும்படிக்குச்சற்றே
இடம்கொடுத்துப்பின்வாங்கினான்-எவரும்கைக்குள்
அடங்கவிட்டுமுன் ஓங்கினான்-வந்தஅரக்கர்

எரிகேறிசம்கட்டாரி-தரிதோமரங்கள்வாரி
லக்காகமீதில்சொரிந்தார்-அதுகள்நொக்கு
நொக்காகராமன்அறிந்தான்-பின்னும்நெருங்கி

இரதம்ஓர்பக்கத்தில்விட்டும்-புரவிஓர்பக்கத்தில்விட்டும்
யானைஓர்பக்கத்திலேவிடடும்-அணிஅணியா
சேனைஓர்பக்கத்திலேவிட்டும்-நிரைநிரையா

இருப்புலக்கைபிண்டிபாலம்-பெருத்தகத்திதண்டுசூலம்
என்னும்படைவாங்கிவிடுத்தார்-விடுத்தே அதின்
பின்னும்கணைஒங்கித்தொடுத்தார்-அவர் அவருக்

கெத்தனைகைஎத்தனைவில்-எத்தனை அம்பெத்தனைதண்
டெப்படி ஒருவன் தடுப்பான்—அவர்மேல்அய்யன்
எப்படி தான்போர் கொடுப்பான்-பெருமழைபோல்

எடுத்துவிட்டபடைஎல்லாம்-தடுத்துவிட்டான்என்றுவாயால்
எட்டிக்கடிக்க மேவினர்-கைப்பிடி ஆகச்
கட்டிப்பிடிக்கத் தாவினர்—ஆகாசத்தினில்

ஈசனர்நிருதர்கள்-நாசமாப்போவார்என்
றெல்லோர்க்குமனம்தேற்றினர்-சாமியைத்தேவர்
உல்லாசம்ஆக வாழ்த்தினர்-அந்தவேளையில்

எப்புறத்தும்ராக்ஷதர்கள்-அப்புறம்போகாமல்வாளிக்
கிரைக்காகத்தொகுத்துக்கொண்டான்—சுற்றிலும்போட்ட
சரக்கூடம்வகுத்துக்கொண்டான்-வகுத்தபின்பு

ரதங்கள்யானைகள்துர-கதங்கள்சேனைகள்பட
எவரையும்மண்ணில்ச் சதித்தான்-பிடித்தவில்லோ
டவர் அவர்முன்னில்க் குதித்தான்-தனித்தனியே

இந்திரவாணம்மோகவாணம் சந்திரவாணம்நாகவாணம்
எரிவாணம் வாயுவாணம்-விஜயமுர
ஹரிவாணம் மாயவாணம்-குபேரவாணம்

இமையாதவருணன்வாணம்-நமன்வாணம்அருணன்வாணம்
இடிவாணம்ஆகநொடித்தான்-அரக்கர்தம்மை
அடியோடே சாக அடித்தான்-பின்னையும்அவர்

எண்இறந்தசேனைசண்டை-பண்ணிமுடியாதென்றெண்ணி
ஏகமாக் கடுகடுத்தான்-மந்திரம்சொல்லி
மோகனஸ்திரம்தொடுத்தான்-தொடுத்தபோதில்

இங்கும்ராமன் அங்கும்ராமன்-அங்கும்ராமன் இங்கும்ராமன்
எங்கும்ராமன் ஆகத்தோற்றினன்-அவருக்கவர்
தங்களாலே சாகமாற்றினன்-இந்தவகையா

ஈனர் ஆம் ஆயிரவெள்ளம்-சேனையும்முகூர்த்தம்தன்னில்
இறம்படி ஆகப் புடைத்தான்-ரணகளத்தை
வெறுங்களம்ஆகத் துடைத்தான்-அனந்தம்கோடி



எறிவாளிகள்பிறந்த கருமேகம்போல்ச்சிறந்த
ஒருராமனால்அறந்த சருகுகள்போல்ப்பறந்த (மூலபல

௧. தோள்கள் அறுந்தபேரும் தாள்கள்முறிந்தபேரும்
தொடைகள்இடிந்தபேரும் இடைகள்ஒடிந்தபேரும்
தொங்கிகள்சறிந்தபேரும் சந்துகள்முறிந்தபேரும்
துணைக்கைகள்இற்றபேரும் கணைக்கால்கள் அற்றபேரும்
தொண்டைகள்தறித்தபேரும் மண்டைகள்திறந்தபேரும்
துண்டம்துண்டம் ஆனபேரும் கண்டம்கண்டம்ஆனபேரும்
தூணிகள் இழந்தபேரும் காணிகள் இழந்தபேரும்
தூசகள் உலைந்தபேரும் இரதங்கலைந்தபேரும்
தோரணங்கள்கெட்டபேரும் வாரணங்கள்விட்டபேரும்
தோயரப்பறிந்தபேரும் சாமரம்எறிந்தபேரும்
தொட்டெடுத்துவாள்கெட்டு நட்டைகட்டைபோல்ப்பட்டு
துள்ளித்துள்ளிநெளிப்பாரும் பிணங்கள் தம்மேல்
தள்ளித்தள்ளிஒளிப்பாரும் பலபலவா
துண்டங்கள் ஆர் இடப்புகள் இண்டங்கொடிபோலஅம்பு
துறபட்டுமாய்வாரும் குறைத்தலைஆய்
அறபட்டுச்சாய்வாரும் இவ்வளவென்று
சொல்இடப் இல்லாதபேரும் சல்லடைக்கண்போல்உடம்பு
தொளைபட்டுவீழ்வாரும் விடாய்எடுத்துக்
களைபட்டுச்சாவாரும் போடப்போடவும்
தொலையா அம்புகளாலே தலைபோயப்பம்பரம்போலே
சுற்றிச்சுற்றிபடிவாரும் புண்டங்கள் ஆகித்
தத்தித்தத்திப்படிவாரும் நிலைகலங்கி
தோள்என்றும்தாள்என்றும் வாள்என்றும் அடையாளம்
தோற்றாமல்கெட்டபேரும் காயங்களாலே
ஆற்றாமல்பட்டபேரும் தலைகள்அற்றுத்
தும்பிமேலேநின்றபடி தொம்பர்போலலாகுகொண்டு
தொப்பெனவேவீழ்வாரும் மண்ணைக்கடித்துக்
குப்புறவேதாழ்வாரும் அம்புகள்எங்கும்
சொருகிஉயிர்விடச்சே மரணவலிப்பெடுத்துச்
சுருட்டிக்கொண்டுபடுப்பாரும் கண்பூச்சிபறந்
திருட்டிஉயிர்விடுப்பாரும் கைகால்கள அற்றுச்

சுருங்காபலேஅடிக்கும் பெருங்காற்றில்கொப்புபோன
சோலைபோலேகாணுவாரும் தங்கள்குடலை
மாலைபோலேபூணுவாரும் அடுத்தடுத்துத்

தொண்ணூறுதரம்அய்யோ தண்ணீர்தண்ணீர்யென்று
துடிதுடித்தலைவாரும் ரத்தத்தைஅள்ளிக்
குடிகுடித்தலைவாரும் மனிதன்என்று

துடுக்குச்சொல்லிய வாயின் இடுக்குக்காயிரம்அப்பு
சொரிபட்டுவதைவாரும் சின்னபின்னமா
அரிபட்டுச்சிதைவாரும் கழுக்கள்கொத்த

தொங்கியபனங்காயிலே நுங்குபோல்கண்களும்போய்
டொங்குவிழுந்தலைஅனந்தம் ரத்தம்பெருகிப்
பொங்கிவிழுந்தலைஅனந்தம் கழுதுகள்போய்த்

தூரத்தொலையில்விழப் பிரிட்டுஇரத்தம்எழத்
தூறும்தலைகள்அனந்தம் ஒன்றின்மேல்ஒன்று
ஏறுந்தலைகள்அனந்தம் அந்தத்தலையைத்

தொந்தமிடுப்பேயினங்கள் பந்துகள்போல்எடுத்தாடச்
சுற்றிலும்விழுந்தலைஅனந்தம் கடலின்கரை
முற்றிலும்விழுந்தலைஅனந்தம் சுவாமிஅப்பாலே

சொற்கப்உண்டேங்களுக்கென்று கொக்கரித்துக்கொக்கரித்துத்
துடித்துவிழுந்தலைஅனந்தம் ஒன்றோடொன்றாக
அடித்துவிழுந்தலைஅனந்தம் அம்புபட்டிரு

துண்டாய்ச்சிலைகள்விழ ரண்டாய்த்தலைகள்எழச்
சுழலும்கவந்தம்அனந்தம் பிணங்களோடே
உழலும்கவந்தம்அனந்தம் முடித்தலைகள்

துண்டித்துவிழவும்வேகம் கொண்டெட்டிநடந்தப்பாலே
சோரும்கவந்தம்அனந்தம் எதிரெதிரா
நேரும்கவந்தம்அனந்தம் சரீரம்எங்கும்

துருவிட்டகணைபட்டு மரவட்டை உருவிட்டுச்
சுருளும்கவந்தம்அனந்தம் நரம்பிசிக்க
உருளும்கவந்தம்அனந்தம் நட்சத்திரப்போலத்

தொடுத்தபணிக்குண்டலத்தை அடித்தடித்தம்பானைபோடத
தொட்டாடுஞ்சிலபேய்கள் கவந்தத்தோடு
முட்டாடுசிலபேய்கள் ரத்தத்தில்ஆனைத்



தோட்டியினிற்பிணங்களை மாடவிளையாட்டுக்காகத்
தூக்கையடிவிடுஞ்சிலபேய்கள் அதைப்பறிக்கத்
தாண்டிவிழுஞ்சிலபேய்கள் தின்றுகொழுத்துச்

சுயம்கொண்டராமனுக்குச் செயஞ்செயம்என்றுசொல்லித்
துதித்தாடுஞ்சிலபேய்கள் பிணமலைமேல்
குதித்தாடுஞ்சிலபேய்கள் ஆனமணியைச்

சோடாணதாளம்ஆச்சி ஆடிக்கொண்டாகவற்கு
ஸ்தோத்திரம்சொல்லுஞ்சிலபேய்கள் சண்டைஉண்டென்று
சஸ்திரம்சொல்லும்சிலபேய்கள் ராட்சதர்வாயில்

சுரைவிரைபோன்றபல்லைப் பொரிஎன்றுவாயில்க்கவ்வித்
தூவியிடுஞ்சிலநாய்கள் லங்கையைப்பார்த்துக்
கூவியிடுசிலநாய்கள் சாலைஎல்லாம்

தோண்டித்தோண்டிப்பிடுங்கித் தாண்டித்தாண்டிப்பசியைத்
தொலைத்திடுஞ்சிலநாய்கள் களத்தில்எங்கும்
குலைத்திடுஞ்சிலநாய்கள் பெருந்தம்ரத்தச்

சுனைக்குள்விழப்பிணத்தை உனக்கெனக்கென்றுசண்டை
தொடுத்திடும்சிலநரிகள் குட்டிக்கிரையாக்
கொடுத்திடும்சிலநரிகள் இழுத்திழுத்துத்


துணுக்குத்துணுக்காக்கொத்திப் பிணத்தைப்பெரும்பசியாம்
சூறையிடுஞ்சிலநரிகள் இலங்கையைப்பார்த்
தூளையிடுஞ்சிலநரிகள் எலும்புகளுப்

தொண்டைகளும்மண்டைகளும் கொண்டுபோய்இலங்கையிலே
தூற்றுஞ்சிலபருந்துகள் வீடுகள்மேலே
ஏற்றுஞ்சிலபருந்துகள் மூக்குகளாலே

தோப்புகளின்கரம்புகளை முப்புரிகொல்லதுபோலச
சுருட்டும்சிலகழுகுகள் தலைதலையா
உருட்டும்சிலகழுகுகள் பிணமலைமேல்

தொத்தித்தொத்திமண்டைகளைக் கொத்திக்கொத்திமூக்கினாலே
தூக்கும்சிலகழுகுகள் ஓர்இடத்திலே
சேர்க்கும்சிலகழுகுகள் கைஒழியாமல்

தூத்தித்தூத்திஅந்த அரக்கரைபிடித்தெம
தூதரும்சலித்தாரே எட்டுத்திசைக்கு
ஏதரும்செலித்தாரே பிணக்குன்றுமேலே





சேரனும் அரக்கியர்கள் நீல்குளித்தா பூசைத்
  தொண்டுபண்ணுப் சிலகூளி அதற்குப்பலன்
  உண்டுபண்ணுமாணகாளி சம்மோகனச்

சடுகணை ஒன்றுமேலவிடும் மூலபலம்எல்லாம்
  தொலைந்ததென்றார் சிலதேவர் ராவணன்கொட்டம்
  குலைந்ததென்றார் சிலதேவர் இந்தக்கணையைத்

தொடுக்கிறவித்தை ராகவனுக்குச் சிவனுக்கும்
  தோணு என்றார் சிலதேவர் [illegible] அறிவார்
  காணுமென்றார் சிலதேவர் ராகவனைமேலே

சொர்க்கத்தலத்தில்உள்ள கற்பகமலர்பறித்துத்
  தூவினார் சிலதேவர் செயமங்களம்
  கூறினார் சிலதேவர் இப்படிக்கொத்த

துரைராமன்முன்நடந்து திரை ஆழிபோல்படர்ந்து
வரைஆனைகொத்தடைந்தக்கரை ஆகவேமடிந்த (மூலபல)

---

## ராவணனுக்கும் லட்சுமணருக்கும் யுத்தம்.

விருத்தம்

பெருமூலபலம்எல்லாம் இவ்வாறசாமிகையில் போனபின்னை [டான்
வரும்பரிலராவணனும் தேர்கொண்டான் பத்துவிலனும் வாங்கிக்கொண்
ஒருநூறுகோடிதோகனூறுகோடிபரி ஒக்குமயானை [னை
இருநூறுகோடியுடன் குதித்திட்டான் இளையவன்வந் தெதிர்த்திட்டா

௭௩. தரு-சாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

லெட்சுமணனுக்கும் ராவணனுக்கும் நேர்ந்ததேசண்டை

அநுபல்லவி.

அட்சயமானமூலபலம் தன்னை
அந்தக்கோதண்டம் உண்டுவிட்ட பின்னை
கட்சிஅரக்கனும் தேரிலே துள்ள
காவலிளையவன் அனுமான்மேற் கொள்ள (லெட்)

சரணங்கள்.

குரங்குவெள்ளத்தாரும் அரக்கர்வெள்ளத்தாரும்
  கூடித்தொடர்ந்தயுத்தம் ஆடினார்
குன்றும்மரங்களும தெண்டும்சரங்களும்
  [illegible] சாடினார்

செருக்களத்தினில் அரக்கன்நொடிக்குள்ளே
சிலநூறுகோடி அம்பு பேவினான்
திருமபத்தம்பியும் அதுக்கதையேவிட்டுத்
தெள்ளும்தவிடுபோலே தூவினான்
தூரத்திப்பத்தம்பை அரக்கன் எய்யவும்
சுவாமி அதைக்கூடத் தூளிசெய்யவும்
அரக்கன்மோகன அஸ்திரமதெறிக்கவும்
அய்யன்நாரணன் அம்பால்முறிக்கவும் (லெட்ச

௨. கொஞ்சத்தனம்எண்ணி அரக்கன்வீடணன்
மேலேமயன்வேலை தூண்டினான்
குறக்கேதம்பிக்குமுன்னே அங்கதனோடு
அனுமான் அதுக்கெதிர் தாண்டினான்
தஞ்சமென்றவ்பீஷணனுக்காகத்தம்பி
இருவரையும்தள்ளி ஓங்கினான்
சகலபேர்களும உருகவே அந்த
வேலையாரபினில் வாங்கினான்
அஞ்சிவ்பீஷணன் பயந்துவாடவும்
அரக்கன்கெலித்தோம்என் றாரிக்கவும்
சஞ்சீவியைக்கொண்டு அனுமான் அழைக்கவும்
தம்பியும் சேனைகளும பிழைக்கவும் (லெட்ச)

௩. பிழைத்ததம்பிவிபீஷணன்சுகமோ
சுகமோவென்று கிளம்பினான்
பின்புசாம்புவன் ராமன்சேவடி
முன்பில்உள்ளது விளம்பினான்
தழைத்தராகவன் உனைப்போல்ஆர்என்று
தம்பிதன்புகழ் பாடினான்
தந்தனச்சிரஞ்சீவி என்றனு
மந்தனைகொண் டாடினான்
அழைத்துவானர வெள்ளம்கெர்ச்சிக்க
ஆசைமுனிவர்கள் பேசிஅர்ச்சிக்க
மழைக்குநிகர்மலர் தேவர்தூற்றிட
வாழிஇளையவன் என்றுவாழ்த்திட (லெட்ச)



## மூலபலப்படுகளக்காட்சி.

### விருத்தம்.

சீலம்உள்ளராகவனும் இளையோன்தன்னைத்
தேற்றினன்பிறகுவிபீஷணனும் அங்கே
கோலம்உள்ளசுக்ரீவன் அனுமான்சாம்பன்
குமுதன்முதலோரை எல்லாம்கூட்டிக்கொண்டால
நாலுதிக்கும்சூரியன் முன்பனியைப்போலே
நாயகன்கைகோதண்டம் ஒன்றினாலே
மூலபலப்படுகளத்தைப் பாரீர்என்று
மூட்டினன்வகைவகைபாகக் காட்டினானே (௮௧)

௧௫. திபதை-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு

### கண்ணிகள்.

௧. வெற்றிகொள்ளவந்த மூலபலப்பாள
வேதண்டம்வீர கோதண்டம்செய்ததைச்
சுற்றியேசேனைப்படைத்தலைவருடன்
சுக்ரீவரேவாரும்சுவாமி-விக்கிரமத்தைப்பாரும்

௨. சண்டப்பிரசண்ட பெருங்காற்றிலேவெகு
தாகத்தினால்விழும் மேகக்குலம்போலே
அண்டர்பெருமான் இராமன்கையால்வீழ்ந்த
ஆனைகளைப்பாரும் கிடக்கிறசேனைகளைப்பாரும்

௩. தண்ணெனப்பொங்கிய ரத்தக்கடல்மேலே
சுவாமிஅப்பாலேசெந்-தாமரைப்பூப்போலே
வண்ணம்செவந்து மிதக்குவருமுக
மண்டலத்தைப்பாரும்சிதறிய குண்டலத்தைப்பாரும்

௪. சிரப்பெரும்பாய்கள் சட்டும்கொடி ஆகச்
செத்தகளத்திலே-ரத்தகுளத்திலே
ஓராயிரப்கோடி கப்பலைப்போலவே
ஓடும்தேரைப்பாரும்விசை அறுந்தாடும்தேரைப்பாரும்

௫. கடலிலேமலைமகராமீன்போலே
கண்டித்தயானையும் துண்டித்தயானையும்
இடலம்ஆகியசத்தக்கடல்போலே
எழுகிறத்தைப்பாரும் அருந்திமுழுகிறத்தைப்பாரும்

௬. கூத்தினில்நட்டுவன் பாத்திரம்என்னேத்தக்
குண்டலங்களகுறைத்-துண்டலங்கள்ஆய்எங்கும்

போர்க்குப்போர்க்குரொண்டிக் கூத்தினைப்போல் ஆடும்
 பிரேதங்களைப்பாரும் கைகள்கொட்டும் பூதங்களைப்பாரும்

௭. பண்டுபட்டயானை வால்புறத்தே அறாப்
 புண்பட்டயானையின் தலைகாணவே
சண்பகமுர்த்தலை உள்ளபானைபோலும்
 லட்சணத்தைப்பாரும்பேய்கள் தின்னும்பட்சணத்தைப்பாரும்

௮. அந்தரக்கடலுக்குமேலாக
 யானைக்கொம்பு அக்கினிவர்ணத்திலேயிளந்
சந்திரனைப்போல்மிதந்துமிதக்க
 தளம்புவதைப்பாரும் அங்கங்கேகிளம்புவதைப்பாரும்

௯. அத்திக்கொம்பால்தந்த கந்திசெய்நாக்கும்
 அப்பிஅப்பிவாயைக்கொப்புளிக்குதாவிழுந்த
கத்திகளைக்கொண்டுகாக்குதழிக்கிற
 காணிதனைப்பாரும்கற்றிலருக்கூனிகளைப்பாரும்

௧௦. புத்தகளம்என்னும் ரத்தவயல்மேலே
 எற்றசைதனென்னும்சேற்றினிடத்திலே
அஸ்திரங்கள்பயிர் ஒத்துக்கிடக்கிற
 அற்புதத்தைப்பாரும்ரத்தந்தனில் புற்புதத்தைப்பாரும்

௧௧. கொண்டகணைவன்னன் னூப்பின்றத்தைக்கையில்க்
 கொண்டெழும்பும்பேயைக்கண்டஅரக்கியர்
அண்டம்மட்டும்அதை எட்டிப்பிடிக்கிற
 ஆச்சரியத்தைப்பாரும் அவருடையமாச்சரியத்தைப்பாரும்

௧௨. தும்பிமுகத்திலே ராட்சசர்மீசையைத்
 தள்ளறுகாச்சாத்திப்பிள்ளைபார் என்றேத்திக்
கொப்பில்அவர்மண்டைத் தேங்காய்உடைக்கிற
 குட்டிப்பேயைப்பாரும் குதிக்கிறமட்டிப்பேயைப்பாரும்

௧௩. பேய்முகம்நாய்முகம் ஆகியாட்சகப்
 பெண்டுகள் அந்தப் பிணம்பிடுங்கவந்த
பேய்முகம்நாய்முகம்கண்டே அடையாளம்
 பிடிக்கிறத்தைப்பாரும் கல்வைர்த்தைபடிக்கிறத்தைப்பாரு

௧௪. பெண் அரம்பைக்கூத்து பார்க்கிறதென்னப்போய்ப்
 பேய்க்கூத்தாச்சுதேசு என்றுபுறப்பட்டு
பண்ணுடனேகிழப் பெண்டுகள்ஒப்பாரி
 பாடுவதைப்பாரும் தலைவிரித்தடுவதைப்பாரும்



361

௧௫. இந்திரலோகமும் சந்திரலோகமும்
 எட்டுத்திக்கும்கொள்ளை யிட்டுச்சிறைவைத்து
அந்தஅரக்கரை ராமன்வில்லுக்கிரை
 கற்பித்ததைப்பாரும் இராவணன் ஒப்பித்ததைப்பாரும்

௧௬. எள்இடவும்இடம் இல்லாமல்மண்டிய
 இத்தனைசேனையும் கைத்தனுவொன்றாலே
வள்ளல்இராமன்மு கூர்த்தத்தில்கொன்றுயிர்
 வாங்கினதைப்பாரும் பூமிபாரம் நீங்கினதைப்பாரும்

## ஸ்ரீராமரை மாலியவான் கொண்டாடல்.

சந்தவிருத்தம்.

நீதன்கைவிசுசா மாரிபடவேபடை
 பாழ்ண்டுபோனதை விபீஷணனுடேவிழி
நேர்கண்டலோர்களும் இராகவனைமேவினர் அதன்மேலே
 ஓதும்திராணியுடன் ஓடியதசானன்
மூதண்டகோடிஉள தேவர்கள்பகிரிட
 ஊர்எங்கும்வேணகளியாடல்விளையாடல்கள் செய்கிறபோதே
கோதண்டவாளியினில் மூலபலசேனையை
 நாசஞ்செய்தான்எனவே ஓடிவருதூதர்கள்
கூறும்சொலால்இதென மானிடவனல் அவர்படுவோரோ
 ஏதென்றுராவணன் விசாரமிடமலிய
வான்வந்துகாதுகளி லேசுநில்சுநீல்என
 ராமன்பிரதாபசெய ராமன்இசை ஆனதுபுகழ்வானே. (௬௦)

எசு. தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ராமனுக்குநிகர்ஆக ராவணா பூமியில்வேறுண்டோ

அநுபல்லவி.

மாமூலபலம்எல்லாம் ஒருத்தன்கொன்றதெந்த
வகைஎன்றுதூதரைப் பகையாலேமுந்தமுந்த
ஆமவன்கோதண்டம் வளைத்தானோபடைசிந்த
அரைஅம்புகால்அம்பு தெரித்தானோஏதோஅந்த(ரா)

சரணங்கள்.

௧. பின்னுஞ்சொல்லுகிறேன் அவனுக்குனதுசண்டை
 பிள்ளைவிளையாட்டல்லோ அத்தாட்சி

மன்னும்மரமும்புல்லும் கல்லும்ஒருசரத்தால்
மண்ணோடேமண்ஆமே கண்காட்சி
சின்னமனிதன்என்றும் ஒருத்தன்என்றும்எண்ணாதே
தேவர்க்கும்தேவன்அவ னேசூட்சி
உன்னைக்கட்டினவாலி தன்னைக்கொன்றானேஇது
உன்அண்டையில்இருக்க இன்னம்என்னடாசாட்சி(ரா)

௨. திண்டும்மிண்டும்சொல்லாதே தர்மம்சேரும்இடத்தில்
செயமும்சேரும்அட நின்றோட
சண்டை என்னால்ஆகாது செத்தவர்க்கெல்லாம்தில
தர்ப்பணம்செய்அடா குடிகேட
பெண்டுகளேஅல்லாமல் லங்கையைவிட்டுனக்குப்
பின்படைவருவதுண் டோகூட
அண்டர்நாயகனை ஒருத்தன்ஒருத்தன்என்றாய்
அண்டம்அழிக்கும்தேவர்ரண்டுபேர் உண்டோடா(ரா)

௩. வீரவேல்விட்டேன்என்றும் லட்சுமணன்பட்டான்என்றும்
வீம்புவார்த்தைகள்இங்கே தந்தாயே
மாருதிமருந்தாலே அவன்எழுந்தானேஇந்த
மதிமோசத்தால்அல்லவோ வெந்தாயே
காரியம்தெரிந்த விபீஷணன்சொல்லுங்கும்ப
கர்னன்சொல்லும்கேட்க நொந்தாயே
வீரியத்தால்அய்யோ காடுவாவாஎன்ன
வீடும்போபோஎன்ன வினைகொண்டுவந்தாயே(ரா)

---

## மூலபலப்படுகளத்தை ராவணன் கண்டது.

### விருத்தம்.

வல்லாண்மைபேசிய ராவணன்முன்இந்த
வகைவகையாமாலியவான் சொல்லிச்சொல்லிப்
பொல்லாதபுண்ணிலே கோலிட்டால்ப்போல்
புடைபுடைத்தான் மூலபலம்மடிந்தஆறும்
சொல்லாலேதூதர்சொன்ன சொல்லுஉன்தன்
சொல்லும்நிலைவரமோ என்றரக்கன்பொங்கி
எல்லாம்பார்ப்போம்எனக் கோபுரத்தின்மேலே
ஏறினான்படுகளம்கண்டானனே. (௬௧)



263

### ௭௩. தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

### பல்லவி.

கண்டானேராவணன்மென்மேலே மூலபலப்படு
களத்தைஇருபது கண்களாலே

### அநுபல்லவி.

மீண்டாம்தூதர்சொல் இன்றுமெய்யோபொய்யோஎன்று
மெத்தவிசாரப்பட்டக்கணமேசென்று உத்தரகோபுரஉச்சியிலேநின்று

### சரணங்கள்.

௧. போனமுகந்தொறும் மலைமலையாப்பிணம்குவிய-இதுவேநல்ல
தானம்ஆம்என்று மேகங்கள்வந்துகவிய-ராகவன்விட்ட
மானக்கணைகள்பட்ட பாணத்தளவும்முட்ட
வானத்திலும்அட்ட கோணத்திலும்எட்ட
சேனைப்பெரியமாலை தான்ஒத்தெழுந்தகொலை
ஆனைப்பிணங்களையும் சேனைப்பிணங்களையும் (கண்)

௨. சிலமுனிவர்கள் கண்டுட னநடுநடுங்க-சீறியஆல
காலமும்ஆம்எனும் கண்களைநாய்நரிபிடுங்க-வீரனோதண்டம்
காலமாரிமழை போலேகணைசொரிய
நாலுதிசையும்வளைந் தோலமிடும்பெரிய
மூலபலப்படையைக் கோலிவேர்அரிய
மூலைக்குமூலைஅலங் கோலம்ஆய்த்தெரிய (கண்)

௩. பெருகவேகளம்எங்கெங்கும் கவந்தங்கள் ஆட-நட்டுவன்போலே
அருகிலேநின்று பேய்கள்தாளங்கள்போட-ராமன்பிடித்த
ஒருசிலைஅதனாலே வரவாஒருகாலே
விரிகணைஅதுபட நிருதர்முடிகள்கெட
ஒருபெருமலைமேலே வரும்அருவியைப்போலே
குருதிநீர்துள்ளத்துள்ளக்குருவிகள் கொள்ளக்கொள்ளக் (கண்)

௪. மங்கைமீர்அந்தவானரப் பூச்சிகளைப்புடைத்து-நிமிஷத்திலே
உங்கள்முன்வருவேன்என்று கண்களைத்துடைத்து-துடுக்காவந்த
தங்கள்கணவன்கிடை அங்கெதிர்கண்டுகடைக்
கண்களில்நீர்பெருகி அங்காம்எல்லாம்உருகிப்
பெண்கள்திரண்டுமொய்த்துக் செங்கைதலையில்வைத்து
எங்கும்பதறிவிழ எங்கும்கதறிஅழ (கண்)

௯. பெரியவில்லுடன் அறுபட்டகைகளும் விரலும்கண்டுகண்கள்நீர்சொ
அரக்கியர்அடித்துக்கொண்டழும்கூக்குரலும்கண்டம்கண்டமாய் [ரிய

| | |
|---|---|
| ஒருவன்குடல்சரிய | ஒருவனுடலரிய |
| ஒருவன்தலையடிய | ஒருவன்சிலையொடிய |
| ஒருவன்தொடையறிய | ஒருவன்குடைமுறிய |
| ஒருவனுயிர்வதை | ஒருகணைசெய்ததை (கண்) |

---

## இராவணன் தேர் ஏறுதல்.

### விருத்தம்.

சூலைப்படிகளம் இவ்வாறுகண்டான்
 முடிபுனைகோபுரம்இறங்கிக் கோவில்சேர்ந்தான்
காலமனைம்முக்கோடி வயதும்சன்
 கைலாமும்தொலைக்க ராவணன்முன்னாளின்
மால்னமும்ராகவன் கொடுத்தவரத்தினாலே
 மதியும்அதுவிதியும்அது எனலால்துவார
பாலன்என்முன்போல் வைகுந்தவாசல்ப்
 படிகொள்வான்தேரேறத் துடிகொள்வானே. (௬௨)

௭௬. தரு-கல்யாணிராகம்-அடதாளசாப்பு.

### பல்லவி.

தேர்மேல்க்கொண்டானே-இராவணன்-போர்மேல்க்கொண்டானே

### அநுபல்லவி.

| | |
|---|---|
| பார்மேலும்திசை | மேலும்மலைமேலும் |
| பாயும்திரைகடல் | மேலும்முட்டிய |
| ஆயிரம்புர | விகளும்கட்டிய (தே) |

### சரணங்கள்.

| | | |
|---|---|---|
| ௧. | இனத்தோடேவரச்சொல்லி | உறுக்கினான்-தப்பி |
| | இருந்தோரில்நூறுவெள்ளம் | பொறுக்கினான்-சக்கம் |
| | தொனித்துக்கையொடுகையை | முறுக்கினான்-மேலே |
| | ஆணியும்கவசமும் | இறுக்கினான் |
| | கனத்தபூமியும் | மலையும்வெடித்திட |
| | முனைத்தபேரிகை | குமுறிஇடித்திட |
| | சினத்தினால்முக | வேர்வைபொடித்திட |
| | தனக்கும்சீதைக்கும் | இடக்கண்துடித்திட (தேர்) |



| | | |
|---|---|---|
| ௨. | பத்துமுடியும்தரித் | தோங்கினான்-திசை |
| | பத்தும்வெட்டியவாளைத் | தாங்கினான்-கோ |
| | பத்தால்அரமனையை | நீங்கினான்-ஒரு |
| | பத்தும்வில்லையும்கையில் | வாங்கினான் |
| | செத்தப்பேர்களை | எண்ணிமனம்நொந்து |
| | சத்தமேகங்கள் | போலேநால்ஐந்து |
| | கைதலத்திலும் | வாரிக்கொடைதந்து |
| | சுற்றிஅர்ச்சனை | செய்துவலம்வந்து (தே) |
| ௩. | இருபதுகைகளையும்வளை | மாட்டினான்-காதில் |
| | இருபதுகுழைகளும் | பூட்டினான்-தும்பை |
| | இருபதுதோளிலும் | சூட்டினான்-கண்கள் |
| | இருபதும்நெருப்புப்போல்க் | காட்டினான் |
| | வருபெண்சானகி | பதறுகிறதொன்று |
| | ஒருமண்டோதரி | கதறுகிறதொன்று |
| | திருநெல்லார்களும் | பார்க்கவேஇன்று |
| | இருவகையில்லொன் | றாக்குவேன்என்று (தே) |

---

## இராவணன் அவசகுனங்கள் காணுதல்.

### சந்தவிருத்தம்.

கதிர்விடுகுண்டலம் மணிமகுடம்பலகடகம் அலங்கிருதம்மென்போர்வை, கவசம்நெடுஞ்சரம் ஆரைவடம் அந்தைகள் கலகலெனும்பணிபின்கோவை, இதுமுதல்கொண்டொரு பதுகையில்வெஞ்சிலைஒருபதுசெங்கையிலும்பாணம், எரிவிழிசிந்திய கருமலைஒன்றெனஎவரும்நடுங்க நெடுந்தேர்மேல், மதிகரிசிந்திட உடுநிறைசிந்திட மலைகள் அதிர்ந்திட மண்பூமி, மறுகிட எண்டிசை முருகிதியங்கிட மனிதன் எனும்சொல்இடும்பாலே, அதிரணமண்டலம் அதிரதம்தனை அதிரவிடென்றஇலங்கேசன், அருகினில்எங்கனும் இருபதுகண்களில் அவசகுனம்பலகண்டானே. (௬௩)

௭௭. தரு-பந்துவராளிராகம்-ஆதிதாளம்.

### பல்லவி.

இப்படியா அவசகுனம்கண்டானே-கண்டாரவணன்
இடும்பாலேஎண்ணமல்ச்சென்றானே

அநுபல்லவி.

கைப்படைஆனதைச் சேகரம்பண்ணி
காகுத்தன்சரத்துக்குக் கொடுத்திடஎண்ணி
அப்படிவந்தானே ராமன்மேலே
அறிந்திருந்தும்புத்தி கெட்டவன்போலே(இப்)

சரணங்கள்

௧. ஆனைகளும்குதிரைகளும்பின்னுக்கு வாங்கிடகால்பதறவும்
அறுந்தகொடிமேல்பருந்துவிழவும் அங்கோரத்தத்துளிசிதறவும்
சேனைகாவலர்வாய்எல்லாம்வெறும் பானைபோல்வறண்டுதறவும்
சேரநாய்களும்பேய்களும்அழச் சூரியனைப்பார்த்தோர்கதறவும்
இப்படியா

௨. தோள்வளைசரியமாலைகள்கரிய இடப்புறக்கண்கள்துடிக்கவும்
தோகைமார்அழகாகம்மேல்விழ ஆகாயவாய்ச்சொல்படிக்கவும்
வாளின்வாய்முனைமடங்கவும்கருந் தூளிஆனதுபிடிக்கவும்
வாளின்மேல்க்கருமேகம்இல்லாமல்வில்லிடி இடிக்கவும்கொள்ளிகள்
இப்படியா [வெடிக்கவும்.

௩. முறைமுறையாத்தேரிலேகட்டும் விருதுசேதனம்அழியவும்
முரசம்பேரியும்டமாணமும் சருகுபோலேகிழியவும்
மறவர்கள்பூசும்சந்தனம் வறவென்றுபோய்க்கழியவும்
மண்மாரிகள்ஆனவைபொழியவும் பெண்ஆனையிலேமதம்வழியவும்
இப்படியா

---

## ஸ்ரீராமர் தேர்ஏறுதல்.

சந்தவிருத்தம்.

ஆசைகள்அதிரஇவாறசகுணம் இராவணன்எதிர்படதேர்விடலால்
ஆண்மைகள்பெருகியநீமறபடி அநுமான்மிசைவருதல்ஒழுதமுனே
மாசறசதுர்முகன்நேசமொடுதவிய வாசன்விடுகிறதேர் இதன்மேல்
மாருதிபுசம்எனஏறுதிஎனவரு மாதலிஉரைசெயஆதரவாய்
ஏசறுமுதுமறைஏறிட விதிநிலை ஏறிடமுனிவர்கள்தேவர்கள்ச
டேறிடமகம்நிறைவேறிட அவர் அவர் ஏறியபதவியில்ஏறிடவே
வீசியமழைபொழிகார்முகிலொளிவிடுமேருஎன் மலைமிசைஏறுதல்போல்
வீரன்இரவிகுலவீரன் அதுலரகுவீரன்இதன்மிசைஏறினனே.



௭௮. தரு-சாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

தேர்ஏறினானே ராமச்சந்திரன் தேர்ஏறினானே

அநுபல்லவி.

பார்மேலேவைப்பது நேர்அல்லஅரவிந்த
பாதம்வைப்பாய்என்று மாதலிகொடுவந்த (தேர்)

சரணங்கள்.

௧. சோதிமதிநுதலில் திருநாமம்அணிந்திட்டு
துலங்கும்அம்புறாத்தூணி வலப்புறத்தினில்இட்டு
காதல்செய்யுந்தும்பை மாலைதோள்மேல்விட்டு
கச்சைக்கட்டிமார்பில் வச்சிரக்கவசம்தொட்டு
குரோதம்செய்யும்இள நகைவிடுத்துக்கொண்டு
பாதம்தன்னில்மிதி யடிதொடுத்துக்கொண்டு
கோதண்டம்ஒருகை யினில்எடுத்துக்கொண்டு
தாய்தந்தமரவுரி யினைஉடுத்திக்கொண்டு(தேர்)

௨. ஆரவாரம்செய்யும் வீரவெண்டயம்சாத்தி
அங்கைத்தலத்துக்கு முன்கைக்கட்டிஏற்றி
தாரணிஉள்ளோரும் வானவரும்போற்றி
தான்சொல்லவேலட்சுமி காந்தன்என்றேதோற்றி
வீரபட்டம்வி சாலம்உள்ளநெற்றி
நேரில்இட்டதி காரம்உள்ளகத்தி
ஓர்வலப்புற மீதினிலேசுற்றி
ஆகும்ஒப்பிடொ ணாதஒருவெற்றி(தேர்)

௩. தேவர்மடைந்தையர் சோபனங்கள்பாட
சீதைமனதில் நினைந்ததுகைகூட
தூவும்மலர்க்கை முனிவர்கள்கூத்தாட
சூரியன்தேர்ஓட்ட லங்கைமேல்க்கண்போட
யாவருங்கண் கண்டுதேறவும்
பாவிகள்சங் கங்கள்மாறவும்
தேவருக்கா நந்தம்ஊறவும்
ராவணன்வை குந்தம்ஏறவும் (தேர்)

---

## மகோதரன் வதை.

விருத்தம்.

திருத்தேர் ஏறிராகவனும் சென்றான்போர்க்கு மகோதரனும்
தரிக்காதெழுந்து ராவணன்பால் சார்ந்துபோர்க்கு விடைகொண்டென்ன

செற்றத்தான்செய்து லட்சுமணனை செயித்துவாவென் றனுப்பவந்து
கருத்தாவான ராகவனை கடிந்தான் அவனால்மடிந்தானே. (௬௯)

௭௧. தரு-சாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

மடிந்தானேமகோதரன்-ராமன்கைஅம்பால்-மடிந்தானேமண்மேல்

அநுபல்லவி.

கடிந்துராவணனால்லட்சு மணன்மீதில்விடப்பட்டு
கடிகிஓடிஅவன் மீதில்ப்போரினைவிட்டு
தொடர்ந்துராமன்மீத னேசரங்கள்தொட்டு
சூதும்வாதும்சாமி தொடுங்கணையால்க்கெட்டு(மடி)

சரணங்கள்.

௧. அனுக்கூலசத்துராதி-ஆகியிருந்துரா
வணன்குடியினைக் கெடுத்து-தன்னுடைய
அகத்தில்எண்ணம்எல்லாம் முடித்திலங்கையின்மேலே
ஆசை யினையும்விடுத்து-இணையில்லாரா
மனுக்குரதம்அனுப்பும்-தேவர்களையும்பக
வானையும் கடுகடுத்து-லட்சுமணனை
மடித்துவருவேன்என்று வீரம்பேசிக்கையில்
வலிய தனுவைஎடுத்து அதிகக்கடுஞ்
சினத்தினோடுபெருந் தேரைஓட்டிக்கொண்டு
சேனைகளைஎல்லாம்தன் பின்னேகூட்டிக்கொண்டு
கனத்தவில்லைவளைத்து நாணைப்பூட்டிக்கொண்டு
கணைகள்எய்துராமன் கையில்மாட்டிக்கொண்டு(ம

௨. போர்க்களத்தினில்வந்து-அட்டகாசம்செய்து
புவிஎங்கும்கிடுகி டென்ன-லட்சுமணன்மீதில்ப்
போகவிட்டிடும்தேரை-மறித்துராமன்மீதில்ப்
போகட்டும்விடுவி டென்னசாரதிஇந்தப்
பார்க்குள்ராமனைவெல்லக்-கூடாதென்றுசொல்ல
பற்களைநெடநெ டென்னவேகடித்து
பார்அடாஉன்னைவிழுங்குவேன்என்னச்சாரதி
பயந்துடல்விடுவி டென்னநடுநடுங்கி
கார்க்கடல்வண்ணன்ரா மன்மீதில்தேர்விட
கலங்காமலேமகோ தரன்நின்றபோரிட
ஆர்க்கும்சேனைராமன் அம்பினால்ப்பேர்கெட
அதம்ஆகஅவன்மார்பில் ஓர்அம்பின்கூர்பட (மடி)



௩. மாலியவான்சொல்லல்-சீதையைவிடவேசம்
மதித்தராவணன் அன்று-தடுக்கப்பெரு
வயிற்றைறச்சாய்த்துக்கொண்டு-குடுகுடென்றோடி
வஞ்சனைஎண்ணி நின்று-அதிகபல
சாலியானராவணனேமூவுலகமும்
சௌரியத் துடனேவென்று-இன்றுமணம்
தளர்ந்திந்தச்சனகியை-விடல்ஆயோபோபோஉன்
தனக்கிது சரியோஎன்றுசொல்லியேகொல்லும்
காலனைப்போல்அவன் பாலிலேஇருந்து
கழுவாக்கரைத்துநாளும் கலகம்செய்துதிரிந்து
சிலராமன்கணைக்குக் தன்சேனையைவிருந்து
செய்வித்தோர்கணையால்த்தன் பெருவயிறுஞ்சரிந்து(மடி)

---

கடைசிநாளில் ராமராவணயுத்தம்.

விருத்தம்.

திடுதிடென்ஓடிமகோ தரனும்சென்ற
சேனைகளும்சாமிகையில் மடிந்தபின்பு
முடுகிஇருவரும்தேரில் ஏறிக்கொண்டு
மூதண்டகோடிகளும் நடுங்கவிட்டே
கடுகிமலையோடுமலை எதிர்த்தாற்போல
கடலினொடுகடல்எதிர்த்தால்ப் போலவில்க்கொண்
டாடுப் இராகவனும் இராவணனும் அங்கே
அடுத்திட்டார்சண்டைசெய்யத் தொடுத்திட்டாரே. (௭௦)

௭௨. தரு-தோடிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ராகவனுக்கும்ராவணனுக்கும்-நடந்ததேசண்டை—தொடர்ந்ததே

அநுபல்லவி.

மேகத்தைப்போலவே அய்யன்கணைகள்சாட
மேலத்தைக்காணமல் வெய்யன்கணைகள்மூட
வாகொத்ததேர்மேலே இருவரும்கதித்தாரே
வானமும்பூமியும் ஒன்றாகமதித்தாரே
வானரவெள்ளம்கடல்ப்போலே களத்தைப்போய்-வளைக்கவும்
சனர்விடுட்கைச்சரத்தாலே கெலித்துப்போய்-இளைக்கவும்
வாரிவிடும்கல்ப்-பெருக்காலே அரக்கர்க்காவி-தள்ளவும்
வீரர்விடும்கைத்தடிக்குச்சூழ் குரங்குச்சேனைவிள்ளவும்

வடவையொடுபொரு வடவைஎன்கிலே
மலையினொடுபொரு மலையதெனஅலே
கடலினொடுபொரு கடல்தெனவிரி
ககனமோடுபொரு ககனம்எனஅரி (ரா)

சரணங்கள்.


க. அரக்கன்ராவணன் சிலசிலகணைஎய்தான்
அதைக்கண்டராமன் தவிடுபொடிகள்செய்தான்
அரக்கன்நூறுநூறு யிரம்அம்புதூற்றினன்
அதைக்கண்டேராமன் நொடிஒன்றில்மாற்றினன்
அரக்கன்ஆயிரம் ஆயிரம்ஆயுதம்தொட்டான்
அதைக்கண்டேராமன் தூளிகள்தூளிகள்இட்டான்
அரக்கன்தேரைஆ காசத்தில்போக்கினன்
அதுக்கும்சாமிதேர் மேலாகத்தூக்கினன்
ஆதிநெடுஞ்சேஷனும்பட்சி சனும்பொற்றா-ணிடத்தேகன
காசுரனும்-சிங்கமும்தப்பா நடுத்துப்போர்-தொடுத்தால்என
ஆனதுரங்கம்-திருப்பிக்கோல் பிடித்துத்தேர்-விடுத்தேவரும்
மாதலிசங்கம்-தொனிக்கச்சே பயப்பட்டார்-மூடித்தேவரும்
அக்கணம்இருதேரும் நடம்தத்தும்-நிலம்தத்தும்
திக்குத்திசைகளும்போய் இடம்சுற்றும்-வலம்-சுற்றும்
அப்புறம்மலைதாவும் அலைதாவும்கடல்தாவும்
இப்புறம்செவிதாவும் புவிதாவும்-செவிதாவும்
அன்றுமுனிவர் பயந்துகடகட
என்றுபதறிந டுங்கிவிடவிட
அண்டமுகடுயி ளத்துநிலைகெட
மண்டலமும்மிசை விண்டுதலைகெட
அதிரமலைகளும் அதிரநிலைகளும்
அதிரவெருதிசை அதிரமழைஇடி
அதிரஉதகிகள் அதிரமதிகதிர்
உதிரஉடுவினம் அதிரஇப்படி (ரா)

உ. வடதிசைமுதல் நாலுதிசையும்போவார்
கடலிலும்போவார் கடல்அப்புறமும்போவார்
மனதுவேகமோ வாயுவேகமோவென்ன
கனகலோகமோ கீழுலகமோஎன்ன
வருவர்ஓடுவர் கூடுவர்இருதேரும்
பொருவர்சேருவர் நேருவர்இதைஆரும்



வசனமாஉரை யார்சொல்வார்ஒருக்காலே
குசவன்ஆனவன் விடுதிரிகையைப்போலே
மாரிவழங்கும்-பிரசண்டக்கொண் டலேப்போலஇடித்தார்பல
தீவும்விசும்பும்-குலுங்கச்செஞ் சரக்காடா-மூடிந்தார்செல
மாதலிஅங்கம்-தொளைத்துப்பாய பரிக்குக்கோல்-விடுத்தான்ஒரு
சாமிநெடுந்தேர்மறைத்தங்கேது சத்தைக்கீழ்படுத்தான்அவன்
வளையராகவன்தேரை கிருதன்மூடலாலே
இளையவன்முதல்ஆனோர் களையானார்அதன்மேலே
மணவாளராகவன் பனிபோலஅறுத்தானே
கணைஎல்லாம்அறுத்தவன் கொடியையும்அறுத்தானே
மால்ஒத்தவன்படை மாரிபெய்திட
சூலப்படைகொடு சுவாமிகொய்திட
வன்னிவாளியை அவன்விடுத்திட
அன்னமேதகொடு சாமிதடுத்திட
மாயன்படை அரக்கன்தொடுக்கவும்
சாமிதந்தரு வாஸ்திரம்எடுக்கவும்
நாகலோகமும் புவியும்பொடிப்பொடி
ஆகவேகள மீதில்அடிக்கடி (ரா)

சாமிமேல்ஒரு தெண்டவன்விடுத்திட
சாமிஓர்அம்பு கொண்டதைத்தடுத்திட
சாமிமேல்அவன் மாயாஸ்திரம்போட
சாமிதான்ஞானஸ் திரம்தொடுத்ததைச்சாட
சாமிமேல்சூலப் அவன்விடச்சினங்கொண்டு
சாமிஅங்காரர் செய்ததுவிழக்கண்டு
சாமிமூவரும் இவன்என்னும்வ்வகாரம்
தம்பிசொன்னதை நினைந்தென்னஅங்கோரம்
தாகருடன்செஞ்சரத்தைக் கைப்பிடித்துச்சாமிதொட்டேஅவன்
நாகம்எனும்அஞ்சரத்தைக் கொத்தவிட்டுத்தூளியிட்டான்ஒரு
சாமிநிரூபத்தொடுத்துப் பொற்பிறைக்கொக்கும்சரத்தால்வரு
வணன்சென்னைத்-தொளைத்தொற்றைச்சிரத்தைத்துண்டம்இட்டான்பின்
தறிபடுசிரகாம் அவனுக்குமுளைத்திட
சரிசரிஅரியவே வரவரக்கிளைத்திட
தறிபடுகையல்மா தவிமார்பைக்கலக்கினன்
அவன்விடுதோமரத் தையும்அய்யன்விலக்கினன்
தயித்தியனசீ ரம்நிறைந்திட
மயிர்க்கோர்அப்பத ஆய்மறைந்திட





சலித்தவன்களை ஐய்விழுந்திட
உணர்ச்சிகொண்டிட மேளைழுந்திட
சாழும்விடுவிடு படையும்பொடிபட
சகலாதகச தளமும்அடிபட
இருவர்மனதிலும் வளாமுதுபகை
பமனும்உடல்விட விடெனஇவ்வகை (ராகவ)

எடுத்தாவணன் வளைத்தகைச்சிலைதன்னை
ஒடித்தும்காணியை அறுத்தும்இப்படிபின்னை
இடக்கையோடவன் வலக்கையும்விழஎன்று
துடித்தாராகவன் முடிக்கிறேன்கணைஒன்று
இழுத்துத்தேர்ஒரு பரியும்பாகனும்சாக
அழுத்தத்தாணியும் குடையும்படையும்போக
எதிர்த்தாாவணன் ஒருபதுமுடிமேலே
பதைத்துமாமலை யினில்விழும் இடிபோலே
ராமன்விடுபசெஞ்சரத்தில்க் கொத்துடைப்பத்துப்-பனங்காய்என
காய்கரிமண்டிக்கடிக்கக்கொக்கரித்துச் சுற்றிலும்போல்விழ
ராகவன் இப்படி தொடுத்தாக்கத் தரிக்கத்தரிக்கத்தலை
ராவணனுக்குச்-சிரிக்கட்டிக் சிரிக்கட்டிக்கிளைத்துக்கொள்ள
இப்புறம்ராமன் அரக்கன் மாளும்வகைஎன்ன
அப்புறம்விபீஷணன் உபாயமுறையன்ன
லட்சுமிசீதையுர்காவல் கொண்டசிறைதீர
தட்சிணாசூரியன் தேரும் லங்கைவழிசேர
இணங்கிடுகர தனடமனுபதி
வணங்கிடுமகோ தண்டநடுவதில்
இட்டுகைப்பிரம மாஸ்திரம்தனை
விட்டிடத்தனி ராட்சதன்புனை
த்தினமணிமரு மத்தின் இடையிட்டு
வைத்தஅமுர்த கடத்தில்அடிபட்டு
மத்தன்விசிகிற சித்திரதப்விட்டும்
பத்துமணிமுடி தத்திவிழும்மட்டும்

## ஸ்ரீராமபாணத்தால் இராவணன் இறந்தது.

### விருத்தம்.

துாவிமுடிக்க-பிலாசம்எடுத்திரு-நாலுமதக்கரி-யைச்சாடி
சூரியனைத்திசை-மாறவிடுத்தொரு-சூறையடித்த-மிடுக்காலே
பூவுலகத்தவர்-கீழுலகத்தவர்-மேலுலகத்தவர்-தப்பாதே
பூசைசெலுத்திட-ஆண்மைசெலுத்துபு-யாசலமிக்கத-சக்கிரீவன்

ஆவல்மிகத்தொரு-சீதைபொருட்டிகளில்-வீரமும்வெற்றியு-மூக்சோடி
ஆயுசும்மட்டி-டொணுத அரக்கரும்-ஆடலும்லக்க-விடுத்தேபின்
யாவரும் இக்கதை-ஆரமுகொப்பென-வேதினம்உத்தமர்-கற்றோத
ராமசரத்தினில்-பாமலைஒத்த-இராவணனிப்படி-பட்டானே. (௧௭)

## அண்ணன் இறந்ததற்காக விபீஷணர் புலம்பல்.

### விருத்தம்.

நிருதன்இவ்வாறழிந்தபின்பு சாமிதேரில்
நின்றிறங்கிஇவன்முதுகில் வடுவேதென்றான்
வரும்முதல்நாள்அனுமான்கைக் குத்தால்வந்த
வடுஎனவிபீடணன்சொல்ல மகிழ்ந்தான் இப்பால்
அருளும்அய்யன்ஏவலினால் இவனும்போனன்
அண்ணா அண்ணாஎன்றே அண்ணன்மேலே
ஒருமலைமேல்ஒருமலைபோல் வீழ்ந்தேகண்ணீர்
ஒழுகின்றான்பழமைசொல்லி அழுகின்றானே. (௧௮)

௧௪. திபதை-ஆகிரிராகம்-அடதாளசாப்பு.

### கண்ணிகள்.

௧. உண்டால்க்கொல்லும்விஷம் உலகத்தில்எங்கெங்கும்
உண்டே அண்ணாவே-சீதைஎன்று
கண்டால்க்கொல்லும்விஷம் உன்னிடத்திலேமாத்திரம்
கண்டேன் அண்ணாவே

௨. இந்தஅநியாயத்தை-பிரம்மாஉடன்சொல்ல
இறந்தாயே அண்ணாவே-சீதைமேலே
பந்தித்தஆசையும்-உயிரோடேகொண்டு
பறந்தாயோ அண்ணாவே

௩. உள்ளதோசீதையைத்-திருடுவதென்றஎன்னை
ஓட்டினாய் அண்ணாவே-உலகிலே
கள்ளனுக்குக்கூ-ஊண்ணவன்மேல்பழமைபோலக்
காட்டினாய் அண்ணாவே

௪. அடிநாளைச்சாபத்தீடு-சீதையாய்வந்ததென்றேன்
அலைந்தாயே அண்ணாவே-உடம்பெங்கும்
சுடுகிறசெங்வணலை-மடியினிலேகட்டித்
தொலைந்தாயே அண்ணாவே



௫. நினையாதேசீதையைகுலையும்வாழ்வென்றஎன்சொல்
நிறைந்ததோ அண்ணாவே-ராமனை
மனிதன்மனிதன்என்றவாயும்துடுக்கும்எங்கே
மறைந்ததோ அண்ணாவே

௬. வள்ளல்கும்பகர்னனும் மாலியவான்சொல்லியும்
மருண்டாயே அண்ணாவே-அடங்காமல்
துள்ளினமாடுபொதிசுமக்காது என்றால்ப்போல்பட்டுச்
சுருண்டாயே அண்ணாவே

௭. சுற்றமும்சேனையும்உன் பத்துமுடியும்முதல்நாள்
சோர்ந்தாயே அண்ணாவே-எல்லாரும்
செத்தபிறகாகிலும் ராமனேதெய்வம்என்று
தேர்ந்தாயே அண்ணாவே

௮. பரந்தகயிலாசமும்உன்னுடைத்தோளுக்குப்
பற்றுமோ அண்ணாவே-தோள்மேலே
சுரந்துகுரங்குக்கூட்டம்இப்போதணிஅணியாத்
தொத்துமோ அண்ணாவே

௯. விரிந்ததேவர்க்கெல்லாம்கடைக்கண்கொடாமல்வெடு
வெடுத்தாயே அண்ணாவே-களத்திலே
பருந்தும்கழுகும்கொத்த முழுமுழுக்கண்கொடுத்துப்
படுத்தாயே அண்ணாவே

௧௦. பூமலர்அம்புகளைக் காமன்கைஎய்தெய்து
பொழிந்ததே அண்ணாவே-இப்போதிந்த
ராமன்எய்தபிறகு காமன்எய்கிறதெல்லாம்
இழிந்ததே அண்ணாவே

௧௧. சிறுமதிகொண்டல்லவோ மறுபெண்கள்மேலாசை
திரண்டாயே அண்ணாவே அவரவர்
பொறுமைஇடித்தல்லவோ மண்எனகிறபெண்மேலே
புரண்டாயே அண்ணாவே

௧௨. பிரமாதிதேவர்கள் தந்தவரங்கள்எங்கே
பிரிந்ததோ அண்ணாவே-இன்றைக்கெம
தருமராசனுக்கும் உன்னைத்தின்றதொங்கி
சரிந்ததோ அண்ணாவே

## மண்டோதரி புலம்பல்.

### விருத்தம்.

காடிவிபீஷணன் இவ்வாறழுதபோது
நல்லசாம்புவன்தேற்றத் தெளிந்தான் இப்பால்
பாடல்செய்யும்மடமாதர் அரக்கர்மாதர்
பாதாளமாதர்முதல்ப் பலரும்சேர்ந்து
கூடமண்டோதரிஅங்கே கொள்கொம்பில்லாக்
கொடிபோலராவணன்பேர் உடல்பேல்வீழ்ந்து
தேடரியதுணை இழந்த கிளிபோல்வாயைத்
திறக்கின்றாள் அழுதழுது பறக்கின்றாளே. (௬௬)

கரு: திபதை-காம்போதிராகம்-ஆதிதாளம்.

### கண்ணிகள்.

௧. என்னசெய்வேன் என்னசெய்வேன் மைந்நாகமலைபோல்உன்னை
இங்கேகண்டுநொந்தேன் நொந்தேன் லங்கைமன்னவா அய்யோ
உன்உயிரைக்கொன்றநமன் என்உயிரும்கைக்கொள்ளானோ
ஓடிஇதோவந்தேன்வந்தேன் லங்கைமன்னவா

௨. கண்ஆனபேர்களை எல்லாம்புண்ஆக்கி வீடணன் என்னும்
கரும்பையும்வேம்பாக்கிவிட்டாய் லங்கைமன்னவா-அய்யோ
பெண்ஆனசீதைபிறக்க லங்கைஅழிந்துபோம்என்ற
பேச்சையேமெய்ஆக்கிவிட்டாய் லங்கைமன்னவா

௩. தினம் இந்தலோகத்திலே நீதேவராலும்சாகாய்என்று
சிந்தைமகிழ்ச்சிஆனேனே லங்கைமன்னவா-அய்யோ
வினைபோல்இந்நாளில்ஒரு மனிதனாலேசாவாய்என்ற
விதிஅறியாமல்ப்போனேனே லங்கைமன்னவா

௪. சீதைஆசையைவெளியில் ஓதாமல்அடக்கிக்கொண்டு
செருக்களத்தில்த்தூங்கிறாயோ லங்கைமன்னவா-அய்யோ
ஏதையாசொர்க்கலோகத்து மாதருக்குள்உனக்கேற்ற
எந்தப்பெண்ணைக்காண்கிறாயோ லங்கைமன்னவா

௫. எட்டானைக்கொம்பும்பிடுங்க ஒட்டாமல் கெட்டியாக்கட்டி
இருக்கிறமணிமார்பாச்சே லங்கைமன்னவா-அய்யோ
சட்டம்ஆகராமன் அம்பு பட்டாடைமேல்ஊசிப்போலத்
தட்டாமல்உருவிப்போச்சே லங்கைமன்னவா

௬. ஊரிலேசீதைமேல்வைத்த ஆசைஇந்தமட்டும்எங்கே
ஒளித்திருந்துவாதிச்சதோ லங்கைமன்னவா-ரகு



வீரன்பாணம்உன்உடம்பை- எலிவெட்டிசோதிக்கிறாற்போல்
வெட்டிஇன்றுசோதிச்சதோ லங்கைமன்னவா

௭. அனர்த்தமாவிளையும்அய்யோ-நினைக்காதேசீதையைஎன்றேன்
அன்றுகேளாமல்லைதாயே லங்கைமன்னவாநான்
உனக்குமுந்திக்கொள்ளாதமுன்-எனக்குநீமுந்திக்கொண்டாயே
ஓரவஞ்சகம்செய்தாயே லங்கைமன்னவா

௮. நங்கைசூர்ப்பநகிசனகன்-நங்கையைஎடுக்கச்சொல்லி
நமன்போல்வந்துநின்றாளே லங்கைமன்னவா-அய்யோ
என்கழுத்தும்பாவிஅவள்-தன்கழுத்தைப்போலே ஆக்க
எண்ணியேஉன்னைக்கொன்றாளே லங்கைமன்னவா

௯. அந்தம்ஆம்சீதையைஆரும்-வந்தனைசெய்யும்தெய்வத்தை
ஆரோபோல்ஆசைப்பட்டாயே லங்கைமன்னவா-அய்யோ
இந்தமரத்தைவெட்டினால்-இந்த இடத்தில்ச்சாயும்என்
றெண்ணாமல்ப்புத்திகெட்டாயே லங்கைமன்னவா

௧௦. வேதன்முதலோர்வரப்பிரசா-தத்தால்மூவுலகுக்கும்
வேந்தன்எனவாழ்ந்திட்டாயே லங்கைமன்னவா-அய்யோ
சீதைஆம்பிணைவிடுத்து-வாழ்வாம்பாற்கடல்கெடுத்து
தெருவிலேஎன்னைவிட்டாயே லங்கைமன்னவா

---

## சீதாதேவிக்கு அனுமார் செயசெய்தி கூறல்.

### விருத்தம்.

ஆனவள்இவ்வாறழுது கணவற்புல்லி
ஆவிவிட்டாள்அவர்கடன் வீடணன்கழித்தான்
வானரவேந்தனும்தம்பி தானும்செம்பொன்
மௌலிவைக்கஇலங்கை அபிஷேகம்கொண்டான்
மானவனும்மாருதியை ஏவத்தான்போய்
வாடியதோர்பயிர்க்குமழை பொழிந்தால்ப்போலச்
சானகிதன்காதில்இரா வணன்போய்வீழ்ந்த
தனம்சொல்வான்மகிழ்ந்து சோபனம்சொல்வானே (௧௦௦)

௮௧. தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

### பல்லவி.

சோபனம்சொல்லவந்தேன்-உன்தன்தொண்டன்அனுமந்தன்

அநுபல்லவி.

சோபனம்சானகித்தாயே முந்தமுந்த
சுவாமிராமகாரியமேசெயம் அந்த(சோப)

சரணங்கள்.

௧. ராமசாமிவிடும்ஒருகணைபட்டு ராவணன்உயிர்விட்டு-ஒரு
மாமலைபோல்த்தரைமேல்வீழ்ந்தானேவைகுந்தம்சேர்ந்தானே-இந்த ()

௨. தேவர்முனிவர்சிறைநீங்கிமுன்போலேசெழிப்பாஉன்னாலேபொல்லா
பாவிஅரக்கன்பயங்காம்விண்டாரே-பதவிகள்கொண்டாரே-இந்த ()

௩. இங்கேமுன்மோதிரம்தந்தநானேஇருஎன்றுசொன்னேனேஇப்போ
தங்கேஎழுந்தருள்எம்மானே-அனுக்கிரகம்செய்தானே-இந்த (சோ)

௪. சந்திரன்இந்திரன்தேவர்க்குஸ்தாபனம் சகலர்க்கும்சோபனம்அம்மா
இந்தஅரக்கியரைநான்கொல்லவேணும்எனக்கிது சோபனம்காணும்
இந்த (சோபனம்)

## சீதாதேவி அனுமாரை உபசரித்தல்.

விருத்தம்.

தனம்மலர்ந்த ராமதூதவன் இதுசோபனம் சொல்லக் காதில்க் கொண்டாள், தினம்மலர்ந்த சாமி திருவடிமலரைத் திசைநோக்கித் தெண்டனிட்டாள், தனம்மலர்ந்தாள் அகமலர்ந்தாள் முகம்மலர்ந்தாள் என்அன்னை சனகிமுன்னாள், மனம்மலர்ந்த குறைஎல்லாம்மாற்றினாள் அனுமானை வாழ்த்தினாளே. (௪0௧)

௮௨. தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

எந்நாளும் வாழிநீதானே என்தெய்வம்
உன்னைப்போல்உண்டோ அனுமானே

அநுபல்லவி.

தென்இலங்கைஅரக்கன் தன்னைப்பட்சித்தாயே
பின்னைமங்களம்சொல்லி என்னைரட்சித்தாயே(எந்நாளு)

சரணங்கள்.

௧. இருக்கும்சிறைமீட்பேன்என்ற வாக்கியம்என்முன்
உரைத்தபடிசெய்தாயேஎன் பாக்கியம்-அப்பாஉன்
கருத்தில்நீபிடித்ததேவை ராக்கியம்-உனக்குப்
பெருத்தமூஉலகும் கொடுத்தென்னசிலாக்கியம்
சிரத்தினால்வணக்கம் செய்வதேயோக்கியம்(எந்)



மனதினில்அடங்கா விசாரம்-நீக்கி
எனக்கிதுநீதந்த சரீரம்-அய்யா
இனிச்சொல்வதென்ன உபசாரம்-அங்கே
தனித்தசாமிக்கும் செய்தாயேஆதாரம்
உனக்குநானென்ன செய்வேன்உபகாரம்(எந்நாளு)

௩. இதம்ஆம்என்சொல்ஒன்றும் தடாதே-கோபம்
இவ்அரக்கியர்மேல் படாதேஇன்னம்
உதவிசெய்யும்செய்கை விடாதே-வரங்கள்
எதுவும்தக்கதேன்னீ இளப்பப்படாதே
முதல்வர்மூவருக்கும் முதுகுகொடாதே(எந்நாளு)

## சீதாதேவி அக்கினியில் குளித்து எழுந்தது.

விருத்தம்.

சேவிக்கசடப்சொல்அனுமானைத் தேவிஇவ்வாழிகள்சொன்னாள்
திரவிபீஷணனும்சென்றான் திருச்சேவைக்குச்சமயம்என்றான்
புவிக்கோர்தாயேவருகஎன்றான் பூவைபழங்கோலம்கொண்டாள்
பூவாகனமேல்ச்சென்றையன்புணைதாள் அம்மைபணிந்துநின்றாள்
தவத்தோர்க்கருளும்ராமன் தனதுகுறிப்புவேறாச்
சாமிஅடியேன்செய்தபிழை சகிப்பாயென்றாள்தலைமேல்க்கை
குவித்தாள்முக்கால்வலம்வந்தாள் கொழுந்தன்வளர்த்தசெழுந்தணலில்க்
குதித்தாள்அப்போதெழுந்தம்ருக் கொழுந்தாய்சீதைஎழுந்தாளே.

௮௩. தரு-பிலஹரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

எழுந்தாளே பூங்கோதை எழுந்தாளேசீதை


அநுபல்லவி.

கொழுந்துபோல்ஒளிமுங்கி குளிர்ந்தசெந்தணல்நீங்கி(எழுந்)

சரணங்கள்.

௧. புரந்தரன்இந்திராணி பூமேல்ஆரணன்வாணி
பூதேசன்சர்வாணி
அருந்தவன்உன்கூட அருந்ததியும்கொண்டாட
அமரர்சோபனம்பாட பூமலர்போட(எழு)

௨. திருமேனிதன்னில் வன்னசெழுமஞ்சள்ஒளிமின்ன
திசைஎங்கும்பளபளென்ன





தருமம்புகழ்ந்துதள்ள    தழைக்குர் எழுபதுவெள்ள
சகலசேனையும்பெள்ள    கவலைதள்ள (எழு)

௩. மலரடிகசங்காமல்    மணிக்கூறைமசங்காமல்
மாலைவண்ட    சங்காமல்
கலவைசரம்வாங்காமல்    கனிவாய்நகைநீங்காமல்
கண்டோர்களேங்காமல்    சுந்தனம்தாங்காமல் (எழு)

௪. குங்குமம்புலராமல்    குழல்மேல்மைமலராமல்
கூந்தல்ப்பூ    உலராமல்
அங்கோராமன்முன்னாலே    அக்கினிதேவன்கைமேலே
அலர்ந்ததாமரைப்போலே    மின்னலைப்போலே (எழு)

---

## அக்கினிபகவான் முறையிடல்.

### விருத்தம்.

எழுந்ததோர்சீதைதன்னை ஏந்தியஅக்கினிதேவன்
செழுந்துழாய்மாலைராமன் திருமுன்னைவைத்துவிழ்ந்தான்
புழுங்கினேன்சாமிஇந்தப் பூவைகற்பென்னும்தியால்
அழுங்கினேனெனத்தன்வாய்மேல் அறையிட்டான்முறையிட்டானே.

௮௪. தரு-பியாகடைராகம்-ஆதிதாளம்.

### பல்லவி.

என்னபிழைகள்செய்தேன்சாமி-நான் அக்கினிதேவன்
ஏதுபிழைகள் செய்தேன்சாமி

### அநுபல்லவி.

பண்ணிச்சீதைதன்னை    என்னில்இடுவித்தாயே
பதிவிரதாக்கினியாலே    என்னைச்சுடுவித்தாயே (எ)

### சரணங்கள்.

௧. ஏதொருபொருளையும்    சுடுவதெனதுசென்மம்
என்னையும்சுட்டதிந்த    அன்னைபத்தினிதன்மம்
வேதத்திலும்எனை அல்    லால்உண்டோஒருகன்மம்
மெய்பொய்விளங்குமென்மேல்    செய்யல்ஆமோவன்மம் (எ)

௨. பாலும்பதக்குமோ நம்    பதக்கென்றெண்ணப்போமோ
பைந்தொடிசீதைக்கிணை    எந்தப்பெண்கள்தாமோ
நாலும்தெரிந்தும்இந்தக்    கோலம்செய்யல்ஆமோ
நங்கைஇவளாலேஎன்    அங்கம்இப்படிவேமோ (எ)

௩. நீதிஅனுமான்சொன்ன சேதிக்கும்உண்டோலோபம்
நினைப்பறிந்தும்சோதித்தாய் உனக்கிதில்என்னலாபம்
சோதிஅருந்ததிக்கும் சீதைக்குண்டுபிரதாபம்
சொன்னேன்சத்தியம் இதற்கென்மேல்என்னகோபம்(எ)

---

## ஸ்ரீ ராமர் சீதாதேவியை அங்கீகரித்தல்.

கலித்துறை.

பாட்சிஇவ்வாறுசொல்ல அக்கினிதேவனைவள்ளல்கண்டான்
சாட்சிஎல்லாருக்கும்நீயே சனகிக்கும்சத்தியம்சொன்னாய்
மீட்சிசெய்வாய் என்றுவிட்டான் அப்போதுமிதிலைவல்லி
காட்சிசெய்ராகவன்முன்னே இருந்துகளித்தனளே. (௧௭௪)

---

## பிரம்மதேவர் ஸ்ரீராமரைத் தோத்திரஞ்செய்தல்.

விருத்தம்.

அனம்போல்இவ்வாறெழுந்தாளை அருளால்நோக்கிராகவனும்
கனம்சேர்கென்றான் சனகிதனம்கண்டுதுதித்தான்பிரமாவும்
நினைந்தான்சாமிநின்மகிமைநீயே அறிவாய்சீதையின்மேல்
சினந்தான்ஏதென்றவள்பெருமை தெரிப்பான்புகழ்ந்துவிரிப்பானே.

௧௫. திபதை-பூபாளராகம் அடதாளசாப்பு

கண்ணிகள்.

௧. பாராபாரவி குலராமாபுச
பலராமாகோ சலராமா
சாராமாமணே காராமாசௌந்
தாராமா ஆ பிரகாமா-ராமராமா

௨. பள்ளமாயைஇதற் குள்ளேபுகுந்தெவர்க்கும்
பரமபதந்தருவாய் என்கோவே
கள்ளனும்ஆய்நின் றவிளக்கும்பிடிக்கிறாய்உன்
கபட்டை ஆர்அறிவார்என் கர்த்தாவே-ராமராமா

௩. முக்காடிட்டபிள்ளை முன்னின்றபிள்ளை அல்லால்
முதல்க்குட்டினபிள்ளையை அறியாதே
இக்காரியம்போல ஒன்றைஒன்றெதிர்காட்டி
இடைநின்றஉனைக்காண்ப தெப்போதே-ராமராமா

௪. நீதியாகாலாறு பேருக்குள்ஒருவனை
நீக்கியருளும்வித்தை பூண்டாயே



ஆதிமூலம்என்ற நாதத்தில்பதம்வைக்க
ஆனைக்குமுன்னேவந் தாண்டாயோ-ராமராமா

௫. கயிற்றைப்பாம்பென்றெண்ணிக் கலங்கும்வண்ணம்ஒரு
கருக்கல்உண்டாகிய வகைபோலே
மயக்கத்திலேநாங்கள் மயங்கும்வண்ணம்இந்த
மய்க்கம்காட்டல்ஆமோ நெடுமாலே-ராமராமா

௬. ஞாலம்தண்ணீர்அன்னல் வளிவெளிஇவற்றைந்து
நாலுமூன்றிரண்டொன்றும் அதிகாரா
கோலம்மானிடம்காட்டிஆளுக்குள்ளே ஆளாய்
குறுகுறுக்கிறதென்ன ரகுவீரா-ராமராமா

௭. மாயைதனைப்படைப்பாய் மாயையும்துடைப்பாய் உன்
வல்லமைஅறியா தல்லோபூமி
மாயைக்குள்திரும்பவும் மயக்கம்காட்டினால்உன்
மகிமையைஅறிவ தெப்படிசாமி-ராமராமா

௮. நீயும்சீதையும்பெற்ற தாயும்தந்தையும்என்றே
நினைக்கிறோம்நாங்கள் சதாகாலம்
தாய்இவள்மகிமையைப் புவிக்குக்காட்டவேண்டிச்
சாமிநீசெய்தாயோ இக்கோலம்-ராமராமா

௯. கனிவினாலேஎந்தஉயிரும்உயிருக்குள்ள
கருத்தும்நீதெரிவாயே பெரியோனே
சனகிகருத்துமாத்திரம்தெரியாதுபோலஇந்திர
சாலம்செய்யல்ஆமோ நீதானே-ராமராமா

௧0. அக்கினியையும்சுடும் அக்கினிசீதைஎன்
றக்கினிஅறிந்ததே இவள்சூட்சி
இக்கோலம்ராவணன் தீண்டாமல்நிலத்தோடே
எடுத்தானேஇதைவிட என்சாட்சி-ராமராமா

௧௧. தீயையும்பிழைசொன்ன வாயையும்வடவைச்செந்
தீயையும்சுடும்இவள் பிரதாபம்
வாய்புளித்ததோமாங்காப் புளித்ததோஎன்று
மனத்திலெண்ணினாலும் வெகுபாபம்-ராமராமா

௧௨. எள்ளுக்குள்எண்ணெய்போல்இருக்கிறநீசீதை
இடத்தில்இருக்கலையோ பர்த்தாவே
உள்ளக்கருத்தைவள்ளல்அறியும்என்றவார்த்தை
உனைஅல்லவோசொல்லாய் கர்த்தாவே-ராமராமா

௧௩. எதிர் அரக்கரைக்கொன்றாய் பதியில் எங்களை வைத்தாய்
இந்தத்தபவனக்கெங்கே போச்சோ
மிதிலைவல்லியைஇங்கே சோதித்தாய்எங்களை
விருந்திட்டுப்பகைநாண மனதாச்சோ-ராமராமா

௧௪. இழக்காகியபொன்னைப் புடத்தில்வைத்தெடுப்பார்கள்
இவளுக்குண்டோசொல்லாய் விதியாசம்
அழுக்கில்லாத்தங்கத்தைப் புடைத்தில்வைத்தெடுத்தாயே
அய்யாஉனக்கும்உண்டோ மதிமோசம்-ராமராமா

---

## மக்களையும் மருமகளையும் சக்கிரவர்த்தி புகழ்தல்.

விருத்தம்.

ஆரதபிரமன் இவ்வாறுரைக்கத்தேவர்
அநுமதியால்த்தசரதன் தேர் நிலமேல்க்கொண்டான்
காராரும்குழலச்சீதைக் குபசரித்தான்
கற்பகமேவாழிஎன்றான் இளையோன்தன்னைச்
சேராமல்அண்ணன்தாள்ப் புண்ணாய் இந்திரன்
தோள்ப்புண்ணாய் தடைத்தனையே என்றான்கண்ட
மாராபிராமனைத்தன் மார்பில்க்கட்டி
மகிழுவான் அவன்குலத்தைப் புகழுவானே. (௧௦௭)

௮௫. தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அய்யனேஇன்றுன்னைக்கண்டேன் ஆனந்தம்கொண்டேன்

அநுபல்லவி.

வையம் ஆள் தசரதன் ஆம் என்னை-மலடுநீக்கிவிட்டபின்னை
வானவருக்கும்அந்தநான்முகனுக்கும்எட்டா
மாயவன்உலகத்திலேஇரண்டென்னைவைத்த (அய்யனே)

சரணங்கள்.

௧. மல்லிகைப்பூமிதித்தாலும் வருந்தும்உன்தன்தாளிலே
வனத்தில்உள்ளகல்லும்முள்ளும் பொறுத்ததோஇந்தநாளிலே
எல்லாரும்காணக்கைகேசி சண்டாளிஎன்தோளிலே
இருந்துசெவியைக்கடித்தாற்போல் உனைப்பிரிந்தாளே ஒருநாளிலே
செல்லும்தரித்திரனுக்குத் திரவியம்கண்டெடுத்தாற்போல்
சென்மக்குருடனுக்குத் தெய்வம்கண்கொடுத்தாற்போல் (அய்யனே)



௨. கைகேசிசொல்லம்புக்காயம் கொஞ்சத்திலேமாறுமோ
* கட்டிக்கொண்டாலின்றல்லாப் பின்னைஒன்றால்ஆறுமோ
அய்யாஉன்வாய்முத்தம்போல் அமுர்தமும்சுவையூறுமோ
ஆர்முகம்உன்முகம்போல் ஆகுமோமணம்தேறுமோ
கையும்மெய்யும் என்தன் கண்கள்பெரித்தது
கண்கள்படைத்தபலன் இன்றல்லோபித்தது (அய்)

௩. மாதனையும்கூட்டிக்கொள்ள வேலுனேபோஉற்றரிமைக்கு
பாருள்ளோர்உனக்கொப்பாரோஎன் அப்பாஉன்தன்அருமைக்கு
தருவம்ஆர் அருந்ததிகூட நிகரோசீதைபெருமைக்கு
சோதிக்கவேணுமோஎன்ன சொல்வேன்உன்தன்ஒருமைக்கு
திருக்கண்டகண்ணுக்குத் தீங்குண்டோமென்மேலே
தேவாதிதேவர்க்கும் சிறந்தனைஉன்னாலே (அய்)

---

## அநுமார் வசந்தனைக்கொண்டுவருதல்.

விருத்தம்.

முடிபுனையும்தசரதன்உரைஇங்கிதமுழுதும்மொழிந்திடனே
முதல்வர்வரம்தனில் அனைவர்களும்முழுமுறைமையில்எழுந்தபினே
இடர்பெருகும்பாதனை அருநெம்பலி வடதிசைப்புஷ்பகம்மேல்
ரகுபதிசனகியும்ஒருதம்பியும் எவருமநிறைந்திடும்முன்
மடியும்வசந்தனைஒருமிப்பிக்கொடு வருகென எம்பெருமான்
வரைநிருபதம்தனை முடிமிசைகொண்டொருமறலியன் மண்டலமும்
அடுகளிறிந்திரன்உறைதரும்மண்டலம் அயன்உறைமண்டலமும்
அதிரதிரும்படிவிசைஅமைந்தன் அவ்வளவில்கிளம்பினனே (௧௦௮)

௮௬. தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

தாவிஅநுமந்தன்பாய்ந்தானே-வசந்தனை-ராம
சாமிமுன்கொண்டோடி பாய்ந்தானே

அநுபல்லவி.

காவல்வசந்தனைமுன்போலே- காட்டென்றுசெங்கைஒலே
காகுத்தன்எழுதிட எமபுரதிசைகண்டு
வேகத்துடனே அசைச கொடியினில்விசைகொண்டு (தா)

---

* இதை இரட்டித்துப் பாடுகையில் 'உன்னை' என்று முதலிலே கூட்டிக்கொள்க.

சரணங்கள்.

௧. துருவினமலோகத்தை வாட்டி வசந்தன் இல்லாமல்
சொல்லிஅரிகரிஎன்றுபா ராட்டி காதில்விழுந்த
நரகவாசரைஅப்பால் ஓட்டி காட்டடாஎன்று
நமனைவாயில்ச்சுருக்கி மாட்டி எங்கெங்கும்தேடி
கருடவேகமொடு கந்தர்வலோகமும்
இருகண்ணும்சிமிட்டாமுன் இந்திரலோகமும்(தாவி)

௨. ஐந்தாருநீழல்எங்கும் தேடி பயந்துவந்த
அந்தத்தேவரோடுரை யாடி சொற்கலோகத்தில்
சந்தேகம்உண்டென்றதை நாடி அந்தலோகத்தில்
சற்றுநேரத்திலேபோய்க் கூடி அதற்கப்புறம்
பந்துபோல்எழும்பிய பனைத்தவால்பெருக்கி
அந்தகனுடனே இந்திரனையும்சுருக்கி(தாவி)

௩. கவலையாபிரம்மலோகம் நோக்கி வசந்தனை இங்கே
காட்டென்றுபிரம்மாவுடன்தாக்கி இந்திரன்எமனை
டவனையும்வாலில்க்கட்டித் தூக்கி சரசரென்ன
அந்தஉலகைவிட்டுப் போக்கி மிகவும்நல்ல
தவமிருந்தபெருந் சத்தியமுனிவர்கிட்டும்
சிவாமுத்திதரும் விஷ்ணுபதவிமட்டும்(தாவி)

## ஸ்ரீராமர் சீதைக்கு லங்கையில் பலர்பட்ட இடங்களைக் காட்டுதல்,

விருத்தம்.

ஓசையுடன் அனுமான் இந்தவாறு வசந்தனைத்தந்தான் உடனே கொண்டார், ஆகமிது மிக்களித்தார் வானரர்கள் மானிடர்கள் ஆனார் இப்பால், வகைபெறு தம்பியுந்தானும் படையும்புஷ்பகமேல் மகிழ்ந்த ராமன், தோகையெனும்சீதையுடன் சொல்லுவான் இவை இவைகள் சொல்லுவானே.

௧௩. திபதை-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு

கண்ணிகள்.

௧. கன்னிகையே அந்த சனகன்வேள் விபில்வந்த
கற்புள்ள மடமானே
அன்றமிர்தத்தில்இந்த தென்னிலங்கைபோனதை
உற்றுப்பார் நீதானே



387

௨. வடிகணை ஒன்றாலேநான் ராவணன்உயிர்கொண்ட
வடக்குவாசலைப் பாராய்
கெடிபெரும்நீலன் அந்த பிரகஸ்தன்உயிர்பறித்த
கிழக்குவாசலைப் பாராய்

௩. தீரன் அங்கதன் அந்த வச்சிரதந்தனைக்கொன்ற
தெற்குவாசலைப் பாராய்
வீரன் உன்மைத்துனன் இந்திரசித்தனைக்கொன்ற
மேற்குவாசலைப் பாராய்

௪. உறுதிசேர்கும்பகர்னன் அதிகாயன்முதல்ஆனோர்
உருண்டகளத்தைப் பாராய்
பிறகுமூலபலங்கள் கால்மாடுதலைமாடாய்ப்
பிரண்டகளத்தைப் பாராய்

௫. அடுபோரில்நமைக்காத்த அனுமான் அகம்பனை அன்
றடுசளத்தைப் பாராய்
படுபாவி ஆம்மகோதரன் என்கையில்ப்பட்ட
படுகளத்தைப் பாராய்

௬, வடிவானபாண்டம்கொட்டித்தட்டிச்செப்புக்குச
வனுக்குப்பலநாள் வேலை
தடிகாறனுக்கரை கூணப்போல்அரக்கர்என்றால்
சமைந்ததைப்பார்கண் ணாலே


௭. இந்திரசந்திரசூரியர் எட்டிப்பார்க்கக்கூடாத
எழுமதில்கள் பாராய்
அந்தஆம்பாதாள லோகத்தின்கீழும்போம்
அழிகள்இதை பாராய்

௮. சுக்கிரீவன் தங்கிநின்று ராவணன்மேல்பாய்ந்த
சுவேலமலையைப் பாராய்
இக்கடல்ச்சேனைபட்ட ரத்தக்கடலைக்கொண்ட
இந்தக்கடலைப் பாராய்

## ஸ்ரீராமர் சீதைக்குச் சேதுவைக்காட்டி அதின்மகிமை கூறல்.

விருத்தம்.

திறமென்றகூந்தலச்சானகியே பின்னை அனுமான்கண்டுவந்த
பிரசுகளிகள்லநளனல் பொருக்கச்செய்யம்பேர் அணைபாராய்.





உறுதிஆகஇதன்மகிமை உரைக்கமுடியாதானலும்
சிறிதுமொழிவேனென்ராமன்சொல்வானெடுத்துச்சொல்வானே.(௪0௯)

அஎ தரு-மோகனராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

இந்தசேதுவைகண்டால்ப்போமே சனகன்பெண்ணே இகபரசித்திஆமே

அநுபல்லவி.

சந்ததமும்மனதினில்ப்பிரியாதேசகலபத்னிகளுந்தொழவரும்மாதே ()

சரணங்கள்.

க. தந்தைதாயுடனே குருதெய்வ நிந்தனையும்-கதிரீளன்று
தஞ்சமடைந்தவரைக்கெஞ்ச அடிக்குஞ்சற்பனையும் அதிதிகளை
அந்தணரைப்பசுவைமைந்தரைக்கொல்லும் மேவதனையும் பஞ்சகாலத்தில்
அணைபஇட்ட மரகதமைமட்டிடும் வஞ்சனையும்பயப்படாமல்
நிந்தைஆனைகளைக் குடிப்பதும்-பசு
மந்தைஉரஞ்சகல்லை இடிப்பதும்-நடுச்
சந்திவிருட்சங்களை எடிப்பதும்-பிறர்
சொந்தமமனைகளைக்கையைப் பிடிப்பதும்
கொந்தம்பர்பொருளைக் கொண்டம்தாஷம்
நோன்புகளைநடுவல விண்டதோஷமும்
வந்தம்பர்பசிக்க உண்டதோஷமும்
மடிநழுகவும்பெண்களைக் கண்டதோஷமும்(இந்த)

உ. கேடுசெய்பவரோடுறவாகிய நிலையும்-வயிற்றினில்ப்ப
கீர்என்றிடவழக்கோரம் சொல்லியகெடுதலையும்-பாதிசாமத்தில்
வீடுகளில்மறைந்தோடி நெருப்பிடும்புலையும்-கண்ணிகள்குத்தி
விலங்கும்பறவைகளும்கலங்கிடவே செய்யும்கொலையும் ஆணும்பெண்ணு
கூடும்கூட்டுறவைப் பிறிப்பதும்-வரு [மா
பாடுதப்பிநடக்கக் குறிப்பதும்-நடுக்
காடுகளிலேவெட்டிப் பறிப்பதும்-விளை
யாடும்பிள்ளைக்கழுத்தை முறிப்பதும்
நாடிக்கொடுப்பவரைத் தடுக்கும்பாவமும்
நாண்இழந்தபெண்ணுடன் படுக்கும்பாவமும்
கோட்டைக்குளத்தைத்துத்து விடுக்கும்பாவமும்
கோள்சொல்லிக்குடிகளைக் கெடுக்கும்பாவமும் இந்த

௩. மாலைஇட்டவனைஇகழ்ந்துசொல்லும் பாதகமும்-வேறொருவனா
ருவிஅதனில்வந்தகருதை அழிக்கும்தோதகமும்பாலும்தேனு

பேலேஇருப்பவரைக்கொல்ருமித்திர பேதகமும்-மாதவிடாய்
பூத்தமங்கையரைச்சேர்ந்தன்னத்த சூதகமும்-தருமேவன்என்று
மேலவர்களை அலக் கழிப்பதும்-வழிச்
சாலைசத்திரங்களை அருப்பதும்செய்யும்
காலசெபதபத்தை ஒழிப்பதும்-இடும்
பாலேகவீசரைப் பழிப்பதும்
எலும் இறைச்சிகளைத் தின்றதோஷமும்
இருட்டினில் இடம் இல்லை என்றதோஷமும்
ஆலயங்களிலப்புணர் கின்றதோஷம்
ஆற்றில்அபமலத்துடன் சென்றதோஷம்ம் (இந்தச்)

---

## ஸ்ரீராமர் சீதைக்கு வந்தவழி அடையாளங்கள் கூறல்.

விருத்தம்.

திருவணைப்பவன்சசெதன்று சிலையினல்பருத்தராமன்
தருமலர்க்குழலிஆன சானகிவதனம்நோக்கிப்
பொருப்வதிஅயோததிவிட்டுப் புறப்பட்டநாள்முன்தொட்டு
வரும்வழிஅடையாளங்கள் வகுத்திட்டான்தொகுத்திட்டானே. (௧௧0)

௮௮. தரு-ஆனந்தபைரவிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

சனகன்மாதே-பாராய்-சனகன்மாதே

அநுபல்லவி.

நீனாவினுடன்மனம் மகிழப்பாராய்பெண்ணே (சனகன்)

சரணங்கள்.

௧. இலங்கைநகர்மேலேமுந்நாள் எழுந்தனுமான்பாயவே
இடம்தரும்மயேந்திரம்இது தானே
நலம்புகழ்வோஎன்னை வருணன் அடைக்கலம்என்று
சரண்புகுந்ததானம்இது தானே-பெண்ணே(சனக)

௨. மதிகதிர்உள்ளளவும்போம் பொதியமலைஇதுதிவ்விய
மகத்துவம்உள்ள அகஸ்தியமுனிதானம்
கெதியில்எதிரேகின்ற மலைஇதுசுக்ரீவன்வாழ்
கிஷ்கிந்தைஅவனுக்கா தீனம்-பெண்ணே(சனக)

௩. சந்திரனைநட்சத்திரம்போல் உன்தனைஇலங்கவே
சகிசெனங்கள் ஆகஒருங் காலே



இந்தமலையின்றம்வானரமாதர்உருமாறி
இதோவருகிறார்பார் கண்ணேலே-பெண்ணே(சனக)

௪. கிளைக்குள்என் அம்பினாலே எழுமரங்களும்வீழ்ந்து
கிடக்கிறதைப்பார்நாக்கு நேராய்
வளைக்கும்மழைகாலத்தில் தம்பியுடன்நான்இருந்த
மாலியவந்தமலைஇதனைப் பாராய்-பெண்ணே(சனக)

௫. துதிசெய்சதுன்பணிகளைச் சுக்ரீவன்காட்டநான்
துயருற்றமதங்கஅடி வாரம்
அதிகப்ரியபத்தியா என்னையும்உன்னையும்காத்த
அனுமன்கண்டதிவிடம்பம்பை ஓரம்-பெண்ணே (சனக)

௬. தயவாகமனம்தேற்றிப் பசிஆற்றிஎனைப்போற்றிச்
சபரிமுத்திபெற்றகிந்தச் சாலே
உயிர்போலும்உனைதேடி வாலிவழி மேலிக்கவந்தன்
உயிர்கொண்டமூலைஇந்த மூலை-பெண்ணே (சனக)

௭. எதிர்தரும்ராவணன்கையில் பழமைபாராட்டிஉன்னைல்
இறந்ததந்தைக்கிங்கேசமஸ் காரம்
கதிர்செய்மூன்றுவருஷமும் நாம்இறக்கத்தபிசெய்த
சாலைஇதுபஞ்சவடி தீரம்-பெண்ணே (சனக)

௮. இவிடம்மாரீசன்பட்டதிவிடம்சூர்ப்பநகிகெட்ட
திவிடம்கரதூஷணர்வ நாசம்
இவிடம்கோதாவிரிஅன்னே இவ்விடம்தம்பிகண்டதென்னே
இவிடம்உன்னைராவணன்செய்த மோசம்பெண்ணே (சனக)

௯. தனித்துநீபுலம்பும்நாள் உன்னிமித்தம்உயிர்விடும்
சடாயுவனம் இது அவன்என் சாமி
அகத்தியம்இல்லாஅகஸ்தியமுனி எனக்குப்படைகொடுத்தஇடம்
அறிவையோசதல்லோபுண்ணிய நாமிபெண்ணே(சனக)

௧0. இதுசதீக்ஷ்டமுனிவன் இதுதண்டகாரணியம்
இதுவேமுனிவர்கட்குநி வாசம்
இதுசரபங்கமுனிதேவியுடன்முத்திபெற்ற
இடம் இது அதிகபிர காசம்-பெண்ணே(சனக)

௧௧. இங்கேவிராதனைக்கொல்லக்கேவலன் ஆகினனைப்போற்றி
ஏகினன் அல்லவோனின் மீதே
தங்கப்பணிஉனக்கனுசூயைதாஎனே அத்திரி
தபமோடாதரித்தஸ்தலம் சந்த-பெண்ணே(சனக)

௧௨. கன்றுபிரிந்தபசுபோல் நான்பிரியன்பரதன்வந்து
கண்டமலே இதுசிந்திர கூடம்
அன்றிளையவன்தள்ள ஏறிவந்தயமுனே இதுக்
கடையாளம்பார்மூங்கிலாச்செய் ஓடம்-பெண்ணே(சனக)

௧௩. ஈர்ஏழுவருஷமும் நம்மைவரும்வழிநோக்கி
இருக்கும்பரத்துவனுக்கிது காணி
கார்ஏழுதகன் காக்கும்கங்கைஇதுநம்மைமுந்நான்
கரைஏற்றிவிட்டதிந்தத் தோணிபெண்ணே(சனக)

௧௪. சீலம்உள்ளதந்தையார்க்கு எள்ளும்நீரும்நான்இறைத்த
தீர்த்தம்இதுகங்கைநதி நேத்தி
மூலமுதல்ப்பொருள்இருக்கும் ஆலிலேயைப்போலஇதோ
முன்காணும்நகரம்அ யோத்திபெண்ணே(சனக)

---

## ஸ்ரீராமர் வரஇல்லைஎன்று பரதர் புலம்பல்.

### விருத்தம்.

உரைத்தாலேஇந்தவிதம்உரைத்தராமன்
உடன்வரும்சேனையும் தானும்பரத்துவாசன்
வரச்சாலையினில்ப்புகுந்தான் அப்போத்திதன்னில்
மாருதியை அனுப்பஅவன்வரும்போதிங்கே
தரத்தாலேஎனக்குரைத்த நாள் ஆச்சையோ
சாமிவருவானே வாரானேஇன்னம்
வரக்காணேன்என் ஆவி வைக்கேன்என்று
வாடுவான்பரதன்நொந்து தேடுவானே. (௧௧௧)

௧௭ திபதை-பூபாளராகம்-அடதாளசாப்பு.

### கண்ணிகள்.

௧. பதினாலுவருஷம்போய்ப்பரதாநான் வருகிறேன்
பாரடாஎன்றாய்இந்தப் பூமி
பதினாலுவருஷத்துக்கு குள்ளேவருவது
பதினாலும்போயோஎன் சாமிராமராமா

௨. உண்டானராமவாக் கொன்றோண்டோஎன்தன்
ஊழ்வினைப்பயன் இது தானோ
மண்டையிலேஎழுதி மயிரால்மறைத்துவைத்த
மலரயன்கபடறி வேனோராமராமா



௩. முக்கியபாதுகையே எல்லாந்தெய்வமும்என்று
முன்னுளில்க்கட்டளையிட் டாயே
தெற்குத்திசைஎல்லாத் திசையும்ஆம்என்றென்னைத்
தினம்பார்த்துத்திகைக்கவிட் டாயே-ராமராமா

௪. வருவான்என்சாமிஎன்னைப் பிரியாதேஎன்றுநெஞ்சை
மடக்கமடக்கமடங் காதே
இருபாதம்என்று சொல்லும் கரைகண்டால் அல்லாமல்
என்கண்ணீர்வெள்ளம்அடங் காதே-ராமராமா

௫. உருகிறதாய்மார்க்கு ஊர்க்கும்எனக்கும்சொன்ன
ஒருவனைக்காணேன்கண் மீதே
வரும்விதிவந்ததென்றால் படும்விதிபடவேணும்
மாட்டோம்என்றாலும் விடாதே-ராமராமா

௬. அண்ணன் ஆம்என்சொல்லே சத்துருக்கனுக்கும்கேளாமல்
அரசாளமனம்மங்கி றானே
அண்ணன் அழைத்துப்போன லட்சுமணன்போல்என்னையும்
அழைத்துப்போகூடஎன்கி றானே-ராமராமா

௭. பூமிநெருப்பில்விழும் விழவேண்டாம்என்றொரு
புத்திமதிசொல்லவில் லாயோ
சாமிபின்போனநெஞ்சே வருவானோவாரானோ
சற்றேநீவந்துசொல் லாயோ-ராமராமா

௮. பொடித்தவனம்தனிலே எவருடன்சண்டையோ
புரோகிதரேசொல்லோ ஏதோ
நடுப்படையில்ப்போனாலும் வடுப்படாமல்த்திரும்பும்
நாயகன்வரத்தடை ஏதோ-ராமராமா

௯. பருவங்கள்பதினாலும் தவம்செய்தென்னகண்டேன்
படைத்தேனே இந்தஅப வாதம்
பெருமாள்சென்றவழியில்ப் புல்லாய்முளைத்தாலும்
பெறல்ஆமேஆண்டவன் பாதம்-ராமராமா

௧௦. அரசனையும்காணேன் அரசுக்கரசாநின்ற
அண்ணனையும்காணேன்நான் எம்மாத்திரம்
பரதன்என்றபேரைப் பரதன்யென்றசொல்லல்ஆம்
பாவிநான்அதற்கல்லோ பாத்திரம்-ராமராமா

## சத்துருக்கன் அரசாட்சிக்கு உடன்படாமை.

விருத்தம்.

பரதன் இந்த விதம்புலம்பிச் சாமிதெரிசனங்காணப்பாவிநானே, சரதம் இனித்தீப்பாய்வேன் உலகாள்வாய்சத்துருக்கா தம்பீ என்றான், விர வியகாதினிலதுபோய் நெருப்பாகச்சுட அவனும் வீழ்ந்து சோர்ந் தான், நரகம் அன்றோ உனக்குப்பின் நிலம் என்றான் எனக்கென்ன நலம் என்றனே.

அக. தரு-புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இதற்கோநான் ஆளானேன் இதற்கோஅண்ணாவே

அநுபல்லவி.

சதிக்குள்சத்துருக்கனை வாஎன்றழைத்திட்டாயே
சாமிபரதாஎன்னைக் கைநழுவவிட்டாயே (இதற்)

சரணங்கள்.

க. பூமிஆளச்சொல்லி என்னைத்தானே-விட்டுப்
போனால்என் ஆகுமோ கோமானே
ராமன்முகமும்உன் முகமும்கண்டுநானே
ரண்டாட்டில்ஊட்டின குட்டிபோல்ஆனேனே (இதற்)

உ. ஒருவன்கானகத்தில ஏகவும்-அவன்
உடன்ஒருதம்பிதானே போகவும்
ஒருதம்பிஆனநீ நெருப்பிலேவிழுகவும்
ஒருதம்பிஎன்உயிர் வல்லுயிர்ஆகவும் (இதற்)

௩. எனக்குமாத்திரம்உடல் கெட்டியோ-உன்பின்
இருந்துலகாளாவிட்டால் நஷ்டியோ
உனக்குப்பின்வாராமல் எனக்கொருவெட்டியோ
உன்உயிரிலும்என்தன் உயிர்க்கருப்பட்டியோ (இதற்)

---

## அக்கினியில்விழும் பரதரைக் கௌசலைஅம்மன் தடுத்துக்கூறுதல்.

விருத்தம்.

வாடிஇவ்வாறழுததம்பிக் கிரகங்கான்கான்போய்
மாள்வேன்எனில்இவன்புவியை ஆள்வன்என்று



கூடியமந்திரிமாரும் ஊருள்ளாரும்
குலைந்தலறப்பரதன் தீ வளர்க்கச்சொன்னான்
நாடியதோர்கௌசலையும் கேட்டுவந்தாள்
நன்மகனேமகனேஎன் செய்வேன்என்றே
ஓடிஅவன்கைஇணையைப் பிடித்தாள்புத்தி
உரைக்கின்றாள்மகன்மனதைக் கரைக்கின்றாளே. (௧௩௩)

௯0. தரு-காம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்னைநினைந்தாய்-பரதா-என்னைநினைந்தாயே

அநுபல்லவி.

அன்னைஎனும்கௌசலையை அகலவிட்டிடநீயே (என்)

சரணங்கள்.

க. முன்மகன் ஆகியராமன் முகம்பார்க்கவில்லைஎல்லாம்
உன்முகத்தைக்கண்டுநீங்கி உளம்குளிர்ந்தேன்மகனே
நின்முகமும்காட்டாமல் நெருப்பின்முகம்நீபார்த்தால்
என்முகத்தைப்பார்க்கும்முகம் எந்தமுகம்மகனே (என்)

உ. எத்தனைராமரும்உனக் கிணைஆவாரோநீபோனால்
செத்துலகம்போம்எனது சீவனும்போம்மகனே
பெற்றமனம்பித்தென்றும் பிள்ளைமனம்கல்என்றும்
சுற்றிலும்சொல்கிறபடி துணிந்தாயோடாமகனே (என்)

௩. இதம்கொண்டராமன்வர விதோஅதோஎன்றிருக்க
மதம்கொண்டால்போலஉயிரை மய்க்கால்ஆமோமகனே
சுதந்தரயாத்தவம்செய்தும் சுகம்தக்கினதும்அல்ல
விரதம்தக்கினதும்அல்ல வேண்டாம்அடாமகனே (என்)

---

## பரதர் கௌசலை அம்மனோடு முறையிட்டு இரங்கல்.

கொச்சகம்.

பன்னிஇதுதாய்சொல்லப் பரதன்சமேரழ்ஆண்டும்அண்ணன்
சொன்னபடிகாத்திருந்தும் சுவாமிதெரிசினம்காணேன்
பின்னைஎனக்கார்இருந்தென் ஆர்போய்என்பெருந்தீயில்
என்உயிரைவிடுவேன்என் றெழுவான் சொல்மொழிவானே. (௧௩௪)

**௧௧. தரு-சைந்தவிராகம்-திரிபுடைதாளம்.**

பல்லவி.

இனிநான் இருக்கல்ஆமோதாயே

அநுபல்லவி.

அநியாயத்தில் அய்யனுக்-காகாமல்ப்போயே (இனி)

சரணங்கள்.

௧. பறவில்லாவரம்கொண்டேன் நானே-அண்ணன்
வழிபார்த்துப்பார்த்தெந்தன் விழியும்பூத்தேனே
சிறுபிள்ளைப்பருவம் நான் தானே-இதிலே
சிறகுபறிகொடுத்த பறவைஆய்ப்போனேனே (இனி)

௨. வருத்தம்அறியான்சாமி கொஞ்சம்-என்னை
வாராமல்இருப்பானோ எனக்குண்டோ தஞ்சம்
நெருக்குதேகவலைப்பிர பஞ்சம்-அறிந்தால்
நெருப்பிலேபோட்டாலும்வேகுமோ என்நெஞ்சம்(இனி)

௩. அரசனுக்குதவாமல்க் கெடுத்தேன்-அண்ணன்
அருமந்தமுடிக்குப்நான்சடைமுடி கொடுத்தேன்
தருமத்துரையைக்காட்டில் விடுத்தேன்-பரதன்
சாமித்துரோகிஎன்றே எங்கும்பேரெடுத்தேன் (இனி)

௪. அய்யர்அன்னைசொல்லோ காமல்-கேட்க
அளிக்கத்தக்கவன்திருவுளத்துக்கா காமல்
செய்தேன்வெகுகுற்றம்போ காமல்-பல
தீட்டுக்குமுழுங்கொன்று நெருப்பில்மூழ்காமல் (இனி)

—*—

## ஸ்ரீராமர்வரவை அனுமார் பரதருக்குக்கூறல்.

விருத்தம்.

தசதாய்கௌசலைவந்தாளொடு பரதன்பாடுகள் இவைமுன்கூறி,
கொந்தர் அனலைவலம்சூழ்பொழுது குழந்தாய்குழியில் அமிழ்ந்தாதே,
அந்தோபொறுபொறுமைந்தாபொறுபொறு அன்பால்உனதுமுகம்தேடி:
வந்தான்ரகுபதிவந்தான் என்அனுமன் தான்இஃதுரை தந்தானே.

**௧௨. தரு-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.**

பல்லவி.

வந்தான்வந்தான்பரதா-ரகுராமன்-வந்தான்வந்தான்பரதா



அநுபல்லவி.

வந்தான்வந்தான்மோதிரம் தந்தான் தந்தான்கைமேல்
இந்தா இந்தா தீயினில் மூழ்காதே மூழ்காதே (வந்)

சரணங்கள்.

௧. நாயகன்சொல்மறந்தாய்அண்ணனென்று பேயனைப்போல்பறந்தாய்
தாயரையும்துறந்தாய்பழிபோட நீ இதற்கோபிறந்தாய்
சேயின்முகம்பார்க்கும் தாயின்முகம்போல
காயும்புழுவுக்குச் சாயும்நிழல்போல
தீயும்பயிருக்கும் பேயும்மழைபோல
மாயன்கஜேந்திரனுக் காய்வந்ததுபோல (வந்)

௨. பொருந்தாதபுத்திதந்தாய்ஆலவாயில்கரும்புபோல்மெத்தநைந்தாய்
துரும்புபோல்வற்றிசோர்ந்தாய்வீழ்வேன்என்றுபெருந்தீயைசுற்றிவந்தா
அருபதினால்ஆண்டு ஆச்சென்றதினாலே
வருந்தும்தம்பிமடி வான்என்றொருகாலே
பரிந்திதோசித்திர கூடத்துக்கிப்பாலே
பிரிந்தகன்றைத்தேடித் திரும்பும்பசுவைப்போலே (வந்)

௩. தீமைவினைகள்மண்டுஇராவணப் பாமரன்ஆவிஉண்டு
சேமவெஞ்சேனைகொண்டு பாரத்துவாசமாமுனிபூசைகண்டு
சாமிரகுகுல சோமன்இதோவந்தான்
பூமகள்சானகி வாமன்இதோவந்தான்
ஓம்மனும்ஆயிர நாமன்இதோவந்தான்
நீ மறவாரகு ராமன்இதோவந்தான். (வந்)

---

## பரதருக்கு அனுமார் சங்கிரக ராமாயணம் கூறல்.

சந்தவிருத்தம்.

இந்தவாறனுமந்தன்ஓதி இடும்பகைமோதிரம்சயந்துடன்
சந்தமாமுடிகொண்டதோர் பரதன்களிரவளர்ந்தனன்
உந்தனோடுபிரிந்துராமன்ஒழிந்ததம்பின்நடந்ததும்
வந்தவாறும்அறிந்திடவென்றுரு மாநிலன்இவைகூறினன். (௧௧௩)

**௧௩. தரு-கலியாணராகம்-அடதாளசாப்பு.**

பல்லவி.

பரதமகாராசனேகேளாய்-ராமன்சேதி-பரதமகாராசனேகேளாய்

அநுபல்லவி.

திரம்உலாவியசித்திர கூடத்திலேமுன்னே
திருவடிகள்நீகொண்டு போகியஅதின்பின்னே
இரகுபதிதண்டகவனத்தில்அடிநீட்டினன்
ராட்சதவிராதனை உபேக்ஷைபறமாட்டினன் (பரத)

சரணங்கள்.

௧. அந்தமுனிவர்க்கபயம் ஈய்ந்தான்-பிறகு
அகஸ்தியமுனி ஆசிரமம்சேர்ந்தான்-அவன்
தந்தைபடைமுழுவதும் கொண்டான்-வந்து
சானகியொடுபஞ்சவடி கண்டான்
வந்தசூர்ப்பநகியவள் வாதாடும்நாளிலே
வள்ளல்இளையவன் அங்கை மீதாடும்வாளிலே
கந்தமுலையும்செவியும நாசியும்நறுக்கினன்
கரதூஷணரையும்அவ ளாலேநொறுக்கினன் (பரத)

௨. பின்னுகமானைவர விடவே-அதின்
பிறகுகணைஒன்றில்அது படவே-ஒரு
சன்னசிராவணன் அடுத்தான்-சீதை
தன்னைநிலமங்கையோ டெடுத்தான்
அந்நிலையிலேவரு சடாயுவைவருத்தினன்
அம்மனைஅசோகவனக் காவலில்இருத்தினன்
கன்னிகைதனைச்சாமி தேடிமனம்தேங்கினன்
கழுகரசனைக்கண்டு கவந்தன்உயிர்வாங்கினன் (பரத)

௩. சவரிசொல்லியவழு நடந்தான்-என்
தனைஅடிமைஆகவே தொடர்ந்தான்-பின்
கவடுளமரங்கள்துணி செய்தான்-அந்த
காலன்வாலியையும்விழ எய்தான்
அவனியைச்சுக்ரீவ னுக்குதவிமீளவும்
அடியேன்அறிந்தம்மை நிலைகண்டுமீளவும்
தவம்உளவிபீஷணர்க் கபயம்கொடுத்தனன்
சாமிதிருவணைஒன்று கடல்மேல்எடுத்தனன் (பரத)

௪. பண்டைலங்கையின்மதில் பிடித்தான்-எழு
பதுவெள்ளமும்கொண் டிடித்தான்-வெகு
கண்டகஅரக்கரை மடுத்தான்-பயிர்க்
களைஎடுத்ததுபோல் எடுத்தான்



அண்டர்பணிதம்பியும்நெ டுங்கணைகள்தாக்கினன்
அதிகாயனையும்அந்திர சித்தையும்மண்ஆக்கினன்
கொண்டல்மணிவண்ணனும் சிலைநாணைமுடுக்கினன்
கும்பகர்னனையும்ரா வணனையும்ஒடுக்கினன் (பர)

௫. மதிநுதல்ச்சீதைதனை உற்றான்-அங்கே
வந்ததசரதன்வரம் பெற்றான்-தனது
பதியில்வரவேஉளம் மதித்தான்-புஷ்
பகமீதில்சேவடி பதித்தான்
எதிர்படும்காடும்நாடும் கண்டுகாண்டினன்
இமையவர்புரந்தரா திகள்புகழவேண்டினன்
அதிமுனிபரத்துவாசன் ஆசிரமம்மேவினன்
அதற்குமுன்உனைக்காண அடியேனைஏவினன் (பர)

## ஸ்ரீராமர் அனுமாரை உடனுண்ண வேண்டுதல்.

விருத்தம்.

நீதமுடன்அனுமன்இது சொன்னான்இந்த
நிமிஷம்வந்துசாமிஉனக் கருள்வான்என்றான்
போதரவாப்பரத்தவாசன் மடத்தில்ப்பூர்வ
போசனவேளையில்ப்போய் ராகவனைக்கண்டான்
பாதமலர்வணங்கினன் பரதன்தன்னைப்
பார்த்ததும்கார்த்ததும்சொன்னான் அப்போதையன்
காதலனேஅனுமானே நீயேஎந்தன்
கண்என்றான்என்னுடன்வா உண்என்றானே. (௧௧௭)

௧௪. தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வாவாஅனுமானே என்னுடன்உண்ண வாவாசீமானே

அநுபல்லவி.

ஜீவபயம்இல்லாமல் பரதனையும்தேற
தேற்றிஎனக்குவந்து சொன்னவுன்இளைப்பாற (வாவா)

சரணங்கள்.

அங்கேபிரம்மாஸ்திரத்தால் விழுந்ததம்பிபிழைக்க
அமுர்தமருந்துதேடிக் கொடுத்தாயே
இங்கேஅக்கினியில் வீழ்ந்ததம்பிபிழைக்க
என்வரத்தைச்சொல்லித்தூக்கி எடுத்தாயே

சங்கடவேதனைகள் ஏதேதுவந்தாலும்
தலையிட்டுக்கொண்டுதீர்க்கத் தொடுத்தாயே
பொங்கும்இருப்புக்கோட்டையும்கல்க்கதவுமே
போலஎங்களைக்காக்க வாலாயம்அடுத்தாயே (வா)

௨. பூட்டியதாதுநீபோய் அரக்கரைகொன்றரத்தம்
போச்சிலையேஇன்னம்பல கையில்சரம்
வாட்டம்இல்லாமல்ச்சீதை தனையும்தந்தாய்நல்ல
வாழ்வும்தந்தாய்எனக் குபகாரம்
கூட்டத்திலென்ன படையிலும்ஒருத்தன்
கொடையிலும்ஒருத்தன்உன் னதேவீரம்
தாஷ்டீகத்தம்பிமார்க்கும் தாய்மார்க்கும்எனைப்பெற்றோன்
தனக்கும்உனக்கும்நான் சொல்வதேன்உபசாரம் (வா)

௩. சுக்கிரீவனுக்கும் விபீஷணனுக்குமதங்கள்
துரைத்தனமேல் ஆசை எந்தாயே
எக்காலமும்உன்தன் ஆசைஎன்காரியத்தில்
எங்கெங்கும் போய்ச்சுற்றி நொந்தாயே
விக்கிரமம்நீசெய்து வருகையா லேநாங்கள்
விருந்தமுதிருந்துண்ணத் தந்தாயே
சர்க்கரைப்பந்தலிலே தேன்மாரிபொழிந்தால்ப்போல்
சந்தோஷவார்த்தைகொண்டு சமையத்தில்வந்தாயே (வா)

---

## ஸ்ரீராமர் பரத்துவாசர்செய்த விருந்துண்டல்.

விருத்தம்.

சுந்தரன்ஆம்ராமச்சந்திரன் இந்தவிதம்உபசாரம்சொல்லச்சொல்ல
வந்தஅனுமான்ஒடுங்கிவணங்கிநின்றான் எல்லாரும்மகிழ்ந்தேஉண்ணப்
பந்தியிருந்தார்அனுமான்பரதனையே அடிக்கடிக்குப்படித்துப்பேச
அந்தஉரைசெவிக்கமுதாவிருந்தமுது திருந்தினான்அருந்தினனே.

௬௫. தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

உண்டானேராமன் பாரத்துவாசன்செய்தவிருந்
துண்டேஆனந்தம்கொண்டானே

அநுபல்லவி.

வண்டார்குழல்ச்சீ தையும்இளஞ்சூரனும்
வானரேசனும் விபீஷணவீரனும்



கொண்டுடனே அருந்த கண்டுமனம்திருந்த
அண்டம்எல்லாம்திருந்த பண்டியிலேபொருந்த (உண்)

சரணங்கள்.

௧. ஓங்கியபொன் னுலகத்தினில்ப்பெண்கள்
ஓடிக்கொண்டுவந்து வழங்கமுதும்
நான்குதிசையிலும் உள்ளமுனிவர்கள்
நாடிக்கொண்டுவந்த இங்கமுதும்
மாங்கனியும்கதலிப் பூங்கனியும்பனசத்
தேங்கனியும்பலவி ளாங்கனியும்கிருத்திப்
பாங்காகவேமென்மேலேபடையும்தானும் அம்பாலே (உண்)

௨. நானிலந்தனில் மாநலந்தரும்
நானவிதம்உள்ள சூபமும்
வானமங்கையர் தான்உகந்திடும்
வகைவகையானஅ பூபமும்
தேனும்கரிவகைகள் தானும்குளிர்ந்தநல்ல
பானகமும்சமைந்த போனகமும்கொண்டு
சேனைஆராவாரிக்கத் திருமேனியும்பூரிக்க (உண)

பவ்வியவான்அனு மானைக்கடைக்கண்ணாலே
பார்த்துபார்த்துமனம் களிப்பூற
செவ்வையானை வேத்தியம்செயக்கண்டு
தேவர்எல்லாம் சோபனம்கூற
இவ்வுலகத்தினிலும் அவ்வுலகத்தினிலும்
எவ்வுலகத்தினிலும் அவ்அவ்இடத்தில்உள்ள
திவ்வியசாரங்கள்பெற்று செவ்வாய்மலரில்வைத்து (உண்

---

## பரத்துவாசர் முதலானோர்க்கு ஸ்ரீராமர் ராக்ஷதர் மாண்டவகைகூறல்.

விருத்தம்.

உண்டபின்புபரிகலத்தை அனுமான்கொண்டான்
ஒருசுக்கிரீவனுக்கும் விபீஷணர்க்கும்ஈய்ந்தான்
கண்டபடைகளுக்கும்இட்டான் தானும்பாதி
கைக்கொண்டான் அவனை அயோத்தியிலேஏக
அண்டர்பிரான் அனுப்பினான்கடலைத்தாண்டி
அரக்கர்குலம்வேரோடே அழியவில்லால்
மண்டமரில்வென்றதெல்லாம் ராமச்சந்திரன்
வகைசொல்வான்முனிவருக்குத் தொகைசொல்வானே. (௧0௭)

௧௧. சௌராஷ்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இங்கேநாங்கள் இலங்கையைவென்றகதை
இந்தவாறுகாண் முனிவர்களே

அநுபல்லவி.

தங்கும்குரங்கெல்லாம் அணுப்போல்எதிர்த்தா
சண்டைசெய்யும்அரக்கர் மலைபோல்வரவா
அங்கேநீங்கள்முன் ஆசிர்வாதம்செய்ய
அணுவும்மலைஆச்சந்த மலையும்அணுஆச்சைய(இங்)

சரணங்கள்.

௧ வானரத்தால்அரக்கர் படைஎல்லாம்மடிந்தது
மாயைஎல்லாம்விபீ ஷணனால்ஒடிந்தது
ஆனதம்பிமேல்ஒரு நாகாஸ்திரம்படிந்தது
அதுவும்கருடனாலே பொடியாய்பெடிந்தது(இங்)

௨. அந்தப்பிரம்மாஸ்திரத்தை அரக்கன்விடுத்துமொய்த்தான்
அமுர்தமருந்தை அனுமான்கொண்டுவந்துவைத்தான்
இந்தஅனுமானாலே இளையவன்உயிர்பெற்றான்
இளையவன்கைஅம்பாலே இந்திரசித்தனும்செத்தான்(இங்)

௩. மூலபலம்ராவணன் கும்பகர்னன்சென்மம்
முடியவேமுடிந்தது ராமபாணவன்மம்
ஏலவேதொலைந்தது எங்களைத்தொட்டகன்மம்
எங்களால்ஒன்றும்இல்லை எல்லாம்உங்கள்தன்மம்(இங்)

---

## குகன் ஸ்ரீராமர் வரஇல்லையென்று வருந்துதல்.

விருத்தம்.

கரக்காமல் இவ்வாறு சொன்னராமன்
கானமுனி வரைநிறுத்தி ஆசிகொண்டு
பாப்பாம் புஷ்பகம்கொண்டு கங்கைஆற்றின்
பக்கல்வரும்முன்னம்முன்னேபரிவினோடே
தாத்தாலே எனக்குரைத்த நாளும்கண்டேன்
சகுனமும்கண்டேன்இன்னம்சாமிஇங்கே
வரக்காணேன் என்ஆவி வைக்கேன்என்று
வாடுவான் குகன்வருந்தித்தேடுவானே. (௧௨௦)



௧௮-திபதை-ஆனந்தபைரவிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. ஆண்டுபதினாலும்போய்வருகிறோம் என்றஅய்யன்வரவுகாணேனே
நீண்டபனமரம்போலேவளர்ந்தேனே நிலத்தில்இருக்கநான்ஏனே

௨. சாமியும்என்தாயும்தம்பியும்என்னைத்தவிக்கவிட்டு மறந்தாரோ
பூமியில்த்தங்களுடன் வாராக்குகன்புலையன்என்று துறந்தாரோ

௩. இச்சையாலேநான்என்னபிழைசெய்தாலும் ஏழைஎன்றென்னைஅறியாரோ
நச்சுமரம்ஆனாலும் வச்சவர் நன்மரம்என்றுகுறியாரோ

௪. உண்டால்ப்பசிதீரும்என்றே இந்தஉலகம்சொல்லியமாண்பேதே
கண்டால்ப்பசிதீரும்என்சாமிமுகக் கமலத்தைஎன்றுகாண்பேறே

௫. சோராதஒருதோழன்என்றவர் சொல்லியசொல்என்னபொய்யோ
கார்மேனியும்கோதண்டமும்என்தன் கண்எதிரேநிற்குதையோ

௬. அங்கேமுன்பழகினஊரை நினைக்காரோபகவானே
எங்கேயிருந்தாலும்ராமர்இருந்த இடமஅயோத்திதானே

வலக்கண்ணும்வலத்தோளும் துடிதுடித்துவருகிறதென்னஇதுதானே
கெலிக்கும்ராகவன்தரிசனம்கிடைத்தாலும்கிடைக்குமோஎன்னஅறியேனே

௮. இனிமேல்ஒருதெய்வம்தன்னைக்கை எடுப்பேனோசற்றும்நானே
தனியேஆனைதழுவும்கையாலேஆடு தழுவுமோஎன்கைதானே

---

## பரதருக்கு ஸ்ரீராமர் காட்சிகொடுத்தல்.

விருத்தம்.

நையும்இந்தக்குகன் பணியசாமிவந்தான்
தம்பிபரதனும்நீயும் சுகமோஎன்றான்
துய்யகுகன்சனகிவிபீஷணன் சுக்ரீவன்
துணைவனொடும்புஷ்பகமேல் அயோத்திசேர்முன்
செய்யவசிஷ்டனும்பல பேர்களும்தாய்மாரும்
திரண்டுவரும்பரதனுக்குக் கையாலேஉன்
அய்யன்வந்தான்என்றனுமான் காட்டக்காட்சி
யருளினான்ராமன் எழுந்தருளினானே. (௧௨௧)

௧௭. தரு-சாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ராமன்எழுந்தருளினான்—பரதன்முன்சீதா-ராமன்எழுந்தருளினான்

அநுபல்லவி.

ஆர்எனும்தேவர்களுக் கமுதம்தந்தால்போல
பூமியில்உள்ளோர்க்கெல்லாம் போன பொருள்வந்தால்போல(ரா)

சரணங்கள்.

தூயவர்க்கெல்லாம்முத்தித் துறைகள்சித்தித்தாற்போல
ஓயும்உடலோர்க்கெல்லாம் உயிர்புகுந் தாற்போல
நேயமாதர்க்கெல்லாம் கண்நிழல்வந் துதித்தாற்போல
தாயார்க்கெல்லாம்அப்போது தான் பிள்ளைபெற்றாற்போல(ரா)

௨. உத்தமர்கள்நாவுக்கெல்லாம் ஊறும்தேன்மயம்ஆக
மற்றவர்கண்வண்டுக்கெல்லாம் மலர்ந்தபங்கயம்ஆக
அலர்தசெந்தாமரைக்கெல்லாம் அருணசந்திரோதயம்ஆக
புத்திரர்க்கெல்லாம்தாயைப் போலேவசியம்ஆக(ரா)

௩. கரியும்மரவுரியும் சடையும்நடையும்சேர
வருகிறதம்பிவந்த வரவுகண்டுகண்ணார
உருகிஉருகிஅவன் உடையகுறைகள்தீர
திருவும்தம்பியும்கவிச் சேனையும்தானும்சேர(ரா)

## பரதர் ஸ்ரீராமர் திருவடிகளிலே வணங்குதல்.

விருத்தம்.

இயல்புடன்இப்படிராமன் வந்தபோதில்
இதோவந்தான்சாமிஎன அனுமான்காட்ட
வியன்உறுதாய்மாரும் ஊராரும்பார்க்க
மிடியனுக்குக்கனகமழை கிடைத்தாற்போலத்
தயவுளதாயமுகம்காணும் சவலைபோலச்
சாமிமுகம்இளையவனும் தானும்கண்டான்
உயிர்உருகஉளம்உருகத்தி ருத்தாள்மேலே
வணங்கினன்பரதன்வந்து வணங்கினனே. (௧௨௨)

௬அ. தரு-காம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வணங்கிநின்றானே-பரதன் சாமிசேவைக்கு
இணங்கிநின்றானே-பரதன்

அநுபல்லவி.

கணம்குலாவும்தச ரதன்தன்னைஎதிர்ப்பட்டு
கண்டசிர்என்னக் கண்டுதெண்டனிட்டு(வண)

சரணங்கள்.

௧. அதிகானம்போய்வாழ்ந்தவன்உடம்பும் போற்றிஎன்றவன்
அடிமேலேபோய்விழுந்தவன் உடம்புங்கட்டிக்கொள்போதில்
அதுவோஅல்லதிதுவோபின்னைஎதுவோ உடல்பொதுவோஎன்ன
அணைத்துஅணைத்துராமன் கண்ணீர்தள்ளத்தள்ள
அய்யனேமகனே என்றுகட்டிக்கொள்ள (வண)



௨. அடியேன்மேல் திருஉள்ளம்உதித்ததோ அடிமைபடைத்தால்
ஆள்கடன்என்பது மதித்ததோதரிசனம்தந்
தாயேதந்ததாயேஎன்ன நீயேவளர்த்தாயேஇப்போ
தவித்தபயறுமுளைக் கத்தந்தகதைபோலே
ஆவிநீதந் தாயேஎன்றொருகாலே(வண)

௩. என்னோடேநீறவந்தநெல்லாம் நான்பதராகி
இருந்தேனே நீவராநாள்எல்லாம்காண் இருந்தாலும்
இறந்தேன் இன்றுபிறந்தேன்கண்டுசிறந்தேன் குறைமறைந்தேன்இங்கே
இருந்தநாள்இருந் தேனேநிலம்கெல்லி
இன்றல்லோபிழைத் தேன்என்றுசொல்லிச்சொல்லி(வண)

## நகரியையும் ஸ்ரீராமரையும் சீதையையும் அலங்கரித்தல்.

விருத்தம்.

வந்தம்பிஇந்தவகைபலரிந்தான்ராமன்
மாதாக்கள்மூவரையும் பணிந்தான்பின்னே
அந்தலட்சுமணன்பரதன் பதம்பணிந்தான்
அவன்பதத்தில்சத்துருக்கன் பணிந்தான்இப்பால்
பந்தம்உள்ளசீதைநின்ற திசையைநோக்கிப்
பரதனும்தம்பியும்பணிந்தார் சுமந்திரன்சொல்லால்
விந்தைவிந்தையா எவரும்கூடிநாறு
விதஞ்செய்தார்அயோத்தி அலங்கிருதம்செய்தாரே.

௬௯. திபதை-போகனராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. தேசதேசமக ராசராமனுக்குத்
திருமுடி அபிஷேகம்-செய்ய
ராசராசர்கள்எல் லாரும்முறைமுறையா
எடுத்தனர் வைபோகம்

௨. சேனைசேனைமக ராசராசர்களும்
திரிந்தனர் சாரிகைகள்-மிக
ஆனைமேலேநெடு வானமும்அதிர
அடித்தனர் பேரிகைகள்

௩. சோதிமணிநெடு வீதியில்மகர
தோரணம் தூக்கினார்-திசை
மீதினிலேபிச காமல்நால்இரு
மேருஉண் டாக்கினர்

௪. காரும்படிந்திடச் சூரியன்வெய்யல்மறையக்
காவணப் ந்தல் படுத்தார்-இனி
ஆரும்இங்ஙனே வாரும்என்றழைக்கும்பொன்
ஆலவட்டங்கள் தொடுத்தார்

௫. முத்துக்குடைபவளச் சித்திரக்குடைகள்எங்கும்
முறைமுறையா நிரைத்தார்-அப்புறம்
சுற்றுக்குச்சுற்றிலே வர்ணவர்ணம்உள்ள
சொர்ணமலர்கள் விரைத்தார்

௬. கோலப்பதிமைஇந்திர சாலப்பதிமைகாட்டிக்
கூந்தற்கமுகு நட்டார்-சுற்றிலும்
மேலுக்கும்கீழுக்கும் கோலக்கண்ணாடிகள்
விதம்விதம்ஆக இட்டார்

௭. சூடாகவால்வளைக் கோதையர்கீதங்கள்
சோபனமுடன் அமைத்தார்-அபிநய
நாடகசாலையும் பாடகசாலைடம்
நாலுமுகமும், சமைத்தார்

௮. முத்தாலாத்தியும் பவளாலாத்தியும்
முகம்தோறும் காட்டினார்-நல்ல
விஸ்தாரப்பெரு வீதிஎல்லாம்பனிநீர்
வெள்ளங்களா ஆட்டினார்

௯. பூந்துளகில்கரித்து மாந்தழைவிரித்துப்
பூரணகும்பம் பதித்தார்-புவி
வேந்தரும்பல மாந்தரும்ஆனந்தம்
மேற்கொண்டுகுதி குதித்தார்

௧௦. ஆணிமுத்தும்பவளம் மாணிக்கத்தாலசெய்த
ஆபரணம் திருத்தினார்-சோபனம்
பாணிக்கும்நவரத்தின பாலிகைஎங்கெங்கும்
பளபளென இருத்தினார்

௧௧. கலவைப்பொடிகதம்பப் பொடிக்குள்குங்குமப்பொடி
கடைத்தலைஎங்கும் கொட்டினார்-மெத்த
விலைபெற்றபொன்எழுத்து விசித்திரவிசித்திரம்ஆன
மேற்கட்டியும் கட்டினார்

௧௨. சந்தனச்சேற்றிலும் அகிற்சேற்றிலும்போவோர்
சறுக்கிச்சறுக்கி விழுந்தார்-அதிலே
கெந்தப்பொடிஇறைத்துக் கெட்டிஆக்கிமெள்ளக்
கிளம்பிக்கிளம்பி எழுந்தார்

௧௩. மாலையும்சொர்ணவர்ணச் சேலையும்எங்கலும்
வாசற்குவாசல் விரித்தார்-தெய்வ
ஆலயங்களும்மலர்ச் சோலையும்சாலையும்
அணுபெற அலறி கரித்தார்

௧௪. கொதிகொளும்கதிரவன் மறைபடமாணிக்கக்
கொடிகளாலே மறைத்தார்-வெகு



விதம்விதம்ஆகிய முத்துப்பவளங்களும்
வெள்ளியும்பொன்னும் இறைத்தார்

௧௫. செப்பம்உள்ளபளிங்கில் ஒப்பனைசெய்கனகத்
திண்ணையிலக்கோலம் புனைந்தார்-நல்ல
முப்பழக்குலைகட்டி அப்புறம்கனிவகை
முறைமுறையா வனைந்தார்

௧௬. ஆனைநற்சதுரம் சேனையும்சிவிகையும்
அலங்கரித்தேறி வருவார்-இதை
மானில்தானமும் கன்னிகாதானமும்
வகைவகையாத் தருவார்

௧௭. யாழும்வீணைகளும் கின்னரிகளும்கொண்டும்
ராககீதம் படித்தார்-அலை
ஆழிபோல்குமுற மேளதாளங்களை
அதிர அதிர அடித்தார்

௧௮. சடைமுடிவள்ளலுக்குக் குடைமுடிதரித்திடத்
தக்கஅலங்கிருதம் செய்தார்-எங்கும்
புடைவரும்தேவரும்மூவரும்யாவரும்
புஷ்பவருஷங்கள் பெய்தார்

௧௯. மான்சனகனும் தாய்மாருங்கண்டு
மகிழ்ச்சிகண்ணீர் துளித்தார்-பின்னும்
நாம்இங்கேசெய்த தவமேதவம்என்று
நகருள்ளோரும் களித்தார்

௨௦ கற்பனைகடந்தஎன் அப்பனைராமனைக்
காவலர்ஒப்பனை செய்தார்-மிகு
பொற்புளகோதைஎன் தாயார்சீதையைப்
பூவையர்ஒப்பனை செய்தார்

௨௧. சந்திரகுலத்தில்வந்த சீதைக்குநாதன்என்று
சந்திரன் புகழ்ந்தானே-கூட
இந்தவைபோகத்தை ஆயிரம்கண்ணில்க்கண்டு
இந்திரன் மகிழ்ந்தானே

---

## பட்டாபிஷேகமண்டபம் பரதர் சோடித்தல்.

### விருத்தம்.

இங்கிப்படியே அயோதியும் சிராமன்தானும்சானகியும்
பொங்கத்துடனேசிங்காரம் புனைகின்றஎல்ப்பரதாழ்வான்
அங்கப்போதுசாமிமுடிக் கபிஷேகம்செய்மண்டபந்தான்
தங்கத்தாலும்மணியாலும் சமைத்தான்நன்றுஅமைத்தானே.

௧௧. தரு-கேதாரகௌளராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சிங்காரம்செய்தானேபரதன்-அபிஷேகமண்டபம்
சிங்காரம்செய்தானே பரதன்

அநுபல்லவி.

துங்கநவமணிகள் எங்கும்இருந்துவெய்ய
சூரியபிரபைகள்மேலே வாரிபிரபைகள்பெய்ய
இங்குள்ளபேருடன் அங்குள்ளபேரும்உய்ய
ரகுராமனுக்குத்துய்ய மகுடாபிஷேகம்செய்ய(சிங்)

சரணங்கள்.


௧. விலாநீலத்திலும்கோமேதகத்திலும்
வேதிகையும்சிறந்த போதிகையும்-அடுக்கி
குவியும்உபானமும்பதுமமும் யாளமும்
கோமளத் தால்கடுக்கி
தவளப்பளிங்குத்தள விசைவகுத்ததன்மேலே
சாதிமாணிக்கச்சிங்கா தனம்பதித்தொழுங்காலே
பவளத்தூண்கள்நட்டு மதலைசெய்தொருகாலே
பதவிரும்பும்தொண்டர் இதயகமலம்போலே(சிங்)

௨. துய்யமருமலர்ச்சரங்களைநிரைநிரை
தூக்கிவகைவகையா மேற்கட்டிகள்திருத்தி
பையக்கவரிகள் கையினல்அசைக்கும்
பதுமைகள் சுற்றும்இறத்தி
எய்தும்அவர்மனதில் ஐயம்செல்லச்செல்ல
இதுவோஅயோத்திநகர் இதுவோஅல்லஅல்ல
அய்யாஇதுஅந்த வைகுந்தம்என்றுசொல்ல
ஆணிப்பொன்னலேஎங்கும் வர்ணித்துகல்லநல்ல(சிங்)

௩. தேடிஉலகங்கள்நாடிக்கும்பிடும்
சிகாகும்பங்கள்பல தகதகென்றுமின்னவே
சுடுள்ளபளிக்குக்கண்ணடிபோல்ச்செய்தானே
எங்கும்நிக நிகென்னவே
பாடிக்கொள்வேதமோ ஆயிரந்தலைநாக
பாம்பணையோர்கடனோ அந்தநாகரீக
வேடிக்கைநான்சொல்லக் கூடுமோதேவலோக
விசுவகர்மாவினலே உசிதம்உசிதம்ஆக(சிங்)



ஸ்ரீராமஜெயம்.



# ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்.

விருத்தம்.

சித்திரமண்டபம் அதிலே உள்ளம்கொண்டு தேவர்கள்மானிடர்கள் செய்யும்சேவைகொண்டு
சத்திபெறுகுகன்விபீஷணன்சுக்கிரீவன் துணைவர்பணிகொண்டுசிங்காசனமேல்கொண்டு
சத்தியமும்நீதியும்மேற்கொண்டு துள்ளச் சகலமும்கைக்கொண்டுசெங்கோல்கொண்டராமன்
பத்தினிசானகியுடனே உலகை ஆளும் படிகொண்டான் அபிஷேகமுடி கொண்டானே. (கஉக)

கB௦-தரு-சௌராஷ்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மகுடாபிஷேகம்கொண்டானே-ஸ்ரீராமச்சந்திரன்-மகுடாபிஷேகம்கொண்டானே

அநுபல்லவி.

சகல ராசர்களும்-சகல தேசர்களும்-சகல வேதியரும்-சகல சாதியரும்
சகல மந்திரிகளும்-சகல தந்திரிகளும்-சகல முனிவர்களும்-சகல மனிதர்களும்
சந்திராதிமூவர்களும்-இந்திராதிதேவர்களும்-சந்தோஷமாப்பொருந்து-சிங்காதனத்திருந்து (ம)

சரணங்கள்.

க. மாதவமுனிவர்கள் புடைசூட-பல வேதவேதியர்கள்மறை பாட
வானவர்ஆனவர் மலர்போட-ரம்பை மேனகைஊர்வசிநடம் ஆட
மாதலத்துள்ளதீர்த்தமும் ஓதுசமுத்திரதீர்த்தமும் வரிசையுடன் அனுமான் மொண்டுவர
சோதிமிக்கஆலாத்தி மீதிலெட்சுமிப்பெண்கள் சுபசோபனஞ்சொல்லிக் கொண்டுவர
வானகத்தில்அமுர்தத்தை மானமிக்கமுனிவர்கள் மகிழ்ந்துமகிழ்ந்தாசிகள் விண்டுவர
ஞானமிக்கநாரதர் கானவித்தைமுறைமுறை நாளுவிதம்பாடிக் கண்டுவர
மகதர்குகுதர் பலர்-கவுடர்யவனர் பலர்-வடுகர்குடகர் பலர் துளுவர்-வளவர்பலர்
வங்கர்அங்கர்கலிங்கர்பலர்-கொங்கணர்தெங்கணர்பலர்-மாளவர்சாளவர்பலர்-லாடர்கள் மராடர்பலர்
வங்காளம்பப்பாரத்துளோர்பலர் கொங்கீழ்ம்குச்சரத்துளோர்பலர்
வங்தேசக்தித்திறைஞ்சிமுடிடணி யுந்தோறப்பட்டுதிர்ந்தபொடிமணி
வைத்தபதத்தில்உறுத்திட மற்றவர்சுற்றிலும் ஒற்றிவரச்சிலகொற்றவர்
மட்டுவெகுத்தவகுத்துவரச்சில கட்டியும்உரைத்திடுபட்டர்செலச்சொல
வாமபராக்குவெகு-நாமபராக்குரண-வீரபராக்குரகு-ராமபராக்குஎன
வாசவர்க்கும்-கேசவர்க்கும்-ஈசரர்க்கும்-மீசுரர்க்கும்
வல்லோன்எனப்பிதிர்கள்-பல்லோர்களும்துதிக்க-நல்லோர்களும்கதிக்க எல்லோர்களும்ஆதிக்க (ம)

உ. பூசுரவசிட்டன் நிசுவாசன்-உரகேசன்குறுமுனிவன் பாரத்துவாசன்
பூசிரகௌதமனுடன் வியாசன்-மிருகாசிபன் கோசிகன் தூறுவாசன்
பூந்துகில்சுற்றிநல்ல-மாந்தழைவைத்ததிவ்விய பூரணகும்பம்அவரவர் கொடுக்க
ஏந்துநெய்யும்பொரியும்-மாந்தி அக்கினிதேன்-எழும்பிஎழும்பிவாக்கொழுந் தெடுக்க
போந்தமுகூர்த்தம்வந்து-சேர்ந்ததெனத்திரண்டு-புண்ணியபுரோகிதர்கள் கடுகடுக்க
சூழ்ந்துபலமுனிவர்-சாந்திமந்திரம்சொல்லிச்-சுபம்தரும்நவக்கிரகசெபம் தொடுக்க
பூசுரர்உடைகளை வேசியர்கள் உடுக்க-வேசியர்உடைகளை பூசுரர்கள்உடுக்க
பூசியபொடிவகை வேசியர்கள்இறைக்க-வேசியர்மிசைஅது வேதியர்கள்இறைக்க

பொன்போலும்சட்ட மிட்டமாலிகை-மின்போலும்சுற்றிலைத்தபாலிகை
பொங்காரம்சுற்றிலும்சளபளென-எங்கேயும்சித்திரம்தளதளென
புத்தமுதத்தைநிகர்த்தமொழிச்சியர்-அஸ்திரசத்திகள்ஒத்தவிழிச்சியர்
பொற்கடகக்கையில்அப்பிஅடிக்கடி-கற்பகபுஷ்பம்இறைத்துசதிப்பதி
போராடவேகுயில்கள்-நேர்பாடவேமயில்கள்-போல்ஆடவேதகவும்-கோல்ஆடவேமிகவும்
பூமகளும்—பாமகளும்-காமகளு-மேமகிழ
பூதாகிதரும்யோக-வேதவுடனேலோக-மாதாளனும்வைபோக-சீதாசமேதன்ஆக (மகு)

௧. அங்கதன்அருகில்உடைவாள்பிடிக்க-சுக்கிரீவன்கையிலாகுதந்து தோள்பிடிக்க
அஞ்சிஅனுமான்சாமிதாள்பிடிக்க வந்து-அடைப்பம்சுமந்துமத வேள்பிடிக்க
அட்சயவிவேகிஎன்னும்லட்சுமணன்சத்துருக்கன்-அருகினில்நின்றுகவரிகள் வீச
பட்சம்உள்ளசுமந்திரன்-எச்சரிக்கைஎன்றுசொல்ல-பரதன்குடைபிடித்துநயம் பேச
அற்புதக்குபேரன்வந்து—பொற்மணிதிருத்தமணி-அணிபணிகண்டுசூரியன் பூச
கற்பனைகடந்தராமன்-ஒப்பனைசெய்திருமார்பில்-களபச்சந்தனங்கள்சந்திரன் கூச
அருள்முகமலமும்-அதில்இருகமலமும்-இருகரகமலமும் இருபதகமலமும்
அனமிசைவருகிற-அயன்வருகமலமும்-வனிதைசனகிதிரு மலர்முககமலமும்
அன்பூறும்பச்செனும்சொரூபமும்-முன்கானும்கைப்பிரசண்டசாபமும்
அங்கேகண்டுகொண்டுகண்டபேர்இதை-இங்கேஎன்சொல்வோம்எனவேஅதை
அந்தரதுந்துமிதும்தும்தும்என-முந்தியசங்குகள்பம்பம்பம்என
அந்தைகள்பம்பைகள்திம்திம்திம்என-மொந்தைஅதிர்ந்துதொம்தொம்தொம்என
ஆதாளிகொண்டுவிரி-பாதாளமும்திசையும்-ஆலோலம்மண்டுகடல்போலேமுழங்கியிடை
அந்தலோகம்-இந்தலோகம்-எந்தலோக-மும்திரியும்
அனைத்துயிர்களும்லக்க-பலர்க்கைகுவித்துநிற்க-அதிஷ்டம்அயோத்திதக்க-வதிஷ்டமுனிவன்வைக்க

(மகுடாபிஷேகம்கொண்டானே.)



## ஸ்ரீ ராமர் அரசியல்.

### விருத்தம்.

திருமுடிமேல்மகுடாபி ஷேகம்கொண்டு
சீதையுடன்ரத்தினசிம்மா சனமேற்கொண்டு
தருமநிலைவசிஷ்டமுனி உரைக்கக்கொண்டு
தம்பியர்மன்னவர்வணங்கச் செங்கோல்கொண்டு
வருமறையோர்தம்ஆசீர் வாதம்கொண்டு
மன்உயிரைத்தன்உயிர்போல் மனத்துட்கொண்டு
கருமுகில்நேர்மேனிரகு ராமன்பூமி
காத்திட்டான்ஒருகுடைக்கீழ்ச் சேர்த்திட்டானே.

### ௬௬. தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

காட்சியுடனேராமன்-தாழ்ச்சியில்லாமல்அர
சாட்சிசெய்திருந்தானே

அநுபல்லவி.

மீட்சிசெய்தசீதாச மேதன்ஆகவேவோங்கி
வீறும்சிங்காசனமேல் மேவிக்கருணைதேங்கி
மாட்சிபெறும்சடையான் மரபோர்கொடுக்கவாங்கி
மணிமகுடத்தைஞான வசிஷ்டர்தரிக்கத்தாங்கி (காட்)

சரணங்கள்.

௧. ஏர்க்கும்பசுவும்அதைத்-தாக்கும்வேங்கையும்ஒன்று
இசைந்திருக்கவேபகை நீக்கி
ஆர்க்கும்அடங்காததுன்-மார்க்கம்உடையபொல்லா
அடையலர்படைகளைப் போக்கி
சேர்க்கும்குடிகள்ஆறில் ஒருகடமைகொடுத்துச்
செழித்திடவேசெல்வம் தேக்கி
பார்க்கும்உறும்துயரை-நீக்கிஅருளவல்ல
பரதனைஇளவர சாக்கி
தார்ப்புயலட்சுமணன்சே னைபதிஆகிவீற
சத்துருக்கன்ஞாயாதிபதி ஆய்நீதிநிறைவேற
கார்க்கடல்வண்ணம்தேவர் கண்டுகண்களிப்பூற
கலைவல்லபலபல ரிஷிகள்பல்லாண்டுகூற (காட்)

௨. மல்லூர்புயச்சுக்கிரீவன்-முதலாம்வானரருக்கு
மாமணிப்பணிகளும் பாய்ந்து
கல்லூர்சஞ்சீவிமலை-கொண்டுவந்தஅனுமார்
களிக்கப்பிரமபட்டமும் ஈய்ந்து
சொல்லூர்விபீஷணனுக்-கரங்கவிமானம்தந்து
துதிகுகன்சாம்புவந்தனுக் காய்ந்து
எல்லூர்பலமணிகள்-கோர்வைசெய்திட்டகண்டி.
எழில்பெறக்கழுத்தினில் லேய்ந்து
சல்லாபம்ஆகஅவர் தமையும்அனுப்பிவிட்டு
சாதுசனங்களுட னேஎப்பொழுதும்நட்டு
வல்லாளன் ஆகிக்கொடுங் கோல்மன்னவரைஅட்டு
வடிவழகியமலர்க்கையாற் செங்கோலைத்தொட்டு(காட்)

௩. சேமமிருந்தபரந்-தாமத்திலிருக்கும்நித்
தியசூரிகளும்பிர காச
ராமராச்சியத்துக்கினை-ஆமோஎந்தலோகமும்
நாமும்அங்கேபோவோம்என்று பேச
சாமபேததான-தண்டம்அறிந்தராஜ
சமுகங்கள்எங்கும்வந்து மூச
காமராசனும்அந்த-திவ்வியமங்களவிக்கிர
கத்தைக்கண்டுகண்கள் கூச
நேமப்படியேமந்திரி பிரதானிகளுந்துய்ய
நெறியார்மனுவின்படி உரியஅரசுசெய்ய
ஏமம்பெறமாதமும் மாரிஎங்கெங்குபெய்ய
இகத்தினில்உள்ளசர்வ சீவாத்மாக்களுஉய்ய(காட்)

---

## சமாப்தியில் மங்களம்.

பாயிரத்தில் வந்தமங்களத்தை அதின்விருத்தத்தோடே
இவ்விடத்திற் பாடிக்கொள்க.

## சமாப்தியில் சோபனம்.

பாலகாண்டத்தில் வந்தசோபனத்தை அதின்விருத்தத்தை
விலக்கி இவ்விடத்திற் பாடிக்கொள்க.

---



415

## வாழி.

விருத்தம்.

இரவிகுலம்வாழிசீ தாராமர்வாழி
இளையவர்மூவரும்வாழி இவர்பெண்டீர்வாழி
குருவசிஷ்டர்சுமந்திரர் அனுமார்சுக்கிரீவர்வாழி
குருவாழிகுகவிபீ ஷணர்வாழிஇந்தப்
பரவியபார்கார் மும்மூர்த்திவாழி
பலஅமரர்முனிவர்பசு மதிகதிர்கள்வாழி
தருவளர்காழியின் அருணசல கவிசொல்லியகீர்த்
தனைபடிப்போரும்கேட்போரும் வாழி வாழி.

---

## நூற்பயன்.

விருத்தம்.

ஞானநாயகன் ஆம்ராமன் நாடகம்இதையாச்சொல்லும்
கானபாகவதற்உள்ளம் களித்திட இதனைக்கேட்போர்
தானம்ஆம்உலகிலுள்ள சௌபாக்கியமும்பெற்றேநல்
வானநாட்டரசர்ஆக வசிகரம்பெறுவர்தாமே.

## உயுத்தகாண்டம் முற்றும்.

---

விருத்தம்-௧௨௭-கலித்துறை-௧, கொச்சகம்-௧, ஆக-௧௨௯.
திபதை-௨0, தரு-௩0௧, ஆக-௩௨௧
பாயிரம் ௧-க்கும் காண்டம் ௬-க்கும் கூடிய கொச்சகம்-௬.
வெண்பா-௭, வசனம்-௧, கலித்துறை-௧, விருத்தம்-௨௬௮, ஆக-௨௭௮.
தோடயம்-௧, திபதைகள்-௬0, தருக்கள்-௩௯௭, ஆக-௪௬௪.

---

சக்கிரவர்த்தித்திருமகளூர் திருவடிகளே சரணம்.

இ ரா ம நா ட க ம்

முற்றிற்று.

ஸ்ரீ

# தலைப்புகளின் அகராதி.


| தலைப்புகளின் பெயர் | பக்கம் |
|---|---|
| அகலிகைசாபவிமோசனமுஞ்சரித்திரமும் | ௫௩ |
| அக்கினிபகவான்முறையிடல் | ௩௮௧ |
| அக்கினியில்விழும்பரதரைக்கௌசலை அம்மன் தடுத்துக்கூறல் | ௩௯௪ |
| அங்கதன்சாம்புவந்தனை இடித்தல் | ௩௪௨ |
| அங்கதன் தூதுபோக அவனோடுராவணன்சொல்லுதல் | ௨௫௪ |
| அங்கதன்மீண்டுபோர்கலக்கஎண்ணை இருபடைகளும்கைகலத்தல் | ௨௫௯ |
| அங்கதன்ராவணனுக்குமறுமொழிஉரைத்தல் | ௨௫௫ |
| அண்ணன் இறந்ததற்காக விபீஷணர்புலம்பல் | ௩௭௪ |
| அதிகாயனுக்கும்புலம்பினராவணன்முன்னே தானியமாலைபுலம்பல் | ௨௮௯ |
| அதிகாயனுக்குமிலட்சுமணருக்கும்யுத்தம் | ௨௮௩ |
| அதிகாயன்வரலாறுவிபீஷணன்கூறஸ்ரீராமர்தம்பியைப்புகழ | ௨௮௧ |
| அபசாரக்ஷமை | ௩௩ |
| அயோத்தியாகாண்டம் | ௭௧ |
| அரசியல் | ௪௧ |
| அவையடக்கம் | ௩௫ |
| அனுமார் அசோகவனம் அழிக்குதல் | ௨௦௨ |
| அனுமார் இந்திரசித்தோடுபொருதல் | ௨௦௮ |
| அனுமார் இலங்கையில்சீதையைத்தேடுதல் | ௧௭௯ |
| அனுமார் இலங்கையைக்கொளுத்தல் | ௨௧௮ |
| அனுமாருக்கும் அகம்பனுக்குப் யுத்தம் | ௩௦௪ |
| அனுமாரும்இராவணனும்கைக்குத்துக்குநிற்குதல் | ௨௫௮ |
| அனுமாரை இந்திரசித்துஎதிர்த்தல் | ௨௦௮ |
| அனுமாரைச்சீதாதேவிமனுக்கேட்குதல் | ௧௯௮ |
| அனுமாரைராவணன்வினவுதல் | ௨௧௩ |
| அனுமார்கடல்தாண்டஇசைதல் | ௧௭௯ |
| அனுமார்கடல்தாண்டப்பாய்தல் | ௧௭௭ |
| அனுமார்சஞ்சீவிபர்வதத்தைக்கொண்டுவருதல் | ௩௧௨ |
| அனுமார்சீதாதேவிக்குத்திடம்கூறுதல் | ௧௯௯ |
| அனுமார்சீதாதேவியைவரங்கேட்குதல் | ௧௯௮ |
| அனுமார்சீதையைக்காணாததால்இரங்குதல் | ௧௮௩ |
| அனுமார்சீதையைக்காணுதல் | ௧௮௪ |
| அனுமாரைக்கொல்லாமல்ராவணனைவிபீஷணர்விலக்குதல் | ௨௧௭ |





| தலைப்புகளின் பெயர். | பக்கம். |
|---|---|
| அனுமார்சீதையைப்பிரிந்தபின் நடந்தசெய்திகள் அவளுக்குவிவரித்தல் | ௧௧௫ |
| அனுமார்தேறச்சுக்கிரீவன்சரண்அடைதல் | ௧௫௬ |
| அனுமார்தோத்திரம் | ௩௦ |
| அனுமார்பிர்மாஸ்திரத்தால்கட்டுண்டல் | ௨௧௧ |
| அனுமார்மறைந்துநின்றுயோசித்தல் | ௧௫௪ |
| அனுமார்மீண்டபின்ராவணன்கேட்கமந்திரிஆலோசனைகூறல் | ௨௨௯ |
| அனுமார்ராவணனுக்குவிடையும்மதியும்கூறுதல் | ௨௧௪ |
| அனுமார்ராவணனைக்கண்டுகோபித்தல் | ௧௮௨ |
| அனுமார்கபந்தனைக்கண்டுகொண்டுவருதல் | ௩௮௫ |
| அனுமார்வாலில்தீச்சுடாமல் அக்கினியைசீதைவேண்டல் | ௧௨௮ |
| அனுமார்ஸ்ரீராமருக்குவரலாறுகூறுதல் | ௧௫௫ |
| அனுமார்ஸ்ரீராமரைவர்ணித்தல் | ௧௧௨ |
| ஆக்கியோன்பெருமை | ௨௧ |
| ஆரணியகாண்டம் | ௧௧௫ |
| இதுவும்அது | ௨௧௯ |
| இந்திரசித்துக்காகமண்டோதரிபுலம்பல் | ௩௩௯ |
| இந்திரசித்துக்காகராவணன்ரணக்களத்தில்புலம்பல் | ௩௩௪ |
| இந்திரசித்துக்கும்லட்சுமணருக்கும்மூன்றுமுறையுத்தம் | ௩௨௫ |
| இந்திரசித்துசண்டைக்குவந்துஅனுமாரை இகழஅவரவனை | ௨௮௯ |
| இந்திரசித்துதகப்பனுடன்முறையிடுதல் | ௩௩௦ |
| இந்திரசித்துமாயாசீதையைஅனுமார்முன்கொண்டுவருதல் | ௩௧௯ |
| இந்திரசித்துவதைராவணன்கேட்டஇடத்திலேபுலம்பல் | ௩௩௪ |
| இந்திரசித்துவிபீஷணரைவயிற்றெரிச்சலாலேஏசுதல் | ௩௨௭ |
| இந்திரசித்துவெட்டினசீதைக்காக அனுமார்புலம்பல் | ௩௧௭ |
| இந்திரசித்தைஅனுமார்பழித்தல் | ௩௨௩ |
| இந்திரசித்தைராவணன்உதாசனித்தல் | ௩௩௧ |
| இராத்திரியில்மகாராட்சதவீரர்கள்வதை | ௨௧௯ |
| இராவணன் அவசகுனங்கள்காணுதல் | ௩௯௫ |
| இராவணன்கொலுவில்வீற்றிருத்தல் | ௨௧௨ |
| இராவணன்தேர்ஏறுதல் | ௩௯௪ |
| இராவணன்மாலியவானோடுஅமர்க்களம்கூறுதல் | ௨௧௨ |
| இராவணன்இலங்கைக்குகாவல்வகுத்தல் | ௨௫௩ |
| இருபடைகளும்கைகலக்கயானைப்படையைஅனுமார் அடித்தல் | ௨௮௨ |
| இலங்கணிவதை | ௧௭௮ |
| இதுவும்கைகேசியைக்கூனிகலைத்தல் | ௭௮ |
| இலங்கையில்வானரர்நெருப்பிட்டுக்கொர்ச்சனையிடுதல் | ௩௧௯ |
| இளையவர்நாகபாசத்தால்கட்டுண்டதற்காகஸ்ரீராமர் இரங்கல் | ௨௧௩ |
| இளையவர்பிர்மாஸ்திரத்தால்கட்டுண்டதற்காகஸ்ரீராமர்இரங்கல் | ௩௦௫ |




A17 447

| தலைப்புகளின் பெயர். | பக்கம். |
|---|---|
| உயுத்தகாண்டம் | ௨௨௩ |
| ஏற்புடைக்கடவுள்வணக்கங்கள் | ௩0 |
| ஐம்பத்தாறுதேசத்துராசர்கள்வருதல் | ௭௨ |
| கடவுள்வணக்கம் | ௪0 |
| கடைசிநாளில்இராமராவணயுத்தம் | ௩௯௯ |
| கரதூஷணத்திரிசிரர்களின்வதை | ௧௨௯ |
| கலியாணச்சடங்குகள் | ௯௩ |
| கவந்தன்வதையும்துதியும் | ௧௫௧ |
| கிங்கரர்கும்பகர்னனை எழுப்பவும் அவன் தூங்குதல் | ௨௩௪ |
| கிஷ்கிந்தாகாண்டம் | ௧௫௪ |
| குகன்பரதர்சேனையைக்கண்டுகோபித்தல் | ௧0௪ |
| குகன்ஸ்ரீராமர்வரவில்லையென்றுவருந்துதல் | ௪0௨ |
| கும்பகர்னனுக்குவிபீஷணன்நீதிகூறல் | ௨௭0 |
| கும்பகர்னன்தன்னையழைத்தவிபீஷணனுக்குப்புத்திகூறுதல் | ௨௬௬ |
| கும்பகர்னன்ஸ்ரீராமரைத்துதித்துவரம்கொள்ளுதல் | ௨௭௬ |
| கூனிகைகேசியைக்கலைக்கவருதல் | ௭௫ |
| கெருடபகவான்வருதலும்நாகபாசமறுதலும் | ௨௯௪ |
| கெருடபகவான்ஸ்ரீராமரைத்துதித்தல் | ௨௯௫ |
| கைகேசிகூனியைக்கோபித்தல் | ௭௭ |
| கைகேசியைகூனிகலைத்தல் | ௭௮ |
| கைகேசிக்குஞ்சக்கிரவர்த்திக்கும்சம்வாதம் | ௮0 |
| கைகேசிஸ்ரீராமரைவனத்துக்குஏவுதல் | ௮௫ |
| கௌசிகர்ஸ்ரீராமருக்குநீதி சொல்லுதல் | ௫0 |
| கௌசிகர்ஸ்ரீராமரைக்குறித்துகேட்குதல் | ௪௭ |
| கௌசிகர் ஸ்ரீராமர்வரலாறுசொல்லுதல் | ௫௫ |
| சக்கிரவர்த்திஅதைமறுத்தல் | ௪௮ |
| சக்கிரவர்த்திமக்கள்வேண்டிவருந்தல் | ௪௩ |
| சக்கிரவர்த்திமுடிசூழ ஸ்ரீ ராமரைவேண்டுதல் | ௭௧ |
| சக்கிரவர்த்திமைக்குறித்துப்பாதர் புலம்பல் | ௧0௨ |
| சடாயுராவணனுக்குப்புத்திசொல்லுதல் | ௧௪௩ |
| சடாயுவிழவேசீதைபுலம்பல் | ௧௪௫ |
| சடாயுவுக்கும்ராவணனுக்கும்உயுத்தம் | ௧௪௪ |
| சத்துருக்கன்அரசாட்சிக்குஉடன்படாமை | ௩௯௪ |
| சமர்த்துப்பேசினவன்னியைமாலியவான்இடித்தல் | ௩௩௧ |
| சம்புமாலிவதை | ௨0௫ |
| சரணடைந்தவிபீஷணரைக்குறித்து ஸ்ரீ ராமருக்குஅனுமார் | ௨௩௫ |
| சாம்புவந்தன்அனுமாரைத்துதித்தல் | ௧௭௫ |
| சாரணன்ராவணனுக்கு ஸ்ரீராமர் முதலோரைக்காட்டல் | ௨௪௧ |





| தலைப்புகளின்பெயர். | பக்கம். |
|---|---|
| சீதாதேவிஅக்கினியில்குளித்துஎழுந்தது | ௩௭௯ |
| சீதாதேவிஅனுமாருக்குஅடையாளம்ஈதல் | ௨0௧ |
| சீதாதேவிஅனுமாரைஉபசரித்தல் | ௩௭௮ |
| சீதாதேவிக்குஅனுமார்ஜெயசேதிகூறல் | ௩௭௭ |
| சீதாதேவிக்குதிரிசடைகனாநிலைஉரைத்தல் | ௧௮௮ |
| சீதாதேவிதனியேபுலம்பல் | ௧௯௨ |
| சீதாதேவிதிரிசடையோடுமுறையிடல் | ௧௮௯ |
| சீதாதேவிபக்கல்ராவணன்குறையிரத்தல் | ௧௮௧ |
| சீதாதேவியின்பக்கல்வந்துராவணன்கெஞ்சுதல் | ௨௬௭ |
| சீதாதேவிஇராவணனைஇடித்தல் | ௧௯0 |
| சீதாதேவிலட்சணியைத்தெரிசித்தல் | ௧௯௪ |
| சீதாதேவிஇராவணனைஇடித்தல் | ௨௭௮ |
| சீதைஆபரணங்களைக்கண்டு ஸ்ரீ ராமர்இரங்கல் | ௧௫௧ |
| சீதைக்காகஇரங்குகிற ஸ்ரீ ராமரைலட்சமணர்முடுக்குதல் | ௩௧௮ |
| சீதைக்கும்ராவணசந்யாசிக்கும்சம்வாதம் | ௧௪௧ |
| சீதைசபாமண்டபத்துக்குவருதல் | ௫௧ |
| சீதையின்பிரிவாற்றுமல் ஸ்ரீ ராமர்இரங்கல் | ௧௫0 |
| சீதையின்யிருப்பைக்கண்டுவந்தவிபீஷணர் ஸ்ரீ ராமருக்குஅறி | ௩௨௬ |
| சீதையைத்தேடப்போனவர்களைக்குறித்து ஸ்ரீராமர்இரங்கல் | ௨௨௨ |
| சீதையைவெட்டவந்தராவணனைமகோதரன்தடுத்தல் | ௩௩௭ |
| சுக்கிரீவனழைத்தபோதுவிபீஷணர்சொல்லிகொண்டுவருதல் | ௨௩௪ |
| சுக்கிரீவனுக்கும்ராவணனுக்கும்மல்லுயுத்தம் | ௨௧௫ |
| சுக்கிரீவன்தாமசங்கண்டு ஸ்ரீ ராமர்கோபித்தல் | ௧௭௧ |
| சுக்கிரீவன்மதுபானத்தைநிந்தித்தல் | ௧௭௨ |
| சுந்தரகாண்டம் | ௧௭௭ |
| சுமந்திரன்புலம்பல் | ௯௪ |
| சுமந்திரைலட்சுமணருக்குப்புத்திசொல்லல் | ௯0 |
| சூர்ப்பநகிராவணன்முன்சீதையைவர்ணித்தல் | ௧௩௬ |
| சூர்ப்பநகைகரனோடேமுறையிடல் | ௧௨௮ |
| சூர்ப்பநகைதன்உறவைநினைந்துபுலம்பல் | ௧௨௫ |
| சூர்ப்பநகைராவணனோடேமுறையிடல் | ௧௨௪ |
| சூர்ப்பநகைஸ்ரீராமரைக்கண்டுமோகித்தல் | ௧௨0 |
| சூர்ப்பநகைஸ்ரீராமருக்குமீளவும்இதவுரைத்தல் | ௧௨௭ |
| சோபனம்பாடுதல் | ௬௬ |
| தண்டகவனரிஷிகள் ஸ்ரீ ராமரோடுமுறையிடல் | ௭௧௭ |
| தம்பிக்காகஇரங்கினராமரைச்சாம்புவந்தன்தேற்றுதல் | ௩௪௪ |
| தம்பிமுதலானோர்எழுந்ததற்காகராமர் அனுமாரைப்புகழ்தல் | ௩௧௫ |
| தாடகைமுதலானவர்கள்வதம் | ௫௧ |

| தலைப்புகளின்பெயர். | பக்கம். |
|---|---|
| திரிசடைஅம்மாள்சீதாதேவியைத்தேற்றுதல் | ௩௧௧ |
| திருஅயோத்தியைஅலங்கரித்தல் | ௭௩ |
| தூதர்ராவணனுக்குமூலபலத்தைவிவரித்தல் | ௩௩௮ |
| தேவர்களுக்குபெருமாள்அருளிப்பாடு | ௪௪ |
| நகரையும்ராமரையும்சீதையையும்அலங்கரித்தல் | ௪௦௫ |
| நாகபாசத்தால்லட்சுமணர்கட்டுண்டதற்காகவிபீஷணர்புலம்பல் | ௨௧௨ |
| நாலாமுறையுத்தத்தில்இந்திரசித்தன்வதை | ௩௩௨ |
| நூற்பயன் | ௪௧௫ |
| நூற்பெருமை | ௩௪ |
| பஞ்சசேனாபதிகள்அட்சதன்இவர்கள்வதை | ௨௦௬ |
| பட்டாபிஷேகமண்டபம்பரதர்சோதித்தல் | ௪௦௭ |
| பரதருக்குஅனுமார்சங்கிரகராமாயணம்கூறல் | ௩௯௭ |
| பரதருக்குராமர்காட்சிகொடுத்தல் | ௪௦௪ |
| பரதர்கைகேசியைக்கோபித்தல் | ௧௦௩ |
| பரதர்கோசலாதேவிக்குச்சத்தியம்கூறல் | ௧௦௪ |
| பரதர்கௌசலைஅம்மனோடுமுறையிட்டுஇரங்கல் | ௩௯௫ |
| பரதர்ஸ்ரீராமர்திருவடிகளிலேவணங்குதல் | ௪௦௩ |
| பரத்துவாசர்முதலானோர்க்குஸ்ரீராமர்ராட்சதர்மாண்டவ | ௪௦௧ |
| பாதுகைக்குப்பரதர்பட்டாபிஷேகம்செய்தல் | ௧௧௩ |
| பாயிரம் | ௩௰ |
| பாலகாண்டம் | ௪௰ |
| பிரம்மதேவர்ஸ்ரீராமரைத்தோத்திரம்செய்தல் | ௩௮௨ |
| பெருமாள்சந்நிதியில்தேவர்கள்முறைபாடு | ௪௫ |
| பெருமாள்திருஅவதாரம் | ௪௬ |
| பெருமாள்தோத்திரம் | ௩௧ |
| மகோதரன்வதை | ௩௬௭ |
| மக்களையும்மருமகளையும்சக்கிரவர்த்திபுகழ்தல் | ௩௮௪ |
| மங்களம் | ௩௭ |
| மண்டோதரிபுலம்பல் | ௩௭௬ |
| மாயாசனகனைச்சீதைகண்டுதகப்பனென்றுபுலம்பல் | ௨௭௫ |
| மாரீசன்ராவணனைஇடித்தல் | ௧௩௧ |
| மாலியவானைராவணன்நிந்தித்தல் | ௩௪௮ |
| மாலியவான்புத்தியைராவணன்கேட்காமல்மகோதரனைகலத்தல் | ௨௬௪ |
| மிதிலைக்குச்சக்கிரவர்த்தியின்எழுச்சி | ௫௭ |
| மூலபலசண்டை | ௩௪௪ |
| மூலபலப்படைகளைத்தைராவணன்கண்டது | ௩௫௧ |
| மூலபலம்கண்டுஓடினசாம்புவன்முதலானோரைமரித்தஅங்கதனுக்கு அவன்சொல்லுதல் | ௩௪௰ |





| தலைப்புகளின் பெயர். | பக்கம். |
|---|---|
| ராவணனுக்குமாலியவான்புத்திகூறல் | ௨௪௭ |
| லட்சுமணருக்கும்இந்திரசித்துக்கும்இரண்டாமுறையுத்தம் | ௨௬௮ |
| லட்சுமணருக்கும்ராவணனுக்கும்யுத்தம் | ௩௫௭ |
| லட்சுமணர்சீதாதேவியைத்தேற்றல் | ௧௩௧ |
| லட்சுமணர்சுக்கிரீவனைஇடித்தல் | ௧௭௨ |
| லட்சுமணர்பரதர்சேனையைக்கண்டுகோபித்தல் | ௧௦௭ |
| லட்சுமணர்பொன்மானைப்பொய்மானென்றல் | ௧௩௮ |
| வதிஷ்டர்தகவுரைத்தல் | ௪௧ |
| வழிபடுகடவுள்வணக்கம் | ௨௧ |
| வாலிஇறந்தபின்தாரைபுலம்பல் | ௧௬௭ |
| வாலிகுற்றங்களைஅவனுக்குராமர்விரித்தல் | ௧௩௩ |
| வாலிசுக்ரீவனுக்குமதிசொல்லுதல் | ௪௧௫ |
| வானரப்படைத்தலைவர்களும்படைத்தொகையும் | ௪௧௭ |
| வானரவீரர்களைகாட்டினஇந்திரசித்துக்கும்இளையவருக்கும் | ௨௮௮ |
| வானரவீரர்கள்சேதுபந்தனம்பண்ணுதல் | ௨௪௪ |
| வானரவீரர்கள்திரும்புகாலையில்மதுவனம்அழித்தல் | ௨௨௰ |
| விநாயகர்தோத்திரம் | ௧௧ |
| விபீஷணர்இந்திரசித்தைவிலக்கிராவணனுக்குப்புத்திகூறல் | ௨௨௧ |
| விபீஷணர்இந்திரசித்துக்குஎதிர்மொழிதல் | ௩௨௧ |
| விபீஷணனைராவணன்சீறிக்கூறல் | ௨௩௰ |
| விபீஷணர்சரணாகதத்தைக்குறித்துராமர்கூறல் | ௨௩௩ |
| விபீஷணர்ராமருக்குராவணன்பெருமைகூறல் | ௨௩௧ |
| விபீஷணர்ராமருடையதெரிசனம்செய்தல் | ௨௩௫ |
| விபீஷணர்ராமரைச்சரண்அடைதல் | ௨௩௭ |
| விபீஷணர்மீண்டபின் இருபடைகளும்போர்கலத்தல் | ௨௭௪ |
| விபீஷணர்ராமருக்கு கும்பகர்னன்வரலாறுகூறுதல் | ௨௬௭ |
| விராதன்வதையும்துதியும் | ௧௨௫ |
| ஸ்ரீராமபாணத்தால்இராவணன்இறந்தது | ௩௭௩ |
| ராமபாணம்கும்பகர்னன்தலையைக்கடலில்வீழ்த்தல் | ௨௭௭ |
| ராமர்அக்கினிவலம்வருதல்முதலியதுகள் | ௪௫ |
| ராமர்அத்திரியைக்கண்டுதண்டகம்சேர்தல் | ௧௧௬ |
| ராமர்அரசியல் | ௪௧௪ |
| ராமர்அனுமாரைஉடனுண்ணவேண்டுதல் | ௩௬௧ |
| ராமருக்குஅனுமார்சீதையின்இருப்புகூறல் | ௨௨௨ |
| ராமருக்குச்சுக்கிரீவன்துணிவுகூறுதல் | ௧௬௰ |
| ராமருக்கும்கும்பகர்னனுக்கும்யுத்தம் | ௨௭௫ |
| ராமருக்கும்சூர்ப்பநகைக்கும்சம்வாதம் | ௧௨௩ |
| ராமருக்குப்பரசுராமருக்கும்சம்வாதம் | ௮௭ |

| தலைப்புகளின்பெயர். | பக்கம். |
|---|---|
| ராமருக்கும்ராவணனுக்கும்முதல்நாள்யுத்தம் | ௨௯௧ |
| ராமரைஅனுமார்முடுக்குதல் | ௩௧௧ |
| ராமரைஆகாசத்தில்சகலதேவதைகளும்தோத்தரித்தல் | ௩௦௧ |
| ராமரைக்குகன்தன்ஊரிலிருக்கவேண்டல் | ௬௧ |
| ராமரைநினைந்துசக்கிரவர்த்திபுலம்பல் | ௬௬ |
| ராமரைமாலியவான்கொண்டாடல் | ௩௬௧ |
| ராமரைலட்சுமணர்தேற்றுதல் | ௧௭௯ |
| ராமரைவசிஷ்டர்தேற்றுதல் | ௧௦௦ |
| ராமரைவருணன்சரண்அடைதல் | ௨௪௪ |
| ராமரைவாலிநிந்தித்தல் | ௧௬௧ |
| ராமரைவாலிவரங்கேட்டுக்கொள்ளல் | ௧௬௯ |
| ராமர்கார்காலம்சீதையைநினைந்துஇரங்கல் | ௧௬௧ |
| ராமர்குகனைச்சிநேகங்கொள்ளல் | ௧௧௦ |
| ராமர்கோசலையைத்தேற்றிவிடைகொள்ளல் | ௮௭ |
| ராமர்கோபத்தைசடாயுஆற்றுதல் | ௧௧௮ |
| ராமர்சக்கிரவர்த்தியைக்குறித்துப்புலம்பல் | ௧௦௮ |
| ராமர்சடாயுவின்மேலேவிழுந்துஇரங்கல் | ௧௪௭ |
| ராமர்சடாயுவைக்கண்டுபஞ்சவடிதங்கல் | ௧௧௬ |
| ராமர்சவரிக்குமுத்திஅருளிஅப்பால்ஏகல் | ௧௯௩ |
| ராமர்சீதாதேவிசூடாமணிகண்டுமனமகிழ்தல் | ௨௨௪ |
| ராமர்சீதாதேவியைஅங்கீகரித்தல் | ௩௮௨ |
| ராமர்சீதைக்காகதம்பியோடிரங்கல் | ௧௪௬ |
| ராமர்சீதைக்குசித்திரகூடவளம்காட்டல் | ௧௦௧ |
| ராமர்சீதைக்குச்சேதுவைக்காட்டிஅதின்மகிமைகூறல் | ௩௮௭ |
| ராமர்சீதைக்குலங்கையில்பலர்பட்டஇடங்களைக்காட்டல் | ௩௮௬ |
| ராமர்சீதைக்குவந்தவழிஅடையாளங்கூறல் | ௩௬௯ |
| ராமர்சீதையைக்கண்டுஜெயுறல் | ௯௪ |
| ராமர்சுகசாரணரோடுகூறுதல் | ௨௪௪ |
| ராமர்சுக்ரீவனுக்குஆதரனைசொல்லல் | ௧௯௬ |
| ராமர்சுக்ரீவனுக்குராசநீதிகூறுதல் | ௧௬௮ |
| ராமர்சுக்ரீவன்பிரிவைப்பற்றிஅவனோடுமுறையிடல் | ௨௯௨ |
| ராமர்சுமந்திரனுக்குநீதிஓதுதல் | ௬௨ |
| ராமர்தண்டகவனரிஷிகளுக்குஅபயமீதல் | ௧௧௮ |
| ராமர்திருஅயோத்தியைச்சேர்தல் | ௭௮ |
| ராமர்தென்சமுத்திரக்கரையைக்காணுதல் | ௨௨௯ |
| ராமர்தேர்ஏறுதல் | ௩௬௬ |
| ராமர்பக்கல்சூர்ப்பனகைவருதல் | ௧௨௨ |
| ராமர்பஞ்சவடிதீர்த்தத்தைக்காணுதல் | ௧௧௧ |





| தலைப்புகளின்பெயர். | பக்கம். |
|---|---|
| ராமர்பட்டாபிஷேகம் | ௪௧௧ |
| ராமர்பரதருக்குப்புத்திசொல்லுதல் | ௧௧௨ |
| ராமர்பரத்துவாசர்செய்தவிருந்துண்ணல் | ௪௫ |
| ராமர்பவனிவருதல் | ௯௮ |
| ராமர்பிரிதலைக்குறித்துசீதைஇரங்கல் | ௬௧ |
| ராமர்மணக்கோலங்கள் | ௬௨ |
| ராமர்முன்விபீஷணர்அனுமாரைத்துதித்தல் | ௨௪௯ |
| ராமர்முன்னேபரதர்புலம்பல் | ௧௧௧ |
| ராமர்ராவணனைச்சம்மதிகேட்குதல் | ௨௬௧ |
| ராமர்லட்சுமணருக்காகப்பின்னும்இரங்கல் | ௩௧௩ |
| ராமர்லட்சுமணருக்குயுத்ததந்திரம்கற்பித்தல் | ௩௨௨ |
| ராமர்லட்சுமணர்கோபத்தைத்தணித்தல் | ௮௬ |
| ராமர்வரஇல்லையென்றுபரதர்புலம்பல் | ௩௬௨ |
| ராமர்வரவைஅனுமார்பரதருக்குக்கூறல் | ௩௬௬ |
| ராமர்வருணன்பேரில்அம்புதொடுத்தல் | ௨௪௨ |
| ராமர்வனம்ஏகக்கைகேயின்விடைபெறல் | ௮௯ |
| ராமர்வனம்ஏகலால்புரசனங்கள்புலம்பல் | ௬௨ |
| ராமர்வனம்ஏகலைப்பற்றிலட்சுமணர்கோபங்கொள்ளல் | ௮௮ |
| ராமர்வனம்ஏகுதற்காகக்கௌசலைபுலம்பல் | ௮௬ |
| ராமர்வானரவீரரோடிலங்கையைவளைத்தல் | ௨௯௩ |
| ராமர்விபீஷணருக்குஅபயமும்அரசும்கொடுத்தல் | ௨௩௮ |
| ராமர்வில்வளைப்பது | ௯௬ |
| ராமர்லட்சுமணருக்குசீதாதேவிஇரங்கல் | ௩௦௯ |


தலைப்புகளின் அகராதி முற்றும்.

---

இதில்

ராவென்னும் வரிசையில் முதலில் ஸ்ரீ என்னும்

அக்ஷரம் சேர்த்துக்கொள்க.

ஸ்ரீராமஜெயம்.

425

# விருத்த அகராதி.


| விருத்தம். | பக்கம். |
|---|---|
| அகம்பன் | 305 |
| அகஸ்திய | 119 |
| அகோ-கட்-வசனம் | 41 |
| அக்கினியை | 220 |
| அங்கதன் | 256 |
| அஞ்சனை | 318 |
| அடல்அரக்க | 264 |
| அடல்இராவ | 214 |
| அடல்சேர் | 174 |
| அடித்தநம் | 145 |
| அட்டிசொல் | 122 |
| அண்டர்தம் | 31 |
| அண்ணல் | 159 |
| அதிபதி-சங் | 294 |
| அதைஅறிந்தா | 298 |
| அந்தஅனுமா | 288 |
| அந்தவகை | 80 |
| அரக்கன்இந்த | 340 |
| அரக்கன்இரா | 281 |
| அரக்கன்இவ் | 254 |
| அரசனை | 110 |
| அரண்முடி | 35 |
| அருந்துணை | 338 |
| அருள்முனி | 119 |
| அலகிலா | 111 |
| அளப்பரிய | 320 |
| அறியும்விபீ | 242 |
| அற்புத | 90 |
| அனம்போல் | 382 |
| அனுமனிந்த | 186 |
| அனுமான்இந்தப்படிக்குத் | 259 |
| அனுமான்இப்படிசொ | 156 |
| அனுமான்பி | 211 |
| அன்பினுடன் | 277 |
| அன்றுசொன் | 249 |

| விருத்தம் | பக்கம். |
|---|---|
| அன்னையெனும் | 192 |
| ஆசைகள்-சங் | 366 |
| ஆதியாய்நடு | 40 |
| ஆராதபிரபன் | 384 |
| ஆலிலைமேல் | 226 |
| ஆவதனால் | 92 |
| ஆனவண்டோ | 377 |
| ஆனைமுகனே | 29 |
| இங்கிப்படி | 407 |
| இசைமாரீசன் | 138 |
| இசையுப்வான | 45 |
| இத்தலையிம் | 316 |
| இந்தவகை | 108 |
| இந்தவண்ணம் | 225 |
| இந்தவாரனு-சங் | 396 |
| இந்தவிதம் | 160 |
| இந்தாவந் | 306 |
| இந்திரசித்தன் | 334 |
| இப்படிசிறு | 86 |
| இப்புறம்-சங் | 222 |
| இயல்புடன் | 404 |
| இரக்கமா | 244 |
| இரங்கி | 342 |
| இரவிகுலம் | 415 |
| இருந்ததசரத | 43 |
| இருந்தராகவ | 120 |
| இருந்தராவண | 213 |
| இடம்ஆம் | 54 |
| இலகும் | 182 |
| இவர்இப்படி | 147 |
| இவ்வகையா | 46 |
| இளையவ | 314 |
| இனமதில் | 49 |
| இனம்கொண் | 331 |
| இன்னவகைக்கு | 277 |

| விருத்தம். | பக்கம். | விருத்தம். | பக்கம். |
|---|---|---|---|
| இன்னவகை | 70 | கெடிக்கருட | 296 |
| இன்னவாறு | 166 | கொடிகண் | 205 |
| இன்னவாலி | 163 | கொண்டலெ | 184 |
| இஷ்டம்உள்ள | 146 | கொம்பனை | 168 |
| ஈங்கிவைஇப் | 72 | கொன்றவன் | 85 |
| உண்டபின்பு | 401 | கோடையிலே | 218 |
| உதிக்கின்ற | 230 | கோதண்ட | 30 |
| உத்தமி | 280 | கோதைமணம் | 188 |
| உரத்தாலே | 392 | கோலமுடி | 253 |
| உளம்மகிழ்ங் | 85 | கோவிந்தபாரத் | 104 |
| உறும்கருமம் | 139 | சக்கிரபதி | 63 |
| உன்னித்தான் | 201 | சதிர்பெறும் | 34 |
| எடுத்திந்தப்ப | 253 | சத்தியம்செய் | 106 |
| எடுத்திந்தவண் | 336 | சத்தியவிபீ | 269 |
| எண்ணிஅனு | 198 | சம்மதிஏதே | 262 |
| எதிர்கொண்ட | 208 | சரணம்என | 158 |
| எதிர்கொண்டி | 330 | சவுரிசொன்ன | 154 |
| எல்லாம்மூடன் | 329 | சாமிஇந்தப் | 172 |
| எழுந்ததோர் | 381 | சரன்இது | 251 |
| என்றழுது | 334 | சானகிஇப் | 192 |
| என்றுராவண | 232 | சானகியை | 151 |
| என்னரகு | 234 | சித்திரமண்ட | 411 |
| ஓசையுடன் | 386 | சிந்தையை | 88 |
| ஓதிஇவ்வா | 344 | சில்லிகளாய் | 327 |
| கடுத்ததங்கை | 136 | சினமாயிப்ப | 319 |
| கட்டிஉவங் | 316 | சினம்கொண் | 89 |
| கண்டுதிரு | 195 | சீலம்உள்ள | 359 |
| கதிர்விடு-சங் | 365 | சீலம்கொண் | 62 |
| கம்பஇரா-கொ | 27 | சுந்தரன்ஆம் | 400 |
| காக்காமல் | 402 | செய்திகளை | 51 |
| கலக்கம்அற | 322 | செவிக்கேசுப | 379 |
| கலங்கிப்பனி | 238 | சொல்லிஇந்த | 198 |
| கனமான | 33 | சொல்லியது | 47 |
| கனம்மலர்ந்த | 378 | ஞானநாயகன் | 415 |
| கன்னம்அறுங் | 136 | தந்தாய் | 396 |
| காதகிசூர்ப்ப | 129 | தம்பிவிபீ | 218 |
| கிளம்பியமா | 258 | தருக்களும் | 118 |
| குதித்தேஇங் | 253 | தவறுபடா | 332 |
| கும்பகர்னன்இந்த | 229 | தனதுபுகழும் | 110 |
| கும்பகர்னன்இது | 267 | தாடகைதான் | 58 |




427


| விருத்தம். | பக்கம் | விருத்தம். | பக்கம் |
|---|---|---|---|
| தாய்வருந்திட | 87 | பறித்தமா | 252 |
| திடம்பெருகு | 107 | பன்னி-கொ | 395 |
| திடுதிடென | 369 | பன்னியசூர்ப் | 128 |
| திரிசடைஇப்ப | 189 | பாட்டில் | 176 |
| திரிசடைசொ | 312 | பாய்ந்தசம்பு | 206 |
| திருத்தேர் | 367 | பார்என | 282 |
| திருமகள்ஆம் | 67 | பாவையர் | 59 |
| திருமுடிமேல் | 414 | புங்கவன் | 56 |
| திருவணைப் | 390 | புலம்பிய | 99 |
| துங்கம்ஆம் | 78 | பெருமான் | 244 |
| துதித்திடும் | 75 | பேய்வடிவாம் | 127 |
| துதிபெறு | 115 | பொய்கலந்த | 115 |
| துதிவிராதன் | 117 | பொருமூல | 354 |
| துய்யமலை | 102 | பொருத்தான் | 144 |
| தூங்கியதோ | 266 | பொறை | 150 |
| தூசிமுடிசங் | 373 | போதரவா | 217 |
| தூவியஎள் | 255 | மதாகாசன் | 41 |
| தேசதேசத் | 73 | மணம்உள்ள | 66 |
| தேரினில்இப் | 143 | மண்ணும் | 91 |
| தொடராஅனு | 233 | மதம்மிசர் | 295 |
| தொடுத்து | 337 | மதிமான் | 171 |
| நண்அரிய | 57 | மதிமுக | 148 |
| நவிஇந்திரசுத் | 304 | மதியுடன் | 339 |
| நாடிவிபீ | 376 | மந்திரிஎனும் | 271 |
| நாட்டிலேஇங் | 194 | மந்திரிசுமங் | 95 |
| நிருத்தன்இவ் | 374 | மழைநிறத்த | 165 |
| நிறமென்கூங் | 387 | மறம்மிகும் | 313 |
| நீதமுடன் | 399 | மனதில்இந்த | 55 |
| நீதன்மை-சங் | 361 | மன்னவ ஆம் | 44 |
| நெறியாள் | 279 | மனனன்ஆம் | 172 |
| நையும்இந்த | 403 | மாட்சி இவ்வா | 382 |
| படபடென | 227 | மாசகலஇந்த | 155 |
| படித்தார் | 323 | மாதரசை | 183 |
| பணி-கொ | 224 | மாநகர்இப்ப | 94 |
| பதிஎனும் | 113 | மாமகுடம் | 169 |
| பத்தியா | 153 | மாருதிஇவ்வா | 325 |
| பத்திவிபீ | 235 | மானவிபீ | 240 |
| பாதன்இந்த | 394 | மிக்காணகலி | 175 |
| பாதன்இவ்வா | 112 | மிண்டாளன் | 190 |
| பரிந்திந்த | 311 | மிட்டாங்கு | 248 |

| விருத்தம். | பக்கம். | விருத்தம். | பக்கம். |
|---|---|---|---|
| மீண்டலன் | 275 | வந்ததொரு | 77 |
| முடிபுனே-சங் | 385 | வந்தபாதகன் | 317 |
| முடிவரிய | 134 | வந்தவிபீ | 239 |
| முத்துமுதல் | 35 | வரதனெனும் | 101 |
| முந்தித்தாய் | 202 | வருதுயரம் | 103 |
| முனிவதிஷ்டன் | 50 | வல்லாண்மை | 362 |
| முனைசேர் | 212 | வளம்ஆன | 247 |
| முனைபோய் | 286 | வள்ளலெனும் | 246 |
| முன்புமா | 276 | வனிதைமணி | 71 |
| மூலபலம் | 364 | வாடிஇவ்வா | 394 |
| மூவருக்கும் | 37 | வாதாடும் | 125 |
| மெள்ளவே | 141 | வாய்ந்திடு-சங் | 177 |
| மையிருளில் | 292 | வாரவிஸ்வ | 178 |
| மைந்தர்இவ் | 47 | வாரேறு | 286 |
| மொழிஇதனை | 270 | வாலிஇந்த | 167 |
| மோதும் | 179 | வானவர்இப் | 307 |
| ராகவன்சீதை | 66 | விசயவிபீ | 293 |
| ராமனையிந்த | 161 | விரும்பிய | 278 |
| வசம்உடன் | 237 | விளைவதறி | 264 |
| வடித்து | 199 | வீரர்ஆம் | 208 |
| வண்டே | 222 | வீரம்எனும் | 96 |
| வண்ணம் | 261 | வெம்பிஇந்த | 315 |
| வந்ததசரத | 58 | வெம்பியே | 170 |
| வந்தசூர்ப்ப | 123 | ஆக-278. | |
| வந்ததம்பி | 405 | | |



விருத்த அகராதி

முற்றிற்று.

429

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# தரு அகராதி.



| | சரணங்கள். | பக்கம். | | சரணங்கள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| 3 | அக்கினிபகவானே | 218 | 3 | இந்தச்சனகிதன்னை | 339 |
| 3 | அஞ்சாதிருங்கள் | 118 | 3 | இந்தசேதுவை | 387 |
| 3 | அடடாவெளியே | 255 | 7 | இந்தமனுத்தா | 71 |
| 3 | அடித்தானே அசோக | 202 | 3 | இந்தயோசனை | 264 |
| 3 | அடித்தானேரகு | 129 | 3 | இந்தராவணனை | 182 |
| 3 | அதிகாயன்படை | 282 | 3 | இந்தவிதிகாண | 477 |
| 4 | அந்தமானிடன் | 262 | 3 | இந்தவிபீஷணன் | 232 |
| 3 | அந்தராமசவுந் | 193 | 3 | இந்தவினைக் | 292 |
| 3 | அந்தராவணன் | 239 | 3 | இந்தவேதை | 314 |
| 3 | அப்பாகும்பகர்ண | 280 | 3 | இந்தாவிபீஷணா | 238 |
| 3 | அப்பனே இன்றுன் | 384 | 3 | இந்திரசித்தேஉன் | 323 |
| 5 | அய்யனே உன்மகிமை | 295 | 3 | இந்திரசித்தேசேவ | 287 |
| 3 | அய்யாசனகா | 279 | 3 | இப்படியாஅவ | 365 |
| 3 | அய்யாராவணா | 330 | 3 | இப்பாத்திரம் | 189 |
| 3 | அரசுசெய்வதென்ன | 168 | 3 | இருக்கிறாள்தாய் | 321 |
| 3 | அவதாரஞ்செய் | 45 | 3 | இருந்தானே | 120 |
| 6 | அறிவார்ஆர்உன்னை | 116 | 3 | இலங்கணி | 178 |
| 3 | அநுமந்தன்அடித் | 209 | 3 | இலனைக்கொல் | 217 |
| 5 | அநுமானேசாமிக் | 201 | 4 | இனிநான் இருக்கல் | 396 |
| 3 | அநுமானேநீயே | 315 | 3 | இனிமேல் | 318 |
| 4 | அன்னைசானகி | 61 | 3 | இன்னம்சிறு | 112 |
| 4 | அஸ்திரவருஷம் | 325 | 3 | உண்டானேராமன் | 400 |
| 23 | ஆதிதேவனே ஸ்ரீராம | 166 | 3 | உன்னதுமகிமை | 306 |
| 4 | ஆரடாகுரங்கே | 213 | 3 | எங்களால்ஆக | 341 |
| 3 | ஆர்என்றராகவனை | 139 | 3 | எங்கேவைததிருந் | 248 |
| 3 | ஆரென்றெண்ணு | 55 | 4 | எட்டுநாளையிலே | 20 |
| 3 | ஆரோ-இவர்ஆரோ | 54 | 3 | எந்நாளும்வாழி | 378 |
| 3 | ஆளும்என்னை | 313 | 3 | எப்படிமனம் | 91 |
| 3 | இங்கேஇருங்காணும் | 99 | 6 | எவரும்வணங் | 40 |
| 3 | இங்கேநாங்கள் | 402 | 4 | எழுந்தாளேபூங் | 379 |
| 3 | இதற்கோநான் | 394 | 9 | எனக்குன்இருபதம் | 32 |
| 3 | இதுக்கோஇந்த | 319 | 8 | என்னடிபாவி | 104 |
| 3 | இதுக்கோநான் | 317 | 3 | என்உருவினில் | 126 |
| 3 | இத்தனைகோபமும் | 89 | 3 | என்கணவை | 188 |
| 3 | இந்தஅநுமான் | 241 | 3 | என்னசெய்வேன் | 155 |

| சரணங்கள். | | பக்கம். | சரணங்கள். | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| 3 | என்பாக்கியமே | 85 | 3 | சாமிரகுரா | 165 |
| 3 | என்வார்த்தை | 370 | 3 | சிங்காரம்செய் | 408 |
| 3 | என்னகாரியம் | 342 | 3 | சிற்றப்பாநீதான் | 328 |
| 3 | என்னதான் | 293 | 3 | சீதையைக்கண் | 185 |
| 3 | என்னத்துக்கு | 106 | 3 | சுக்கிரீவனுக்கும் | 251 |
| 3 | என்னபிழைகள் | 381 | 4 | சுக்கிரீவன்பேர் | 155 |
| 3 | என்னபுத்திசொன் | 331 | 3 | சூடாமணி | 224 |
| 8 | என்னபுத்திநினைத் | 137 | 3 | சேதுபந்தனம் | 245 |
| 3 | என்னநினைந்தாய் | 395 | 3 | சேரும்கதியில் | 104 |
| 3 | என்னையும் | 234 | 3 | சொல்லும்சொல்லும் | 95 |
| 3 | ஏதடாராவணா | 261 | 3 | சொன்னான் ஸ்ரீராம | 246 |
| 3 | ஏதுக்குஇந்த | 161 | 3 | சோபனம்சோபனம் | 67 |
| 3 | ஏதுக்குவருந் | 311 | 4 | சோபனம்சொல்ல | 377 |
| 3 | ஏனிந்த | 162 | 3 | தம்பிலட்சுமணா | 322 |
| 3 | ஏன்வந்தாய் | 269 | 3 | தாவிஅனுமந்தன் | 385 |
| 3 | ஐயனேரகுராம | 33 | 5 | துணைவந்தருள் | 30 |
| 16 | ஐயோமகனே | 405 | 3 | துஷ்டப்பயலே | 329 |
| 3 | ஒருமொழிமாத் | 107 | 3 | தூங்கினான் | 265 |
| 3 | கடைக்கண்ணால் | 44 | 3 | தேடித் | 179 |
| 5 | கண்டானேராவணா | 362 | 3 | தேர்ஏறினானே | 367 |
| 3 | கண்டேன் கண்டேன் கண்டேன்சீதை | 223 | 3 | தேர்மேற் | 364 |
| | | | 3 | தேவியிவள் | 53 |
| 3 | காட்சியுடனே | 414 | 3 | தொடுத்தானே | 243 |
| 3 | காணவேணும் | 136 | 3 | நானேலட்சுமணன் | 88 |
| 3 | குத்துக்குவாடா | 268 | 3 | நேத்திஇது | 227 |
| 3 | கும்பகர்னன் | 267 | 4 | பட்டணம்பதனம் | 253 |
| 4 | கூனிவந்தாளே | 75 | 4 | பட்டபாடு | 128 |
| 5 | கெட்டுப்போக | 278 | 5 | பரதமகாராசனே | 397 |
| 4 | கெருடபகவானும் | 294 | 3 | பரப்பிர்மம் | 46 |
| 3 | கேள்அடாஅங்கதா | 254 | 3 | பற்றிக்கொண்டது | 219 |
| 3 | கேள்அடாராவணா | 247 | 3 | பாய்ந்தானேஅனுமன் | 312, |
| 3 | கேள்அம்மா | 195 | 6 | பாய்ந்தானேஅனுமா | 177 |
| 3 | கொடியதாடகை | 51 | 3 | பாராய்பெண்ணே | 101 |
| 3 | கொண்டாளேசாமி | 194 | 3 | பாரும்பாரும் | 250 |
| 3 | கொத்திக்கொத்திக் | 144 | 3 | பிழைக்கஎன்றால் | 216 |
| 3 | சரணம்சரணம்என் | 233 | 3 | பிழைபொறுக்க | 36 |
| 3 | சரணம்சரணம்ரகு | 244 | 3 | பிள்ளைஇல்லாத் | 43 |
| 14 | சனகன்மாதே | 390 | 3 | பெண்இவள் | 50 |
| 3 | சாடினானே | 304 | 8 | பெருஞ்சண்டை | 299 |
| 7 | சாமிஉனதையா | 170 | 3 | போதும்போதும் | 231 |





| சரணங்கள். | | பக்கம் | சரணங்கள். | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| 3 | மகத்துவம்உள்ள | 34 | 3 | ராமாயீயும் | 110 |
| 3 | மகனேஇந்திர | 335 | 3 | லட்சுமணனுக்கும் அதிகாயனுக்கும் | 285 |
| 8 | மகுடாபிஷேகம் | 411 | | | |
| 3 | மடிந்தானேமகோ | 368 | 3 | லட்சுமணனுக்கும் இந்திரசித்துக்கும் | 288 |
| 3 | மடிந்தானேசம்பு | 206 | | | |
| 4 | மதுவேஉன்னால் | 172 | 3 | லட்சுமணனுக்கும் ராவணனுக்கும் | 357 |
| 3 | மாயச்சீதை | 316 | | | |
| 4 | மூலபலசண்டை | 344 | 3 | வடிப்பம் | 163 |
| 3 | மோசம்வாரா | 44 | 3 | வணங்கினான்றேனே | 464 |
| 3 | ராகவனுக்கும்ராவணனுக்கும்சண்டை | 259 | 4 | வந்தகாரியம் | 173 |
| | | | 4 | வந்தாகோதிமை | 266 |
| 4 | ராகவனுக்கும்ராவணனுக்கும்பின்சண்டை | 369 | 4 | வந்தனர் | 73 |
| | | | 3 | வந்தானே | 122 |
| 4 | ராகவனேசரணம் | 237 | 3 | வந்தானே | 207 |
| 3 | ராகவன்பகை | 229 | 3 | வந்தான்வந்தான் | 396 |
| 3 | ராசராசர்க்கும் | 42 | 3 | வருகிறானே | 171 |
| 3 | ராசன்ஆம்தசரத | 57 | 4 | வனம்போய் | 87 |
| 8 | ராட்சதப்பதரே | 190 | 3 | வன்னியோசனை | 340 |
| 3 | ராமசாமிகொண்ட | 62 | 3 | வாவா அநுமானே | 399 |
| 3 | ராமசாமிதூதன் | 215 | 3 | வானரவீரர் | 221 |
| 3 | ராசனுக்குநிகர் | 301 | 3 | விடுவிடடா | 143 |
| 3 | ராமனுக்குமன்னன் | 77 | 3 | விநாயகாசரணம் | 29 |
| 3 | ராமன்எழுந் | 403 | 3 | வில்லாளனு | 56 |
| 3 | ராமன்எதுக்கு | 48 | 3 | விழுந்தானேஇந்திர | 332 |
| 3 | ராமனைக்கண் | 235 | 3 | வீரசூர | 217 |
| 4 | ராமனைத்தருவாய் | 47 | 3 | ஸ்ரீராகவனும் | 252 |
| 3 | ராமாநீ | 149 | 3 | ஸ்ரீராமச்சந்திரனுக்கு | 37 |


ஆக தருக்கள்-199

தரு அகராதி முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# திபதை அகராதி.


| சரணங்கள். | | பக்கம். |
|---|---|---|
| 8 | அப்பனே அய்யனே | 305 |
| 8 | அம்புபோலப் | 252 |
| 8 | அய்யய்யோரகு | 86 |
| 17 | அய்யோநானே | 186 |
| 10 | அரசமணி | 92 |
| 8 | அருமைப் | 125 |
| 8 | அரசேள | 103 |
| 8 | ஆண்டுபதினாலும் | 403 |
| 9 | ஆதியும்ஆகி | 152 |
| 10 | இந்தஇலங்கை | 183 |
| | இந்தஅலங் | 80 |
| 8 | இந்தமரவுரி | 90 |
| 4 | இன்னம்தான் | 277 |
| 12 | இன்னார் | 154 |
| 12 | உண்டாற்கொல் | 374 |
| 9 | உற்றசீதையை | 147 |
| 12 | என்றான் அங்கதன் | 259 |
| 8 | என்னசெய்வேன்நா | 186 |
| 8 | என்னசெய்வேன் இலங்கேசா | 286 |
| 10 | என்னசெய்வேன் என்னசெய் | 376 |
| 17 | என்னசெய்வேன் சாமிநான் | 309 |
| 10 | ஏதுகாணும் | 175 |
| | ஐயாநான் | 186 |
| 10 | கண்டேன்கண் டேன்அடா | 134 |
| 21 | கல்லியாணபேரி | 63 |
| | கன்னிகையே | 386 |
| 8 | காட்டில்இருக்க | 110 |
| 13 | குணசம்பிர | 156 |
| 22 | கோலாகலமா | 272 |
| 5 | சதவலி | 174 |
| 8 | சாமிநமஸ்காரம் | 276 |
| 20 | சின்னம்சிறு | 96 |
| 4 | சுக்கிரீவாஉன் | 158 |
| 4 | செகம்மகிழும் | 94 |
| 16 | செம்பவள | 123 |
| 8 | சோதிநெடுந் | 58 |
| 8 | திக்குதிக்காச் | 222 |
| 10 | தீரராவண | 301 |
| 21 | தேசதேச | 405 |
| | தேற்றுவார் | 192 |
| 11 | தேவனே | 120 |
| 6 | நல்லோர் | 151 |
| 10 | நின்றுதெரிந் | 159 |
| 10 | பதினாலுவருஷம் | 392 |
| 4 | பாராமாரவி | 382 |
| 8 | மண்ணியில் | 69 |
| 8 | மந்திரியே | 334 |
| 10 | மன்னவனே | 167 |
| 8 | மன்னவன் | 111 |
| 4 | மான்காள்பழி | 169 |
| 11 | மெய்யைநிறு | 108 |
| 10 | ராமபத்திரா | 117 |
| 12 | ராமன்முடி | 78 |
| 6 | வந்தகுரங்கு | 211 |
| 11 | வந்தானே | 207 |
| 6 | வர்ண்ணமானும் | 138 |
| 6 | வழிகொண்டு | 115 |
| 14 | வர்ரும்என்ற | 141 |
| 11 | வாரும்வாரும் | 226 |
| 18 | விக்கிரம | 296 |
| 11 | விஜய | 74 |
| 16 | வெற்றிகொள்ள | 359 |


ஆக திபதைகள்-359

திபதை அகராதி முற்றிற்று.

181463